க.பொ.த (உயர்தரப் பரீட்சைக்கும் மற்றும்
ஏனைய உயர் பரீட்சைகளுக்குமான

# இலங்கை வரலாறு

## பொலன்னறுவை யுகம் - கோட்டை யுகம்

## (இரண்டாம் பாகம்)

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.பொ.த (உயர்தர)ப் பரீட்சைக்கும்
மற்றும் ஏனைய உயர்
பரீட்சைகளுக்குமான

# இலங்கை வரலாறு

## இரண்டாம் பாகம்

(பொலன்னறுவை யுகம் - கோட்டை யுகம்)

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் பதிப்பு 2014
எல்லா உரிமையும் இலங்கை அரசினருக்கே

இந்நூல், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் வரையறுக்கப்பட்ட சொப்ட்வேவ் பிரிண்டிங் அண்ட் பக்கேஜிங் பிரத்தியோக நிறுவனத்தில் அச்சிடப்பட்டு, வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

தமிழ்மொழி மூலம் உங்கள் கைகளுக்குக் கிடைக்கப்பெற்றுள்ள இந்நூல் சாதாரணதரக் கல்விக்கும் உயர்தரக் கல்விக்கும் மேலும் உயர் பரீட்சைகளுக்குமாக எழுதப்பட்ட புத்தகத் தொகுதியின் இரண்டாம் பகுதியாகும்

இலங்கையின் வரலாற்றில் மிக முக்கியமான பொலன்னறுவைக் காலத்தின் விபரங்களின் அடிப்படையாகவும் அதே போன்று சமூக விரிவாக்கம், சமயம், அரசியல், புராதன தேசமும் மக்களின் கலாசாரங்களும் அடங்களான தகவல்கள் பெறப்பட்டு தமிழுக்கு மொழி பெயர்க்கப்பட்டுள்ளமை இக்காலத்திற்கு பெறுமதி வாய்ந்த விடயமாகும். இப்புத்தகம் பல்கலைகழக பேராசிரியர்கள் பலரது ஒன்றிணைந்த முயற்சியாகும். பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாக விரும்பும் தமிழ்மொழி மூல மாணவர்களுக்கு மட்டுமல்லாது வரலாறு விடயமாகத் தமிழ்மொழி மூலம் ஆய்வு செய்பவர்களுக்கும் இந்நூல் மிகவும் பயனுடையதாகும். மேலும் இந்நூல் உருவாக்கத்திற்கான வளவாளர்கள், மொழி பெயர்ப்பாளர்கள் அனைவருக்கும் எமது அன்பான நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

**திஸ்ஸ ஹேவாவிதான**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
இசுருபாய
பத்தரமுல்ல.
2013.02.05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கண்காணிப்பும் மேற்பார்வையும்**

திரு திஸ்ஸ ஹேவாவிதான
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்,
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

**வழிகாட்டல்**

திருமதி கே.வீ. நந்தனி ஸ்ரீயாலதா
கல்வி வெளியீட்டு ஆணையாளர்(அபிவிருத்தி),
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

**இணைப்பாக்கம்**

திருமதி அ. குலரத்தினம்
உதவி ஆணையாளர்,
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

**ஆலோசனையும் பதிப்பும்**

பேராசிரியர் சிறிமல் ரணவெல்ல
பேராசிரியர்(ஓய்வு நிலை)
ருஹுணு பல்கலைகழகம்

பேராசிரியர் திரு மெண்டிஸ் ரோஹனதீர
ஸ்ரீ ஜயவர்தனபுர
பல்கலைகழகம்.

பேராசிரியர் திரு மங்கள இலங்கசிங்க
சரித்திரக் கற்கைப் பிரிவு
களனி பல்கலைகழகம்

திரு B.L.R. ரோஹண குமார
திட்டமிடல் உத்தியோத்தர்
தேசிய கல்வி நிறுவனம்

**மொழிபெயர்ப்பு**

யு.எல். சிபார்தீன் மரிக்கார்
ஆசிரிய ஆலோசகர்
வலயக் கல்விப் பணிமனை
வத்தேகம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| பாடம் | | பக்கம் |
|---|---|---|
| 1. | **வரலாற்று மூலாதாரங்கள்**<br>பேராசிரியர் - சிறிமல் ரணவல்ல | 1 |
| 2. | **அரசியல் வரலாறு கி.பி 1017-1270**<br>பொலன்னறுவை இராசதானிக்காலம்<br>தம்பதெனிய இராசதானிக்காலம்<br>பேராசியர். அமரதாச லியனகமகே | 22 |
| 3. | **அரசியல் வரலாறு கி.பி 1271-1509**<br>யாப்பகுவை இராசதானிக்காலம்<br>குருணாகலை இராசதானிக்காலம்<br>கோட்டை இராசதானிக்காலம்<br>பேராசிரியர். மெண்டிஸ் ரோஹணதீர<br>யாழ்பாண பிரதேச அரசு<br>பேராசிரியர். சிறிமல் ரணவல்ல | 75 |
| 4. | **நிருவாக முறை**<br>பேராசிரியர் மங்கள இலங்கசிங்க | 144 |
| 5. | **வெளிநாட்டுக் கொள்கை**<br>பேராசிரியர் மங்கள இலங்கசிங்க | 183 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. **பொருளாதாரமும் சமூக நிலைமையும்** 211
பொருளாதார நிலை
பேராசிரியர் இந்திரகீர்த்தி சிறிவீர
சமூக நிலை
பேராசிரியர் சிறிமல் ரணவல்ல

7. **சமயம்** 242
பேராசிரியர். மெண்டிஸ் ரோஹணதீர

8. **இலக்கியங்களும் கலைகளும்** 288
பேராசிரியர் மங்கள இலங்கசிங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் - 1

# வரலாற்று மூலாதாரங்கள்

## தேசிய இலக்கிய மூலாதாரங்கள்

11ஆம் நூற்றாண்டு ஆரம்பம் முதல் கோட்டை இராசதானியின் முடிவு வரையிலான காலப்பகுதிக்குரிய வரலாற்றை அறிந்து கொள்ள உதவும் சிங்கள, பாளி மொழிகளிலான இலக்கிய மூலாதாரங்களுடன் தொல்லியல் மூலாதாரங்கள் பலவும் எமக்குக் கிடைத்துள்ளன. பாளி மொழியிலான இலக்கிய மூலாதாரங்களுள் சூளவம்சம் I, சூளவம்சம் II, சூளவம்சம் III என்று கூறப்படும் மகாவம்சத்தின் இரண்டாம், மூன்றாம், நான்காம் பாகங்களே முக்கியம் பெறுகின்றன, மகாவம்சத்தின் இரண்டாம் பாகமான சூளவம்சம் I இன் 37ஆம் அத்தியாயத்தின் 57ஆம் வாசகத்திலிருந்து 79ஆம அத்தியாயத்தின் இறுதி வரை 12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தம்மகீர்த்தி தேரரால் எழுதப்பட்டுள்ளதாகக் கருதப்படுகிறது. ஆயினும் அவரால் 57ஆம் அத்தியாயத்திலிருந்து 79 ஆம் அத்தியாயம் வரையிலான பகுதி மட்டுமே எழுதப்பட்டதென்று அநுராதபுர யுகத்தின் இறுதிப் பகுதியிலான தரவுகள் அதாவது 37ஆம் அத்தியாயத்தின் 51ஆம் வாசகத்திலிருந்து 56ஆம் அத்தியாயத்தின் இறுதி வரை 11ஆம் நூற்றாண்டளவில் வேறொருவரால் எழுதப்பட்டதென்ற மற்றொரு கருத்தும் நிலவுகின்றது. மகாவம்சத்தின் மூன்றாம் பாகமான சூளவம்சம் II குருணாகல் இராசதானிக் காலத்தில் எழுதப்பட்டுள்ளமை தெரிகின்ற போதிலும் அதனை எழுதியவர் யார் என்பது இதுவரை அறியப்படவில்லை. மகாவம்சத்தின் நாலாம் பாகமான சூளவம்சம் III கண்டி இராசதானிக் காலத்தில் கீர்த்தி சிறீ ராஜசிங்க மன்னனின் அழைப்பின் பேரில் திப்பொட்டுவாவே சித்தார்த்த புத்தரக்கித தேரரால் 18ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாகும்.

மகாவம்சத்தின் இரண்டாம் மூன்றாம் நான்காம் பாகங்களில் அடங்கியுள்ள அத்தியாயங்கள் 65 ஆகும். ஆயினும் குறிப்பிட்ட அத்தியாயங்களுக்குரிய தரவுகள் 55ஆம் அத்தியாயத்தின் ஆரம்பம் முதல் 92ஆம் அத்தியாயத்தின் 5ஆம் வாசகம் வரையிலான பகுதிகளிலிருந்தே எமக்குக் கிடைத்துள்ளன. அதாவது 55ஆம் அத்தியாயம் முதல் 80 ஆம் அத்தியாயம் வரை பொலன்னறுவை இராசதானிக் காலம் பற்றியும் 81 அத்தியாயம் முதல் 89ஆம் அத்தியாயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரையும் தம்பதெனிய இராசதானிக் காலம் பற்றியும் அடுத்த இரு அத்தியாயங்களிலும் 92ஆம் அத்தியாயத்தின் முதல் 5 வாசகங்களிலும் கம்பளை, கோட்டை யுகங்கள் பற்றியும் விபரங்கள் உள்ளடங்கியுள்ளன. இவ்வத்தியாயங்களுள் பொலன்னறுவை யுகம் பற்றி எழுதப்பட்டுள்ள விபரங்கள் நம்பகத்தன்மை கூடியவையாகும். ஏனெனில் அவ்வத்தியாயங்களில் கூறப்படும் மிக முக்கிய நிகழ்வுகள் சமகாலக் கல்வெட்டுக்கள் மூலமும் தொல்பொருட்கள் மூலமும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட காலப்பகுதி வரலாற்றைக் கற்பதற்கு இன்னும் சில பாளி மொழியிலான இலக்கியங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் பொலன்னறுவையை ஆட்சி செய்த இரண்டாம் விஜயபாகு மன்னன் ஆட்சிக் காலத்தில் ராமஞ்ஞ தேச (பர்மிய) பிக்குமாருக்கு அனுப்பிய தூது வடிவிலான, உருகுணை (ருஹுனு) ரம்பா விகாரையில் வசித்த மகாநாகசேன தேரரால் எழுதப்பட்ட 'மானாவலு சந்தேசய' எனும் கவிதை நூல் தம்பதெனிய யுகத்தில் இரண்டாம் பராக்கிரமபாகு ஆட்சிக் காலத்தில் அனவமதர்ஸி தேரரால் எழுதப்பட்ட 'ஹத்தவனகல்ல விஹாரவங்சய'' மற்றும் சீயம் (தாய்லாந்து) நாட்டில் ரத்தவன விகாரையைச் சேர்ந்த ரத்தனபஞ்ஞ எனும் மகாதேரரால் 16ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் எழுதப்பட்ட சீயம் நாட்டின் பௌத்த சாசன வம்சக் கதையான 'ஜினகாலமாலி' எனும் நூலும் முக்கியம் வாய்ந்தனவே. 'மானாவலு சந்தேசய' மூலம் 12ஆம் நூற்றாண்டில் பர்மா இலங்கை நாடுகளுக்கிடையிலான சமயத் தொடர்பினை அறிந்துகொள்ள முடிவதுடன் 'ஜினகாலமாலி' மூலம் 14ஆம் - 15ஆம் நூற்றாண்டுகளில் இலங்கை மற்றும் சீயம் நாடுகளுக்கிடையிலான சமய, கலாசாரத் தொடர்புகளையும் அறிய முடிகின்றது. 'ஹத்தவனகல்ல விஹாரவங்சய' தம்பதெனிய இராசதானியின் மூன்றாம் விஜயபாகு, இரண்டாம் பராக்கிரமபாகு ஆகிய மன்னர்களின் ஆட்சிக் காலம் பற்றி அறிய உதவுகின்றது.

பொலன்னறுவை யுகத்தின் ஆரம்பம் முதல் கோட்டை இராசதானியின் முடிவு வரை இந்த நாட்டின் வரலாற்றைக் கற்பதற்கு உதவும் சிங்கள இலக்கிய நூல்கள் சிலவும் காணப்படுகின்றன. அவையாவன; தம்பதெனிய இரண்டாம் பராக்கிரபாகுவின் காலத்துக்குரிய 'பூஜாவலிய' அதே மன்னனின் காலத்தில் எழுதப்பட்ட 'தம்பதெனிய கதிகாவத' மற்றும் 'கந்தவுறு சிரித' குருணாகல் இராசதானி காலத்தில் எழுதப்பட்ட தம்பதெனி அஸ்ன, தலதா சிரித, தலதா பூஜாவலிய, கம்பளை யுகத்தில் எழுதப்பட்ட நிக்காய சங்கிரஹய, எலுஅத்தனத் கலு வங்சய, கோட்டை கால 'சத்தர்மரத்னாகாரய' மற்றும் 'பரகும்பாசிரித' 16ஆம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றாண்டில் எழுதப்பட்டதாகக் கருதப்படும் 'ராஜரத்னாகாரய', 18ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் எழுதப்பட்ட 'ராஜாவலிய' மற்றும் 18ஆம் நூற்றாண்டின் மத்தியில் எழுதப்பட்ட 'அஸ்கிரி தல்பத' என்பனவாகும்.

மயூரபாத எனும் பிரிவெனாவின் அதிபரான புத்தபுத்ர தேரர் என்பவரால் எழுதப்பட்ட பூஜாவலிய நூலின் 34 அத்தியாயங்களுள் மிகவும் முக்கியம் வாய்ந்தது அதன் இறுதி அத்தியாயம் ஆகும். பொலன்னறுவை, தம்பதெனிய கால வரலாற்றைக் கற்போருக்கு இது மிகவும் பயனுடையதாகும். பொலன்னறுவையிலிருந்து ஆட்சி செய்த முதலாம் விஜயபாகு, ஜயபாகு, விக்கிரமபாகு, முதலாம் பராக்கிரமபாகு, இரண்டாம் விஜயபாகு, நிஸ்ஸங்கமல்ல, சாஹஸ்ஸமல்ல முதலிய அரசர்களினதும் லீலாவதி, கல்யாணவதி ஆகிய அரசியரதும் ஆட்சிக் காலம் பற்றியும் கலிங்க மாகனின் ஆக்கிரமிப்புப் பற்றியும் இங்கு விரிவாகக் கூறப்பட்டுள்ளது. தம்பதெனிய ஆட்சியாளர்களான மூன்றாம் விஜயபாகு, இரண்டாம் பராக்கிரமபாகு மற்றும் நாலாம் விஜயபாகு முதலிய மன்னர்களின் ஆட்சி பற்றி நீண்ட விளக்கம் தரப்பட்டுள்ளது. தம்பதெனிய அரசர்களின் ஆட்சிக் காலம் பற்றி இங்கு கூறப்பட்டுள்ள விடயங்கள் வம்சக் கதைகளில் எழுதப்பட்டுள்ள விபரங்களுக்கு சமமானதாகும்.

இரண்டாம் பராக்கிரமபாகு மன்னனின் காலத்தில் மகா சங்கத்தின் அனுமதியுடன் பிக்குமாருக்கு விதிக்கப்பட்ட ஒழுக்காற்று சட்டப் புத்தகமாகக் கருதப்படும் 'தம்பதெனிய கதிகாவத' எனும் நூலில் அக் காலகட்டத்துக்குரிய அரசியல் நிலை மற்றும் பௌத்த பிக்குமார் சங்கத்தின் நிலை, மூன்றாம் விஜயபாகு மற்றும் இரண்டாம் பராக்கிரமபாகு ஆகிய அரசர்களினால் புத்த சாசனத்துக்கு ஆற்றப்பட்ட சேவைகள் என்பன அடங்கியுள்ளன.

'கந்தவுர சிரித' எனும் நூலை எழுதியவர் யார் என்பது அறியப் படவில்லை. எனினும் இரண்டாம் பராக்கிரமபாகு மன்னனின் தினசரி கடமைகள் அதில் அடங்கியிருப்பதால் அது தம்பதெனிய யுகத்துக்குரியது என்பது தெளிவாகின்றது. அரச நிருவாகத்தில் அம்மன்னர்களால் ஆற்றப்பட்ட சேவைகள், பணிகளின் பண்பு பற்றிய விளக்கத்தைப் பெற்றுக்கொள்ளவும் அக்கால நிருவாக சேவைக்குரிய அரச அதிகாரிகள் பற்றி அறிந்துகொள்ளவும் இந்நூல் பெரிதும் உதவுகின்றது. குருணாகல் இராசதானிக் காலத்தில் வாழ்ந்த ஒரு கல்விமானால் எழுதப்பட்டுள்ள 'தம்பதெனி அஸ்ன' எனும் நூலில் தம்பதெனிய இரண்டாம் பராக்கிரமபாகு மன்னனின் ஆட்சிக் காலத்தில் இடம் பெற்ற ஆக்கிரமிப்புப் பற்றியும் அக்கால அரச சபை அதிகாரிகள் மற்றும் படையினர் பற்றியும் விடயங்கள் உள்ளடங்கியுள்ளன. அக்காலத்துக்குரிய சமூக நிலைமை பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவதற்கும் இந்நூல் பயன்படுகின்றது.

குருணாகல் இராசதானியின் நான்காம் பராக்கிரமபாகு மன்னன் ஆட்சிக் காலத்தில் தெவ்ரத தம்பசஹினாவன் என்பவரால் எழுதப்பட்ட 'தலதா சிரித' எனும் நூல் பொலன்னறுவை, தம்பதெனிய, குருணாகல் ஆகிய காலகட்டங்களின் பௌத்த சமய வரலாற்றை அறிவதற்கு உகந்ததாகும். தம்பதெனிய இராசதானியின் மூன்றாம் விஜயபாகு மற்றும் இரண்டாம் பராக்கிரமபாகு ஆகிய அரசர்களின் ஆட்சிக் காலம் பற்றிய தரவுகள் சில விளக்கமாகத் தரப்பட்டுள்ள போதிலும் 'பூஜாவலிய'வில் அவர்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ளதை விட மேலதிமாக எதுவும் இந்நூலில் காணப்படவில்லை. ஆயினும் இந்நூலின் இறுதிப் பகுதியில் குருணாகல் யுகத்தின் சமய வரலாறு பற்றி முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் அடங்கியுள்ளன. அதாவது அக்கால கட்டத்தில் புனித தந்த தாதுவுக்காக மேற்கொள்ளப்பட்ட பூஜைகள் பற்றிய விபரங்கள் அதில் உள்ளடங்கியுள்ளன.

நூலாசிரியர் யார் எனத் தெரியாத குருணாகல் யுகத்துக்கே உரியது என்று கருதப்படும் 'தலதா பூஜாவலிய' எனும் நூலில் புனித தந்ததாதுவுக்குரிய பூஜைகள் பற்றிக் கூறப்பட்டுள்ள விடயங்கள் தவிர ஏனைய விடயங்கள் 'தலதாசிரித' எனும் நூலுக்கு சமமானவையாகும். ஆயினும் அதில் அடங்கியுள்ள சில விடயங்கள் தலதாசிரிதவுக்குப் பொருத்தமற்றவையாகவும் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக மூன்றாம் விஜயபாகு மன்னன் இங்கு 'பலாபத்கலவிஜயபாகு வத்ஹிமிராஜா' எனக் குறிப்பிடப்படுவதுடன் பொலன்னறுவை முதலாம் பராக்கிரமபாகு மன்னன் 'கலிகால சாகித்ய சர்வக்ஞ' பட்டம் பெற்றவனாகவும் குறிப்பிடப்படுகின்றான். இவ்விபரங்கள் வேறு எந்தவொரு 'மூலாதாரத்திலும்' காணப்படவில்லை. சாசனாவதாரம் எனப்படும் 'நிகாய சங்கிரஹய' நூல் கம்பளைக் காலத்தில் ஐந்தாம் புவனேகபாகுவின் ஆட்சிக் காலத்தில் கடலாதெனிய விகாரையின் பிக்குவான திவித்திய தர்மகீர்த்தி தேவரக்ஸித்த ஜயபாகு தேரரால் எழுதப்பட்டதாகும். ஆரம்பத்திலிருந்து கம்பளை ஐந்தாம் புவனேகபாகு மன்னனின் ஆட்சிக்காலம் வரை இலங்கையின் புத்த சாசன வரலாறு இந்நூலில் இடம்பெற்றுள்ளது. இதில் அடங்கியுள்ள பிக்குநிகாய பற்றிய விபரங்கள் வேறெந்தவொரு சிங்கள மூலாதரத்திலும் இடம்பெறவில்லை. அதேபோன்று பழைய பண்டிதர் பரம்பரை பற்றிய விபரங்களை வேறு நூல்களில் காண முடியாதுள்ளது. இந்நூலில் பொலன்னறுவை, தம்பதெனிய அரசியல் வரலாறு விரிவாகக் கூறப்பட்டாலும் கம்பளை யுகத்தைப் பற்றி அறிந்து கொள்வதற்கு இந்நூல் மிகவும் உகந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டை யுகத்தின் ஆறாம் பராக்கிரமபாகு மன்னனின் ஆட்சியின் ஏழாவது ஆண்டில் கடலாதெனிய விகாரையில் வசித்து வந்த தம்மதின்னாசார்ய விமலகீர்த்தி எனும் தேரர் எழுதிய 'சத்தர்ம ரத்னாகரய' ஒரு தர்ம நூலாகும். இந்நூலில் அடங்கியுள்ள 36 சிறு அத்தியாயங்களில் 12ஆம் அத்தியாயம் மட்டுமே அந்த யுகத்தின் அரசியலை அறிந்துகொள்ள உதவுகிறது. அக்குறிப்பிட்ட அத்தியாயமும் 'நிகாயசங்கிரஹய' எனும் நூலில் இருந்து எடுத்தாளப் பட்டதாகும். ஆயினும் புத்தசாசன வரலாறு பற்றி நிகாய சங்கிரஹய நிறுத்திய இடத்திலிருந்து கோட்டை ஆறாம் பராக்கிரமபாகுவின் ஆட்சிக் காலம் வரை இந்நூலில் அடங்கியுள்ளது. அது கோட்டை காலத்தின் சாசன வரலாற்றை அறிவதற்கு உதவுகின்றது.

ஆறாம் பராக்கிரமபாகுவின் ஆட்சிக் காலத்தில் எழுதப்பட்ட 'பரகும்பா சிறித' எனும் செய்யுள் இலக்கியம் அம்மன்னனின் புகழ்பாடும் காவியமாகும். இதன் ஆசிரியர் யார் என்பது தெரியவில்லை. இதில் அடங்கியுள்ள 140 செய்யுள்களில் 110 செய்யுள்களும் ஆறாம் பராக்கிரமபாகு மன்னனின் குணநல வர்ணனைகளையே உள்ளடக்கியுள்ளது. முதல் 15 பாடல்களில் அநுராதபுரத்தை ஆட்சி செய்த கஜபா, சிறிசங்கபோ, மகாசேன, கீர்த்திஸ்ரீமேவன், புத்ததாச, ஜெட்டதீசன், மகா நாம ஆகிய லம்பகர்ண மன்னர்களைப்பற்றிக் கூறுகின்றது. அதே போல அப்பகுதியின் மூன்று பாடல்கள் பொலன்னறுவையில் ஆட்சி செய்த முதலாம் விஜயபாகு, முதலாம் பராக்கிரமபாகு மற்றும் தம்பதெனியவில் ஆட்சி செய்த மூன்றாம் விஜயபாகு, இரண்டாம் பராக்கிரமபாகு ஆகிய மன்னர்களைப் பற்றிப் பாடுவதற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆறாம் பராக்கிரமபாகு மன்னன் பற்றி அறிந்து கொள்வதற்கே இந்நூல் பெரிதும் உதவுகின்றது.

பதினாறாம் நூற்றாண்டின் முதற்பாதியில் வல்கம்ப அபயராஜ பிரிவெனாவின் அதிபராக இருந்த தேரர் ஒருவரால் கண்டி வீரவிக்கிரம மன்னனின் காலத்தில் எழுதப்பட்ட 'ராஜரத்னாகரய' எனும் நூல் இலங்கையின் முதல் மன்னன் தொட்டு கண்டி வீரவிக்கிரம மன்னன் காலம்வரையான வரலாற்றை விளக்கமாகக் கூறுகிறது. சில மன்னர்களின் பெயர்கள் மட்டுமே இந்நூலில் இடம்பெற்றுள்ளது. பொலன்னறுவை முதலாம் பராக்கிரமபாகு, தம்பதெனிய இரண்டாம் பராக்கிரமபாகு ஆகியோரின் ஆட்சிக்காலம் பற்றி அதிகளவில் விபரிக்கப்பட்ட போதிலும் அது மகாவம்சம், பூஜாவலிய, நிகாய சங்கிரஹய ஆகிய நூல்களிலிருந்து எடுத்தாளப்பட்டுள்ளதாகவே தெரிகின்றது. நூலின் இறுதிப் பகுதி முழுமையாக வீரவிக்கிரம மன்னனின் ஆட்சிக் காலம் பற்றிக் கூறுவதற்கே பயன்படுத்தப்பட்டுள்ளது. கண்டி ஆட்சிக் காலம் பற்றி அறிந்துகொள்வதற்கு இந்நூல் சாலச் சிறந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜயனின் காலம் தொடக்கம் கண்டியின் இரண்டாம் விமலதர்ம சூரிய மன்னனின் காலம் வரையிலான இலங்கை வரலாறு பற்றிக் கூறும் நூல் 'ராஜாவலிய' ஆகும். இதன் ஆசிரியர் பற்றியோ எழுதப்பட்ட காலம் பற்றியோ குறிப்பிட்டுக் கூற முடியாதுள்ளது. நூலின் இறுதிப் பகுதி இரண்டாம் விமலதர்ம சூரிய மன்னனின் ஆட்சிக் காலம் பற்றிப் பேசுவதால் இந்நூல் பதினெட்டாம் நூற்றாண்டு எழுதப்பட்டதாகும் என்பது தெளிவாகின்றது. இந்நூலில் கண்டி யுகம் வரையிலான இலங்கை வரலாற்றுச் சுருக்கம் அடங்கியுள்ளது. ஆயினும் ஐந்தாம் பராக்கிரமபாகு மன்னனின் பின்னரான இலங்கை வரலாறு அதாவது கோட்டைக் காலம் பற்றிய பகுதி நம்பத்தகுந்ததாகவும் முக்கியம் வாய்ந்ததாகவும் அமைந்துள்ளது. கண்டி அஸ்கிரிய விகாரையின் ஆரம்பம் முதல் பதினேழாம் நூற்றாண்டின் மத்திய பகுதிவரை அவ்விகாரையின் தலைமைத்துவம் பற்றிய வரலாறு 'அஸ்கிரி தல்பத' எனும் நூலில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. இலங்கையின் புத்தசாசன வரலாறு பற்றி வேறு மூலாதாரங்களில் காணப்படாத பல விடயங்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

அஸ்கிரி விகாரையின் தலைமைத்துவம் வலகம்பா மன்னன் காலத்தில் திரிபிடகத்தை நூலாக்கம் செய்வதற்கு தலைமை தாங்கிய மகாவிகாரையைச் சேர்ந்த கொந்தகந்ததிஸ்ஸ தேரர் என்பவரால் ஆரம்பித்து வைக்கப்பட்ட திம்புலாகல சேனாசன பரம்பரையினரிடமே இருந்து வந்ததாக 'அஸ்கிரி தல்பத' நூலில் காணப்படுகிறது. அந்தத் தேரர் முதற் கொண்டு திம்புலாகல பரம்பரையின் நூறாவது தலைமைத்துவத்தை அலங்கரித்தவர் திம்புலாகல மகா காசியப்ப தேரர் ஆவார் என இந்நூல் கூறுகிறது. மாகனின் படையெடுப்பைத் தொடர்ந்து திம்புலாகல பிக்குமாரின் ஒரு பகுதியினர் தம்பதெனியவுக்கும் மற்றொரு பகுதியினர் யாப்பகுவவிற்கும் இடம் பெயர்ந்தனர். அவ்வாறு யாப்பகுவ சென்ற பிக்குமார் வலஸ்கல அல்லது அஸ்கிரிய எனுமிடத்தில் தரித்து நின்றனர்.

குருணாகல் நான்காம் பராக்கிரமபாகு மன்னனின் ஆட்சிக் காலத்தில் கண்டியில் புதியதொரு விகாரை நிர்மாணிக்கப்பட்டு அஸ்கிரியிலிருந்த பிக்குகள் அங்கு குடியமர்த்தப்பட்டது முதல் அப் புதிய விகாரை அஸ்கிரி எனும் பெயரில் வழங்கப்பட்டதாக 'அஸ்கிரி தல்பத' வில் குறிப்பிடப்பட்டுள்ளது. அன்றிலிருந்து கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்க மன்னனின் ஆட்சிக் காலம் வரை அஸ்கிரி விகாரையின் தலைமைப் பிக்குகள், அக்கால அரசர்கள் பற்றியும் இவ் வம்சக்கதை கூறுகின்றது. இந்நூலில் உள்ளடங்கியுள்ள மிக முற்பட்ட கால வரலாற்றுத் தகவல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு மூலாதாரங்களில் காணப்படவில்லை. அத்துடன் இந்நூல் பதினெட்டாம் நூற்றாண்டிலேயே எழுதப்பட்டுள்ளது. எனவே ஆரம்ப கால இலங்கை வரலாறு பற்றி ஆய்வு செய்வோர் இதில் அடங்கியுள்ள விடயங்களை மிகவும் அவதானத்துடன் கையாள வேண்டும்.

மேற்கூறப்பட்ட முக்கியமான மூலாதார நூல்கள் தவிர அவ்வக் காலப் பகுதிகளில் நிலவிய சமூக, பொருளாதார, கலாசார வரலாற்றை அறிந்து கொள்வதற்கான வேறு பல சிங்கள நூல்களும் எமக்குக் கிடைத்துள்ளன. அவற்றுள் பொலன்னறுவைக் காலத்துக்குரிய 'வெசதுரு காதா சன்ய' அல்லது 'வெசதுரு கெடபதய' மற்றும் 'மகாபோதி வங்ச கெடபதய' ஜாதக அட்டுவா கெடபதய' 'தர்ம பிரதீபிகாவ', 'அமாவத்துர' ஆகிய உரை நடை இலக்கியங்களும் 'முவதெவ்தாவத' மற்றும் சசந்தாவத' முதலிய செய்யுள் இலக்கியங்களும் தம்பதெனிய காலத்தில் எழுதப்பட்ட 'அட்டதா சன்ய', புத்சரண, தஹம் சரண, சங்க சரண, சத்தர்மரத்னாவலிய, விசுத்திமார்க்க மகா சன்னய ஆகிய உரை நடை நூல்களும் 'கவிசிலுமின' எனும் செய்யுள் இலக்கியமும் முக்கியம் வாய்ந்தவையாகும். குருணாகல் காலத்தில் எழுதப்பட்ட சிங்கள தூபவம்சம், உம்மக்க ஜாதகம், சிங்கள ஜாதகப் புத்தகம் (பன்சியபனஸ்ஜாதகய) ஆகிய உரைநடை நூல்களும் கம்பளை யுகத்தில் எழுதப்பட்ட சத்தர்மாலங்கார, எலு அத்தனகலு வம்சம் எனும் உரைநடை நூல்களும் 'மயுரசந்தேசய' மற்றும் திசர சந்தேசய எனும் கவிதை நூல்களிரண்டும் கோட்டை காலத்தில் எழுதப்பட்ட பஞ்சிகா பிரதீபய, எலு அத்தனகலுவம்சம் எனும் உரைநடை நூல்களும் பறவி சந்தேசய (புறாவிடுதூது) கோகில சந்தேசய (குயில்விடுதூது), சலலிஹினி சந்தேசய (பூவை விடு தூது), கிரா சந்தேசய (கிளி விடு தூது), ஹங்சசந்தேசய (அன்னம் விடுதூது) முதலிய தூது இலக்கியங்களும் குத்தில காவியம், புது குண அலங்காரய, லோவட சங்கராவ, காவிய சேகர முதலிய கவிதை நூல்களும் பிரதானமானவையாகும், இந்நூல்கள் சிலவற்றுள் முக்கியம் வாய்ந்த அரசியல், நிருவாகம் பற்றிய விபரங்கள் அடங்கியுள்ளன.

பொலன்னறுவை யுகத்தின் முடிவிலிருந்து கோட்டை யுகத்தின் முடிவு வரையிலான கால கட்டத்தில் இலங்கையின் வட பகுதியில் குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் அதனைச் சூழ்ந்த பிரதேசங்களிலும் இடம்பெற்ற முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் வரலாற்றை அறிவதற்கு உதவும் தமிழ் நூல்கள் சிலவும் காணப்படுகின்றன. அவற்றுள் மயில்வாகனம் எனும் பண்டிதரால் 18ஆம் நூற்றாண்டின் இறுதியில் எழுதப்பட்ட 'யாழ்ப்பாண வைபவமாலை' முக்கியம் வாய்ந்ததொன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் புராதன வரலாறும் இந்நூலில் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது. ஆயினும் அவை நம்பத்தகுந்ததாக இல்லை. கலிங்க மாகனின் இலங்கை ஆக்கிரமிப்பின் பின்னர் இடம்பெறும் விடயங்கள் நம்பகத் தன்மை வாய்ந்ததாகும். எனவே இக்காலம் பற்றி அறிவதற்கான மூலாதாரமாக இது பயன்படுகிறது. யாழ்ப்பாண இராச்சியத்தின் ஆரம்பம் தொடக்கம் 18ஆம் நூற்றாண்டு வரை அதன் வரலாற்றை கற்பதற்கும் இது பயனுடையதாகும். இந்நூல் தவிர யாழ்ப்பாணப் பிரதேச வரலாற்றை அறிந்து கொள்வதற்கு யாழ்ப்பாண சரித்திரம், கைலாசமாலை, தட்சிண கைலாசபுராணம் எனும் நூல்களும் முக்கியம் வாய்ந்தவையாகும்.

## வெளிநாட்டு இலக்கிய மூலாதாரங்கள்

பொலன்னறுவை யுகத்திலிருந்து 16ஆம் நூற்றாண்டு வரை காலத்திற்குக் காலம் வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு வந்த தேச சஞ்சாரிகளின் அறிக்கைகள் பலவும் அந்நூற்றாண்டுகளில் இலங்கை தொடர்பாக எழுதப்பட்ட அரசியல், சமூக, பொருளாதார அறிக்கைகளும் காணப்படுகின்றன. இதில் 12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மொரோகோ நாட்டின் அல் இத்ரீஸி, யூத மதகுரு பென்ஜமின், 13ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பக்தாத் வாசியான கஸ்வினி, எகிப்தின் அல் மெக்ரிஸி, 14ஆம் நூற்றண்டில் வாழ்ந்த புளோரன்ஸ் நகரைச் சேர்ந்த ஜோன் டி மாரிஞொலி, சீனாவின் வாங்தா யுவான், அராபியரான இபின் பதூதா, ஆங்கிலேயரான சேர். ஜோன் மென்டவில், சீனரான பெய்சிங் மற்றும் மாஹுவான், 15ஆம் நூற்றாண்டில் வெனிஸ் நகரில் வாழ்ந்த நிகலொய் சொன்தி ஆகியோரின் தேச சஞ்சார அறிக்கை குறிப்பிட்டுக் கூறத்தக்கவையாகும். யாப்பகுவ இராசதானியின் முதலாம் புவனேகபாகு மன்னனுக்கும் எகிப்திய சுல்தானுக்கும் இடையிலான வர்த்தகத் தொடர்புகள் மற்றும் தூதுவராலய தொடர்புகள் பற்றி மேல் குறிப்பிடப்பட்டோரில் ஒருவரான அல் மெக்ரிஸியின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இவ்விடயம் வேறு எந்தவொரு மூலாதாரத்திலும் காணப்படவில்லை. மார்க்கோபோலோ மற்றும் இபின் பதூதா ஆகிய தேசசஞ்சாரிகளின் அறிக்கைகளில் அக்காலகட்டத்தில் இலங்கையில் நிலவிய அரசியல் நிலைமைகள் தவிர சமூக, சமய, பொருளாதார விபரங்களும் உள்ளடங்கியுள்ளன. ஏனைய தேச சஞ்சாரிகளின் அறிக்கைகளிலும் அக்கால கட்ட இலங்கையில் நிலவிய சமூக, சமய, பொருளாதார விபரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவை தவிர பர்மாவில் எழுதப்பட்ட ''சாசனவம்சம்'' தாய்லாந்தில் எழுதப்பட்ட பாளி மொழி மூல வம்சக் கதையான ''ஜினகாலமாலி'' எனும் இரு நூல்களும் கோட்டை யுகத்தின் புத்தசாசன வரலாறு பற்றியும் பௌத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயத்தை அடிப்படையாகக் கொண்ட இலங்கைக்கும் கிழக்காசிய நாடுகளுக்கும் இடையில் நிலவிய சமயத் தொடர்புகளையுப் பற்றியும் கற்பதற்கு உதவும் மூலாதாரங்களாகும்.

## தொல்பொருள் மூலாதாரங்கள்

தொல்பொருள் மூலாதாரங்களுள் கல்வெட்டுக்கள் இக்காலகட்டத்தில் பிரதான இடம் வகிக்கின்றன. இக்காலகட்டத்திற்குரிய கல்வெட்டுக்கள் வம்சக்கதைகளில் காணப்படும் அதிகமான விடயங்களை உறுதிப்படுத்துவதுடன் சில புதிய தகவல்களையும் தருகின்றன. அநுராதபுர யுகத்தைப் போலவே இந்த யுகத்திலும் கல்வெட்டுக்களுக்கு குறைவிருக்கவில்லை. பொலன்னறுவை, தம்பதெனிய, கம்பளை, கோட்டை காலங்களுக்குரிய அதிகமான சிங்கள கல்வெட்டுக்களும் கணிசமான அளவு தமிழ் கல்வெட்டுக்களும் கண்டறியப்பட்டுள்ளன. அவற்றுள் அதிகமானவை பொலன்னறுவை யுகத்திற்கு உரியனவாகும். பொலன்னறுவையில் ஆட்சி செய்த முதலாம் விஜயபாகு மன்னனுடன் தொடர்பான 6 சிங்களக் கல்வெட்டுக்களும் 2 தமிழ்க் கல்வெட்டுக்களும் மற்றும் முதலாம் ஜயபாகு மன்னனின் ஆட்சிக்காலம் பற்றி குறிப்பிடப்படுகின்ற மூன்று சிங்களக் கல்வெட்டுக்களும் எட்டு தமிழ்க் கல்வெட்டுகளும் கிடைத்துள்ளன. மேலும் விக்கிரமபாகு மன்னனின் காலத்துக்குரிய ஒரு கல்வெட்டும் இரண்டாம் கஜபாகு மன்னனின் பெயரில் பொறிக்கப்பட்ட இரண்டு சிங்களக் கல்வெட்டுக்களும் ஒரு தமிழ்க் கல்வெட்டும் மற்றும் முதலாம் பராக்கிரமபாகு மன்னனின் காலத்திற்குரிய 11 சிங்களக் கல்வெட்டுகளும் ஒரு தமிழ்க் கல்வெட்டும் கிடைத்துள்ளன. மேலும் நிஸ்ஸங்கமல்ல மன்னனின் 70 கல்வெட்டுக்களும் லீலாவதி அரசியின் காலத்திற்குரிய மூன்று கல்வெட்டுக்களும், சாகஸமல்ல மன்னனின் ஆட்சிக்காலம் பற்றி குறிப்பிடப்படுகின்ற இரண்டு கல்வெட்டுகளும் கல்யாணவதி அரசியின் காலத்துக்குரிய நான்கு கல்வெட்டுகளும், லோகேஸ்வர மன்னனின் கல்வெட்டு ஒன்றும், மாகனின் கல்வெட்டு ஒன்றும் என்றவாறு பொலன்னறுவைக் காலத்துக்குரிய 115 கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. இவற்றுள் நிஸ்ஸங்கமல்ல மன்னனின் காலத்துக்குரிய முப்பது கல்வெட்டுக்களைத் தவிர ஏனையவற்றின் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அம்பகமுவ, கிலிமலை, பனாகடுவ, வெல்கம் விகாரை, பொலன்னறுவை ஆகிய இடங்களில் கிடைத்த முதலாம் விஜயபாகு மன்னனின் சிங்களக் கல்வெட்டுகளுள் பனாகடுவ செப்புசாசனம் மற்றும் அம்பகமுவ குன்றுக் கல்வெட்டு என்பனவே வரலாற்று மூலாதாரங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற வகையில் முக்கியம் வாய்ந்தவையாகும். முதலாம் விஜயபாகு சோழரிடமிருந்து இராசரட்டையை மீட்டு இலங்கையை ஒன்று படுத்துவதற்காக மேற்கொண்ட போர் முயற்சிகளுக்கு உதவியாக இருந்த புதல்னாவன் (புதல்னா) எனும் படை வீரனின் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் மற்றும் அப்பரம்பரையினருக்கு வழங்கப்பட்ட வரப்பிரசாதங்கள் பற்றி பனாகடுவச் செப்புசாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. முதலம் விஜயபாகு மன்னன் இளம் பிராயத்தில் எதிரிகளிடமிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு புதல்னாவிடமிருந்து கிடைத்த உதவி ஒத்தாசை மற்றும் அக்கால அரசியல் பின்னணி என்பனபற்றி வம்சக் கதைகளில் கூறப்படாத பல விடயங்கள் இச் செப்புசாசனத்தில் அடங்கியுள்ளன. அதே போன்று அம்பகமுவ குன்றுக் கல்வெட்டு அம்மன்னனால் மேற்கொள்ளப்பட்ட புத்தசாசன சேவைகளையும் சமூக சேவைகளையும் வெளிப்படுத்துகின்றன.

விஜயபாகு மன்னனின் ஆட்சிக் காலம் பற்றிய தமிழ்க் கல்வெட்டுக்கள் இரண்டிலொன்று பொலன்னறுவையில் காணப்பட்டது. 'வேலைக்காரர் பட்டயம் எனும் இக் கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் வம்சக் கதைகளை உறுதிப்படுத்துபவையாக அமைந்துள்ளன. இம்மன்னன் பொலன்னறுவையில் தலதா மாளிகை ஒன்றை அமைத்தமையும் அதன் பாதுகாப்பை வேளக்காரர் எனும் தமிழ்ப் படையினரிடம் ஒப்படைத்தமையும் இக் கல்வெட்டின் பிரதான செய்தியாகும்.

முதலாம் ஜயபாகு மன்னன் ஒரு வருடம் அல்லது இரண்டு வருடங்களே பொலன்னறுவையில் ஆட்சி செய்துள்ளான். ஆனால் கல்வெட்டுக்கள் அம் மன்னனின் 8ஆம், 23ஆம், 24ஆம், 26ஆம், 27ஆம் 35ஆம், 38ஆம், 41ஆம், 43ஆம் ஆட்சி வருடங்களில் பொறிக்கப்பட்டுள்ளன. ஆனால் உண்மையில் அக்கல்வெட்டுக்கள் முதலாம் விஜயபாகுவிற்குப் பின்னர் பொலன்னறுவையில் ஆட்சி செய்த முதலாம் விக்கிரமபாகு அவனது மகன் இரண்டாம் கஜபாகு, தக்கிண தேசத்தை ஆட்சி செய்த முதலாம் மானாபரணன், உருகுணையை ஆட்சி செய்த இரண்டாம் மானாபரண என்போரின் அரசாட்சி வருடங்களையே குறிக்கின்றன. ஏனெனில் முதலாம் ஜயபாகு மன்னனின் பின்னர் பொலன்னறுவையில் ஆட்சி பீடமேறிய விக்கிரமபாகு, 2ஆம் கஜபாகு என்போர் முடி சூடப்படாத மன்னர்களாவர். முறைப்படி முடிசூடாத மன்னர்களின் ஆட்சிக் காலத்தை எழுத்துமூல அரச ஆவணங்களில் குறிப்பிடுவது அக்கால நடைமுறைக்கு மாறான செயலாகும். எனவே மேற்கூறப்பட்ட அரசர்களின் ஆட்சிகாலமும் இறுதியாக முறைப்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிசூடப்பட்ட முதலாம் ஜயபாகு மன்னனின் ஆட்சிக்காலத்தினடிப்படையிலே குறிப்பிடப்பட்டுள்ளது என்பதே உண்மை. முடிசூடப்படாத ஒரு மன்னனுக்கு ஆட்சிக் காலத்தைக் குறிப்பிடும் உரிமை இல்லை எனும் அரச இலக்கணம் இக் கல்வெட்டுக்கள் மூலம் வெளிப்படும் முக்கிய செய்தியாகும்.

பொலன்னறுவை கஜபாகு மன்னனால் ஜயபாகு மன்னனின் ஆட்சிக் காலம் குறிப்பிடப்பட்டதாகப் பொறிக்கப்பட்ட ஆறு கல்வெட்டுகள் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மேலும் கஜபாகு மன்னனின் பெயரில் அரசாட்சிக் காலம் குறிப்பிடப்படாமல் பொறிக்கப்பட்ட மூன்று கல்வெட்டுகளும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அதில் முதலாவதான 'கப்புறுவடு ஒய' தூண் கல்வெட்டில் மன்னனால் தனது அதிகாரி ஒருவருக்கு அன்பளிப்பாக்கப்பட்ட நிலம் பற்றிய செய்தி குறிப்பீடப்பட்டுள்ளது. இரண்டாவது கல்வெட்டான நெலுபாவ தூண் கல்வெட்டில் இம்மன்னனால் அநுராதபுர ருவன்வெலிசாய விகாரைக்கு அர்ப்பணிக்கப்பட்ட அணைக்கட்டு பற்றிய விபரம் அடங்கி உள்ளது. கந்தளாய் குளத்தருகே கண்டுபிடிக்கப்பட்ட தமிழ்க் கல்வெட்டு இம்மன்னனின் மூன்றாவது தூண் கல்வெட்டாகும். இதில் கந்தளாயை சேர்ந்த பிராமணர்களுக்கு அர்ப்பணிப்பு செய்யப்பட்ட (மீண்டும் அரசனால் பெற்றுக்கொள்ள முடியாது.) கிராமம் ஒன்று பற்றிய விபரங்கள் அடங்கியுள்ளன. மேற்குறிப்பிடப்பட்ட ஜயபாகு மன்னனின் ஆட்சிக் காலம் குறிப்பிடப்பட்ட கல்வெட்டுக்களுள் பொலன்னறுவையில் கண்டெடுக்கப்பட்ட தமிழ்த் தூண் கல்வெட்டில் அம்மன்னனின் 38 வது ஆட்சி வருடத்துடன் இரண்டாம் கஜபாகு மன்னனின் 15ஆம் ஆட்சி வருடமும் குறிப்பிடப்பட்டுள்ளது. இரண்டாம் கஜபாகு மற்றும் முதலாம் விக்ரமபாகு ஆகிய அரசர்கள் பொலன்னறுவை. ஆட்சியாளர்கள் ஆன உரிய ஆண்டுகளை அறிந்து கொள்வதற்கு இத் தமிழ் தூண் கல்வெட்டு பெரிதும் உதவுகிறது.

முதலாம் பராக்கிரமபாகு மன்னனின் காலத்துக்குரிய கல்வெட்டுக்களுள் மிகவும் பழையதெனக் கருதத் தக்க குருணாகலை மாவட்ட சங்கமு விகாரைக் கல்வெட்டானது. வம்சக் கதைகளில் கூறப்படும் பராக்கிரமபாகு மன்னனுக்கும் கஜபாகு மன்னனுக்கும் இடையில் இடம்பெற்ற ஒப்பந்தத்தை உறுதிப்படுத்துகின்றது. பராக்கிரமபாகுவின் ராமஞ்ஞதேச (பர்மா) ஆக்கிரமிப்பு பற்றி வம்சக் கதைகளில் கூறப்படும் விபரங்கள் தெவனகல குன்றுக் கல்வெட்டு மூலம் உறுதி செய்யப்படுகிறது. அந்த ஆக்கிரமிப்புக்காக அனுப்பப்பட்ட ஒரு படைவீரனின் பெயர் இக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. ' பொலன்னறுவை கதிகாவத' எனும் பெயரில் அழைக்கப்படும் பொலன்னறுவை கல் விகாரை குன்றுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வெட்டும் பராக்கிரமபாகு மன்னனின் காலத்துக்குரிய முக்கியமான கல்வெட்டாகும். இக்கல்வெட்டு அக்கால பௌத்த பிக்குகளைப் பற்றிய பல விபரங்களை வெளிப்படுத்துகின்றது. பராக்கிரமபாகு மன்னனால் அமைக்கப்பட்ட, புனர்நிர்மாணம் செய்யப்பட்ட பராக்கிரம சமுத்திரம், பதவியநாஹின்ன முதலிய குளக் கரைகளில் இம்மன்னனது தூண் கல்வெட்டுக்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றில் அக்குளங்கள் இம் மன்னனால் அமைக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. சில கல்வெட்டுக்களில் இரண்டு குளங்களுக்கிடையிலான தூரம் குறிப்பிடப்பட்டுள்ளது. பராக்கிரமபாகு மன்னனின் காலத்துக்குரிய தமிழ்க் கல்வெட்டொன்று யாழ்ப்பாண நயினா தீவில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டில் ஊராதொட்ட (ஊர்காவற்றுறை) துறைமுகத்துக்கு வரும் கப்பல்களுக்குரிய சட்டத்திட்டங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. யாழ்ப்பாணக் குடா நாடும் அதன் அயலிலிருந்த தீவுகளும் இம்மன்னனின் ஆட்சியின் கீழ் இருந்ததை இக் கல்வெட்டு தெளிவுபடுத்துகின்றது. அது யாழ்ப்பாணப் பிரதேசத்தில் கண்டு பிடிக்கப்பட்ட முதல் தமிழக் கல்வெட்டாகும் என்பது வரலாற்று ரீதியில் மிக முக்கியமானதாகும்.

நிஸ்ஸங்கமல்ல மன்னனின் காலத்துக்குரிய சுமார் 70 கல்வெட்டுக்களில் பொலன்னறுவையில் காணப்படும் 'கல்பொத்த' எனும் சுவர் கல்வெட்டு, பொலன்னறுவை வடக்கு வாசல் வாயில் கல்வெட்டு, பொலன்னறுவை சுவர்க் கல்வெட்டு, அல்லை சாசனம், தொரட்டியாவ சாசனம், ரன்கொத் வெஹர தூண் கல்வெட்டு, ஹற்றதாகே சுவர்க் கல்வெட்டு மற்றும் உருகுணைப் பகுதியில் சில இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள தூண் கல்வெட்டு என்பன மிகவும் முக்கியம் வாய்ந்தவையாகும். இம்மன்னனின் கல்வெட்டுக்கள் அனைத்திலும் போல் ஒரே விடயமே அடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அநேகமான கல்வெட்டுக்களில் மன்னனின் வம்சம் மற்றும் இலங்கை சிம்மாசன உரிமையைப் பெற்றுக் கொண்ட விதம், தான் நாட்டு மக்களுக்காற்றியுள்ள சேவைகள் என்பன பற்றியே எழுதப்பட்டுள்ளன. இம்மன்னனால் வழங்கப்பட்ட தொரட்டியாவ சாசனம் மற்றும் அல்லை சாசனம், பொலன்னறுவை அரச சபை மண்டபத்தின் சிற்ப வேலைப்பாடுகளுடனான சிம்மாசனத்தில் பொறிக்கப்பட்டுள்ள வாசகங்கள் என்பவற்றின் மூலம் பொலன்னறுவைக் காலத்தில் நிலவிய நிருவாகக் கட்டமைப்பு பற்றிய முக்கியமான பல்வேறு தரவுகளையும் அறியக் கூடியதாக உள்ளது. சிறப்பாக அரச சபையில் அமர்த்தப்பட்ட அதிகாரிகள் பற்றிய விபரங்களை அறிய முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலிங்க தேசம், பாண்டிய நாடு என்பவற்றுக்கு தூதுவராக அனுப்பப்பட்ட ஹெலவானாரக் எனும் பிரதானி அப்பணியைச் சிறப்பாகச் செய்து முடித்தமைக்காக வழங்கப்பட்ட பரிசு பற்றி அல்லை செப்பு சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. லோகேனாவன் எனும் பிரதானி விஜயசிறி மகாபாய எனும் கட்டடத்தை நிர்மாணித்தமைக்காக அவருக்கு தொரட்டியாவ எனும் கிராமம் அன்பளிப்பாக வழங்கப்பட்டமை தொரட்டியாவ சாசனத்தில் கூறப்பட்டுள்ளது. நிஸ்ஸங்கமல்ல மன்னனின் சமய சேவைகள் பற்றிக் கூறும் கல்வெட்டுக்களும் காணப்படுகின்றன. தம்புள்ள குன்றுக் கல்வெட்டு, வாந்துருப்ப கல்வெட்டு, ரம்பா விகாரை சுவர்க் கல்வெட்டு, பொலன்னறுவை ரன்கொத் விகாரை தூண் கல்வெட்டு, பொலன்னறுவை ஹட்டதாகே சுவர்க் கல்வெட்டு என்பன அதற்குச் சான்றுகளாகும்.

இதுவரை குறிப்பிடப்பட்ட நிஸ்ஸங்கமல்ல மன்னனின் கல்வெட்டுக்களில் ஒரே மாதிரியான தகவல்களே அடங்கியுள்ளன. ஆனாலும் அவற்றின் மூலம் அம்மன்னனின் ஆட்சிக் காலம், அவனின் ஆதிக்கம் பரம்பிய பிரதேசங்கள், ஆட்சி முறை, சமய நடவடிக்கை மற்றும் அரசியல் எண்ணக்கருக்கள் என்பவை பற்றி வம்சக் கதைகளில் இல்லாத விடயங்களையும் அறியக் கூடியதாகவுள்ளது.

லீலாவதி அரசியின் காலத்துக்குரிய கல்வெட்டுக்களுள் வரலாற்று ரீதியாக முக்கியத்துவம் பெறுவது அநுராதபுரத்துக்கு அண்மையில் உள்ள புளியங்குளம் எனுமிடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட சுவர்க் கல்வெட்டாகும். அதில் 'அஹாசலமெவன் லீலாவதி சுவாமீன் வஹன்சே' என அரசியின் பெயர் கௌரவமாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அக்காலத்தில் அநுராதபுரியில் நிலவிய 'நானா தேசிவியாபாரம்' எனும் வெளிநாட்டு வியாபாரம் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சாகசமல்ல மன்னனின் காலத்துக்குரிய கல்வெட்டுக்கள் இரண்டில் ஒன்று பொலன்னறுவை ரன்கொத் விகாரைக்கண்மையில் கண்டு பிடிக்கப்பட்டது. இம்மன்னன் புத்த வருடம் 1743 பினர (ஆவணி) மாதத்தில் 12ஆம் நாளில் அரச பதவிக்கு வந்ததாகவும் அவன் நிஸ்ஸங்கமல்ல மன்னனின் சகோதர உறவானவன் என்பதும் இக்கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கல்வெட்டானது இம்மன்னனுக்கு ஆட்சியமைப்பதற்கு உதவி செய்த பிரதானி ஒருவருக்கு கிராமங்களைப் பரிசளிப்பதற்காகவும் அப்பிரதானியின் தாயாருக்கு கௌரவப் பட்டம் ஒன்று வழங்கப்படுவதற்காகவும் பொறிக்கப்பட்டதாகும். உடதும்பரை கெவுல்கம எனுமிடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட இம்மன்னனின் இரண்டாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வெட்டில் குத்பிட்டிபுத் எனும் பிரதானிக்கு வழங்கப்பட்ட வயல்நிலம் பற்றிய விபரம் காணப்படுகின்றது.

கல்யாணவதி அரசியின் காலத்துக்குரிய நான்கு கல்வெட்டுக்கள் அநுராதபுர, தெலியாவ, பதலேகொட, போபிட்டிய எனுமிடங்களில் கிடைக்கப் பெற்றுள்ளன. அக்கால கட்ட அரசியல் பற்றிய கற்றலுக்கு இக் கல்வெட்டுக்களால் பாரிய பயனேதும் இல்லை. அநுராதபுர ருவன்வெலிசாயவுக்கு அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டில் அந்த விகாரைக்கும் தூபாராம விகாரைக்கும் புனித வெள்ளரசு மரத்துக்கும் அரச அதிகாரிகள் சிலரின் பங்களிப்புடன் செய்த பூஜைகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. பதலேகொட குளக் கரையில் கண்டு பிடிக்கப்பட்ட கல்வெட்டில் லங்காதிகாரி சூடாமணி எனும் அதிகாரியினால் அந்தக் குளமும் அதனருகில் அமைந்திருந்த செனவிரத்ன பிரிவென கல்வி நிலையமும் திருத்தியமைக்கப்பட்டதாகவும் அந்நிலையத்துக்கு அர்ப்பணிப்பு செய்யப்பட்ட நாலு அவனம் அளவான வயல் நிலம் பற்றிய குறிப்பும் காணப்படுகிறது. ஏனைய இரண்டு கல்வெட்டுக்களும் சிதைவடைந்துள்ளன. அதில் ஒன்றில் கல்யாணவதி அரசியின் நான்காவது ஆட்சி வருடம் பற்றிக் குறிப்பிடும் பகுதியும் மற்றையதில் ''சிறீ அஹாசலமெவன் கல்யாணவதி சுவாமி அவர்கள் தமிழ்ப்படை முகாம்களை எதிர்த்து'' எனும் பகுதியும் எழுத்துக்கள் சிலவும் எஞ்சியிருக்கின்றன.

வெளிநாட்டிலிருந்து பாரிய தமிழ்ப் படையொன்றுடன் வந்து, லீலாவதி அரசியை இரண்டாம் முறையும் பதவியிலிருந்து கவிழ்த்த அரசனான லோகேஸ்வர எனும் மன்னன் பற்றியும் வம்சக்கதைகள் கூறுகின்றன. இம்மன்னன் யார் என்பதை அறிந்துகொள்வதற்கு உதவும் கல்வெட்டொன்று குருநாகல் மாவட்டத்தில் கொட்டன்கே எனும் இடத்தில் கிடைக்கப்பெற்றுள்ளது. அக்கல்வெட்டில் 'மகா சம்மத பரம்பரையிலிருந்து வந்த காலிங்க குல திலகமான ஸ்ரீ சங்கபோ லோகேஸ்வரபாகு சக்கரவர்த்தி சுவாமி அவர்கள்' என்று இம்மன்னன் அறிமுகப்படுத்தப்படுகிறான். லோகே அறக்மேனா எனும் அதிகாரி தனக்காக சோழர்களிடம் காட்டிய திறமைக்காக அவருக்கு கிராமம் ஒன்றை பரிசளித்தாகவும் இக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொலன்னறுவை யுகத்தில் இறுதிக் கல்வெட்டாக கருதப்படும் சுவர்க் கல்வெட்டு ஒன்று மஹியங்கனைக்கு அருகில் உள்ள மினிப்பே எனும் இடத்தில் கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளது. அக்கல்வெட்டு பொறிக்கப்பட்ட ஆட்சிக்காலம் குறிப்பிடப்படவில்லையாயினும். கல்யாணவதி அரசியின் 8ஆம் ஆட்சி வருடத்தில் இடம் பெற்றுள்ள தமிழர் ஆக்கிரமிப்புப் பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே இது இவ்வரசியின் ஆட்சிக்காலத்தின் பின்னர் பொறிக்கப்பட்டது என்பது தெளிவாகின்றது. மினிப்பே கால்வாய் பற்றி சுருக்க வரலாறும் இக்கல்வெட்டில் இடம் பெறுகின்றது. இது கலிங்கமாக அரசனின் காலத்துக்குரியது எனக் கருதப்படுகின்றது.

பொலன்னறுவை யுகத்தோடு ஒப்பிடும்போது தம்பதெனிய இராச்சியத்துக்குரிய கல்வெட்டுக்கள் மிகவும் சொற்பமானதாகும் இக்காலத்துக்குரிய 7 கல்வெட்டுக்கள் அநுராதபுரம், யாப்பகுவ, நாரன்பெத்த, வகரகொட, பெந்தர, தெவிநுவர எனும் இடங்களில் கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளன. அவை அனைத்தும் 2ஆம் பராக்கிரமபாகு மன்னனின் ஆட்சிக்காலத்துக்குரியதாகும். இக்கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்ட நிலங்கள் அம்மன்னின் ஆட்சி நிலவிய பகுதிகளாகும் என்ற முடிவுக்கு நாம் வரலாம். அக்கல்வெட்டுக்கள் கண்டுப்பிடிக்கப்பட்ட பிரதேசங்களும் அக்கல்வெட்டில் கண்டுப்பிடிக்கப்பட்ட வாசகங்களும் வரலாற்றுரீதியில் முக்கியமானவையாகும். பெந்தர கலபாத்த விகாரைக் காணியில் கண்டுப்பிடிக்கபட்ட குன்றுக் கல்வெட்டில் அக்காலத்தில் அப்பகுதியை நிருவாகம் செய்த தமிழ் அதிகாரியான கஹம்ஹல் குளுமிதல்னா என்பர் பற்றியும் அவர் இன்னும் சில பிரபுக்களுடன் சேர்ந்து கலபாத்த கிராமங்கள் அமைத்ததாகவும் அங்கிருந்த பிக்குகளுக்கு அர்ப்பணிக்கப்பட்ட விகாரைகள், கிராமங்கள் சில பற்றியும் குறிப்பிடப்பிட்டுள்ளது. 2ஆம் பராக்கிரமபாகு மன்னனின் தெவிநுவர கல்வெட்டில் துறைமுகத்துக்கு பொறுப்பாக இருந்த அதிகாரியின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அத்துறைமுகத்தின் சட்டதிட்டங்களும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தம்பதெனிய காலத்தில் பொறிக்கப்பட்டுள்ள சில கல்வெட்டுக்களின் பின்னர் மீண்டும் கல்வெட்டுக்கள் எழுதப்பட்டது கம்பளைக் காலத்திலாகும். இக்காலத்தில் ஆட்சி செய்த எல்லா அரசர்களுக்குமான 20 கல்வெட்டுக்கள் இதுவரை கண்டுப்பி டிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் கடலாதெனிய, லங்காதிலக, கீர்த்தி ஸ்ரீ மெவன் களனி, மெதவலமங்குல் மஹ மெஹவர, நியம்கம்பாய, அபுகஸ்தென்ன, பெத்தி கம்மன, விகுலவத்த, சகம, வேகிரிய எனும் இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுக்கள் அக்காலத்துக்குரிய அரசியல் சமய, பொருளாதார வரலாற்றை அறிவதற்கு பெரிதும் உதவுகின்றன. 4ஆம் புவனேகபாகு மன்னனின் 3வது ஆட்சி வருடத்திற்குரிய கடலாதெனிய விகாரை காணியிலும் சித்துருவான லங்கா திலக விகாரைக் காணியிலும் காணப்படும் 2 குன்று கல்வெட்டுக்களிலும் இவ்விகாரையை அமைத்தவர்களின் பெயர், ஊர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் விகாரையின் ஆரம்ப அமைப்பு பற்றிய விவரங்களும் அவர்களின் பரிபாலனத்துக்காக சில பிரபுக்களால் அர்ப்பணம் செய்யப்பட்ட சில நிலங்கள் பற்றிய விபரங்களும் காணப்படுகின்றன. பானமைபற்று மங்குல் மகாவிகாரைக் காணியில் காணப்படும் 5ஆம் பராக்கிரமபாகு மன்னனின் காலத்துக்குரிய இரண்டு கல்வெட்டுக்களில் சோழர் படையை முறியடித்து உருகுணை ரட்டையில் ஆட்சி செய்யும் பெரகும்பா எனும் இரண்டு அரச வாரிசுகளுக்கும் மனைவியான விகாரமகாதேவி என்னும் பட்டத்து இராணி பற்றியும் அவரால் அங்கு நிர்மாணிக்கப்பட்ட உருகுணை மகா விகாரை திருத்தியமைக்கப்பட்டு தன்னால் விகாரதேவி என்றும் பிரிவெனா அமைக்கப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மங்குல் மகாவிகாரையின் பழைய பெயர் உருகுணை மகா விகாரை என்றும் விகாரமகாதேவி என்பவர் 5ஆம் பராக்கிரமபாகு மன்னனினதும் அவரது சகோதரரினதும் பட்டத்து இராணி என்பதும் இக்கல்வெட்டுக்கள் மூலம் தெளிவாகிறது. அக்காலத்தில் இலங்கை மீது மேற்கொள்ளப்பட்ட சோழர் படையெடுப்புப் பற்றியும் இக்கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. இங்கு கிடைக்கபெற்ற மற்றொரு கல்வெட்டில் 5ஆம் பராக்கிரமபாகு மன்னன் 'சொழசே தெய்வமே!' என விளிக்கப்பட்டுள்ளதுடன் லங்காபுர மகாதேவியெனும் மற்றொரு மகாராணி பற்றியும் அவர் மூலம் கிடைத்த ஸ்ரீதேவி என்னும் மகள் பற்றியும் அறியக்கிடைத்துள்ளது. மங்குல் மகாவிகாரை கல்வெட்டுக்களில் காணப்படும் இந்த தகவல்களை வேறு எந்த ஒரு மூலாதாரத்திலும் காண்பதற்கில்லை.

கம்பளை 3ஆம் விக்கிரமபாகு மன்னனின் காலத்துக்குரிய கல்வெட்டுக்களுள் அவனது 17ஆம் ஆட்சி வருடத்தில் பொறிக்கப்பட்ட நியம்கம்பாய கல்வெட்டு முக்கியமானதாகும். ஜயமகலே மந்திரிஸ்வர, அழகேஸ்வர எனும் அமைச்சர் இருவரால் நியம்கம்பாய விகாரை கட்டப்பட்டுள்ளதுடன் அங்கு ஜயமகாலென பிரிவெனாவும் அமைக்கப்பட்டு அவற்றின் நிருவாகத்திற்காக நிலபுலங்கள் ஒதுக்கப்பட்டமையும் சேவகர்கள் நியமிக்கப்பட்டமையும் அக்கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. கடலாதெனிய கல்வெட்டை போலவே இக்கல்வெட்டிலும் நியம்கம்பாய விகாரையுடன் இணைந்தமைந்த சிலை மனையின் கட்டட விவரங்கள் விளக்கமாக கூறப்பட்டுள்ளன. ஸ்ரீ விக்கிரமபாகு தேவ, விஜயபாகு ஏபா, பராக்கிரமபாகு ஏபா, அழகக்கோனார, ஜய மஹலே ஆகிய அரச பிரதானிகளின் பெயர்கள் கல்வெட்டில் சாட்சிகளாக குறிப்பிடப்பட்டுள்ளன. இப்பெயர் பட்டியல் அக்கால அரசியல் பற்றி கற்போருக்கு பெரிதும் துணைபுரியும். 5 ஆம் புவனேகபாகு மன்னனின் 9 ஆம் ஆட்சி வருடத்தில் பொறிக்கப்பட்ட சகம குன்றுக் கல்வெட்டில் அக்காலகட்ட அரசியல் களத்தின் மேல் மட்டத்தில் மிளிர்ந்த அழகேஸ்வர அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகக்கோணார் பரம்பரையை சேர்ந்த அழகேஸ்வர, தேவ மந்திரீஸ்வர எனும் இரு சகோதரர்களின் பெயர்கள் காணப்படுகின்றன. அழகேஸ்வரர் பரம்பரையைப் பற்றி கற்போருக்கு இக்கல்வெட்டு பெரிதும் உதவும். இக்காலத்திற்குரிய கி.பி. 1344 இல் பொறிக்கப்பட்ட கீர்த்தி மேவன் களனி கல்வெட்டிலும் மேற் குறிப்பிட்ட பரம்பரையை சேர்ந்த நபர் ஒருவரின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் இப்பெயர் கொண்ட பத்தாவது நபர் என்றும் அன்னாரது பரம்பரை வங்சீ வம்சத்தைச் சேர்ந்த நிஸ்ஸங்க அழகக் கோணார் எனும் அமைச்சருடன் ஆரம்பித்ததாகவும் இக்கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கோட்டை யுகத்தைப் பற்றி அறிய உதவும் கல்வெட்டுக்கள் மற்றும் செப்பு சாசனங்கள் சிலவும் காரகல, பப்பிலியான, இரத்தினபுரி, கடலாதெனிய, மடவல, தெனவக, ஒருவல, தெடிகம, பல்கும்புர, படாகட, அலுத்நுவர, குடுமிறிஸ்ஸ, காலி, தெவிநுவர ஆகிய இடங்களில் காணப்படுகின்றன. இவற்றுள் 6 ஆம் பராக்கிரமபாகு மன்னனின் காரகல சுவர்க் கல்வெட்டு, சப்ரகமுவ சமன் தேவாலயக் கல்வெட்டு, மடவலை குன்றுக் கல்வெட்டு, பப்பிலியான சுவர் கல்வெட்டு என்பனவும் 6ஆம் புவனேகபாகு மன்னனின் தெடிகம சுவர் கல்வெட்டும் சேனாசம்மத விக்கிரமாகு மன்னனின் அலுத்நுவர சுவர் கல்வெட்டும் முக்கியம் வாய்ந்தவையாகும். இக் கல்வெட்டுக்களில் கூறப்பட்டுள்ள சில விடயங்கள் வம்சக் கதைகளில் கூறப்பட்டுள்ள சில விடயங்களை உறுதிப்படுத்துவதுடன் இலக்கிய மூலாதாரங்களில் இல்லாத பல விடயங்களையும் வெளிப்படுத்துகின்றன. கி.பி. 11ஆம் நூற்றாண்டுக்கும் 16ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்திற்குரிய தமிழ்க் கல்வெட்டுக்கள் பலவும் கிடைக்கப் பெற்றுள்ளன. அக்காலகட்ட வரலாற்றை அறிந்து கொள்வதற்கு தமிழ் கல்வெட்டுக்களும் பெரிதும் துணைபுரிகின்றன. அவற்றுள் சில பொலன்னறுவையை சோழர் ஆட்சி செய்த காலகட்டத்தில் அவர்களால் பொறிக்கப்பட்டதாகும். முதலாம் இராஜராஜன், முதலாம் இராஜேந்திரன் 2ஆம் இராஜேந்திரன், அதிஇராஜேந்திரன் ஆகிய சோழ அரசர்களுக்குரிய இக்கல்வெட்டுக்கள் அநுராதபுரம், எரியாவ, முருங்கன், பொலன்னறுவ, பதவியா, வெல்கம் விகாரை, பருத்தித்துறை, ஹெமன்ஹில் ஆகிய இடங்களில் கண்டுப்பிடிக்கப்பட்டன. அக்காலகட்டத்தில் சோழர் ஆதிக்கம் பரவலடைந்த பிரதேசங்களையும் இதன் மூலம் அறிய முடிகின்றது.

வளஞ்சியர் அல்லது நானாதேசி எனும் வணிகர்களால் 12ஆம் நூற்றாண்டில் பொறிக்கப்பட்ட தமிழ்க் கல்வெட்டுக்கள் சில வாஹல்கட, பதவிய, ஹெட்டிபொல, மொரகல்ல, ஆனவுளுந்தாவ, சிலாபத்துக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மையில் உள்ள இலக்கட்டு அபே முதலிய இடங்களிலிருந்து கிடைக்கப்பெற்றுள்ளன. இக்கல்வெட்டுக்கள் மூலம் பொலன்னறுவை யுகத்தின் பொருளாதார வரலாற்றை அறிய முடிகின்றது.

பொலன்னறுவை யுகத்தில் ஆட்சிசெய்த முதலாம் விஜயபாகு, முதலாம் ஜயபாகு, கஜபாகு, மானாபரன ஆகிய சிங்கள மன்னர்களால் பொறிக்கப்பட்ட தமிழக் கல்வெட்டுக்கள் பற்றி ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளது. கோட்டையிலிருந்து ஆட்சி செய்த ஆறாம் பராக்கிரமபாகு, ஆறாம் விஜயபாகு மற்றும் கம்பளை ஐந்தாம் பராக்கிரமபாகு ஆகிய மன்னர்களின் காலத்துக்குரிய தமிழ்க் கல்வெட்டுக்கள் சில தெவிநுவர, முன்னேஸ்வரம், திருக்கோவில், கொடகம முதலிய இடங்களில் கிடைக்கப் பெற்றுள்ளன. இக் கல்வெட்டுக்கள் அம்மன்னர்களைப் பற்றி அறிவதற்குப் பெரிதும் பயனளிக்கின்றன.

எமது தலைப்புக்குரிய காலப்பகுதி பற்றிக் கற்பதற்கு தென்னிந்திய சோழ, பாண்டிய, விஜயநகர இராச்சியங்களின் சில அரசர்களின் தமிழ்க் கல்வெட்டுக்கள் பலவும் உதவுகின்றன. இவற்றுள் தஞ்சாவூர் கோயிலில் காணப்படும் முதலாம் இராஜராஜ சோழனின் கல்வெட்டுக்கள், இராஜேந்திர சோழனின் மணிமங்களம் கல்வெட்டு, வீரராஜேந்திர சோழனின் திருமுக்கூடல் கல்வெட்டும் இராஜாதிராஜ சோழனின் மணிமங்களம் கல்வெட்டு இரண்டாம் இராஜாதிராஜ சோழனின் ஆர்ப்பாக்கம், திருவாலன்காடு, பல்லவராயன் பேட்டை கல்வெட்டுக்களும் மூன்றாம் குலோதுங்க சோழனின் சிதம்பரம், சண்முகனார் கோயில், குடுமிமலை, சேரனூர் கல்வெட்டுக்களும் பொலன்னறுவை யுகத்தின் அரசியல் வரலாற்றைக் கற்பதற்குப் பெரிதும் துணை புரிகின்றன. முதலாம் பராக்கிரமபாகு மன்னன் பாண்டிய ஆக்கிரமிப்புக்களுக்கு உதவி வழங்கிய பல்வேறு சந்தர்ப்பங்கள் பற்றிய குறிப்புகள் இச்சோழ கல்வெட்டுக்களில் காணப்படுவதுடன் அம்மன்னனின் மறைவுக்குப் பின்னர் ஏற்பட்ட சிங்கள - சோழ மோதல்கள் பற்றிய குறிப்புகளும் காணப்படுகின்றன.

தென்னிந்திய பாண்டியப் பேரரசின் ஜடாவர்மன் சுந்தரபாண்டியன், ஜடாவர்மன் வீரபாண்டியன், மாறவர்மன் குலசேகரன் முதலிய மன்னர்களின் கல்வெட்டுக்கள் அக்கால கட்டத்தில் தம்பதெனிய இராச்சியத்துக்கும் பாண்டிய இராச்சியத்துக்கும் இடையில் நிலவிய அரசியல் தொடர்பு பற்றிப் பறைசாற்றுகின்றன. அதே போன்று 14ம் நூற்றாண்டில் தக்கணத்தின் விஜயநகர அரசுக்கும் இலங்கைக்கும் இடையிலான அரசியல் உறவு பற்றி அறிவதற்கு அவ்விராச்சியத்தின் இரண்டாம் ஹரிஹரனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்துக்குரிய ஆலம்பூண்டி, அரியூர், சுரைக்காவூர் முதலிய இடங்களில் கிடைப்பப்பெற்ற கல்வெட்டுக்கள் உதவுகின்றன. இக்கல்வெட்டுக்கள் கூறும் தகவல்கள் வம்சக் கதை நூல்களில் காணப்படவில்லை.

## புராதன நாணயங்கள்

குறிப்பிட்டவொரு நாட்டின் வரலாற்றை அறிவதற்கு அந்த நாட்டுக்குரிய புராதன நாணயங்களையும் வரலாற்று மூலாதாரமாகக் கொள்ளலாம். அதன்படி இலங்கையின் புராதன நாணயங்களும் உதவியுள்ளமையை இது வரை மேற்கொள்ளப்பட்ட நாணயங்கள் பற்றிய ஆய்வுகள் உறுதி செய்கின்றன. பொலன்னறுவை, தம்பதெனிய, யாப்பகுவ, கம்பளை, கோட்டை இராசதானிகளுக்குரிய நாணயங்கள் குறிப்பிட்ட தலைநகரங்களிலும் திருக்கேதீஸ்வரத்திலும் கிடைக்கப்பெற்றுள்ளன. அவற்றுள் சில பொலன்னறுவையை ஆட்சி செய்த சோழ மன்னர்களான முதலாம் இராஜ இராஜ, இராஜேந்திர, இராஜாதிராஜ முதலிய அரசர்களின் காலத்தில் வெளியிடப்பட்டனவாகும். அவர்களின் பின்னர் பொலன்னறுவையை ஆட்சி செய்த முதலாம் விஜயபாகு, முதலாம் பராக்கிரமபாகு, கீர்த்தி நிஸ்ஸங்கமல்ல முதலிய மன்னர்களின் காலத்துக்குரிய நாணயங்களும் தம்பதெனியவை ஆட்சி செய்த இரண்டாம் பராக்கிரமபாகு, நாலாம் விஜயபாகு மற்றும் யாப்பகுவ முதலாம் புவனேகபாகு ஆகிய மன்னர்களின் காலத்துக்குரிய நாணயங்களும் குறிப்பிடத்தக்களவு கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. கோட்டை யுகத்தின் ஆறாம் பராக்கிரமபாகு மன்னனின் நாணயங்கள் கோட்டை நகரிலும் யாழ்ப்பாணத்திலும் கிடைக்கப்பெற்றுள்ளன. இந்த நாணயங்கள் எல்லாம் குறிப்பிட்ட காலப்பகுதி பற்றிக் கற்பதற்கு அவ்வளவு தூரம் உதவாத போதிலும் அக்காலகட்ட பொருளாதார நிலை பற்றி அறிந்து கொள்வதற்குப் பெரிதும் துணை நிற்கின்றன. பதினோராம், பதினாறாம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலகட்டத்தில் எமது நாட்டில் புழங்கிய இந்திய, சீன, அராபிய, நாணயங்கள் பொலன்னறுவை, மாத்தளை, ஹாரகம, மாதோட்டை முதலிய இடங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இந்த நாணயங்கள் பற்றி ஆராயும் போது மேற்குறிப்பிடப்பட்டுள்ள நாடுகளுடன் இலங்கை கொண்டிருந்த வர்த்தகத் தொடர்புகளை அறிய முடிகின்றது. பொலன்னறுவை அரச மாளிகையிலிருந்து கண்டெடுக்கப்பட்ட தென் சீனாவின் சூங் அரச வம்சத்துக்குரிய சீன நாணயங்களும் ஹாரகமவில் கண்டுபிடிக்கப்பட்ட கிழக்குக் கலிங்கத்தின் சோடாங்க வம்சத்துக்குரிய அனந்தவர்மன் சோடாங்க மன்னனின் நாணயங்களும் எகிப்தின் மம்லுக் சுல்தான்களின் நாணயங்களும் விஜயநகர மன்னர்களுக்குரிய 'வராகண்' எனும் நாணயங்களும் ஒரிஸ்ஸாவின் கஜபதி மன்னர்களின் 'பகோதி' எனும் நாணயங்களும் முக்கியம் வாய்ந்தனவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொல்பொருட்களும் புராதன நீர்ப்பாசனத் துறையும்

குறிப்பிடப்பட்ட காலப்பகுதியில் ஆட்சிசெய்த மன்னர்கள் மற்றும் பிரதானிகளால் அமைக்கப்பட்ட கட்டடங்கள் குளங்கள் பற்றி வம்சக்கதைகள் கூறும் தகவல்களின் உண்மையைத் தேடியறிவதற்கும் அத்தரவுகளின் வரலாற்றை உறுதிப்படுத்துவதற்கும் புராதன கட்டடங்களினதும் குளங்களினதும் இடிபாடுகளே நமக்கு உதவுகின்றன. பொலன்னறுவை, தம்பதெனிய, யாப்பகுவ, குருணாகலை, கம்பளை, கோட்டை முதலிய இராச்சியங்களில் அக்காலக்கட்டத்துக்குரிய கட்டடங்களும் நீர்ப்பாசன அமைப்புக்களும் இன்னும் பாதுகாக்கப்பட்டு வருவது ஒரு சிறப்பம்சமாகும். பொலன்னறுவையின் முதலாம் பராக்கிரமபாகு மன்னன் அமைத்த அரசமாளிகை, 'ராஜ்யவேஸ்யாபூஜாங்க எனும் மண்டபம், 'ஆலாஹன' பிரிவெனா, மற்றும் பராக்கிரம சமுத்திரம் எனும் பெருங்குளம், 'சிலா பொக்கரனி' எனும் தடாகம் முதலிய நிர்மாணங்கள் பற்றி வம்சக் கதைகள் கூறுகின்றன. அதே நகரில் நிஸ்ஸங்கமல்ல மன்னனால் தலதாமாளிகை மற்றும் ரத்னாவலி விகாரை என்பன அமைக்கப்பட்டதாகவும் வம்சக் கதைகள் கூறுகின்றன. இக்கட்டடங்களின் இடிபாடுகள் இன்றும் நிலைத்து நின்று வம்சக் கதைகளின் கூற்றுக்களை நிரூபிக்கின்றன. குறிப்பிட்ட காலப் பகுதிக்குரிய கட்டட இடிபாடுகள் பல தம்பதெனிய, யாப்பகுவ, குருணாகல, கம்பளை முதலிய இடங்களிலும் காணப்படுகின்றன. அவ்வக் காலப்பகுதி பற்றிக் கற்கும் போது இவ்விடிபாடுகளும் எமக்கு மூலாதாரங்களாகப் பயன்படும். அது தவிர பொலன்னறுவ, பண்டுவஸ்நுவர, யாப்பகுவ முதலிய இடங்களில் காணப்படும் இடிபாடுகள் மூலம் மத்திய கால இலங்கையில் காணப்பட்ட நகரங்கள், பாதுகாப்புக் கோட்டைகளின் நிர்மாணம் பற்றி அறியும் வாய்ப்புக் கிடைக்கின்றது.

## உசாத்துணை நூல்கள்

**சிங்கள நூல்கள்**

எலு அத்தனகலு வங்சய, எலுபோதி வங்சய, தூப வங்சய, தாது வங்சய, நிகாய சங்கிரஹய, பூஜாவலிய, தளதா பூஜாவலிய, தளதா சிரித சத்தர்மாலங்காரய, சத்தர்மரத்னாகரய, மயுரசந்தேசய, கோகில சந்தேசய, திசரசந்தேசய, ஹங்ச சந்தேய, கிராசந்தேசய, பரவி சந்தேசய, காவியசேகரய, தம்பதெனி அஸ்ன, ராஜ ரத்னாகரய, அஸ்கிரி தல்பத, ராஜாவலிய, அழகேஸ்வர யுத்தய, தம்பதெனி கதிகாவத.

**பாளி நூல்கள்**

மகாவம்சம், சூளவம்சம், ரசவாஹினி, ஜினகாலமாலி, ஹத்தவனகல்ல விஹார வம்சம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தமிழ் நூல்கள்**

யாழ்ப்பாண வைபவ மாலை, தட்சிண கைலாச புராணம்

நவீன சிங்கள நூல்கள்

1. சிங்கள இலக்கிய வம்சம் - பீ. பீ. சன்னஸ்கல
2. இலங்கையில் பாளி இலக்கியம் - ஜீ. பி. மலலசேகர
3. சிங்கள இலக்கியம் - சீ. ஈ. கொடகும்புர

**கல்வெட்டுக்கள்**

1. பனாகடுவ செப்புசாசனம் - Ez Vol V PP 1-27
2. அம்பகமு குன்றுக் கல்வெட்டு - Ez Vol 11pp 202 - 218
3. பொலன்னறுவை வேளைக்காரன் பட்டயம் - Ez Vol 11 pp 243 - 255
4. கபுறுவேடுஓய தூண் கல்வெட்டு - Ez Vol II PP 394-404
5. தெவனகல குன்றுக் கல்வெட்டு - Ez Vol III PP 312-325
6. பொலன்னறுவை கல்விகாரை குன்றுக் கல்வெட்டு - Ez Vol II PP 256 - 283
7. சங்கமு விகாரை குன்றுக் கல்வெட்டு - Ez Vol lV PP 1-8
8. பொலன்னறுவை கல்பொத்த கல்வெட்டு - Ez Vol l1 PP 98-125
9. பொலன்னறுவை குன்றுக் கல்வெட்டு - சாகசமல்ல - Ez Vol ll PP 219-229
10. மினிப்பே சுவர்க் கல்வெட்டு - Ez Vol V PP 146-161
11. கலபாத விகாரைக் கல்வெட்டு - Ez Vol IV PP 196-211
12. தெவுந்தர சுவர்க் கல்வெட்டு - A sc M Vl PP 63-70
13. ஒருவல சாசனம் - Ez Vol lll PP 51-71
14. கடலாதெனி குன்றுக் கல்வெட்டு - Ez Vol IV PP -8-15,-90-102
15. கடலாதெனி சுவர்க் கல்வெட்டு - Ez Vol lV PP 16-27
16. காலி மும்மொழிக் கல்வெட்டு - Ez Vol lll PP 331 - 341
17. தெடிகம சுவர்க் கல்வெட்டு - Ez Vol lll PP 278- 286
18. காரகல சுவர்க் கல்வெட்டு - JRASCB Vol XXll PP 353 - 355
19. பப்பிலியான கல்வெட்டு - கதிகாவத்சஞ்சிகை 40 - 43 பக்கம்
20. மடவள குன்றுக் கல்வெட்டு Ez Vol lll PP 235-240



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 2

## அரசியல் வரலாறு - கி.பி. 1017 - 1270

### அறிமுகம்

கி.பி. 1017 முதல் 1270 வரையிலான சுமார் 250 வருட இலங்கையின் அரசியல் வரலாற்றைக் கற்பதே இவ்வத்தியாயத்தின் நோக்கமாகும். சாதாரண வார்த்தையில் பொலன்னறுவை யுகம், தம்பதெனிய யுகம் என்று அழைக்கப்படும் இவ்விரு குறிப்பிட்ட காலப்பகுதியானது வரலாற்றை அளவிடும் அளவுகோளின்படி ஒரு குறுகிய காலப்பகுதியாகும். அநுராதபுர யுகம் 1500 வருட காலத்தைக் கொண்டதாகும். அதனோடு ஒப்பிடும்போது இக்காலப் பகுதியானது குறுகியதாகும். ஆயினும் இக்காலத்தில் நிகழ்ந்த நிகழ்வுகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதைத் தெரிந்து கொள்வதற்கான சந்தர்ப்பம் உங்களுக்குக் கிடைக்கும். ஆரம்ப வரையறை ஆண்டாகக் குறிப்பிடப்பட்டுள்ள 1017 இல் இலங்கை தோல்வி அடைந்த அந்நியர் ஆக்கிரமிப்புக்குட்பட்ட இராச்சியமெனும் நிலையை அடைந்தது. இக்குறிப்பிட்ட காலப்பகுதியின் இறுதி எல்லை ஆண்டான 1270 இல் தம்பதெனிய யுகத்தின் சிறந்த ஆட்சியாளனான 2ஆம் பராக்கிரமபாகு மன்னனின் மரணம் நிகழ்ந்துள்ளது. அவனது ஆட்சிக் காலம் முழுவதும் எதிரிகளை முறியடிக்கும் போராட்டத்திலேயே முடிவடைந்துள்ளது. இராசரட்டையை ஆக்கிரமித்து அங்கு (1215) ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்த கலிங்க மாகன் மற்றும் மலாய குடாநாட்டிலிருந்து ஆக்கிரமிப்பை மேற்கொண்ட சந்திரபானு முதலியவர்களுடன் போரிடுவதற்கு மட்டுமல்லாமல் அக்காலத்தில் தென்னிந்தியாவில் பேரரசாக வளர்ச்சி கண்டிருந்த பாண்டியர்களிடமிருந்து வந்த எதிர்ப்புக்களுக்கும் இரண்டாம் பராக்கிரமபாகு மன்னன் முகம்கொடுக்க நேர்ந்தது. எமது கற்றலுக்குட்படும் இக்காலகட்டம் பற்றிய ஆரம்ப ஆண்டு, இறுதி ஆண்டு பற்றி இவ்வாறு குறிப்பிடப்படுவதிலிருந்து நீங்கள் ஒரு தீர்மானத்திற்கு வரலாம். ஆம் அந்த 250 ஆண்டுகளுள் ஒரு நூற்றாண்டு காலம் சிங்கள அரசர்களின் ஆரம்ப இராசதானியான இராசரட்டைப் பகுதி அன்னியராட்சிக்கு உட்பட்டிருந்தது என்பதே உண்மை. அதில் ஐந்து தசாப்தங்கள் (50



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுகள்) சோழர்களும் 4 தசாப்தங்கள் (40 ஆண்டுகள்) கலிங்க மாகனும் ஆட்சி செய்துள்ளனர். அதுமட்டுமல்லாது 1500 ஆண்டுகால சிங்கள நாகரிகத்தின் பிறப்பிடமான இராசரட்டையின் வீழ்ச்சியும் அப்பிரதேச வரலாற்றுத் தடயங்களின் அழிவும் அரசியல் அதிகார மையம் நாட்டின் தென்மேற்கிற்கும் மற்றும் மலை நாட்டுப் பகுதிக்கும் இடம் மாறியமை குறிப்பிட்ட காலப்பகுதியின் இறுதியில் நிகழ்ந்தவையாகும். இக்காலகட்டத்தில் முக்கிய அம்சமாக மிளிர்வது மேற்கூறிய விடயங்களேயாகும்.

வேறு வகையில் பார்ப்போமானால் அதற்கு நேர் மாற்றமான நல்ல விடயங்களையும் இக்காலக்கட்டத்தில் அவதானிக்க முடிகிறது. இராசரட்டை இராஜதானி வெளிநாட்டு எதிரிகளின் ஆக்கிரமிப்புக்கு உட்பட்டிருந்த வேளையில் இந்நாட்டு ஆட்சியாளர்கள் தைரியத்துடனும் திடசங்கற்பத்துடனும் செயற்பட்ட விதத்தை 1ம் விஜயபாகு மன்னன் சோழரிடம் இருந்து நாட்டை மீட்டதிலிருந்து நீங்கள் தெரிந்து கொள்ளலாம். அம்மன்னன் அக்காலக்கட்டத்தில் இந்தியாவில் காணப்பட்ட ஒரு பேரரசுக்கு எதிராகச் செயற்பட வேண்டியிருந்தமை இங்கு நோக்கத்தக்கது. அதற்கு சிறிது காலத்திற்கு பின்னர் 13ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் விஜயபாகுவைப் போன்ற வீரனாக இல்லாவிட்டாலும் தம்பதெனியாவிலிருந்து ஆட்சி செய்த 2ஆம் பராக்கிரமபாகு மன்னன் மாகன், சந்திரபானு முதலிய ஆக்கிரமிப்பாளர்களையும் வெற்றி கொண்டமையும் குறிப்பிடத்தக்கதாகும். நாட்டை ஓரளவிற்கேனும் ஒற்றுமைப்படுத்த அவனுக்கு முடிந்தது. அதுமட்டுமல்ல இக்காலக்கட்டத்தில் ஆட்சி செய்த 1ஆம் பராக்கிரமபாகு மன்னன் மிகவும் பலம் வாய்ந்த கடற்படையை வைத்திருந்து வெளிநாடுகள் மீது படையெடுத்தவனாவான். அவனுடைய ஆட்சிக்காலத்தில் எந்தவொரு வெளிநாட்டு ஆக்கிரமிப்புக்கும் இடமிருக்கவில்லை. தென்னிந்திய ஆக்கிரமிப்புக்களைத் தடுக்கும் படைப்பலம் மாத்திரமல்ல பாண்டியருக்கு படையுதவி வழங்கும் அளவுக்கு பலம் வாய்ந்த மன்னனாக 1ஆம் பராக்கிரமபாகு திகழ்ந்தான். தனது வெளிநாட்டு வர்த்தகத்துக்கு இடைஞ்சல் செய்த பர்மிய மன்னனை எதிர்த்து அந்நாட்டுக்கு ஒரு கடற்படை அணியை அனுப்பும் அளவுக்கு அவனின் பலம் காணப்பட்டது. அத்துடன் நீர்ப்பாசன அபிவிருத்தி நடவடிக்கையின் உச்ச காலமாகவும் அவனது ஆட்சிக்காலம் காணப்பட்டது. மேலும், கல்வி, இலக்கியம், சமயம் மற்றும் கலை கலாசார அம்சங்களும் உச்சகட்ட வளர்ச்சி கண்டிருந்தன. இவ்விடயங்கள் அனைத்தையும் ஒருங்கே நோக்கும்போது ஏற்கனவே குறிப்பிட்டபடி இக்காலகட்டம் குறுகியதாயினும் அக்குறுகிய காலத்துள்ளும் உச்சக் கட்ட நாகரிக வளர்ச்சியை நாம் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. குறிப்பட்ட இக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலப்பகுதியின் அரசியல் வரலாற்றில் இடம்பெறும் முக்கிய கட்டங்களை ஓர் ஒழுங்கு முறையில் விரிவாக நாம் ஆராய்வோம்.

இலங்கை சோழராட்சிக்கு உட்பட்டிருந்தவேளை அரசியல் ரீதியில் மிகவும் முக்கியத்துவம் பெற்றிருந்தது இராசரட்டை, உருகுணை எனும் இரு பிரதேசங்களாகும். இராசரட்டையில் காணப்பட்ட அரசியல் நிலையை முதலில் அவதானிப்போம்.

## பொலன்னறுவை இராசதானிக்காலம் கி. பி. 1017 - 1215

10ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்தே தென்னிந்தியாவில் பேரரசு ஒன்றைக் கட்டியெழுப்பிக்கொண்டிருந்த சோழர்களின் ஆதிக்கத்திற்கு இலங்கை இரையாகும் அச்சுறுத்தல் தெளிவாகத் தெரிந்தது. இடைக்கிடையில் இலங்கை மீது மேற்கொள்ளப்பட்ட சோழ ஆக்கிரமிப்புக்கள் முதலாம் இராஜராஜ சோழன் (985 -1014) முதலாம் இராஜேந்திர சோழன் என்னும் மன்னர்களின் காலகட்டத்தில் இறுதித்தீர்மான வடிவத்தைப் பெற்றது தந்தையும் மகனுமான இவ்விரு சக்கரவர்த்திகளும் தென்னிந்தியாவை மட்டுமல்லாது மாலைத்தீவுகள், தென்கிழக்காசியாவின் மலாயா, சுமாத்திரா, யாவா முதலிய நாடுகளையும் கைப்பற்றும் அளவுக்கு பலம் வாய்ந்தவர்களாகத் திகழ்ந்தனர். இவ்வாறானதொரு பின்னணியில் இலங்கையும் சோழர் ஆதிக்கத்திற்கு உட்பட்ட விதத்தை இப்போது நீங்கள் கற்கலாம்.

1017ஆம் ஆண்டு முதலாம் இராஜராஜ சோழன் அநுராதபுர இராசதானியை ஆக்கிரமித்து அடிமைப்படுத்தினான். இவ்வாறு ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசம் சோழ பிரதேசத்துள் ஒன்றாகக் கருதப்பட்டு அதற்கு மும்முடிச் சோழ மண்டலம் எனப் பெயரிடப்பட்டது. சுமார் 1500 ஆண்டுகளாக இலங்கையின் தலைநகராக விளங்கிய அநுராதபுரத்தைக் கைவிட்டு சோழர்கள் பொலன்னறுவையை நாட்டின் தலைநகராக்கி அதற்கு ஜனநாத மங்களம் எனப் பெயரிட்டனர். ஜனநாத மங்களம் என்பது இராஜராஜசோழனின் சிறப்புப் பெயராகும். பொலன்னறுவையை அவர்கள் தலைநகராகத் தெரிவு செய்தமைக்குப் பல காரணங்கள் இருந்தன. தென்னிந்தியாவிலிருந்து சோழர்களுக்கான எதிர்ப்புகள் கிளம்ப வாய்ப்பின்மையால் அவர்களுக்கு தமது தாய் நாட்டிற்கு சமீபமாய் அமைந்திருந்த அநுராதபுரத்தில் இருப்பதற்கான தேவை இருக்கவில்லை. அத்துடன் இராசரட்டை உருகுணுரட்டை இரண்டையும் பிரித்த மகாவலி கங்கைக் கரைக்கு அருகில் அமைந்திருந்த பொலன்னறுவை ஒரு மத்திய நிலையமாகக் காணப்பட்டது. மேலும் எதிர்காலத்தில் உருகுணு இராச்சியத்தில் இருந்து வரக்கூடிய எதிர்ப்புகளை முறியடிப்பதற்கும் உருகுணை இராச்சியத்தையும் கைப்பற்றி முழு இலங்கையையும் ஆட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் வாய்ப்புக் கிடைக்கும் சந்தர்ப்பம் வாய்த்தாலும் பொலன்னறுவை முழு இலங்கைக்கும் தலைநகராகத் திகழ்வதற்குப் பொருத்தமான இடத்திலே அமைந்திருப்பதாக அவர்கள் கருதியிருக்கலாம். அநுராதபுரத்தின் இறுதிக்காலத்தில் சில அரசர்கள் பொலன்னறுவையிலிருந்து ஆட்சி நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர். அத்துடன் ஆரம்பத்திலிருந்தே பொலன்னறுவை ஒரு போர்ப் பாசறையாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. எனவே அது 'பாசறை நகரம்' எனும் சிறப்புப் பெயராலும் அழைக்கப்பட்டது.

பாரிய நீர்ப்பாசனத்திட்டங்களால் கி.பி. முதலாம் நூற்றாண்டுக் காலப்பகுதியிலே பொலன்னறுவை விவசாய அபிவிருத்தி கண்டிருந்தது. மூன்றாம் நூற்றாண்டின் இறுதி இரு தசாப்த காலத்திலேயே மகாசேன மன்னன் அப்பிரதேசத்தில் மின்னேரிய குளத்தை அமைத்திருந்தான். இக்காரணங்களை எடுத்து நோக்கும் போது சோழர்கள் பொலன்னறுவையைத் தமது தலைநகராகத் தெரிவு செய்தது ஆச்சரியப்படத்தக்க விடயமல்ல.

இராசரட்டை பிரதேசத்தில் சோழராட்சியின்போது அங்கு நிலவிய ஆட்சி முறைபற்றி அறிவதற்கு எஞ்சியுள்ள விடயங்கள் மிகச்சொற்பமாகும். எனவே அதுபற்றி விளக்கமாக சொல்லக்கூடிய விடயங்களும் குறைவானதாகும். ஆட்சித்தலைமையகமாக விளங்கியது பொலன்னறுவையாகும். சோழராட்சி பெரும்பாலும் இராணுவத் தன்மை கொண்டதாக விளங்கியது என்று கருத இடமுண்டு. ஏனெனில் சோழப் பேரரசனின் பிரதிநிதியான தளபதி ஒருவனாலேயே ஆட்சிக் கருமங்கள் ஆற்றப்பட்டுள்ளன. உயர் பதவிகளிலும் சோழர்களே நியமனம் செய்யப்பட்டதாகக் கருத இடமுண்டு. ஆக்கிரமிப்புக்களின்போது தேசிய சொத்துக்களை அழிப்பது சோழரின் கொள்கையாகக் காணப்படவில்லை. இலங்கையின் வளங்களைத் தமது தாய்நாட்டு நலனுக்காகப் பயன்படுத்தும் சந்தர்ப்பம் அவர்களிடம் அதிகமாகவே காணப்பட்டது. சோழநாட்டின் தலைநகரான தஞ்சாவூரில் காணப்பட்ட பிரபலமான கோயில் ஒன்றின் பரிபாலனத்துக்காக இலங்கையில் சில கிராமங்களை ஒதுக்கியிருந்ததாக இராஜராஜ சோழனின் 29ஆம் ஆட்சி வருட (கி.பி. 1014) எழுத்தாவணம் ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதுவரை காலமும் சோழ ஆக்கிரமிப்பின் நோக்கமாயிருந்த பெறுமதியான வளங்களைக் கொள்ளையடிப்பது என்ற கொள்கையிலிருந்து இலங்கையை அடிமைப்படுத்துவது என்ற கொள்கை வளர்ச்சியின் மாற்றமும் இங்கு அவதானிக்கதக்க விடயமாகும். ஆக்கிரமிப்பின்போது மேற்கொள்ளப்பட்ட அழிவு வேலைகள் காலப்போக்கில் குறைவடைந்த போதிலும் சுதேச மக்கள் நலனில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் அக்கறை செலுத்தினார்கள் என்று சொல்வதற்கில்லை. அந்நிய நாடொன்றை ஆட்சிக்குட்படுத்தியவர்கள் தமது நலனிலேயே அதிக அக்கறை செலுத்துவர் என்பது இயல்பானது. இவ்வாறான நிலைமையில் இராசரட்டை மக்களுக்கு சோழராட்சி சிறப்பாய் அமைந்தது என்பதற்கான சாட்சிகள் குறைவாகும். பொலன்னறுவையில் அமைக்கப்பட்ட சிவன் கோயில், விஷ்ணு கோயில் என்பன சோழரின் சமயத் தேவைக்காக நிர்மாணிக்கப்பட்டது என்பதை விட அது சோழராதிக்கத்தை உறுதிப்படுத்தும் அடையாளத்துக்காகவும் அமைக்கப்பட்டிருக்கலாம். அக்கோயில்கள் இன்றுவரை பாதுகாக்கப்பட்டு வரும் பெறுமதி வாய்ந்த கட்டடக்கலை அம்சங்களாகும். 'இராஜராஜபுரம்' எனும் பெயரால் அழைக்கப்பட்ட மகாதித்த அல்லது மாந்தை எனும் புராதன துறைமுகத்தின் அருகே அமைந்துள்ள நகரமொன்றில் காளிகுமாரன் எனும் அதிகாரியால் 'இராஜராஜேஸ்வர' எனும் பெயரில் சிவ தேவாலயம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டது.

சோழப் பேரரசனால் நியமிக்கப்பட்ட ஆட்சிப் பிரதிநிதி மற்றும் அதிகாரிகள் இங்கிருந்து கப்பம், காணிக்கை என்பவற்றை உரிய காலத்தில் வருடாந்தம் சோழர் தலைநகருக்கு அனுப்பி வைத்தமையால் மன்னன் இலங்கை விடயத்தில் தலையிடாதிருந்த காரணத்தால் ஆட்சிப் பிரதிநிதி மற்றும் அதிகாரிகள் தமது விருப்பப்படி ஆட்சி செய்திருப்பது தெரியவருகின்றது. அத்துடன் யுத்த உதவிகள் தேவைப்பட்டபோது சோழப் பேரரசில் இருந்து படையுதவிகளும் உடனுக்குடன் கிடைத்துள்ளன. எவ்வாறாயினும் பொலன்னறுவையிலிருந்து ஆட்சிசெய்த சேனாதிபதி சுதந்திரமாகச் செயற்படுவதில் எவ்விதமான தடைகளும் இருந்ததாகத் தெரியவில்லை இராசரட்டை சோழராதிக்கத்தின் கீழிருந்தவேளை சிங்கள இளவரசர்களினதும் தலைவர்களினதும் பாதுகாப்பு இடமாகத் திகழ்ந்தது உருகுணுரட்டையாகும். மகாவலி கங்கை எல்லை வகுத்தமையால் அப்பிரதேசம் அவர்களுக்கு ஓரளவுக்கேனும் பாதுகாப்பளித்தது. இங்கு நிலவிய அரசியல் பின்னணி பற்றி இனி விரிவாக ஆராய்வோம்.

இராசரட்டை சோழரின் முழுமையான ஆக்கிரமிப்புக்கு உட்பட்டிருந்த ஆரம்ப கட்டத்திலே உருகுணைப் பிரதேசத்தின் அரசியல் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தது. சில காலம் சென்ற பின்னரே அங்கு அர்த்தமுள்ள அரசியல் நிலை உருவானது. போக்கிடம் இல்லாதிருந்த சிங்கள இளவரசர்கள், அமைச்சர் மற்றும் தளபதிகளும் அரச அதிகாரிகளும் தமது பாதுகாப்புக் கருதி உருகுணைப் பிரதேசத்திற்கு வந்து சேர்ந்திருந்தனர். இதற்கிடையில் சோழர்களால் இந்தியாவுக்குக் கைதிகளாகப் பிடித்துச் செல்லப்பட்ட அநுராதபுரத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதி மன்னனான ஐந்தாம் மகிந்தன் 1029ஆம் ஆண்டளவில் அங்கே காலமானான். அப்போது அவனது மகனான காசியப்ப இளவரசன் சிறுவனாக இருந்தான். அவன் பாதுகாப்புத் தேடி உருகுணைக்கு வந்து சேர்ந்தான். அவனே முதலாம் விக்கிரமபாகு எனும் பெயரில் (1029-1041) உருகுணை இராச்சியத்துக்கு அரசனானான். சிங்கள மன்னன் சோழநாட்டில் சிறைக்கைதியாக இருந்து மரணமடைந்தமையானது உருகுணையில் அரசியல் நிலைமையை உத்வேகமடையச் செய்த காரணியாக அமைந்தது. ஐந்தாம் மகிந்த மன்னனின் மறைவைத் தொடர்ந்து உருகுணைரட்டைக்கு மன்னனான முதலாம் விக்கிரமபாகு மன்னன் பன்னிரண்டு வயதே நிரம்பிய சிறுவனாக இருந்த போதிலும் தூர நோக்குடன் செயற்பட்டான். அநுராதபுர அரச வம்சத்துக்குரிய சட்டபூர்வமான மன்னனின் மகன் உருகுணைக்கு மன்னனானபடியால் மக்கள் அவனைச் சுற்றி அணிதிரண்டனர். மன்னனும் இராசரட்டையை மீட்பதற்கான படைகளையும் வளங்களையும் திரட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டான். இம்மன்னனின் அமைச்சர்கள் அவனது முடிசூட்டு விழாவுக்கு ஆயத்தம் செய்த போது ''இராசரட்டையை மீட்காமல் எனக்கென்ன முடி சூட்டு விழா'' என்று கூறியதாக வம்சக் கதைகள் கூறுகின்றன.

விக்கிரமபாகு மன்னனின் கீழ் உருகுணையில் வளர்ச்சியடைந்து வரும் அரசியல் பற்றி சோழர் அவதானத்துடன் இருந்து வந்துள்ளனர். 95000 வீரர்களைக் கொண்ட படையொன்றை அனுப்பி அரசனைக் கைது செய்வதற்கான முயற்சிகள் சோழ ஆட்சியாளர்களால் மேற்கொள்ளப்பட்டதாக அதே வம்சக் கதைகளில் கூறப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கது. இங்கு குறிப்பிடப்பட்ட படையினர் தொகை நம்பத்தக்கதாக இல்லாவிடினும் ஒரு பலம் வாய்ந்த படை அனுப்பப்பட்டதைச் சந்தேகிக்க முடியாது. விக்கிரமபாகு மன்னனின் கீழ் பணியாற்றிய கித்தி, புத்த எனும் இரு வீரர்களும் சோழர் படையெடுப்பை எதிர்கொண்டு அவர்களைத் தோல்வியடையச் செய்தனர். தற்போது அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அமைந்துள்ள பலட்டுபாண என்றழைக்கப்படும் பலுட்டகிரி எனும் இடத்தில் ஆறுமாத காலமளவில் தங்கியிருந்து சோழப்படையெடுப்பை முறியடித்த அவ்விரு வீரர்களுக்கும் மன்னன் பரிசளித்ததாகவும் வம்சக்கதையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு நல்ல முறையில் தனது ஆட்சி நடவடிக்கைகளை ஆரம்பித்தாலும் விக்கிரமபாகு மன்னன் அதனை வெற்றிகரமாகத் தொடர்வதற்கு விதி இடங்கொடுக்கவில்லை. ஆம் அவன் இளைஞனாக இருந்தபோதே நோய் வாய்ப்பட்டு இறந்தான். அவனால் பதினொரு ஆண்டுகள் மட்டுமே ஆட்சி செய்யமுடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்கிரமபாகு மன்னனின் மறைவைத் தொடர்ந்து உருகுணைப் பிரதேச அரசியல் நிலை உறுதியற்றதானது. அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சி செய்த பல்வேறு விதமான அரச பிரதானிகளும் தமக்கிடையிலான அதிகாரப்போட்டியில் இறங்கினர். இராசரட்டையில் ஆட்சி செய்யும் எதிரியை முறியடிப்பதை விட்டு சிங்கள அரச பிரதானிகள் தமக்கிடையில் போரிட்டுக் கொண்டனர். இலங்கைக்கு வந்த வெளிநாட்டு இளவரசர்களும் கூட உருகுணைரட்டையில் இடத்துக்கிடம் ஆட்சியமைத்து தமது பலத்தைப் பரீட்சித்துப் பார்த்தனர். அவர்களனைவரும் தமக்கிடையில் போட்டியிட்டதாலும் இராசரட்டையின் சோழ ஆட்சியாளர் படையெடுப்பாலும் அழிவைத் தேடிக் கொண்டனர். கித்தி எனும் விக்கிரமபாகு மன்னனின் படைவீரனால் எட்டு நாட்கள் மட்டுமே ஆட்சியில் நிலைக்க முடிந்தது. மகலானகித்தி என்பவனால் அவன் கொலை செய்யப்பட்டான். அவ்வாறு ஆட்சிக்கு வந்த அவனின் விதியும் அதே போன்றமைந்தது. சோழருக்கெதிரான நடவடிக்கைகளை முறியடிக்கும் முகமாகப் பொலன்னறுவையிலிருந்த சோழத் தளபதி அடிக்கடி உருகுணைப் பகுதியை ஆக்கிரமித்தான். அவ்வாறான ஆக்கிரமிப்பொன்றின் போது தோல்வியடைந்த மகலானகித்தி தற்கொலை செய்து கொண்டான். அவன் மூன்று ஆண்டுகள் ஆட்சியிலிருந்தான். அதன் பின்னர் தென்னிந்தியாவின் துளு நாட்டிலிருந்து வந்த விக்கிரம பாண்டியன் எனும் இளவரசன் 'காலதித்த' எனுமிடத்தில் தனது மாளிகையை அமைத்து அப்பிரதேசத்தை நிர்வகித்து வந்தான். (காலதித்த என்பது களுத்துறை என்றும் பலாங்கொடைப் பகுதியின் கல்தொட்ட என்றும் இரு அபிப்பிராயங்கள் நிலவுகின்றன.)

வட இந்தியாவின் அயோத்தியாபுரியிலிருந்து இலங்கைக்கு வந்த ஜகதிபால மற்றுமொரு வெளிநாட்டு இளவரசனாவான். இவன் ஒரு வருடகாலம் உருகுணை ஆட்சியாளனாக இருந்து மேற்கூறிய விக்கிரம பாண்டிய மன்னனைக் கொலை செய்து, அவனது ஆட்சிப் பிரதேசத்தையும் கைப்பற்றினான். ஆயினும் நாலாண்டு கால ஆட்சியின் பின்னர் சோழருடன் ஏற்பட்ட போரில் கொலை செய்யப்பட்டான். அவனது மனைவி, மகள் மற்றும் சொத்துக்கள் எல்லாம் சோழப் பேரரசனுக்கு அனுப்பப்பட்டதாக வம்சக் கதைகள் கூறுகின்றன. ஜகதிபால மன்னனின் பதிலரசனான பராக்கிரம பாண்டியன் எனும் பாண்டிய வம்ச இளவரசனையும் அவன் ஆட்சி பீடமேறி இரண்டாவது வருடத்தில் சோழர்கள் கொன்றனர். ஜகதிபால, பராக்கிரம பாண்டியன் முதலிய வெளிநாட்டு இளவரசர்களால் கூட உருகுணை இராச்சியத்தில் அரசமைக்குமளவுக்கு அப்பிரதேசம் அரசியல் சீரழிவுக்கு உட்பட்டிருந்தது என்பது தெளிவாகிறது. சோழர்கள் உருகுணையின் எந்தவொரு ஆட்சியாளனும் தலை தூக்குவதற்கு இடமளிக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைக்கிடை அப்பிரசேத்தின் மீது ஆக்கிரமிப்புச் செய்து ஆட்சியாளரை அழிப்பதற்கான நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொண்டனர். உருகுணை பிரதேசத்தினால் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கப்பட்ட விக்கிரமபாகு இளவரசனின் அகால மரணம் துரதிஷ்டவசமானது. இதனால் உருகுணைப் பிரதேசத்தை ஐக்கியப்படுத்தி இராசரட்டையை மீட்கும் செயற்பாடு தொலைதூரமானது. எது எவ்வாறாயினும் சோழர்களை முறியடித்து நாட்டை மீட்கும் எதிர்பார்ப்பு நீறுபூத்த நெருப்பாகவே தொடர்ந்தும் காணப்பட்டது.

பதினோராம் நூற்றாண்டின் மத்தியில் அதாவது 1050ஆம் ஆண்டளவில் உருகுணை பிரதேசத்தின் அரசியல் பயணத்தில் ஒரு திருப்புமுனை ஏற்பட்டதை அவதானிக்க முடிந்தது. அது அநுராதபுர அரச வம்சத்துக்கு உறவுள்ளவனும் பிற்காலத்தில் முதலாம் விஜயபாகு எனும் பெயரில் அரசனானவனுமான கீர்த்தி இளவரசனின் உருகுணை வருகையாகும். சோழர்களுடன் நீண்ட காலம் போரிட்டு அவர்களை முறியடித்து நாட்டின் சுதந்திரத்தைக் காத்தவன் முதலாம் விஜயபாகு மன்னனாவான். அவன் அந்தக் கடினமான செயற்பாட்டை எவ்வாறு சாதித்தான் என்பதை இனிப் பார்ப்போம்.

இராசரட்டை இராச்சியம் சோழரின் ஆக்கிரமிப்பிலிருந்தபோது சிறுவனான கீர்த்தி இளவரசன் மற்றும் அவனது தந்தையான முகலன் (மொக்கலான) உட்பட்ட அரச குடும்பத்தை ஆதரித்துக் காத்த புத்தராஜ (புதல்னா) எனும் உருகுணைப் பிரதேச பிரதானி பற்றிய முக்கியமான தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. புதல்னா அல்லது புத்தராஜ எனும் பிரதானிக்கு நன்றிக் கடனாக விஜயபாகு மன்னன் வழங்கிய சட்டபூர்வமான வரப்பிரசாதங்கள் பற்றிக் கூறும் பனாகடுவ செப்பு சாசனம் மன்னனின் இளமைக் கால அவல வாழ்வை ஞாபகப்படுத்துகிறது. (தென் மாகாணத்தில் மொரவக் கோரளையில் பனாகடுவ எனும் கிராமத்தில் வயல் உழுது கொண்டிருந்த ஒரு விவசாயியே இந்த செப்பு சாசனத்தைக் கண்டெடுத்தான்.) இந்த புதல்னா சோழருக்கு எதிராகப் போரிட்ட போது சிறுவனாயிருந்த கீர்த்தி இளவரசனும் அவனோடு சேர்ந்து கொண்டான். விடலைப் பருவத்திலேயே இளவரசன் போர்ப் பயிற்சிகளைப் பெற்றுக்கொண்டான். (இக் காலகட்ட வரலாற்றைக் கூறும் சூளவம்சத்தில் இவ்விடயங்கள் அடங்கியுள்ளன.)

அக்காலக்கட்டத்தில் உருகுணைரட்டையில் கதிர்காமப் பிரதேசத்தில் லோக எனும் பிரதேசத் தலைவன் ஒருவன் அதிகாரத்தில் இருந்தான். அவனையடுத்து கேசதாது காசியப்ப என்பவன் அங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரத்துக்கு வந்தான். அவனுக்குக் கீழ் சேவையாற்றிக் கொண்டிருந்த புத்தராஜ அவனுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக கீர்த்தி இளவரசனுடன் இணைந்தான். ஹுணுவல, ரக்வான, ரத்மல, போவல முதலிய இடங்களில் இடம் பெற்ற மோதல்களில் லோக என்பவனை புத்தராஜ முறியடித்தான். பின்னர் அவன் மக்களை ஒன்று திரட்டிக் கொண்டு மகாநாககுல வரை வந்து அதனைத் தனது மத்திய நிலையமாக ஆக்கிக் கொண்டான். அதேவேளை கதிர்காமத்தின் மீது படையெடுத்த சோழப் படையினர் கேசதாதுகாசியப்பனைத் தாக்கினர். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்ட புத்தராஜவும் கீர்த்தி இளவரசனும் கதிர்காம ஆட்சியாளனைத் தோற்கடித்து அப்பிரதேசத்தையும் கைப்பற்றி முழு உருகுணையையும் ஐக்கியப்படுத்தினர். இவ்வாறு 1055ம் ஆண்டு கீர்த்தி இளவரசன் மாகமைவைத் தலைநகராகக் கொண்டு விஜயபாகு எனும் பெயரில் அரசனானான்.

## முதலாம் விஜயபாகு மன்னன் (கி.பி. 1055 - 1110)
## சோழரிடமிருந்து இலங்கையை மீட்டெடுத்தல்

நீண்டகாலமாக பல்வேறு மட்டங்களைச் சேர்ந்த பிரதேசத் தலைவர்களிடையே ஏற்பட்ட அதிகாரப் போட்டி காரணமாக சீரழிந்து காணப்பட்ட உருகுணைப் பிரதேசம் விஜயபாகு மன்னனால் ஐக்கியப்படுத்தப்பட்டதுடன் அவனது தலைமையில் நிலையான அரசியலில் காலடி வைத்தது. அன்றிலிருந்து மன்னன் முன்னிருந்த மாபெரும் சவால் சோழரிடமிருந்து இராசரட்டையை மீட்பதாகும். அது ஓர் இலகுவான காரியமாக இருக்கவில்லை.

உருகுணையை ஐக்கியப்படுத்தி திறமையுடன் ஆட்சி செய்த விஜயபாகுவின் அரசியல் வளர்ச்சி இராசரட்டைப் பகுதியைத் தாண்டி சோழரின் தலை நகரம் வரை பரவியது. வளர்ந்து வரும் விஜயபாகுவின் அதிகாரத்தை முளையிலே கிள்ளிவிடுமாறு சோழப் பேரரசன் ஆணையிட, பொலன்னறுவையிலிருந்த சோழத் தளபதி பெரும் படையுடன் உருகுணையை ஆக்கிரமித்தான். கதிர்காமம் வரை வந்திருந்த சோழப் படைக்கு முகங்கொடுக்க முடியாத விஜயபாகு மன்னன் மலைநாட்டுப் பக்கம் தலைமறைவானான். சோழத் தளபதியும் கதிர்காமத்தை அழிக்காது தனது படையுடன் பொலனறுவைக்குத் திரும்பினான். விஜயபாகுவை ஒழிக்கும் அவர்களது திட்டம் நிறைவேறாமல் போனது. மலைநாட்டில் ஒளிந்திருந்த மன்னன் அங்கிருந்து அம்பாந்தோட்டைக்கு அருகில் உள்ள சிப்பதல எனுமிடத்தை அடைந்தான். அக்காலகட்டத்தில் உருகுணையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சியமைப்பை முறைப்படுத்தவும் இராச்சியத்தின் செல்வ நிலையை அதிகரிக்கவும் நடவடிக்கைகளை மேற்கொண்டான். மேலும் ராமஞ்ஞ தேசத் (பர்மா)துடன் நல்லுறவைப் பேணும் முயற்சியின் பயனாக அந்நாட்டின் வர்த்தகக் கப்பல்கள் இலங்கையின் தென்பகுதித் துறைமுகத்துக்கு வந்து சென்றன. சோழரை எதிர்ப்பதற்குத் தன்னைப் பலப்படுத்திக் கொள்வதற்காகவே விஜயபாகு இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டான். அடுத்து அவன் அம்பலாந்தோட்டைக்கு வடமேற்கே அமைந்துள்ள இன்றைய தலாவ பகுதிக்குச் சமீபமாகவுள்ள தமபலகம எனுமிடத்தில் தனது தலைமையகத்தை அமைத்து செயற்பட்டான்.

உருகுணையில் விஜயபாகு மன்னனின் வளர்ச்சியுடன் இராசரட்டையின் சோழரைத் தாக்குவதற்குரிய சந்தர்ப்பம் நெருங்கி வந்தது. 1065ம் ஆண்டளவில் இராசரட்டையில் சோழரின் ஆட்சி ஒரு குழப்பநிலையை அடைந்திருந்தது. அதாவது அங்கு வாழ்ந்த பொது மக்கள் சோழர் ஆணைக்கு அடிபணியாது இருந்ததுடன் வரிகளைச் செலுத்தாதும் இருந்தனர். சில வேளைகளில் உருகுணையில் ஏற்பட்ட அரசியல் வளர்ச்சி அவர்களுக்கு அவ்வாறானதொரு தைரியத்தைக் கொடுத்திருக்கலாம் என்று கருத இடமுண்டு.

இவ்வாறு இலங்கையில் ஏற்பட்ட சோழராட்சிக்கான எதிர்ப்பை முறியடிப்பதற்காக சோழப் பேரரசன் ஒரு படையை அனுப்பி வைத்தான். மகாதித்த (மாந்தை) துறைமுகத்தில் வந்திறங்கிய அப்படை இராசரட்டை மக்களை அடக்கிய வண்ணம் உருகுணைக்குள் பிரவேசித்தது. அச்சமயம் விஜயபாகு மன்னனின் படைத் தளபதிகளான ரவிதேவ, சல எனுமிருவரும் சோழர்படையில் இணைந்தமை துரதிஷ்டமான ஒரு செயற்பாடாகும். இப்போரின் ஆரம்பத்தில் விஜயபாகு தான் முதலில் கையாண்ட ஒரு போர்த் தந்திரத்தை மீண்டும் கையாண்டான். அதாவது பாரிய போர்ப்படைக்கு முகங்கொடுக்காது யால காட்டுப் பகுதியில் அமைந்திருந்த குன்றுகளாலான பாதுகாப்புப் பகுதியாக விளங்கிய பலுட்டகிரிய எனுமிடத்தில் தன் படைகளுடன் முகாமிட்டிருந்தான். (இன்று அவ்விடம் பலுட்டுபான என அழைக்கப்படுகின்றது.) அதன் பின்னர் இடம் பெற்ற போரில் சோழர் படுதோல்வி அடைந்தனர். பின்வாங்கிச் சென்ற சோழப்படைத் தளபதி புத்தலைக்கு அண்மையில் உள்ள தம்பவிட்டி எனுமிடத்தில் வைத்து சிங்களப் படையினரால் கொலை செய்யப்பட்டான். குறிப்பிடத்தக்களவு பொருள்களையும் சிங்களப் படையினரால் சோழரிடமிருந்து கைப்பற்ற முடிந்ததாகவும் குறிப்பிடப்படுகின்றது. இந்த வெற்றியால் தைரியமடைந்த விஜயபாகு மன்னன் தனது படையுடன் சென்று பொலனறுவயை வெற்றி கொண்டான். ஆனால் அது தற்காலிகமானதொரு வெற்றியாகவே அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராசரட்டையில் சோழராட்சி வீழ்ச்சியடைவதைத் தடுக்கும் முகமாக சோழ மன்னனான வீர இராஜேந்திர சோழன் தனது அன்பையும் ஆசீர்வாதத்தையும் பெற்ற பிரபலமானதொரு படையை இலங்கைக்கு அனுப்பி வைத்தான். அநுராதபுரத்துக்கு அண்மையில் விஜயபாகு மன்னனின் தளபதி தலைமையிலான படையினர் அப்பெரும் படையினருடன் மோதினர். இப்போரில் சிங்களப் படை தோல்வியடைந்ததுடன் தளபதியுட்பட பல படை வீரர்களும் மரணத்தைத் தழுவினர். எனவே பொலன்னறுவையைக் கைவிட்டுச் செல்ல வேண்டிய நிலை விஜயபாகு மன்னனுக்கு ஏற்பட்டது. வேவுடவில்லி ஏழுபற்றில் அமைந்திருந்த வில்லிகாபா பிரதேசத்தில் தலைமறைவாக இருந்து மீண்டும் படை திரட்ட முதலில் மன்னன் நாடினாலும் சோழர் படை அவனைக் கைது செய்வதற்காகப் பின் தொடர்வதை அறிந்த விஜயபாகு கேகாலை மாவட்டத்தில் உள்ள வாக்கிரி கல (வாதகல) எனும் மலைப் பகுதிவரை சென்று அங்கு தலைமறைவானான்.

விஜயபாகு மன்னனின் இரண்டாவது பின்வாங்குதலின் போது உள்நாட்டு எதிரிகளின் எதிர்ப்புகளுக்கு முகங்கொடுக்க வேண்டி நேர்ந்தது. மன்னன் உருகுணையை ஐக்கியப்படுத்திய போது கொலை செய்யப்பட்ட கேசதாது காசியப்பனின் சகோதரன் புத்தல (புத்தகால) பிரதேசத்தில் கிளர்ச்சியொன்றை மேற்கொண்டான். அதனையடக்கிய விஜயபாகு அது தொடக்கம் தனது எதிர்கால போர்த் தலைமையகமாக வளவ கங்கை நதிக் கரையில் இன்றைய அம்பலாந்தோட்டைக்கு சமீபமாக அமைந்திருந்த மகாநாககுல எனும் இடத்தைத் தேர்ந்தெடுத்தான்.

தனது போர்ப்படைகளை மீண்டும் பலமடையச் செய்த விஜயபாகு இராசரட்டை மீதான தனது இறுதித் தாக்குதலுக்குரிய தருணம் வந்து விட்டதை உணர்ந்து கொண்டான். அவன் இம்முறை கடைப்பிடித்த யுத்த தந்திரம் யாதெனில் இரண்டு பாதைகளில் படைகளை அனுப்பி ஒரே முறையில் இராசரட்டையைத் தாக்குவதாகும். முதலாம் படைப்பிரிவு தக்கிணதேசம் ஊடாகப் பயணம் செய்து அதில் ஒரு பகுதியினர் மகாதித்த துறைமுகத்தையும் மறுபிரிவினர் அநுராதபுரத்தையும் தாக்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இரண்டாம் படையணி கிழக்குக் கரையோரமாக நகர்ந்து பொலன்னறுவையைத் தாக்குவதற்காக அனுப்பப்பட்டது. மகாதித்த துறைமுகத்தைக் கைப்பற்றிய படையணியால் சோழநாட்டுப் படையுதவியைத் தடுக்க முடிந்தது. அநுராதபுரத்துக்குச் சென்ற படையினர் அந்நகரைக் கைப்பற்றினர். கிழக்குக் கரையோரமாகச் சென்று மகியங்கனையில் முகாமிட்டிருந்து மகாவலிகங்கைக் கரை வழியாகச் சென்று பொலன்னறுவையை அடைந்த விஜயபாகு மன்னன் தலைமையிலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படை பொலன்னறுவை மீது தாக்குதலை மேற்கொண்டது. இவ்வாறு தலைநகரைத் தாக்கும் போரை மன்னனே முன்னின்று நடாத்தினான். ஒன்றரை மாதகாலமாக இடம்பெற்ற இப்போரில் தோல்வியடைந்த சோழர் விஜயபாகு மன்னனிடம் சரணடைந்தனர். இவ்விதமாக சோழராட்சியின் மத்திய நிலையமான பொலன்னறுவை அவர்களிடமிருந்து கைநழுவியது. அரை நூற்றாண்டுக்கும் அதிகமாக (1017 - 1070) இராசரட்டையை ஆட்சி செய்த சோழரிடமிருந்து நாட்டை மீட்ட விஜயபாகு மன்னன் 1070ம் ஆண்டு பொலன்னறுவைக்குள் பிரவேசித்தான்.

இவ்வாறு முழு இலங்கையையும் ஐக்கியப்படுத்திய முதலாம் விஜயபாகு மன்னன் அதற்கு மூன்றாண்டுகளின் பின்னர் அநுராதபுரத்தில் இலங்கை மன்னனாக முடிசூடிக் கொண்டான். ஆயினும் அவனது தலைநகராக விளங்கியது அநுராதபுரம் அல்ல பொலன்னறுவையேயாகும். இதற்குப் பொதுவான காரணியாக சோழர் தமது தலைநகராகப் பொலன்னறுவையைத் தெரிவு செய்தமைக்கான காரணங்களைக் குறிப்பிடலாம். உள்நாட்டு வெளிநாட்டு எதிர்ப்புகளிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு வாய்ப்பாக அமைந்திருந்த பொலன்னறுவையானது இராசரட்டைக்கும் உருகுணுரட்டைக்கும் மத்தியில் மகாவலி கங்கையை எல்லையாகக் கொண்டு அமைந்திருந்ததுடன், அங்கு காணப்பட்ட பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களும் பொலன்னறுவையைத் தலைநகராகத் தெரிவு செய்தமைக்கான விஷேட காரணங்களாகும். உபராஜ (இளவரசன்) பதவியைப் பெற்ற தனது இளைய சகோதரன் வீரபாகுவை தக்கிணதேச ஆட்சியாளனாக மன்னன் நியமித்தான்.

நிருவாகத்தை ஒழுங்குபடுத்திய மன்னன் ஒவ்வொரு அரச அலுவலருக்குமான வேலைகளைப் பிரித்து வழங்கியதுடன் அரச வருமானம் திரட்டும் வழி முறையையும் மறுசீரமைத்தான். தொடர் யுத்தங்களாலும் சோழராட்சியாலும் செயலிழந்திருந்த விவசாய, நீர்ப்பாசன நடவடிக்கைகளைப் புனரமைப்பதற்கும் மன்னன் நடவடிக்கைகளை மேற்கொண்டான்.

இவ்வாறு பொலன்னறுவை ஆட்சியாளனாக செயற்பட்ட ஆரம்ப காலகட்டத்திலே அரச உயர் பதவிகளை வகித்த மூன்று சகோதரர்களின் பலம் வாய்ந்த கிளர்ச்சிகளுக்கும் மன்னன் முகங்கொடுக்க நேர்ந்தது. ஜனதாரி நாயக, அதிகரண நாயக, வெலந்த நாயக என்போரே அக் கிளர்ச்சியாளர்களாவர். இம்மூவரும் தென்னிந்தியாவில் தலைமறைவாக இருந்து பின்னர் 1074 / 75ஆம் ஆண்டுகளில் நாடு திரும்பி உருகுணை, தக்கிண தேசம், மலயரட்ட (மலைநாடு) ஆகிய பகுதிகளிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னனுக்கு எதிராக மாபெரும் கிளர்ச்சிகளை மேற்கொண்டனர். இக்கிளர்ச்சிகளை வெற்றிகரமாக முறியடித்த மன்னனின் படைவீரர்கள் கிளர்ச்சித் தலைவர்களை தக்கிண தேசத்துக்குக் கொண்டு சென்று அங்கு வைத்து அவர்களுக்கு மரண தண்டனை விதித்தனர். இவ்வாறு அரச அதிகாரிகள் அரசனுக்கு எதிராக ஏன் கிளர்ச்சி செய்தனர் என்பதற்கான சாட்சிகள் மூலாதாரங்களில் காணப்படவில்லை.

விஜயபாகு மன்னன் குளங்கள், கால்வாய்கள், அணைக்கட்டுகள் என்று பாரியளவில் புனருத்தாரணம் செய்தான் புதிய நீர்ப்பாசனத் திட்டங்களை மேற்கொள்ளாது சீரழிந்து காணப்பட்ட பழைய நீர்ப்பாசனத் திட்டங்களையே புனரமைப்புச் செய்துள்ளான். போர் நடவடிக்கைகளின் போது தவிர சாதாரண காலங்களில் சோழர்கள் நீர்ப்பாசனக் கட்டமைப்புகளை அழிக்கவில்லை. ஏனெனில் அவ்வாறு செய்தால் அவர்களின் வருமானம் குறைந்துவிடும் என்பதனாலாகும். ஐம்பதாண்டுகளுக்கும் அதிக கால சோழராட்சியின் போது அழிவு நாச வேலைகள் இடம் பெற்றதாக வம்சக் கதைகள் கூறவில்லை. ஆயினும் அவர்கள் நீர்ப்பாசனக் கட்டமைப்பை முறையாகப் பராமரிக்காத காரணத்தால் நீர்ப்பாசன நடவடிக்கைகள் முன்பு போல் சோழராட்சியில் காணப்படவில்லை எனக் கருத இடமுண்டு.

சோழராட்சியில் பௌத்த சமயம் வீழ்ச்சியடைந்தே காணப்பட்டது. எனவே விஜயபாகு மன்னன் பர்மாவிலிருந்து புத்த பிக்குகளை வரவழைத்து உபசம்பதா எனும் சமயச் சடங்கை நிறைவேற்றினான். அதற்காக சோழர்கள் பௌத்த சமயத்தை அழித்தொழித்தனர் என்று நாம் கருதுவது முறையல்ல. ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளின் போது பன்சலை, விகாரைகளில் காணப்பட்ட செல்வங்களை அடைவதற்காக அவற்றை அழித்துவிட்டனர் என்று சந்தேகிப்பதற்கும் இடமில்லை.

தமது ஆட்சி நடவடிக்கைகளின்போது ஏனைய சமயங்களை இல்லாதொழிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வது சோழரின் கொள்கையாகக் காணப்படவுமில்லை. சோழரின் அனுசரணைபெற்ற பௌத்த விகாரைகள் சமகாலத்தில் சோழ நாட்டில் காணப்பட்டதையும் நாம் நினைவுக்குக் கொண்டு வருதல் வேண்டும். திருகோணமலைக்கு அண்மையில் அமைந்திருந்த 'வெல்கம் விகாரை' இராஜராஜப் பெரும்பள்ளி எனும் பெயரில் சோழ மன்னர்களின் அனுசரணை பெற்றுத் திகழ்ந்ததாக அங்கு காணப்படும் ஒரு தமிழ்க் கல்வெட்டு பறைசாற்றுகின்றது. ஆயினும் இந்து சமயத்தவரான சோழ மன்னர்களினால் சிங்கள மன்னர்களின் அளவுக்கு பௌத்த சமயத்துக்கு அனுசரணை கிடைக்க வில்லை என்பதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை. அதனாலேயே புத்த சமயத்துக்கு அது துரதிஷ்டமான காலமாக அமைந்தது. எனவேதான் சோழரை அடுத்து ஆட்சிக்கு வந்த விஜயபாகு மன்னன் புத்த சமயத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக அரும்பாடுபட வேண்டியிருந்தது.

## விஜயபாகு மன்னனின் வெளிநாட்டுக் கொள்கை

விஜயபாகு மன்னன் இந்திய அரச குடும்பங்களுடன் திருமண உறவுகளை ஏற்படுத்திக் கொண்டான். அவனது பட்டத்து இராணியாக இருந்தவள் சோழர் ஆட்சியின் போது வட இந்தியாவின் அயோத்யா நகரிலிருந்து உருகுணைக்கு வந்து ஒரு பிரதேசத்தை ஆட்சி செய்த ஜகதிபாலவின் தங்கை ஆவாள்.

இரண்டாவது மனைவியாக கிழக்கு இந்தியாவின் கலிங்க தேசத்தை (இன்றைய ஒரிஸா) சேர்ந்த திரிலோக சுந்தரி என்ற இளவரசியை விஜயபாகு திருமணம் செய்து கொண்டான். அத்துடன் தனது தங்கை மித்தாவை தென்னிந்தியாவின் பாண்டிய இளவரசன் ஒருவனுக்குத் திருமணம் செய்து வைத்தான். மித்தா இளவரசியை சோழ மன்னன் திருமணம் செய்வதற்காகப் பெண் கேட்ட போதும் அதை மறுத்த மன்னன் பாண்டிய இளவரசனுக்குத் திருமணம் செய்து வைத்தது இன ரீதியிலான குரோதத்தினால் அல்ல. அக்கால அரச பரம்பரையிடையே திருமண உறவுகளை மேற்கொள்ளும் போது சூரிய வம்சம், சந்திர வம்சம் என்ற வர்க்க வேறுபாடு பேணப்பட்டது. சூரிய வம்சத்தில் திருமண உறவு வைத்துக் கொள்வது அக்கால சிங்கள மன்னர்களின் வழக்கமாக இருக்கவில்லை. ஆனால் பாண்டியர் சந்திர வம்சத்தைச் சேர்ந்தவர்கள் என்றபடியால் விஜயபாகு மன்னன் தங்கையைப் பாண்டிய வம்சத்தில் திருமணம் செய்து வைத்தான். அது மட்டுமல்லாது சோழரின் பரம விரோதிகளான பாண்டியருடன் நட்புறவோடு நடந்து கொள்வது சிங்கள மன்னர்களின் வழக்கமாயிருந்தபடியால் அத்திருமணம் இந்த அடிப்படையிலும் நிகழ்ந்திருக்கலாம். ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்தே பாண்டிய - சிங்களஅரசியல் நட்பு தொடர்வதையும் காணக் கூடியதாக இருந்தது. எது எவ்வாறிருப்பினும் இத்திருமண உறவுகள் மூலம் பிறந்த பிள்ளைகள் பிற்கால இலங்கையின் சிம்மாசன உரிமைப் போராட்டத்தில் ஈடுபடுவதையும் காணக்கூடியதாக இருந்தது.

விஜயபாகு மன்னன் அயல் இராச்சியங்களுடன் நல்லுறவைப் பேணுவதன் முக்கியத்துவத்தை அறிந்தவனாக இருந்தான் என்பதை உணர முடிகின்றது. நீண்ட காலமாக யுத்தம் புரிந்த சோழர்களுடன் கூட அவன் வைராக்கியம் கொள்ளவில்லை என்பது அவனது அரசவைக்கு வந்த சோழத் தூதுவர்களுடன் அவன் பரிசில்களைப் பரிமாறிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டதிலிருந்து தெரிய வருகின்றது. எனவே தனது தங்கையைப் பெண் கேட்ட சோழ மன்னனுக்கு மறுப்புத் தெரிவித்தமைக்கு மேற்சொன்ன விடயம் காரணமாயமைந்திருக்கலாம். அத்தோடு கர்நாடகாவிலிருந்து வந்த அரச தூதுவர்களுடன் மன்னன் பரிசுகளைப் பரிமாறிக் கொண்டுள்ளான்.

சோழ இராச்சியத்தின் ஊடாக கர்நாடக இராச்சியம் நோக்கிச் சென்ற சிங்கள தூதுக்குழுவினரை வழி மறித்த சோழர்கள் அவர்களது காது, மூக்கு முதலிய உறுப்புக்களை வெட்டி இம்சைப்படுத்தியதாக அத்தூதுக் குழுவினர் நாடு திரும்பிய பின்னர் அறிந்த மன்னன் மிகவும் கவலையடைந்தான். தொடர்ந்து சோழ நாட்டை ஆக்கிரமிப்பதற்கான நடவடிக்கைகளை மன்னன் மேற்கொண்டான். எனவே சோழ நாட்டை ஆக்கிரமிக்கும் முகமாக இரண்டு சேனாதிபதிகளின் கீழ் இரண்டு படையணிகளைத் திரட்டி மகாதித்த, மன்திதாவாட்டதித்த எனும் இரு துறைமுகங்களிலிருந்தும் கப்பல் ஏறுவதற்காக மன்னன் அனுப்பி வைத்தான்.

அப்படையணிகள் கப்பல் ஏறுவதற்கு முன்னர் விஜயபாகு மன்னனின் கீழ் சேவையாற்றிய வேளைக்காரப்படையினர் மன்னன் மேற்கொண்ட நடவடிக்கைக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தனர். அவர்கள் விஜயபாகு மன்னனின் சகோதரியையும் அவளது மூன்று பிள்ளைகளையும் கைது செய்ததோடு அரச மாளிகையை தீ வைத்துக் கொளுத்தியதுடன் பொலன்னறுவைப் பிரதேசத்தை நாசப்படுத்தினர். இதனால் நிர்க்கதியான மன்னன் முன்னர் போலவே இம்முறையும் வாக்கிரிகல பகுதிக்குப் பின்வாங்கிச் சென்றான். 'வேலைக்காரப் படை' என்பது தமது உயிரைப் பணயம் வைத்தேனும் மன்னன் உயிரைப் பாதுகாப்போம் என்று ஒப்பந்தம் செய்த தமிழ் கூலிப் படையினராவர். அவர்களின் செல்வாக்கு எந்தளவிற்கு இருந்துள்ளது என்பதை இந்தச் சம்பவம் மூலம் அறிய முடிகின்றது. இளவரசன் வீரபாகுவின் உதவியுடன் மன்னன் கிளர்ச்சியை அடக்கினான்.

இக்காலகட்டத்தில் இராசரட்டையின் சனத்தொகையில் தமிழரின் எண்ணிக்கை முன்னரைவிடக் கணிசமானளவு அதிகரித்துக் காணப்பட்டது என்பதைக் கவனத்திற்கொள்ள வேண்டும். விஜயபாகு மன்னனின் மரணத்தின் பின்னர் பொறிக்கப்பட்ட 'வேளைக்காரன் பட்டயம்' எனும் கல்வெட்டின்படி தலதாமாளிகையைப் பாதுகாக்கும் பாரிய பொறுப்பும் வேளைக்காரப் படையினர் வசம் இருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. விஜயபாகு மன்னன் இந்து சமயத்தையும் மதித்து அதற்கு உரிய இடம் வழங்கியுள்ளான் என்பதும் நினைவுகூரத்தக்கது கந்தளாயில் அமைந்துள்ள விஜயராஜ ஈஸ்வரம் எனும் இந்துக் கோயில் மன்னனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுசரணை பெற்றிருந்ததாக அங்குள்ள கல்வெட்டொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இராசரட்டையை சோழரிடமிருந்து மீட்டெடுத்தது முதல் (1070) மன்னனின் மறைவு (1110/11) வரையிலான நான்கு தசாப்த காலமாக வெளிநாட்டு ஆக்கிரமிப்புக்கள் ஏதும் இடம்பெறவில்லை. ஆயினும் இடம்பெற்ற உள்நாட்டுக் கிளர்ச்சிகள் இரண்டையும் அதாவது மூன்று சகோதரர் மற்றும் வேளைக்காரப் படை கிளர்ச்சி என்பவற்றை மன்னன் வெற்றிகரமாக முறியடித்தான். நீண்ட காலமாக குழப்பநிலையில் இருந்த அரச நிர்வாகத்தை புனருத்தரணஞ் செய்து, பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பி புத்த சாசனத்தையும் எழுச்சி பெறச் செய்வது என்பது கடினமான காரியமாக அமைந்த போதிலும் அவற்றுக்காக மன்னன் அதிகளவில் பாடுபட்டுள்ளான். அவனுடைய வாழ்நாளில் அதிக காலம் போர்க்களங்களிலே கழிந்தது. எதிரிகளிடமிருந்து நாட்டை மீட்டு நாட்டின் சுயாதிபத்தியத்தைப் பாதுகாத்தமை மன்னனின் உன்னதமான பணியாகும்.


## முதலாம் விஜயபாகு மன்னனின் பின்னர் ஏற்பட்ட உள்நாட்டு யுத்த நிலை

விஜயபாகு மன்னன் அரும்பாடுபட்டு ஐக்கியப்படுத்திய இலங்கை அவனது மறைவுக்குப் பின்னர் மீண்டும் சிதறுண்டு போனதைக் காண முடிகின்றது. அதற்கான மூல காரணமாயமைந்தது ஒரு துர்ப்பாக்கிய சம்பவமாகும். அதாவது மரபு வழியான சிம்மாசன உரிமையை மீறி ஆயுதமேந்திய ஒரு குழு சிம்மாசன உரிமையைப் பெற்றுக்கொள்ள முனைந்தது. விஜயபாகு மன்னன் மரணிக்கும்போது அவனது சகோதரன் ஜயபாகு இளவரசன் மாபா பதவியிலும் மன்னனின் மகன் விக்கிரமபாகு உருகுணையின் ஆட்சியாளனாக ஏபா பதவியிலும் இருந்தனர். அடுத்த மன்னனைத் தெரிவு செய்வதற்காக அமைச்சர்கள், பிக்குகள், மித்தா இளவரசி, அவளது பிள்ளைகள் ஒன்றுகூடி ஆலோசனை செய்து உபராஜா பதவியிலிருந்த மன்னனின் சகோதரனான ஜயபாகுவை அரசனாக்கினர். அதனால் வெற்றிடமான இளவரசன் பதவியை மித்தா இளவரசியின் மூத்த மகனான மானாபரண என்பவனுக்கு வழங்கினர்.

இங்கு ஜயபாகு மன்னனாகத் தெரிவு செய்யப்பட்டமை சரியான செயற்பாடாகும். ஆனால் மானாபரண இளவரசன் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டமை மரபை மீறிய செயலாகும். உண்மையில் அப்பதவி விஜயபாகுவின் மகனான விக்கிரமபாகுவுக்கே உரியது. ஏனெனில் விஜயபாகு மன்னனுக்கு வேறு சகோதரர்கள் இல்லாதிருந்தமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யினாலாகும். மேற்படி தீர்மானங்களின்போது பௌத்த பிக்குகளும் செல்வாக்குச் செலுத்தியமையால் விக்கிரமபாகு பிக்குகள் மீது வைராக்கியம் கொண்டிருந்தான் என்பதை அவனது பிற்காலச் செயற்பாடுகள் மூலம் அறியக் கூடியதாகவுள்ளது. இந்த மரபை மீறிய செயற்பாட்டினால் நீண்ட காலப் போராட்டத்தின் பின்னர் நாட்டை ஐக்கியப்படுத்திய விஜயபாகு மன்னனின் மறைவையடுத்து நாடு மீண்டும் அரசியல் குழப்ப நிலையை அடைந்தது. விஜயபாகு மன்னன் கட்டியெழுப்பிய அரசியல் உறுதிப்பாடு அதளபாதாளத்தில் விழுந்தது. இந்நிலையிலிருந்து நாட்டை மீட்டவன் அதற்கு 40 ஆண்டுகளுக்குப் பின்னர் கி.பி. 1153 இல் ஆட்சி பீடமேறிய மகா பராக்கிரமபாகு மன்னனாவான். அதுவரையிலான அரசியல் நிலையை நாம் விரிவாகப் பார்ப்போம்.

மரபை மீறி இளவரசுப் பதவி வழங்கப்பட்ட மானாபரணனிடமே அரசுரிமையையும் வழங்கி ஜயபாகு மன்னனைப் பெயரளவில் மாத்திரம் அரசனாக வைத்திருப்பதையே மேற்படி குழுவினர் எதிர்பார்த்தனர் என்பதும் தெளிவாகின்றது. அதன் பின்னர் மணிமுடி மற்றும் அரச ஆபரணங்கள், சொத்துக்கள் அனைத்தையும் கைப்பற்றிய மானாபரணன், தனது தம்பிமாரான கீர்த்திசிறிமேகன், சிறீவல்லபன் என்போருடன் மன்னன் ஜயபாகுவையும் சேர்த்துக் கொண்டு விக்கிரமபாகுவைக் கைது செய்வதற்காக உருகுணை மீது படையெடுத்தான். மகாநாககுல நகரில் இருந்த விக்கிரமபாகு இளவரசன் போரில் ஈடுபட்டு புத்தல பிரதேசத்தில் வைத்து தனது எதிரணியைத் தோல்வியடையச் செய்தான். அதனைத் தொடர்ந்து பொலன்னறுவையைக் கைப்பற்றிய இளவரசன் விக்கிரமபாகு அதன் ஆட்சியாளனானான். உருகுணை மற்றும் தக்கின தேசம் எனும் பகுதிகளை மானாபரண மற்றும் அவன் தம்பிமார் ஜயபாகு முதலிட்டோர் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர். மானாபரண, வீரபாகு எனும் பெயரில் தக்கிண தேச ஆட்சியாளனாக மாறினான். அவன் தனது தலைநகராக கேகாலை மாவட்டத்தில் உள்ள தெதிகம என இன்று அழைக்கப்படும் புங்ககாம எனுமிடத்தைத் தெரிவு செய்தான். உருகுணைப் பகுதியை கீர்த்திசிறிமேக, சிறீவல்லப சகோதரர்கள் பிரித்து ஆட்சி செய்தனர். வளவ கங்கைக்கு மேற்குப் பிரதேசமான தொலஸ்தஹஸ் ரட்டவின் ஆட்சியாளனான கீர்த்திசிறிமேக, மகாநாககுலவைத் தனது தலைநகராக்கிக் கொண்டான். வளவ கங்கையின் கிழக்குப் பிரதேசமான அட்டதஹஸ் ரட்டவுக்கு ஆட்சியாளனான சிறீவல்லப உதுன்தொர எனுமிடத்தைத் தலைநகராகத் தெரிவு செய்தான். (இது மொனராகலை நகருக்கு கிழக்கே அமைந்துள்ள கலபெத்த என்று அறியப்பட்டுள்ளது.) மித்தா இளவரசியும் அவள் சகோதரன் ஜயபாகுவும் மகாநாககுலவில் வசித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராசரட்டை ஆட்சியாளனான விக்கிரமபாகுவுடன் உருகுணையிலிருந்த மானாபரண அணியினர் மீண்டும் போர்தொடுக்க ஆயத்தம் செய்தனர். இவர்கள் தக்கிண தேசத்தில் தனக்கெதிராகப் படை திரட்டுவதை அறிந்த விக்கிரமபாகு மன்னன் பெரும் படையுடன் வந்து மானாபரண சகோதர அணியைப் படுதோல்வியடையச் செய்தான். தோல்வியடைந்த சகோதாரர் மூவரும் பஸ்துன்ரட்ட எனுமிடத்தில் முகாமிட்டு இருப்பதைக் கேள்வியுற்ற விக்கிரமபாகு அவர்களைத் தொடர்ந்து களனிவரையில் வந்தான். அவ்வேளையிலே பலன்தீப எனும் நாட்டிலிருந்து வந்த வெளிநாட்டுப் படைவீரனான வீரதேவனின் ஆக்கிரமிப்புக்கு மன்னன் முகங்கொடுக்க நேர்ந்தது. எனவே தக்கிண தேசத்தை விட்டும் மகாதித்த துறைமுகத்தில் வந்திறங்கியுள்ள வெளிநாட்டுப் படையெடுப்பை முறியடிக்க மன்னாருக்குச் சென்று அப்போரில் படு தோல்வியடைந்தான். மேலும் இளவரசர் இருவரும் தளபதி ஒருவனும் கொல்லப்பட்டதுடன் விக்கிரமபாகுவின் சேனாதிபதி வெளிநாட்டுப் படையினரால் கைது செய்யப்பட்டான். தோல்வியடைந்த நிலையில் பொலன்னறுவைக்குத் திரும்பிய விக்கிரமபாகு மன்னன் தனது பெறுமதி வாய்ந்த பொருட்களையும் எடுத்துக் கொண்டு பாதுகாப்புக் கருதி கொட்டசர எனுமிடத்தை அடைந்தான். மன்னனை பின்தொடர்ந்த வீரதேவனின் படைகள் அந்தரவிட்டிக எனும் சதுப்பு நிலப் பிரதேசத்தில் வைத்து எதிர்பாராத விதத்தில் விக்கிரமபாகுவின் படைகளிடம் சிக்கிக் கொண்டன. இப்போரில் படுதோல்வியடைந்த வீரதேவன் கொலை செய்யப்பட்டான். இந்த வீரதேவன யார், எந்த நாட்டைச் சேர்ந்தவன் என்பதை உறுதியாகக் கூற முடியாதுள்ளது. பொலன்னறுவைக்கு மீண்டு வந்த விக்கிரமபாகு தனது ஆட்சி நடவடிக்கைகளை ஆரம்பித்தான்

இக்காலக்கட்டத்தில் இலங்கை நான்கு அரசர்களின் கீழ் ஆட்சி செய்யப்பட்டதை அறிந்தோம். கி.பி. 1110 - 1153 காலகட்டம் இலங்கையில் அரசியல் குழப்பம் நிலவிய காலமாகவே திகழ்ந்தது. முதலாம் ஜயபாகு தவிர இக்கால கட்ட ஆட்சியாளர் யாரும் முறையாக முடிசூடிய அரசர்களாகக் காணப்படவில்லை. இராசரட்டை மக்களும் புத்தசாசனமும் வீழ்ச்சியடைந்ததோர் துரதிஷ்டமான காலப்பகுதியாக இதனைக் கருதலாம். தனது அரசுரிமைக்கு எதிராக இருந்த பொலன்னறுவை பௌத்த பிக்குகளை அங்கிருந்து துரத்திய விக்கிரமபாகு மன்னன், பன்சலைகளை வெளிநாட்டு கூலிப்படை வீரர்களின் வாசஸ்தலமாக மாற்றினான். விகாரைகளின் சொத்துக்களைக் கொள்ளையடித்த மன்னன் விகாரைக் காணிகளைத் தனது ஆதரவாளர்களுக்கு வழங்கினான். புனித தந்ததாதுவுக்குப் பூஜை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்ட சிவப்பு மாணிக்கம், தங்கம் முதலிய பெறுமதி வாய்ந்த பொருள்களைக் கைப்பற்றித் தனது சொந்தப் பாவனையின் பொருட்டு வைத்துக்கொண்டான். எனவே புனித தந்தமும் புனித பாத்திரங்களும் பாதுகாப்புக் கருதி உருகுணைக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

இலங்கையில் காணப்பட்ட நான்கு இராச்சியங்களின் எல்லைகளில் கடமையிலிருந்த படைவீரர்கள் சிற்சில கொள்ளையடிப்புக்களிலும் ஈடுபட்டனர். கிராமங்களுக்குத் தீ வைத்தனர். குளக்கட்டுகளையும் துளையிட்டு நாசம் செய்ததாக வம்சக் கதைகள் கூறுகின்றன. சில செழிப்பான கிராமங்கள் இருந்த இடம் தெரியாமல் அழிக்கப்பட்டுள்ளதாகவும் வம்சக்கதைகள் சித்திரிக்கின்றன. ஊழல்களில் ஈடுபட்ட அரச அதிகாரிகள் அரசனுக்குச் சார்பானவர்களாக நடந்து தமது பொருளாதாரத்தை வளப்படுத்திக் கொண்டனர். சமந்த கூடம் (சிவனொளிபாதமலை) முதலிய கஷ்டப் பிரதேசங்களில் வாழ்ந்த மக்கள் மன்னனுக்கு வரி செலுத்த மறுத்தனர். அடிமைகள் எஜமான்களைக் குறை கூறியதுடன் அவர்களின் கட்டளைக்கு அடிபணிய மறுத்தனர். போர்த் தந்திரோபாயமாகக் குளக் கட்டுகளை உடைத்தமை வரலாற்றில் முதல் தடவையாக இக்கால கட்டத்திலே இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

மேற்கூறிய விடயங்களின் அடிப்படையில் குறிப்பிட்ட அக்காலப் பகுதியில் நாட்டில் நிலவிய குழப்ப நிலையை உணரக் கூடியதாகவுள்ளது. அக்கால கட்டத்தில் பொது மக்கள் ஆலையில் அகப்பட்ட கரும்பைப் போல் நசுக்கிப் பிழியப்பட்டனர் என்று வம்சக் கதைகள் வர்ணிக்கின்றன. எந்தவொரு விதமான பொருளாதார வளர்ச்சியும் இக்கால கட்டத்தில் இடம் பெறவில்லை. அக்கால கட்டத்தில் அமைக்கப்பட்ட ஒரு குளம் அல்லது வழிபாட்டுத் தலம் பற்றி எங்கும் குறிப்பிடப்படவில்லை. தக்கிணதேசத்தில் மானாபரணவின் மகனான இளவரசன் பராக்கிரமபாகு (பிற்காலத்தில் மகா பராக்கிரமபாகு மன்னன்) அப்பிரதேச ஆட்சியாளனாக வந்து கி.பி. 1140 ஆம் ஆண்டு பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வரை நாடு மேற்கூறப்பட்ட நிலையிலேயே தொடர்ந்தும் திகழ்ந்தது.

முதலாம் விக்கிரமபாகு (1111 - 1132 ) மன்னனின் மறைவின் பின்னர் அவனது மகன் இரண்டாம் கஜபாகு (1132 - 1153) இராசரட்டையின் ஆட்சியாளனானான் முதலாம் விஜயபாகு மன்னனின் கலிங்கதேச மனைவியான திரிலோக சுந்தரி இராணிக்கு சுகத்தா, சுமித்தா, லோகநாதா, ரத்னாவலி, ரூபவதி எனும் ஐந்து மகள்மாரும் விக்கிரமபாகு எனும் மகனும் பிறந்தனர். விஜயபாகுவின் முதலாவது மனைவியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லீலாவதி (ஜகதிபால மன்னனின் தங்கை) இராணிக்கு யசோதரா எனும் மகள் பிறந்தாள். வீரவம்ம எனும் இளவரசனை மணம் முடித்த அவளுக்கு லீலாவதி , சுகலா எனும் இரு மகள்கள் பிறந்தனர். பாண்டிய இளவரசனை மணமுடித்த விஜயபாகு மன்னனின் தங்கை மித்தா இளவரசிக்கு மானாபரண, சிறிமேகன், சிறீவல்லபன் எனும் புதல்வர்கள் பிறந்ததாக ஏற்கனவே அறிந்தோம். அவர்கள் முறைப்படியே ரத்னாவலி, லோகநாதா, சுகலா என்போரைத் திருமணம் செய்து கொண்டனர். தக்கிணதேச ஆட்சியாளனான மானாபரணவுக்கு அவன் மனைவி ரத்னாவலி மூலம் பராக்கிரமபாகு எனும் மகனும் மித்தா, ஹத்தவதி எனும் இரு மகள்மாரும் பிறந்தனர். உருகுணை ஆட்சியாளனான சிறீவல்லபனுக்கு மானாபரணன் எனும் மகனும் லீலாவதி எனும் மகளும் பிறந்தனர். பராக்கிரமபாகு பிறந்து அதிக காலம் செல்ல முன்னர் அவனின் தந்தை மானாபரண காலமானான். எனவே அவனது தாய் ரத்னாவலி தனது மகனையும் மகள்மார் இருவரையும் அழைத்துக் கொண்டு உருகுணைக்குச் சென்று சிறீவல்லபனின் பாதுகாப்பில் மகாநாககுலவில் வசித்தனர். மானாபரணன் மறைவால் வெற்றிடமான தக்கிணதேச ஆட்சிப் பதவி தொலஸ்தஹஸ்ரட ஆட்சியாளன் கீர்த்தி சிறிமேகனுக்குக் கிடைத்தது.

எனவே உருகுணை முழுவதற்கும் சிறிவல்லப ஆட்சியாளனானான். இவ்வாறு இராசரட்டை இரண்டாம் கஜபாகுவின் கீழும் தக்கிண தேசம் கீர்த்தி சிறிமேகனின் உருகுணை சிறிவல்லபனின் கீழும் ஆட்சி செய்யப்பட்டன. பருவ வயதை அடைந்த பின்னர் பராக்கிரமபாகு இளவரசனின் மூத்த சகோதரி மித்தாவை உருகுணை ஆட்சியாளனான சிறீவல்லபனின் மகன் மானாபரணவுக்கும் இளைய சகோதரி ஹத்தவதியை இராசரட்டை ஆட்சியாளனான இரண்டாம் கஜபாகுவுக்கும் திருமணம் செய்து வைத்தனர். இதிலிருந்து நாம் கவனம் செலுத்த வேண்டிய நபர் அப்போது சிறுவனாக இருந்தவனும் பிற்காலத்தில் நீண்ட போராட்டத்தின் பின்னர் நாட்டை ஐக்கியப்படுத்தி செழிப்படையச் செய்தவனுமான மகா பராக்கிரமபாகு அல்லது முதலாம் பராக்கிரமபாகு மன்னனாவான். (விஜயபாகு மன்னனின் பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் பற்றி நூலின் இறுதியில் உள்ள அட்டவணையைப் பார்க்க.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகா பராக்கிரமபாகு மன்னன் (கி.பி 1153 - 1186)

### மன்னனின் இளமைக் காலம்

தக்கிண தேசத்தில் இன்றைய கேகாலை மாவட்ட தெதிகம என அழைக்கப்படும் சுங்ககாம எனுமிடத்திலேயே பராக்கிரமபாகு மன்னன் பிறந்ததாகக் கருதப்படுகின்றது. அவனது தந்தையான மானாபரணனின் தலைநகராக அவ்விடம் திகழ்ந்தது. தந்தையின் மறைவின் பின்னர் தாயாரால் உருகுணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட சிறுவன் பராக்கிரமபாகு நீண்ட காலம் செல்லுமுன்னர் தக்கிண தேச ஆட்சியாளனும் தனது சிறிய தந்தையுமான கீர்த்தி சிறிமேக மன்னனின் அரச மாளிகையை வந்தடைந்தான். ஆண் பிள்ளைகளில்லாத சிறிய தந்தையும் தனது அடுத்த வாரிசாக அண்ணனின் மகனைத் தன் மகனாக வளர்த்து வந்தான். கீர்த்தி சிறிமேகனின் ஆட்சித் தலைமையகமாக சடிகனாதன்தலி எனுமிடம் விளங்கியது. அது கேகாலை மாவட்டத்தின் பெலிகலைக்கு அண்மையில் அமைந்துள்ள இன்றைய ஹந்தானகொட எனுமிடமென அறியப்பட்டுள்ளது. அங்கு அமைந்திருந்த கீர்த்தி சிறிமேகனின் மாளிகையில் பராக்கிரமபாகுவின் இளமைக் காலம் கழிந்தது. அங்கு வைத்து அரசாட்சிக்குரிய பயிற்சிகள் வழங்கப்பட்ட இளவரசனுக்கு மொழியறிவு, வரலாறு, புராணங்கள் முதலிய பாடங்கள் போதிக்கப்பட்டதுடன் விற்கலை, வாட்போர், யானை ஏற்றம் முதலிய போர்ப் பயிற்சிகளைப் பெறவும் சிறிய தந்தையார் வகை செய்தார்.

சிறுவயது முதலே பராக்கிரமபாகு இளவரசன் தனது எதிர்கால இலட்சியம் பற்றிய தெளிவோடு செயற்பட்டு வந்தான். இராசரட்டையைக் கைப்பற்றி முழு நாட்டையும் ஒரு குடையின் கீழ் கொண்டு வந்து அங்கு பேரரசனாகத்தானிருந்து ஆட்சி செய்ய வேண்டும் என்பதே அவனின் நோக்கமாக இருந்தது. இளைய பராக்கிரமபாகுவின் திறமைகளை வெளிப்படுத்த வம்சக் கதைகள் கூறும் விடயங்களுள் பெரும்பாலானவை அற்புதத் தன்மை பொருந்திய கற்பனைகளாகக் காணப்படுகின்றன. எனவே அச்செய்திகளை அவ்வாறே ஏற்றுக் கொள்வது புத்திக் கூர்மையான செயலாகாது. அவ்வாறு வம்சக் கதைகள் வர்ணிக்கும் சம்பவம் ஒன்றைப் பார்ப்போம். ஒருநாள் சிறுவன் பராக்கிரமபாகு தனது நண்பர்களுடன் சிறிய தந்தைக்குத் தெரியாமல் மாளிகையிலிருந்து வெளியே சென்று இராசரட்டை, தக்கிணதேச எல்லையில் அமைந்துள்ள காவல் நிலையமொன்றுக்குள் பிரவேசித்தான். அந்த காவல் நிலையத்திற்குப் பொறுப்பாக இருந்த கீர்த்தி சிறிமேகனின் தளபதி சிறிய தந்தையின் அனுமதியின்றி இளவரசன் வந்திருப்பதைப் புரிந்து கொண்டு அவனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச மாளிகைக்குத் திருப்பியனுப்புவதற்கு முயற்சித்தான். அவ்வாறு அரச விசுவாசத்துடன் நடந்து கொண்ட அந்தத் தளபதியைக் கொலை செய்யுமாறு இளவரசன் உத்தரவிட அவனின் சகபாடிகள் தளபதியைக் கொலை செய்தனராம். வம்சக் கதையாளர்கள் இச்சம்பவத்தை பராக்கிரமபாகுவின் வீரத்தை மெச்சுவதற்காகப் பயன்படுத்தியுள்ளனர். ஆயினும் அரச விசுவாசத்துடன் நடந்து கொண்ட ஓர் அதிகாரியைப் படுகொலை செய்தமை பாராட்டக்கூடிய ஒரு விடயமல்ல. இந்த அநியாயமான கொலை நடந்ததாகக் கூறப்படும் தேச எல்லைக் காவல் நிலையம் அமைந்திருந்த பதலன்தலி எனும் இடம் இன்றைய குருணாகல் மாவட்டத்தின் பதலேகொட என்று அறியப்பட்டுள்ளது. இவ்வாறான செயற்பாடு காரணமாக ஏற்பட்ட கலவர நிலை ஒருவாறு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

பராக்கிரமபாகுவின் பயணம் இராசரட்டை நோக்கியே அமைந்திருந்தது. தனது ஆதரவாளர்களுடன் பராக்கிரமபாகு இளவரசன் பதலேகொடயிலிருந்து ஹிரியாலையைத் தாண்டி மெனிக்தென (புத்தகாம) எனுமிடத்தை அடைந்தான். அங்கிருந்து இராசரட்டை ஆட்சியாளனான கஜபாகுவின் கீழ் பணியாற்றும் அன்றைய கலாவாவிப் பிரதேசத்துக்குப் பொறுப்பான அதிகாரியான நகரகிரி கோகண்ண என்பவனைத் தனது முகாமுக்கு வருமாறு அழைப்பு விடுத்து அவனுக்குப் பரிசுகளும் கொடுத்தனுப்பினான். இவ்வாறான செயற்பாடுகள் மூலம் இராசரட்டைக்கும் தக்கிண தேசத்துக்குமிடையில் போர் மூளலாம் என்பதைப் புரிந்து கொண்ட கீர்த்தி சிறிமேக மன்னன், இளவரசனைத் திருப்பி அழைத்து வரும் பொருட்டு சேன, மகிந்த எனும் இரு அதிகாரிகளைப் படையணிகளுடன் மெனிக்தண்டவுக்கு அனுப்பி வைத்தான். அவர்களால் பராக்கிரமபாகுவைப் பிடிக்க முடியவில்லை. அவன் மாத்தளை, லக்கலை, நாளந்த முதலிய இடங்களைத் தாண்டி கங்கல உடசியபத்து பிரிவைச் சேர்ந்த ஜனபத எனும் கிராமத்தின் ஊடாக இராசரட்டை பிரதேசத்தில் நுழைந்தான். தனது தேச எல்லைப் பிரதேசத்தில் பராக்கிரமபாகு இளவரசன் சஞ்சரிப்பதை அறிந்த கஜபாகு மன்னன், தனது ராஜ சபைக்கு வருமாறு இளவரசனுக்கு அழைப்பு விடுத்தான்.

இளைஞனான பராக்கிரமபாகுவை நல்ல முறையில் வரவேற்ற மன்னன் அவனுக்குப் பூரண அரச மரியாதை வழங்கி உபசரித்தான். சிலகாலம் விருந்தாளியாக பராக்கிரமபாகு பொலன்னறுவையில் தங்கியிருந்தான். அக்கால கட்டத்தில் அவன் சொன்ன வார்த்தைகளும் செய்த செயல்களும் அவன் பெற்ற விருந்துபசாரத்துக்கு விரோதமானவையாகும். அவன் கஜபாகு மன்னனின் சொத்து மதிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் படைப்பலம் போன்ற இரகசியத் தகவல்களை அரச அலுவலர்கள் மூலம் இரகசியமாக அறிந்து கொண்டான். மேலும் அரசனுக்குச் சார்பான அதிகாரிகள் யார் எதிரான அதிகாரிகள் யார் என்பன போன்ற விடயங்களையும் அறிந்துகொள்ள முயன்றான். அரசனோடு விரிசல் உள்ள அதிகாரிகளை மேலும் அவனை விட்டுத் தூரமாக்கும் செயற்பாட்டையும் மேற்கொண்டான். இவ்வாறு தனது தேவைகளை நிறைவேற்றிக் கொண்ட பராக்கிரமபாகு உருகுணைக்குத் திரும்பி வந்து தனது தாயாரின் விருப்பத்துடன் தனது இளைய சகோதரியான ஹத்தாவதி இளவரசியை பொலன்னறுவைக்கு அழைத்துச் சென்று கஜபாகு மன்னனுக்குத் திருமணம் செய்து வைத்தான். இவ்வாறு கஜபாகு மன்னனின் மனதை பராக்கிரமபாகு வெற்றி கொண்டாலும் நீண்ட காலம் செல்ல முன்னர் கஜபாகு மன்னன் பராக்கிரமபாகுவின் செயற்பாடுகளை அறிந்து கொண்டான். எனவே பொலன்னறுவையிலிருந்து தான் வெளியேற வேண்டிய காலம் வந்து விட்டதை உணர்ந்த பராக்கிரமபாகு தான் விடை பெறுவதை நல்லுறவுடன் மன்னனுக்குத் தெரிவித்து, இரவோடு இரவாக தலைநகரை விட்டும் வெளியேறினான். தக்கிண தேச எல்லை வரை வந்து விட்ட போதிலும் அவன் இராசரட்டை எல்லையிலே சஞ்சரித்து வந்தான். கீரத்தி சிறிமேக மன்னன் பராக்கிரமபாகுவைத் திருப்பி அழைத்து வருவதற்காக ஏற்கனவே அனுப்பிய அதிகாரிகளுடன் பௌத்த குருமாரையும் அனுப்பி வைத்தான். ஆயினும் அதனால் எவ்வித பயனும் ஏற்படவில்லை. பின்னர் கீர்த்தி சிறிமேகனின் கட்டளைப்படி உருகுணையிலிருந்த அவனது தாய் ரத்னாவலி வரவழைக்கப்பட்டு பராக்கிரமபாகுவை அழைத்த பின்னரே அவன் தக்கிண தேச அரசமாளிகைக்குத் திரும்பினான். அதற்குச் சிறிது காலத்தின் பின்னர் சிறிய தந்தை காலமானதைத் தொடர்ந்து பராக்கிரமபாகு தக்கிணதேச ஆட்சியாளனானான்.

## தக்கிணதேச ஆட்சியாளனாதலும் நாட்டை ஐக்கியப்படுத்தலும்

கீர்த்தி சிறிமேக மன்னனின் மறைவுக்குப் பின்னர் தக்கிண தேசத்தின் ஆட்சியாளனான பராக்கிரமபாகு இளவரசனின் நீண்ட அரசியல் பயணத்தின் ஆரம்பப் படியாக இப்பதவியேற்றலைக் குறிப்பிடலாம். நாட்டை ஐக்கியப்படுத்தி முழு நாட்டுக்கும் மன்னனாகும் அவனது நீண்ட காலத் திட்டத்திற்கான விதை தக்கிண தேசத்திலேயே விதைக்கப்பட்டது. முதலில் தனது சொந்தப் பிரதேசத்தில் அர்த்தமுள்ள பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொண்டான். அவன் குருணாகலை மாவட்ட ஹெட்டிபொலவுக்கு அண்மையில் உள்ள இன்றைய பண்டுவஸ்நுவரவைத் தனது தலைநகரமாகத் தெரிவு செய்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலத்தில் அவன் அங்கு அமைத்த அரச மாளிகை மற்றும் பாதுகாப்பு மதில் என்பவற்றின் இடிபாடுகள் இன்றும் காணப்படுகின்றன. அங்கு காணப்பட்ட பண்டா வாவியை விரிவாக்கி நீர்வசதியை அதிகரித்தான். தனது எதிர் காலக் கனவுப் பெயரான பராக்கிரம சமுத்திரம் எனும் பெயரை பண்டா வாவிக்குச் சூட்டினான். தெதுறு ஓயவுக்குக் குறுக்காக அணைகள் கட்டி நீர்ப்பாசன நடவடிக்கைகளை மேற்கொண்டான். களுத்துறை மாவட்டத்தின் பஸ்துன் கோரளைப் பகுதி சதுப்பு நிலங்களை மண்ணிட்டு நிரப்பி, அதிலிருந்து நீரை வடித்து விவசாயத்துக்கு ஏற்ற நிலமாக மாற்றினான். இதனாலேதான் அப்பிரதேசம் பஸ்யெதுன்ரட்ட (மண் நிறைத்த பிரதேசம்) எனும் பெயரைப் பெற்றது. பிற்காலத்தில் அது பஸ்துன்ரட்ட என்றானது. வெளிநாட்டு வர்த்தகத்தை விருத்தி செய்யவும் அவன் நடவடிக்கைகளை மேற்கொண்டான். கலாஓய முகத்துவாரத்தில் அமைந்திருந்த கற்பிட்டி, களனிகங்கை முகத்துவாரத்தில் அமைந்திருந்த கொலம்தொட்ட (கொழும்பு) என்பன தக்கிண தேசத்தில் அமைந்திருந்த முக்கியமான துறைமுகங்களாகும். அவை வெளிநாட்டு வர்த்தகத்தில் முக்கிய பங்கு வகித்தன.

அது மாத்திரமல்லாது அரச நிருவாக முறையையும் மாற்றியமைப்பதில் அவன் அக்கறை காட்டினான். வரி அறவீட்டு முறையை ஒழுங்குமுறைப்படுத்தி அதற்குப் பொறுப்பாக 'பாண்டாகாரிக' எனும் அலுவலரை நியமித்தான். அத்துடன் போர்ப் படையொன்றை உருவாக்கிய அவன் படையினருக்குச் சிறந்த பயிற்சியளித்தான். அப்படையில் உள்நாட்டு வீரர்களுடன் இந்தியாவின் சேர, கர்நாடக வீரர்களும் காணப்பட்டனர். யுத்த நடவடிக்கைகளுக்கான வெவ்வேறு சேவைகளும் தனித்தனியாகக் கட்டியெழுப்பப்பட்டன. இவ்வாறு தக்கிண தேசத்தின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்து சிவில் நிர்வாகத்தை மறுசீரமைத்து படைப்பலத்தை அதிகரித்து பலம்வாய்ந்த இராச்சியமாக அதனைக் கட்டியெழுப்புவதில் பராக்கிரமபாகு வெற்றி கண்டான். அதன் பின்னர் இராசரட்டையை வெற்றிகொள்வதில் அவன் கவனம் செலுத்தினான்.

## இராசரட்டையை வெற்றிகொள்ளல்

இராசரட்டையைத் தாக்குவதற்கு முன்னர் கஜபாகு மன்னனின் ஆட்சிப் பிரதேசத்துக்குரிய மகாமலயதேசம் என்றழைக்கப்பட்ட மலைநாட்டுப் பகுதியை பராக்கிரமபாகு மன்னன் தனது ஆட்சியின் கீழ் கொண்டுவர நடவடிக்கை எடுத்தான். புவியியல் ரீதியாக அதன் அமைவிடம் அதி கஸ்டப் பிரதேசமாகக் காணப்பட்டது. இராசரட்டைக்கு எதிராகத் தான் மேற்கொள்ளப்போகும் போரின் போது எதிரிப் படைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையகப் பகுதிகளில் பாதுகாப்பாக ஒளிந்திருப்பதையும் அங்கிருந்து தாக்குதல் நடத்துவதையும் தடுப்பதே பராக்கிரமபாகுவின் நோக்கமாக இருந்திருக்கலாம். முன்னர் போலவே மலைநாட்டுப் பகுதிக்குப் பொறுப்பாக தண்டநாயக்க பதவியிலிருந்த ரக்க என்பவனை இலஞ்சம் கொடுத்து தன்பக்கம் வளைத்துக் கொண்டான். ரக்க என்பவன் கஜபாகு மன்னனின் பிரதேச நிர்வாக அதிகாரியாவான். அவன் யட்டகன்ட என அழைக்கப்பட்ட உடதும்பற பகுதியின் தென் பகுதிக்குப் பொறுப்பாளனாக இருந்தான். எனவே மலையகப் பகுதியைக் கைப்பற்றுவதில் ரக்க பராக்கிரமபாகுவுக்குப் பெரிதும் உதவினான். ரக்கவின் இராஜதுரோக செயற்பாட்டை அறிந்த கஜபாகு மன்னன் அவனுக்கு எதிராக பொலன்னறுவையிலிருந்து படையொன்றை அனுப்பி வைத்தான். அப்போது தக்கிண தேசத்திலிருந்து அவனுக்கு உதவிப் படையொன்றை பராக்கிரமபாகுவும் அனுப்பி வைத்தான். இவ்விரு படைகளும் மெதிவக எனுமிடத்தில் போரிட்டன. முடிவில் இராசரட்டை நிர்வாகத்தின் கீழிருந்த மலைநாட்டுப் பகுதி பராக்கிரமபாகுவின் ஆட்சியின் கீழ் வந்தது.

பராக்கிரமபாகுவின் அடுத்த திட்டம் இராசரட்டை மீது போர் தொடுப்பதாகும். அது அவனது தலைமைத்துவத்தின் கீழ் மிக அவதானத்துடன் திட்டமிடப்பட்டது. ஆயினும் அது அவசரமாக முடித்துக் கொள்ளக்கூடிய இலகுவான போராக அமையவில்லை. இப்போரில் ஒரு முறை கிடைத்த வெற்றி பின்னர் தோல்வியடைந்த சந்தர்ப்பங்கள் அதிகம். வடமேல் திசையிலிருந்தே இராசரட்டைக்கான முதலாவது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. அப்படையெடுப்புக்குப் பொறுப்பாக பராக்கிரமபாகுவின் தமிழர் படையின் கட்டளையிடும் அதிகாரி செயற்பட்டான். அவனது பெயர் மலயவராயன் என்பதாகும். அவன் முத்தாகர அல்லது முத்துபர எனுமிடத்தில் கடுந்தாக்குதலை மேற்கொண்டான். அவனுக்கு உதவியாக வந்த நகரகிரி மகிந்த எனும் தளபதி மல்வாலான எனும் பகுதியில் போரிட்டு உத்தரரட்ட எனும் பிரதேசத்தைக் கைப்பற்றினான். பிலவல எனுமிடத்தில் அவன் அமைத்த கோட்டையிலிருந்து வடமேல் கரையோரத்தை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தான். இராசரட்டையின் உள்ளே அமைந்திருந்த கஜபாகு மன்னனுக்குச் சொந்தமான மாலவல்லி எனும் கோட்டையையும் அவன் கைப்பற்றிக் கொண்டான். இதற்கிடையில் மொரவாவி பிரதேசத்திலிருந்து சென்ற பராக்கிரமபாகுவின் படை கலாவாவிப் பிரதேசத்தைக் கைப்பற்ற முயற்சித்த போதும் அது கைகூடவில்லை.

அதன் பின்னர் போர்க்களம் கிழக்குத் திசை நோக்கி இடம்பெயர்ந்தது. இராசரட்டை எல்லையில் உள்ள ஜனபத எனுமிடத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பராக்கிரமபாகுவின் படை வந்து சேர்ந்தது. இன்றைய மாத்தளையின் ரத்தொட்ட வீதியில் உள்ள போகம்பர (போதிகாமவர) எனுமிடத்தித்துக்கு அனுப்பப்பட்ட பராக்கிரமபாகுவின் படையணி லக்கல (லங்காகிரி) எனுமிடத்தை அடைந்தது. மேலும் அம்பவன, ஜனபத எனுமிடங்களைக் கடந்து சென்ற பராக்கிரமபாகுவின் படையணி மேலும் பலமடைந்தது. அதனை முறியடிக்கும் முகமாக கஜபாகு மன்னன் இரு முனைகளில் எதிர்த்தாக்குதலை மேற்கொண்டான். வடமேல் கரையோரத்தைப் பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்ட பிலவல கோட்டை கஜபாகுவின் அடுத்த இலக்காக அமைந்தது. ஜனபத எனுமிடத்தில் அமைத்த கோட்டையைப் பராக்கிரமபாகு பாதுகாத்துக் கொண்டான். எலஹர பிரதேசத்தில் எலகமுவ (ஆலிகாம) எனுமிடத்திலும் பராக்கிரமபாகு கோட்டை அமைத்தான். இங்கு இடம்பெற்ற கடும் போரில் கஜபாகுவின் படை தோல்வியடைந்தது. அதன் பின்னர் வடமேல் பிரதேசத்தில் கஜபாகு மன்னன் மேற்கொண்ட தாக்குதலைத் தடுப்பதற்கு, தளபதி ரக்க, வன்னி ஹத்பத்து பிரிவின் கிரிபா எனுமிடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டான் கலா ஓயாவைக் கடந்து அநுராதபுரம் நோக்கிச் செல்லுமாறு அவனது படைக்கு ஆணையிடப்பட்டிருந்தது. உத்தரரட்ட கோட்டைக்குப் பொறுப்பாக இருந்த நகரகிரி மகிந்தவின் படைக்கு வடக்கிலிருந்து அநுராதபுரத்தைத் தாக்குமாறு கட்டளை கிடைத்தது. அநுராதபுரத்தில் திசாவாவிக்கு அண்மையில் கஜபாகுவின் படைகளிடம் சிக்கிக் கொண்ட நகரகிரி மகிந்த நிர்க்கதியானான். அப்போது மலவராயன் தனது படைகளுடன் நகரகிரி மகிந்தவைப் பாதுகாப்பதற்காக மேற்குத் திசையிலிருந்து அநுராதபுரத்துக்கு வந்தான். தளபதி தேவ என்பவனும் தனது படைகளுடன் வந்து சேர்ந்தான். அநுராதபுரத்துக்கு அருகில் நடாத்திய பல போர்களின் பின்னர் நகரகிரி மகிந்த மீட்கப்பட்டான். அதன் பின்னர் அவன் மொரவெவ பிரதேசத்திலும் தளபதி தேவ அநூராதபுரத்துக்கண்மையில் சியாமகந்த குத்தால எனுமிடத்திலும் முகாமிட்டிருந்தனர். ஆயினும் கஜபாகு மன்னன் அநுராதபுரத்தைத் தனது கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டான்.

இப்போது போர்க்களம் வேறு திசை நோக்கித் திரும்பியது. பராக்கிரமபாகு தனது படையணியைப் பொலன்னறுவை நோக்கித் திருப்பினான். அதற்காக அவன் தனது தலைமையகமாக நாலந்தவைத் தெரிவு செய்தான். எலஹர பிரதேசத்தையும் பராக்கிரமபாகுவின் படை தன் வசப்படுத்தியது. இதற்கு சற்று முற்பட்ட காலத்திலேதான் கஜபாகு மன்னன் உருகுணையின் ஆட்சியாளனான சிறிவல்லபனின் மகன் மானாபரணவுடன் நட்புறவு ஒப்பந்தமொன்றைக் கைச்சாத்திட்டிருந்தான். அதன்படி பராக்கிரமபாகுவின் படைகளுக்கு எதிராக மானாபரணவின் படைகள் கஜபாகு மன்னனுக்குப் பல தடவைகள் உதவி புரிந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயினும் வெற்றிவாய்ப்பு பராக்கிரமபாகு பக்கமிருப்பதை அறிந்த மானாபரண ஒப்பந்தத்தை மீறி, பராக்கிரமபாகுவுக்கு உதவியளிப்பதாக வாக்குறுதியளித்தான். எனவே பராக்கிரமபாகுவின் படைகள் முன்னால் சென்று பொலன்னறுவையைத் தாக்கிய போது மானாபரணனின் படை பின்னாலிருந்து தாக்குதலை மேற்கொண்டது. மானாபரண இப்போது மகியங்கணை சொரபொர(சோபர) எனுமிடத்தில் முகாமிட்டு இருந்தான். மேற்கிலிருந்து பொலன்னறுவை மீது தொடுக்கப்படும் தாக்குதலைத் தடுப்பதற்குச் சுதுகந்தையில் அமைந்திருந்த பண்டிகாம கணவாயைப் பாதுகாப்பது மிக முக்கியமான செயற்பாடாயமைந்தது. அதற்காக கஜபாகுவின் படைகள் மேற்கொண்ட முயற்சிகள் யாவும் பயனற்றுப் போயின. அக் கணவாயைக் கடந்து பராக்கிரமபாகுவின் படைகள் பொலன்னறுவையில் பிரவேசித்தன. தோல்வியடைந்த கஜபாகுவின் படையினர் சிதறுண்டு ஓடினர். மன்னனோ கோட்டையினுள் பதுங்கிக் கொண்டான். பின்னர் பராக்கிரமபாகுவின் படைகளால் கைது செய்யப்பட்ட கஜபாகு மன்னன் அவனது மாளிகையிலே சிறை வைக்கப்பட்டான்.

இவ்வாறு பராக்கிரமபாகு அடைந்த வெற்றி தலைகீழாக மாறியது. ஏனெனில் சிறைக் கைதியான கஜபாகு மன்னனுக்கு காணிக்கைகளையும் புத்தாடைகளையும் அனுப்பி வைத்த பராக்கிரமபாகு ஒரு மன்னனுக்குரிய சகல கௌரவங்களையும் கஜபாகுவுக்கு வழங்குமாறு தனது படையினருக்குக் கட்டளையிட்டிருந்தான். அவ்வேளை பராக்கிரமபாகு மன்னன் நாலந்த முகாமில் தங்கியிருந்தான். வெற்றிக் களிப்பில் மிதந்த அவனது படை வீரர்கள் பொலன்னறுவையில் அட்டகாசம் புரிந்தனர். அவர்கள் பொது மக்களின் வீடுகளைக் கொள்ளையடித்தனர். அவர்களிடமிருந்த பெறுமதியான பொருள்களையும் கவர்ந்து கொண்டனர். அத்துடன் கஜபாகு உயிருடன் இருக்கும் வரை பொலன்னறுவை மக்கள் தமக்கு அடிபணிய மாட்டார்கள் என்றும் எனவே கஜபாகுவைக் கொலை செய்ய வேண்டும் என்றும் பொலன்னறுவையிலிருந்த படை வீரபராக்கிரமபாகுவுக்கு செய்தி அனுப்பினர். அப்போது தலையிட்ட பௌத்த பிக்குகள் வயதான கஜபாகு மன்னனுக்கு சகோதரர்களோ பிள்ளைகளோ இல்லாதபடியால் அடுத்த அரசனாகப் பராக்கிரமபாகு முடிசூடுவதற்கு எவ்விதத் தடைகளுமில்லை எனக் கூறி இருவரையும் சமரசம் செய்து வைத்தனர். இவ்வொப்பந்தம் மெதிரிகிரிய விகாரையில் கல்வெட்டாகப் பொறிக்கப்பட்டதாக வம்சக் கதைகள் கூறுகின்றன. அக்கல்வெட்டு கிடைக்காத போதிலும் அதன் பிரதி ஆவணமொன்று குருணாகல் மாவட்ட சங்கமு விகாரையில் கிடைக்கப் பெற்றுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் யாதெனில் '' கஜபாகு - பராக்கிரமபாகு எனும் மைத்துனர் உறவுள்ள மன்னர்கள் ஒருவருக்கொருவர் எதிரிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லர், ஒருவர் மரணித்தால் அடுத்தவருக்கு அவரது இராச்சியம் உரித்தாகும்." என்பதாகும்.

கஜபாகு மன்னன் காலமான பின்னர் அவனது அமைச்சர்கள் மேற்படி ஒப்பந்தத்தை மதிக்காது உருகுணையின் ஆட்சியாளனான மானாபரணனை இராசரட்டையின் அரச பொறுப்பை ஏற்குமாறு அழைப்பு விடுத்தனர். அதனை ஏற்றுக் கொண்டு மானாபரண தனது படையினருடன் பொலன்னறுவை செல்லும் வழியில் கொடசர (கொட்டியாறு) எனுமிடத்தில் முகாமிட்டிருந்தான். அதற்கிடையில் பராக்கிரமபாகுவின் படையினர் பொலன்னறுவையைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து பராக்கிரமபாகுவை இராசரட்டை மன்னனாக்கி முடிசூட்டு விழாவை நடத்தினர். அதனையடுத்து பராக்கிரமபாகு மன்னன் உருகுணையிலிருந்து மானாபரணனின் படைகள் இராசரட்டைக்குள் பிரவேசிக்காத வண்ணம் மகாவலிகங்கைக் கரை வழியே உள்ள ஓடத் துறைகளிலெல்லாம் படையினரைக் குவித்துப் பாதுகாத்தான். மகாவலி கங்கையைக் கடந்து மானாபரணவின் படைகள் இராசரட்டையினுள் பிரவேசிக்கும் முயற்சிகள் யாவும் தோல்வியடைந்தன. இதற்கிடையில் தனது படையொன்றை பஸ்துன்ரட்ட ஊடாக உருகுணைக்கு அனுப்பி மானாபரணனின் படைமீது பராக்கிரமபாகு மன்னன் தாக்குதலை மேற்கொண்டான். அவிசாவளைக்கு அருகில் மானியன்கம (மகாநியாம), பஸ்துன் கோறளையில் (பஞ்சயோஜன), உருகுணையின் நவதுன் கோறளை (நவயோஜனரட்ட) எனுமிடங்களில் முகாமிட்டிருந்த பராக்கிரமபாகுவின் தளபதிகள் தமது படைகளுடன் அவ்வப் பிரதேசங்களைக் கைப்பற்றிய வண்ணம் குகுல், அட்டகலன், கொலன்ன, மொரவக்க கோறளைப் பகுதிகளைக் கடந்து நில்வளா கங்கைக் கரையூடாக தென்பகுதி நோக்கிச் சென்று அகுரஸ்ஸவுக்கு அண்மையில் உருகுணைப் படையினருடன் கடுஞ்சமரில் ஈடுபட்டனர். அதனைத் தொடர்ந்து பராக்கிரமபாகுவின் படையினர் நில்வளாகங்கையைக் கடந்து சென்றனர். அவர்களுக்கு முகங்கொடுப்பதற்காக மகாவலிகங்கைக் கரையிலிருந்த படையினரில் ஒரு பகுதியை நில்வளா கங்கை பகுதிக்கு மானாபரண அனுப்பி வைத்தான்.

இப்போது மானாபரணனுடன் மன்னன் நடாத்திய போர் வேறு திசை நோக்கித் திரும்பியது. அதாவது மகாவலி கங்கைக் கரையில் நடைபெற்ற போரில் பராக்கிரமபாகுவின் தளபதிகளுள் ஒருவனான ரக்க, மானாபரணனின் படையினரால் கொல்லப்பட்டான். அதே பிரதேசத்தில் வைத்து பராக்கிரமபாகுவின் மற்றுமொரு தளபதியான தேவ என்பவன் மானாபரணனின் தளபதியான மகிந்த இளவரசானால் தோற்கடிக்கப்பட்டான். பராக்கிரமபாகுவால் மகாவலி கங்கை எல்லையில் அமைக்கப்பட்ட பாதுகாப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலையமைப்பு இவ்வாறு சிதைவுற்றமையால் பராக்கிரமபாகு மன்னனின் நிலை கவலைக்கிடமானது. ஏனெனில் இராசரட்டை மக்கள் மானாபரணனின் வெற்றியால் பெருமிதமடைந்தனர். எனவே தனது படைகளுடன் பராக்கிரமபாகு தம்புள, நாவுல பிரதேசங்களைத் தாண்டி தக்கிண தேசத்துக்குப் பின்வாங்கினான். இதற்கிடையில் மானாபரண பொலன்னறுவையைக் கைப்பற்றிக்கொண்டான். அவனுடைய படைகள் பொலன்னறுவையிலிருந்து கிரிதலை நோக்கிச் சென்றது. பராக்கிரமபாகு தனது படையினரை தக்கிணதேச தலைநகரான பராக்கிரமபுரம் வரையிலும் தேவையேற்படின் களனி வரையிலும் பின்வாங்குமாறு ஆலோசனை வழங்கினான்.

தோல்வி காரணமாகப் பின்னடையாத பராக்கிரமபாகு மன்னன் நாலந்தையில் முகாமிட்டு படைதிரட்டும் முயற்சியில் ஈடுபட்டான். அவ்வாறு திரட்டப்பட்ட பலம் வாய்ந்த படையினர் ஜனபத, கலாவெவ ஆகிய பகுதிகளுக்குள் பிரவேசித்தனர். கலாவெவ பகுதிக்குப் பொறுப்பான தளபதி தனது படையில் ஒரு பகுதியினரை அநுராதபுரத்துக்கு அனுப்பி வைத்தான். இப்போது மானாபரணனும் மகிந்த இளவரசனின் தலைமையில் ஒரு படையை அநுராதபுரத்துக்கு அனுப்பி வைத்தான், இப்படையினர் மகாரட்ட எனுமிடத்தில் வைத்துப் பராக்கிரமபாகுவின் படையைத் தோல்வியடையச் செய்தனர். அடுத்து கலாவெவ பகுதிக்கு வந்த மானாபரணனின் படையினரை பராக்கிரமபாகுவின் படையினர் தோல்வியடையச் செய்தனர்.

அதனைத் தொடர்ந்து போர்க்களப் பாதை பொலன்னறுவை நோக்கித் திரும்பியது. பராக்கிரமபாகுவின் படை பொலன்னறுவை நகரை சுற்றி வளைத்தது. அங்கு இடம் பெற்ற கடுமையான போரின் பின்னர் பொலன்னறுவையைப் பராக்கிரமபாகு மீண்டும் கைப்பற்றினான். மானாபரணன் உருகுணு ரட்டைக்கு தோற்றோடினான். அவனது மகன் ஸ்ரீவல்லப இளவரசன் கைது செய்யப்பட்டான். மானாபரணனின் போராதயுங்களும் சொத்துக்களும் பராக்கிரமபாகு வசமாயின. உருகுணைக்குச் சென்ற மானாபரண சிறிது நாட்களில் காலமானான். இராசரட்டையை முழுமையாகக் கைப்பற்றிய பராக்கிரமபாகு 1153ம் ஆண்டு இரண்டாவது தடவையாகவும் மன்னனாக முடிக் கொண்டான். முதலாவது முடிசூடல் இராசரட்டைக்கு அரசனாகவும் இரண்டாவது முடிசூடல் முழு இலங்கைக்குமான மாமன்னனாகவும் அவனை ஆக்கின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உருகுணை கிளர்ச்சியை அடக்குதல்

முழு இலங்கைக்குமான மன்னனாக முடிசூடிக் கொண்ட பின்னரும் பராக்கிரமபாகு மன்னன் தனது முழு நாட்டுக்குமான ஆதிக்கத்திற்காக மற்றுமொரு போராட்டத்தில் ஈடுபட நேர்ந்தது. அதாவது உருகுணை இராச்சியத்தில் மாணாபரனவின் மறைவின் பின்னர் அவனின் தாயான சுகலா தேவியின் தலைமையில் பராக்கிரமபாகுவிற்கு எதிரானதொரு கிளர்ச்சி ஏற்பட்டது. மானாபரணனால் உருகுணைக்குக் கொண்டுசெல்லப்பட்ட புனித தந்ததாதுவும் புனித பாத்திரதாதுக்களும் சுகலாதேவி வசமிருந்தன. அவற்றை பொலன்னறுவைக்குக் கொண்டு செல்ல வேண்டிய அவசியம் பராக்கிரமபாகுவுக்கு இருந்தது. ஏனெனில் அவை இலங்கை அரசுரிமையின் சின்னங்களாகும். எனவே இப்புனித வஸ்த்துக்கள் தன் வசம் இல்லாமை பராக்கிரமபாகுவுக்குப் பெருங் குறைபாடாகத் தெரிந்தது. ஆகவே அவன், அவற்றைப் பெற்றுக்கொள்வதற்காக உருகுணையை ஆக்கிரமிக்க வேண்டியேற்பட்டது.

இதற்கிடையில் பராக்கிரமபாகு மன்னனுக்கு எதிராக இராசரட்டையிலே ஒரு கிளர்ச்சி ஏற்பட்டது. கொட்டசார எனுமிடத்தில் பாதுகாப்புக்காக வைக்கப்பட்டிருந்த சிங்கள படையினரும் சேரநாட்டு கூலிப்படையினரும் வேளைக்காரன் படையினரும் ஒன்றிணைந்து மன்னனுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தனர். அக்கிளர்ச்சியை அவசரமாக முடிவுக்குக் கொண்டு வந்த மன்னன் கிளர்ச்சித் தலைவர்களைக் கொலை செய்தான். உருகுணையில் ஏற்பட்ட கிளர்ச்சியை அடக்குவதற்காக அனுப்பப்பட்ட ரக்க எனும் தளபதி அங்கு கடுமையான எதிர்ப்புக்கு முகங்கொடுக்க வேண்டியேற்பட்டது. எனவே அதிகாரி பூத என்பவனின் தலைமையில் உடனடியாக ஓர் உதவிப் படையை மன்னன் அனுப்பி வைத்தான். அவ்விரு தலைவர்களும் தமது படைகளுடன் பிபிலைப் பகுதியை அடைந்தனர். பிபிலை - மொனராகல வீதியில் அமைந்திருக்கும் மெதகம, கட்டுஸலல்ல முதலிய இடங்களில் நடைபெற்ற போர்களை வெற்றி கொண்ட தளபதியினர் சுகலாதேவியின் வாசஸ்தலம் அமைந்துள்ள உதுன்தொர (உத்தனத்துவார) எனுமிடத்தை அடைந்தனர். அதற்கிடையில் தந்த தாது, பாத்திர தாதுக்களை எடுத்துக் கொண்டு சுகலாதேவி மொனராகலைக்கு எட்டு மைல் தொலைவில் தென்கிழக்காக அமைந்துள்ள எத்தி மலை (உறுவெலா) எனுமிடத்தில் தலைமறைவானாள். அப்போது திகாமடுல்ல பிரதேசத்திலிருந்த பராக்கிரமபாகுவின் படையினரும் உதுன்தொரவை வந்தடைந்தனர். இறுதியில் உறுவெலவைச் சுற்றி வளைத்த பராக்கிரமபாகுவின் படையினர் புனித தந்தம் மற்றும் பாத்திரங்களைக் கைப்பற்றிக் கொண்ட போதிலும் சுகலாதேவி அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையில் சிக்காமல் தப்பிச் சென்றாள். எனவே உருகுணைக் கிளர்ச்சி அத்துடன் முற்றுப் பெறவில்லை.

முன்னொருபோது கைது செய்யப்பட்டிருந்த மானாபரணனின் படை வீரனான சூகரபாதுதேவ என்பவன் பொலன்னறுவை சிறையிலிருந்து தப்பி உருகுணையை அடைந்தான். அது முதல் அவனது தலைமையில் பராக்கிரம பாகுவுக்கு எதிராக உருகுணையில் கிளர்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ரக்க, பூத, கித்தி எனும் பராக்கிரமபாகுவின் தளபதிகளின் கீழ் கிளர்ச்சியாளருக்கெதிரான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அச்சமயம் மொனராகலைக்கு மேற்கேயுள்ள 'ஹத்த சூப' எனுமிடத்தில் பாரிய மோதல் இடம் பெற்றது. அடுத்து போர்க்களம் மகாகம (திஸ்ஸமகாராம) பகுதி நோக்கி நகர்ந்தது. அவ்வேளை புனித தந்ததாதுவை தனக்கனுப்புமாறு பராக்கிரமபாகு செய்தியனுப்பினான் எனவே பலமான எதிர்ப்புக்கு மத்தியில் அப்புனித தந்ததாது பொலன்னறுவைக்கு எடுத்து வரப்பட்டது. அதனைப் பெற்றுக் கொண்ட பராக்கிரமபாகு பொலன்னறுவை தலதா மாளிகையில் அதனைப் பிரதிஷ்டை செய்தான்.

உருகுணைக் கிளர்ச்சி மேலும் தீவிரமடைந்தது. அவ்வாறு கிளர்ச்சி பரவியிருந்த திகாமடுல்ல பிரதேசத்தை மீட்பதற்காக பராக்கிரமபாகுவின் படைகள் கடுமையான மோதலில் ஈடுபட வேண்டியிருந்தது. மீட்கப்பட்ட பிரதேசங்களிலிருந்து படைகள் சென்ற பின்னர் மீண்டும் அப்பிரதேசங்களில் கலகம் ஏற்பட்டது. அவற்றை அடக்குவது கடினமான காரியமாயமைந்தது. உருகுணையின் கிழக்கு (அட்டதஹஸ்ரட்ட) பிரதேசத்தில் இவ்வாறு கிளர்ச்சிகள் தொடரும்போது உருகுணையின் தொலஸ்தஹஸ்ரட்ட பிரதேசத்தின் மையமான மகாநாககுலவுக்கு தக்கிண தேசத்தின் ஊடாக ஒரு படையை அனுப்புவதற்குப் பராக்கிரமபாகு தீர்மானித்தான். அதன்படி கஞ்சுகிநாயகரக்க என்பவனின் படை மேற்குக் கரையூடாகவும் தமிழதிகாரி ரக்க தலைமையிலான படை மலையகம் ஊடாகவும் மாத்தறையை அடைந்தன. கஞ்சுகிநாயகரக்கவின் படை கிந்தோட்டை (கிம்ஹதித்த) எனுமிடத்தை அடைந்தது. அங்கிருந்து எதிரிகளைத் தாக்கிய வண்ணம் பலான, கம்புறுகமுவ, தெவுந்தர முதலிய இடங்களைத் தாண்டி நில்வளா கங்கையையும் கடந்து அகுரஸ்ஸ எனுமிடத்தை அடைந்தது. தமிழதிகாரி ரக்கவின் படைகளும் இறுதியில் மகாநாககுலவை வெற்றி கொண்டு அங்கு வந்து சேர்ந்தது.

இவ்வாறு மகாநாககுலவைத் தம் மத்திய நிலையமாக அமைத்துக் கொண்ட மேற்கூறிய தளபதியர் இருவரும் அங்கிருந்த வண்ணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பேகமுவ, மாகம எனுமிடங்களிலிருந்த எதிரிகளின் படை முகாம்களை வீழ்த்தினர். மாகமையில் இடம்பெற்ற போரின்போது சூகரபாதுதேவ உயிர் இழந்தான். இறுதியில் தொலஸ்தஹஸ் ரட்ட'வை கிளர்ச்சியாளரிடமிருந்து தமிழதிகாரி ரக்க மீட்டெடுத்தான். அங்கிருந்து மகாநாககுலவுக்குக் கொண்டு செல்லப்பட்ட கைதிகளுக்குக் கடுந்தண்டனை வழங்கப்பட்டதாகவும் தெரிய வருகின்றது.

சுகலா அரசியைக் கைது செய்வதே இப்போது எஞ்சியிருந்த காரியமாகும். எனவே அவளைப் பின் தொடர்ந்து சென்ற பராக்கிரமபாகுவின் படையினர் தொம்பகஹவெல எனுமிடத்திற்கருகே அமைந்திருந்த பெத்தேகமவில் மேற்கொண்ட கடும்போரின் பின்னர் சுகலா தேவியையும் அவள் குழுவினரையும் கைதுசெய்தனர். தப்பியோடிய அவளது ஆதரவாளர்களையும் உதுன்தொர எனுமிடத்தில் கைதுசெய்து அவர்களை இம்சைப்படுத்திக் கொலை செய்ததாகக் கூறப்படுகிறது.

பராக்கிரமபாகு மன்னன் உருகுணைப் பிரதேசத்தின் தேவையான இடங்களில் முகாமைத்து உரிய அரச அதிகாரிகளையும் நியமித்து அப்பகுதியின் அரசியல் நிலைப்பாட்டை உறுதிப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டான். உருகுணையின் முழுமையான அரசியல் நிர்வாக அதிகாரம் பூத அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டது. ஏனைய வீரர்கள் சுகலா தேவியையும் கைதிகளையும் அழைத்துக்கொண்டு பொலன்னறுவையை அடைந்தனர். பராக்கிரமபாகுவின் எட்டாவது ஆட்சி வருடத்தில் (1161) மீண்டும் ஒரு முறை உருகுணையில் கிளர்ச்சி ஏற்பட்டதாகவும் குறிப்பிடப்படுகின்றது. அதனை முன்னைய கிளர்ச்சிகளை விட அவசரமாக மன்னன் முறியடித்ததாகவும் தெரிய வருகின்றது. எனவே உருகுணை மக்கள் தாம் பராக்கிரமபாகுவின் ஆட்சியின் கீழ் வருவதை விரும்பாத நிலையில் இருந்துள்ளமை தெளிவாகின்றது.

## ராமஞ்ஞதேசம் (தென் பர்மா) ஆக்கிரமிப்பு

பொலன்னறுவையில் அரசனாக முடிசூடிக் கொண்ட நாள் முதலாக பராக்கிரமபாகு மன்னன் நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்காகப் பல்வேறு நடவடிக்கைகளையும் மேற்கொண்டான். இக்கால கட்டத்தில் இலங்கைக்கும் பர்மாவுக்குமிடையில் நடைபெற்ற வர்த்தக நடவடிக்கைகளுக்கு பர்மாவில் ஏற்பட்ட தடை காரணமாக இரு நாடுகளுக்கிடையேயும் நிலவி வந்த சுமுக உறவு குலைந்தது. எனவே ராமஞ்ஞ தேசம் அல்லது அறமன தேசம் என அழைக்கப்பட்ட பர்மாவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென் பகுதியை ஆக்கிரமிக்க வேண்டிய நிலை பராக்கிரமபாகு மன்னனுக்கு ஏற்பட்டது. அவனது பதினோராவது அல்லது பன்னிரண்டாவது (1164 - 1165) ஆட்சியாண்டிலே இது நிகழ்ந்துள்ளது. இவ்வாக்கிரமிப்புக்கான சில காரணங்கள் வம்சக்கதை நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. இங்கிருந்து ராமஞ்ஞுதேசம் சென்ற தூதுவன் ஒருவன் கூறியதை நம்பிய அளவுங்சிது எனும் அந்நாட்டு அரசன் இலங்கையிலிருந்து சென்ற யானை வர்த்தகர்களை ராமஞ்ஞுதேசத்தில் வைத்து துன்புறுத்தியமையே ஆக்கிரமிப்புக்கான பிரதான காரணமாகும். அதுவரை காலமும் இலங்கையிலிருந்து செல்லும் கப்பல்களுக்கு ஒரு யானை வீதம் பரிசளிப்பது ராமஞ்ஞு தேச மன்னனின் மரபாகும். அம் மரபை மீறியதுடன் இம்மன்னன் இலங்கைக் கப்பல்களுக்கு ஏற்றப்பட்ட யானைகளின் விலையையும் இரண்டு, மூன்று மடங்காக அதிகரித்துள்ளான். மேலும் இலங்கைக் கப்பல்கள் பர்மியத் துறைமுகத்துக்கு வருவதையும் தடை செய்துள்ளான். மற்றொரு சமயம் இம்மன்னன் இலங்கையிலிருந்து அங்கு சென்ற கலாசார அதிகாரிகளை அவமானப்படுத்தி அவர்களை உடைந்த கப்பலொன்றில் ஏற்றி இலங்கைக்கு அனுப்பியுள்ளான். மேலும் பராக்கிரமபாகு மன்னனால் கம்போடியாவுக்கு அனுப்பப்பட்ட அரச குமாரியையும் தூதுக் குழுவினரையும் ராமஞ்ஞு தேசத்தில் வைத்து அம்மன்னன் கைது செய்ததாகவும் குறிப்பிடப்படுகின்றது. எனவே பராக்கிரமபாகு மன்னன் உடனடியாக ராமஞ்ஞு தேசத்தை ஆக்கிரமித்தான்.

இவ்வாக்கிரமிப்பு ஐந்து மாத காலம் ஆயத்தம் செய்யப்பட்டமை தெரிய வருகின்றது. திருகோணமலைக்கு அண்மையில் கப்பல்கள், ஆயுதங்கள், வைத்திய வசதிகள் என்பன முன்னாயத்தம் செய்யப்பட்டுள்ளன. தமிழதிகாரி ஆதிச்ச மற்றும் கித்த நகரகிரி எனும் இரு தளபதியினரின் கீழ் தயாரான கடற்படை குச்சவெளிக்கு வடக்கே அமைந்துள்ளதும் இன்று பல்வக்கி எனப்படும் பல்லவங்க துறைமுகத்திலிருந்து புறப்பட்டது. இடையில் பல தடைகளுக்கும் முகங்கொடுத்த பாரிய கப்பற் படையில் ஒரு சில கப்பல்களே பாதுகாப்பாக ராமஞ்ஞு தேசத்தை அடைந்துள்ளன. தமிழதிகாரி ஆதிச்ச தலைமையிலான படையணி பதாலம் எனும் துறைமுகத்தில் தரையிறங்கி உக்கம எனும் நகரைக் கைப்பற்றி அங்கு வைத்து அளவுங்சிது மன்னனைக் கொலை செய்ததாக வம்சக் கதைகள் கூறுகின்றன. ஆயினும் இது பர்மிய வம்சக் கதைகளில் கூறப்படவில்லை. ஐந்து கப்பல்களுக்குத் தலைமையேற்றுச் சென்ற தளபதி நகரகிரி கித்தி, குசுமிய அல்லது குசும் துறைமுகத்தில் தரையிறங்கி இப்பிரதேசத்தை ஆக்கிரமித்து பர்மியப் படைகளை தோற்கடித்ததாக வம்சக் கதைகள் கூறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சந்தர்ப்பத்தில் அங்கு வாழ்ந்த பௌத்த பிக்குகள் தலையிட்டு போரினை நிறுத்தி இரு நாடுகளுக்கிமிடையே முன்பிருந்த சுமுக நிலையை ஏற்படுத்தியுள்ளனர்.

இந்த வரலாற்றுப் பெருமை மிக்க நிகழ்வை உறுதி செய்யும் கல்வெட்டொன்று கேகாலை மாவட்டத்தில் உள்ள தெவனகல எனுமிடத்தில் கிடைக்கப்பெற்றுள்ளது. பூர்வாங்க ஆக்கிரமிப்பை மேற்கொண்டு நாடு திரும்பிய நகரகிரி கித்தி அல்லது நுவரகல செனவி எனும் படைத் தளபதி பர்மிய ஆக்கிரமிப்பின்போது ஆற்றிய பணிக்காக மன்னனால் வழங்கப்பட்ட நிலபுலன்கள் பற்றி இக்கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது. இது பராக்கிரமபாகு மன்னனின் பன்னிரண்டாவது (1164) ஆட்சி வருடத்திற்குரிய ஆவணமாகும்.

## பாண்டிய நாட்டை ஆக்கிரமித்தல்

இலங்கைக்கு மிகவும் அண்மையில் தென்னிந்தியாவில் அமைந்திருந்த பாண்டிய நாடும் பராக்கிரமபாகு மன்னனால் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டது. இக் காலகட்டமளவில் ஏற்கனவே இலங்கையை ஆக்கிரமித்த சோழப் பேரரசு வீழ்ச்சியடைந்திருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும். பாண்டிய நாட்டில் ஏற்பட்ட சிம்மாசன உரிமைப் போராட்டமே பராக்கிரமபாகுவை தென்னிந்திய அரசியலிலும் தலையிட வைத்தது. அது மன்னனின் 16 ஆவது ஆட்சி வருடத்தில் (1169) இடம் பெற்றது. அச்சமயம் பாண்டியநாட்டு அரசனான பராக்கிரம பாண்டியன் என்பவனை சோழர்களின் உதவியைப் பெற்ற குலசேகரன் என்பவன் பதவி கவிழ்த்திருந்தான். எனவே பராக்கிரம பாண்டியன் இலங்கை மன்னனிடம் உதவி கோரினான். இறுதியில் பாண்டிய நாட்டில் வைத்து சிங்களப் படையினரும் சோழப் படையினரும் மோதிக் கொண்டனர்.

பராக்கிரமபாகுவின் படையினர் மகாதித்த துறை முகத்தில் கப்பலேறுவதற்கு தயாராயிருந்தபோது குலசேகரன், பராக்கிரம பாண்டியனையும் அவனது குடும்பத்தையும் கொன்றொழித்து தலைநகரான மதுரையைக் கைப்பற்றியிருந்தான். என்றாலும் குலசேகரனைப் பதவியிறக்கி பராக்கிரம பாண்டியனின் உறவினன் ஒருவனை அரசனாக முடிசூட்டுவிக்குமாறு லங்காபுர, ஜகத் விஜய எனும் இரு தளபதியினருக்கும் பராக்கிரமபாகு கட்டளையிட்டான்.

இலங்கையிலிருந்து 24 மணித்தியாலம் கடற் பயணம் மேற்கொண்ட சிங்களப் படையினர் பாண்டிய நாட்டுக் கரையோரத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தள்ளடி எனுமிடத்தில் கரையிறங்கினர். அங்கு கடுமையாகப் போரிட்ட இலங்காபுர எனும் தளபதி இராமேஸ்வரம் மற்றும் அங்கிருந்து சற்றுத் தூரத்தில் அமைந்திருந்த குந்துகால எனுமிடங்களில் முகாமிட்டிருந்தான். அப்பகுதியை அவன் பராக்கிரமபுரம் எனப் பெயரிட்டதாகவும் வம்சக் கதைகள் கூறுகின்றன. அப்போது கைதிகளாகப் பிடித்த சோழர்களைத் தளபதி இலங்கைக்கு அனுப்பியுள்ளான். சோழராட்சியின் போது சீரழிவுக்குற்பட்ட ருவன்வெலிசாய முதலிய விகாரைகளைப் புனரமைப்புச் செய்யவே அவர்களை அனுப்பியதாகவும் வம்சக் கதைகள் குறிப்பிடுகின்றன. அங்கிருந்து அவர்கள் மேற்கொண்ட மிக நீண்ட போர்களைப் பற்றி விபரிப்பது தேவையற்றதாகும். வெற்றி, தோல்வி இரண்டுக்கும் முகங்கொடுத்த லங்காபுர மற்றும் ஜகத் விஜய தலைமையிலான படையினர் பல இடங்களைக் கைப்பற்றி இறுதியில் மதுரையையும் கைப்பற்றினர். சில தமிழ்த் தலைவர்கள் இலங்காபுரவின் படையணியில் சேர்ந்துள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது. அதன் பின்னர் சேர நாட்டிலிருந்த பராக்கிரம பாண்டிய மன்னனின் மகனான வீர பாண்டியனை அழைத்து வந்து பராக்கிரமபாகு அன்பளிப்பாக அனுப்பி வைத்த ஆடையணிகள் மற்றும் பொன், வெள்ளி, முத்து முதலிய பெறுமதி வாய்ந்த பொருட்களைப் பரிசளித்து பராக்கிரமபாகுவின் பிரதிநிதியாக வீரபாண்டியனை பாண்டிய நாட்டுக்கு மன்னனாக முடிசூட்டினர்.

பாண்டிய நாட்டு ஆக்கிரமிப்புப் பற்றி மதுரை வெற்றி வரையே வம்சக் கதைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஆக்கிரமிப்புக்கு மூன்று வருடகாலம் செலவாகியுள்ளது. மேலும் இலங்காபுர, மற்றும் ஜகத் விஜய ஆகிய தளபதிகளுக்கும் வீர பாண்டிய மன்னனுக்கும் என்ன நிகழ்ந்தது? என்பது பற்றிய விடயங்கள் வம்சக் கதைகளில் இல்லை. மதுரை வெற்றியின் பின்னர் இடம்பெற்ற ஒரு போரில் தோல்வியடைந்த இலங்காபுர, ஜகத் விஜய எனுமிரு சிங்களத் தளபதியினரினதும் தலைகள் மதுரை மாநகர வாயிலிலே ஆணி வைத்து அறையப்பட்டிருந்ததாகக் கல்வெட்டுக்கள் மூலம் தெரிய வருகின்றது. 1171 முதல் 1186 வரை அதாவது பராக்கிரமபாகு மன்னனின் மரணம் வரை சிங்களப் படையினருக்கும் சோழப் படையினருக்கும் நீண்ட காலமாகவே யுத்தங்கள் இடம் பெற்றதாக தென்னிந்தியக் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. இதிலிருந்து தெளிவாகும் உண்மை யாதெனில் மதுரையில் சிம்மாசனமேறிய அரசனுடன் தொடர்பு வைத்துக்கொள்வதற்கு இலங்காபுர அவசரப்பட்டமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பராக்கிரமபாகுவின் பின்னர்

முதலாம் பராக்கிரமபாகு மன்னனுக்கு மகன் ஒருவன் இல்லாத காரணத்தால் அவனுக்குப் பின்னர் அவனின் சகோதரியின் மகனான இரண்டாம் விஜயபாகு (1186 - 1187) முடிசூடினான். அவன் முடிசூடி ஓராண்டுக்குள் அரச மாளிகையில் இடம் பெற்ற சூழ்ச்சி காரணமாக கொலை செய்யப்பட்டுள்ளான். அடுத்து கலிங்க நாட்டிலிருந்து வந்த நிஸ்ஸங்கமல்ல 1187 இல் பொலன்னறுவை மன்னனாக முடிசூடினான்.

## நிஸ்ஸங்கமல்ல மன்னன் (1187 - 1196)

பொலன்னறுவை, தம்புளை, பண்டுவஸ்நுவர, அம்பாந்தோட்டை முதலிய இடங்களில் நிஸ்ஸங்கமல்ல மன்னனின் பல கல்வெட்டுக்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. அவற்றுள் அடங்கியுள்ள விடயங்கள் இம்மன்னனைப் பற்றிக் கற்பதற்குப் பெரிதும் உதவுகின்றன. தான் சொன்னவற்றையும் செய்தவற்றையும் புகழடையச் செய்வதில் மன்னன் அதிக அக்கறை காட்டியுள்ளமை இக்கல்வெட்டுக்கள் மூலம் வெளிப்பட்ட போதிலும் அவ்வாறான சந்தர்ப்பங்களை இலகுவாக அடையாளம் காண முடிகின்றது. இம்மன்னனைப் பற்றி வம்சக்கதைகளில் மிகச் சொற்பமாகவே சொல்லப்பட்டுள்ளது.

கலிங்க வம்சம் இலங்கையில் சிம்மாசனம் ஏறியதைப் பொறுத்துக் கொள்ள முடியாத ஒரு குழுவினரும் அக்காலத்தில் இருந்துள்ளதை கல்வெட்டுக்களில் காணப்படும் வாசகங்கள் தெளிவுப்படுத்துகின்றன. இலங்கையின் முதலாவது மன்னனான விஜயன் முதற் கொண்டே இலங்கையின் அரசுரிமை கலிங்கவம்சத்துக்குரியது என நிஸ்ஸங்கமல்லன் கூறி வந்தான். அரசாட்சியின் கௌரவம் சீரழிந்த போன காலகட்டத்தில் ஆட்சி பீடமேறும் மன்னன் மண்ணில் வாழும் தெய்வமாக மதிக்கப்படுவதற்கு இம்மன்னன் காரணங் காட்டினான். பௌத்தரல்லாத சேர, சோழ, இளவரசர்களை இலங்கை அரசர்களாக முடிசூட்டுவிக்கக் கூடாது என்று அவன் கூறிவந்தான். மேலும் இராசரட்டை மன்னர்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வந்த உருகுணைப் பிரதேசவாசிகளைக் கண்டிக்கும் தோரணையில் எச்சரிக்கை விடுத்தான். அவன் தெவுந்தரை, வெலிபட்டவில, வெளிகத்த, செல்லக் கதிர்காமம், கட்டுகஹகல்கே மெதவல, கொஸ்லாந்த எனும் இடங்களுக்கூடாக உருகுணைப் பிரதேசத்தில் பயணஞ்செய்ததாக தூரத்தைக் குறிக்கும் தூண் கல்வெட்டுக்கள் மூலம் தெரிய வருகின்றது. அரசியல் ரீதியாகப் பார்க்கும்போது நிஸ்ஸங்கமல்ல மன்னனால் தனது ஆட்சியை நாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுவதும் நிலைபெறச்செய்ய முடிந்துள்ளது. உருகுணை, மாயா, பிஹிட்டி ஆகிய மூன்று பிரதேசங்களிலும் அவனது கல்வெட்டுக்கள் காணப்பட்டமை அதற்கு சான்று பகர்கின்றது. அப்பிரதேசங்களில் மன்னன் பயணங்களை மேற் கொண்டுள்ளான். அத்துடன் அங்கு காணப்பட்ட பௌத்த வழிபாட்டுத் தலங்களையும் தரிசித்துள்ளதாக அக் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. கற்பனா சக்திமிக்க கருத்துக்கள் அவனின் கல்வெட்டுக்களில் காணப்பட்ட போதிலும் நாட்டு மக்களுக்கு அவன் பல்வேறு அன்பளிப்புகளையும் வழங்கியுள்ளான். அத்தகைய செயற்பாடுகளில் ஒன்றே அவனது துலாபார தானம் ஆகும் எப்படியோ நாட்டு மக்களின் மனதை வெல்வதற்கான எல்லா நடவடிக்கைகளிலும் அவன் ஈடுபட்டான்.

பௌத்த சமயத்துக்கு நிஸ்ஸங்கமல்ல மன்னன் இடையறாத அனுசரணை வழங்கினான். அவன் பொலன்னறுவையில் தலதா மாளிகை ஒன்று அமைத்ததாக வம்சக் கதைகள் குறிப்பிடுகின்றன. ஆனால் அது முதலாம் பராக்கிரமபாகு மன்னனின் தலதா மாளிகையைப் புனர்நிர்மாணஞ் செய்தமையாக இருக்கலாம் என்பது சில அறிஞர்களின் கருத்தாகும். அக்கட்டடம் அறுபது மணித்தியாலங்களுள் அமைக்கப்பட்டது என்று பூஜாவலிய குறிப்பிடுவதே அவ்வாறு கருதுவதற்கான பிரதான காரணமாகும். பொலன்னறுவை சத்மஹல் பிரசாதய (ஏழடுக்கு மாளிகை) இம்மன்னனின் படைப்பெனக் கருதப்படுகின்றது. தம்புள விகாரை மன்னனின் அனுசரணை தொடர்ந்து கிடைக்கப்பெற்று வந்த தலமாகும். அவ்விகாரையைப் புனரமைத்து அங்கிருந்த எழுபத்து மூன்று புத்தர் சிலைகளுக்கும் மன்னன் தங்க முலாம் பூசியதாக வம்சக் கதைகள் கூறுகின்றன. தம்புள விகாரைக்குரிய குகைகளை அலங்காரம் செய்து 'சுவர்ணகிரி குகை' எனப் பெயரிட்டதாக அங்குள்ள கல்வெட்டொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அவன் களனி, மகாகம, மகியங்கனை, சிவனொளிபாதம் முதலிய பௌத்த சமயத் தலங்களைத் தரிசித்ததுடன் பௌத்த பிக்குகளை ஒற்றுமைப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டதாகவும் மன்னனது கல்வெட்டுக்கள் கூறுகின்றன. பௌத்த சமயத்துக்கு அரச அனுசரணை தேவைப்பட்டிருந்த ஒரு சந்தர்ப்பத்தில் நிஸ்ஸங்கமல்ல மன்னன் பௌத்த சாசனத்துக்காற்றிய சேவை மதிக்கப்பட வேண்டியதொன்றாகும். வெளிநாட்டு அரச வம்சமொன்றைச் சேர்ந்த இம்மன்னன் தனது சமயம் எதுவாக இருப்பினும் தனது நாட்டு மக்களுள் பெரும்பான்மையோரின் சமயத்துக்கு அனுசரணை வழங்கியமை அரசியல் ரீதியாகவும் அவனுக்கு அதிக நன்மை பயக்கக்கூடிய செயற்பாடாக அமைந்தமையை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மேற்கூறப்பட்ட சொற்பமான வரலாற்று நிகழ்வுகள் மூலம் தெளிவாவது யாதெனில் இலங்கையில் நிலவிய குழப்பகரமான அரசியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைமையில் வெளிநாட்டு அரச வம்சத்தைச் சேர்ந்த ஒரு மன்னன் இலங்கை மக்களின் நலன்கருதி பாடுபட்டமையாகும். சிரமமான அக்கால கட்டத்தில் ஐக்கிய இலங்கையை முன்னெடுத்துச் செல்வதில் அவன் மேற்கொண்ட முயற்சிகள் பெருமளவில் வெற்றியளித்தன. நிஸ்ஸங்கமல்ல மன்னன் வெளிநாடுகளையும் வெற்றி கொண்டதாகக் குறிப்பிடப்பட்ட போதிலும் அத்தகவல்கள் வீண்பெருமை, புகழ்ச்சிக்குறியவை என்றே புலனாகின்றன. மன்னன் சோழ, பாண்டிய நாடுகளிலிருந்தும் கப்பம் பெற்றுள்ளதாக அவனது கல்வெட்டுக்கள் கூறுகின்றன. நாற்படையும் சூழ இரண்டு தடவைகள் பாண்டியநாடு சென்ற இம்மன்னன் இராமேஸ்வரத்தில் வைத்து துலாபாரம் (தராசு) ஏறி தன் எடைக்கு நிகராக தானங்கள் வழங்கினான். மேலும் அங்கு நிஸ்ஸங்கேஸ்வர எனும் கோயிலையும் அமைத்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. பாண்டிய அரச குடும்பம் மன்னனுக்கு அடிபணிந்ததாகவும் குறிப்புகள் கூறுகின்றன. இவ்விடயங்கள் அளவுக்கதிகமான புகழாரமாக அமைந்த போதிலும் மன்னனின் தென்னிந்தியப் படையெடுப்புகளை மேற்கொண்டமை உண்மையாகும். அவனுக்குரிய ஒரு கல்வெட்டு இராமேஸ்வரத்தில் கிடைத்தமை அதற்குச் சான்றாகும். ஏனைய சமகால இந்திய இராச்சியங்களை இவன் அடிபணியச் செய்ததாகக் கூறப்படும் செய்திகளில் உண்மையில்லை. எது எப்படியான போதிலும் இம்மன்னன் ஆட்சிக் காலத்தில் இலங்கை மீது வெளிநாட்டுப் படையெடுப்புகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

நிஸ்ஸங்கமல்ல மன்னன் மேற்கொண்ட முயற்சிகள் வீண்போகவில்லை. அவனுடைய மரணத்தின் பின்னரான 20 வருட காலம் (1197 - 1215) இலங்கை அரசியல் களத்தை மூடியிருந்த வெளிநாட்டு ஆக்கிரமிப்பு சக்திகளைக் கட்டுப்படுத்துவது கடினமான காரியமாயமைந்தது. உள்நாட்டு அரசியல் பெரும் குழப்ப நிலையையடைந்தது. நிஸ்ஸங்கமல்லனின் பின் வந்த ஆட்சியாளர்களுள் லீலாவதி அரசியும் கல்யாணவதி அரசியும் ஓரளவுக்கேனும் பௌத்த சாசனத்துக்குச் சேவையாற்றினர். இந்தப் பெண் ஆட்சியாளர்களை அரியணை ஏற்றியதும் இறக்கியதும் படைத் தளபதிகளாவர். எனவே அரச இயந்திரம் தளபதியினர் வசம் இருந்துள்ளது என்பதைப் புரிந்து கொள்ளலாம். ஆட்சியாளர்கள் வெறும் பொம்மைகளாகவே இருந்துள்ளனர். நிஸ்ஸங்கமல்லனின் மனைவியான கல்யாணவதியின் 6 வருடகால (1202 - 1208) ஆட்சியும் மூன்று தடவைகள் சிம்மாசனம் ஏற்றப்பட்ட பராக்கிரமபாகு மன்னனின் மனைவியான லீலாவதியின் (1197 - 1200, 1209 - 1210, 1211 - 1212) ஆட்சிக் காலமும் ஓரளவுக்கேனும் நிம்மதியான காலகட்டங்களாகத் திகழ்ந்தன. இக் காலகட்டத்தில் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருட கால ஆட்சியைப் பூர்த்தி செய்யாத ஆட்சியாளர்களும் காணப்பட்டனர். என்பதற்குச் சிறந்த உதாரணம் நிஸ்ஸங்கமல்லனின் மகனான இளவரசன் வீரபாகு இரவில் முடி சூடி அதிகாலையில் படைவீரன் ஒருவனால் கொலை செய்யப்பட்ட சம்பவமாகும். அதனையடுத்து சிம்மாசனமேறிய நிஸ்ஸங்கமல்லனின் இளைய சகோதரனான விக்கிரமபாகு மூன்று மாத காலமே ஆட்சி செய்தான்.

இக்காலகட்ட அரசியலில் தெளிவாகத் தெரிந்த விடயம் யாதெனில்; படைத்தளபதிகள் ஆட்சி நடவடிக்கைகளில் நேரடியாகத் தலையிட்டமையாகும். அவர்கள் தமக்கு விருப்பமான இளவரசர்களையே சிம்மாசனம் ஏற்றினர். ஒரு மன்னனின் ஆட்சிக் காலம் இயல்பாக முடிவடைய முறைப்படி அடுத்த மன்னன ஆட்சி பீடமேறியதை இக்காலத்தில் காண்பது அரிதாயிருந்தது. அதிகமாக அரசர்கள் கொலை செய்யப்பட்டதன்மூலமே அவர்களின் ஆட்சிக் காலம் முடித்து வைக்கப்பட்டது.

பராக்கிரமபாகு மன்னனின் அரச பரம்பரையைத் தொடர்வதற்கு அவனுக்கு மகன் ஒருவன் இல்லாதிருந்தமை பெருங் குறைபாடாகும். அவனையடுத்து ஆட்சிக்கு வந்தவன் அவனது சகோதரியின் மகனான இரண்டாம் விஜயபாகு எனும் மருமகனாவான். அடுத்த ஆட்சி உரிமையைப் பெற்றுக் கொள்வதில் அதுவரை இலங்கையில் பின்பற்றப்பட்ட மரபும் இக்காலமளவில் மாற்றப்பட்டிருந்தமையும் அரசியல் குழப்ப நிலைக்குக் காரணமாயமைந்தது. அநுராதபுரக் காலம் முதல் பொலன்னறுவை முதலாம் விஜயபாகுவின் காலம் வரை இலங்கையில் வழக்கத்திலிருந்த ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறை என்னவெனில் அரசன் மரணித்தால் அடுத்து அவனது அடுத்த சகோதரன் ஆட்சிக்கு வருதலாகும் அதனையடுத்து அவ்வுரிமை அரசனது அடுத்தடுத்த தம்பிமாரைச் சேரும். அத்தலைமுறையினரின் ஆட்சி முடிவடைய அரசனின் மூத்தமகன் ஆட்சிக்கு வருவான். இவ்வாறு தந்தை வழி ஆட்சியுரிமை முறை மாறி இக்காலக்கட்டத்தில் தாய் வழியில் அரசுரிமை கோரும் ஒரு வழிமுறையின் வளர்ச்சியை அவதானிக்க முடிந்தது. முதலாம் விஜயபாகு மன்னன் கலிங்க, பாண்டிய இளவரசியரை திருமணம் செய்து கொண்டதனை ஏற்கனவே அறிந்தோம். அதே போல் அம்மன்னனின் சகோதரி மித்தாவையும் பாண்டிய இளவரசனுக்குத் திருமணம் செய்து வைத்ததையும் அறிவோம். முதலாம் விஜயபாகுவின் மறைவைத் தொடர்ந்து மித்தா தனது மகனுக்கு ஆட்சி உரிமையைப் பெற்றுக் கொடுப்பதற்காக பௌத்த பிக்குகளுடன் சேர்ந்து மரபை மீறி செயற்பட்டமையால் ஏற்பட்ட அரசியல் குழப்ப நிலையையும் அறிந்தோம். எனவே இக்குறிப்பிட்ட காலப் பகுதியில் வெவ்வேறு அரச வம்சங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்த பிள்ளைகளும் பேரப் பிள்ளைகளும் தத்தமக்கு ஆட்சியுரிமை கோரி அரசியல் களத்தில் குதித்தனர். அவர்களுள் பாண்டிய வம்சம், கலிங்கவம்சம் இரண்டுக்குமிடையிலே கடும் போட்டி நிலவியதைக் காண முடிகின்றது. இரண்டாம் விஜயபாகு (1186 - 1187) மன்னனின் ஆட்சியின் பின்னர் அரசுரிமையானது கலிங்க வம்சத்தவர் வசமானது அதன்படியே நிஸ்ஸங்கமல்ல இலங்கை அரசனானான். இரண்டாம் விஜயபாகு மன்னன் கொலை செய்யப்படுமளவிலான கடுமையான சிம்மாசன உரிமைப் போராட்டத்தின் பின்னரே அவன் ஆட்சி பீடமேறினான். இவ்வாறு பராக்கிரமபாகு மன்னனின் பரம்பரையில் அவனது மருமகன் ஒருவனால் ஆட்சிபுரிய முடிந்தது ஒரேயொரு வருட காலம் மட்டுமேயாகும். எனவே முதலாம் பராக்கிரமபாகு மன்னனின் மறைவுடன் இலங்கையில் சிம்மாசன உரிமைப் போராட்டம் ஆரம்பமானதென்பது தெளிவாகின்றது.

இந்த அரசியல் போராட்டமானது படைத் தளபதிகளின் தலையீடு காரணமாக மேலும் உக்கிரமடைந்தது. இதற்கு முன்னைய காலங்களிலும் படையினரின் உதவியுடன் மன்னர்கள் ஆட்சி பீடமேறியுள்ளனர். ஆயினும் அவர்கள் இவ்வளவு தூரம் அரசியல் நிர்வாகத்தில் தலையிடவில்லை என்பதே உண்மை அவ்வாறாயின் ஏன் இக்காலக்கட்டத்தில் இவ்வாறான ஒரு நிலை தோற்றம் பெற்றது? என்ற கேள்விக்கான விடையை வரலாற்றை ஒரு முறை திரும்பிப் பார்ப்பதன் மூலம் அறிந்து கொள்ள முடியும். முதலாம் பராக்கிரமபாகு மன்னன் நாட்டை ஐக்கியப்படுத்துவதற்காகவும் வெளிநாட்டு ஆக்கிரமிப்புக்காகவும் பாரிய படைகளைத் திரட்டினான் என்பது தெரிந்ததே எனவே படைகளில் சேவையாற்றிய படைத் தளபதியினர் தொகையும் அதிகமாகும். தளபதிகளின் எண்ணிக்கை ஐம்பதுக்கும் மேற்பட்டதென அறியப்பட்டுள்ளது. அவர்களை உரிய இடத்தில் வைத்து ஆட்சி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் பராக்கிரமபாகுவால் முடிந்த போதிலும் அதன் பின்னர் வந்த ஆட்சியாளர்களிடம் அவ்வாறான திறன் காணப்படவில்லை. எனவே படைத் தளபதிகள் அரசியல் களத்தில் பிரவேசித்தனர். தமக்கு விருப்பமான இளவரசர்களை சிம்மாசனம் ஏற்றவும் தமக்கு விருப்பமான வேளையில் அவர்களைப் பதவி கவிழ்ப்பதற்கும் தளபதியினர் பலம் பெற்றிருந்தனர். எனவே தமக்கு அப்பாற்பட்ட பணியில் ஈடுபட்ட படைத் தளபதிகள் அக்கால கட்ட அரசியல் குழப்பநிலைக்குக் காரணகர்த்தாக்கள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

இவ்வாறு மேலெழுந்த அரசியல் குழப்பங்களால் பலவீனமடைந்த அரசியல் நிலைப்பாடு பொதுவாக முழு நாட்டையும் எவ்வாறு பாதித்தது? என்ற கேள்விக்கான விடை தேட வேண்டியது முக்கியமாகும். ஏனெனில் வரலாற்று மூலாதாரங்களின்படி சிம்மாசன உரிமைப் போராட்டம் தலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரையும் அதனைச் சூழவுள்ள பகுதிகளையும் பாதித்ததாகவே கருத முடிகின்றது. தூரப் பிரதேச நிர்வாகத்தை அது பாதித்திருக்காது என்றும் நினைக்கத் தோன்றுகிறது. முதலாம் விஜயபாகு மன்னனின் மறைவின் பின்னர் அவனது சந்ததியினரிடம் நாட்டு நிர்வாகம் பிளவுபட்டுச் சென்ற போது அப்பிராந்தியங்களுக்குரிய மக்களும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேர்ந்ததை நாம் ஏற்கனவே அறிந்தோம். செயற்றிறன் மிக்க நிஸ்ஸங்கமல்ல மன்னனும் நாட்டின் ஐக்கியத்தை நிலை நாட்ட கடும் பிரயத்தனப்பட்டுள்ளான். அவனது மனைவியான கல்யாணவதி அரசியும் பராக்கிமபாகுவின் மனைவியான லீலாவதி அரசியும் பௌத்த சாசனத்துக்கு தம்மாலியன்ற சேவையை ஆற்றியுள்ளனர். கல்யாணவதி இராணியின் ஆட்சிக் காலத்தில் (1202 - 1208) தென்பகுதி வெலிகமவில் 'ராஜகுலவட்டன' எனும் பிரிவெனை ஆயஸ்மந்த எனும் தளபதியால் அமைக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. அதாவது தொலை தூரப் பிரதேசங்கள் பொலன்னறுவையின் கட்டுப்பாட்டிலிருந்து அதுவரை விடுபடவில்லை. என்பதையே அது காட்டுகின்றது. நீர்ப்பாசனத் துறை தொடர்பாக சொற்ப அளவிலேனும் அக்கறை காட்டப்பட்டது நிஸ்ஸங்கமல்ல மன்னனது காலத்தினாலாகும். இக்காலகட்ட ஆட்சியாளர்களால் நாட்டின் பொதுவான வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்பட்ட சேவைகள் மிகக் குறைவாகும்.

இக்குறிப்பிட்ட காலப் பகுதியில் அரசியல் சீரழிவு ஏற்பட்டமையைத் தெளிவாக அவதானிக்க முடிகின்றது. இராசரட்டையின் கலாசாரச் சீரழிவும் அதை விட விரிவான முறையில் ஆராயப்பட வேண்டிய சிக்கலார்ந்த பிரச்சினையாகும். இதுவரை நாம் ஆய்வுக்குற்படுத்திய 30 வருட காலத்தில் இராசரட்டை நாகரிகம் சீரழிந்து போனது என்று ஒரு போதும் கூற முடியாது. ஏனெனில் அவ்வாறான ஒரு நிலை இனிமேல் நாம் கற்கப்போகும் காலப்பகுதியிலேயே உருவானது.

## கலிங்க மாகனின் ஆக்கிரமிப்பு (1215)

பொலன்னறுவை இராசதானியின் இறுதி மன்னன் பராக்கிரம பாண்டியன் (1212 - 1215) ஆவான். அவனுக்கு முன்னர் ஆட்சியிலிருந்த லீலாவதி அரசி (1211 - 1212) மூன்றாவது முறையாக பராக்கிரம எனும் தளபதியால் சிம்மாசனம் ஏற்றப்பட்டாள். அவளது அரச மாளிகையில் வளர்ந்த பாண்டிய இளவரசனான பராக்கிரம பாண்டியன் தென்னிந்தியாவிலிருந்து கூலிப் படையொன்றுடன் வந்து லீலாவதியையும் அவளது தளபதியையும் பதவி கவிழ்த்து அரசுரிமையைப் பெற்றுக்கொண்டான். இம்முறை அவளால் ஏழு மாதங்கள் மட்டுமே நாட்டை ஆட்சி செய்ய முடிந்தது. இவ்வாறு பலவீனமான அரசியல் நிலையிலிருந்த பொலன்னறுவை பாரியதொரு ஆக்கிரமிப்புக்கு இரையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்ந்தது.இந்த ஆக்கிரமிப்பை மேற்கொண்டவன் இந்தியாவின் கலிங்க தேசத்திலிருந்து (இன்றைய ஒரிஸ்ஸா) வந்த மாகன் என்பவனாவான். பிரபலமான சேர நாட்டு (இன்றைய கேரளா) கூலிப் படையொன்றுடன் வந்து இலங்கையை ஆக்கிரமித்த அவன் (1215 - 1255) நாற்பது ஆண்டு காலம் ஆட்சி புரிந்தான் அவனது ஆட்சியில் நாடு அடைந்த அழிவுகளைப் போலவே 1500 வருடங்களாக வளர்ச்சியடைந்து வந்த இராசரட்டையின் நீர்வள நாகரிகத்தையும் அது முற்றுமுழுதும் பாதித்தது.

வம்சக் கதைகளின் கூற்றுப்படி கலிங்க மாகன் 24000 சேர நாட்டுக் கூலிப் படைகளுடன் இலங்கை வந்துள்ளான். பொலன்னறுவையை அடைந்த மாகன் ஆட்சியாளனான பாராக்கிரம பாண்டியனைக் கைது செய்து அவனது கண்களைக் குருடாக்கி ஆட்சியைக் கைப்பற்றினான். அதன் பின்னர் மானாபரண தலைமையிலானவர்களால் பொலன்னறுவை மன்னனாக அவன் முடிசூட்டப்பட்டான்.

மாகனின் ஆக்கிரமிப்பினால் ஏற்பட்ட அழிவானது அதற்கு முன்னர் இலங்கை மீது மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்புகளை விடப் பயங்கரமானதாகும். மகாவம்சம் அதனை இவ்வாறு விபரிக்கிறது. ''சேர நாட்டு குண்டர் படையினர் இலங்கை மக்களைத் துன்புறுத்தினர். மக்களின் ஆடை, ஆபரணங்களைக் கொள்ளையடித்தனர். நீண்ட காலமாகப் பேணப்பட்டு வந்த குல ஆசாரங்களை இல்லாதொழித்தனர். மக்களின் கால், கைகளை வெட்டினர். மாளிகைகளைத் தரைமட்டமாக்கினர். கால்நடைகளைக் கவர்ந்து கொண்டனர். பொது மக்களைக் கட்டி வைத்து அவர்களின் சொத்துக்களைக் கொள்ளையடித்து அவர்களை வறிய நிலைக்குத் தள்ளினர். புத்தர் சிலைகளை உடைத்தொழித்தனர். அதிகளவிலான விகாரைகளை அழித்தனர். விகாரைச் சொத்துக்களைக் கொள்ளையடித்தனர். பக்தர்களைத் தாக்கினர். பிள்ளைகளை அடித்தனர். பொதுமக்களைக் கொண்டு சுமையான பொருள்களைத் தூக்கிச் சென்றனர். அவர்கள் மூலம் அதிகளவிலான வேலைகளை வாங்கினர். பிரபல்யமான நூலேடுகளின் பக்கங்களை பல்வேறு திசைகளிலும் வீசியெறிந்தனர். பழைய மன்னர்களின் புகழைப் பறைசாற்றிக் கொண்டிருந்த ரத்னாவலி முதலிய அலங்கார விகாரைகளையும் அவற்றுள் அடங்கப்பட்டிருந்த புனித தாதுக்களையும் புறக்கணித்து அழித்தனர். பொதுமக்களைப் பொய் மாயைக்குள் சிக்க வைத்து குலங்களுக்கிடையே திருமண உறவுகளை ஏற்படுத்தி தெளிவாயிருந்த நான்கு சாதியினருக்கிடையே கலப்பினை ஏற்படுத்தினர். வீடு, வயல், வளவு, தோட்டம், கால்நடைகள், கிராமங்கள் என்று சிங்களவர்களின் உடைமைகளைச் சூறையாடி சேரர்களுக்குக் கொடுத்தனர். விகாரைகள் பிரிவெனாக்கள் முதலிய கட்டடங்கள் சேரப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படையினரின் வசிப்பிடங்களாயின. பௌத்த பிக்குகளுக்குச் சொந்தமான சொத்துக்களையும் சூறையாடி பாவத்தைத் தேடிக் கொண்டனர். சேர நாட்டுப் படையினர் புத்த சாசனத்தையும் அழித்தனர்.''

மேற்கூறப்பட்ட மகாவம்சத்தின் வரிகள் மாகன் மேற்கொண் நடவடிக்கைகளை அறிய உதவுகின்றன. அதிலடங்கியுள்ள விடயங்களை விரிவாக விளக்குவதற்கு அவசியமில்லை. ஆயினும், ஆய்வுக்குட்படுத்த வேண்டிய சில விடயங்களும் அதனுள் அடங்கியுள்ளன. அதாவது மாகனின் பௌத்த எதிர்ப்புக் கொள்கை அதில் முதலிடம் பெறுகின்றது. அவன் பௌத்த தலங்களை அழித்தது மட்டுமல்ல பிக்குமாருக்கும் சரீர ரீதியிலான தண்டனைகளை வழங்கி அவர்களை சித்திரவதைப்படுத்தினான். இங்கு அவதானிக்கத் தக்க மற்றொரு விடயம் சிங்களவர்களை பலாத்காரமாக மாற்று மதங்களைத் தழுவச் செய்வதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகளாகும். அதற்கான வாசகங்கள் மகாவம்சத்தில் நேரடியாகவே குறிப்பிடப்பட்டுள்ளன. அவனால் அழிக்கப்பட்ட புத்தகங்கள் பௌத்த தர்ம நூல்கள் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. மேலும் விகாரைச் சொத்துக்களைக் கொள்ளையடிப்பது அவனது நோக்கமாயின. நூல்களை அழிப்பதன் மூலம் அவன் எதிர்பார்த்த பயன் என்னவாக இருக்க முடியும்? இதிலிருந்து தெரிய வருவது என்னவெனில் அவன் ஏனைய சமயங்கள் தொடர்பான சகிப்புத் தன்மையற்ற அடிப்படைவாதியாகும் என்பதே. அதற்கு முன்னர் இலங்கையை ஆக்கிரமித்த எந்தவொரு ஆக்கிரமிப்பாளனும் தமது சமயத்தைப் பொதுமக்கள்மீது பலவந்தமாகத் திணிக்கவில்லை என்பது தெளிவான விடயம். சமயங்களுக்கான உரிமை இந்தியாவிலும் இலங்கையிலும் காணப்பட்ட இயல்பாகும். ஆனால் மாகன் அம் மரபை மீறிய ஒரு கொடுங்கோலனாவான்.

இங்கு அவதானிக்கப்பட வேண்டிய இரண்டாவது அம்சம் யாதெனில் இராசரட்டையின் பிரபுத்துவ வகுப்பினரைக் கொடுமைப்படுத்தியமையாகும். அவர்களிடமிருந்த செல்வங்களைச் சூறையாடி அவர்களை வறியவர்களாக்கிய விபரத்தை மேற்கூறிய வாசகங்கள் மூலம் அறிந்தோம். பிரபுத்துவ வகுப்பினர் என்று இங்கு குறிப்பிடப்பட்டவர்கள் ஏற்கனவே அரச நிர்வாகத்தில் உயர்பதவிகள் வகித்தவர்களாவர். சாதாரண பொதுமக்களுங் கூட சரீரத் தண்டனைகள் மூலம் இம்சைப்படுத்தப்பட்டனர். சிறுவர்களையும் பிரம்படி முதலிய தண்டனைகளுக்கு ஆளாக்கியமை புரியாத புதிராகவே விளங்குகின்றது. பரம்பரையாகப் பேணப்பட்டு வந்த குல முறைமையைக் குழப்பி அன்றைய சமூகவமைப்பில் சாதி முறையை சீர்குலைத்தமையும் ஆய்வுக்குட்படுத்த வேண்டிய மூன்றாவது முக்கிய விடயமாகும். இதனால் நீண்ட காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்மறையான விளைவுகள் இடம் பெற்றதை எதிர்வரும் பக்கங்களில் நீங்கள் அறிந்து கொள்ளலாம்.

கொடுமைக்கு ஆளான பௌத்த பிக்குகள் இராசரட்டையைக் கைவிட்டு மாயாரட்ட, உருகுணை, மலைநாட்டுப் பகுதிகளுக்கு இடம் பெயர்ந்தனர். இன்னும் பலர் தென்னிந்தியாவின் சேர, சோழ, பாண்டிய நாடுகளிலும் தஞ்சமடைந்தனர். மாகனின் இம்சை பொறுக்க முடியாத இளவரசர்கள், அமைச்சர்கள், பிரதானிகள், அரச குடும்பத்தினர் ஆகியோர் மாயாரட்டை மற்றும் உருகுணைப் பகுதிகளில் பாதுகாப்புக் கருதி குடியேறினர். அதே போலவே சாதாரண மக்களும் இடம் பெயர்ந்துள்ளனர் என்று கருதலாம். இவ்வாறான இம்சையான செயற்பாடுகள் மாகனின் ஆட்சிக் காலம் முழுதும் தொடர்ந்ததா? ஆரம்ப காலத்துடன் முடிவடைந்ததா? என்பதை அறிவதற்கான ஆதாரங்கள் இல்லை.

பொலன்னறுவையைத் தலைநகராகக் கொண்டு மாகன் மேற்கொண்ட ஆட்சியானது போர்த் தன்மை கொண்டதாகவே விளங்கியது. அவனது போர்ப்படைகளின் ஒழுங்கமைப்பானது சக்தி மிக்கதாகக் காணப்பட்டது. உள்நாட்டில் பொலன்னறுவை, கொட்டசார, கவுடுல்ல, பதவியா, கந்தளாய் முதலிய இடங்களிலும் வடமேல் கரையோரமாக மன்னார், ஊர்காவற்றுறை முதலிய பல இடங்களிலும் அவன் கோட்டைகளை அமைத்து அங்கு படையினரை நிறுத்தியிருந்தான். கரையோரத்தில் கோட்டை அமைத்த காரணம் வெளிநாட்டுப் படையெடுப்புகளைத் தடுப்பதற்காகும் என்பதை இங்கு விபரிக்கப்பட்ட விடயங்களை வைத்தே நீங்கள் விளங்கிக் கொள்ளலாம்.

## தம்பதெனிய இராசதானிக் காலம் (1215 - 1270)

மாகனின் கொடூர நடவடிக்கைகள் காரணமாக இராசரட்டை இளவரசர்களும் அரச பிரதானிகளும் பாதுகாப்புக் கருதி மாயரட்டைக்கும் உருகுணைக்கும் இடம்பெயர்ந்ததை ஏற்கனவே அறிந்தோம். அவர்களுள் சிலர் இடம்பெயர்ந்த பகுதிகளில் காணப்பட்ட மலையரண், வன அரண் முதலிய பாதுகாப்பான இடங்களில் நகரங்களை அமைத்து அங்கிருந்து அயல் பிரதேசங்களை ஆட்சி செய்தனர். யாப்பகுவையில் சுப எனும் தளபதி, கோவிந்த மலை எனுமிடத்தில் புவனேகபாகு, மஹியங்கணைக்கு அருகே மினிப்பேயில் சங்க தளபதியினர் அவ்வாறானவர்களாவர். அவர்கள் வரையறுக்கப்பட்ட பிரதேசத்துக்குள் ஆட்சியமைத்து மக்களின் நல்வாழ்வுக்கும் புத்த சாசனத்துக்கும் சேவை செய்வதற்கு முயற்சித்தனர். மாகனின் படை பலத்துக்கு முன்னால் இராசரட்டையை மீட்பதற்கான நடவடிக்கைகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபடுவதற்கு அவர்கள் சக்தியற்றவர்களாக இருந்தனர். அவர்கள் ஒன்றிணைந்து அதற்காக செயற்பட்டதையும் காணமுடியவில்லை. அவர்களிடம் காணப்பட்ட வரையறுக்கப்பட்ட வளங்களையும் அரைகுறைப் படைப் பலத்தையும் பயன்படுத்தி இராசரட்டையை மீட்பதற்கு முயற்சித்திருந்தாலும் அது தோல்வியிலே முடிந்திருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஆயினும் தமது ஆட்சி எல்லைக்குள் வாழ்ந்த மக்களதும் புத்தசாசனத்தினதும் பாதுகாப்புக்காக அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் பாராட்டப்பட வேண்டியவையாகும்.

## மூன்றாம் விஜயபாகு மன்னன் (1232 - 1236)

மேற்கூறிய பிரகாரம் இலங்கையின் அரசியல் பின்னணியை முழுமையாகப் பார்க்கும்போது இராசரட்டையில் மாகனின் ஆட்சி நிலவியதுடன் உருகுணையிலும் மாயாரட்டையிலும் பிராந்திய ஆட்சியாளர்களின் ஆட்சி இடம்பெற்றிருந்தமையை நாம் ஊகித்துக் கொள்ளலாம். இவ்வாறான பிரதேச ஆட்சியாளர்களிலிருந்து தோன்றிய ஒரு சிறந்த ஆட்சியாளன் இக்காலப் பகுதியில் மாயாரட்டையிலிருந்து ஏனைய பிரதேச ஆட்சியாளர்களைப் பின் தள்ளியவாறு முன்னணிக்கு வந்தமை அக்கால அரசியலில் ஏற்பட்ட ஒரு மாற்றமாகும். அவன் 1232ஆம் ஆண்டு தம்பதெனியவை தலைநகராகக் கொண்டு ஆட்சிபீடமேறிய மூன்றாம் விஜயபாகு மன்னனாவான். அவனது மகனான இரண்டாம் பராக்கிரமபாகு (1236 - 1270) மன்னன் இதே தம்பதெனியவிலிருந்தே மாகனிடமிருந்து இராசரட்டையை மீட்பதற்கான போராட்டத்தை ஆரம்பித்தான்.

மூன்றாம் விஜயபாகுவின் பரம்பரை பற்றிய வரலாறு தெளிவாக இல்லை. அவன் பழைய அரச குடும்பமொன்றைச் சேர்ந்தவன் என்று நூல்களில் குறிப்பிடப்பட்ட போதிலும் அத்தகவல்களில் நிச்சயத் தன்மையில்லை. அவன் அநுராதபுர, பொலன்னறுவை அரச குடும்பமொன்றைச் சேர்ந்தவனா அல்லது அரச குடும்பமல்லாத ஒரு பிரதேச ஆட்சியாளனா என்று உறுதியாகக் கூற முடியாதுள்ளது. ஆயினும் அவனால் ஆற்றப்பட்ட சேவையின் பெறுமதியை எம்மால் உணர்ந்துகொள்ள முடிகிறது.

சமகால மூலாதாரங்களில் விஜயபாகு மன்னன் வன்னி விஜயபாகு அல்லது வன்னி அரசன் என்ற பெயரால் குறிப்பிடப்பட்டுள்ளான். எனவே அவன் காட்டுப்புறம் சார்ந்த ஒரு பிரதேச ஆட்சியாளனாக இருந்திருப்பான் என்று நாம் ஊகிக்கலாம். வம்சக்கதைகள் கூறுவதன்படி அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரிகளுக்குப் பயந்து காடுகளில் தலைமறைவாக நீண்டகாலம் வசித்துள்ளான். அவனது இளமைப்பருவம் இவ்வாறே கழிந்துள்ளது. மிக நீண்டகாலமாக வன்னி ஆட்சியாளனொருவனாக இருந்த அவனால் மாயாரட்டையின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ளமுடிந்தமை வரலாற்று ரீதியாக மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. அவனுடன் சமதையாக இருந்த பிரதேச ஆட்சியாளர்களைத் தந்திரமான முறையில் தடுத்துக் கொள்வதற்கு அல்லது அவர்களது அதிகாரத்தை அடக்குவதற்கு அவனால் முடிந்துள்ளது என நாம் கருதலாம். அதே போன்று மாயாரட்டை பகுதி மாகனின் ஆக்கிரமிப்புக்கு உட்படாத போதிலும் அவனது ஆட்சியின் தாக்கம் அங்கும் நிலவியது. மாயாரட்டையிலும் தமிழர் குடியிருப்புக்கள் காணப்பட்டதாக சில மூலாதாரங்கள் குறிப்பிடுகின்றன. மூன்றாம் விஜயபாகு மன்னன், மாகனின் படையினரை பொலன்னறுவை வரை துரத்தியடித்ததாகவும் அம் மூலாதாரங்கள் குறிப்பிடுகின்றன. எவ்வாறாயினும் மாயரட்டையை ஐக்கியப்படுத்தி அரசியல் நிலைப்பாட்டை உறுதி செய்து ஓர் ஆட்சியாளனாக அமர்வதற்கு மூன்றாம் விஜயபாகுவால் முடிந்தது. மாயரட்டையின் ஆட்சியாளனான மூன்றாம் விஜயபாகு மன்னன், குருணாகல் நகருக்கு 18 மைல்கள் தென்மேற்காக அமைந்திருந்த தம்பதெனியவை தனது தலைநகரமாக அமைத்துக் கொண்டான். தம்பதெனியானது சுற்றுப்பிரதேசங்களுடன் ஒப்பிடுகையில் உயர்ந்ததோர் மலைப் பிரதேசப் பாங்கைக் கொண்டிருந்தது. அதே போலவே மாகனின் ஆட்சி மையமான பொலன்னறுவையிலிருந்து எழுபதைந்து மைல் தொலைவிலே தம்பதெனிய அமைந்திருந்தது. இயற்கை அரண்களால் பாதுகாக்கப்பட்ட அந்நகரை பாதுகாப்பு மதில்கள் அமைத்தும் 3ஆம் விஜயபாகு மன்னன் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டான். எதிர்காலத்தில் மாகனைத் துரத்தியடிப்பதற்கான படையெடுப்புகளை மேற்கொள்வதற்குரிய மத்திய நிலையமாக அது அமைவதற்கான தகுதியினை மன்னன் அடிக்கடி பரிசீலித்துக் கொண்டான். அமைவிடம் காரணமாக தம்பதெனிய நகரம் முக்கியத்துவம் பெறுவதைப் போன்றே முதலாம் பராக்கிரமபாகு மன்னன் தக்கிண தேச ஆட்சியாளனாக இருந்தபோது மாயரட்ட பகுதியில் விவசாய நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்வதற்குரிய செயற்பாடுகளை மேற்கொண்டிருந்தமை இங்கு நாம் நினைவுகூரத்தக்கது.

மாயரட்டையில் 3ஆம் விஜயபாகுவின் ஆட்சி பலமடைவதில் செல்வாக்குச் செலுத்திய மற்றுமொரு காரணியாயமைந்தது புத்தபெருமானின் புனித தந்ததாதுவையும் புனித பாத்திர தாதுக்களையும் மன்னனால் பெற்றுக்கொள்ள முடிந்தமையாகும். மாகனின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளின்போது மேற்சொன்ன புனித பொருள்களை எடுத்துவந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌத்த பிக்குகள் அவற்றைக் கொத்மலையில் நிலத்துக்கடியில் ஒளித்து வைத்திருந்தனர். பௌத்த பிக்குகளின் உதவியுடன் ஒளித்து வைக்கப்பட்டிருந்த புனித தாதுக்கள் பத்திரமாக தம்பதெனியாவிற்கு எடுத்துச் செல்லப்பட்டன. அக்காலப் பகுதியில் தம்பதெனிய பாதுகாப்புக் குறைந்ததெனக் கருதிய மன்னன் வானத்திலிருந்து தேவர்கள் அடைவதைத் தவிர பூமியில் எதிரிகளால் அடைய முடியாத பெலிகல எனுமிடத்தில் புதிதாக அமைக்கப்பட்ட தலதா மாளிகையில் புனித சின்னங்களைப் பிரதிஷ்டை செய்தான். அக்கால கட்டத்தில் புனித தந்ததாது எந்தளவு புனிதம் வாய்ந்ததாகத் திகழ்ந்ததென்று பார்ப்போமானால் இலங்கை ஆட்சியுரிமையின் சின்னமாக அது கருதப்பட்டது. தந்ததாதுவை தன் கைவசம் வைத்திருப்பவனே இலங்கை ஆட்சிக்கு உரிமையாளன் எனக் கருதப்பட்டான். எனவே புனித தந்ததாதுவை மறைத்து வைத்திருந்த இடத்திலிருந்து மீட்டு, தலதா மாளிகை கட்டி அதனைப் பாதுகாத்த மன்னனைப் பொதுமக்களும் பௌத்த பிக்குகளும் பெரிதும் மதித்தனர். அம்மன்னன் பரம்பரை ரீதியில் இலங்கையின் சிம்மாசனத்துக்கு உரிமையாளனாக இல்லாதிருப்பினும் கூட புனித தந்ததாதுவை தன் வசப்படுத்தியதன் மூலம் அவன் மாயரட்டையின் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சியாளனானான் என்பது குறிப்பிடத்தக்கது.

வயோதிப காலத்தில் ஆட்சிபீடமேறிய 3ஆம் விஜயபாகு மன்னனின் ஆட்சிக் காலம் (1232 - 1236) நாலு வருடங்களே நீடித்தது. மன்னனாவதற்கு நீண்ட காலம் முன்னதாகவே அவன் மேற்கொண்ட கடும் பிரயத்தனங்களின் பயனாக மாயாரட்டைக்கு மன்னனான அவனது சேவைகள் பாராட்டப்பட வேண்டியனவாகும். இராசரட்டை கலிங்க மாகனின் கொடூர ஆட்சிக்குட்பட்ட பின்னர் மாயாரட்டையை சிங்கள மக்களின் பாதுகாப்பான பூமியாக மாற்றியமைப்பதில் 3ஆம் விஜயபாகு மன்னன் முன்னின்றுழைத்தான். மிகவும் பாதிக்கப்பட்டிருந்த பௌத்த பிக்குகளுக்கு இம்மன்னனின் அனுசரணையானது பெரும் பாதுகாப்பளித்தது. தம்பதெனியவில் விஜய சுந்தராராமய எனும் விகாரையும் கொழும்புக்கண்மையில் வத்தளையில் அமைந்த விஜயபாகு பிரிவெனாவும் இம்மன்னனின் படைப்புக்களாகும். மேலும் களனி விகாரையையும் ஏனைய சிதைவடைந்த கட்டடங்களையும் இம்மன்னன் புனரமைப்புச் செய்தான். உப சம்பதா எனும் சமய சடங்கை விமரிசையாகச் செய்த இம்மன்னன் பௌத்த சங்கத்திலும் சீர்த்திருத்தமொன்றைச் செய்துள்ளான். பெறுமதி வாய்ந்த பௌத்த நூல்கள் அழிக்கப்பட்டதை அறிந்த மன்னன் படித்த பொதுமக்களுக்கும், பிக்குகளுக்கும் பணம் கொடுத்து அந்நூல்களை மீண்டும் எழுதுவித்தான். பிக்குமாரின் பௌத்த தர்ம ஞானத்தை விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டான். இவ்வாறான நடவடிக்கைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னனை அரசியல் ரீதியாகவும் மக்கள் ஆதரவுள்ளவனாகவும் மாற்றியமைத்தன.

இராசரட்டையை வெளிநாட்டு எதிரிகளிடமிருந்து மீட்டெடுப்பதற்குப் போதிய படைப் பலமும் வளங்களும் 3ஆம் விஜயபாகுவிடம் காணப்படவில்லை. அது முதுமைப் பருவத்தை அடைந்திருந்த மன்னனால் நெருங்குவதற்கும் முடியாத தொலைவிலிருந்த பாரதூரமான காரியம் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஆயினும் அதற்குரிய பின்னணியை உருவாக்கியமை இம்மன்னனின் மிகப்பெரிய பணியாகும். மாயரட்டையை ஐக்கியப்படுத்திய அவன் எதிரிகளைத் தாக்கும் மத்திய நிலையமாக தம்பதெனியாவை மாற்றியிருந்தான். அப்பாரிய கைங்கரியத்தை மன்னனின் மறைவுக்குப் பின்னர் 1236 இல் முடிசூடிக் கொண்ட மன்னனின் மூத்த புதல்வன் இரண்டாம் பராக்கிரமபாகு பொறுப்பேற்றான்.

## இரண்டாம் பராக்கிரமபாகு மன்னன் (1236 - 1270)

மூன்றாம் விஜயபாகு மன்னனின் வாரிசாக தெரிவு செய்யப்பட்ட பராக்கிரமபாகு இளவரசனின் கல்வி நடவடிக்கைகள் அக்காலகட்டத்தில் புத்த சாசன ஆலோசகர் பதவியேற்றிருந்த சங்கரக்கித தேரர் உள்ளிட்ட குழுவினரிடம் ஒப்படைக்கப்பட்டது மன்னனின் இறுதிக்காலப் பகுதியிலாகும். மொழியறிவு, சமய ஞானம் முதலிய விடயங்களில் திறமை காட்டிய இளவரசன் பராக்கிரமபாகு பிற்காலத்தில் ஒரு பண்டிதராகப் பரிணமித்தான். 'கலிகால சாகித்ய சர்வக்ஞ பண்டித' எனும் பட்டம் பெற்ற இரண்டாம் பராக்கிரமபாகு எழுதிய நூல்களுள் சில இன்றும் எஞ்சியிருந்து அவனது ஆற்றலைப் பறை சாற்றுகின்றன. இங்கு நாம் கவனம் செலுத்த வேண்டிய விடயம் யாதெனில்; நாட்டின் அரைவாசிப் பகுதியை ஆக்கிரமித்திருந்த வெளிநாட்டு எதிரிகளிடமிருந்து நாட்டை மீட்பதற்கு இம் மன்னன் மேற்கொண்ட சிரமமான போராட்டம் பற்றியதாக அமைய வேண்டும். உண்மையில் அவன் எதிர்கொள்ள வேண்டியிருந்த வெளி நாட்டு எதிரிகள் மூவர் என்பது கவனிக்கத்தக்கது. மன்னனின் ஆட்சிக் காலத்தின் பெரும் பகுதி எதிரிகளுடன் போராடுவதிலேயே கழிந்தது. இதற்கு முன்னர் எந்தவொரு மன்னனுக்கும் இந்தளவிற்கு வெளிநாட்டு எதிரிகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டதில்லை என்றே சொல்லலாம். அவ் எதிரிகளை இரண்டாம் பராக்கிரமபாகு எவ்வாறு எதிர் கொண்டு நாட்டைப் பாதுகாத்தான் என்பதை இனி ஓர் ஒழுங்கு முறையினில் ஆராய்வோம்.

இங்கு குறிப்பிட வேண்டிய முக்கியமான விடயம் ஒன்றுள்ளது. அதாவது சூளவம்சத்தில் அடங்கியுள்ள விடயங்களுடன் கல்வெட்டுக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலிய மூலாதாரங்களையும் அடிப்படையாகக்கொண்டு முதலாம் விஜயபாகு சோழருக்கு எதிராக மேற்கொண்ட போராட்டத்தை அறிய முடிகின்றது. அதே போல முதலாம் பராக்கிரமபாகு மன்னன் நாட்டை ஐக்கியப்படுத்துவதில் மேற்கொண்ட போராட்டம் மற்றும் அவன் மேற்கொண்ட வெளிநாட்டு ஆக்கிரமிப்புக்கள் என்பன பற்றி படிமுறையாக அறிந்து கொள்ள முடிந்தது. ஆயினும் இரண்டாம் பராக்கிரமபாகு மன்னனின் ஆட்சிக்காலமளவில் அந்த மூலாதாரங்கள் பலவீனமடைந்திருந்தமையை நாம் உணரக் கூடியதாயுள்ளது. எனவே இக்காலகட்ட அரசியலில் இடம் பெற்றுள்ள மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த சம்பவங்களின் படி முறையையும் கால நிர்ணயத்தையும் தீர்மானிப்பது மிகவும் சிரமமான காரியமாய் அமைந்துள்ளது. இம்மன்னன் போர்களில் வெற்றியீட்டினான் என்று பெருமையோடு குறிப்பிடப்பட்டவர்கள் யாவர் முதலிய விடயங்கள் பெரும்பாலும் குறிப்பிடப்படவில்லை என்றே கூற வேண்டும். இரண்டாம் பராக்கிரமபாகு மன்னனின் பூர்வஜென்ம புண்ணியம் காரணமாக அவன் அரியணையில் இருந்து கொண்டே அவ்வெற்றிகளை ஈட்டினான் என்றும் அம்மூலதாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளமையைக் காண முடிகின்றது. ஆயினும் அதனை ஏற்றுக் கொள்வதற்கு இன்றைய காலத்தில் எவரும் தயாரில்லை. இரண்டாம் பராக்கிரமபாகு மன்னன் மேற்கொண்ட வெளிநாட்டு எதிரிகளுடனான போராட்டங்களின் பக்கம் நம் கவனத்தைத் திருப்புவோம்.

## சந்திரபானு மன்னனின் முதலாவது ஆக்கிரமிப்பு

சாதாரணமாக இலங்கைமீது மேற்கொள்ளப்பட்ட படையெடுப்புகள் யாவும் தென்னிந்தியாவிலிருந்தே மேற்கொள்ளப்பட்டன. ஆயினும் இரண்டாம் பராக்கிரமபாகு மன்னன் தென் கிழக்காசிய நாடொன்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்பு ஒன்றுக்கு முகங்கொடுக்க நேர்ந்தது. இம்மன்னனின் பதினோராவது ஆட்சி வருடத்தில் (1274) சந்திரபானு எனும் ஜாவா நாட்டு மன்னன் இலங்கையை ஆக்கிரமித்தான். அவன் மலேசிய குடா நாட்டின் வட பகுதியிலிருந்தே இலங்கை வந்துள்ளான். அக்காலத்தில் அப்பகுதி தாமிரலிங்க தேசம் என அழைக்கப்பட்டது. மேலும் அக்காலப் பகுதியில் அது ஒரு பௌத்த நாடாகவும் காணப்பட்டது. சந்திரபானுவும் பௌத்த மன்னன் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. நாம் ஏற்கனவே ஆராய்ந்த முதலாம் பராக்கிரமபாகு மன்னனின் பர்மிய ஆக்கிரமிப்பு தவிர இலங்கைக்கும் தென் கிழக்காசிய நாடுகளுக்குமிடையிலான உறவுகள் மிகவும் சிநேக பூர்வமானவையாகும். உண்மையில் சந்திரபானு இரு தடவைகள் இலங்கை மீது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படையெடுத்துள்ளான். இக்கால கட்டத்தில் பௌத்த புனித சின்னங்கள் தொடர்பாக இலங்கையும் தென்கிழக்காசிய நாடுகளும் பெரும் புகழடைந்திருந்தன. எனவே அவ்வாறான புனித சின்னங்களைப் பெற்றுக்கொள்வதற்காகவும் சந்திரபானு இலங்கை மீது படையெடுத்திருக்கலாம். ஏனெனில் இரண்டாவது படையெடுப்பின்போது அவன் இலங்கை மன்னனிடமிருந்த புனித தந்த தாதுவையும் பாத்திர தாதுவையும் கோரியமை அதனைத் தெளிவுபடுத்தியது.

சந்திரபானுவின் முதலாவது ஆக்கிரமிப்பின் போது அவனுக்கு எதிரான போரை மேற்கொண்டவன் இரண்டாம் பராக்கிரமபாகுவின் மருமகனான வீரபாகு இளவரசனாவான். தோல்வியடைந்த சந்திரபானு தப்பியோடினான். அவன் எந்தத் துறைமுகத்தில் வந்திறங்கினான் என்பது பற்றித் தெரியவில்லை. இராசரட்டை மாகனின் ஆட்சியின் கீழ் இருந்தமையால் பௌத்த புனித சின்னங்கள் அதிகளவில் இரண்டாம் பராக்கிரமபாகு மன்னனின் பாதுகாப்பிலே இருந்தன. சந்திரபானுவை விரட்டியடித்த பின்னர் வீரபாகு ஆதிபாதன் தெவிநுவர சென்று அங்கு பூஜை ஒன்றை நடாத்தினான். எனவே சந்திரபானுவின் படையெடுப்பு தென்பகுதியூடாக இடம் பெற்றிருக்கலாம் என நாம் கருத இடமுண்டு. அவன் தென்னிலங்கைத் துறைமுகம் ஒன்றின் ஊடாக நாட்டினுள் பிரவேசித்திருக்கலாம் என்று கருதுவது தோல்வியடைந்த சந்திரபானு தாயகம் திரும்பினானா? அல்லது இலங்கையின் வட பகுதியில் ஒளிந்திருந்தானா? என்பதுவும் உறுதியாகத் தெரியவில்லை. முதலாவது ஆக்கிரமிப்பின் பின்னர் அவன் 14 வருடங்கள் கழித்து 2ஆம் பராக்கிரமபாகு மன்னனின் இராச்சியத்தை (மாயரட்டவை) ஆக்கிரமித்தான். அதற்குச் சில வருடங்களுக்கு முன்னர் 2ஆம் பராக்கிரமபாகு எவ்வாறு மாகனை தோற்கடித்தான் என்பதைப் பார்ப்போம்.

## மாகனைத் தோல்வியடையச் செய்தல்

2ஆம் பராக்கிரமபாகு மன்னன் அரசபதவியில் அமர்கையில் (1236) இராசரட்டை மாகனின் ஆட்சியின் கீழ் இருந்தது. 2ஆம் பராக்கிரமபாகு சம்பிரதாயப்படி முடிசூடிக்கொண்ட நாள் (1236) முதல் அகில இலங்கைக்குமான சட்டபூர்வமான ஆட்சியாளனாக அவனை அங்கீகரித்த பழைய வம்சக் கதையாளர்கள் பலாத்காரமாக இராசரட்டையைக் கைப்பற்றியிருந்த மாகனின் ஆட்சிக் காலம் 21 வருடங்கள் (1215 - 1236) எனக் குறிப்பிடுவர். ஆயினும் தம்பதெனியாவிலிருந்து 2ஆம் பராக்கிரமபாகு ஆட்சி செய்யும்போது இராசரட்டையை மாகன் ஆட்சி செய்தான். 2ஆம் பராக்கிரமபாகு ஆட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீடமேறி இரண்டு தசாப்தங்களுக்குப் பின்னரே அவனால் மாகனை வெற்றிகொள்ள முடிந்தது.

மாகனின் தோல்விக்கு அண்மிய காலம் பற்றி வம்சக் கதைகள் கூறும் விபரங்கள் நம்பகத் தன்மை குறைந்தனவாகும். அவ்விபரம் வருமாறு; 2ஆம் பராக்கிரமபாகு மன்னனின் தீரச் செயல்களால் இனிமேலும் இலங்கையில் தம்மால் நிலைகொள்ள முடியாது என்பதை அறிந்த சேர நாட்டுப் படையினர் பொலன்னறுவை நோக்கி பின்வாங்கினர். பொலன்னறுவையின் கிழக்கு வாசல் என தவறுதலாக நினைத்த அவர்கள் மேற்குவாசல் ஊடாக வெளியேறினர். அப்போது கலாவாவிக் கரையில் முகாமிட்டிருந்த சிங்களப் படையினர் அவர்களை முழுமையகக் கொன்றொழித்தனர். இவ்வாறு ஓர் இலகுவான வெற்றி 2ஆம் பராக்கிரமபாகுவுக்கு கிடைத்தமை சந்தேகத்துக்கிடமானது ஏனெனில் மாகனின் பலம் வாய்ந்த போர்ப்படைகள் இருந்ததாக நாம் ஏற்கனவே அறிந்துள்ளோம். எவ்வாறோ மாகனின் 40 வருட ஆட்சிக் காலம் 1255ஆம் ஆண்டு முடிவுற்றமை தெரிகின்றது. 2ஆம் பராக்கிரமபாகு மன்னனுக்கு சவாலாயமைந்த பிரபலமான எதிரி இவ்வாறு அழிவுற்றமை மன்னனுக்குப் பெரும் மன நிம்மதியைக் கொடுத்த சம்பவமாக அமைந்திருக்கும். இராசரட்டை ஆக்கிரமிப்பாளனான மாகனை வெற்றி கொண்டாலும் அவ்விராச்சியத்தைத் தனது இராச்சியத்துடன் சேர்த்துக் கொள்ள முடியாமற் போனது. ஏனெனில் மன்னன் மற்றுமொரு படையெடுப்பை எதிர்க்கொள்ள வேண்டியிருந்தது. அவ்வாக்கிரமிப்பாளன் வேறு யாருமல்ல. ஒரு தடவை மாயாரட்டையை ஆக்கிரமித்து தோல்வியடைந்த சந்திரபானு ஆவான்.

## சந்திரபானுவின் இரண்டாவது படையெடுப்பு

முதல் படையெடுப்பில் தோல்வியடைந்த சந்திரபானு தென்னிந்தியாவின் சோழ, பாண்டிய நாடுகளிலிருந்து திரட்டிய கூலிப் படையினருடன் மீண்டும் ஒரு முறை இலங்கையை ஆக்கிரமித்தான். தனது படைகளுடன் யாப்பகுவையை அடைந்த சந்திரபானு புனித தந்ததாது, பாத்திர தாதுக்களுடன் இராச்சியத்தையும் தன்னிடம் ஒப்படைக்குமாறு 2ஆம் பராக்கிரமபாகு மன்னனை எச்சரித்தான். வெளிநாட்டு எதிரிகளின் ஆக்கிரமிப்புத் தொடர்பாக விழிப்புடனிருந்த 2ஆம் பராக்கிரமபாகு மன்னன் தனது மூத்த புதல்வன் விஜயபாகு இளவரசன் உள்ளிட்ட அரச குமாரர்களை ஆயுதந்தரித்து பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தினான். இறுதியில் சந்ரபானுவை மன்னன் வெற்றி கொண்டான். அதற்கான போரில் சந்திரபானு உயிரிழந்ததாகப் பாண்டிய நாட்டு கல்வெட்டுக்கள் உறுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்கின்றன. இரண்டாம் பாண்டியப் பேரரசின் படை உதவியும் அப்போரின் போது மன்னனுக்குக் கிடைத்துள்ளது. எனவே அதற்கீடாக பாண்டிய மன்னன் தனது பிரதிநிதியாக ஜாவா நாட்டு மன்னனின் மகன் ஒருவனை வட இலங்கையில் அமர்த்தியதாகப் பாண்டியக் கல்வெட்டொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் 2ஆம் பராக்கிரமபாகு மன்னன் நீண்ட காலமாக எதிரிகளுடன் போராடி இலங்கையின் சுயாதீனத் தன்மையை மீண்டும் கட்டியெழுப்புவதில் வெற்றி கண்டுள்ளான்.

## உசாத்துணை நூல்கள் :-


1. இலங்கைப் பல்கலைக்கழக இலங்கை வரலாறு தொகுதி I, பகுதி II செனரத் பரணவிதான (சிங்கள மொழி பெயர்ப்பு - 1971)

2. மத்திய கால இலங்கை வரலாறு அமரதாச லியனகமகே (கல்வி வெளியீட்டுத் திணைக்களம் - கொழும்பு 1989 சிங்கள மொழி பெயர்ப்பு)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் - 3

## அரசியல் வரலாறு - கி.பி.1271 - 1509

இரண்டாம் பராக்கிரமபாகு மன்னனின் மறைவின் பின்னர் 1271 இல் தம்பதெனிய அரசனான நான்காம் விஜயபாகு அல்லது போசத் விஜயபாகு எனும் மன்னனால் இரண்டு வருடங்களுக்கும் குறைவான காலமே ஆட்சி செய்ய முடிந்தது. மித்த எனும் தளபதி ஒருவன் 1272ஆம் ஆண்டு அரண்மனைச் சேவகன் ஒருவனுக்கு இலஞ்சம் கொடுத்து மன்னனைக் கொலை செய்து தான் அரசனானான். சிம்மாசன உரிமையற்ற ஆட்சியாளனான மித்த அன்பளிப்புகள், கொடுப்பனவுகள் மூலம் படைத் தலைவர்களை தன்பக்கம் வளைத்துக் கொண்டு 4ஆம் விஜயபாகுவின் சகோதரனான புவனேகபாகு ஆதிபாதனையும் கொலை செய்வதற்குப் படை வீரர்களை அனுப்பினான். புவனேகபாகு எதிரிகளிடமிருந்து யாப்பகுவைக்கு தப்பிச் சென்றான். இக்கால கட்டத்தில் இலங்கை மன்னனின் படையில் சேவை புரிந்த அந்நியரான ஆரியப் படையினர் முறை கேடாக ஆட்சி பீடமேறிய மித்தவுக்குப் பணிந்து செல்லவில்லை. அவர்களின் தலைவனான தகூரக எனும் தளபதி மித்தவைக் கொலை செய்தான். தான் அவ்வாறு செய்தது சிம்மாசன உரிமையாளனான புவனேகபாகு இளவரசனின் அனுமதியுடனாகும் என்று சிங்களப் படைத் தளபதிக்கு தெளிவுபடுத்தி அவனையும் தன்பக்கம் சேர்த்துக் கொண்ட தகூரக புவனேகபாகுவை அழைத்து வந்து அரியணை ஏற்றினான்.

### யாப்பகுவ இராசதானிக் காலம் (1272 - 1300)

முதலாம் புவனேகபாகு வெற்றிகரமாக கிளர்ச்சிகளை அடக்கி 1272 இல் தம்பதெனியவுக்கு அரசனான போதிலும் அவனுக்குப் பல்வேறு பகுதிகளிலிருந்தும் அரசியல் எதிர்ப்புகள் கிளம்பின. இரண்டாம் பராக்கிரமபாகு, போசத் விஜயபாகு மன்னர்களுக்கு ஆதரவாக செயற்பட்ட சில வன்னித் தலைவர்கள் புவனேகபாகுவுக்கு எதிராகக் கிளர்ந்தனர். கதலீவாட்ட, மாபான, திபஹிமியானக எனும் வன்னித் தலைவர்களை வம்சக் கதைகள் பெயர் குறித்துக் கூறுகின்றன. அத்துடன் காலிங்கராயர், சோடாங்க தேவர் எனும் இரண்டு தலைவர்களின் கீழ் தமிழர் படையெடுப்பு ஒன்றும் அதற்கிடையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வனைத்து சவால்களுக்கும் புவனேகபாகு மன்னன் வெற்றிகரமாக முகங்கொடுத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அனுபவங்களுக்கு மேலதிகமாக வடக்கில் உருவாகிக் கொண்டு வந்த மற்றுமோர் எதிர்கால சவாலுக்கும் மன்னன் முகங்கொடுக்க நேர்ந்தது. சந்திரபானுவின் இரண்டாவது ஆக்கிரமிப்பை எதிர்ப்பதற்காக தம்பதெனிய ஆட்சியாளர்கள் பாண்டிய மன்னனிடம் படையுதவி கேட்டதை ஏற்கனவே அறிந்தோம். சந்திரபானுவை தோற்கடித்த பின்னர் பாண்டியப் பேரரசன் தனது பிரதிநிதியாக சந்திரபானுவை வட இலங்கையின் நிருவாகத்துக்காக நியமனம் செய்திருந்ததாக பாண்டியக் கல்வெட்டுக்கள் மூலம் அறிய முடிகின்றது. அந்த சந்திரபானுவின் மகனும் சந்திரபானு எனும் பெயராலே அழைக்கப்படுகிறான். 1292 இல் மார்க்கோ போலோ எனும் தேச சஞ்சாரி இலங்கை வரும்போது வட இலங்கை ஆட்சியாளனாக அவர் குறிப்பிடும் செந்தமேன் என்பவன் இந்த சந்திரபானுவின் மகனாக இருக்கலாம் என்பது பலரதும் அபிப்பிராயமாகும்.அதற்குக் காரணம் சந்திரபானு, செந்தமேன் எனும் சொற்களின் ஒத்த தன்மையாகும். 1272 இல் பாண்டியப் பேரரசனின் அனுசரணை பெற்ற அவ்வாறானதோர் ஆட்சியாளன் வடக்கில் இருந்திருந்தால் தெற்கே சிங்கள ஆட்சியாளர்கள் அது பற்றி விழிப்புடன் இருப்பதற்கு நேர்ந்திருக்கும். எனவே அது போன்றதோர் ஆட்சியாளனிடமிருந்து எந்த நேரத்திலும் ஓர் எதிர்ப்பு ஏற்படலாம் என்பதை எதிர்பார்த்த புவனேகபாகு அதற்கு ஆயத்தமாகவே இருந்தான். எனவே அந்நிலைமையில் தம்பதெனியாவை விட யாப்பகுவ பாதுகாப்பான இடமாகத் திகழ்ந்தது. அது ஆரம்பத்தில் பொலன் னறுவையில் ஆட்சி செய்த மாகனிடமிருந்து பாதுகாப்புப் பெறும் நோக்கில் சுப எனும் தளபதியால் உருவாக்கப்பட்ட ஒரு பாதுகாப்பான மலைக் கோட்டையாகும். சந்திரபானுவின் இரண்டாவது ஆக்கிரமிப்பும் யாப்பகுவையில் வைத்தே முறியடிக்கப்பட்டது. இந்த வரலாற்று அரசியல் பின்னணி பற்றிக் கவனம் செலுத்திய முதலாம் புவனேகபாகு மன்னன் தம்பதெனியாவைக் கைவிட்டு யாப்பகுவவைத் தலைநகராக்கிக் கொண்டான்.

இக்காலகட்டத்தில் இந்து சமுத்திரத்தில் வெளிநாட்டு வர்த்தகத்தில் அராபியர் ஈடுபட்டிருந்தனர். இலங்கையில் மேற்குக் கரை துறைமுகங்களில் நடைபெற்ற ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகத்தில் இடைத் தரகர்களாகச் செயற்பட்ட அவர்கள் அதிக இலாபம் ஈட்டினர். இந்த இடைத் தரகர்கள் இல்லாமல் எகிப்திய சுல்தானுடன் நேரடியாகவே அரசியல் தொடர்புகளையும் வர்த்தகத் தொடர்புகளையும் வளர்த்துக்கொள்வதற்கு முதலாம் புவனேகபாகு மன்னன் அக்கரை காட்டியமை தெரியவருகின்றது. அவன் இலங்கையில் வளங்கள் மற்றும் வர்த்தகம் பற்றிய விடயங்களை வெளிப்படுத்தி நேரடியாகவே வர்த்தகத் தொடர்பை வைத்துக்கொள்வதற்கு விருப்பம் தெரிவித்து 1283 ஏப்ரல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதம் ஒரு தூதுக் குழுவை எகிப்து சுல்தானிடம் அனுப்பி வைத்தான். ஆயினும் 1284 ஆம் ஆண்டு முதலாம் புவனேகபாகு மன்னன் மரணமடைந்தான்.

1284 ஆம் ஆண்டின் பின்னரான 3,4 வருட அரசியல் வரலாறு தெளிவற்றதாயுள்ளது. இக்காலகட்டமானது 'ராஜாந்திரம்' என்று ''தலதாசிரித'' எனும் இலக்கியம் குறிப்பிடுகின்றது. ராஜாந்திரம் என்பதற்கு இரண்டு விளக்கங்களை வழங்கலாம். ஒன்று அரசாட்சிக் காலம் இரண்டுக்கு இடைப்பட்ட காலம், அடுத்தது வெளிநாட்டு ஆட்சியாளன் ஒருவனின் ஆட்சிக்காலம் என்பதாகும்.

இக்காலகட்டத்தில் பின்வரும் விடயம் இடம்பெற்றுள்ளது. முதலாம் புவனேகபாகு மன்னனின் மரணத்தின் பின்னர் நாட்டில் ஒரு குழப்ப நிலை தோன்றியது. அதாவது போசத் விஜயபாகு மன்னனின் மகனான பராக்கிரமபாகு இளவரசனுக்கும் புவனேகபாகு மன்னனின் மகனான இரண்டாம் புவனேகபாகு இளவரசனுக்குமிடையில் சிம்மாசன உரிமைப் போராட்டம் நிகழ்ந்துள்ளமையை அதன் பின்னர் நிகழ்ந்த சம்பவங்கள் தெளிவுபடுத்துகின்றன. இவ்வாறிருக்கும்போது ஆரியச் சக்கரவர்த்தி தலைமையில் வந்த பாண்டியப் படையினர் யாப்பகுவவை ஆக்கிரமித்து அங்கிருந்த புனித தந்ததாது, பாத்திர தாதுக்களை பாண்டியப் பேரரசனிடம் ஒப்படைத்துள்ளனர். அதன் பின்னர் போசத் விஜயபாகு மன்னனின் மகன் பராக்கிரமபாகு இளவரசன் பாண்டிய நாடு சென்று பாண்டிய மன்னனுடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடாத்தி புனித தந்ததாது, பாத்திர தாதுக்களைப் பெற்றுக்கொண்டு நாடு திரும்பி மூன்றாம் பராக்கிரமபாகு எனும் பெயரில் பொலன்னறுவையில் சிம்மாசனம் ஏறினான்.

கி.பி 4 ஆம் நூற்றாண்டு கீர்த்தி ஸ்ரீ மேவன் ஆட்சிக்காலத்தில் இலங்கைக்கு எடுத்து வரப்பட்ட நாள் முதலான ஒன்பது நூற்றாண்டு காலமாக புனித தந்ததாது இலங்கைக்கு வெளியே கொண்டு செல்லப்பட்டதில்லை. அடுத்ததாக பொலன்னறுவைக் காலம் முதல் புனித தந்த தாது இலங்கை ஆட்சி உரிமையின் சின்னமாகக் கருதப்பட்டது. தந்ததாதுவை தன்வசம் வைத்திருப்பவனே இலங்கை மன்னனாவான் என்ற கருத்து நிலவிவந்தது. அவ்வாறு மேன்மையானதும் பூஜைக்குரியதுமான புனித தந்ததாது நாடுவிட்டு நாடு கவர்ந்து செல்லப்பட்டமை பற்றி வம்சக் கதைகளில் போதியளவு தரவுகள் குறிப்பிடப்படவில்லை.

இந்தக் கருத்துக்கள் அனைத்தையும் கருத்திற் கொண்டு பேராசிரியர் செனரத் பரணவிதான அவர்கள் பின்வரும் கருத்துக்கு வாசகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனத்தைத் திருப்புகிறார். அரசுரிமை பற்றி போசத் விஜயபாகு மன்னனின் மகன் பராக்கிரமபாகு இளவரசனுக்கும் இரண்டாம் புவனேகபாகு இளவரசனுக்குமிடையில் போட்டி நிலவியபோது வட இலங்கையை ஆட்சி செய்த ஜாவா மன்னன் யாப்பகுவையை ஆக்கிரமித்து தந்ததாது, பாத்திர தாதுக்களை தன் வசபபடுத்தி அங்கு தனது ஆட்சியை நிலை நிறுத்தியிருப்பான். முன்னைய ஆக்கிரமிப்பாளர்களான மாகன் மற்றும் சந்திரபானுவை துரத்துவதற்காக பாண்டிய மன்னனிடம் உதவி கோரிய சிங்கள மன்னர்களைப் போன்று இந்த ஜாவா ஆக்கிரமிப்பாளனைத் முறியடிப்பதற்கும் சிங்கள மன்னர்கள் பாண்டிய மன்னனிடம் படை உதவி கோரியிருக்கலாம். சிலவேளை அவ்வுதவியை பராக்கிரமபாகு இளவரசரே கேட்டிருக்கலாம். எனவே பாண்டிய நாட்டிலிருந்து வந்த ஆரியச் சக்கரவர்த்தி, சந்திரபானுவை வடக்கே விரட்டியடித்து, புனித சின்னங்களை எடுத்துச் சென்று பாண்டிய மன்னனிடம் கையளித்திருக்கலாம். ஆகவே பாண்டிய மன்னனிடம் உதவி கோரிய பராக்கிரமபாகு இளவரசன் அங்கு சென்று புனித சின்னங்களைப் பெற்று வந்து பொலன்னறுவையில் ஆட்சி பீடமேறினான்.




தம்பதெனிய, குருணாகலை, கம்பளை, கோட்டை யுகங்களின் போது இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு மூன்றாம் பராக்கிரமபாகு மன்னன் 1287ஆம் ஆண்டு பொலன்னறுவை அரசனானான். ஆயினும் அதிக காலம் அவனால் அங்கு ஆட்சியில் நீடிக்க முடியவில்லை. ஏனெனில் முதலாம் புவனேகபாகு மன்னனின் மகன் இரண்டாம் புவனேகபாகு இளவரசன் பொலன்னறுவை சென்று மூன்றாம் பராக்கிரமபாகு மன்னனிடமிருந்த புனித சின்னங்களைக் கவர்ந்து வந்து ஸ்ரீநிவாச புவனேகபாகு எனும் பெயரில் 1292ஆம் ஆண்டு யாப்பகுவை மன்னனாக ஆட்சி பீடமேறினான். அவன் அங்கிருந்து ஏழாண்டுகள் ஆட்சி செய்ததுடன் குருணாகலையைத் தலைநகராகக் கொண்டு இன்னும் இரு வருடங்கள் ஆட்சி செய்தான். இவ்வாறு 1300ஆம் ஆண்டளவில் குருணாகலை இலங்கையின் தலைநகரானது. 1302ஆம் ஆண்டு இரண்டாம் புவனேகபாகுவின் மகன் நான்காம் பராக்கிரமபாகு குருணாகலையில் ஆட்சி பீடமேறினான்.

## குருணாகலை இராசதானி (1300 1341)

குருணாகலை இராசதானியின் 1300 முதல் 1326 வரையிலான காலகட்டத்தில் அரசியல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் எதுவும் இடம் பெறவில்லை. மாகனின் ஆக்கிரமிப்பின் பின்னர் உலர் வலயத்தை முழுமையாகக் கைவிட்டு தென்மேல் திசை நோக்கி இடம்பெயர்ந்த சிங்கள நாகரிகம் தென்மேல் ஈர வலயத்தில் நிலை கொண்ட முதலாவது கட்டமாவது தம்பதெனியாவின் இரண்டாவது பராக்கிரமபாகுவின் ஆட்சிக் காலமும் இரண்டாவது கட்டமாக குருணாகலையின் நான்காம் பராக்கிரமபாகுவின் ஆட்சிக்காலமும் ஆகும் என்று நாம் கருதலாம். ஏனெனில் இவ்விரு காலகட்டங்களும் புத்த சாசனத்தினதும் கலைத்துறையினதும் இரண்டாவது அபிவிருத்திக் காலகட்டமாகும் எனவும் குறிப்பிடலாம். நான்காம் பராக்கிரமபாகு மன்னனின் புத்த சாசன சேவையானது நிகழ்கால குருணாகலை மாவட்டத்தைத் தாண்டி கண்டி, கேகாலை, இரத்தினபுரி, களுத்துறை, காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்களிலும் பரவியுள்ள விதத்தைப் பார்க்கும்போது தென்மேல் ஈரவலயம் முழுமையாக அவனுடைய ஆட்சி நிலவியமை தெளிவாகின்றது.

மூன்றாம் விஜயபாகு மன்னனுடன் ஆரம்பித்த தம்பதெனிய அரசவம்சத்தின் இறுதி மன்னன் நான்காம் பராக்கிரமபாகு மன்னனாவான். அவனது ஆட்சியின் இறுதி ஆண்டாக 1326 கருதப்பட்டாலும் அவனது ஆட்சி முடிவும் குருணாகலை இராசதானியின் முடிவும் எவ்வாறு நிகழ்ந்தன என்பது பற்றி தெளிவான தகவல்கள் இல்லை. பிற்காலத்தில் எழுதப்பட்ட ‘சன்னச’ எனப்படும் எழுத்தாவணம் ஒன்றின் மூலம் பின்வரும் தகவலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியக் கூடியதாகவுள்ளது. அதாவது போதா மாபான என்பவனால் மேற்கொள்ளப்பட்ட கிளர்ச்சி காரணமாக குருணாகலையிலிருந்த பௌத்த பிக்குகளும் பொது மக்களும் மலைநாடு மற்றும் தென்மாகாணத்துக்குப் புலம் பெயர்ந்துள்ளனர்.

1326 முதல் 1341 வரையிலான பதினைந்து வருட காலத்தில் ஆட்சி செய்த இரு மன்னர்கள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்கள் மூன்றாம் புவனேகபாகு மற்றும் ஐந்தாம் சவுளு விஜயபாகு என்போராவர். அவர்களின் தலைநகரம் பற்றியோ முக்கியம் வாய்ந்த சம்பவங்கள் பற்றியோ அறிந்து கொள்வதற்கும் போதிய ஆதாரங்கள் இல்லை.

மேற்குறிப்பிட்ட குருணாகலையின் நான்காம் (பண்டித) பராக்கிரமபாகு மன்னனின் ஆட்சிக் காலத்தின் இறுதியில் இடம் பெற்றதாகக் கூறப்படும் கிளர்ச்சியை மேற்கொண்ட போதா மாபான என்பவன் யாப்பகுவையில் முதலாம் புவனேகபாகு மன்னனின் ஆட்சிக் காலத்தில் கிளர்ச்சி செய்த வன்னித் தலைவர்களுள் ஒருவனாவான் எனக் கருதலாம். அதன்படி நான்காம் பராக்கிரமபாகு மன்னனனின் பின்னர் ஆட்சிக்கு வந்த மூன்றாம் (வன்னி) புவனேகபாகுதான் அந்த போதா மாபான என்றும் ஊகிக்க முடிகின்றது. அது தவிர அவன் பற்றி வேறு தகவல் எதுவுமில்லை.

அவனையடுத்து ஆட்சிக்கு வந்தவனாகக் கருதப்படும் சவுளு விஜயபாகு என்பவன் பலம் வாய்ந்த மன்னன் என மகாவம்சம் குறிப்பிடுகின்றது. அவனது பெயரின் முன் பாதியான சவுளு என்பது பற்றி வரலாற்றியலாளரிடம் பொதுவான கருத்துக் காணப்படவில்லை. அவன் எங்கிருந்து ஆட்சி செய்தான் என்பது பற்றியும் சரியாகத் தெரியவில்லை.

கம்பளை இராசதானியின் ஆரம்பத்தில் ஆட்சி செய்த நான்காம் புவனேகபாகு மற்றும் ஐந்தாம் பராக்கிரமபாகு எனும் மன்னர்கள் சவுளுவின் புத்திரர்களாவர் என்பதை அறியமுடிகின்றது. சவுளு விஜயபாகுவின் ஆட்சி முடிவில் 1341 முதல் நான்காம் புவனேகபாகு கம்பளையிலும் 1344 முதல் ஐந்தாம் பராக்கிரமபாகு தெதிகமையிலும் ஆட்சி புரிந்ததாக அவர்களின் கல்வெட்டுக்கள் மூலம் அறிய முடிகின்றது.

அந்தக் கல்வெட்டுக்களின் சம காலத்தைய ‘நிகாய சங்கிரஹய’ எனும் நூலை ஆதாரமாகக் கொண்டு மகாவம்சம் இக் காலகட்டம் பற்றிக் குறிப்பிடும்போது 1347 ஆம் ஆண்டு நான்காம் புவனேகபாகு அரசனானதாகவும் அவனது மறைவை அடுத்து 1351 இல் ஐந்தாம் பராக்கிரமபாகு ஆட்சிக்கு வந்ததாகவும் உறுதியாகக் கூறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதிலிருந்து மூன்று விடயங்கள் தெளிவாகின்றன. அதாவது சவுளு விஜயபாகுவின் ஆட்சிக்காலத்திலேயே அவனது மகன் புவனேகபாகு 1341 முதல் கம்பளையிலும் ஐந்தாம் பராக்கிரமபாகு 1344 முதல் தெதிகமவிலும் 'ஏபா' எனும் பிராந்திய ஆட்சியாளர்களாகப் பதவியேற்றுள்ளனர் என்பது முதலாவது விடயமாகும். இரண்டாவது விடயம் அவர்களிருவரும் 'ஏபா' பதவியேற்ற ஆண்டினையே தமது ஆரம்ப ஆட்சி வருடமாகக் கல்வெட்டுக்களில் பொறித்துள்ளனர் என்பதாகும். மூன்றாவது விடயம் நிகாய சங்கிரஹய மற்றும் வம்சக் கதைகள் மரபுப்படி முடி சூடிய மன்னனின் மரணம் நிகழ்ந்த ஆண்டையே அடுத்த மன்னனின் ஆரம்ப ஆட்சியாண்டாகக் கொண்டுள்ளன என்பதாகும். எனவே நிகாய சங்கிரஹய நான்காம் புவனேகபாகு ஆட்சிக்கு வந்த ஆண்டாக 1347 ஆம் ஆண்டை கணக்கிடுவதற்கான காரணம் முன்னிருந்த ஆட்சியாளன் 1347 வரை ஆட்சியில் இருந்ததினாலாகும் அவ்வாட்சியாளன் அவனது தந்தையான சவுளு விஜயபாகுவாகும். எனவே அம்மன்னன் 1347 வரை ஆட்சி செய்துள்ளமை தெளிவாகின்றது. இவ்வாறு குருணாகலையின் நான்காம் பராகிரமபாகு மன்னனின் மறைவையடுத்து 1326 முதல் 1347 வரையான காலப் பகுதியில் மூன்றாம் (வன்னி) புவனேகபாகு மற்றும் சவுளு விஜயபாகு எனும் மன்னர்கள் ஆட்சிபுரிந்துள்ளமை புலனாகின்றது.

## கம்பளை இராசதானி (1341 - 1415)

கம்பளை இராசதானிக் காலத்தின் அரசியலைப் புரிந்து கொள்வதற்கு உதவும் பிரதான விடயங்கள் சிலவற்றை ஆரம்பத்திலே ஞாபகம் வைத்துக் கொள்வது நல்லது. அதில் முதலாவது இந்த யுகத்தின் ஆட்சி வருடங்களைக் கணிப்பதில் உள்ள முரண்பாடாகும். இந்த யுகத்துக்குரிய நான்காம் புவனேகபாகு, ஐந்தாம் பராக்கிரமபாகு, மூன்றாம் விக்கிரமபாகு, ஐந்தாம் புவனேகபாகு எனும் மன்னர்கள் அனைவரும் தமக்கு முன்னைய மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் ஏபா எனும் பதவியை வகித்து வந்திருப்பதுடன் தமது கல்வெட்டுக்களில் தமதாட்சிக் காலத்தைக் குறிப்பிடும் போது அரசனாவதற்கு முன்னர் ஏபா (இளவரசன்) பதவியை ஏற்ற வருடத்தையே தமது ஆட்சிக் காலமாகக் குறிப்பிட்டுள்ளனர். ஆயினும் அதே சமகால நிகாய சங்கிரஹய எனும் நூலில் குறிப்பிட்ட ஒரு மன்னனின் ஆட்சிக் காலம் அதற்கு முன்னைய அரசனின் ஆட்சிக் காலம் முடிவடைந்ததிலிருந்தே குறிப்பிடப்படுகின்றது. இந்த யுகம் பற்றிய கலந்துரையாடலின் முடிவில் உள்ள அரசர்களின் ஆட்சிக்கால அட்டவணையை அவதானித்து இந்தச் சிக்கலைப் பற்றிப் புரிந்து கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய இரண்டாவது விடயம் யாதெனில் இக்கால கட்டத்தில் கம்பளை அரச குடும்பங்களுடன் தொடர்புடைய பிரதானமான இரு பிரதானிகள் குடும்பங்கள் காணப்பட்டமையாகும். நான்காம் புவனேகபாகு மற்றும் ஐந்தாம் பராக்கிரமபாகு சகோதரர்களின் ஆட்சிக் காலத்தில் அவர்கள் சார்பில் நாட்டின் அரசியல் நிருவாகத்தை செயற்படுத்திய சேனாதிலங்கார குடும்பம் அதில் முதலாவதாகும். இந்த சேனாதிலங்கார எனும் படைத் தளபதி ஐந்தாம் பராக்கிரமபாகு மன்னனின் சகோதரியைத் திருமணம் செய்திருந்ததுடன் அவர்களிருவருக்கும் பிறந்த மகனான விக்கிரமபாகு என்பவனே கம்பளையின் மூன்றாவது ஆட்சியாளன் என்பதும் குறிப்பிடத்தக்கது. அடுத்த பிரதானி குடும்பம் அழகேஸ்வர அல்லது அழகக்கோனார் குடும்பமாகும். களுத்துறை மாவட்டத்தின் றைகமைவைப் பிறப்பிடமாகக் கொண்ட அழகக்கோனார் பரம்பரையின் நிஸ்ஸங்க அழகக்கோனார் 1360ஆம் ஆண்டிலிருந்து கம்பளை அரசனான மூன்றாம் விக்கிரமபாகு மன்னன் சார்பில் நாட்டின் அரசியல் நிருவாகத்தை செயற்படுத்தியவனாவான். ராஜபிரபு என அழைக்கப்பட்ட அவன் மூன்றாம் விக்கிரமபாகு மன்னனின் சகோதரியை திருமணம் செய்திருந்தான். அவர்களிருவருக்கும் பிறந்தவனே அடுத்து ஆட்சிபீடமேறிய ஐந்தாம் புவனேகபாகு ஆவான். இந்த ராஜபிரபு அழகேஸ்வர என்பவரின் சகோதரியின் பிள்ளைகளான அழகக்கோனார், அர்த்தநாயக, தேவமந்திரி எனும் மூவரும் ஐந்தாம் புவனேகபாகு மன்னனின் அரசவையில் உயர் பதவிகளை வகித்து வந்தனர்.

கம்பளை யுகத்தைப் பற்றிக் கற்கையில் கவனம் செலுத்த வேண்டிய மூன்றாவது விடயம் அரச உரிமை பற்றியதாகும். அதுவரை காலமும் இலங்கையில் நிலவிவந்த தந்தையிடமிருந்து மகனுக்கு அல்லது சகோதரனிடமிருந்து சகோதரனுக்கு எனும் தந்தை வழி அரசுரிமை முறையானது மாமாவிடமிருந்து மருமகனுக்கு அல்லது அரசனின் சகோதரியின் மகனுக்கு அரசுரிமை செல்லும் தாய் வழி முறையாக மாறியமைந்தது. மேற்கூறப்பட்ட உதாரணங்களின்படி ஐந்தாம் பராக்கிரமபாகுவின் பின்னர் அவனது சகோதரியின் மகன் விக்கிரமபாகுவுக்கும் விக்கிரமபாகுவின் பின்னர் அவனது சகோதரியின் மகன் புவனேகபாகுவுக்கும் அரசுரிமை கிடைத்தது இவ்வாறான முறையிலேயே ஆகும். அழகக்கோனார் குடும்ப உரிமை முறையானது தாய் வழியில் வந்த உரிமை முறையாகும்.

கம்பளை யுகம் பற்றிய நான்காவது முக்கிய விடயம் யாதெனில் இலங்கையின் வடக்கே ஆரியச் சக்கரவர்த்தி என்னும் ஆட்சியாளர்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டை மையமாகக் கொண்டு பிரதேச ஆட்சியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொண்டமையாகும். 1360 ஆம் ஆண்டாகும்போது வடக்கே ஆட்சியிலிருந்த ஆரியச் சக்கரவர்த்தி கம்பளை இராசதானி மீது செல்வாக்குச் செலுத்தும் அளவுக்கு பலமுற்றிருந்தான். இக் காலகட்டத்தில் ஆரியச் சக்கரவர்த்தியின் படையினர் இரு தடவைகள் கம்பளையை ஆக்கிரமித்தனர்.

மேற்கூறப்பட்ட நான்கு விடயங்களையும் நினைவில் நிறுத்திக் கொள்வது கம்பளை யுகத்தைப் பற்றிக் கற்பதற்கு உதவியாக இருக்கும். 1344 ஆம் ஆண்டாகும்போது சவுளு விஜயபாகு மன்னன் குருணாகலையிலும் அவனது மூத்த மகனான நான்காம் புவனேகபாகு கம்பளையிலும் இரண்டாவது மகனான ஐந்தாம் பராக்கிரமபாகு தெதிகமையிலும் இருந்து ஆட்சி செய்ததாக ஏற்கனவே அறிந்தோம். பொலன்னறுவை யுகத்திலிருந்து புத்தசாசனத்தின் ஆலோசகரான தலைமைப் பிக்கு மன்னனுக்கு நெருக்கமாக தலைநகரிலே வாழ்வது மரபாயிருந்து வந்தது. ஆயினும் இக்காலகட்டத்தில் புத்த சாசனத்தின் தலைமைப் பிக்கு (மகாநாயக) பதவியை வகித்த சாகித்ய வில்கம்முல தேரர் குருணாகலையைக் கைவிட்டு அழகக்கோனார் எனும் அமைச்சரின் உதவியுடன் கித்சிறிமெவன் களனி விகாரையை திருத்தியமைத்து அங்கு வாழ்ந்ததாக 1344இல் அந்தத் தேரரால் எழுதப்பட்ட 'கீர்த்தி சிறி மேவன் களனி ஆவணம்' குறிப்பிடுகின்றது. அந்த எழுத்தாவணத்தில் தலைமைப் பிக்குவானவர் வருடத்தைக் குறிப்பிடும்போது மேற்கூறப்பட்ட எந்தவொரு ஆட்சியாளரதும் பெயரையோ ஆட்சி வருடத்தையோ குறிப்பிடவில்லை. இதிலிருந்து மேற்கூறப்பட்ட அரச புத்திரர்கள் இருவருள் எவரும் இலங்கை அரசனாக அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை என்று நாம் கருதலாம்.

1344 ஆம் ஆண்டு இலங்கைக்கு வருகை தந்த இஸ்லாமிய தேச சஞ்சாரியான இபின் பதூதா வடக்கில் ஆரியச் சக்கரவர்த்தி எனும் ஆட்சியாளன் இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். அவர் 'பாவா ஆதம் மலை' எனும் சிவனொளி பாத மலையைத் தரிசிப்பதற்கான யாத்திரையின்போது ஆரியச் சக்கரவர்த்தியின் எல்லையைத் தாண்டியவேளை அழகக்கோனார் எனும் பிராந்தியத் தலைவன் ஒருவனைச் சந்தித்ததாகவும் குறிப்பிடுகின்றார். 1344 இல் வில்கம்முல தலைமைப் பிக்கு கீர்த்திசிறமேவன் களனி விகாரையைத் திருத்தி அமைப்பதற்கு அனுசரணை வழங்கிய அழகக்கோனார் பரம்பரையின் பத்தாவது நபரான நிஸ்ஸங்க அழகக்கோனார் இபின் பதூதாவை சந்தித்தவர் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. அவர் றைகம பிரதேசத்தில் வாழ்ந்து வந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே கம்பளை இராசதானியின் ஆரம்பத்தில் 1344 ஆம் ஆண்டளவில் குருணாகலையில் சவுளு விஜயபாகுவும் கம்பளையில் அவனது மகன் நான்காம் புவனேகபாகுவும் தெதிகமையில் அவனது இரண்டாம் மகன் ஐந்தாம் பராக்கிரமபாகுவும் ஏபா எனும் பிரதேச ஆட்சியாளர்களாக செயற்பட்டு வந்துள்ளனர். இதற்கிடையில் கீர்த்தி சிறி மேவன் களனி விகாரையின் புனரமைப்புப் பணிகளுக்கு வில்கம்முல தேரருக்கு உதவியாக இருந்த அழகக்கோனார் றைகம பிரதேசத்திலும் ஆரியச் சக்கவர்த்தி யாழ்ப்பாணப் பிரதேசத்திலும் ஆட்சியாளர்களாக இருந்துள்ளனர்.

1347 ஆம் ஆண்டு சவுளு விஜயபாகுவின் மறைவையடுத்து நான்காம் புவனேகபாகு கம்பளையின் முடிக்குரிய அரசனாக ஏற்றுக் கொள்ளப்பட்டான். அப்போது தலைமைப் பிக்குவாக இருந்த வில்கம்முல தேரர் காலஞ் சென்ற பின்னர் அப்பதவிக்கு தெவனகல வனரதன மஹஸ்தவீர எனும் தேரர் தெரிவுசெய்யப்பட்டதுடன் அவர் நான்காம் புவனேகபாகுவுடன் நெருக்கமாக கம்பளையிலேயே வாழ்ந்து வந்துள்ளார். அப்போது நான்காம் புவனேகபாகு மன்னனுக்கு சேனாலங்காதிகார செனவிரத் எனும் முதலமைச்சர் இருந்துள்ளார். அவர் தலைமைப் பிக்குவின் வழிகாட்டலில் கிராம வாசம் செய்யும் பிக்குகளையும் வனவாசம் செய்யும் பிக்குகளையும் ஒன்று திரட்டி 1351 ஆம் ஆண்டு புத்த சாசனத்தில் திருத்தங்களை மேற்கொண்டுள்ளார்.

1351 இல் நான்காம் புவனேகபாகு மன்னன் மரணிக்கவே தெதிகமையிலிருந்த ஐந்தாம் பராக்கிரமபாகு கம்பளைக்கு அரசனானான். அப்போது சேனாதிலங்கார செனவிரத் என்பவர் தெற்கே தெவிநுவர, வெலிகம எனுமிடங்களில் புத்தசாசன நடவடிக்கைகளை மேற்கொண்டுவந்ததுடன் ஐந்தாம் பராக்கிரமபாகு மன்னனுக்கு தென்பகுதி மக்களின் ஆதரவையும் பெற்றுக் கொடுத்துள்ளார். மேற்குறிப்பிட்டவாறு கல்வெட்டுக்களின் ஆதாரப்படி மூன்றாம் விக்கிரமபாகுவும் 1357 ஆம் ஆண்டு முதல் 'ஏபா' பதவியிலிருந்து ஐந்தாம் பராக்கிரமபாகு மன்னனின் சம காலத்திலேயே நிருவாக நடவடிக்கைகளில் பங்கேற்றுள்ளான். இந்த மூன்றாம் விக்கிரமபாகு என்பவன் ஐந்தாம் பராக்கிரமபாகு மன்னனின் சகோதரிக்கும் சேனாலங்காதிகார செனவிரத்துக்கும் பிறந்தவனாவான் என்று நிலவும் அபிப்பிராயத்தை நாம் ஏற்கெனவே அறிந்தோம்.

1359 ஆம் ஆண்டு கம்பளையில் ஓர் அரசியல் புரட்சி நிகழ்ந்துள்ளது. அதாவது அப்போது ஏபா பதவியிலிருந்த மூன்றாம் விக்கிரமபாகு ஆட்சியிலிருந்த ஐந்தாம் பராக்கிரமபாகுவைத் துரத்திவிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1360 இல் கம்பளையில் ஆட்சிபீடமேறினான். இப்புரட்சியின்போது மூன்றாம் விக்கிரமபாகுவின் ஆதரவாளர்கள் வடக்கே ஆட்சிசெய்த ஆரியச் சக்கரவர்த்தியின் உதவியைப் பெற்றுள்ளனர். எனவே 1360 இல் செய்து கொண்ட கூட்டு ஒப்பந்தமொன்றின்படி மூன்றாம் விக்கிரமபாகு மன்னன் மலைநாட்டில் சிந்துருவான, பலவிட்ட, மாத்தளை, தும்பறை, சகமதுன்ரட்ட முதலிய இடங்களில் வரி அறவிடும் உரிமையை மார்த்தாண்ட பெருமாள் என்பவருக்கு வழங்கியிருந்தான். இந்த மார்த்தாண்ட பெருமாள் என்பவன் வடக்கே ஆட்சி செய்த ஆரியச் சக்கரவர்த்தியாக இருந்திருக்கலாம். மூன்றாம் விக்கிரமபாகு மன்னன் அவ்வாறு செய்தமைக்கான காரணம் ஐந்தாம் பராக்கிரமபாகுவை ஆட்சியை விட்டும் துரத்துவதற்கு உதவி செய்தமைக்கான நன்றிக் கடனாக இருந்திருக்கலாம்.

இந்த அரசியல் புரட்சியுடன் ஐந்தாம் பராக்கிரமபாகு மன்னனின் ஆட்சிக் காலம் முடிவடைய 1360 ஆம் ஆண்டிலிருந்து மூன்றாம் விக்கிரமபாகு மன்னனின் ஆட்சிக்காலம் ஆரம்பமானது. நான்காம் புவனேகபாகு ஐந்தாம் பராக்கிரமபாகு எனும் சகோதர மன்னர்களுக்கு முதலமைச்சராக இருந்த சேனாதிலங்காரவும் அரசியல் களத்தில் ஓரங்கட்டப்பட்டார். அதற்கடுத்த சில வருடங்களுள் மூன்றாம் விக்கிரமபாகு மன்னனின் முதலமைச்சர் பதவிக்கு பிரபலமானதொரு நபரின் வருகையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அவர் வேறு யாருமல்ல ராஜ பிரபு என்றழைக்கப்பட்ட நிஸ்ஸங்க அழகக்கோனார் எனும் முதலமைச்சராவார். இவர் 1344 - கீர்த்தி சிறி மேவன் களனி ஆவணத்தில் குறிப்பிடப்படும் அதே நிஸ்ஸங்க அழகக்கோனார் என்பவராக இருக்கலாம். மூன்றாம் விக்கிரமபாகு மன்னனின் முதலமைச்சராகப் பதவியேற்று சிறிது காலத்துக்குள்ளே அவர் அரசனின் சார்பாக நாட்டின் அரச நிருவாக இயந்திரத்தை இயக்கும் பிரதானியானார். இக்காலகட்டத்தில் வடக்கே ஆரியச் சக்கரவர்த்தியின் செல்வாக்கு தெற்கு நோக்கி மிக வேகமாகப் பரவத் தொடங்கியது. மேற்சொன்ன கூட்டு ஒப்பந்தத்தின் பிரகாரம் மலை நாட்டுப் பிரதேசங்களில் மட்டுமல்ல சிலாபம், நீர்கொழும்பு, வத்தளை, கொழும்பு முதலிய மேற்குக்கரைத் துறைமுகங்களிலும் அவனது ஆதிக்கம் பரவத் தொடங்கியது.

நிஸ்ஸங்க அழகக்கோனார் என்பவர் றைகமவின் வணிக வம்சம் எனும் வியாபாரக் குலத்தில் பிறந்தவராவார். அன்றைய காலகட்டத்தில் இலங்கையின் மேற்குக் கரையில் வளர்ச்சி கண்ட ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரத்தின் மூலம் கிடைத்த பெருந்தொகையான இலாபம் பற்றி அவர் தெளிவாக அறிந்திருந்தார் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. அந்த வருமானம் முழுதும் வடபகுதி ஆட்சியாளனான ஆரியச் சக்கரவர்த்தியைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றடைவதை கம்பளை அரசனின் முதலமைச்சர் என்ற வகையில் அவரால் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை.

மேற்குக் கரை துறைமுக வர்த்தகத்தைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரக்கூடிய ஓர் இடத்தில் கோட்டை கட்டி அங்கிருந்து ஆரியச் சக்கரவர்த்தியின் அதிகாரத்தை அடக்குவதை நிஸ்ஸங்க அழகக்கோனார் இலக்காகக் கொண்டு செயற்பட்டார். அதற்கு மிகவும் பொருத்தமான இடமாக கொழும்புக்கு அண்மையில் உள்ள இன்றைய கோட்டை எனும் இடத்தை அவர் தெரிவு செய்தார். களனி கங்கையின் கிளையாறான தியவண்ணா ஓயா இவ்விடத்திலிருந்து வட திசை நோக்கிப் பாய்ந்து முழங்கை வளைவெடுத்து மீண்டும் தென்திசை நோக்கித் திரும்பி பின்னர் மேற்குத் திசையாக கடலை நோக்கிப் பாய்கிறது. முழங்கை வளைவுக்கு ஒரு மைல் தெற்கே, கிழக்கிலிருந்து மேற்காக அதி அகலமாக அரை மைல் பரப்பைக் கொண்ட நிலப் பகுதி மூன்று புறமும் தியவண்ணா ஓயாவினாலும் அதற்குச் சமாந்தரமாகப் பரந்துள்ள சதுப்பு நிலத்தினாலும் இயற்கையாகவே சூழப்பட்டிருந்தது. முக்கோண வடிவிலான இந்த நிலப் பகுதி சுற்றிவர கபூக் கல்லினால் மதில் கட்டப்பட்டு பாதுகாக்கப்பட்டது. இவ்வாறு கட்டப்பட்ட கோட்டை மதிலின் இடையிடையே அமைக்கப்பட்ட கொத்தளங்களில் பயிற்றப்பட்ட வீரர்கள் பாதுகாப்புப் பணியில் அமர்த்தப்பட்டனர். படை வீரர்களை உளவியல் ரீதியாக பலப்படுத்துவதற்காக இலங்கையின் காவல் தெய்வங்களான உபுல்வன், சமன், விபீஷனன், கந்தன் கோயில்கள் கோட்டையின் இடையிடையே அமைக்கப்பட்டன. கோட்டையை எதிரிகள் சுற்றி வளைத்தால் உள்ளேயிருக்கும் படைவீரர்களின் தேவை கருதி போதியளவு உணவுப் பொருள்கள் கோட்டையினுள் களஞ்சியப்படுத்தப்பட்டன. இவ்வாறு முதலமைச்சர் அழகக்கோனார் போருக்கான சகல ஏற்பாடுகளையும் செய்து விட்டு துறைமுகங்களில் வரி அறவிடும் ஆரியச் சக்கரவர்த்தியின் அலுவலர்களைத் துரத்தி விட்டான். இதனால் கோபமடைந்த ஆரியச் சக்கரவர்த்தி தனது படையினரை அனுப்பி சிலாபம், நீர்கொழும்பு, கொழும்பு முதலிய துறைமுகங்களைக் கைப்பற்றிக் கொண்டான். தொடர்ந்தும் அழகக்கோனார் தனது படையினரை அனுப்பி அவர்களைத் துரத்தி விட்டு அப்பிரதேசங்களை மீண்டும் கைப்பற்றிக் கொண்டார்.

இவ்வாறு அழகக்கோனர் கோட்டையைக் கட்டியெழுப்பி ஆரியச் சக்கரவர்த்திகளிடம் இருந்த மேற்குக் கரை துறைமுக வர்த்தகத்தைத் தனது கைகளுக்கு எடுத்ததுடன் 1369ஆம் ஆண்டளவில் மூன்றாம் விக்கிரமபாகு மன்னன் சார்பில் நாட்டின் அரச நிருவாகத்தை இயக்கும் பிரதான நபராக மாறினார். 1351 இல் மேற்கொள்ளப்பட்ட புத்தசாசன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீர்த்திருத்த்தின்போது தலைமை வகித்த தெவனகல வனரதன தேரரின் மறைவைத் தொடர்ந்து சீலவங்ச தம்மகித்தி தேரர் அப்பதவிக்கு அமர்த்தப்பட்டார். முதலமைச்சரான நிஸ்ஸங்க அழகக்கோனார் சீலவங்ச தம்மகித்தி தேரரின் தலைமையில் கிராமவாச, வனவாச பௌத்த பிக்குகளை ஒன்று கூட்டி 1369 இல் அரச அதிகாரத்தைப் பாவித்து ஒழுக்க சீலமற்ற பௌத்த பிக்குகளின் காவியுடையை நீக்கி புத்த சாசனத்தில் சீர்த்திருத்தம் செய்தார்.

இக்காலகட்டத்தில் கம்பளை அரச சபையின் அதிகாரம் மிக்கவராகவும் செல்வாக்குள்ளவராகவும் நிஸ்ஸங்க அழகக்கோனார் திகழ்ந்தார். 'ராஜலங்கா மஹீதலே' எனும் சிறப்புப் பெயருடன் விக்கிரமபாகு இருக்கும்போதே சில அக்கால எழுத்தாவணங்களில் 'லங்காதிபதி ரஜு' (இலங்காதிபதி அரசன்) எனும் சிறப்புப் பெயரினால் நிஸ்ஸங்க அழகக்கோனார் சிறப்பிக்கப்படுகின்றார். விக்கிரமபாகு மன்னனின் அரசவையில் அழகேஸ்வரவுடன் சரிநிகராகத் திகழ்ந்த மற்றுமொரு பிரதானியாக ஹாஸ்கர ஜயமஹலேன என்பவர் காணப்பட்டார். இவர்களிருவரும் கம்பளை அரச சபையின் சூரிய, சந்திரர்கள் என வர்ணிக்கப்படுகின்றனர். ஹாஸ்கர ஜயமஹலேன அவர்கள் நியம்கம்பாய விகாரையைப் புனருத்தாரணம் செய்ததுடன் நிஸ்ஸங்க அழகக்கோனார் களனி விகாரையையும் புனருத்தாரணம் செய்து தமது பிறப்பிடமான றைகம பிரதேசத்தில் புத்த சாசன நடவடிக்கைகளை மேம்படுத்திக் கொண்டு கரையோர நிருவாகத்தையும் கண்காணித்த வண்ணம் கோட்டையில் தங்கியிருந்துள்ளனர். ராஜபிரபுவான நிஸ்ஸங்க அழகக்கோனார் கம்பளை விக்கிரமபாகு அரச குடும்பத்துடன் திருமணத் தொடர்புகள் வைத்திருந்தமையும் தெரிய வருகின்றது. அவர் விக்கிரமபாகுவின் சகோதரியைத் திருமணம் செய்திருந்தார். இவர்களுக்குப் பிறந்த குமாரன் மூன்றாம் விக்கிரமபாகுவின் காலத்திலேயே 1372 இல் ஏபா (இளவரசன்) பதவியைப் பெற்று நிருவாக நடவடிக்கைகளில் ஈடுபட்டதுடன் 1374 இல் மன்னனின் மரணத்தைத் தொடர்ந்து ஐந்தாம் புவனேகபாகு எனும் பெயரில் கம்பளை மன்னனானான்.

ஐந்தாம் புவனேகபாகு மன்னனின் 9 ஆம் ஆட்சி வருடத்தில் அதாவது 1381 இல் எழுதப்பட்ட சகம கல்வெட்டில் புவனேகபாகு மன்னனுக்கு முதலமைச்சராக இருந்த அழகேஸ்வர, தேவமந்திரி எனும் இரு சகோதரர்களைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. 1382 இல் எழுதப்பட்ட 'எலு அத்தனகலு வம்சம்' எனும் நூலில் ஸ்ரீ லங்காதீஸ்வர புவனேகபாகு மன்னனின் முதலமைச்சராக அழகேஸ்வரவின் பெயர் குறிப்பிடப் பட்டுள்ளதுடன் அதில் அர்த்த நாயக எனும் அவனின் மற்றுமொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதரன் பெயரும் இடம்பெற்றுள்ளது. இதன்படி 1382ஆம் ஆண்டாகும்போது ஐந்தாம் புவனேகபாகுவின் அரசவையில் அழகேஸ்வர, தேவமந்திரி, அர்த்த நாயக எனும் சகோதரர் மூவர் இருந்துள்ளதுடன் அவர்களுள் மூத்தவரான அழகேஸ்வர முதலமைச்சர் பதவியை வகித்துள்ளதுடன் அவர் 'லங்காதீஸ்வர' 'ராஜபிரபு' என்ற சிறப்புப் பெயர்களாலும் அழைக்கப்பட்டுள்ளார். இங்கு குறிப்பிடப்படும் அழகேஸ்வர என்பவர் கோட்டை நகரை உருவாக்கிய ராஜ பிரபு நிஸ்ஸங்க அழகக்கோனார் என இலங்கைப் பல்கலைக்கழகத்தின் இலங்கை வரலாற்றுப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயினும் இந்த அழகக்கோனார் ராஜ பிரபு அழகேஸ்வர அல்லவென்றும் அவரது சகோதரியின் மகனாவார் என்று நிலவும் கருத்தே சரியானது. இது பின்னர் அறியப்பட்டுள்ளது. இங்கு பிரபுராஜ அழகக்கோனார் என்பவர் ஐந்தாம் புவனேகபாகு ஆட்சி பீடமேறி சிறிது காலத்தில் இறந்து போனதாகவும் அவரின் சகோதரியின் மகனான அழகக்கோனார் முன்னவரின் மறைவுக்குப் பின்னர் முதலமைச்சராகப் பதவியேற்று ராஜ பிரபு அழகக்கோனார் என்று அழைக்கப்பட்டுள்ளதாக அறியப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிடப்பட்ட 1381 ஆம் ஆண்டு எழுதப்பட்ட சகம கல்வெட்டில் அழகேஸ்வர மற்றும் அவரின் சகோதரனான தேவமந்திரி எனும் இருவருக்கும் செங்கடகல நாக தெய்வத்தினதும் நாக மர தெய்வத்தினதும் ஆசீர்வாதத்துடன் இலங்கையை ஐக்கியப்படுத்த முடிந்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி அவர்களிருவரும் 1381 இற்கு அண்மிய காலத்தில் ஒரு போரில் வெற்றி பெற்றுள்ளனர் என்பது தெரிய வருகின்றது. இக்காலகட்டத்தில் வடக்கில் ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆட்சி நிலவியதாக 'ராஜாவலிய' எனும் நூல் குறிப்பிடுகின்றது.

1381 இற்கு அண்மிய கால ஆரிய சக்கரவர்த்திகளின் ஆக்கிரமிப்புக்கான காரணம் என்னவென அறியப்படவில்லை. ஆயினும் அதற்கு இருபது வருடங்களுக்கு முன்னர் தமக்கேற்பட்ட தோல்விக்காக பழிவாங்கும் வகையிலும் மேற்குக் கரையில் தம்வசமிருந்து அழகக்கோனாரால் பறிக்கப்பட்ட வெளிநாட்டு வர்த்தகத்தை மீண்டும் கைப்பற்றுவதற்காகவும் வடக்கில் இருந்த ஆட்சியாளர்கள் படையெடுப்பொன்றை நிகழ்த்தியிருக்கலாம். இம்முறை ஆரியச் சக்கரவர்த்தி தரைமார்க்கமாகவும் கடல் மார்க்கமாகவும் இரு பெரும் படைகளை அனுப்பி ஒரே நேரத்தில் கம்பளை, கோட்டை எனும் இடங்களையும் தாக்குதவற்குத் திட்டமிட்டு இருந்தான். அவ்வாறு தரை வழியாக வந்த படையினர் மாத்தளையில் முகாமிட்டிருந்தனர். அப்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பளையிலிருந்த மன்னன் புவனேகபாகு ஸ்ரீ ஜயவர்தனபுரக் கோட்டைக்கு பாதுகாப்புக் கருதிச் சென்றதாகவும் மன்னனின் படையினர் ஒற்றுமையுடன் செயற்பட்டு தரை வழியாக வந்த படையெடுப்பை முறியடித்ததாகவும் கூறப்படுகின்றது. கடல் மார்க்கமாக வந்த படையினர் தெமட்டகொடை, பாணந்துறை, கொறகாண முதலிய இடங்களில் முகாமிட்டிருந்த வேளையில் அழகக்கோனார் கொழும்பிலும் பாணந்துறையிலும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கப்பல்களை அழித்ததுடன் ஆரியச் சக்கரவர்த்தியின் படைகளைத் துரத்தியடித்தார். அதனைத் தொடர்ந்து அவர் றைகமவிலே தங்கிவிட மன்னன் புவனேகபாகு மீண்டும் கம்பளையைச் சென்றடைந்தான்.

1382 ஆம் ஆண்டுக்கு இரண்டு மூன்று வருடங்களுக்குப் பின்னர் எழுதப்பட்டதாகக் கருதப்படும் மயுர சந்தேசய (மயில் விடு தூது) எனும் நூலில் தலைநகரான கம்பளையில் ஆட்சி செய்த புவனேகபாகு மன்னன் அவன் மனைவியான ஜயசிறி எனும் பட்டத்து இராணி மற்றும் ஏபா பதவி வகித்த இளவரசன் என்போர் பற்றியும் குறிப்பிடுகின்றது. கம்பளையிலிருந்து தெவிநுவர வரைக்குந் தூது கொண்டு செல்லும் மயில், களனியை அடைந்து விபீஷன தெய்வத்திடம் சென்று அரசனுக்கும் அரசிக்கும் நாட்டு மக்களுக்கும் நன்மை பயக்குமாறு வேண்டுகின்றது. தொடர்ந்தும் ஜயவர்தனபுரவைக் கடந்து றைகமயை அடைந்த மயில் அப்பகுதிக்குத் தலைவராக இருந்த ராஜ பிரபுவான அழகக்கோனார் மற்றும் அவரது சகோதரனான தெவ்ஹிமியையும் அங்கு சந்திக்கின்றது.

மயுர சந்தேசய (மயில் விடு தூது) எழுதப்பட்ட 1382 ஆம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலத்தில் புவனேகபாகு மன்னனும் 'ஏபா'வும் கம்பளையிலேயே இருந்துள்ளனர். அப்போது 'ஏபா' பதவியைப் பெற்றிருந்தவர் அர்த்தநாயக என்பவராவார். அழகக்கோனாரும் அவரது சகோதரர் தேவமந்திரியும் றைகமயில் இருந்தனர். புவனேகபாகு மன்னனின் ஆட்சியின் இறுதி அரைப் பகுதியில் ஏபா பதவி வகித்த அர்த்தநாயக இறந்ததாகவும் அப்பதவிக்கு தேவமந்திரி அமர்த்தப்பட்டதாகவும் அறிய முடிகின்றது. 1391 ஆம் ஆண்டு புவனேகபாகு மன்னன் இறந்ததாகவும் அரசவையிலிருந்த அனைவரும் ஏகோபித்த முடிவுடன் 'ஏபா' பதவியிலிருந்த தேவமந்திரியை வீரபாகு எனும் பெயர் சூட்டிக் கம்பளை அரசனாக முடிசூடியதாக 'அஸ்கிரி தல்பத' எனும் நூல் கூறுகின்றது. இது 'அஸ்கிரி தல்பத' தவிர வேறு எந்தவொரு மூலாதாரத்திலும் இடம் பெறவில்லை. 'நிகாய சங்கிரஹய' எனும் நூலில் புவனேகபாகு மன்னனின் மறைவையடுத்து அவனது சகோதரன் வீரபாகு அரசனானதாகக் குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர தேவமந்திரி, வீரபாகு எனும் பெயரில் அரசனானதாகக் குறிப்பிடப்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அழகேஸ்வர அல்லது அழகக்கோனார் பரம்பரை :-

ஐந்தாம் புவனேகபாகு மன்னனின் மறைவை அடுத்து 1391 இல் வீரபாகு எனும் பெயரில் மன்னனானவன் அப்போது ஏபா அல்லது இளவரசன் பதவியிலிருந்த தேவமந்திரி என்பவனாவான். 'அஸ்கிரி தல்பத' எனும் நூலில் இடம் பெறும் இத்தகவல் 1344 காலகட்டத்தில் கம்பளை அரசியல் களத்தில் சிறப்பிடம் பெற்ற அழகக்கோனார் அல்லது அழகேஸ்வர பரம்பரை பற்றித் தெளிவாகத் தெரிந்து கொள்வதற்கு உதவுகின்றது. ஆயினும் 1391 இல் வீரபாகு அரசனானது முதல் கம்பளை யுகத்தின் அரசியல் வரலாற்றை ஆராய்வதற்கு முன்னர் அழகேஸ்வர பரம்பரை பற்றிய சிக்கலைத் தீர்த்துக் கொள்வது இங்கு மிக முக்கியமானது.

1391 இல் வீரபாகு எனும் பெயரில் ஆட்சி பீடமேறிய தேவமந்திரி என்பவர் புவனேகபாகு மன்னனின் ஒன்பதாம் ஆட்சி வருடத்தில் அதாவது 1381 இல் பொறிக்கப்பட்ட சகம கல்வெட்டில் அப்போதிருந்த அழகேஸ்வரனின் தம்பி எனக் குறிப்பிடப்பட்டுள்ளதாக ஏற்கெனவே அறிந்தோம். 1382 இல் எழுதப்பட்ட 'எலு அத்தனகலு வம்சம்' எனும் நூலில் அழகேஸ்வர என்பவர், புவனேகபாகு மன்னனின் முதலமைச்சர் என்றும் அவரின் மற்றொரு சகோதரனான அர்த்தநாயக பற்றியும் குறிப்பிட்டுள்ளது. இதன்படி 1382 ஆம் ஆண்டளவில் ஐந்தாம் புவனேகபாகு மன்னனின் அரசவையில் அழகேஸ்வர, அர்த்தநாயக, தேவமந்திரி எனும் சகோதரர்கள் மூவர் இருந்தமை தெளிவாகின்றது. இம்மூவருள் அழகேஸ்வர என்பவர் புவனேகபாகு மன்னனின் முதலமைச்சர் என்றும் 'ராஜபிரபு' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளார். 1382 ஆம் ஆண்டுக்குச் சில வருடங்களுக்குப் பின்னர் எழுதப்பட்ட 'மயுர சந்தேசய' எனும் நூலில் கம்பளை புவனேகபாகு மன்னனுடன் ஜயசிறி எனும் இராணியினதும் ஏபா பதவியை வகித்த ஒருவரின் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும் அக்காலகட்டத்தில் றைகம நகரில் அழகேஸ்வர, அல்லது அழகக்கோனார் எனும் ராஜபிரபுவும் அவனது சகோதரனான தெவ்ஹிமி என்பவரும் இருந்ததாக 'மயுர சந்தேச' வில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் படி 'மயுர சந்தேச' எழுதப்பட்ட காலகட்டத்தில் புவனேகபாகு மன்னன் ஜயசிறி இராணியுடன் ஏபா பதவி வகித்தவர், ஏபாஹிமி, அழகக்கோனார், தெவ்ஹிமி எனும் சகோதரர்கள் மூவர் இருந்ததாகவும் தெரியவருகின்றது. அம் மூவருள் அர்த்தநாயக எனும் பெயர் 'மயுர சந்தேச' வில் குறிப்பிடவில்லை. அதற்குப் பதிலாக 'ஏபா' பதவி வகித்த ஒருவர்பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதிலிருந்து தெளிவாகும் விடயம் யாதெனில் 'மயுரசந்தேச' எழுதப்பட்ட காலத்தில் அர்த்தநாயக என்பவர் கம்பளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசவையில் ஏபா அல்லது இளவரசர் பதவியை வகித்துள்ளார் என்பதாகும். அழகக்கோனாரும் தேவ மந்திரியும் இக்கால கட்டத்தில் றைகமவில் வாழ்ந்து வந்துள்ளனர்.

'மயுர சந்தேச' வில் குறிப்பிடப்படும் ஜயசிறி இராணி மற்றும் மூன்று சகோதரர்கள் பற்றிக் கவனம் செலுத்திய பேராசிரியர் பரண விதான அவர்கள் அந்த அழகக்கோனார் சகோதரர் மூவரும் ஜயசிறி இராணியின் கணவர்கள் என்றும் ஜயசிறி இராணி புவனேகபாகு மன்னனின் தாயார் என்றும் விளக்கம் தந்துள்ளார்.

''நவரத்தினங்களாக இம்மண்ணில் அரச குமாரர்களை ஈன்றெடுத்த'' என்று ஜயசிறி இராணி பற்றிய 'மயுர சந்தேச' வின் கவிதா வரிகளே இந்த இராணியார் புவனேகபாகு மன்னனின் தாயார் என்று பேராசிரியர் பரணவிதான அவர்களின் கூற்றுக்குக் காரணமாயிருக்கலாம். இன்னொரு வகையில் பார்ப்போமானால் புவனேகபாகு மன்னனின் மறைவையடுத்து வீரபாகு எனும் பெயரில் அரசனான தேவமந்திரி உட்பட அழகக்கோனார் சகோதரர்கள் மூவரும் புவனேகபாகுவுக்கு மைத்துனர் முறையானவர்கள் என்று வரும் கூற்றுக்கு ஏற்ப அவர்கள் புவனேகபாகு மன்னனின் தந்தையின் சகோதரியின் பிள்ளைகளாவர் என்பது தெளிவாகின்றது. இதனைக் கவனத்தில் எடுத்துப் பார்க்கையில் 1380 முதல் கம்பளை புவனேகபாகு மன்னனின் முதலமைச்சராகவும் ராஜ பிரபுவாகவும் இருந்த அழகக்கோனார் என்பவர் 1360 களில் கம்பளை விக்கிரமபாகு மன்னனின் முதலமைச்சராகவும் ராஜ பிரபுவாகவும் விளங்கிய நிஸ்ஸங்க அழகக்கோனாரவின் மருமகனாவார். அதாவது சகோதரியின் மகனாவார். எனவே இவ்விரு அழகக்கோனார்களும் ஒருவரே என்ற பேராசிரியர் பரணவிதானவின் கருத்தை நாம் ஏற்கமுடியாது.

1380களுக்கு முன்னர் அழகக்கோனார் பற்றிக் குறிப்பிடும் எந்தவோர் இடத்திலும் அர்த்தநாயக மற்றும் தேவமந்திரி எனும் சகோதரர்களின் பெயர்கள் குறிப்பிடப்படவில்லை. அவர்களின் பெயர்கள் அழகக்கோனாரின் பெயருடன் தொடர்புபடுத்திக் கூறப்படுவது 1380 களின் பின்னரே ஆகும். எனவே இக்குறிப்பிட்ட ஆண்டுகளுக்கு முன்பிருந்த அழகக்கோனாரும் பின்னர் வாழ்ந்த அழகக்கோனாரும் ஒருவரல்ல; இரு வேறு நபர்களாவர். பின்னர் குறிப்பிடப்படும் அழகக்கோனார் அவர்களின் தாயாரின் சகோதரரே முன்னர் குறிப்பிடப்படும் பெரிய அழகக்கோனார் ஆவார். அவரின் பெயர் இறுதியாகக் குறிப்பிடப்படுவது, மூன்றாம் விக்கிரமபாகு மன்னனின் 17ஆம் ஆட்சியாண்டில் அதாவது 1474 ஆம் ஆண்டு பொறிக்கப்பட்ட 'நியம்கம்பாய கல்வெட்டி'லாகும். அதில் அவரின் பெயருக்கு முன்னால் 'ராஜா லங்கா மிஹிதலே' எனும் புகழ் நாமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்க்கப்பட்டுள்ளது. அதாவது 'இலங்கை மண்ணின் அரசன்' என்பது அதன் பொருளாகும். மேலும் அக்கால கட்டத்தில் அவர் களனி விகாரையின் லங்கா திலக சிலை மனையைப் புனரமைத்ததாகவும் அக் கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது. அக்கால கட்டத்தில் அவர் முதியவராக இருந்திருப்பதை அக்கல்வெட்டில் இடம் பெறும் அவருக்கான புகழ் நாமங்கள் பறைசாற்றுகின்றன. இவற்றை நோக்குகையில் மூன்றாம் விக்கிரமபாகு மன்னனின் மறைவின் பின்னர் 1374 இல் ஐந்தாம் புவனேகபாகு ஆட்சி பீடமேறியதுடன் அதற்கண்மிய ஆண்டொன்றில் ராஜ பிரபு அழகேஸ்வரனின் மரணமும் நிகழ்ந்துள்ளது. அதன் பின்னர் அவரின் சகோதரியின் புதல்வர் மூவருள் ஒருவனான அழகக்கோனார் முதலமைச்சராகப் பதவியேற்றுள்ளார்.

1360 முதல் விக்கிரமபாகு மன்னனின் முதலமைச்சராகவும் ராஜ பிரபுவாகவும் கோலோச்சியவர் ஜயவர்தனபுரக் கோட்டையில் கோட்டை கட்டிய நிஸ்ஸங்க அழகேஸ்வர என்பவராவார். அவர் 1344 இல் கீர்த்தி ஸ்ரீ மேவன் களனி விகாரையைப் புனரமைத்து வில்கம்முல தலைமைப் பிக்குவானவருக்கு அனுசரணை வழங்கிய அழகக்கோனார் எனும் அமைச்சர் என்பதும் குறிப்பிடத் தக்கது. 1344 இல் பொறிக்கப்பட்ட 'கீர்த்தி ஸ்ரீ மேகன் களனி விகாரைக்' கல்வெட்டில் குறிப்பிடப்படும் அமைச்சர் வஞ்சிபுர வம்சத்தை சேர்ந்த நிஸ்ஸங்க அழகக்கோனார் எனும் உத்தம அமைச்சரின் பரம்பரையில் வந்த பத்தாவது அழகக்கோனார் ஆவார் என்றும் அக்கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதிலிருந்து வெளிப்படும் உண்மை யாதெனில் அழகக்கோனார் பரம்பரையின் முதலாமவர் நிஸ்ஸங்க அழகக்கோனார் எனும் அமைச்சர் ஆவார் என்பதும் " கீர்த்தி ஸ்ரீ மேகன் களனி விகாரைக்" கல்வெட்டில் குறிப்பிடப்படும் அழகக்கோனார் என்பவர் அப்பரம்பரையில் வரும் பத்தாமவர் என்பதுமாகும்.

இந்த அழகக்கோனார் பரம்பரையினர் தம்பதெனிய யுகத்திலிருந்தே நிலை பெற்றிருப்பதற்கு 'காரகல கல்வெட்டு' மற்றும் 'ஹங்ச சந்தேச' எனும் நூல் என்பன சான்றுகளாகும். இவ்விரு மூலாதாரங்களிலும் தம்பதெனிய யுகத்திலிருந்த நாகசேன என்பவரின் பேரனான தலசென்கமு அர்த்தநாயக என்பவரின் மனைவியான அழகக்கோனாரின் சகோதரி பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த அழகக்கோனாரின் சகோதரி பத்மாவதி எனும் பெயரில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன் அவரின் வணக்க வழிபாட்டிற்காகவே காரகல விகாரை அமைக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பத்மாவதி 1344 முதல் 1374 வரையிலான கால கட்ட அரசியலில் கோலோச்சிய மேலே நாம் குறிப்பிட்ட ராஜ பிரபு அழககேஸ்வர என்பவரின் சகோதரியாவார் என்பது கால அடிப்படையில் தெளிவாகின்றது. அதே போன்று அந்த ராஜ பிரபு அழகேஸ்வரவின் மறைவைத் தொடர்ந்து ஐந்தாம் புவனேகபாகு மன்னனின் முதலமைச்சரான ராஜ பிரபு அழகக்கோனார் உள்ளிட்ட மூன்று சகோதரர்களும் பத்மாவதி தேவியின் பிள்ளைகளாவர் என்று தெரிய வருகின்றது.

1334ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்த இபின் பதூதா எனும் தேச சஞ்சாரி வட இலங்கை ஆட்சியாளனை சந்தித்து விட்டு பாவா ஆதம் மலை எனப்படும் சிவனொளிபாத மலை தரிசனத்துக்காகச் செல்லும் வழியில் 'கொனகர்' நகரில் சந்தித்த 'அல்கோனார்' என்பவர் பற்றித் தனது குறிப்புகளில் எழுதியுள்ளார். அவர் குறிப்படும் கொனகர் என்பது குருணாகலையா, இரத்தினபுரியா அல்லது றைகமவா என்ற கருத்து வேறுபாடு நிலவுகிறது. அழகக்கோனார் குடும்பத்தின் பிறப்பிடம் றைகம என்றபடியால் இபின் பதூதா குறிப்பிடும் 'கொனகர்' என்பது றைகம என்று கருதுவது பொருந்தும். 'அல்கோனா'ரிடம் வெள்ளை யானை ஒன்றிருந்ததாகவும் அவர் பெரும் நிலப் பரப்பொன்றை நிருவாகம் செய்ததாகவும் இபின் பதூதா தன் அறிக்கையில் கூறுகின்றார். இதிலிருந்து தெளிவாகும் உண்மை என்னவெனில் அழகக்கோனார் 1344ஆம் ஆண்டளவில் பெரு நிலப்பரப்பொன்றை சுயாதீனமாக ஆட்சி செய்துள்ளார் என்பதாகும். இபின் பதூதா, அழகக்கோனாரின் ஆட்சிப் பிரதேசமூடாகப் பயணம் செய்யும்போது அங்கிருந்த மக்கள் தலைவர்கள் கிளர்ச்சிகளை மேற்கொண்டு அவரைப் பதவியிறக்கம் செய்து அவரது கண்களையும் குருடாக்கி அவரது மகனைப் பதவியில் அமர்த்தியதாகவும் தனது பயணக் குறிப்புகளில் எழுதியுள்ளார்.

அக்கால சமூகத்தில் நிலவிய தாய் வழிமூலமான அரசியல் உரிமை மற்றும் சொத்துரிமை முறையையே அழகக்கோனார் பரம்பரையினர் கடைப்பிடித்துள்ளனர். அதாவது மாமாவிடமிருந்து மருமகனுக்கு அல்லது சகோதரியின் மகனுக்கு ஆட்சியுரிமை, சொத்துரிமை கைமாறும் முறையாகும். எனவே இபின் பதூதா குறிப்பிடும் அழகக்கோனாரை பதவி கவிழ்த்து பதவியேறியது அவரது மகனல்ல; அவரது சகோதரியின் மகனாக இருந்திருக்கலாம். இன்னொரு வகையில் பார்த்தால் உரிமை தொடர்பாக மகனே கிளர்ச்சி செய்து பதவியைப் பெற்றிருக்கவும் இடமுண்டு, எப்படியோ 1344 - 'கீர்த்தி சிறி மேவன் களனி' கல்வெட்டில் குறிப்பிடப்படும் அழகக்கோனார் என்பவர் றைகமவிலிருந்து பதவி கவிழ்க்கப்பட்ட அழகக்கோனாருக்குப் பின்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த உரிமையாளர் என்பது அவர் பற்றி அக்கல்வெட்டில் கூறப்பட்டுள்ள பரம்பரை உரிமை பற்றிய விடயங்களூடாக அறிந்து கொள்ளக் கூடியதாக வுள்ளது. அவ்வாறு கருதும்போது தம்பதெனிய யுகத்தில் அழகேஸ்வர பரம்பரையை ஆரம்பித்து வைத்த நிஸ்ஸங்க அழகேஸ்வர முதலாவது அழகேஸ்வர என்றும் இப்னு பதூதா குறிப்பிடும் கண் குருடாக்கப்பட்டு பதவி கவிழ்க்கப்பட்ட 'அல்கோனார்' ஒன்பதாவது அழகேஸ்வர் என்றும் 1344ஆம் ஆண்டுக்குரிய கீர்த்தி சிறிமேவன் களனி கல்வெட்டில் குறிப்பிடப்படும் அழகேஸ்வர் பத்தாவது நபர் என்றும் நாம் இனங்காணலாம். அவ்வாறாயின் 1344 முதல் 1374 வரை கம்பளை அரசியல் நிர்வாகத்தை இயக்கிய பிரதானி என நாம் கருதும் அந்தப் பத்தாவது அழகேஸ்வரரின் மறைவுக்குப் பின்னர் ஐந்தாம் புவனேகபாகு மன்னனின் முதலமைச்சரான அழகேஸ்வர பதினோராவது அழகேஸ்வர ஆவார்.

இந்தப் பதினோராவது அழகேஸ்வர றைகமவில் இருக்கும் சமயம் 1391 இல் ஐந்தாம் புவனேகபாகு கம்பளையில் காலமான போது கம்பளையில் ஏபா (இளவரசன்) பதவியிலிருந்த அழகேஸ்வரவின் சகோதரனான தேவமந்திரி என்பவர் வீரபாகு எனும் பெயரில் ஆட்சி செய்ததை ஏற்கெனவே அறிந்தோம்.

கம்பளை யுகத்தில் முழுமையாக ஆதிக்கம் செலுத்திய இந்த அழகேஸ்வர பரம்பரை பற்றிய ஆய்வினை இத்துடன் நிறுத்திவிட்டு 1391 இல் வீரபாகு அரசனானது முதல் கம்பளை அரச பரம்பரையின் இறுதிப் பகுதிக்குள் இப்போது நாம் பிரவேசிக்கலாம்.

## கம்பளை அரச பரம்பரையின் முடிவு

ஐந்தாம் புவனேகபாகு மன்னனின் மறைவை அடுத்து 1391 இல் கம்பளைக்கு அரசனான வீரபாகு 1396ஆம் ஆண்டு பௌத்த சங்க நிருவாக சபைப் பிக்குகளை ஒன்று கூட்டி சங்கத்தில் மாற்றம் செய்துள்ளான். அச் சமயம் சீலவங்ச தம்ம கித்தி மகாதேரர் மறைந்து அவ்விடத்திற்கு அவரது சீடரான ஜயபாகு தேவரக்கித தம்ம கித்தி மகா தேரர் வந்துள்ளார் எனத் தெரியவருகின்றது. புத்த சாசனத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட பிக்குமார் சம்மேளனத்திற்கும் இத் தேரரே தலைமை தாங்கியுள்ளார். அந்தச் சந்தர்ப்பத்தில் வீரபாகு மன்னன் தனது மகனை சங்கத்தில் சேர்த்து பௌத்த பிக்குவாக்கியதாக 'நிகாய சங்கிரஹய' எனும் நூல் கூறுகின்றது.

வீரபாகு மன்னன் கம்பளையிலிருந்து ஆட்சி செய்து கொண்டிருந்த வேளை அவனது சகோதரனான பதினோராம் அழகேஸ்வர என்பன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரபாகுவின் தலைமைத்துவத்தை ஏற்காது றைகமவைத் தலைமையமாகக் கொண்டு தென் மேல் கரைநாட்டுப் பிரதேசத்தை ஆட்சி செய்து வந்தான். 1396ஆம் ஆண்டுக்கு சில வருடங்களின் பின்னர் வீரபாகு மன்னன் அழகேஸ்வரனைக் கைது செய்ய ஸ்ரீ ஜயவர்தனபுரக் கோட்டைக்குச் சென்றான் என அஸ்கிரி தல்பத' நூல் கூறுகின்றது. 'சத்தர்ம ரத்னாகரய' எனும் நூல் இந்த அழகேஸ்வர என்பவரை வீர அழகேஸ்வர என்ற பெயரிலேயே குறிப்பிட்டுள்ளது. இவ்விரு மூலாதாரங்களின்படியும் இப்போரில் தோல்வியுற்ற வீர அழகேஸ்வர வட இந்தியாவில் தம்பதிவவுக்குத் தப்பிச் சென்றதாகவும் அறிய முடிகின்றது.

அதன் பின்னர் வீரபாகு மன்னன் புனித தந்ததாது மற்றும் புனித சின்னங்களையும் கம்பளையிலிருந்து தருவித்து ஸ்ரீ ஜயவர்தனபுரவில் இருந்து ஆட்சி செய்ததாக 'அஸ்கிரி தல்பத' கூறுகின்றது. அதனைத் தொடர்ந்து தம்பதிவவுக்குத் தப்பியோடிய வீர அழகேஸ்வர அங்கிருந்து படை திரட்டி கோட்டைக்கு வந்து வீரபாகு மன்னனுடன் போரிட்டான். இப்போரில் மன்னன் வீரபாகு கொல்லப்பட்டான். இது நடைபெற்றது 1409ஆம் ஆண்டிலாகும்.

இவ்வாறு வீர அழகேஸ்வர வெற்றி வாகையுடன் றைகமவிலிருந்து அரசனாக செயற்பட்ட போதிலும் கம்பளை சேனாதிலங்கார குடுப்பத்தினர் உட்பட மலை நாட்டுப் பிரதானிகள் அவனை ஆட்சியாளனாக அங்கீகரிக்க வில்லை. அவர்கள் வீரபாகு மன்னனினதும் சேனாதிலங்கார குடும்பத்தினதும் பேரன் முறையான ஓர் இளவரசனை பராக்கிரமபாகு எனும் பெயரில் 1410 இல் செங்கடகல (கண்டி) அரசனாக முடி சூடியதாக 'அஸ்கிரி தல்பத' குறிப்பிடுகின்றது. 'சத்தர்ம ரத்னாகரய' இந்த மன்னனை பராக்கிரம ஏபா (இளவரசன்) எனக் குறிப்பிடுகின்றது.

இவ்வாறு கம்பளையில் ஓர் ஆட்சியாளனும் றைகமவில் மற்றோர் ஆட்சியாளனும் ஆட்சி செய்த காலகட்டத்திலே முதல் முறையாக சீனப் பேரரசன் ஒருவன் இலங்கை அரசியலில் தலையிட்டுள்ளான். அதாவது யுங்லோ எனும் சீனப் பேரரசன் தனது நம்பிக்கைக்குப் பாத்திரமான வீரத் தளபதியான செங்ஹோ என்பவனின் தலைமையில் பாரியதொரு கடற்படையை இந்து சமுத்திரப் பகுதிக்கு அனுப்பியுள்ளான். இந்த வலயத்தில் உள்ள நாடுகளுக்குத் தனது பேரரசுப் பலத்தை உணர்த்துவதே அவனின் நோக்கமாக இருந்திருக்கலாம் என்பது வரலாற்றறிஞர்களின் நம்பிக்கையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீனத் தளபதி செங்ஹோ என்பவன் சுமாத்ரா, மலாயா என்பவற்றைக் கடந்து இந்து சமுத்திரத்தில் பிரவேசித்து தென்னிந்தியத் துறைமுகம் ஒன்றினூடாக பயணஞ் செய்யும்போது 1405ஆம் ஆண்டு இலங்கையில் தரையிறங்கியுள்ளான். அவன் மீண்டும் 1409 இல் இலங்கை வந்துள்ளான். சீன அறிக்கைகளின் படி அவன் இலங்கை மன்னனுக்கும் மக்கள் தலைவர்களுக்கும் அன்பளிப்புகளை வழங்குவதற்காகவும் பௌத்த சமயத் தலங்களுக்கு காணிக்கைகளைச் செலுத்தவுமே இரண்டாம் முறை இலங்கை விஜயத்தை மேற்கொண்டுள்ளான். ஆயினும் றைகமவிலிருந்த வீர அழகேஸ்வர செங்ஹோவை முறைப்படி வரவேற்கவில்லை. அவனை ஓர் எதிரி மனப்பான்மையுடனே நோக்கியுள்ளான். தொடர்ந்து தென் பகுதியை அடைந்த சீனத் தளபதி தான் கொண்டு வந்த காணிக்கைகளை தெவுந்தர (தேவேந்திர முனை) உபுல்வன் தேவாலயத்துக்கு செலுத்தியதுடன் சீன, பாரசீக, தமிழ் மொழிகளிலான மும்மொழி (திரீபாஷா) கல்வெட்டை பொறித்துச் சென்றுள்ளான். காலி மும்மொழிக் கல்வெட்டு எனும் பெயரில் பிரபலமான அக்கல்வெட்டு 1409இல் சீனத் தளபதி செங்ஹோ அமைத்ததாகும். இம்முறை வீர அழகேஸ்வர தன் மீது காட்டிய எதிரி மனப்பான்மை காரணமாக செங்ஹோ அவனை ஒரு பௌத்த விரோதியாகவே கருதினான். அதன் பின்னர் 1411ஆம் ஆண்டு அவன் பாரிய கப்பற் படையுடன் மீண்டும் இலங்கை வந்தான். இம்முறை வீர அழகேஸ்வர அவனை எதிர்த்தான். சீன மூலாதாரங்களின்படி சுமார் 50000 பேரைக் கொண்ட செங்கோவின் படையணி வருகையைத் தடுக்கும் முகமாக அவன் மரங்களை வெட்டி வீழ்த்தி பாதைகளைத் தடுக்கவும் சீனக் கப்பல்களை அழிக்கவும் திட்டமிட்டிருந்தான். ஆயினும் வீர அழகேஸ்வரனின் இத்திட்டத்தை அவனது படைவீரன் ஒருவன் மூலமே அறிந்து கொண்ட செங்ஹோ 3000 படை வீரர்களுடன் ஓரிரவு மாற்று வழியூடாக அழகேஸ்வரனின் தலை நகரை அடைந்தான். அங்கு மேற்கொண்ட ஆறு நாள் யுத்தத்தைத் தொடர்ந்து செங்ஹோ, வீர அழகேஸ்வர மற்றும் அவன் குடும்பத்தாரை கைதிகளாகப் பிடித்துக் கொண்டு காலை வேளையொன்றில் நகரை விட்டு வெளியேறினான். ஆயினும் பாதைத் தடைகளை அகற்றிய வண்ணம் போரிட்டபடியே தனது கப்பலை அவன் அடையும்போது அந்திப் பொழுதாகிவிட்டது. தலை நகருக்கும் கப்பல் துறைக்கும் இடையிலான தூரம் சுமார் ஐந்து மைல்களாகும். இதன்படி இரு தரப்பினருக்குமிடையே யுத்தம் நடைபெற்ற இடம் ஜயவர்தன புர கோட்டையாகும். ஆயினும் போர் நடைபெற்றது வீர அழகேஸ்வரனின் தலைநகரமான றைகமவில் என்றும் சில வரலாற்றறிஞர்கள் கருதுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு தளபதி செங்ஹோ 1411 இல் வீர அழகேஸ்வரனைக் கைது செய்வதற்கு அவனது படையிலிருந்து வழங்கப்பட்ட தகவலே காரணமாயமைந்ததை சீன அறிக்கைகள் மூலம் அறியக் கூடியதாய் உள்ளது. அதே காலகட்டத்தில் றைகம, கம்பளை இடையே இடம் பெற்ற அதிகாரப் போட்டியில் 1410 இல் கம்பளை அரசனான பராக்கிரமபாகு இளவரசனும் றைகம வீர அழகேஸ்வரனை எதிர்த்து நின்றான். எனவே அழகேஸ்வர கைதாவதற்கான உளவுத் தகவல் கம்பளை பராக்கிரமபாகுவின் படையினரால் செங்ஹோவிற்கு வழங்கப்பட்டிருக்கலாம். வீர அழகேஸ்வர உள்ளிட்ட இலங்கைக் கைதிகள் 1411 ஆம் ஆண்டு ஜுலை மாதம் சீன அரசவையின் முன்னே நிறுத்தப்பட்டனர். சிறைக் கைதிகளுக்கு மரண தண்டனை வழங்குமாறு சீன அமைச்சரவை ஆலோசனை வழங்கியது. ஆயினும் அவர்களை மன்னித்த சீனப் பேரரசன் இலங்கை அரசனாவதற்குப் பொறுத்தமான ஒரு நபரின் பெயரை சிபார்சு செய்யுமாறு அவர்களைக் கேட்டுக் கொண்டான். அப்போது 'யெஹிபா நைனா' என்பவரின் பெயர் கூறப்பட்டுள்ளது. எனவே அந்த 'யெஹிபா நைனா' என்பவரை தனது பிரதிநிதியான இலங்கை மன்னனாகப் பிரகடனப்படுத்திய சீனப் பேரரசன், கைதிகளை மீண்டும் இலங்கைக்கே அனுப்பி வைத்துள்ளான்.

இலங்கையிலிருந்து கொண்டு செல்லப்பட்ட கைதிகளிடமும் கருத்துக் கேட்ட சீனப் பேரரசன் தனது தளபதியான செங்ஹோவின் ஆலோசனைப்படியே மேற்படி தீர்மானத்தை எடுத்திருப்பான். சீனப் பேரரசனின் அதிகாரத்துக்குட்பட்டு இலங்கையை ஆட்சி செய்யக் கூடியவனாக செங்ஹோ சிபார்சு செய்த நபர் வீர அழகேஸ்வரவைக் கைது செய்வதற்கு இரகசியமாக உதவியனவாக நாம் கருதிய செங்கடகல பராக்கிரமபாகுவாக இருக்கலாம்.

'சத்தர்ம ரத்னாகரய ' அவனை பராக்கிரமபாகு ஏபா என்றே குறிப்பிடுகின்றது. சீனப் பேரரசனின் பிரதிநிதி ஆட்சியாளன் 'யெஹிபா நைனா' எனும் ஏபா (இளவரசன்) ஒருவனாயிருக்கலாம் என ஏற்கெனவே பார்த்தோம். அதன்படி சீனப் பேரரசனால் 1412 இல் இலங்கை அரசனாகப் பெயர் குறிப்பிடப்பட்டவன், வீரபாகு மன்னனின் மறைவையடுத்து 1410 இல் மலை நாட்டுக்கு மன்னனான பராக்கிரமபாகு ஏபா அல்லது செங்கட கல பராக்கிரமபாகு என நாம் கருதலாம்.

செங்கடகல பராக்கிரமபாகுவின் மறைவையடுத்து அவனுடைய மகனொருவன் பராக்கிரமபாகு எனும் பெயரில் தெதிகமவில் அரசனாக முடி சூடியதாக 'அஸ்கிரிய தல்பத' புதிய செய்தி ஒன்றைத் தருகின்றது. 1415ஆம் ஆண்டிலே அவன் அரசனாகியுள்ளான். இந்த தெதிகம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பராக்கிரமபாகு என்பவன் கம்பளை மூன்றாம் விக்கிரமபாகு மன்னனின் பேத்தியான சுமித்திரா எனும் இளவரசிக்கும் மேற்கூறிய செங்கடகல பராக்கிரமபாகு மன்னனுக்கும் பிறந்த மகனாவான். சுமித்திரா இளவரசியின் மகனான இந்த தெதிகம பராக்கிரமபாகு மன்னன் பற்றி 'திசர சந்தேசய', 'சுத்தமாலா சந்தேச சதகய' எனும் நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இவ்வாறு 1415ஆம் ஆண்டிலிருந்து தெதிகம பராக்கிரமபாகு, கம்பளை அரச வம்சத்தின் இறுதி அரசனாக விளங்கிய அதே கால கட்டத்தில் 1415ஆம் ஆண்டு முதல் ஜயவர்தனபுர கோட்டையைத் தலை நகராகக் கொண்டு மற்றுமொரு பராக்கிரமபாகு கரை நாட்டுப் பகுதியை ஆண்டு வந்தான். அவன் புதியதொரு அரச பரம்பரையின் ஆரம்பகர்த்தாவான ஸ்ரீ ஜயவர்தனபுரக் கோட்டையின் புகழ் பெற்ற மன்னனான ஆறாம் பராக்கிரமபாகு ஆவான்.

## கோட்டை இராசதானிக் காலம் (1415 - 1521)

ஆறாம் பராக்கிரமபாகு மன்னனே சிங்கள மன்னர்களுள் இறுதியாக முழு இலங்கையையும் ஒரு குடையின் கீழ் ஆட்சி செய்தவனாவான். அவனுடைய ஆட்சிக் காலத்திலும் அவனைத் தொடர்ந்து ஆட்சி பீடமேறிய அவனது பிள்ளைகள், பேரப்பிள்ளைகளின் ஆட்சிக் காலத்திலும் எழுதப்பட்ட தரமான கவிதை, உரைநடை, இலக்கியங்களுடன் காவியங்களும் கிடைக்கப் பெற்றுள்ளன. அந்த இலக்கிய மூலாதாரங்களுள் மன்னனின் ஆட்சிக் காலத்தின் இறுதி அரைப் பகுதியில் நடைபெற்ற சம்பவங்கள் நிறையவே இடம் பெற்றுள்ளன. ஆயினும் ஆச்சரியமான விடயம் என்னவெனில் ஆறாம் பராக்கிரமபாகுவின் ஆரம்பகாலம் பற்றிய தகவல்களின் பற்றாக்குறையாகும். இம்மன்னன் யாரின் மறைவைத் தொடர்ந்து எவ்வாறு மன்னனானான், என்ற விடயம் இதுவரை வரலாறு வெளியிடாத இரகசியமாகும். ஆறாம் பராக்கிரமபாகு 1415ஆம் ஆண்டு ஸ்ரீ ஜயவர்தனபுரத்தில் முடி சூடியதாக மேற் குறிப்பிடப்பட்ட மூலாதாரங்கள் பலவற்றிலும் எழுதப்பட்டுள்ளன. 1412ஆம் ஆண்டு றைகம நகருக்கு வந்து அங்கு மூன்றாண்டு காலம் ஆட்சி புரிந்த பின்னரே அவன் கோட்டை மன்னனாக முடி சூடினான் என்றும் மேற்கூறிய மூலாதாரங்கள் பலவும் பறைசாற்றுகின்றன. இம்மன்னனின் அனுசரணையுடன் அவனது உண்மையான தகவல்களை உள்ளடக்கியதாக ஏழாவது ஆட்சி வருடத்தில் எழுதப்பட்ட 'சத்தர்ம ரத்னாகரய' எனும் நூல் ஆறாம் பராக்கிரமபாகு அரசனாக முடிசூடிய ஆண்டை ஓரிடத்தில் 1410 என்றும் மற்றோர் இடத்தில் 1415 என்றும் குறிப்பிட்டுள்ளது. இதன்படி ஜயவர்தனபுர பராக்கிரமபாகு மன்னனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்ப ஆட்சி வருடங்களாக மூன்று வேறுபட்ட ஆண்டுகள் குறிப்பிடப்படுகின்றன. அதாவது 1410, 1412, 1415 என்பவையே அவை.

கம்பளை அரச வம்சத்தின் இறுதி இரு மன்னர்களின் ஆரம்ப ஆட்சி வருடங்களாக மேற்குறிப்பிட்ட மூன்று வருடங்களும் குறிப்பிடப்பட்டுள்ளதை நாம் ஏற்கெனவே அறிந்தோம். வீரபாகு மன்னனின் மறைவை அடுத்து அவனது பேரனான பராக்கிரமபாகு இளவரசன் அரசனானதும் 1410ஆம் ஆண்டிலாகும். அதே பராக்கிரமபாகு சீனப் பேரரசனின் பிரதிநிதியாக இலங்கை ஆட்சியாளனானது 1412ஆம் ஆண்டிலாகும். அதன் பின்னர் அவனது மகனான பராக்கிரமபாகு, தெதிகம மன்னனானது 1415ஆம் ஆண்டிலாகும். இவ்வாறு கம்பளையின் இறுதி ஆட்சியாளர் இருவரும் பதவியேற்ற அதே ஆண்டுகள் மூன்றிலுமே கோட்டை இராச்சியத்தின் ஆரம்ப மன்னனின் பதவியேற்புகளும் நிகழ்ந்ததாகக் குறிப்பிடப்படுவது ஏன் என்பது புரியாத புதிராகும். அது அக்கால கட்டத்தில் நிலவிய றைகம, கம்பளை அதிகாரப் போராட்டத்தை எடுத்துக்காட்டுகின்றன என்பதே உண்மையாகும். இந்த அதிகாரப் போராட்டத்தில் வெற்றியாளனாக வெளிப்பட்டவன் கோட்டையின் ஆறாம் பராக்கிரமபாகு மன்னனாவான். முழு இலங்கையையும் ஒன்றுபடுத்தி 1467 வரை மிக நீண்ட காலம் நாட்டை ஆட்சி செய்து புதியதோர் அரச வம்சத்தைத் தோற்றுவித்த இம் மன்னன் கம்பளையின் இறுதி ஆட்சியாளர் இருவரையும் புறந்தள்ளி விட்டு தனது ஆட்சியை உறுதிப்படுத்தும் பொருட்டு அவர்களின் அரச ஆண்டுகளையே தனது ஆட்சி வருடங்களாகப் பிரகடனப்படுத்தியுள்ளமை தெரிய வருகின்றது. ஆறாம் பராக்கிரமபாகு மன்னனின் புகழ்பாடும் 'பெரகும்பா சிரித' எனும் காவியம் மன்னனின் பரம்பரை பற்றி பின்வருமாறு கூறுகின்றது.

ஆறாம் பராக்கிரமபாகுவின் தாய் சுனேத்ரா தேவி ஆவார். தந்தை ஜயமஹலேன எனும் பிரதானியாவார். ஜயமஹலேன என்பவர் கம்பளை அரச வம்சத்தின் ஆரம்ப ஆட்சியாளனான சவுளு விஜயபாகுவின் மகனான ஐந்தாம் பராக்கிரமபாகுவின் பேரனாவான். இது தவிர இம்மன்னனின் பரம்பரை பற்றிய வேறு எது விதத் தகவல்களும் கிடைக்கவில்லை.

வீர அழகேஸ்வர சீனாவுக்குக் கைதியாகக் கொண்டு செல்லப்பட்ட போது சுனேத்ரா மகாதேவி தனது மகனான பராக்கிரமபாகு இளவரசனுடன் விதாகம விகாரைக்குச் சென்றதாகவும் அங்கிருந்த தலைமைப் பிக்குவானவர் இருவரையும் நாலு கோறளையின் பெலிகல அருகே உள்ள கிராமத் தலைவனிடம் அனுப்பியதாகவும் 'ராஜாவலிய' எனும் நூல் மேலோட்டமாகக் கூறுகின்றது. இக்கூற்று உண்மையாயின் அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படுத்தும் கருத்து என்னவெனில் செங்ஹோ தளபதியால் கைது செய்யப்பட்ட வீர அழகேஸ்வரனின் உறவினர்களுள் ஒருவனாக ஆறாம் பராக்கிரமபாகுவின் தந்தையான ஜயமஹலேனவும் இருந்துள்ளான் என்பதாகும். விதாகம விகாரையின் தலைமைப் பிக்குவானவர் நாட்டின் ஏனைய பிரதானிகளுடன் ஆலோசித்து இளவரசன் பராக்கிரமபாகுவை அரசனாக்கியதாக 'ராஜாவலிய' மேலும் தொடர்கிறது. இம்மன்னன் 1412 இல் றைகமவிற்கு அரசனானமை ராஜாவலியவின் கூற்றாகவும் இருக்கலாம். அப்போது அவன் பதினாறு வயதுடையவனாகக் காணப்பட்டான். அவன் மூன்று வருடங்களுக்குப் பின்னர் கோட்டை நகருக்கு வந்து 1415 இல் அங்கு அரசனாக முடி சூடியுள்ளான்.

அப்போது கீழ் நாட்டை நிர்வகிப்பதற்குப் பொருத்தமான பாதுகாப்பான இடமாக கோட்டை நகரம் பிரபல்யமாக இருந்தது. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் ராஜ பிரபு நிஸ்ஸங்க அழகக்கோனாரால் அமைக்கப்பட்ட இந்தக் கோட்டையிலிருந்தே அவர் தன் படைகள் மூலம் வடபகுதி ஆட்சியாளன் ஆரியச் சக்கரவர்த்தியிடமிருந்த மேற்குக்கரை வர்த்தகத்தையும் துறைமுகங்களையும் மீட்டெடுக்க முடிந்ததை ஏற்கெனவே அறிந்து கொண்டோம்.

அதன் பின்னர் 1380 அளவில் வடக்கின் ஆரியச் சக்கரவர்த்தி ஒரே தடவை கடல் மார்க்கமாகவும் தரை மார்க்கமாகவும் மேற்கொண்ட ஆக்கிரமிப்பை பதினோராம் அழகேஸ்வர அல்லது வீர அழகேஸ்வர கடல் மார்க்கமாக வந்த படையைத் துரத்தியடித்ததும் இந்தக் கோட்டையை மத்திய நிலையமாகக் கொண்டென்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும். மேற்குறிப்பிட்ட தரைமார்க்கமான படையெடுப்பை மலைநாட்டுப் பிரதானிகளுடன் சேர்ந்து முறியடித்த ஐந்தாம் புவனேகபாகு கம்பளை நகரைக் கைவிட்டு பாதுகாப்புக் கருதி தங்கியிருந்ததும் இந்தக் கோட்டையிலாகும்.

1396 களின் பின்னர் வீரபாகு மன்னன் றைகம வீர அழகேஸ்வரனுடன் போரிட்ட வேளை அழகேஸ்வர வட இந்தியாவுக்குத் தப்பியோடிய பின்னர் கம்பளையிலிருந்த புனித தந்ததாது மற்றும் சின்னங்களைத் தருவித்து 1409 வரை ஆட்சியைக் கொண்டு நடாத்தியதும் இந்தக் கோட்டை நகரிலிருந்தாகும். இக்காரணிகளைப் பற்றி நாம் கவனம் செலுத்தும்போது 1412 முதல் றைகமவில் தங்கியிருந்த ஆறாம் பராக்கிரமபாகு மன்னன் ஜயவர்தனபுரக் கோட்டைக்கு வந்து அதனைத் தலைநகராகக் கொண்டு 1415 இல் தனது ஆட்சியை ஆரம்பித்தமைக்கான காரணம் அது பாதுகாப்பானதொரு கோட்டை என்பதுடன் கீழ் நாட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியலையும் பொருளாதாரத்தையும் நிருவகிப்பதற்குப் பொருத்தமான மத்திய நிலையமாகக் கோட்டை அமைந்திருந்தமையாகும்.

## இலங்கை - சீன உறவு

இக்கால கட்டத்தில் சீனப் பேரரசனுக்கு இடையிடையே கப்பம், காணிக்கைகளை அனுப்பி வைத்த புல - கொம பா - சே - லா - வா எனும் இலங்கை மன்னன் பற்றிச் சீன அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ள மன்னன் பெயர் பராக்கிரமபாகு என அறியப்பட்டுள்ளது. இம் மன்னன் 1416, 1421 ஆகிய இரு வருடங்களிலும் காணிக்கைகள் எடுத்துக் கொண்டு சீனாவுக்குச் சென்றுள்ளான். அதே போன்று சென்ஹோ தளபதியும் 1430,1432 எனும் இரு வருடங்களிலும் இலங்கைக்கு வந்துள்ளான். அதன் பின்னர் 1433, 1436, 1445, 1459 ஆகிய வருடங்களிலும் கப்பம், காணிக்கைகளுடன் இலங்கையிலிருந்து தூதுக் குழுக்கள் சீன அரசவைக்குச் சென்றுள்ளன. இவ்வாறு இக்கால கட்டத்தில் 1416, 1421, 1430, 1432, 1433, 1436, 1445, 1459 ஆகிய வருடங்களில் இலங்கை, சீனா இடையே தூதுக் குழுப் பயணங்கள் பல மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறு சீனப் பேரரசனுக்குக் கப்பம் காணிக்கைகளைக் கொண்டு சென்றவனும் தூதுவர்கள் மூலம் கொடுத்தனுப்பியவனுமான மன்னன் ஆறாம் பராக்கிரமபாகு ஆவான் என 'இலங்கைப் பல்கலைக்கழக இலங்கை வரலாறு' எனும் நூலில் பேராசிரியர் பரண விதான குறிப்பிடுகின்றார் பேராசிரியர் அவ்வாறு கருதுவதற்கான காரணம் அக்காலப்பகுதியில் வேறொரு பராக்கிரமபாகு மன்னன் இலங்கையில் இல்லாதிருந்தமையினாலாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயினும் 1415 இல் ஆட்சிபீடமேறிய ஆறாம் பராக்கிரமபாகு மன்னன் ஜயவர்தனபுர நகரிலிருந்து கீழ் நாட்டை ஆட்சி செய்து கொண்டிருந்தபோது அதே சமகாலத்தில் 1415இல் ஆட்சி பீடமேறிய ஆறாம் பராக்கிரமபாகு தெதிகமவை தலை நகரமாகக் கொண்டு நாலு கோறளை மற்றும் மலை நாட்டுப் பகுதிகளை ஆட்சி செய்ததாக ஏற்கெனவே அறிந்தோம். அவன் சீனப் பேரரசனால் 1412ஆம் ஆண்டு நியமனம் செய்யப்பட்ட கம்பளை (செங்கடகல) பராக்கிரமபாகுவின் மறைவை அடுத்து அரசனான அவனது மகன் தெதிகம பராக்கிரமபாகு ஆவான். எனவே 1416 முதல் சீனாவுடன் தொடர்புகளைக் கொண்டிருந்த மன்னன் ஆறாம் பராக்கிரமபாகு அல்ல. அவனது சமகாலத்தவனான தெதிகம பராக்கிரமபாகு என்பதற்கான ஆதாரங்களே அதிகம் காணப்படுகின்றன. 1416, 1426 ஆகிய இரு ஆண்டுகளிலும் கப்பம், காணிக்கைகளுடன் சீன அரசவைக்குச் சென்ற புல - கொம - பா - சே - லாவா அல்லது பராக்கிரமபாகு என்பவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த தெதிகம பராக்கிரமபாகுவாக இருக்கலாம். தந்தையின் மறைவைத் தொடர்ந்து தான் அந்தப் பதவியை ஏற்றதை சீனப் பேரரசனுக்கு அறிவித்து அவனது ஆசிர்வாதத்தைப் பெற்றுக் கொள்வது அந்தப் பயணங்களின் நோக்கமாக இருந்திருக்கலாம். இக்காலப் பகுதியில் ஜயவர்தனபுர பராக்கிரமபாகு மன்னன் அரசியல் ரீதியாகவும் கலாசார ரீதியாகவும் தெதிகம ஆட்சியாளனை விட மிகப் பிரபல்யமானவனாகத் திகழ்ந்துள்ளான். என்பது புலனாகின்றது. அவன் தனது தலைநகருக்கு அருகே 'பப்பிலியானே சுனேத்ரா மகாதேவி பிரிவென' முதலிய சமய தலங்களை மட்டுமல்ல மகியங்கனை, இரத்தினபுரி, தொட்டகமுவ முதலிய தூரப் பிரதேசங்களிலும் சமய தலங்களை விருத்தி செய்து நாட்டு மக்களிடையே புகழ் பெற்றிருந்தான். அவ்வாறான அவனது புத்தசாசன சேவைகளால் கவரப்பட்ட பௌத்த பிக்குகள் ஜயவர்தனபுரம் நோக்கி புலம்பெயர்ந்தனர்.

'சுத்தமாலா சந்தேச சதகய' எழுதப்படும்போது தெதிகமவில் தங்கியிருந்த பௌத்த சங்க தலைமைப் பிக்கு உட்பட ஏனைய பிக்குகளும் ஜயவர்தனபுர பராக்கிரமபாகு மன்னனிடம் வந்து சேர்ந்தனர். 1424ஆம் ஆண்டாகும்போது அக்கால புத்தசாசன ஆலோசகர் பதவியை ஏற்றிருந்த வனரதன மகா தேரர் ஜயவர்தன புர சங்கராஜ விகாரையில் வசித்து வந்தார். 1424ஆம் ஆண்டு இலங்கை வந்த சீயம் (தாய்லாந்து) மற்றும் கம்போடியாவைச் சேர்ந்த பௌத்த பிக்குகளுக்கு எமது நாட்டின் சிங்கள உபசம்பதாவை வழங்கும் சமய விழாவானது ஆறாம் பராக்கிரமபாகுவின் அனுசரணையுடன் ஜயவர்தனபுர வனரதன மகா தேரரின் தலைமையில் நடந்தேறியது.

நிகழ்கால புத்தசாசன ஆலோசகரான மகா தேரர் உள்ளிட்ட மகா சங்கத்தினர் அரசனை அண்டியவர்களாக தலைநகரில் வாழ்வது பொலன்னறுவை யுகத்திலிருந்து இலங்கையில் வேரோடியிருந்த ஒரு சம்பிரதாயமாகும். 1424ஆம் ஆண்டாகும்போது நாட்டிலுள்ள பௌத்த பிக்குகளும் தலைமைப் பிக்குகளும் ஆறாம் பராக்கிரமபாகு மன்னனை அண்டி ஜயவர்தனபுரவில் வந்து குவிந்ததிலிருந்தே தெரிய வருவது என்னவெனில் அப்போதைய தெதிகமவை விட அதன் ஆட்சியாளன் பராக்கிரமபாகுவை விட நாட்டின் தலைநகராக ஜயவர்தனபுரவும் அரசனாக ஆறாம் பராக்கிரமபாகுவும் நாட்டு மக்களாலும் மகா சங்கத்தினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டமையாகும். இவ்வாறான நிலைமையில் அழிந்து வரும் தனது செல்வாக்கினை நிலை நிறுத்துவதற்காக சீனப் பேரரசரின் உதவியை தெதிகம பராக்கிரமபாகு நாடியமையினால் சீனத் தளபதி செங்ஹோ 1430 இல் இலங்கை வருவதற்குக் காரணமாய் அமைந்திருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்குக் கப்பம் செலுத்தும் ஒரே காரணத்துக்காக பலவீனமான ஓர் ஆட்சியாளனின் எழுச்சிக்காகப் பேரும் புகழுடனுமிருக்கும் மற்றுமொரு ஆட்சியாளனுக்கு எதிராகத் தனது படையினரைப் பிரயோகித்து இலங்கை போன்றதொரு தொலைவில் உள்ள நாட்டின் அரசியலில் தலையிடுவதற்கு தளபதி செங்ஹோவிற்கு சீனப் பேரரசனிடமிருந்து அனுமதி கிடைத்திருக்குமென நாம் கருத முடியாது. அத்தோடு இக் காலப் பகுதியில் புத்தளம், சிலாபம், நீர்கொழும்பு, வத்தளை, கொழும்பு, பாணந்துறை, களுத்துறை, பேருவளை, காலி, வெலிகம, மாத்தறை, தெவுந்தறை முதலிய துறைமுகங்களில் வளர்ந்து வந்த ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரம் முழுமையாக ஆறாம் பராக்கிரமபாகு மன்னனின் கட்டுப்பாட்டில் இருந்து வந்தது. அது மாத்திரமல்ல, அப்போது தென்னிந்தியாவில் பிரபலமாகவிருந்த விஜய நகரப் பேரரசுடனும் வெளிநாட்டு வர்த்தகப் பிரச்சினை ஒன்றை அடிப்படையாகக் கொண்டு கடற் போர் ஒன்றில் ஈடுபடும் அளவிற்கு ஆறாம் பராகிரமபாகு பிரபலமானவனாக இருந்தான் என்பது பின்னர் ஆராய்ந்த விடயங்கள் மூலமாகத் தெரிய வந்துள்ளது.

இக்காலப் பகுதியில் சீனத் தளபதி செங்ஹோவினால் அடிக்கடி மேற்கொள்ளப்பட்ட தென் சமுத்திர யாத்திரைகளின் நோக்கம் தென் சமுத்திர வலய நாடுகளுடன் நல்லுறவு அடிப்படையிலான வர்த்தகத் தொடர்புகளை வைத்துக் கொள்வதாகும். அவ்வாறானதொரு சூழலில் 1430 இல் இலங்கை வந்த தளபதி செங்ஹோவிற்கு சீனப் பேரரசன் இவ்வாறானதொரு ஆலோசனை வழங்கியிருக்கலாம். அதாவது இலங்கையில் அரசியல், சமய, வர்த்தக ரீதியில் பிரபலமடைந்திருக்கும் ஜயவர்தனபுர பராக்கிரமபாகு மன்னனையும் தெதிகம பராக்கிரமபாகுவையும் சந்திக்கச் செய்து அவர்களிடையே சமாதானத்தை ஏற்படுத்துமாறு கூறியிருக்கலாம் என்று நாம் நம்புவதற்கு இடமுண்டு. அதன்படி ஆறாம் பராக்கிரமபாகு மன்னனின் ஆட்சியை ஏற்றுக் கொண்டு அவனுடன் சமாதான உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொள்ளுமாறு தெதிகம பராக்கிரமபாகுவைத் தூண்டுவதற்கு தளபதி செங்ஹோ இம்முறை முயற்சித்திருக்கலாம். 1432ஆம் ஆண்டு அவன் மீண்டும் இங்கு விஜயம் செய்தது தனது சமாதானத் தூது எவ்வளவு தூரம் வெற்றியளித்துள்ளது என்பதை அறிவதற்காகவும் இருந்திருக்கலாம். 1433இல் இலங்கையின் புல - கொம- பா- சே - லாவா அல்லது பராக்கிரமபாகு மன்னன் காணிக்கைகளுடன் ஒரு தூதுக்குழுவை சீன அரசவைக்கு அனுப்பி வைத்துள்ளான் அவர்கள் சீனப் பேரரசனின் ஆலோசனைகளுடன் 1436ஆம் ஆண்டு ஜாவா ஊடாக நாடு திரும்பியிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜயவர்தனபுர ஆறாம் பராக்கிரமபாகு கீரவல்ல அரச குடும்ப இளவரசி ஒருத்தியைத் திருமணம் செய்ததும் இக்காலகட்டத்திலாகும். கீரவல்ல என்பது தெதிகமவுக்கு அருகில் அமைந்துள்ள ஓர் ஊாரகும். மேலும் 'பறவி சந்தேசய' (புறாவிடு தூது) காவியம் எழுதப்படும்போது பராக்கிரமபாகு மன்னனின் தம்பியான இளவரசன் மாயாதுன்னை இருந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மாயாதுன்னை நகரம் என்று அப்போது அழைக்கப்பட்டது தெதிகம நகரமாகும் அப்போது தெதிகமவில் இருந்தது கம்பளை அரச பரம்பரையில் வந்த நாம் மேலே ஆராய்ந்த தெதிகம பராக்கிரமபாகு ஆவான். போர்த்துக்கேய வரலாற்றியலாளரான 'குதோ' அப்போதைய நாலு கோறளையின் மாயாதுன்னை நகரின் ஆட்சியாளன் பராக்கிரமபாகு எனக் குறிப்பிட்டுள்ளார். இதிலிருந்து புலப்படும் உண்மை யாதெனில் 'பரவி சந்தேசய' நூல் எழுதப்படும்போது தெதிகம பராக்கிரமபாகு ஆறாம் பராக்கிரமபாகுவிடமிருந்து இளவரசன் பதவியைப் பெற்றிருந்தான் என்பதாகும். 'பரவி சந்தேசய' எனும் நூல் எழுதப்பட்டது. ரஹல் தேரரின் இளமைக் காலத்திலாகும் என்பது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு கருத்தாகும். அது ஆறாம் பராக்கிரமபாகு மன்னனின் ஆட்சிக் காலத்தின் முன்னரைப் பகுதியிலாகும்.

இத்தரவுகளிலிருந்து இரண்டு உண்மைகள் தெரிய வருகின்றன. ஒன்று நாம் கவனம் செலுத்திய காலப்பகுதியில் ஆறாம் பராக்கிரமபாகு தெதிகம அரச குடும்பத்துடன் திருமண உறவு வைத்திருந்தான் என்பது. அடுத்தது தெதிகம ஆட்சியாளனான பராக்கிரமபாகு ஆறாம் பராக்கிரமபாகுவின் இளவரசனாக செயற்பட்டான் என்பதுமாகும். இவ்வாறு இரு சம்பவங்களும் நிகழ்வதற்கு ஏதுவாயமைந்தது 1430, 1432, 1433, 1436 ஆகிய அருகருகிலான ஆண்டுகளில் சீனாவிலிருந்து வந்த தூதுக்குழுக்களின் பேச்சு வார்த்தைகளின் இறுதிப் பெறுபேறாகும் என்று நாம் நம்பலாம். அதன்படி தெதிகம பராக்கிரமபாகு ஆறாம் பராக்கிரமபாகுவின் ஆட்சியை ஏற்றுக் கொண்டு அவனது ஏபா பதவியை பெற்றுக் கொண்டுள்ளான் என்பதே உண்மையாகும்.

மீண்டும் சீனா சென்ற இலங்கைத் தூதுக் குழு பற்றிக் குறிப்பிடப்படுவது 1445ஆம் ஆண்டிலாகும். அத் தூதுக் குழுவுக்குத் தலைமை தாங்கியவர் யே-பா-ல-மொ-தி-வியா எனக் குறிப்பிடப்படுவது 1445ஆம் ஆண்டிலாகும். அத்தூதுக்குழுவிற்குத் தலைமைத் தாங்கியவர் யே - பா - ல - மொ - தி -லியா எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் பெயருக்குரியவர் ஜெயபால முதலியார் என பேராசிரியர் பரண விதான சரியாக இனங் கண்டுள்ளார். ஜெயபால முதலியார் ஆறாம் பராக்கிரமபாகு மன்னனின் முதலமைச்சர் பதவியை வகித்த சலவத ஜபால என 'குத்தில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவியம்' இனங்காட்டுகின்றது. இத்தூதுக்குழுவை ஆறாம் பராக்கிரமபாகு மன்னனே அனுப்பியிருப்பான். சீனப் பேரரசனின் தலையீட்டால் தனக்கும் தெதிகம ஆட்சியாளனுக்கும் இடையிலான அதிகாரப் போராட்டம் முடிவு கண்டதுடன் தனது தலைமைத்துவத்தை ஏற்றுக் கொண்டமையையிட்டு சீனப் பேரரசனுக்கு நன்றி தெரிவிக்கவும் தனது முதலமைச்சரின் தலைமையில் நல்லுறவுத் தூதுக் குழு ஒன்றை மன்னன் அனுப்பியதில் எவ்வித சந்தேகமுமில்லை.

1445ஆம் ஆண்டில் தெதிகம பராக்கிரமபாகு இளவரசன் அஸ்கிரி விகாரையின் தலைமைப் பிக்குவாக மாவத்த கம சோணுத்தர மகா தேரரை நியமித்ததாக அஸ்கிரி தல்பத' கூறுகின்றது. அதே வருடத்தில் அவனது அழைப்பை ஏற்று அஸ்கிரி விகாரைப் பிக்குகள் குழுவொன்று நாலு கோறளையில் தெதிகமவுக்கு அருகில் உள்ள மெனிக்கடவர எனுமிடத்திற்குச் சென்று அங்கு ஒரு விகாரையை ஆரம்பித்ததாக அதே நூலில் விபரிக்கப்படுகிறது. இதிலிருந்து புலப்படும் உண்மை ஜயவர்தனபுர ஆறாம் பராக்கிரமபாகு மன்னனின் இளவரசனாக (ஏபா) செயற்பட்ட போதிலும் தெதிகம பராக்கிரமபாகு மலை நாட்டினதும் நாலு கோறளையினதும் ஆட்சியாளனாக 1445களில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தான் என்பதாகும். ஆறாம் பராக்கிரமபாகு மன்னனும் அப்பகுதி ஆட்சி நிருவாகத்தை அந்த மரபின்படி கொண்டு செல்வதற்கு அவனுக்கு இடமளித்தான் என்பதும் இதன் மூலம் தெரிய வருகின்றது. இக்கால கட்டத்தில் இலங்கைத் தூதுக் குழுவொன்று 1459 இல் சீனா சென்றுள்ளது. அத் தூதுக் குழுவை அனுப்பி வைத்தவர் கொ - லி - செங் - சியா - லா - சிலி - ப - சியாவ - லாஜோ என்பவராவார். இவர் யார் என்பதை இதுவரை யாரும் சரியாகக் கண்டு பிடிக்கவில்லை.

## ஆறாம் பராக்கிரமபாகுவின் ஆட்சிக் காலம் (1415 - 1467)

ஆறாம் பராக்கிரமபாகு மன்னனின் 55 வருட கால ஆட்சியில் முக்கியத்துவம் வாய்ந்த பல தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. அவற்றைக் கால ஒழுங்குப்படி முறைப்படுத்துவது கடினமாகும். இவற்றுள் தென்னிந்திய ஆக்கிரமிப்பொன்றை வெற்றிகரமாக முறியடித்தமை பற்றியும் கூறப்படுகின்றது. '' கடற்படைப் பலம் வாய்ந்த புகழ் பெற்ற கன்னட அரசனின் படையினர் கப்பலேறி இலங்கையை ஆக்கிரமிக்க வருவதை அறிந்த ஆறாம் பராக்கிரமபாகு மன்னன் தனது படையினரை அனுப்பி அக்கடற்படையினர் தரையிறங்க முன்னர் அவர்களுடன் போரிட்டு வென்ற கதை முழு இந்தியாவிலும் பிரபல்யமடைந்தது.'' என்று 'அழகேஸ்வர யுத்தம் ' மற்றும் 'ராஜாவலிய' எனும் இரு நூல்களும் கூறுகின்றன. கன்னட ராஜா என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு குறிப்பிடுவது அக்காலகட்டத்தில் பலம் வாய்ந்த ஆட்சியாளனாகத் திகழ்ந்த விஜய நகரப் பேரரசனாவான். மேற்படி மூலாதாரங்களில் இச்சம்பவமானது கீரவல்ல இராணியுடனான விவாகத்தின் பின்னரும் உலகுடைய இளவரசியின் பிறப்பின் பின்னருமாகும். அதன்படி மேற்படி சம்பவம் 1435ஆம் ஆண்டிலே நிகழ்ந்திருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. மதுரையிலிருந்த விஜய நகர பேரரசனின் பிரதிநிதியான லக்கண்ண தண்டநாயகன் யாழ்ப்பாணம், நாகபட்டினம், கோட்டை என்பவற்றைக் கைப்பற்றுவதற்காக 1435 இல் பெரும் படை ஒன்றை அனுப்பியதாக விஜய நகரக் கல்வெட்டொன்றில் கூறப்பட்டுள்ளது. அத்துடன் அப்பிரதேசங்களை அம்மன்னன் கைப்பற்றியதாகவும் அதனால் அவன் 'தக்ஷிண சமுத்திராதிபதி' எனும் புகழ் நாமம் பெற்றதாகவும் அக் கல்வெட்டு கூறுகின்றது. அதன் பின்னர் அந்த நாடுகளின் ஆட்சியாளர்கள் விஜய நகரப் பேரரசரான இரண்டாம் தேவராயருக்கு கப்பம் செலுத்தி வந்ததாகவும் 1440ஆம் ஆண்டுக்குரிய கல்வெட்டொன்று கூறுகின்றது. இக்கல்வெட்டானது இரண்டாம் தேவராயரின் புகழ்பாடும் வகையில் அமைந்துள்ளதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

ஆயினும் அதற்குச் சமீப காலத்தில் சப்புமல்குமார யாழ்ப்பாணத்தை ஆக்கிரமித்தபோது அங்கு விஜய நகரப் பேரரசுக்குரிய கன்னடப் படையினர் இருந்துள்ளனர். எனவே விஜயநகர கல்வெட்டு கூறும் விடயம் உண்மையானதே. எவ்வாறாயினும் ஈழம் என்ற பெயரில் தென்னிந்தியக் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படும் இலங்கையிலிருந்த அன்றைய ஆட்சியாளனான ஆறாம் பராக்கிரமபாகு தனது படையினர் மூலம் லக்கண்ணவை தோற்கடித்த வரலாறும் உண்மையானது என்றே நாம் ஏற்றுக் கொள்ள வேண்டியுள்ளது.

ஆறாம் பராக்கிரமபாகு மன்னனால் தென்னிந்தியாவின் அதி வீரராம பட்டினம் மீது தொடுக்கப்பட்ட கடற்படைத் தாக்குதல் பற்றியும் உள் நாட்டு மூலாதாரங்கள் மூலம் அறிய முடிகின்றது. இந்த நிகழ்வுக்கு அண்மைக் கால மூலாதாரம் 'கிரா சந்தேசய' எனும் இலக்கிய நூலாகும். இத்தூது இலக்கியத்தில் தூது செல்லும் கிளியானது வெளித்தர அம்பலத்தில் தங்கியிருக்கும்போது அங்கு அன்றிரவு தங்கியிருந்த பல்வேறு வெளிநாட்டவர்களும் தத்தமது நாட்டு அரசர்கள் பற்றிய விபரங்களைக் கூறினர். அதன் பின்னர் இலங்கை மன்னன் ஆறாம் பராக்கிரமபாகு பற்றி இலங்கையைச் சேர்ந்த ஒருவர் கூறுகின்றார். அவர் கூறும் போது 'நான்கு சமுத்திரங்களை எல்லையாகக் கொண்டு புகழடைந்த கன்னட ராஜனின் கடற்படையினர் போருக்கு வந்தபோது அவர்களை எதிர்த்துப் போரிட்ட இலங்கை மன்னன் இந்தியா முழுதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகழடைந்தான் எனும் அவரின் கூற்று அதே வடிவில் 'அழகேஸ்வர யுத்தம்' மற்றும் 'ராஜாவலிய' முதலிய நூல்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளதை நாம் ஏற்கெனவே அறிந்தோம்.

இலங்கை மன்னனின் அடுத்த வீரச் செயலாக வெளித்தர அம்பலத்தில் வைத்துக் கூறப்படும் மற்றொரு சம்பவம் ஆறாம் பராக்கிரமபாகுவின் அதிவீரராம பட்டின ஆக்கிரமிப்பாகும். 'கிரா சந்தேசய' எனும் கிளிவிடு தூது காவியத்தில் கவி வரிகளால் கூறப்படும் அந்தச் சம்பவம் வருமாறு:-

ஆறாம் பராக்கிரமபாகு மன்னனின் வர்த்தகக் கப்பல் அதிவீரராம பட்டினத்தில் வைத்து மழவராயன் என்பவனால் கைப்பற்றபட்டதை அறிந்த மன்னன் நூற்றுக் கணக்கான கப்பல்களில் படையினரை அனுப்பி அதிவீரராம பட்டினத் துறைமுகத்தைத் தாக்கி சோழ நாட்டின் மகுடன் கோட்டை உட்பட ஏழு கிராமங்களிலிருந்து வருடந்தோறும் வரி அறவிட்டு வந்துள்ளான். இதனை 'அழகேஸ்வர யுத்தம்' மற்றும் 'ராஜாவலிய' எனும் இரு நூல்களும் விபரமாகக் கூறுகின்றன.

சோழ நாட்டின் அதிவீரராம பட்டினம் தென்னிந்தியாவின் தஞ்சாவூர் மாவட்டத்தின் அதிராம பட்டனம் என்று அறியப்பட்டுள்ளது. மேற்கூறிய இலக்கிய மூலாதாரங்கள் இரண்டும் 1449இல் யாழ்ப்பாணம் கைப்பற்றப்பட்டதன் பின்னரே மேற்படி சம்பவம் நிகழ்ந்ததாகப் பிரஸ்தாபிக்கின்றன. ஆனால் 'கிரா சந்தேசய' நூலில் அதிவீரராம பட்டின ஆக்கிரமிப்பு 1435ஆம் ஆண்டளவில் விஜய நகரப் பேரரசனால் மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்பின் பின்னரும் கோட்டை மன்னனின் யாழ்ப்பாண ஆக்கிரமிப்பின் முன்னரும் நிகழ்ந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. விஜய நகரப் பேரரசனான இரண்டாம் தேவராயரின் அரசவைக்கு 1443 ஆம் ஆண்டு விஜயம் செய்த பாரசீக நாட்டவரான அப்துல் ரசாக் என்பவர் அதற்கு முன்னைய ஆண்டில் லக்கண்ண தண்டநாயகன் இலங்கையின் கரையோரப் பகுதிகளை அடைவதற்கான கடற் பயணத்தை மேற் கொண்டதாகக் குறிப்பிடுகின்றார். ஆயினும் 1443ஆம் ஆண்டு நிகழ்ந்த பேரரசரின் மறைவைத் தொடர்ந்து லக்கண்ண தண்டநாயகன் விஜய நகரப் பேரரசரின் தலைநகருக்குத் திரும்பவேண்டியிருந்ததாகவும் குறிப்பிடப்படுகின்றது. இலங்கை மன்னனின் அதிவீரராம பட்டினத் தாக்குதலுக்கான பதிலடியாகவே லக்கண்ண தண்ட நாயகனின் வட இலங்கைக்கான கடற்பயணம் அமைந்திருக்கலாம். என நாம் ஊகிக்கலாம். அவ்வாறாயின் அது 1443ஆம் ஆண்டு நிகழ்ந்திருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறாம் பராக்கிரமபாகு மன்னனின் அடுத்த வெற்றியாக அமைவது வடக்கே யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியமையாகும். இப்படையெடுப்பிற்குத் தலைமை தாங்கியவன் ஆறாம் பராக்கிரமபாகுவின் வளர்ப்பு மகனான சப்புமல் குமார என்பவனாவான். அவன் சம்பக பெருமாள், செண்பகப் பெருமாள் எனும் தமிழ்ப் பெயர்களாலும் அழைக்கப்பட்டான். இவன் ஆறாம் பராக்கிரமபாகுவின் ஆட்சிக் காலத்தில் மலபாரிலிருந்து வருகை தந்த 'பனிக்கல' என்பவனின் மகன் என்றும் மன்னன் அவனைத் தனது வளர்ப்பு மகனாகத் தத்தெடுத்துக் கொண்டான் என்றும் பிற்காலப் போர்த்துக்கேய வரலாற்றாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஆறாம் பராக்கிரமபாகு மன்னனின் மகளான உலகுடைய தேவிக்கு மகன் ஒருவன் கிடைப்பதற்காக களனி விபீஷன தெய்வத்திடம் வரம் வேண்டி 'செல லிஹினி' எனப்படும் நாகனவாய்ப் பறவை மூலம் தூது அனுப்புவதாக சிறி ராஹுல தேரர் அவர்களால் எழுதப்பட்ட 'செலலிஹினி சந்தேசய' (பூவை விடு தூது) எனும் நூலில் கூறப்பட்டுள்ளது. தூது செல்லும் அப்பறவையானது ஜயவர்தனபுரத்திலிருந்து புறப்பட்ட பின்னர் யாழ்ப்பாணத்தை வென்று திரும்பிய சப்புமல் குமாரனை சந்தித்த சம்பவம் வர்ணிக்கப்பட்டுள்ளது. இந்நூல் 1449 ஆம் ஆண்டு எழுதப்பட்டதாகும். எனவே சப்புமல் குமாரனின் யாழ்ப்பாண வெற்றியும் அதே ஆண்டில் நிகழ்ந்ததாகவே ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

அன்றைய கால கட்டத்தில் 6ஆம் பராக்கிரமபாகு மன்னன் தெதிகம ஆட்சியாளனைத் தனது இளவரசனாகப் பதவியிலமர்த்திக் கொண்டு நாலு கோறளை மற்றும் மலை நாட்டுப் பகுதி நிருவாகப் பொறுப்புக்களை அவனிடம் கையளித்திருந்தான் என்பதை ஏற்கெனவே அறிந்தோம். அடுத்து உலர் வலயத்தில் இராசரட்டை மற்றும் உருகுணை என்பவற்றுடன் வனங்களுக்கிடையே கஷ்டப் பிரதேசத்தில் வேறு வேறாக அமைந்திருந்த வன்னி எனும் பெயரிலான குடியேற்றங்களில் இருந்த 'மகா வன்னியர்' எனும் பிரதேசத் தலைவர்கள் அனைவரும் ஆறாம் பராக்கிரமபாகுவின் ஆதிக்கத்தின் கீழிருந்தனர். அக்கால இலக்கிய மூலாதாரங்கள் அவ்வாறான பதினெட்டு (18) வன்னிமைகள் பற்றிக் குறிப்பிட்டுள்ளன.

ஆறாம் பராக்கிரமபாகு மன்னன் இவ்வாறு உள்நாட்டில் தனது ஆட்சி அதிகாரத்தை உறுதிப்படுத்திக் கொண்டு யாழ்ப்பாணம் வரை அதிகாரத்தைப் பரப்பியிருந்த விஜய நகரப் பேரரசனுடனும் வெற்றிகரமாகப் போரிட்டு ஆட்சி செலுத்தி வந்ததை ஏற்கெனவே பார்த்தோம். தேவராயரின் மறைவைத் தொடர்ந்து விஜயநகரப் பேரரசில் 1447ஆம் ஆண்டு ஆட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீடமேறிய மல்லிகா அர்ஜூன் எனும் பலவீனமான மன்னனின் ஆட்சியின் ஆரம்பம் முதல் விஜயநகரப் பேரரசு வேகமாக வீழ்ச்சியடையத் தொடங்கியது. எனவே யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்து வந்த ஆரியச் சக்கரவர்த்திக்கு தொடர்ந்தும் விஜய நகரப் பேரரசிலிருந்து படையுதவி பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது. இவ்வாறு தனக்குச் சாதக மாயமைந்துவரும் காரணங்களை அவதானித்த கோட்டை மன்னன் பல வருடங்களாக சுயாதீனமான இராச்சியமாக இயங்கி வந்த யாழ்ப்பாணத்தைத் தனது ஆட்சியின் கீழ் கொண்டு வர இதுவே தக்க தருணம் எனக் கருதினான்.

ஆறாம் பராக்கிரமபாகு மன்னன் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்கு முன்னர் அயல் பிரதேசங்கள் மீது தாக்குதல் மேற்கொள்வதற்காகவே சப்புமல் குமாரவை முதலில் அனுப்பி வைத்தான். அதன்படி சப்புமல் குமாரனும் யாழ்ப்பாணத்தின் அயல் கிராமங்களைத் தாக்கி, கைப்பற்றிய கைதிகளுடன் மீண்டும் தலைநகருக்கு வந்தான். யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்கான தாக்குதலுக்கான பின்னணியை உருவாக்குவதே முதலாவது தாக்குதலின் நோக்கமாகும். யாழ்ப்பாணம் மீது மேற்கொள்ளப்போகும் படையெடுப்பின் போது இடையில் அகப்படும் வன்னிக் குடியேற்ற வாசிகளைத் தமது பக்கம் திருப்பிக் கொள்வதும் மிகவும் முக்கியம் வாய்ந்த செயற்பாடாக இங்கு கருதப்பட்டுள்ளது. அக்கால கட்டத்தில் யாழ்ப்பாணத்திற்குத் தெற்கே அமைந்திருந்த வன்னிமைகளின் சிங்கள, தமிழ் வன்னித் தலைவர்கள் யாழ்ப்பாண ஆட்சியாளனான ஆரியச்சக்கரவர்த்திக்கு சார்பாக இருந்ததாக யாழ்ப்பாண வைபவ மாலை' குறிப்பிடுகின்றது.

இந்த வன்னித் தலைவர்கள் 'வன்னியார்' எனும் பெயரிலும் அழைக்கப்பட்டனர். அவர்கள் யாழ்ப்பாண ஆட்சியாளனான ஆரியச் சக்கரவர்த்திக்கு சார்பானவர்களாகத் தமது பிரதேசங்களை நிர்வகித்து வந்துள்ளனர். சப்புமல் குமாரனின் முதல் யாழ்ப்பாண திக் விஜயத்தின் போது சில வன்னித் தலைவர்களை கோட்டை மன்னனுக்கு சார்பானவர்களாக மாற்றிக் கொள்ள முடிந்துள்ளதாக நாம் கருத இடமுண்டு. அவ்வாறு தமது பக்கம் வளைத்துக் கொள்ள முடியாத வன்னித் தலைவர்களையே சப்புமல் குமார கைது செய்து கோட்டைக்குக் கொண்டு சென்றுள்ளான். யாழ்ப்பாணத்துக்கான ஆக்கிரமிப்பை மேற் கொண்டபோது அங்குள்ள யுத்த நிலைமை பற்றிய தரவுகளை அக்கைதிகள் மூலமாகப் பெற்றிருக்கலாம் என்பதிலும் எவ்வித சந்தேகமுமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் முயற்சியின் வெற்றியினால் பெருமை கொண்ட கோட்டை மன்னன் பெரும் படைகளுடன் சப்புமல் குமாரனை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைத்தான். கோட்டை முதல் யாழ்ப்பானம் வரையிலான அந்தப் பயணத்தில் பங்கேற்ற காலாட்படை மேற்குக் கரையின் நீர்கொழும்பு, சிலாபம், புத்தளம், மன்னார் ஊடாக யாழ்ப்பாணத்துக்குச் செல்லும் வீதியால் சென்றதாகப் பின்னர் எழுதப்பட்ட 'கோகில சந்தேசய' (குயில் விடு தூது) எனும் நூலின் மூலம் அறியக் கூடியதாக உள்ளது. காலாட்படை தரை மார்க்கமாகச் சென்றபோது அவர்களுக்குத் தேவையான ஆயுதங்கள், உணவு, பானம், என்பவற்றை சுமந்து கொண்ட கப்பல்களும் மேற்குக் கரை கடல் பாதை வழியாகப் பயணஞ் செய்து இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வரும் உதவியைத் தடுக்கும் முகமாக பாக்கு நீரிணையில் காவல் பணியில் ஈடுபட்டன.

முதலாவது தடவையாக ஆனையிறவுக்கு அண்மையிலான கடனீரேரிக்கு இக்கரையில் அமைந்திருந்த ஜாவகர் கோட்டையில் கடுஞ் சமர் இடம் பெற்றது. தம்பதெனிய யுகத்தின் இறுதிப் பகுதியில் ஜாவா நாட்டின் சந்திரபானுவின் இரண்டாவது ஆக்கிரமிப்பின்போது அவனால் அமைக்கப்பட்ட கோட்டையாக அது கருதப்படுகின்றது. ஆறாம் பராக்கிரமபாகுவின் ஆட்சியின்போது யாழ்ப்பாண ஆட்சியாளன் ஆரிய சக்வித்தி அல்லது ஆரிய சக்கரவர்த்தி ஆவான் என சிங்கள மூலாதாரங்கள் அனைத்தும் குறிப்பிடுகின்றன. ஆரியச் சக்கரவர்த்தி என்பது யாழ்ப்பாண இராச்சியம் ஆரம்பமான 14ஆம் நூற்றாண்டின் தொடக்கம் முதல் ஆட்சியாளர்களைக் குறிக்கப் பயன்பட்ட பரம்பரைப் பெயராகும். ஆகவே இக்காலக்கட்டத்தில் ஆட்சி செய்த ஆரியச் சக்கரவர்த்தியின் பெயர் கனகசூரிய சிங்கை ஆரியன் என 'யாழ்ப்பாணவைபவ மாலை' அறிமுகம் செய்கிறது. ஜாவகர் கோட்டையில் ஆரியச்சக்கரவர்த்திக்காகப் போரிட்டவர்கள் கன்னடப் படையினர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. கன்னட அல்லது கர்நாடகப் படையென்பது விஜயநகரப் பேரரசுக்குரிய படை என்பதை ஏற்கெனவே அறிந்தோம். இந்த ஆதாரங்கள் அக் காலகட்டத்தில் கனக சூரிய சிங்கை ஆரியன் என்பது விஜயநகர அரசின் படை உதவியுடனே ஆட்சியிலிருந்தான் என்பது அந்த உண்மையை மேலும் தெளிவாக்குகின்றது. சப்புமல் குமாரனின் படையிலும் சிங்கள வீரர்கள் மாத்திரமன்றி தமிழ், துளு, மலாய் அல்லது ஜாவா இன வீரர்களும் இருந்தனர்.

ஜாவகர் கோட்டைச் சமரில் வெற்றி கொண்ட கோட்டைப் படையினர் ஒரேயடியாக யாழ் குடாநாடு நோக்கிப் படையெடுத்தனர். அங்கு இடம் பெற்ற கடுஞ் சமரில் பங்கெடுத்த தளபதியான சப்புமல் குமாரன் தனது குதிரையின் மீதேறி மிகத் திறமையாக எதிரிப் படைகளைப் புறமுதுகிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடச் செய்தான். என 'ராஜாவலிய' கூறுகின்றது. ஆரியச் சக்கரவர்த்தி இப் போரில் கொல்லப்பட்டதாக 'ராஜாவலிய' கூறினாலும் வேறு மூலாதாரங்களின்படி கனகசூரிய சிங்கை ஆரியன் இந்தியாவுக்குத் தப்பிச் சென்றதாகவே அறிய முடிகின்றது. தான் அவ்வாறு செல்ல நேரிட்டமைக்கான காரணம் அப்பிரதேசத்தில் வாழ்ந்த சிங்களவர்கள் தனக்கு எதிரானதினாலாகும் என்று அவன் கூறியதாக 'யாழ்ப்பாண வைபவமாலை' கூறுகின்றது. ஆரியச் சக்கரவர்த்தி அவ்வாறு தப்பிச் சென்றாலும் அவனது உறவினர்களான மயிலனவன், மலரவன் உட்பட மேலும் பல உறவினர்களும் கைது செய்யப்பட்டதாக பல மூலாதாரங்களும் கூறுகின்றன. நீண்ட காலமாக தென்னிலங்கையிலிருந்து பிரிந்து சுயாதீன இராச்சியமாக செயற்பட்ட யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய படையினர் வெற்றிக் களிப்பில் தனது வீரக்குதிரைகள் மீதேறி தங்கம், மாணிக்கம் ஒளி வீச மீண்டும் ஜயவர்தனபுரக் கோட்டைக்குத் திரும்பினர், செலலிஹினியா பறவை கோட்டையிலிருந்து புறப்பட்டு இரண்டாவது நாளின் காலைப் பொழுதிலாகும். என்பது 'செலலிஹினி சந்தேசய' மூலம் தெரிய வருகின்றது.

'செலலிஹினி சந்தேசய' எனும் தூது இலக்கியம் எழுதப்பட்டது ஆறாம் பராக்கிரமபாகு மன்னனின் ஐம்பத்து மூன்றாம் வயதில் மாசி மாதம் அல்லது 1449ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்திலாகும் என்று அக் காவியத்தின் இறுதியில் இடம் பெறும் செய்யுள் ஒன்றின் மூலம் அறியமுடிகின்றது. முழு நாடும் தனது ஆட்சியின் கீழ் வந்ததால் பெருமையடைந்த மன்னன் சப்புமல் குமாரனுக்குப் பரிசில்கள், சொத்துக்கள் பலவும் வழங்கி தனது பிரிதிநிதியாக யாழ்ப்பாணத்தின் ஆட்சி உரிமையையும் வழங்கினான். எனவே மீண்டும் யாழ்ப்பாணம் சென்ற சப்புமல் குமார அரசவை அமைத்து ஆறாம் பராக்கிரமபாகுவின் மறைவு வரை அங்கிருந்து யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்தான்.

இதற்கிடையில் நாலு கோறளை மற்றும் மலை நாட்டுப் பகுதியில் அரசியல் கிளர்ச்சி ஒன்று ஏற்பட்டது. ஏனெனில் கோட்டை அரசின் இளவரசனாக செயற்பட்டு வந்த தெதிகம பராக்கிரமபாகு மரணிக்கவே அரசவையின் இளவரசனாக பிரபலமானவர்கள் பதவி மோகத்தால் அரச படையின் அனுமதியின்றித் தமக்கிடையே ஒற்றுமையின்றிச் செயற்பட்டதாக 'அஸ்கிரிதல்பத' மூலம் அறிய முடிகின்றது. அவ்வாறு பலம் பெற்ற மக்கள் தலைவர்களுள் தெதிகம பராக்கிரமபாகுவின் மகன் பராக்கிரம எனும் இளவரசனும் ஜோதிய எனும் அரச குமாரனும் முதலிடம் பெற்றிருந்ததாகவும் மடவளைக் கல்வெட்டு மூலம் அறிய முடிகின்றது. ஆறாம் பராக்கிரமபாகுவின் நாற்பத்தேழாம் ஆட்சி வருடத்தில் அதாவது 1462ஆம் ஆண்டு பொறிக்கப்பட்ட 'மடவளைக் கல்வெட்டில் இளவரசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பராக்கிரமபாகு (ஏபா) மற்றும் ஜோதிய அரச குமாரன் எனும் இருவரும் பரமணயா ஆசாரிக்கும் அவனது மகன் சூரியாவுக்கும் சூரிய, சந்திரன் நிலவும் காலம் வரை அனுபவிக்கும் வகையில் தும்பறைப் பகுதிக் கிராமமொன்றின் ஆறு அவனம் வயல் நிலத்துடன் கூடிய தோட்டம் துறவு என்பன அன்பளிப்பாக வழங்கப்பட்டன. அதற்குச் சாட்சியாக தந்தொட்ட வத்துரே தெவன், திவான வத்தே லங்கா அதிகாரி மற்றும் அகம்படி பத்துப் பேரும் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளனர். எனவே 'அஸ்கிரி தல்பத' குறிப்பிடும் தெதிகம பராக்கிரமபாகுவின் மறைவின் பின்னர் தோன்றிய மக்கள் தலைவர்களுள் மேற்கூறப்பட்ட பராக்கிரமபாகு ஏபா, ஜோதிய சீமான், தந்தொட்ட வதுரேதெவன், திவான வத்தே லங்கா அதிகாரி ஆகியோர் முக்கியம் வாய்ந்தவர்களாவர். அத்துடன் தெதிகம பராக்கிரமபாகுவின் மரணமும் அந்தக் கல்வெட்டு பொறிக்கப்பட்ட 1462ஆம் ஆண்டுக்கு அண்மிய வருடமொன்றில் நிகழ்ந்துள்ளது. அவ்வாறெனின் 1460ஆம் ஆண்டளவில் அவனின் மரணம் நிகழ்ந்ததாக 'அஸ்கிரி தல்பத' மூலம் அறிய முடிகின்றது.

சிறிது காலத்தில் பராக்கிரமபாகு (ஏபா) இளவரசனையும் அடி பணிய வைத்து ஜோதிய என்பவன் மலை நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்றியதுடன் ஆண்டு தோறும் கோட்டை மன்னனுக்கு செலுத்தி வந்த கப்பத்தை நிறுத்தி மலை நாட்டு மக்களை ஒன்று திரட்டி கிளர்ச்சி ஒன்றையும் செய்ததாக 'ராஜாவலிய ' குறிப்பிடுகின்றது. இந்நூலில் ஜோதியவின் பெயர் சோஜாத மன்னன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தருணத்தில் ஆறாம் பராக்கிரமபாகு மன்னன் தனது மற்றொரு வளர்ப்பு மகனான அம்புலுகல குமாரனை மலையகக் கிளர்ச்சியை அடக்குவதற்காக அனுப்பி வைத்தான். அவன் கிளர்ச்சியை அடக்கியதுடன் ஜோதியவையும் அவனது குடும்ப உறவினர்களையும் கைது செய்து கோட்டையின் தலைநகருக்குச் சென்று மன்னனை சந்தித்தான். அதன் பின்னர் ஆறாம் பராக்கிரமபாகு மன்னன் ரிவிகுல அரச குமாரன் ஒருவனுக்கு மலை நாட்டின் ஆட்சி உரிமையை வழங்கினான். என 'ராஜாவலிய' கூறுகின்றது. ரிவிகுல அரச குமாரன் வேறுயாருமல்ல. மடவளைக் கல்வெட்டில் ஜோதியவின் பெயருடன் குறிப்பிடப்பட்டுள்ள 'ஏபா' பதவியிலிருந்த தெதிகம பராக்கிரமபாகுவின் மகனான பராக்கிரமபாகு ஏபா என்பவனாவான்.

இவ்வாறு ஆறாம் பராக்கிரமபாகு மன்னனால் நியமிக்கப்பட்ட பராக்கிரமபாகு ஏபா தெதிகமவில் இருக்கும்போது மலை நாட்டில் மற்றுமோர் அரசியல் மாற்றம் இடம்பெற்றது. அதாவது மாத்தளைப் பகுதியிலிருந்து வெளிப்பட்ட விக்கிரமபாகு என்பவன் மலை நாட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளர்ச்சி செய்ததாக 'அஸ்கிரிய தல்பத' கூறுகின்றது. அக்கிளர்ச்சியை அடக்குவதற்காக மலை நாடு சென்ற பராக்கிரமபாகு ஏபா அங்கு விக்கிரமபாகுவிடம் தோல்வி கண்டு வெல்லஸ்ஸ தொடம் வெலவில் தங்கியதாக அந்நூலில் கூறப்பட்டுள்ளது. அப்போதிருந்து அவன் 'தொடம்வெல பராக்கிரமபாகு ஏபா' எனும் பெயரில் பிரபல்யமானதுடன் வெற்றியடைந்த விக்கிரமபாகு 'சேனா சம்மத விக்கிரமபாகு' எனும் பெயரில் செங்கடகல (கண்டி) அரசனானான். அது 1463ஆம் ஆண்டு புத்த வருடம் 2006 இல் நடைபெற்றது. அதன் பின்னர் ஆறாம் பராக்கிரமபாகு மன்னன் வெற்றிடமான நாலு கோறளையின் நிருவாகப் பதவிக்கு தனது வளர்ப்பு மகனான சப்புமல் குமாரனின் தம்பியான அம்புலு கல குமாரனை நியமித்தான். அவன் தெதிகமவுக்கு அருகில் உள்ள அம்புலுகலவை தனது ஆட்சி மையமாகக் கொண்டதனாலேயே அப்பெயரால் பிரபல்யமடைந்தான்.

இவ்வாறு 1467 இல் ஆறாம் பராக்கிரமபாகு மரணிக்கும்போது அவனது வளர்ப்பு மகனான சப்புமல் குமார யாழ்ப்பாணத்திலும் அவனது தம்பி அம்புலுகல குமாரன் தெதிகமவிலும் ஆட்சியாளர்களாக இருந்ததுடன் 1463ஆம் ஆண்டிலிருந்து சேனா சம்மத விக்கிரமபாகு என்பவன் கண்டியில் சுயாதீனமான ஆட்சியாளனாக உருவாகிக் கொண்டிருந்தான்.

## ஆறாம் பராக்கிரமபாகு மன்னனின் பின் வந்த அரசர்கள்

1467ஆம் ஆண்டு ஆறாம் பராக்கிரமபாகுவின் மறைவை அடுத்து அவனது மகளான உலகுடைய தேவியின் மகன் ஜயபாகு எனும் பெயரில் ஆட்சி பீடம் ஏற்றப்பட்டான். இந்த ஜயபாகு என்பவன் ஏற்கெனவே நாமறிந்தவாறு தொட்டகமுவே ஸ்ரீ ராகுல தேரர் அவர்களால் 1449ஆம் ஆண்டு எழுதப்பட்ட 'செலலிஹினி சந்தேசய' எனும் தூது காவியம் மூலம் களனி விபீஷண தெய்வத்திடம் கேட்ட வரத்தின் படி உலகுடைய தேவிக்கும் அவளது கணவனான நன்னருந் துணைவர் என்பவனுக்கும் பிறந்த மகனாவான். அக்காவியம் எழுதப்பட்ட அதே வருடத்தில் இளவரசன் பிறந்திருந்தான் 1467ஆம் ஆண்டு ஆட்சி பீடமேறும்போது அவனது வயது பதினாறுக்கு மேற்பட்டிருக்காது அக்காலத்தில் ராஹுல தேரரும் அரச குடும்பத்துடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்டவராக ஜயவர்தனபுர கோட்டையிலே தங்கியிருந்தார். எனவே அரசியல் ரீதியாக செல்வாக்குச் செலுத்தக்கூடிய ஒரு பிக்குவாக அவர் திகழ்ந்துள்ளார். யாழ்ப்பாண வெற்றியினால் மிகவும் பிரபலமடைந்திருந்த தளபதியான சப்புமல் குமாரன் யாழ்ப்பாணத்திலிருக்கும்போதே கஜபாகுவை மன்னனாக்குவதில் தேரரும் முக்கிய பங்கு வகித்துள்ளார். இந்நடவடிக்கையானது கோட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராச்சியத்தில் அரசியல் போராட்டம் ஒன்றுக்கு அடிகோலியது. அதாவது அப்போது யாழ்ப்பாண ஆட்சியாளனான சப்புமல்குமாரன் யாழ்ப்பாணத்திலிருந்து பெருஞ் சேனையுடன் ஜயவர்தனபுரத்துக்கு வந்து கஜபாகு மன்னனைக் கொலை செய்து ஆறாம் புவனேகபாகு எனும் பெயரில் 1469 இல் கோட்டை மன்னனானான்.

எனவே ஜயபாகு மன்னனின் ஆட்சிக் காலம் இரண்டு வருடங்களுக்கு வரையறுக்கப்பட்டிருந்தது. இக்கால கட்டத்தில் பௌத்த சங்கத்தின் தலைமைப் பிக்குவாகத் திகழ்ந்தவர் ஸ்ரீ ராஹுல தேரர் ஆவார். கஜபாகுவைக் கொலை செய்து ஆறாம் புவனேகபாகு ஆட்சியைக் கைப்பற்றியமையானது தேரருக்கு வெறுப்பான செயலாகவே அமைந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. சப்புமல் குமாரன் அரச பீடமேறி சிறிது காலத்திலேயே அவனது ஆட்சிக்கு எதிரான கிளர்ச்சிகள் தோன்றின. பஸ்துன் கோறளையில் குகுலந்தொல சிறிவர்தன பதிராஜ மற்றும் கூரகம ஹிமியானன் எனும் இரு மக்கள் தலைவர்களினதும் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட இக்கிளர்ச்சி களுகங்கைக்கும் வளவை கங்கைக்குமிடையிலான முழுப் பிரதேசத்திலும் பரவியது. சிங்கள பெரலிய (சிங்களப் பிறழ்வு) சிங்கள சங்காரய (சிங்கள சம்ஹாரம்) எனும் பெயர்களால் அழைக்கப்பட்ட இக்கிளர்ச்சி முழுமையாக ஐந்தாண்டுகளாக நீடித்தது. சிங்கள உபசம்பதாவைப் பெற்றுக் கொள்வதற்காக பர்மாவின் தர்ம சேதிய மன்னனால் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்ட தூதுக் குழுக்கள் இரண்டில் ஒரு குழுவினர் பெப்ரவரி 1474 இல் வெலிகமவில் தரையிறங்கிய போதிலும் அப்பகுதியில் இடம் பெற்று வந்த கிளர்ச்சி காரணமாக ஜயவர்தனபுரத்துக்கு செல்ல முடியாமல் மூன்று மாத காலமாக அங்கேயே தங்க வேண்டி நேர்ந்துள்ளது. இதிலிருந்து அக்கிளர்ச்சியானது 1474 நடுப்பகுதி வரை நடைபெற்றுள்ளமை தெரிய வருகின்றது.

அச்சமயத்தில் நாலு கோறளையிலிருந்த இளவரசன் அம்புலுகல குமாரன் தனது சேனைகளுடன் தன் சகோதரனான ஆறாம் புவனேகபாகுவுக்கு உதவும் பொருட்டு கோட்டைக்கு வந்தான். அவனின் உதவியுடன் சிறிவர்தன பதிராஜா மற்றும் கூரகம ஹிமியானன் எனும் கிளர்ச்சித் தலைவர்களைக் கைது செய்து கிளர்ச்சியை அடக்குவதற்கு ஆறாம் புவனேகபாகு மன்னனால் முடிந்தது. ஆறாம் புவனேகபாகு எனும் பெயரில் அரசனான சப்புமல் குமாரன் பிறப்பினால் தமிழராவார் என்பதை ஏற்கெனவே அறிந்தோம். எனவே அவனது ஆட்சிக்கெதிரான சிங்களத் தலைவர்களின் கிளர்ச்சியானது அவனது இனம் பற்றிய காரணத்தாலேயே ஏற்பட்டிருக்கலாம். அத்தோடு அவன் யாழ்ப்பாணத்திலிருந்து தனது பிரதானிகள் மற்றும் படையினருடனேயே கோட்டைக்கு வந்ததாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ராஜாவலிய' கூறுகின்றது. அவ்வாறு வந்தவர்களுள் அநேகமான பிரதானிகளும் வீரர்களும் தமிழர்களாக இருந்திருக்கலாம். இது ஜயவர்தன புர அரசவையில் சிங்களப் பிரதானிகளின் எதிர்ப்புக்கு ஒரு காரணியாக அமைந்திருக்கலாம். அதற்கிடையில் தமது ஆலோசனையின்படி ஆட்சி பீடமேறிய ஜயபாகுவைக் கொலை செய்து, சப்புமல் குமாரன் அரசனானமை தொடர்பாக அன்றைய புத்த சாசன தலைமைப் பிக்குவான ஸ்ரீ ராஹுல தேரரும் ஆறாம் புவனேகபாகுவுக்கு எதிராக இருந்திருக்கலாம்.

1474ஆம் ஆண்டு பர்மிய புத்த பிக்குகளுக்காக மேற்கொள்ளப்பட்ட உபசம்பதா சமய சடங்குகளுக்குத் தலைமை தாங்கியவர் விதாகம மைத்திரிய மகா தேரர் ஆவார். 'தம்பதெனிய கதிகாவத' எனும் பௌத்த ஒழுக்க நெறிக்கோவையின்படி மரபு வழிவந்த விடயம் என்னவெனில் உபசம்பதா விழாவின்போது இலங்கை மன்னனுடன் அக் காலத்தில் புத்தசாசன தலைமைப் பிக்குவானவர் கட்டாயமாகப் பங்கேற்க வேண்டும் என்பதாகும். ஆயினும் இம்முறை விதாகம மகா தேரர் தலைமை ஏற்றமையானது, ஸ்ரீ ராஹுல தேரர் ஆறாம் புவனேகபாகு மன்னனை விட்டும் தூரமாய் நின்று செயற்பட்டமையைக் காட்டுகின்றது.

இளவரசன் அம்புலுகல குமாரன் தனது படையினருடன் நாலு கோறளையிலிருந்து கோட்டைக்கு வந்ததன் பின்னர், மலை நாட்டிலும் நாலு கோறளையிலும் அரசியல் களத்தில் அடுத்தடுத்து நிகழ்ந்துள்ள மூன்று மாற்றங்கள் பற்றிய தரவுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அதில் முதலாவது நிகழ்வு மலை நாட்டிலே நடந்துள்ளது. அது அப்போதைய கண்டி அரசனான சேனா சம்மத விக்கிரமபாகு மன்னனுடன் தொடர்பானதாகும்.

## கண்டி மன்னன் சேனாசம்மத விக்கிரமபாகு

1463ஆம் ஆண்டிலிருந்து செங்கடகலையில் சேனா சம்மத விக்கிரமபாகு என்பவன் சுயாதீனமான ஆட்சியாளனாக உருவானதை ஏற்கனவே அறிந்தோம். இந்த சேனா சம்மத விக்கிரமபாகுவினால் பொறிக்கப்பட்ட பல கல்வெட்டுக்களும் கிடைக்கப் பெற்றுள்ளன.

சேனா சம்மத விக்கிரமபாகுவின் எட்டாவது ஆட்சி வருடத்தில் அதாவது 1471 இல் எழுதப்பட்ட கடலாதெனிய கல்வெட்டின்படி கீழ்வரும் பிரதேசங்களில் இருந்த படையினருக்கு அவன் கட்டளைகள் பிறப்பித்துள்ளான். சிதுருவான, தெனுவர, பலவிட, சாரசிய பத்துவ, மாத்தளை அடசிய பத்துவ, கொடரட்ட, மத்து ரட்ட, ஊவா, அடபெடிய,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொறபொற, வெல்லஸ்ஸ, கொத்மலை, கம்பளை, தொலஸ்பாகே, புலத்கம, மஹதொட்ட, திருகோணமலை, மட்டக்களப்பு என்பனவே அப் பிரதேசங்களாகும். இதன்படி 1471ஆம் ஆண்டாகும்போது மலையகம் மட்டுமல்லாது ஊவா வெல்லஸ்ஸ, மாதொட்ட, திருக்கோணமலை, மட்டக்களப்பு முதலிய பிரதேசங்களும் சேனா சம்மத விக்கிரமபாகுவின் ஆதிக்கத்தின் கீழ் இருந்துள்ளமை தெளிவாகின்றது. இங்கு குறிப்பிடப்படாத யாழ் குடாநாடும் நாலு கோறளையின் தென் மேல் சமநிலமும் சப்ரகமுவ மற்றும் தென் பகுதியும் கோட்டை இராசதானி ஆதிக்கத்தின் கீழ் இருந்திருக்கலாம் என நாம் கருதலாம். கல்வெட்டில் குறிப்பிடப்படும் பிரதேசங்களின் ''சேனைப் படையில் எவருக்கேனும் விக்கிரமபாகு மாமன்னன், யாபா பண்டார, ரஜதரு பண்டார உள்ளிட்ட அரசர்களினால் உயிர்ச் சேதமோ அங்கச் சேதமோ செய்வதில்லை என புனித தந்ததாதுவின் மீதும் பாத்திர தாதுக்களின் மீதும் சத்தியம்'' செய்து பொறிக்கப்பட்டுள்ளது. இதன்படி இக்கல்வெட்டானது மலை நாட்டில் நடை பெற்ற யுத்தக் கலகமொன்றின் பின்னர் அது தொடர்பான படையினருக்கு அபயமளிக்கும் வகையிலே அமைக்கப்பட்டுள்ளமை தெரிய வருகின்றது. இத் தகவலை உறுதிப்படுத்தும் வகையில் 'அஸ்கிரி தல்பத' வும் செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளது. அதன்படி கல்வெட்டு பொறிக்கப்பட்ட விக்கிரமபாகு மன்னனின் ஏழாம் ஆட்சியாண்டில் அதாவது 1470 இல் தும்பர ஹடன் பண்டார என்பவன் ஆட்சியைக் கைப்பற்ற கிளர்ச்சி செய்ததாகவும் விக்கிரமபாகு மன்னன் 'துனயமே ஹிஸ்கன்னஹே' என்பவனுக்கு அரசாட்சியை வழங்குவதாக உறுதியளித்து, தந்திரமான வகையில் கிளர்ச்சியை அடக்கியமை தெரிய வருகின்றது.

இவ்விரு மூலாதாரங்களும் ஒரே விடயத்தையே கூறுகின்றன. மலைநாட்டு அரசுரிமை தொடர்பாக விக்கிரமபாகு மன்னனுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்ததாக 'அஸ்கிரி தல்பத' குறிப்பிடும் தும்பர ஹட்டன் பண்டார என்பவன் கடலாதெனிய கல்வெட்டில் குறிப்பிடப்படும் யாபா பண்டார என்று நாம் இலகுவாக இனங் காணலாம். கிளர்ச்சியில் ஈடுபட்ட படையினருக்கு அபயமளிப்பதாக உறுதியளித்த தலைவர்களுள் தும்பர ஹட்டன் பண்டார என்பவனதும் தருபண்டார என்பவனதும் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

ரஜதரு பண்டார எனும் பெயரிலிருந்து அவன் அரச குடும்பமொன்றைச் சேர்ந்தவன் என்பது புலனாகின்றது. ஆறாம் பராக்கிரமபாகு மன்னனின் இறுதிக் காலத்தில் மலை நாட்டில் ஜோதிய என்பவன் நடாத்திய கிளர்ச்சி அடக்கப்பட்டு மலை நாடு மற்றும் நாலு கோறளையின் நிருவாகம் கம்பளை அரச வம்சத்தைச் சேர்ந்த ஒருவனுக்கு வழங்கப்பட்டதாக ஏற்கெனவே அறிந்தோம். அவன் தெதிகம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பராக்கிரமபாகுவின் மகனான தெதிகம பராக்கிரமபாகு ஏபா (இளவரசன்) என்றும் அவன் சேனா சம்மத விக்கிரமபாகுவிடம் தோல்வியடைந்து ஊவா வெல்லஸ்ஸ பகுதியில் தொடன்வல எனுமிடத்தில் இருந்து வந்தமையால் தொடம்வெல பராக்கிரம ஏபா எனும் பெயரில் பிரபல்யமடைந்ததாகவும் அறிந்தோம். எனவே 1471 இல் விக்கிரமபாகு மன்னனுக்கு எதிராக யாபா பண்டார என்பவனுடன் கிளர்ச்சி செய்த ரஜதரு பண்டார என்பவன் இந்த தொடங்வல பராக்கிரமபாகு ஏபா என்பவனாவான் என்பதில் சந்தேகமில்லை. கிளர்ச்சியை அடக்குவதற்கு விக்கிரமபாகு மேற்கொண்ட தந்திரம், தனக்குப் பின்னர் ஆட்சி உரிமையை 'ஹத்துனயம ஹிஸ்கன்னஹே' என்பவனுக்கு வழங்குவதாக உறுதியளித்தமை ஆகும். தொடம்வல பராக்கிரமபாகு ஏபா' வின் மருமகனான மெனவர துனயா என்பவன் பற்றிய கல்வெட்டுப் பற்றி பினனர் ஆராய்வோம்.

இவ்வாறு மலை நாட்டில் தனது அரசியல் நிலையை உறுதிப்படுத்திக் கொண்ட சேனா சம்மத விக்கிரமபாகு அதன் பின்னர் நாலு கோறளைப் பக்கம் தனது கவனத்தைச் செலுத்தினான். 'தொடம்வல பராக்கிரம ஏபா' வுக்குப் பின்னர் அப்பகுதியை நிர்வகித்து வந்த அம்புலுகல குமாரன் தனது சகோதரனான ஆறாம் புவனேகபாகு மன்னனுக்கு எதிரான கிளர்ச்சியை அடக்குவதற்காகத் தனது படைகளுடன் தென் பகுதிக்குச் சென்றிருந்த சமயம் விக்கிரமபாகு மன்னன் கேகாலை மாவட்டத்தின் அளுத்நுவர வரை சென்று நாலு கோறளையின் மக்கள் பிரதானிகளை தனக்குச் சார்புடையவர்களாக மாற்றிக் கொண்டான். இத் தகவல் அளுத்நுவர தேவாலய வளவில் கண்டெடுக்கப்பட்ட இரு கல்வெட்டுக்கள் மூலம் உறுதிப்படுத்தப்படுகின்றது. இது மலை நாடு மற்றும் நாலு கோறளை அரசியல் களத்தில் ஏற்படுத்தப்பட்ட மிக முக்கியமான அரசியல் புரட்சியாகும்.

இந்நிகழ்வுக்குரிய முதலாம் கல்வெட்டின் படி 'நாலு கோறளையின் ரட்டநாயக மற்றும் திசாநாயக எனும் பிரதானிகள் உள்ளிட்ட சிறிய பெரிய பிரதானிகள் எவராயினும் மலை நாட்டு அரசனுக்கு எதிரியான ஒருவனுக்கு சொல்லாலோ, இருப்பிடத்தாலோ, ஆட்களாலோ உதவி செய்யாது மலையக மன்னனுக்கு சார்பாக நடந்து கொள்வதாக தந்ததாது முன்னிலையிலும் உத்பலவர்ண எனும் இலங்கைக்கு அதிபதியான தெய்வத்தின் முன்னிலையிலும் சத்தியம் செய்துள்ளனர்.

இவ்வாறு சத்தியம் செய்து உறுதியளித்த நாலு கோறளையின் தலைவர்களுள் யாபா பண்டார, தொடம்வல பராக்கிரம, வராவ பண்டார, கம்பளை பண்டார என்பவர்களின் பெயர்கள் இரண்டாம் கல்வெட்டிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறிக்கப்பட்டுள்ளன. யாபா பண்டார மற்றும் தொடம்வல பராக்கிரம என்பவர்கள் 1471ஆம் ஆண்டு சேனா சம்மத விக்கிரமபாகுவுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்து பின்னர் மன்னன் துனயம என்பவனுக்கு ஆட்சியுரிமையை வழங்குவதாகக் கூறிய வாக்குறுதியினால் நட்புக் கூட்டணி அமைத்துக் கொண்டவர்களாவர். இக்கல்வெட்டில் குறிப்பிடப்படும் தலைவர்கள் மலையக மன்னனுக்கு சார்பானவர்களாக கல்வெட்டு பொறிக்கப்பட்ட நாளிலிருந்து நடந்து கொள்வதற்காகவும் அதன் மூலமே அவர்கள் பதவியில் நிலைத்திருக்கலாம் என்றும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன் அவ்வாறு அவர்கள் நடந்து கொள்ளும் வரையில் நாலு கோறளையின் படை வீரர்களை அங்கவீனம் செய்வதில்லை என்றும் சேனாசம்மத விக்கிரமபாகு சத்தியம் செய்து உறுதி கூறியுள்ளான். இக்கல்வெட்டு இம்மன்னனின் கட்டளைப்படியே பொறிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கூறப்பட்ட நாலு கோறளையின் தலைவர்கள் மற்றும் பிரதானிகள் அனைவரையும் தன்பக்கம் வளைத்துக் கொண்ட சேனாசம்மத விக்கிரமபாகு நாலு கோறளையையும் மலையக இராச்சியத்துடன் இணைத்துக் கொண்டுள்ளான் என்பது மேற்படி கல்வெட்டுக்கள் மூலம் தெளிவாகின்றது. சேனாசம்மத விக்கிரமபாகு மாயாதுனு ரட்டைக்கு அல்லது நாலு கோறளைக்கு வந்து அதனை வெற்றி கொண்டு கல்வெட்டொன்றையும் பொறித்ததாக 'அளுத்நுவர தேவாலயம் அமைத்தமை' எனும் ஆவணத்திலும் எழுதப்பட்டுள்ளது. 1470 - 1474ஆம் ஆண்டுகளுக்கிடைப்பட்ட காலத்தில் நாலு கோறளையின் நிருவாகியான அம்புலுகல குமாரன் 'சிங்கள சங்கய' எனும் கிளர்ச்சியை அடக்குவதற்காக கோட்டை இராச்சியத்திற்கு சென்றிருந்த வேளையிலே மேற்படி நிகழ்வு இடம்பெற்றுள்ளது என்பது கல்வெட்டுக்களில் காணப்படும் திகதிகளின் அடிப்படையில் தெளிவாகின்றது.

மலைநாடு மற்றும் நாலு கோறளையின் அரசியல் களத்தில் தொடர்ந்து இடம்பெற்ற மிக முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் புரட்சியின் பக்கம் எமது கவனத்தைத் திருப்புவோம். நாலு கோறளை மலையக இராச்சியத்துக்கு சார்பானதைத் தொடர்ந்து கோட்டை மன்னன் ஆறாம் புவனேகபாகு மன்னன் காட்டிய உடனடி மாற்றுச் செயற்பாடு காரணமாகவே இந்நிலை ஏற்பட்டதென்பதை அம்மன்னனின் தெதிகம கல்வெட்டு வெளிப்படுத்துகின்றது.

சிறிசங்கபோ ஸ்ரீ புவனேகபாகு மன்னனின் எட்டாம் ஆட்சி வருடம் முடிவடைய ஒன்பதாம் ஆட்சியாண்டில் அதாவது 1478ஆம் ஆண்டில் இச் சுவர்க் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. 'புவனேகபாகு மன்னன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்ட பிரதேச வாசிகள் தனக்கெதிராக மாறியுள்ளதை அறிந்து ஜயவர்தன புரத்திலிருந்து திக் விஜயமொன்றை மேற்கொண்டு பெலிகல் கோறளையின் தெதிகம புரத்திற்கு வந்து நாலுகோறளையை தன் வசப்படுத்திக் கொண்டான் என்றே இக்கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பின்னர் பாதுகாப்புக் கருதி தன்னிடம் வந்த நாலு கோறளை வாசிகள் தாம் செய்த தவறுக்காக தண்டிக்கப்படுவார்கள் என்ற அச்சத்தில் இருந்த காரணத்தால் அவர்களின் சந்தேகத்தைத் தீர்க்கும் வண்ணம் அவர்களுக்கு அபயமளித்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. தனக்கு எதிராக செயற்பட்டவர்களுக்கு 'சிங்கள சங்க' கிளர்ச்சியாளர்கள் தனக்கிழைத்த தீங்குகளை முன் வைத்து அங்கச் சேதம், உயிர்ச் சேதம் செய்யப் போவதில்லை என்றும் செய்வதற்கு இடமளிக்கப்போவதில்லை என்றும் ஏனைய உரிமைகளையும் பெற்றுத் தருவதாகவும் புனித தந்ததாது மற்றும் பாத்திர தாதுக்கள் சாட்சியாகவும் உலகை ஆளும் தெய்வத்தின் சாட்சியாகவும் கோட்டை மன்னனால் ஒப்பந்தம் செய்யப்பட்டதாக அந்த அபயமளிக்கும் கல்வெட்டு கூறி நிற்கின்றது.

இதிலிருந்து விளங்கும் உண்மை யாதெனில் ''சிங்கள சங்க' கிளர்ச்சியாளர்களுடன் ''நாலு கோறளை பிரதேசவாசிகளையும் சேர்த்து அவர்களுக்கு வழங்கும் தண்டனைகளைத் தமக்கும் விதிப்பான் என்ற அச்சம் கலந்த பயம் இப்பிரதேசவாசிகளிடம் நிலவியமையாகும். தனக்குச் சார்பாக இருப்பவர்களுக்கு அவ்வாறான தண்டனைகள் வழங்கப்படமாட்டாதென மன்னனால் உறுதியளிக்கப்பட்டிருந்த 'சிங்கள சங்க' கிளர்ச்சியின்போது தனக்கிழைத்த அநீதி என்று கல்வெட்டில் குறிப்பிடப்படும் வரிகளின் பொருள் யாதெனில் 'சிங்கள சங்க' கிளர்ச்சியை அடக்குவதற்காக அம்புலுகல குமாரன் தெற்கே சென்றிருந்த வேளை அளுத்நுவர வரை வந்த சேனா சம்மத விக்கிரமபாகு தொடம்வல பராக்கிரம உள்ளிட்ட பிரதானிகளைத் தன்பக்கம் வளைத்துக் கொண்டு நாலு கோறளையை மலையக இராச்சியத்துடன் சேர்த்துக் கொண்ட சம்பவமேயாகும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இக்கல்வெட்டில் நேரடியாகவன்றி மறைமுகமாக சேனாசம்மத விக்கிரமபாகு ஓரிடத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளான். சேனாசம்மத விக்கிரமபாகு மன்னனுக்கு புனித தந்ததாது மற்றும் பாத்திர தாதுக்கள் உபுல்வன் தெய்வம் சாட்சியாக ஆதரவாக இருப்போம் என உறுதியளித்த நாலு கோறளையின் பிரதானிகள் 1478ஆம் ஆண்டு அதே அமைப்பில் ஆறாம் புவனேகபாகு மன்னனுக்கு சார்பானவர்களாக மாறி அவனிடம் அபயம் பெற்றுள்ளனர்.

சரணடையும் விதத்தில் தன்னிடம் வரும் நாலு கோறளை வாசிகளுக்கு அபயமளிப்பதாக ஆறாம் புவனேகபாகு உறுதியளித்திருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்தில் இடம் பெறும் 'மலையக செயற்பாடு' என்ற சொல்லுக்கு சரியான அர்த்தம் என்னவென்பது புரியவில்லை. 1478ஆம் ஆண்டு ஆறாம் புவனேகபாகுவின் திக்விஜயத்தின் பின்னர் அவனது ஆதிக்கத்தை ஏற்றுக் கொண்டு பாதுகாப்புக் கருதி அவனிடம் சென்ற நாலு கோறளை வாசிகளுள் தொடம்வல பராக்கிரம உள்ளிட்ட பிரதானிகளும் இடம் பெற்றிருந்தனர் என்பதில் சந்தேகமில்லை. தொடம்வல பராக்கிரம ஏபா ஆறாம் புவனேகபாகுவுக்கு சார்பானவனாயின் அவன் மூலம் மலையக மன்னனான சேனா சம்மத விக்கிரமபாகுவை அமைதிப்படுத்தியிருக்கலாம். தனது மருமகனான துனயம என்பவனுக்குசேனா சம்மத விக்கிரமபாகு ஆட்சியுரிமையைத் தருவதாகத் தன்னுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் பற்றியும் அதன் மூலம் சேனா சம்மத விக்கிரமபாகுவை அமைதிப் படுத்தி கோட்டை மன்னனுக்குக் கீழ்ப்பட்ட ஆட்சியாளனாக அவனை மாற்றலாம் என்றும் தொடம்வல பராக்கிரம ஏபா அச்சமயம் ஆறாம் புவனேகபாகுவிடம் கூறியிருக்கலாம். அவ்வாறெனின் மலைநாடு பற்றிய ஆறாம் புவனேகபாகுவின் பிரச்சினையும் தீரும். எனவேதான் 'மலைநாட்டு செயற்பாடுகள் அடக்கப்படும்போது' என்று சூட்சுமமான முறையில் அக் கல்வெட்டில் பொறிக்கப்பட்டிருக்கலாம்.

அவ்வாறு பார்க்கும்போது ஆறாம் புவனேகபாகு மன்னன் அரசியல் பிரச்சினைகள் பலவற்றுக்கும் வெற்றிகரமான முறையில் முகங்கொடுத்துள்ளான். அவன் அரசனானவுடன் தனக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட சிங்களச் சங்க கிளர்ச்சியை வெற்றிகரமாக முறியடித்தான். அதற்கிடையில் கோட்டை இராச்சியம் இழந்த நாலு கோறளையை மீண்டும் 1478இல் பெற்றுக் கொண்டான். அங்கிருந்த மக்கள் தலைவர்கள், பிரதானிகள் மூலம் மலையக இராச்சியமும் தனக்கு எதிராகாத வண்ணம் பார்த்துக் கொண்டான். கோட்டை இராசதானியைப் பாதுகாத்த ஆறாம் புவனேகபாகு அவனது ஒன்பதாவது ஆட்சி வருடத்தின் பின்னர் அதாவது 1478இன் பின்னர் எத்தனை ஆண்டுகள் உயிர் வாழ்ந்தான், என்று கூறுவதற்குப் போதிய சாட்சிகள் இல்லை. அவனது மரணத்தின் பின்னர் கோட்டை மன்னனான பண்டித பராக்கிரமபாகு பற்றி போர்த்துக்கேய ஆவணங்களில் கிடைக்கும் தகவல்களின்படி ஆறாம் புவனேகபாகு மன்னன் 1480 வரை ஆட்சி செய்துள்ளமை தெரிய வருகின்றது.

ஆறாம் புவனேகபாகு மன்னன் தான் இறப்பதற்கு முன்னர் சிங்களச் சங்க கிளர்ச்சி தொடர்பாக சிறையில் அடைத்திருந்த கெகுலந்தொல சிறிவர்தன பதிராஜ மற்றும் கூரகம ஹிமியானன் எனும் இருவரையும் சிறையிலிருந்து விடுவித்து தன்னுடைய மகனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களிடம் ஒப்படைத்துள்ளான். அவர்கள் அவ்விளவரசனை பண்டித பராக்கிரமபாகு எனும் பெயரில் ஆட்சி பீடமேற்றியதாக 'ராஜாவலிய' கூறுகின்றது. கூனோ எனும் போர்த்துக்கேய எழுத்தாளரும் ஆறாம் புவனேகபாகுவின் மரணத்தை அடுத்து அவனது மகன் வைபுர பண்டார என்பவன் அரசனானதாக எழுதியுள்ளார். இலங்கையில் போர்த்துக்கேயர் ஆட்சி பற்றி விரிவான நூலொன்றை எழுதிய கேரோஸ் அடிகளார் " ஆறாம் புவனேகபாகு இறக்கும்போது அவனது மகன் சிறுவனாக இருந்ததாகவும் எனவே இளவரசனின் தாயாரான தனமெனிகா ரத்னாவலி இராணி ஆட்சி பீடமேறியதாகவும் அதனால் வழமை போல பிரச்சினைகள் தலைதூக்கவே இளவரசன் பத்து வயதை அடைந்து பதவியேற்கும் வரை மன்னனின் பிரதேச ஆட்சிப் பொறுப்புக்குரிய இளவரசர்கள் நாட்டின் நிருவாக நடவடிக்கைகளைப் பார்த்துக் கொண்டனர்." என விளக்கமாக எழுதியுள்ளார். இங்கு அவர் குறிப்பிடும் பிரதிராஜ எனும் பிரதேச ஆட்சிப் பொறுப்பாளர்கள் இளவரசனைப் பாதுகாத்து வந்த கெகுலந்தொல சிறிவர்தன பதிராஜ மற்றும் கூரகம ஹிமியானன் என்போராவர் 'ராஜாவலி' யவின் கூற்றுப்படி ஆறாம் புவனேகபாகு மன்னனின் மறைவை அடுத்து அவனது மகன் ஆட்சி பீடமேறியதைக் கேள்வியுற்ற அம்புலுகல குமாரன் நாலு கோறளையிலிருந்து தனது படைகளுடன் கோட்டை நோக்கிப் புறப்பட்டான். செல்லும் வழியில் சியனே கோறளையின் களனியில் வைத்து பண்டித பராக்கிரமபாகு இளவரசனுக்காக அவனது பாதுகாவலர்களான பதிராஜ மற்றும் கூரகம ஹிமியானன் என்போர் அமபுலுகல குமாரனை எதிர்த்துக் கடும்போர் புரிந்தனர். அவர்களிருவரையும் வெற்றி கொண்ட அம்புலுகல குமாரன் கோட்டைக்குச் சென்று பண்டித பராக்கிரமபாகு இளவரசனைக் கொன்று வீர பராக்கிரமபாகு எனும் பெயரில் அரசனானதாக 'ராஜாவலிய' கூறுகின்றது. பண்டித பராக்கிரமபாகு ஒன்பது ஆண்டுகள் ஆட்சி செய்ததாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவனுக்காக அவனின் தாயான தனமெனிக்கா ஆட்சி புரிந்த ஆறு மாதங்களையும் சேர்த்தால் அவன் ஒன்பது வருடங்களும் ஆறு மாதமும் ஆட்சி புரிந்துள்ளான். அவனின் மறைவையடுத்து அம்புலுகல குமாரன் எட்டாம் வீர பராக்கிரமபாகு எனும் பெயரில் 1490ஆம் ஆண்டு கோட்டை மன்னனாக முடிசூடினான் என்பது தெளிவாகின்றது.

எட்டாம் வீர பராக்கிரமபாகு மன்னனின் ஆரம்ப ஆட்சி வருடம் மற்றும் அவனின் ஆட்சிக் காலம் தொடர்பாக வரலாற்றறிஞர்களிடம் இரு வேறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. இக்கருத்து வேறுபாட்டுக்கு இரு அடிப்படைக் காரணிகள் காரணமாய் அமைந்துள்ளன. அதில் ஒன்றுதான் முதன் முறையாக போர்த்துக்கேயர் இலங்கையில் தரையிறங்கும் போது கோட்டையிலிருந்த ஆட்சியாளன் எட்டாம் வீர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பராக்கிரமபாகுவின் மகனான தர்ம பராக்கிரமபாகு என்று 'ராஜாவலிய' குறிப்பிடுவதாகும். ராஜாவலியவின் கூற்றுப்படி போர்த்துக்கேயரின் வருகை 1522 இல் நிகழ்ந்திருக்க வேண்டும். ஆயினும் போர்த்துக்கேய எழுத்தாவணங்களின் படி அவர்களின் வருகை 1505 இல் அல்லது 1506இல் நிகழ்ந்திருப்பது சந்தேகத்திற்கு இடமின்றி ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அதனால் 'ராஜாவலிய' குறிப்பிடும் ஆண்டு பிழையானது என்பது தெரிகின்றது. எனவே தர்ம பராக்கிரமபாகு மன்னனின் காலத்தில் நடைபெற்றதாக ராஜாவலிய கூறும் அதிகமான தகவல்கள் போர்த்துக்கேயர் இலங்கை வந்த 1505ஆம் ஆண்டுக்கு (17) பதினேழாண்டுகள் முன்னர் நடைபெற்ற விடயங்களாகும். என நாம் கருத வேண்டும். அப்போது ஆட்சியாளனாக இருந்தவன் எட்டாம் வீரபராக்கிரமபாகு மன்னனாவான். எனவே தர்ம பராக்கிரமபாகு மன்னனின் ஆட்சிக் காலத்தில் நடைபெற்றதாக ராஜாவலிய கூறும் தகவல்கள் உண்மையாக எட்டாம் வீர பராக்கிரமபாகு மன்னனின் ஆட்சிக் காலத்தில் நடந்தவையாகும். இவற்றைக் கவனத்திலெடுக்கும்போது எட்டாம் வீர பராக்கிரமபாகு மற்றும் தர்ம பராக்கிரமபாகு ஆட்சிக் காலங்கள் பற்றி 'ராஜாவலிய' கூறும் தகவல்களை மறுதலிக்க வேண்டியுள்ளது.

எட்டாம் வீர பராக்கிரமபாகுவின் ஆட்சிக் காலம் பற்றிய கருத்து முரண்பாட்டுக்கான இரண்டாவது காரணம் யாதெனில், பிரபலமான 'களனி விகாரையின் சுவர்க் கல்வெட்டில்' குறிப்பிடப்பட்டுள்ள பிழையான கருத்தாகும். 'புத்த வருடம் 2051 இல் இலங்கையில் ஆட்சி பீடமேறிய ஸ்ரீமான் சிறி சங்கபோ ஸ்ரீ பராக்கிரமபாகு சக்கரவர்த்தி எனும் அரசனின் பத்தொன்பதாம் ஆட்சி வருடத்தில் பங்குனி (13) பதின்மூன்றாம் நாள் களனி ரஜ மகாவிகாரையில் புனருத்தாரணம் செய்தமை பற்றி அங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கு குறிப்பிடப்படும் புத்த வருடம் 2051 அல்லது கிறிஸ்து வருடம் 1509 என்பது இக்கல்வெட்டைப் பொறித்த பராக்கிரமபாகு ஆட்சியின் ஆரம்ப வருடமாகும். எனவே அவனது ஆட்சியின் பத்தொன்பதாவது ஆண்டு அமைவது 1528இல் ஆகும். எனவே இக்கால கட்டத்தில் இலங்கையை ஆட்சி செய்தவனாக 'ராஜாவலிய' குறிப்பிடும் தர்ம பராக்கிரமபாகுவே அக்கல்வெட்டைப் பொறித்ததாக அதிகமான வரலாற்றியலாளர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. எனவே கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு புத்தவருடம் 2051 அல்லது கிறிஸ்து வருடம் 1509 என்பது அரசனின் பத்தொன்பதாவது ஆட்சி வருடம் என்பதும் இரண்டல்ல, ஒரே வருடமாகும் என்று சரியாக சுட்டிகாட்டிய பரண விதான அவர்கள் 1509இல் கல்வெட்டு எழுதிய பராக்கிரமபாகுவின் ஆரம்ப ஆட்சி வருடம் அதற்குப் பத்தொன்பது (19) வருடங்களுக்கு முன்னர் இடம் பெற்றிருக்க வேண்டுமென தர்க்கரீதியாக முடிவு செய்தார். ஆனாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்த்துக்கேயர் முதல் தடவை இலங்கையில் தரையிறங்கியபோது கோட்டை ஆட்சியாளன் தர்ம பராக்கிரமபாகு என ராஜாவலிய குறிப்பிடும் பிழையான கூற்றை அடிப்படையாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட கல்வெட்டைப் பொறித்த பராக்கிரமபாகு மன்னனே தர்ம பராக்கிரமபாகு ஆவான் என்ற கருத்து சரியானதா? என்பதை ஆராய்வதை பரணவிதான அவர்கள் தவறவிட்டுள்ளார். எட்டாம் வீர பராக்கிரமபாகு மன்னனின் குடுமிரிஸ்ஸ கல்வெட்டு மற்றும் ஒறுவல சாசனம் முதலிய ஆவணங்களில் அம் மன்னன் அறிமுகப்படுத்தியுள்ள பெயர்கள், சொற்கள் என்பவற்றுடன் களனி விகாரையை ஒப்பிட்டுப் பார்க்கையில் கல்வெட்டைப் பொறித்த 'சிறி சங்கபோ ஸ்ரீ பராக்கிரமபாகு மன்னன்' என்பவன் எட்டாவது வீர பராக்கிரமபாகு என்பது தெளிவாகின்றது. எனவே பரண விதான அவர்களின் அக்கல்வெட்டின் மீதான காலக் கணிப்பீட்டின்படி பெற்றுக் கொண்ட 1490ஆம் ஆண்டே எட்டாம் வீர பராக்கிரமபாகு ஆட்சியின் ஆரம்ப ஆண்டாகும். ஆறாம் புவனேகபாகுவின் மகனான ஏழாம் பண்டித பராக்கிரமபாகுவைக் கொலை செய்த அம்புலுகல குமாரன் எட்டாம் வீர பராக்கிரமபாகு எனும் பெயரில் ஆட்சி பீடமேறியது 1490ஆம் ஆண்டாகும் என்ற எமது முன்னைய கணிப்பு இதன் மூலம் மேலும் உறுதிப்படுத்தப்படுகின்றது.

எட்டாம் வீர பராக்கிரமபாகு பற்றிய கல்வெட்டுக்களும் சாசனங்களும் பலவாகும். அவற்றுள் முதலிடம் பெறும் ஒறுவல சாசனம் எட்டாம் வீரபராக்கிரமபாகுவின் வளர்ப்புத் தந்தையான ஆறாம் பராக்கிரமபாகு மன்னனுக்கு தலைமைப் புரோகிதர்களாகக் கடமையாற்றிய பொத்தல ஒஞ்சல மற்றும் ஔஹல ஒஞ்சல எனும் இருவருக்கும் அத்துறுகிரிய கோறளையின் பணகம மற்றும் ஒறுவலகம எனும் இரு கிராமங்களையும் சூரியன் சந்திரன் நிலவும் காலம் வரை அனுபவிப்பதற்காக எழுதப்பட்டதாகும். பரணவிதான அவர்கள் ஆறாம் பராக்கிரமபாகு மன்னனுக்குரியது என்றும் எம்.டபிள்யூ.கொட்ரின்டன் ஒன்பதாம் பராக்கிரமபாகு மன்னனுக்குரியது என்றும் கூறுகின்ற 'கடலா தெனிய கல்வெட்டு' எட்டாம் வீர பராக்கிரமபாகு பற்றிய இரண்டாவது கல்வெட்டாகும். மற்றுமொரு அபயமளிக்கும் கல்வெட்டான கடலாதெனிய கல்வெட்டு சிறிசங்கபோ ஸ்ரீ ஜயவீர பராக்கிரமபாகு எனும் மன்னனின் ஐந்தாம் ஆட்சியாண்டில் செப்டம்பர் / ஒக்டோபர் மாத அமாவாசை கழிந்த முதலாம் நாள் பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு பொறிக்கப்பட்ட வருடம் ஏப்ரல் / மே மாதப் பௌர்ணமி கழிந்த பிறை 12 இல் மன்னன் தனது முடிசூட்டு விழா நினைவு நாளுக்கு முன்னர் மலை நாட்டுக்கு திக் விஜயமொன்றை மேற்கொண்டதாக இக் கல்வெட்டு கூறுகின்றது. அச் சந்தர்ப்பத்தில் தொடம்வல பராக்கிரமபாகு ஏபாவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருமகனான மெனவரதுனயா உள்ளிட்ட கம்பளை, சிதுறுவான எனும் தெநுவர, பலவிட்ட, மாத்தளை, பன்ஸிய (500) பற்று, ஊவா உள்ளிட்ட ஐந்து ரட்டைகளைச் சேர்ந்த அதிகமான மக்களும் மன்னனிடம் அபயம் கோரி நின்றனர். எனவே அவர்களுக்கு அங்க சேதம், உயிர்ச் சேதம், செய்வதில்லை என்றும் செய்வதற்கு இடமளிக்கப் போவதில்லை என்றும் தலதா (தந்ததாது) முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து மன்னனின் ஏற்பாட்டின்படி ஒக்டோபர் /நவம்பர் மாத அமாவாசை தினத்தில் இக் கல்வெட்டு பொறிக்கப்பட்டதாக கல்வெட்டின் முதற் பகுதி வெளிப்படுத்துகின்றது.

கல்வெட்டின் இரண்டாம் பகுதியில் மேனவரதுனயா உள்ளிட்ட மலையகப் பிரதானிகள் தமக்கு அபயமளித்த சிறிசங்கபோ ஸ்ரீ ஜயவீர பராக்கிரமபாகு மன்னனுக்கு ஏகமனதுடன் பக்கச் சார்பாக இருப்பதாக சத்தியப் பிரமாணம் செய்துள்ளனர். இத்தலைவர்கள் எல்லோரினதும் சார்பில் கல்வெட்டின் இறுதியில் கையொப்பமிடபட்டிருப்பது மேனவரதுனயா என்பது குறிப்பிடத்தக்கது.

இக்கல்வெட்டானது சிறிசங்கபோ ஸ்ரீ ஜயவீர பராக்கிரமபாகு மன்னனின் ஐந்தாம் ஆட்சி வருடத்தில் செம்டம்பர், ஒக்டோபர் மாதங்களின் அமாவாசை கழிந்த முதலாம் நாளில் பொறிக்கப்பட்டதாகக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டாலும் அதே கல்வெட்டில் குறிப்பிடப்படும் அம்மன்னனின் மலை நாட்டுக்கான திக் விஜயம் மேற்கொள்ளப்பட்டது. ஏப்ரல் - மே மாதங்களின் பௌர்ணமி கழிந்த பன்னிரண்டாம் நாளில் மன்னனின் முடிசூட்டு விழாவின் ஆண்டு நிறைவு விழாவுக்கு முன்னராகும். 'சுவர்ணாபிஷேகமங்கல்ய' என்று கல்வெட்டில் குறிப்பிடப்படுவது அரசனின் முடி சூட்டு விழாவின் ஆண்டு நிறைவு விழாவாகும். அதாவது சட்டபூர்வமாக முடிசூடிக் கொண்ட மனனர்கள் ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுவது அந்த யுகத்தில் நிலவிய வழக்கமாகும். அரசனின் அடுத்த ஆட்சி வருடம் கணக்கிடப்படுவதும் அந்த விழா நாளிலிருந்தாகும் இந்த வருடாந்த 'சுவர்ணாபிஷேக மங்கள' தினத்தில் பிரபலமான சமய தலங்களுக்குச் செல்வதும் பிராமணருக்கும் யாசகருக்கும் தானங்கள் வழங்குவதும் அரசர்களின் வழக்கமாக இருந்தமைக்கான சாட்சிகள் உண்டு. அவ்வாறானதொரு சந்தர்ப்பத்திற்கான உதாரணமொன்றை அதற்கண்மைய காலத்தில் எழுதப்பட்ட 'குடுமிரிஸ்ஸ கல்வெட்டில்' காண முடிகின்றது. இக்கல்வெட்டை 'திரீ சிங்களாதீஸ்வர நவ ரத்தினாதிபதி ஸ்ரீமத் சிறிசங்கபோ ஸ்ரீ பராக்கிரமபாகு' எனும் மன்னனே பொறித்துள்ளான். அவன் ஜயவர்தனபுர சுமங்கள மாளிகையின் சித்திர மண்டபத்தில் சிம்மாசனத்தில் வீற்றிருந்து நிருவாக நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது தந்தையின் ஆட்சிக் காலத்தில் பிராமணர்களுக்கு வழங்கப்பட்ட 'அக்ரஹார' தானத்தை அதிகரிக்கும் முகமாக சியனே கோறளையில் கொஸ்வின்ன எனும் கிராமத்தை அர்ப்பணஞ் செய்தான்.

குடுமிரிஸ்ஸ கல்வெட்டில் குறிப்பிடப்படும் சிறிசங்கபோ ஸ்ரீ பராக்கிரமபாகு என்பவன் எட்டாம் வீர பராக்கிரமபாகு என்பது விவாதத்துக்கிடமின்றி ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இங்கு தந்தை அரசன் எனக் குறிப்பிடப்படுவது இம்மன்னனின் வளர்ப்புத் தந்தையான ஆறாம் பராக்கிரமபாகு மன்னனையாகும். இவ்வாறு எட்டாம் வீர பராக்கிரமபாகு மன்னன் ஜயவர்தனபுர அரசவையின் சிம்மாசனத்தில் வீற்றிருந்து தனது தந்தையை நினைவு கூர்ந்து பிராமணர்களுக்காக கொஸ்வின்ன கிராமத்தை அர்ப்பணஞ் செய்தது அவனது பத்தாவது ஆட்சி வருடத்திலாகும்.

மேற்குறிப்பிட்ட கடலாதெனிய அபயமளிக்கும் கல்வெட்டின்படி மேனவர துனயா உள்ளிட்ட மலையகப் பிரதானிகள் தனது ஐந்தாம் ஆட்சி வருடத்தின் முடி சூட்டு நிறைவு விழாவுக்கு முன்னர் மலை நாட்டுக்குத் திக் விஜயம் மேற்கொண்ட எட்டாம் வீர பராக்கிரமபாகு மன்னனிடம் அபயம் கோரி நின்றுள்ளனர். சுவர்ணாபிஷேக மங்கல்ய எனும் முடி சூட்டு ஆண்டு நிறைவு விழா தினத்திலேயே 'குடுமிரிஸ்ஸ கல்வெட்டின்' மூலம் தனது தந்தையின் நினைவாக வழங்கும் அக்ரஹார தானத்தின் பொருட்டு பிராமணர்களுக்காக கொஸ்வின்ன கிராமத்தைக் கொடுத்துள்ளான். மலையக திக் விஜயத்துக்கு முன்னைய முடி சூட்டு ஆண்டு நிறைவு விழா கொண்டாடப்பட்டது பராக்கிரமபாகு மன்னனின் ஐந்தாம் ஆட்சி வருடத்திலாகும். எனவே இவ்விரு கல்வெட்டுகளும் ஒரே மன்னனின் ஐந்தாவது மற்றும் எட்டாவது ஆட்சி வருடங்களின் முடிசூட்டு விழாவின் ஆண்டு நிறைவு விழா இரண்டையே குறித்து நிற்கின்றன என்பது புலனாகின்றது.

பேராசிரியர் பரணவிதான அவர்கள் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் இலங்கை வரலாறு எனும் நூலில் கோட்டை ஆறாம் பராக்கிரமபாகு மன்னன் பற்றி எழுதும்போது கடலாதெனிய கல்வெட்டு ' ஆறாம் பராக்கிரமபாகுவின் ஐந்தாம் ஆட்சியாண்டுக்குரியது எனக் கருதியுள்ளார். அதே கல்வெட்டில் குறிப்பிடப்படும் பராக்கிரமபாகு ஏபா என்பவன் ஆறாம் பராக்கிரமபாகுவுக்கு முன்னர் இருந்தவராக 'சத்தர்ம ரத்னாகரய' நூலில் குறிப்பிடப்படும் பராக்கிரமபாகு ஏபா எனவும் கருதியுள்ளார். பேராசிரியர் பரணவிதான அவர்கள் பராக்கிரமபாகு ஏபாவின் பெயருக்கு முன்னால் வரும் அடை மொழியான தொடம்வல என்ற சொல்லைப் பற்றிக் கவனம் செலுத்தத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறிவிட்டார். தொடம்வல பராக்கிரமபாகு ஏபா என்பவன் நாலு கோறளையில் மலை நாட்டு அரசியல் களத்தில் பிரவேசித்தது ஆறாம் பராக்கிரமபாகுவின் ஆட்சிக் காலத்துக்கு மிகவும் பிந்திய காலத்தில் நிகழ்ந்ததாகும். அதாவது 1463ஆம் ஆண்டளவிலாகும். என்பதை நாம் ஏற்கெனவே அறிந்தோம். அவன் 1471ஆம் ஆண்டிலிருந்து மலை நாடு மற்றும் நாலு கோறளையின் அரசியல் நிருவாகத்தின் பிரதான கர்த்தாவாக விளங்கியமையையும் நாம் ஏற்கெனவே அறிந்தோம். இவ்வாறான காரணங்களால் கடலாதெனிய கல்வெட்டு ஆறாம் பராக்கிரமபாகு மன்னனுக்கு உரியதல்ல. அவனது வளர்ப்பு மகனான எட்டாம் வீர பராக்கிரமபாகு என்பவனுக்கு உரியதாகும் என்பது புலனாகின்றது.

அக்கல்வெட்டில் காணப்படும் மேற்படி தகவல்களின்படி எட்டாம் வீர பராக்கிரமபாகு மன்னன் தனது ஐந்தாவது ஆட்சி வருடத்தில் அதாவது 1495இல் மலைநாட்டுக்கு திக் விஜயமொன்றை மேற்கொண்டுள்ளான். மத்திய மலை நாட்டின் கம்பளை மற்றும் சிந்துறுவான நகரங்களை உள்ளடக்கிய தெநுவர, பலவிட்ட, மாத்தளை, பன்ஸிய(500) பற்று, ஊவா எனும் 'கந்த உட பஸ் ரட்ட' எனும் மத்திய மலை நாட்டின் ஐந்து பிரிவுகளும் அச்சந்தர்ப்பத்தில் கோட்டை இராச்சியத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன. இது ஆறாம் பராக்கிரமபாகுவின் அதிகூடிய ஆட்சிக் காலத்திலும் சாதிக்க முடியாமற் போன ஒரு சாதனையாகும். ஆறாம் பராக்கிரமபாகுவின் இறுதிப் பகுதியில் தெதிகமவிலிருந்த பராக்கிரமபாகு ஏபாவினால் நாலு கோறளைப் பகுதியை கோட்டை இராச்சியத்தின் கீழ் வைத்துக் கொள்ள முடிந்த போதிலும் 1463ஆம் ஆண்டு மத்திய மலை நாடான கண்டி சேனா சம்மத விக்கிரமபாகுவின் கீழ் சுயாதீனமான இராச்சியமாக மாறியது. அதன் பின்னர் ஆறாம் புவனேகபாகு மன்னனின் காலத்தில் நாலு கோறளையின் தலைவரான தொடம்வல பராக்கிரமபாகு ஏபா மூலம் மலையகத்தை அமைதிப்படுத்த முடிந்த போதிலும் அப் பகுதியை முழுமையாகக் கோட்டை இராச்சியத்தின் கீழ்க் கொண்டு வர முடியவில்லை.

எட்டாம் வீர பராக்கிரமபாகு மன்னன் 1495 இல் மேற்கொண்ட மலையக திக் விஜயத்தின் பின்னர் மேனவர துனயா மூலம் முழு மலை நாட்டையும் கோட்டை இராச்சியத்தின் கீழ்க் கொண்டு வர முடிந்தது. மேற்படி 'குடுமிரிஸ்ஸ கல்வெட்டு' எட்டாம் வீர பராக்கிரமபாகு மன்னன் பற்றிய தகவல்களைத் தரும் மூன்றாவது கல்வெட்டாக நாம் கருதலாம். இம்மன்னனின் பத்தாவது ஆட்சியாண்டில் அதாவது 1500ஆம் ஆண்டிலேயே இக்கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டாம் வீர பராக்கிரமபாகு பற்றிய தகவல்கள் கிடைக்கும் அடுத்த கல்வெட்டு காரகலையில் கிடைத்துள்ளது. ஸ்ரீ ராஜகுரு வனரத்ன மகா தேரரின் சாசன பந்து பரம்பரை வாழ்ந்து வரும் காரகல, குசலன் கம எனும் கிராமத்திற்கு அரச அதிகாரிகளினால் எதுவித தீங்கும் இழைக்கப்படக் கூடாது எனும் கல்வெட்டைப் பொறிப்பதற்காக ஸ்ரீமத் சிறிசங்கபோ பராக்கிரமபாகு மன்னன் ஜயவர்தனபுர கோட்டையில் இருந்து யானை மீதேறி உளி ஒன்றைக் கொண்டு வந்து கொடுத்ததாகக் கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது. இக்கல்வெட்டில் கூறப்படும் பராக்கிரமபாகு ஆறாம் பராக்கிரமபாகு என அதிகமான வரலாற்றியலாளர்கள் கருதுகின்றனர். கல்வெட்டில் கூறப்படும் காரகல ராஜகுரு வனரத்ன மகாதேரர் பற்றி 'ஹங்ச சந்தேசய' (அன்னம் விடு தூது) காவியத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விலக்கிய நூலும் ஆறாம் பராக்கிரமபாகுவின் ஆட்சிக் காலத்தில் எழுதப்பட்டதாகவே அதிகமான நவீன வரலாற்றியலாளர்கள் ஆரம்ப காலந்தொட்டே கருதி வந்தனர். எனவே காரகல கல்வெட்டு மற்றும் ஹங்ச சந்தேசய எனும் இரு மூலாதாரங்களும் அதிகமான வரலாற்றறிஞர்களால் ஆறாம் பராக்கிரமபாகுவின் காலத்துக்குரியது எனக் கருதப்பட்டு வந்தது. இவ்வாறான கருதுகோளுக்கு அடிப்படையாக அமைந்த விடயம் யாதெனில் ஆறாம் பராக்கிரமபாகுவின் ஆட்சிக் காலத்தில் ஜயவர்தனபுர சங்கராஜ விகாரையிலிருந்ததாக ஏனைய மூலாதாரங்களிலும் குறிப்பிடப்படும் வனரத்ன மகா தேரரும் காரகல வனரத்தன மகாதேரரும் ஒருவரே என்ற தவறான கருத்தாகும்.

இக்கால கட்டத்துக்குரிய 'சங்கராஜ' பதவி வகித்த மகாதேரர்கள் பற்றி மேற் கொண்ட ஆய்வுகளின்படி ஜயவர்தனபுர வனரத்ன சங்கராஜாவின் காலம் 1424இற்கும் 1450 இற்கும் இடைப்பட்டதாகும் எனத் தெரிய வந்துள்ளது. அதன் பின்னர் அப்பதவியிலிருந்தோரின் ஒழுங்கு வரிசைப் படி மூன்றாம் தர்ம கீர்த்தி மகா தேரர், கலதுருமுல மகாதேரர், ஸ்ரீ ராஹுல மகாதேரர், விதாகம மைத்திரி மகாதேரர், மங்கள சங்கராஜ மகா தேரர் என்போர் அவ்வுயர் பதவியை அலங்கரித்தோராவர். அதற்கும் அடுத்தவராகவே அப்பதவியில் காரகல மகாதேரர் அமர்ந்துள்ளார் அவர் 1500ஆம் ஆண்டிலேயே அப்பதவியை பெற்றுள்ளார்.

எனவே மேற்கூறப்பட்ட 'காரகல கல்வெட்டு' அக்கால இலங்கை மன்னனான எட்டாம் வீர பராக்கிரமபாகுவின் காலத்துக்குரியது என்ற முடிவுக்கு நாம் வரலாம். 'இலங்கை அரச பொறுப்பை ஏற்றுள்ள ஸ்ரீமத் சிறிசங்கபோதி பராக்கிரமபாகு சக்கரவர்த்தி அவர்களின் பதினோராவது வருடத்திலே' இக்கல்வெட்டு பொறிக்கப்பட்டதாக அதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறாயின் அது 1501ஆம் ஆண்டு பெப்ரவரி / மார்ச் மாதப் பௌர்ணமி தினம் ஒன்றாகும்.

'ஹங்ச சந்தேசய' எனும் காவியம் ஜயவர்தன புரத்திலிருந்து காரகல பத்மாவதி பிரிவெனாவின் அதிபரான ஸ்ரீ ராஜகுரு வனரத்ன மகா தேரர் (சங்கராஜ) அவர்களுக்கு தூது வடிவில் எழுதப்பட்டதாகும். இந்நூலில் ஜயவர்தனபுர பராக்கிரமபாகு மன்னனின் அரசவை மிகவும் விமரிசையாக வர்ணிக்கப்பட்டுள்ளது. அச்சபையில் மன்னனுக்கு முன்னால் முதல் வரிசையில் இருப்பவர்கள் இளவரசர்களாவர். அடுத்ததாக வசந்தத்தில் பூத்துக் குலுங்கும் மரமாக ஏக்கநாயக மஹன்தே (அமைச்சர்) அமர்ந்திருக்கிறார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கு குறிப்பிடப்படும் ஏக்க நாயக என்பவர் எட்டாம் வீர பராக்கிரமபாகு மன்னனின் பின்னர் ஆட்சி பீடமேறிய ஆறாம் புவனேகபாகு மன்னனின் முதலமைச்சராக இருந்த கொஸ்கம ஏக்கநாயக என்பவராவார். எனவே 'ஹங்ச சந்தேசய' மற்றும் மேற்குறிப்பிடப்பட்ட காரகல கல்வெட்டு இரண்டும் மிகவும் கிட்டிய காலத்தில் எழுதப்பட்டவையாகும்.

'ஹங்ச சந்தேசய' வில் இடம்பெறும் பராக்கிரமபாகு மன்னனின் ராஜ வர்ணனை பற்றிய ஒரு செய்யுளில் மன்னனின் பரம்பரை பற்றிக் கூறப்பட்டுள்ளது. அக்கவிதையின் முதல் அடியில் தளபெரகும் (பராக்கிரமபாகு) எனும் பெயரும் இரண்டாம் அடியில் புவனேகபாகு எனும் பெயரும் மூன்றாம் அடியில் இம்மன்னன் என்றும் அமைந்துள்ளன.

இக்கவிதையின் மூன்றாமடியில் இடம் பெறும் இம்மன்னன் என்பது அக்காவியம் எழுதப்பட்ட காலத்தில் ஆட்சி செய்தவனைக் குறிக்கும். அவனுக்கு முன்னர் ஆட்சி செய்த புவனேகபாகு மன்னனின் பெயரும் அதற்கும் முன்னர் ஆட்சி செய்த தளபெரகும் (பராக்கிரமபாகு) மன்னனின் பெயரும் கவிதையில் இடம் பெற்றுள்ளன. அவர்கள் கவிதை வரிகளில் வர்ணிக்கப்பட்டுள்ளனர்.

'ஹங்ச சந்தேசய' ஆறாம் பராக்கிரமபாகு ஆட்சிக்காலத்தில் எழுதப்பட்டதாகக் கருதிய பேராசிரியர் பரணவிதான அவர்கள் 'இலங்கைப் பல்கலைக்கழக இலங்கை வரலாறு' எனும் நூலில் மேற்படி கவிதையை ஆறாம் பராக்கிரமபாகு பற்றிப் பாடுவதாக உதாரணம் காட்டியுள்ளார். முதல் வரியில் பாடப்படும் பராக்கிரமபாகு என்பவன் கம்பளைக் காலத்தின் ஐந்தாம் பராக்கிரமபாகு என்றும் இரண்டாம் வரியில் கூறப்படும் புவனேகபாகு என்பவன் கம்பளையின் ஐந்தாம் புவனேகபாகு என்றும் மூன்றாம் வரியில் இடம்பெறும் இம்மன்னன்' எனும் பதம் ஆறாம் பராக்கிரமபாகு ஆவான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று விளக்கமும் தருகிறார். ஆயினும் கவிதையில் கையாளப்பட்டுள்ள உவமை அணிச் சிறப்பை அவதானிக்கும்போது பேராசிரியரின் தீர்மானம் சரியானதல்ல என்பது புரியும். ஏனெனில் கம்பளைக்கால ஐந்தாம் பராக்கிரமபாகு மன்னன் 'கற்பக தரு' என வர்ணிக்கும் அளவுக்குப் புகழ் வாய்ந்தவனல்ல. அதே போன்று வர்ணிக்கும் அளவிற்கு கம்பளையின் ஐந்தாம் புவனேகபாகுவும் புகழ் வாய்ந்த மன்னனல்ல.

'ஹங்ச சந்தேசய' வர்ணிக்கும் மன்னன் எட்டாம் பராக்கிரமபாகு என்று ஏற்றுக் கொண்டால் மேற்கூறிய மூன்று மன்னர்களைப் பற்றியும் அர்த்தமுள்ள தொடர்பு உள்ளதை அவதானிக்க முடியும். இந்த மன்னர் பரம்பரை பற்றிக் கூறும் கவிதையின் முதல் வரியில் வர்ணிக்கப்படும் தேவலோக விருட்சம் போன்ற சூரிய குலத்தின் தள பெரகும் (பராக்கிரமபாகு) எனும் வர்ணனை ஆறாம் பராக்கிரமபாகுவையே குறித்து நிற்கின்றது. அடுத்த வரியில் வர்ணிக்கப்படும் அந்த தேவலோக விருட்சத்திலிருந்து தோன்றிய கற்பகதரு போன்ற புவனேகபாகு' என்பது ஆறாம் பராக்கிரமபாகுவின் வளர்ப்பு மகன் ஆறாம் புவனேகபாகு ஆகும். கற்பகத் தருவின் உடல் போன்ற' என்று வர்ணிக்கப்படும் நிகழ்கால மன்னன் எட்டாம் பராக்கிரமபாகு அதாவது ஆறாம் புவனேகபாகுவின் சகோதரனாவான். எனவே ஹங்ச சந்தேசய' வில் கூறப்படும் பராக்கிரமபாகு எட்டாம் வீர பராக்கிரமபாகு என்ற முடிவுக்கே நாம் வர வேண்டியுள்ளது.

இம்மன்னனின் அரச சபையானது 'ஹங்ச சந்தேசய' வில் அழகிய முறையில் அற்புதமாகவே வர்ணிக்கப்பட்டுள்ளது. அரசர் வந்து தன் அரியணையில் அமர்ந்தவுடன் அரச குமாரர்கள் இரு புறமும் அமர்வார்கள். முதலமைச்சர் ஏக்கநாயக, பண்டாரநாயக்க (பொருளாளர்) பதவி வகித்த விக்கிரம சிங்க என்போருடன் சேனாநாயக்க (தளபதிகள்), வாசல முதலியார், செயலாளர்கள் என்போர் ஒழுங்கு முறைப்படி அவையில் தமக்குரிய இடத்தில் வந்து அமர்வர்.

இவ்வாறு அரசவையில் வந்து அமர்ந்த அரசிளங் குமாரர்கள் ஐவர் பற்றி 'ராஜாவலிய' நூலிலும் தரவுகள் கிடைத்துள்ளன. பராக்கிரமபாகு, விஜயபாகு, இராஜசிங்க, சகலகலா வல்லப, தனிய வல்லப எனும் ஐவருமே அவர்களாவர். மன்னனும் தனது இறுதிக் காலத்தில் இவ் ஐவரையும் நாட்டின் நிருவாக நடவடிக்கைகளைக் கவனித்துக் கொள்ளும் பொருட்டு ஐந்து பிரதேசங்களுக்குப் பொறுப்பாக நியமித்துள்ளதாகவும் அறியமுடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்தவனான பராக்கிரமபாகு கொழும்பைச் சூழ்ந்த பிரதேசத்துக்கும் விஜயபாகு தெவுந்தறை தென் பிரதேசத்துக்கும் இராஜசிங்க மெனிக்கடவற, நாலு கோறளை பிரதேசங்களுக்கும் சகலகலா வல்லப கம்பஹ பிரதேசத்தில் உடு கம்பளைக்கும் தனிய வல்லப மாதம்பை பிரதேசத்துக்கும் நியமிக்கப்பட்டனர்.

எட்டாம் பராக்கிரமபாகுவின் ஆட்சிக் காலத்தின் இறுதிச் சில வருடங்களில் நிகழ்ந்ததாகக் கருதப்படும் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த நான்கு நிகழ்வுகள் பற்றி 'ராஜாவலிய மூலம் அறிய முடிகின்றது. இந்த நான்கு நிகழ்வுகளும் நாம் மேலே அவதானித்த இளவரசர்களுள் மூத்தவனான பராக்கிரமபாகு தர்ம பராக்கிரமபாகு எனும் பெயரில் மன்னனான பின்னர் நிகழ்ந்ததாகவும் அந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. எட்டாம் பராக்கிரமபாகுவின் இறுதிக் காலத்தில் அவனுக்காக கொழும்பைச் சூழ்ந்த பிரதேச நிருவாக நடவடிக்கைகளை இளவரசன் பராக்கிரமபாகு நடாத்தி வந்தமையால் போர்த்துக்கேய வரலாற்றியலாளர்கள் இளவரசனையே முடிக்குரிய அரசனாகக் கருதியுள்ளனர். அதனையே 'ராஜாவலிய' வும் பிரதிபலித்துள்ளது. எனவேதான் எட்டாம் பராக்கிரமபாகு மன்னனின் இறுதிக் கால நிகழ்வுகளை தர்ம பராக்கிரமபாகுவின் காலத்துக்குரியதாக 'ராஜாவலிய' குறிப்பிட்டிருக்கலாம்.

எட்டாம் வீர பராக்கிரமபாகு மன்னனின் இறுதிச் சில வருடங்களில் நிகழ்ந்த மற்றுமொரு முக்கிய நிகழ்வு யாதெனில், தென்னிந்தியாவின் காயல் பட்டணத்திலிருந்து படையினருடன் வந்த அதிராயன் எனும் முஸ்லிம் தலைவர் பலாத்காரமாக சிலாபத்தில் முத்துக் குளிக்கவும் நாட்டினுள் யானைகளைப் பிடிக்கவும் ஆரம்பித்தார். அவ்வேளை உடுகம்பளையிலிருந்த சகலகலா வல்லபனும் மாதம்பையிலிருந்த தனிய வல்லபனும் தமது படையிணருடன் வந்து அதிராயனின் படைகளுடன் போரிட்டு அவனைக் கொன்றதுடன் அவர்களின் வள்ளங்களையும் உடைத்து நொறுக்கினர். பின்னர் முத்துக் குளிப்போரையும் ஒன்பது படை வீரர்களையும் கைதிகளாகப் பிடித்து கோட்டைக்குக் கொண்டு சென்று மன்னனை சந்தித்த பின்னர் தத்தமது பிரதேசங்களுக்குச் திரும்பிச் சென்றனர்.

ராஜாவலிய கூறும் இரண்டாவது விடயம் மலை நாட்டில் ஏற்பட்ட ஒரு குழப்பம் பற்றியதாகும். எட்டாம் வீர பராக்கிரமபாகு மன்னனின் ஐந்தாவது ஆட்சி வருடத்தில் அதாவது 1495ஆம் ஆண்டு மேற்கொண்ட மலையக திக் விஜயத்தின் பின்னர் மேனவரதுனயா கோட்டை மன்னனின் ஆதிபத்தியத்தை அங்கீகரித்து அவனது பிரதேச ஆட்சியாளனாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தமையை 'அஸ்கிரி தல்பத' மூலம் அறிய முடிகின்றது. 1497ஆம் ஆண்டு முதல் அவன் துனயம அரசன் என்ற பெயரில் மலை நாட்டு அரசனாக ஆட்சி புரிந்துள்ளான். 'ராஜாவலிய' வின்படி அவன் கோட்டை அரசனுக்கு வரி செலுத்தாது, நான் தான் அரசன் எனப் பிரகடனப்படுத்தியதுடன் தங்க நாணயங்களையும் வெளியிட்டு, கிளர்ச்சி செய்துள்ளான். அப்போது மெனிக்கடவர எனுமிடத்தில் இருந்த நிருவாகியான இளவரசன் ராஜசிங்க தனது மைத்துனனான கீரவல்ல மஹராலஹாமி என்பவனின் தலைமையில் தனது படைகளை அனுப்பி மலைநாட்டுக் கிளர்ச்சியை அடக்கியுள்ளான். இவ்வாறு கிளர்ச்சியை அடக்கச் சென்ற கீரவல்ல மஹா ராலஹாமி என்பவனுக்கு கிளர்ச்சியாளனான துனயா மூன்று இலட்சம் பணம், மூன்று யானைகள் என்பவற்றுடன் தனது மகளையும் திருமணம் செய்து கொடுத்து சமாதானமாகியுள்ளான். 'ராஜாவலிய' கூறும் இந்த மலைநாட்டுக் கிளர்ச்சி பெரும்பாலும் மேலே நாம் ஆராய்ந்த எட்டாம் வீர பராக்கிரமபாகுவின் மலை நாட்டு திக் விஜயத்துக்குக் காரணமாயமைந்த கிளர்ச்சியாகவும் இருக்கலாம்.

சிறிது காலத்தின் பின்னர் இந்த மலையக நிருவாகி மீண்டும் கோட்டை மன்னனுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்துள்ளதாக 'ராஜாவலிய' கூறுகின்றது. அப்போது உடுகம்பளையிலிருந்த சகலகலா வல்லப இளவரசன், முதலமைச்சரான ஏக்கநாயக்க இருவரும் படைகளுடன் யடிநுவர வரை சென்று அவனைத் தோற்கடித்தனர்.

இக்காலகட்டத்தில் நிகழ்ந்ததாகக் கூறப்படும் அடுத்த முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகக் குறிப்பிடப்படுவது போர்த்துக்கேயரின் இலங்கை வருகையாகும். போர்த்துக்கேய அறிக்கைகளின்படி அவர்களின் விஜயம் 1505 அல்லது 1506இல் நிகழ்ந்திருக்கலாம்.

## யாழ்ப்பாண இராச்சியம்

பதினான்காம் (14) நூற்றாண்டிலிருந்து யாழ்ப்பாணம் தனியானதொரு பிராந்திய இராச்சியமாகவே செயற்பட்டு வந்துள்ளது. அதன் ஆரம்பம் பற்றியோ ஆரம்ப காலத்தில் அதனை ஆட்சி செய்த மன்னர்கள் பற்றியோ தகவல்களை அறிந்து கொள்ளக்கூடிய நம்பத் தகுந்த மூலாதாரங்கள் இதுவரை கிடைக்கவில்லை. எனவே இவ்விராச்சியத்தின் ஆரம்பம் மற்றும் வளர்ச்சி பற்றி கல்விமான்களுக்கிடையே கருத்து பேதம் நிலவுகிறது. பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதிவரையில் இவ்விராச்சியம் பற்றிய வரலாற்றைப் படிப்பதற்கு எமக்குக் கிடைத்துள்ள ஒரே மூலாதாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'யாழ்ப்பாண வைபவ மாலை' எனும் தமிழ் வம்சக் கதையாகும். இந்நூல் 1736 ஆம் ஆண்டாகிய அண்மைக் காலத்தில் எழுதப்பட்டதாகவே அதன் நூன்முகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயினும் அந்நூலில் ஆங்கிலேயர் ஆட்சி பற்றியும் விடயங்கள் உள்ளடங்கியிருப்பதால் அது பத்தொன்பதாம் நூற்றாண்டில் மீளவும் எழுதப்பட்டிருப்பது புலனாகின்றது.

ஆதி காலந்தொட்டு யாழ்ப்பாணம் தனி இராச்சியமாகத் திகழ்ந்து வந்துள்ளது எனக் கருதுபவர்களின் கூற்றை உறுதி செய்யக்கூடிய பழைய சிலைகள், கல்வெட்டுகள், நாணயங்கள் எனும் எந்தவொரு தொல்பொருள் ஆதாரமும் இதுவரை கிடைக்கவில்லை. மிக நீண்ட காலமாக யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்ததாக அவர்கள் கூறும் மன்னர்களின் ஆட்சிக் காலத்துக்குரிய தமிழ் கல்வெட்டொன்றோ, சிங்களக் கல்வெட்டொன்றோ யாழ்ப்பாண இராச்சியத்துக்குரிய பகுதிகளிலிருந்து இதுவரை காலம் கண்டுபிடிக்கப்படவில்லை. பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதி வரையில் அப்பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்டது சிங்கள மொழியிலான கல்வெட்டுக்களாகும். யாழ்ப்பாண மன்னன் ஒருவனால் பொறிக்கப்பட்ட முதலாவது தமிழ்க் கல்வெட்டு பதினான்காம் நூற்றாண்டுக்குரியதாகவே காணப்படுகிறது. அது கேகாலை மாவட்டத்தின் கொடகம எனும் இடத்திலேயே கிடைக்கப்பெற்றுள்ளது. யாழ்குடா நாட்டினுள் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட முதலாவது தமிழ்க் கல்வெட்டான 'நயினாதீவுக் கல்வெட்டு' பொலன்னறுவை பராக்கிரமபாகு (1153-1186) மன்னனின் காலத்துக்குரியது. முதலில் குறிப்பிடப்பட்ட 'கொடகம கல்வெட்டு' யாழ்ப்பாண இராசதானியின் சிங்கை நகரில் ஆரியன் எனும் மன்னனால் அக்காலத்தில் தெதிகமவில் ஆட்சி செய்த சிங்கள மன்னன் ஒருவனுக்கு எதிரான ஆக்கிரமிப்பின்போது பொறிக்கப்பட்ட வெற்றிக் கல்வெட்டாக இருக்கலாம் என்பது பேராசிரியர் பரணவிதானவின் கருத்தாகும். யாழ்ப்பாண மன்னர்களால் வெளியிடப்பட்ட 'சேது' எனும் நாணயங்கள் சில கிடைத்துள்ள போதிலும் அவையும் பதினான்காம் நூற்றாண்டுக்குரியவை என்பது குறிப்பிடத்தக்கது.

பதின்மூன்றாம் நூற்றாண்டிற்கு முன்னர் எழுதப்பட்ட எந்தவொரு பாளி, சிங்கள, தமிழ் மொழி மூலமான நூல்களிலும் யாழ்ப்பாண தனி இராச்சியம் பற்றியோ அதன் அரசர்கள் பற்றியோ குறிப்புகள் காணப்படவில்லை. யாழ்ப்பாண பிரதேசத்தை ஆட்சி செய்த மன்னன் ஒருவன் பற்றிக் குறிப்பிடும் முதலாவது சிங்கள நூலான 'நிகாய சங்கிரஹய' வும் பதின்னானகாம் நூற்றாண்டுக்குரியதாகும். பதின்மூன்றாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்துக்குரிய சோழ, பாண்டியரின் தென்னிந்தியக் கல்வெட்டுகளிலும் ஈழம், இலங்கை பற்றிய குறிப்புகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்பட்ட போதிலும் யாழ்ப்பாண இராச்சியம் பற்றி எதுவித குறிப்புகளும் இல்லை. தென்னிந்தியாவின் புதுக் கோட்டைப் பிரதேசத்தில் குடுமி மலை எனுமிடத்தில் கண்டெடுக்கப்பட்ட ஜடாவர்மன் வீர பாண்டியன் எனும் பாண்டிய மன்னனின் (1253 - 1275) பதினோராம் ஆட்சி வருடத்துக்குரிய (1263 - 64) கல்வெட்டொன்றில் மன்னன் புகழ்பாடும் பகுதியில் அவன் கைப்பற்றிய உள்நாட்டு, வெளிநாட்டு இராச்சியங்கள் பலவற்றின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவையாவன:- கங்கம், கௌடம், கடாரம், கொசலம், அருமணம் (பர்மா), சீனம், அவந்தி, ஈழம், கலிங்கம், தெலிங்கம் என்பனவாகும். இக்காலத்தில் யாழ்ப்பாணம் என்றொரு இராச்சியம் இருந்திருப்பின் ஈழம் அல்லது இலங்கை குறிப்பிடப்படுவதோடு யாழ்ப்பாணமும் குறிப்பிடப்பட்டிருக்கும். அவ்வாறு இடம் பெறாமைக்கான காரணம் என்னவெனில், 1263 ஆம் ஆண்டில் கூட யாழ்ப்பாணம் என்றொரு இராச்சியம் உருவாகி இருக்காமையாகும்.

பதின்மூன்றாம் நூற்றாண்டின் இரண்டாம் தசாப்தத்தில் (1215 அளவில்) கலிங்க மாகன் எனும் இந்திய ஆக்கிரமிப்பாளன் இலங்கையை ஆக்கிரமித்து இராசரட்டையில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டும் வரையில் யாழ்ப்பாணம் உள்ளிட்ட முழு இலங்கைத் தீவும் அநுராதபுர, பொலன்னறுவை இராசதானிக்குரிய அரசர்களின் ஆட்சியின் கீழேயே இருந்து வந்துள்ளது. அதன் பின்னர் 1255 ஆம் ஆண்டு வரை இலங்கையின் வடபகுதி ஆட்சியதிகாரம் காலிங்க மாகனிடமே காணப்பட்டது. இந்தத் தரவுகள் யாவும் பதின்மூன்றாம் நூற்றாண்டின் இறுதி தசாப்தம் வரை யாழ்ப்பாணம் என்றொரு தனி இராச்சியம் தோன்றவில்லை என்பதனையே ஆணித்தரமாகக் கூறுகின்றன.

விஜய கூலங்கை எனும் ஆரியச் சக்கரவர்த்தி மன்னன் ஒருவனால் ஆரம்பிக்கப்பட்டு பதினாறாம் நூற்றாண்டில் போர்த்துக்கேயரால் ஆக்கிரமிக்கப்படும்போது ஆட்சியிலிருந்த சங்கிலி மன்னன் வரை யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த பன்னிரண்டு மன்னர்களின் வரலாறு 'யாழ்ப்பாண வைபவமாலை'யில் கூறப்பட்டுள்ளது. சங்கிலி மன்னனின் காலம் தொட்டு முதல் மன்னனான விஜய கூலங்கையின் காலம் வரை ஒரு மன்னனுக்குச் சராசரி இருபத்தைந்து ஆண்டுகள் வீதம் கணக்கிட்டுப் பார்த்தாலும் யாழ்ப்பாண இராச்சியத்தின் ஆரம்பம் பதின்மூன்றாம் நூற்றாண்டின் இறுதி தசாப்தத்தில் அல்லது பதினான்காம் நூற்றாண்டின் முதல் தசாப்தம் வரையிலுமேயாகும்.

விஜய கூலங்கை மன்னனின் ஆட்சிக் காலத்தில் தென்னிந்திய அதிகாரிகள் சிலரால் அங்கிருந்து கூட்டிவரப்பட்டவர்கள் யாழ்ப்பாணத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியேற்றப்பட்டதாக 'யாழ்ப்பாண வைபவமாலை' குறிப்பிடுகின்றது. இக்குடியேற்றம் பதினான்காம் நூற்றாண்டில் இஸ்லாமிய ஆட்சியாளர்களின் ஆக்கிரமிப்பால் தென்னிந்தியாவில் ஏற்பட்ட கலவர நிலை காரணமாக மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என தமிழ் வரலாற்று அறிஞர்களுள் ஒருவரான எஸ்.நடேசன் கூறுகிறார். பதின்மூன்றாம் நூற்றாண்டின் இறுதி தசாப்தத்தில் அல்லது பதினான்காம் நூற்றாண்டின் ஆரம்ப தசாப்தத்திலே யாழ்ப்பாண இராச்சியம் உருவானது என்பது மேற்படி ஆதாரங்கள் மூலம் உறுதி செய்யப்படுகின்றது.

பாண்டியக் கல்வெட்டுக்கள் கூறும் தரவுகளின்படி வட இலங்கையில் தனியொரு இராச்சியம் ஆரம்பமானது சந்திரபானு எனும் ஜாவா மன்னனினாலாகும் என பேராசிரியர் பரணவிதான கருத்து வெளியிட்டுள்ளார். யாழ் குடாநாட்டில் காணப்படும் சாவகச்சேரி, சாவன் கோட்டை ஆகிய இடப் பெயர்களின் மூலம் அது உறுதிப் படுத்தப்படுவதாகவும் பேராசிரியர் விளக்கம் தருகிறார். 1292ம் ஆண்டளவில் இலங்கை வந்த மார்க்கோபோலோ எனும் வெனிஸ் நகர தேசசஞ்சாரி அக்காலத்தில் இலங்கையை ஆட்சி செய்த செந்தமேன் எனும் மன்னர் பற்றி தனது பயணக் குறிப்பில் எழுதியுள்ளார். அவர் குறிப்பிடும் செந்தமேன் என்பவன் சந்திரபானுவாக இருக்கலாம் என்று பரணவிதான கருத்துத் தெரிவிக்கிறார். பதின்மூன்றாம் நூற்றாண்டின் இறுதி தசாப்தத்தில் யாழ்ப்பாண பிரதேசத்தில் ஜாவா இன மன்னனின் ஆட்சி நிலவியதாக மார்க்கோபோலோவின் அறிக்கை பறைசாற்றுகின்றது. ஆயினும் இபின் பதூதா எனும் அராபிய தேசசஞ்சாரி 1344 ஆம் ஆண்டளவில் இலங்கை வந்த கால கட்டத்தில் யாழ்ப்பாணப் பிரதேசம் ஆரியச் சக்கரவர்த்தி எனும் சுல்தானால் ஆட்சி செய்யப்பட்டதாக அவரது தேச சஞ்சாரக் குறிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாட்சியாளன் ஆரியச் சக்கரவர்த்தி பரம்பரையைச் சேர்ந்த ஓர் ஆட்சியாளனாக இருக்கலாம். எனவே 1292 இற்கும் 1344 இற்கும் இடைப்பட்ட காலத்தில் ஆரியச் சக்கரவர்த்தி அரச வம்சம் யாழ்ப்பாணப் பிரதேசத்தின் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றியதாகத் தெரிய வருகின்றது. பதினான்காம் நூற்றாண்டு ஆரம்பத்தில் மலிக் கபூர் எனும் முஸ்லீம் தளபதியால் தென்னிந்திய ஆக்கிரமிப்பு மேற்கொள்ளப்பட்டபோது இராமேஸ்வரத்திலிருந்த ஆரியச் சக்கரவர்த்தி தனது படைகளுடன் இங்கு வந்து யாழ்ப்பாணப் பகுதியில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டியிருக்கலாம் எனவும் பரணவிதான அவர்கள் கருதுகிறார். யாழ்ப்பாண ஆரியச் சக்கரவர்த்திகளின் பூர்வீகம் தென்னிந்தியாவின் இராமேஸ்வரமாகும் என்பது ஆரியச் சக்கரவர்த்தி ஆட்சியாளனின் வேண்டுகோளுக்கிணங்க பதினான்காம் நூற்றாண்டின் முற்பகுதியில் எழுதப்பட்டதாகக் கருதப்படும் 'செகராசசேகர மாலை' எனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது பேராசிரியர் பரணவிதானவின் கருத்தோடு ஒத்துப்போவதை நாம் அவதானிக்கலாம். இந்தியாவின் விஜயநகர இராச்சியத்தின் இரண்டாம் தேவராயர் (1422 - 1446) மன்னனின் காலத்தில் மதுரையில் வாழ்ந்த லக்கண்ண தண்டநாயகர் எனும் படைத் தளபதியின் வீரத்தைப் பறைசாற்றும் 1435 ஆம் ஆண்டில் எழுதப்பட்ட இந்தியக் கல்வெட்டொன்றில் முதல் தடவையாக 'யாழ்பாணம்' எனும் பெயரில் யாழ்ப்பாணப் பிரதேசம் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு அண்மிய காலத்தில் எழுதப்பட்ட கோட்டை யுகத்துக்குரிய 'செலலிஹிணி சந்தேசய' 'கிரா சந்தேசய, 'கோகில சந்தேசய' எனும் சிங்கள தூது காவியங்களில் 'யாபா பட்டுண' எனும் பெயராலேயே யாழ்ப்பாணம் குறிப்பிடப்பட்டுள்ளது.

முதலாவது ஆரியச் சக்கரவர்த்தியின் ஆட்சித் தலைமையகம் இருந்த இடத்தையும் இது வரை திட்டவட்டமாக அறிந்து கொள்ள முடியவில்லை. ஆயினும் அது 'நல்லூர்' என 'யாழ்ப்பாண வைபவ மாலையில்' குறிப்பிடப பட்டுள்ளது. ஆயினும் 'செகராசசேகரமாலை' நூலின் படி ஆரம்பத்திலிருந்து யாழ்ப்பாணத்தின் தலை நகராகவிருந்தது 'சிங்கை நகர்' எனுமிடமாகும். நல்லூர் பற்றி குறிப்பிடப்படவில்லை. யாழ்ப்பாணத்தின் ஒவ்வோர் ஆட்சியாளனும் தமது பெயருக்கு முன்னால் சிங்கை ஆரியன் எனக் குறிப்பிட்டிருந்ததால் அதன் தலை நகராகத் திகழ்ந்தது சிங்கை நகர் என நாம் கருதலாம். தென்னிந்தியாவின் தென்காசி இராச்சியத்தின் பாண்டிய மன்னனான அரிகேசரி பராக்கிரம பாண்டியன் என்பவனால் 1449 ஆம் - 1454 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் பொறிக்கப்பட்ட இரு கல்வெட்டுகளிலும் அம் மன்னனால் சிங்கை உட்பட மேலும் பல பிரதேசங்கள் கைப்பற்றப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கல்வெட்டுகளில் குறிப்பிடப்படும் சிங்கை எனும் இடம் யாழ்ப்பாணத்தின் ஆட்சி மையமான சிங்கை நகராகும் என பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரி அவர்கள் கூறுகின்றார். பதினைந்தாம் நூற்றாண்டின் ஐந்தாம் தசாப்தத்தில் யாழ்ப்பாணப் பிரதேசத்தின் தலைநகரம் சிங்கை நகர் என இக் கல்வெட்டுகள் குறிப்பிடுவதிலிருந்து 'செகராசசேகர மாலை' குறிப்பிடும் தலைநகரம் சரியானது என்பது தெளிவாகின்றது. யாழ்குடா நாட்டின் வல்லிபுரம் அருகே சிங்கை நகர் அமைந்திருக்கலாம் என இராசநாயகம் முதலியார் ஊகம் தெரிவிக்கிறார். ஆயினும் அதை உறுதிப் படுத்தும் எந்தவொரு தொல் பொருள் சான்றும் இதுவரை கிடைக்கவில்லை என்ற போதிலும் போர்த்துகேய ஆக்கிரமிப்பு இடம் பெற்ற பதினாறாம் நூற்றாண்டில் யாழ்ப்பாண பிரதேசத்தின் தலை நகராகத் திகழ்ந்தது நல்லூர் என போர்த்துகேய நூல்களிலிருந்து தெரிய வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குறிப்பிட்டவாறு யாழ்ப்பாணப் பிரதேசத்தின் முதலாவது ஆட்சியானாகக் கருதப்படும் விஜய கூழங்கையின் காலம் முதல் போர்த்துக்கேயரின் ஆக்கிரமிப்பு வரை அப்பிரதேசத்தை ஆட்சி செய்த குலசேகரன், விக்கிரமன், வரோதயன், மார்த்தாண்டன், குணபூசணம், வீரோதயன், ஜயவீரன், குணவீரன், கனகசூரியன், பரராசசேகரன், சங்கிலியன் ஆகிய பன்னிரண்டு ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆட்சிக் காலம் பற்றி 'யாழ்ப்பாண வைபவமாலை'யில் கூறப்பட்டுள்ளது. அவர்களின் ஆட்சிக் காலம் அதில் குறிப்பிடப்படவில்லை. ஆயினும் அவர்களின் ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்த முக்கியமான நிகழ்வுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்நூலிலிருந்து எடுக்கப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வொன்று பின்வருமாறு:

விஜய கூழங்கையின் ஆட்சிக் காலத்தில் நல்லூரில் கந்தசுவாமி கோயில் உட்பட பல இந்துக் கோயில்கள் கட்டப்பட்டன. அவனின் வேண்டுகோளுக்கிணங்க தென்னிந்தியாவின் தமிழ் மன்னர்களினால் வேளாள அதிகாரிகள் சிலர் அவர்களின் குடும்பங்களுடனும் அவர்களைச் சார்ந்தவர்களுடனும் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதுடன் அவர்கள் அங்கு பல்வேறு இடங்களிலும் குடியமர்த்தப்பட்டனர். குலசேகர ஆரியன் விவசாய நடவடிக்கைகளையும் நிருவாக நடவடிக்கைகளையும் மேம்படுத்தியதுடன் அவனுடைய ஆட்சிக் காலம் அமைதியாக இருந்தது. அவனது மறைவையடுத்து ஆட்சி பீடமேறிய விக்கிரமசிங்கை ஆரியனின் காலத்தில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த சிங்களவர்களுக்கும் இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்டு குடியமர்த்தப்பட்ட தமிழர்களுக்கிடையில் சமய பேதம் காரணமாக கலவரம் ஏற்பட்டது. புஞ்சி பண்டா எனும் சிங்களப் பிரதானி ஒருவனின் தலைமையில் இடம் பெற்ற அக்கலகத்தை அடக்கிய விக்கிரமசிங்கை ஆரியன் அமைதியை ஏற்படுத்தினான். அடுத்து ஆட்சிக்கு வந்த வரோதயன் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த சிங்கள, தமிழ் இனங்களுக்குமிடையே சமாதான சக வாழ்வை வளர்த்தமையால் முழு இலங்கை மக்களினதும் கௌரவத்துக்கு ஆளானான். ஆயினும் அவனைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த மார்த்தாண்ட ஆரியனின் காலத்தில் வன்னியர்கள் கலகம் விளைவித்தனர். அதனை அடக்கிய மார்த்தாண்டன் விவசாயம், கல்வி என்பவற்றை மேம்படுத்தினான். அடுத்த ஆட்சியாளனான குணபூசணத்தின் காலத்தில் நாடு சமாதானமும் செழிப்பும் அடைந்தது. குணபூசணத்தின் பின்னர் வந்த வரோதயனின் காலத்தில் சிங்கள வன்னியர்கள் அவர்களது வன்னி மக்களைக் கொண்டு கலகம் செய்தனர். எனவே வன்னிப் பிரதேசங்களைத் தாக்கிய வரோதயன் கலகத்தை அடக்கியதுடன் சிங்கள வன்னித் தலைவர்களின் சொத்துக்களையும் பறிமுதல் செய்தான். தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டை இழந்து யாழ்ப்பாணத்துக்கு உதவி கோரி வந்த பாண்டிய மன்னன் ஒருவனுக்கு அவனது ஆட்சியை மீண்டும் கைப்பற்றுவதற்கு வரோதயன் உதவியுள்ளான். வீரோதயனுக்குப் பின்னர் ஆட்சி பீடம் ஏறிய ஜயவீர ஆரியன் இலங்கையின் முத்துக் கடல் பரப்பு காரணமாக ஏற்பட்ட பிரச்சினையினால் புவனேகபாகு எனும் சிங்கள மன்னனுக்கு எதிராகப் போரிட்டு அவனை வெற்றி கொண்டு தென்னிலங்கையின் சில பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டான். பன்னிரண்டு வருடங்களுக்குப் பின்னர் பாண்டிய மன்னன் ஒருவனின் தலையீட்டினால் அவ்வாறு கைப்பற்றப்பட்ட பிரதேசங்களைப் புவனேகபாகுவின் பின்னர் வந்த பராக்கிரமபாகு மன்னனுக்குக் கையளித்ததாகவும் அப்பிரதேசங்களுக்காக அம்மன்னன் யாழ்ப்பாண ஆட்சியாளனுக்கு கப்பம் செலுத்த வேண்டியேற்பட்டது. பராக்கிரமபாகுவுக்குப் பின்னர் ஆட்சி பீடமேறிய அரசர்கள் கப்பம் செலுத்துவதை மறுக்கவே ஜயவீர ஆரியனை அடுத்து வந்த குணவீரன் தென்பகுதியைத் தாக்கி மீண்டும் அந்தக் கப்பத்தைப் பெற்றுக் கொண்டான். அதனைத் தொடர்ந்து அவன் தென்பகுதியின் சில இடங்களில் தமிழ் மக்களைக் குடியேற்றினான். அவனது மறைவுக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த கனகசூரியனின் காலத்திலும் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த சிங்களவர்களுள் ஒரு பிரிவினர் வன்னியர்களின் உதவியுடன் கலகம் விளைவிக்கவே கனகசூரியன் தன்னிரு பிள்ளைகளுடன் இந்தியாவுக்குத் தப்பிச் செல்ல நேர்ந்தது. அவன் அங்கு பதினேழு வருடங்களைக் கழித்தான். அக்காலத்தில் விஜயபாகு எனும் சிங்கள இளவரசன் யாழ்ப்பாணத்தின் அதிகாரத்தைக் கைப்பற்றினான். பின்னர் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த கனகசூரிய ஆரியன் விஜயபாகுவைக் கொன்று மீண்டும் யாழ்ப்பாண ஆட்சியைக் கைப்பற்றினான. ஆயினும் சிறிது காலத்தில் அவன் தனது மகனான பரராசசேகரனிடம் ஆட்சியை ஒப்படைத்துவிட்டு ஒதுங்கினான். கனக சூரியனின் மற்றொரு மனைவியின் மகனான சங்கிலி என்வனே யாழ்ப்பாண இராச்சியத்தின் இறுதி மன்னனாவான். போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்காக போரிட்டது இந்த சங்கிலி மன்னனுடனே ஆகும்.

'யாழ்ப்பாண வைபவமாலை' யில் விபரிக்கப்படும் மேற்படி நிகழ்வுகள் தொடர்பாகக் கூறப்பட்டிருக்கும் காலகட்டங்கள் பிழையானவை ஆகும். உதாரணமாக யாழ்ப்பாணத்தின் முதல் ஆட்சியாளனான விஜய கூழங்கையின் ஆட்சிக் காலத்திலே நல்லூர் கந்தசுவாமி கோயில் கட்டப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. ஆயினும் இக்கோயில் பதினைந்தாம் நூற்றாண்டின் மத்தியில் ஆறாம் புவகேனபாகு மன்னனால் கட்டப்பட்டது என்பதை அக்கோயிலில் வருடாந்தம் நடைபெறும் திருவிழா நிறைவு நாளின்போது மரபு வழியாகப் பாடப்பட்டு வரும் தோத்திரப் பாடல் வரிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்தியம்புகின்றன. அதே போன்று ஜயவீரசிங்கை மற்றும் புவனேகபாகு எனும் மன்னர்களிடையே முத்துக் கடற்பரப்பு தொடர்பாக யுத்தம் 1458 இல் இடம் பெற்றதாக 'யாழ்ப்பாண வைபவமாலை' கூறுகிறது. குறிப்பிட்ட இக்காலப் பகுதியில் யாழ்ப்பாண ஆட்சியாளனாக இருந்தவன், பிற்காலத்தில் ஆறாம் புவனேகபாகு எனும் பெயரில் கோட்டை மன்னனான சப்புமல் குமாரன் ஆவான். அவன் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியபோது அங்கு ஆட்சியாளனாக இருந்தவன் கனகசூரியன் எனும் ஆரியச் சக்கரவர்த்தியாவான். முதலாம் புவகேனபாகு மற்றும் மூன்றாம் விக்கிரமபாகு மன்னர்களின் காலத்துக்கு உரிய நிகழ்வுகள் சில ஜயவீர சிங்கை ஆரியனின் காலத்தில் நடைபெற்றதாக 'யாழ்ப்பாண வைபவமாலை' கூறுகின்றது. கனகசூரியனின் மகனான பரராசசேகரனைக் கொன்று ஆட்சியைக் கைப்பற்றிய சங்கிலி அதற்கு நூறாண்டுகளுக்குப் பின்னர் யாழ்ப்பாண ஆட்சியாளனான சங்கிலி என தவறாகப் புரிந்து கொண்டு விளக்கமளிக்கப்பட்டிருப்பதையும் மற்றொரு உதாரணமாக சுட்டிக் காட்டலாம்.

மேலே விபரித்தவாறு பதினான்காம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் உருவானதாகக் கருதப்படும் யாழ்ப்பாண பிரதேச இராச்சியத்துக்குரிய ஆட்சியாளர்கள் அக்காலகட்டத்தில் தென்னிலங்கையில் நிலவிய கம்பளை, றைகம ஆட்சியாளர்களிடையே நிலவி வந்த முரண்பாட்டை தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு தமது அதிகாரத்தை விரிவாக்கிக் கொள்வதில் வெற்றி கண்டிருப்பது சமகால மூலாதாரங்களின் மூலம் தெரிய வருகின்றது. கம்பளை யுகத்தின் நான்காம் புவகேனபாகுவின் ஆட்சிக் காலத்தில் அதாவது 1344 இல் மன்னாருக்கு அண்மிய இடமொன்றில் தரையிறங்கிய தேசசஞ்சாரியான இபின் பதூதா என்பவர் அக்காலத்தில் யாழ் குடா நாட்டை ஆட்சி செய்த ஆரியச் சக்கரவர்த்தி இலங்கையின் சுல்தான் என அறிமுகம் செய்கிறார். தான் இலங்கையில் தரையிறங்கும்போது அந்த சுல்தான் முத்துக் குளிப்பை அவதானித்துக் கொண்டிருந்ததாகவும் குறிப்பிடுகின்றார். அந்த சுல்தானிடம் பலம் வாய்ந்த கடற்படை ஒன்று இருந்ததாகவும் அவர் மேலும் குறிப்பிடுகின்றார். பதினான்காம் நூற்றாண்டின் மத்திய பகுதியளவில் யாழ்ப்பாணத்தின் அரசியல் பலம் உறுதிப்படுத்தப்பட்டிருந்ததை இதன் மூலம் அறிய முடிகின்றது. அக் காலகட்டத்தில் யாழ்ப்பாண ஆட்சியாளர்கள் கம்பளை இராசதானிக்குரிய பிரதேசங்களில் அடிக்கடி ஆக்கிரமிப்புகளை மேற்கொண்டமைக்கான சாட்சியங்களும் காணப்படுகின்றன.

சிங்கை நகரின் ஆரியச் சக்கரவர்த்தி ஒருவனின் வெற்றியைக் கூறும் கல்வெட்டு ஒன்று தெதிகமவுக்கு சமீபமாக உள்ள கொடகம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனுமிடத்தில் கிடைக்கப் பெற்றுள்ளது. சிங்களப் பிரதேசங்கள் மீது ஆரியச் சக்கரவர்த்திகள் மேற்கொண்ட ஆக்கிரமிப்புகள் இக் கல்வெட்டின் மூலமும் சமகால இலக்கிய மூலாதாரங்கள் மூலமும் உறுதிப் படுத்தப்படுகின்றது. இக்கால கட்டத்தில் கம்பளை இராசதானிக்குரிய சிங்களப் பிரதேசங்கள் சில யாழ்ப்பாண இராசதானியின் ஆதிக்கத்தின் கீழ் இருந்ததாக 'ராஜாவலிய' மூலம் அறிய முடிகின்றது. ஐந்தாம் பராக்கிரமபாகு மன்னனின் மருமகனான மூன்றாம் விக்கிரமபாகு மன்னன் (1357 - 1374) கம்பளையிலிருந்து ஆட்சி செய்த காலத்தில் அழகேஸ்வர மந்திரி றைகமவில் வாழ்ந்ததாகவும், யாழ்ப்பாணத்தில் ஆரியச் சக்கரவர்த்தி ஆட்சி செய்ததாகவும் இவ்வாட்சியாளர்களுள் ஆரியச் சக்கரவர்த்தி மன்னனே படை பலத்திலும் பொருளாதார பலத்திலும் பலம் வாய்ந்தவனாகத் திகழ்ந்ததாகவும், அவன் மலை நாட்டிலும் கீழ் நாட்டிலும் ஒன்பது துறைமுகங்களிலும் வரி அறவிட்டு வந்ததாகவும் 'ராஜாவலிய' மேலும் குறிப்பிட்டுள்ளது ஆயினும் சிங்களப் பிரதேசங்களின் மீதான ஆரியச் சக்கரவர்த்தியின் ஆக்கிரமிப்பானது பதினான்காம் நூற்றாண்டின் இறுதியில் நிறைவுற்றமைக்கும் சாட்சியங்கள் கிடைத்துள்ளன. மூன்றாம் விக்கிரமபாகு மன்னனின் ஆட்சிக் காலத்தில் றைகமவில் வாழ்ந்த நிஸ்ஸங்க அழகேஸ்வர எனும் ராஜ பிரபுவின் முயற்சி காரணமாக சிங்களப் பிரதேசங்களில் வரி அறவிட்டு வந்த யாழ்ப்பாண ஆட்சியாளரிடமிருந்து அப்பிரதேசங்களை விடுவித்துக் கொள்ள முடிந்ததாகவும் சமகால மூலாதாரங்களின் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. எதிர்த் தாக்குதலுக்குத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்ட அந்த ராஜபிரபு கொழும்பு நகருக்கு அண்மையில் தாருகிராம எனும் இடத்தில் ஜயவர்த்தனபுர எனும் பாரிய கோட்டையை அமைத்து அங்கு சிங்கள, தமிழ் படையினரைக் குவித்து சிங்களப் பகுதிகளில் வரி அறவிட்டு வந்த யாழ்ப்பாண ஆட்சியாளனின் அதிகாரிகளை விரட்டியடித்து ஆரியச் சக்கரவர்த்திக்கு சவால் விடுத்ததாக 'நிகாய சங்கிரஹய' எனும் நூல் குறிப்பிடுகின்றது. அந்தச் சவாலை ஏற்றுக் கொண்ட ஆரியச் சக்கரவர்த்தி கடல் மார்க்கமாகவும் தரை மார்க்கமாகவும் அனுப்பி வைத்த படையினரால் கொழும்பு, நீர்கொழும்பு, வத்தளை, சிலாபம் எனுமிடங்கள் கைப்பற்றப்பட்டன. என்றாலும் அழகேஸ்வர அப்படை முகாம்களைத் தாக்கி அங்கிருந்து அவர்களை விரட்டியதாகவும் அறிய முடிகின்றது. மூலாதாரங்கள் கூறும் தரவுகளின்படி 1369 ஆம் ஆண்டுக்குச் சில வருடங்கள் முன்னரே இது நிகழ்ந்துள்ளது.

இவ்வாறு சிங்களப் பிரதேசங்கள் ஆரியச் சக்கரவர்த்திகளிடமிருந்து விடுவிக்கப்பட்டதன் பின்னர் சிங்களப் பிரதேசங்களுக்கு எதிரான ஆக்கிரமிப்புகள் மேற்கொள்ளப்பட்டனவா என்பதை உறுதியாகக் கூறக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடிய சாட்சிகள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. ஆயினும் ஐந்தாம் புவனேகபாகு மன்னனின் (1372-1408) இருபதாம் ஆட்சி வருடத்தில் அதாவது 1391 ஆம் ஆண்டளவில் அம்மன்னனின் மைத்துனனான மெஹனவர வீரபாகு எனும் ஏபா (இளவரசன்) மகா தைரியமும் வீரமும் பொருந்திய பலசாலிகளையும் அநேகமான தந்திரங்களையும் கையாண்டு தமிழ், மலாய, சோனக எதிரிகளை எல்லாம் முறியடித்து முழு இலங்கையையும் ஒன்றுபடுத்தியதாக 'நிகாய சங்கிரஹய' கூறுகின்றது. ஆயினும் அவ்வாறு ஒரு நிகழ்வு இடம்பெற்றதா என்பது சந்தேகத்துக்கிடமானது. இங்கு எதிரிகள் எனக் குறிப்பிடுவது யாழ்ப்பாணத்திலிருந்து வருகை தந்த ஆக்கிரமிப்பாளர்களென நாம் கருதலாம். அவ்வாறானதோர் ஆக்கிரமிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்குமாயின் அதனை வீரபாகு ஏபாவால் தடுத்திருக்க முடியும் என்று மேற்கூறப்பட்ட வாசகத்தின்படி நாம் கருதலாம்.

பதினான்காம் நூற்றாண்டின் இறுதியிலும் பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியிலும் யாழ் குடா நாட்டில் விஜய நகரப் பேரரசின் கீழான ஆட்சி நிலவியதாக சமகால மூலாதாரங்கள் மூலம் அறிய முடிகின்றது. விஜயநகரப் பேரரசை ஆட்சி செய்த இரண்டாம் ஹரிஹரனின் (1377-1404) மகனான விருபாக்ஷ இளவரசன் சோழநாடு, பாண்டியநாடு, மற்றும் இலங்கை என்பவற்றை ஆக்கிரமித்து அங்கு கைப்பற்றிய செல்வங்களைத் தன் தந்தையின் காலடியில் கொண்டு வந்து குவித்ததாக 1385 ஆம் ஆண்டளவில் எழுதப்பட்ட அவனது ''ஆலம்பூண்டி சாசனம்'' கூறுகின்றது. அவனால் இலங்கையில் வெற்றிக் கோபுரம் ஒன்றும் எழுப்பப்பட்டதாக அவனது 'அரியர் சாசனம்' (1390) குறிப்பிடுகின்றது. இலங்கை வெற்றிகொள்ளப்பட்டதாக இங்கு குறிப்பிடப்பட்டாலும் அது யாழ்ப்பாணக் குடாநாடு உள்ளிட்ட வட பகுதியாக இருக்கலாம் என நீலகண்ட சாஸ்திரி அவர்கள் கருத்துத் தெரிவிக்கின்றார். இவ்வாறு கைப்பற்றப்பட்ட வட பிரதேச இராச்சியம் இரண்டாம் ஹரிஹரன் ஆட்சிக் காலம் முழுதும் விஜயநகரப் பேரரசின் கீழ் நிலவி வந்திருக்கலாம் என அவர் மேலும் விளக்கம் தருகிறார்.

யாழ்ப்பாணத்துக்கு எதிராக இவ்வாறான ஒரு தாக்குதல் விஜய நகரப் பேரரசின் இரண்டாம் தேவராய மன்னரின் (1422 - 1446) ஆட்சிக் காலத்திலும் மேற்கொள்ளப்பட்டது. இம்மன்னனின் பிரதியரசனாக இருந்து மதுரையை ஆண்டு வந்த லக்கண்ண தண்ட நாயகன் என்பவனால் யாழ்ப்பாணம், நாகபட்டணம், ஈழம் (இலங்கை) எனும் அரசுகளுக்கான ஆக்கிரமிப்பு வெற்றியளித்ததன் பொருட்டு 'சமுத்திர யாத்திரா தானம்' எனும் பூஜை செய்யப்பட்டதாக 1435 அளவில் பொறிக்கப்பட்ட விஜய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரக் கல்வெட்டொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வெற்றியின் பயனாக மேற்படி அரசுகளால் விஜய நகரப் பேரரசுக்கு கப்பம் செலுத்த வேண்டி ஏற்பட்டதாக 1440 இல் வெளியான மற்றொரு கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது. அதே கால கட்டத்தில் தென்னிந்தியாவின் தென் கோடியில் அமைந்திருந்த தென்காசி எனும் பாண்டியப் பேரரசாலும் யாழ்ப்பாணம் ஆக்கிரமிக்கப்பட்டதாக அரிகேசரி பராக்கிரம பாண்டியன் எனும் மன்னனின் காலத்துக்குரிய (1442 - 1461) கல்வெட்டுக்கள் மூலம் அறிய முடிகின்றது. மேலும் அம்மன்னன் சிங்கை, அநுரை முதலிய இடங்களில் வைத்துப் போரிட்டு எதிரிகளை வெற்றி கொண்டதாகவும் அக்கல்வெட்டுகள் கூறுகின்றன. இங்கு சிங்கை என்பது யாழ்ப்பாணத்தின் தலை நகராகும் என்றும் அம்மன்னனின் ஆற்றல் மற்றும் அன்றைய தென்னிந்திய அரசியல் நிலை என்பவற்றை அவதானிக்கும்போது அப்போர் வெற்றி பற்றி சந்தேகிக்க வேண்டியதில்லை எனவும் நீலகண்டசாஸ்திரி குறிப்பிடுகின்றார். மேலும் அவர் கூறுகையில் லக்கண்ண தண்டநாயகன் என்பவன் தேவராயருடன் இணைந்தோ அல்லது அவரின் மறைவுக்குப் பின்னர் தனித்தோ யாழ்ப்பாணத்தை ஆக்கிரமித்திருக்கலாம் என்றும் கருதுகிறார். இவ்வாக்கிரமிப்புகள் பற்றிய தரவுகள் உண்மையாயின் அது ஆறாம் பராக்கிரமபாகு (1412-1467) கோட்டை மன்னனான பின்னரும் சப்புமல் குமாரனால் யாழ்ப்பாணம் வெற்றி கொள்ளப்பட்டதற்குப் பின்னருமே நடைபெற்றிருக்கலாம். அல்லது பேராசிரியர் பரணவிதான அவர்களின் கருத்துப்படி சப்புமல்குமாரன் யாழ்ப்பாண ஆட்சியாளனாக இருந்த காலத்திலோ நிகழ்ந்திருக்கலாம்.

ஆறாம் பராக்கிரமபாகு மன்னனின் முப்பத்தைந்தாம் ஆட்சி வருடப் பூர்த்திக்கு சில காலம் முன்னர் 1449 ஆம் ஆண்டு அவனின் தளபதியான சப்புமல் குமாரன் அல்லது செண்பகப் பெருமாள் எனும் வளர்ப்பு மகன் மூலம் யாழ்ப்பாணத்தை வெற்றி கொண்டதாக சமகால மூலாதாரங்கள் பலவற்றிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. சப்புமல் குமாரனின் யாழ்ப்பாணப் படையெடுப்பின்போது கனகசூரியசிங்கை ஆரியன் என்பவனால் இப்பிரதேசம் ஆட்சி செய்யப்பட்டு வந்தது. தனது தோல்வியைத் தொடர்ந்து அவன் மனைவி மக்களுடன் இந்தியாவுக்குச் சென்றதாகவும் தெரிய வருகின்றது. யாழ்ப்பாண வெற்றியைத் தொடர்ந்து சப்புமல் குமாரன் யாழ்ப்பாண ஆட்சியாளனாக அங்கேயே இருந்தான் ‘யாழ்ப்பாண வைபவமாலை’ கூறுவதன்படி வன்னியர்களின் உதவி பெற்ற சிங்கள மக்களின் எதிர்ப்பினாலேயே கனக சூரியன் இந்தியா செல்ல வேண்டி நேர்ந்துள்ளது. அவன் இந்தியா சென்ற பின்னர் ஆறாம் பராக்கிரமபாகுவின் பிரதிநிதியாக சப்புமல் குமாரன் இருபது ஆண்டுகளாக யாழ்ப்பாணத்தை ஆண்டு வந்தான். அவன் 1470 ஆம் ஆண்டு ஆறாம் புவனேகபாகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் பெயரில் கோட்டை மன்னனான பின்னரும் கூட யாழ்ப்பாணப் பிரதேசம் அவனுக்கு கீழ்ப்பட்டதாக சில காலம் தொடர்ந்தும் நிலவியது. யாழ்ப்பாணத் தமிழ் நாட்டார் கதைகள் வாயிலாக நல்லூர் கந்தசுவாமி கோயில் நிர்மாணப் பணிகளின் ஆரம்பம் ஆறாம் புவனேகபாகு மன்னனாலே மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் அக் கோயில் பூஜைகளின் போது பாடப்படும் பாமாலையில் ஆறாம் புவனேகபாகு (செண்பகப் பெருமாள்)வின் பெயர் இடம் பெறுவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

சப்புமல் குமாரன் ஆறாம் புவனேகபாகு எனும் பெயரில் கோட்டை மனன்னான சிறிது காலத்தில் கனகசூரிய ஆரியன் இந்தியாவிலிருந்து திரும்பி வந்து யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிக் கொண்டதாக சமகால மூலாதாரங்கள் கூறுகின்றன. இவ்வாறு யாழ்ப்பாணம், கோட்டை இராச்சியத்திடமிருந்து கைவிட்டுப் போவதற்கான காரணம் யாழ்ப்பாணப் பிரதேசவாசிகள் மேற்கொண்ட கிளர்ச்சியினாலா அல்லது விஜய நகரத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்பிலானா என்பதை உறுதியாகக் கூற முடியாது. கனகசூரியஆரியன் மீண்டும் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் பொருட்டு அக்காலத்தில் பல்வேறு பிரிவுகளாகப் பிரிந்திருந்த மதுரை இராச்சியத்தின் அல்பேசாக்கிய இளவரசர்களினால் வழங்கப்பட்ட படைக் கலங்களுடன் வந்ததாக 'யாழ்ப்பாண வைபவமாலை' கூறுகின்றது. இங்கு அல்பேசாக்கிய இளவரசர்கள் என்று குறிப்பிடப்படுவது விஜயநகரப் பேரரசின் பிரதிநிதிகளாவர் என்ற அபிப்பிராயமும் நிலவுகின்றது. 'யாழ்ப்பாண வைபவ மாலை' யின்படி கனக சூரிய ஆரியனின் மூத்த மகனான ராஜசேகரன் எனும் இளவரசனின் வீரத்தினாலேயே மீண்டும் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற முடிந்துள்ளது. கனகசூரிய ஆரியன் இரண்டாவது தடவை யாழ்ப்பாண ஆட்சியாளனாக வந்தபோது ஏற்கெனவே சிங்கள அரசனுக்குச் சார்பாக இருந்தவர்களுக்கு மரண தண்டனை வழங்கியதாகவும் கூறப்படுகின்றது. அவனுடைய சிங்கள விரோத நடவடிக்கைகள் காரணமாக யாழ்ப்பாணத்திலிருந்த சிங்களக் குடும்பங்கள் கண்டி இராச்சியத்துக்குப் புலம் பெயர்ந்ததாகவும் 'யாழ்ப்பாண வைபவ மாலை' கூறுகின்றது. இரண்டாவது தடவை கனகசூரியன் ஆட்சிக்கு வந்த போது வயோதிபனாக இருந்தமையால் அவனது மூத்த மகனான பரராஜசேகரன் அரசனாக்கப்பட்டதாக அந்நூலில் மேலும் விளக்கம் தரப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணை நூல்கள்

1. மகாவம்சம்
2. நிகாய சங்கிரஹய
3. அஸ்கிரிய தல்பத - மெண்டிஸ் ரோஹணதீர
4. Political History - P.A.T.Gunasinghe
5. கம்பொல யுகய
6. ராஜாவலிய
7. கோகில சந்தேசய
8. யாழ்ப்பாண வைபவமாலை
9. கைலாச மாலை
10. தட்சின கைலாச புராணம்
11. செகராசசேகர மாலை
12. ANCIENT JAFFNA - RASANAYAGAM MUDLIYAR
13. KINGDOM OF JAFFNA, S. PATHMANATHAN



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் - 4

# நிருவாக முறை

## (சோழர் ஆட்சிக் காலம் 1017 - 1070)

இலங்கையில் கி.பி.1017 முதல் 1070 வரையில் சோழராட்சி இடம் பெற்றமை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டதாகும். இக்கால கட்டத்தில் இலங்கையில் எவ்வாறான நிருவாக முறையொன்று மேற்கொள்ளப்பட்டது, என்பதை அறிந்து கொள்வதற்குப் போதிய ஆதாரங்கள் கிடைக்கப்பெறவில்லை. வம்சக் கதையின் படி சோழர் தாம் கைப்பற்றிய பிரதேசங்களின் பௌத்த தலங்களை சூறையாடி அவற்றை அழித்தனர். வம்சக் கதை கூறும் இச்செயற்பாடானது சோழர் இலங்கையை ஆக்கிரமித்த போது அவர்களால் மேற்கொள்ளப்பட்டதாயிருக்கலாமே தவிர தமது ஆட்சிக் காலத்திலும் அவர்கள் அதே கொள்கைகளைக் கடைப்பிடித்திருப்பர் என்று கருத முடியாது. நாட்டின் மத்தியில் காணப்பட்ட மலைநாடு மற்றும் அதனால் பாதுகாக்கப்பட்ட உருகுணை இராச்சியம் உள்ளிட்ட தென் பிரதேசத்தில் சோழரால் நிலையாக ஆதிக்கம் செலுத்த முடியவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. எனவே அவர்களின் நாசகர செயற்பாடோ ஆட்சி நிருவாகமோ அநுராதபுரம், பொலன்னறுவை உள்ளிட்ட வட பிரதேச இராசரட்டைக்குள் மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்தது.

பொலன்னறுவையைத் தமது ஆட்சியின் தலைநகராக்கிக் கொண்ட சோழர் அதற்கு 'ஜனநாத மங்களம்' எனப் பெயரிட்டனர். அத்தலைநகர் மூலம் நிருவாகிக்கப்பட்ட முழுப்பிரதேசமும் 'மும்முடிச் சோழ மண்டலம்' எனப்பட்டது. அது முழு இலங்கையையும் குறிப்பதாக அமைந்த போதிலும் கி.பி.1017 முதல் அநுராதபுரத்தின் இறுதி மன்னனான ஐந்தாம் மகிந்தன் மரணித்த 1029ஆம் ஆண்டு வரையிலான சிறிது காலம் தவிர அதனைத் தொடர்ந்து வந்த காலம் முழுவதும் உருகுணையில் அல்லது நாட்டின் தென் பிரதேசத்தில் எங்கேனும் தலைநகர் அமைத்துக் கொண்டு சோழருக்கு எதிராக நடவடிக்கை மேற்கொண்ட சுயாதீனத் தலைவர்கள் சிலர் செயற்பட்டதையும் நாம் மறந்துவிடக் கூடாது. எனவே இலங்கையின் மத்திய மலைநாட்டுக்கு வடக்கே அமைந்திருந்த சமவெளிப் பிரதேசத்தில் மட்டுமே சோழராட்சி நிலவியுள்ளது என்பது தெளிவாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னிந்தியாவின் சோழப் பேரரசு, மண்டலங்களாக அல்லது பேரரசின் கீழ் செயற்பட்ட தளபதிகளால் நிருவகிக்கப்பட்ட மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. இலங்கையில் சோழராட்சி நிலவிய பகுதி 'மும்முடிச் சோழ மண்டலம்' என அழைக்கப்பட்டதால் அது பேரரசனின் கீழ் செயற்பட்ட தளபதி ஒருவனால் நிர்வகிக்கப்பட்டு வந்த மண்டலமாக இருந்தது என நாம் கருதலாம். உள்நாட்டில் தமது ஆட்சிக்கு எதிராக எழக்கூடிய எதிர்ப்புகளைப் போலவே மலை நாட்டிலும் தென் பிரதேசத்திலும் தலைமையகம் அமைத்து செயற்பட்ட சிங்களத் தலைவர்களின் எதிர்ப்புகளுக்கும் முகங்கொடுக்க வேண்டியிருந்தமையால் தளபதியின் கீழ் சோழர் படை அலகு ஒன்றோ அல்லது சிலவோ இருந்திருக்கலாம். சோழராட்சி நிலவிய ஐம்பத்து மூன்று ஆண்டுகளும் இலங்கையின் எங்காவது ஒரு பிரதேசத்தில் சோழராட்சிக்கு எதிரான கிளர்ச்சி இடம்பெற்று வந்தமையால் அவர்களது ஆட்சி அமைதிகரமானது எனக் கூற முடியாது.

தமது ஆட்சிக் காலம் முழுவதும் நாட்டின் ஏனைய இடங்களில் தமது ஆட்சிக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வந்த நடவடிக்கைகளுக்கு முகங்கொடுக்க வேண்டி நேர்ந்தமையால் சோழரினால் தமது ஆட்சி நிலவிய பகுதியிலும் கூட சிவில் நிருவாகத்தை மேற்கொள்ள முடியாத நிலையே காணப்பட்டிருக்கும். இராசரட்டையை தமதாட்சியின் கீழ்க் கொண்டு வந்த பின்னர் ஏற்கனவே அரசியல் நிருவாகத்தில் உயர் பதவி வகித்து வந்தவர்களை சோழர் கொலை செய்திருக்கலாம். அல்லது கைதிகளாக அவர்களைச் சிறையில் அடைத்திருக்கலாம். இவற்றிலிருந்து தப்பிக் கொண்ட அதிகாரிகள் உருகுணையிலோ மலைநாட்டிலோ மறைந்து வாழந்திருக்கலாம். முதலாம் விஜயபாகு மன்னனின் சிறுபராயம் பற்றிக் கூறும் பனாகடுவ செப்புச் சாசனத்தின் படியும் சோழர்களுக்கு எதிராகக் கிளர்ந்த சிங்களத் தலைவர்கள் பற்றி வம்சக்கதைகளில் கூறப்படும் விபரங்களின் படியும் இந்நிலைமை தெளிவாகத் தெரியவருகின்றது.

சோழராதிக்கம் காரணமாக இவ்வாறு அநுராதபுர இராசதானியின் அரசியல் நிருவாகத்தின் உயர் பீடம் சீர்குலைந்த போதிலும் கிராம மட்ட ஆட்சியில் அது அவ்வளவு பாதிப்பை ஏற்படுத்தியிருக்காது என்று நாம் கருதலாம். நாட்டைக் கைப்பற்றுவதற்கான போரின்போது சோழர்களால் கிராமங்கள் கொள்ளையிடப்பட்டனவாயினும் தமது ஆட்சியை நிலைநாட்டிய பின்னர் அவர்கள் அவ்வாறு நடந்து கொண்டிருக்க மாட்டார்கள் என்பதில் ஐயமில்லை. சோழராதிக்கம் பரவலடைந்தபோது கைப்பற்றிக் கொண்ட பிரதேசங்களிலிருந்து இயன்ற வரை பொருளாதார இலாபமடைதல் அவர்களின் நோக்கமாயிருந்ததையும் அவதானிக்க முடிகின்றது. சோழ நாட்டின் தெற்கே அமைந்திருந்த சேர நாடு, பாண்டிய நாடு, சிங்கள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடு எனும் அரசுகள் மூன்றிலும் சிங்கள நாடு எனும் இலங்கையே செழிப்பான நாடாகத் திகழ்ந்தது. மகாதித்த உள்ளிட்ட இலங்கைத் துறைமுகங்களின் மூலம் கிடைத்த இலாபங்கள் தவிர கிராமங்கள் மூலம் கிடைத்த வருமானங்களும் சோழருக்கு வாய்ப்பானதாக அமைந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. அதனால் கிராம மட்டத்திலான நிருவாகத்தை இயல்பு நிலையில் வைத்திருப்பதற்கு அவர்கள் முயற்சி செய்திருக்கலாம்.

சோழர் ஆட்சிக் காலத்துக்குரிய பல கல்வெட்டுக்கள் கிடைக்கப்பெற்ற போதிலும் அவை உடைந்தும் சிதைந்தும் போயிருப்பதால் அவற்றின் மூலம் பிரயோசனமான தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது. அவற்றுள் ஒன்று சோழப் பேரரசனின் பிரதேச ஆட்சியாளன் ஒருவனால் மாந்தோட்டத்தில் அமைக்கப்பட்ட கோயில் ஒன்றுக்கு ராஜராஜேஸ்வரம் எனப் பெயர் சூடியதாகக் கூறுகின்றது. இதே போன்று கோயில்கள் பற்றிக் கூறும் கல்வெட்டுக்கள் மூலமும் பொலன்னறுவை முதலாம் இலக்க சிவன் கோயில் மூலமும் தெரிய வருவது என்னவெனில், சோழர் பௌத்த சமய தலங்களை அழித்தாலும் இந்நாட்டில் சிவ தேவாலயங்களைக் கட்டுவதில் அதிக ஆர்வம் காட்டியுள்ளனர் என்பதாகும். அப்பணிகளுக்காக அவர்கள் இந்நாட்டு மக்களின் உழைப்பை தமது அதிகாரத்தால் பெற்றிருக்கலாம். மேலும் தமதாட்சிப் பிரதேசத்திலமைந்திருந்த கிராமங்கள் மூலம் பெற்ற வருமானங்களை கோயில்களைக் கட்டுவதற்காகவும் அவற்றின் பரிபாலனத்துக்காகவும் செலவிட்டிருக்கலாம்.

தமது ஆட்சியின் கீழ் வந்த குடியேற்றப் பிரதேசங்களிலிருந்து வருமானத்தைப் பெற்றுக் கொள்வதில் சோழர் கடைப்பிடித்த கொள்கையைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு சோழப் பேரரசின் தலைநகரான தஞ்சாவூர் சிவன் கோயில் சூழலில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டு பெரிதும் உதவுகின்றது. அதன்படி சோழராட்சிக்கு உட்பட்ட அன்னிய நாடுகளிலிருந்து பேரரசுக்குச் செலுத்த வேண்டிய வரிகளின் ஒரு பகுதி தங்கமாக அல்லது பணமாக செலுத்தப்பட வேண்டும் என்பதாகும். ஆயினும் இலங்கையிலிருந்து வரி அறவிடும்போது அதனைப் பொருள்களாகவே பெற்றுக் கொண்டுள்ளதை அறிய முடிகின்றது. மும்முடிச் சோழ மண்டலத்தின் கீழ் வந்த இராஜராஜ வள நாடு மற்றும் விக்கிரம வளநாடு எனும் ஆட்சிப் பிரதேசங்கள் இரண்டின் ஐந்து கிராமங்களின் வருமானம் முழுதும் தஞ்சாவூர் கோயில் பரிபாலனத்துக்கு ஒதுக்கப்பட்டிருந்ததாகவும் அக்கல்வெட்டு கூறுகின்றது. இந்த வருமானங்களுள் நெல், பணம் என்பவற்றுடன் கோயில் விளக்கேற்றுவதற்கான இலுப்பெண்ணெய் என்பன முக்கிய இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுள்ளன. இதன் மூலம் தெரிய வருவது என்னவெனில், சோழப் பேரரசின் உள்நாட்டில் காணப்பட்ட மண்டலங்களைப் போலவே ஈழ மண்டலத்திலும் வளநாடு எனக் கூறப்படுமளவிற்கு பாரிய நிருவாகப் பிரதேசங்கள் நிலவி வந்துள்ளமையாகும். இது தவிர சோழர் இலங்கையில் எவ்வாறான நிருவாக முறையொன்றைக் கடைப்பிடித்தனர் என்பது பற்றி வேறும் தரவுகளை அறிந்து கொள்ள முடியாதுள்ளது.

## பொலன்னறுவை யுகத்தில் நிருவாக முறை

சோழரை முறியடித்து 1070ஆம் ஆண்டு இலங்கைக்கு அரசனான முதலாம் விஜயபாகு மன்னன் தனது தலைநகராக பொலன்னறுவையையே தெரிவு செய்தான். என்றாலும் அவன் அநுராதபுரத்தில் ஒரு மாளிகை அமைத்து அங்கயே தனது முடிசூட்டு விழாவை மேற்கொண்டதிலிருந்து அவன் தனது முன்னோர்களின் தலைநகரான அநுராதபுரத்திலிருந்தே அரச நிருவாகத்தை நடாத்த வேண்டுமென்று விரும்பியமை தெரிய வருகின்றது. விஜயபாகு மன்னன் பற்றிய வம்சக் கதைகளின் கூற்றுப்படி அவன் அநுராதபுரக் காலத்தில் நிலவிய நிருவாக முறையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு திட்டமிட்டு செயற்பட்டுள்ளமை தெரிய வருகின்றது.

அநுராதபுர அரசர்களைப் பின்பற்றி விஜயபாகு மன்னனும் 'சிறிசங்கபோ' எனும் பெயரைப் பயன்படுத்தியுள்ளான். முதன்முறையாக சக்கரவர்த்தி எனும் பட்டப் பெயரைப் பயன்படுத்திய இம்மன்னனைப் பின்பற்றி ஏனைய பொலன்னறுவை மன்னர்களும் தமது பெயருக்கு முன்னால் சக்கரவர்த்தி எனும் பட்டத்தை சேர்த்துக் கொண்டமை அம்மன்னர்களின் ஆவணங்களின் மூலம் தெரிய வருகின்றது. வம்சக் கதைகளும் கூட மகா பராக்கிரமபாகு மன்னனின் பெயருக்கு முன்னால் சக்கரவர்த்தி எனும் பெயரைப் பிரயோகித்துள்ளன. இம்மன்னனின் சில ஆவணங்களிலும் அந்தப் பட்டப் பெயர் பயன்படுத்தப்பட்டுள்ளது. அவனது கல்வெட்டுக்களிலும் அதே பட்டப் பெயர் பயன்படுத்தப்பட்டுள்ளது. முதலாம் விஜயபாகு மன்னனின் ஆட்சி உரிமை சட்டபூர்வமானது எனக் கருதுவதற்குக் காரணமாயமைந்தது அவனது பெற்றோர் இருவரும் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பதுடன் அவன் சூரிய குலத்தைச் சேர்ந்தவன் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டமையுமேயாகும். முன்னரைப் போலவே இக்காலத்திலும் இலங்கை அரசனாக முடி சூடுவதற்கு அரச வம்சத்தைச் சேர்ந்த மனைவி (மகாராணி) இருக்க வேண்டும் என்ற நம்பிக்கை நிலவியுள்ளது.

முதலாம் விஜயபாகு மன்னன் ஏற்படுத்திய நிருவாகக் கட்டமைப்பை சீர்த்தூக்கிப் பார்க்கும்போது அது அநூராதபுர யுகத்தின் இறுதிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலப்பகுதியில் நிலவிய நிருவாகக் கட்டமைப்பை ஒத்ததாக இருக்கும் வகையில் அமைவதற்கு முயற்சித்திருப்பது தெரிய வருகின்றது. ஏனெனில் விஜயபாகு மன்னன் தனது தம்பிமாருள் மூத்தவனான வீரபாகு இளவரசனுக்கு 'உபராஜ' பதவியை வழங்கி தக்கிண தேச நிருவாகியாக அமர்த்தியதுடன் இளையவனான ஜயபாகு இளவரசனுக்கு 'ஆதிபாதன்' பதவியை வழங்கி உருகுணை நிருவாகியாகவும் அமர்த்தினான். இங்கு தெளிவாகத் தெரியும் ஓர் அம்சம் யாதெனில், அரசியல் ரீதியாக தக்கிண தேசம் பெறும் முக்கிய இடமாகும். அநுராதபுரத்தின் இறுதிக் காலப்பகுதியில் அடுத்த ஆட்சியாளனாக அமரவிருக்கும் இளவரசன் 'மாபா' அல்லது 'உபராஜ' பதவியுடன் தக்கிண தேச நிருவாகியாகப் பதவி அமர்த்தப்படும் வழக்கத்தையே விஜயபாகு மன்னனும் பின்பற்றியுள்ளான். அதன்படி விஜயபாகு மன்னனும் தன்னையடுத்து ஆட்சியாளனாக வேண்டிய வீரபாகு இளவரசனை அப் பிரதேச நிருவாகியாக்கியுள்ளான். விஜயபாகு மன்னனின் ஆட்சிக் காலத்திலேயே வீரபாகு இளவரசன் அகால மரணமடையவே வெற்றிடமான அப்பதவிக்கு உருகுணையின் ஆதிபாதனான ஜயபாகுவை நியமித்ததுடன் ஜயபாகுவின் இடத்திற்கு தனது மகனான விக்கிரமபாகுவை மன்னன் பதவியுயர்த்தியதிலிருந்து அநுராதபுரத்தின் வாரிசுரிமை மரபை அவன் பின்பற்றியமை தெளிவாகின்றது. இப்பதவி நியமனங்கள் மூலம் வெளிப்படும் மற்றுமோர் முக்கிய அம்சம் யாதெனில் மூத்த சகோதரனின் மறைவைத் தொடர்ந்து முறைப்படி அடுத்த சகோதரனுக்கும் கடைசிச் சகோதரனின் பின்னர் மூத்த சகோதரனின் (அரசனின்) மூத்த புதல்வனுக்கும் அரச வாரிசுரிமை உரித்தாவது பொலன்னறுவைக் காலத்திலும் நிலவியமையாகும்.

அநுராதபுரத்தின் இறுதிக் காலத்திலே ஆட்சிபீடமேறிய சிரேஷ்டமான மன்னர்களுள் ஒருவனான நாலாம் மகிந்த இலங்கையில் சத்திரிய குலப் பெண்கள் இருந்த போதிலும் கலிங்க தேசத்திலிருந்து ஓர் இளவரசியை வரவழைத்துத் திருமணம் செய்து தனது பட்டத்து இராணிப் பதவியை வழங்கினான் என்று வம்சக் கதைகள் கூறுகின்றன. இதனைப் பின்பற்றிய முதலாம் விஜயபாகு மன்னனும் கலிங்க தேசத்திலிருந்து திரிலோகசுந்தரி எனும் இளவரசியை வரவழைத்துத் தனது பட்டத்து இராணியாக்கிக் கொண்டான். தென்னிந்தியாவில் சோழர் ஆதிக்கம் பலம் வாய்ந்து காணப்பட்ட காலத்திலேயே மேற்படி திருமணங்கள் இரண்டும் நடைபெற்றுள்ளன. சோழ நாட்டுக்கு தெற்கே இருந்த பாண்டியரும், சேரரும் பலவீனமானவர்களாகக் காணப்பட்டனர். எனவே சோழ நாட்டுக்கு வடக்கே இருந்த கலிங்க தேசத்துடன் உறவு வைத்துக் கொள்வதே உசிதமான செயற்பாடாகும் என இவ்விரு மன்னர்களும் கருதியிருக்கலாம். காரணம் எதுவாயிருந்த போதிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்படி திருமண உறவுகள் இரண்டும் இராசரட்டையின் இராசதானிகள் இரண்டினதும் வீழ்ச்சிக்கு பெருமளவு துணை செய்துள்ளன. மேலும் அவ்விரு சந்தர்ப்பங்களிலும் கலிங்க இளவரசியரின் பிள்ளைகள் மக்களின் வெறுப்புக்கு ஆளானது மட்டுமல்ல பொலன்னறுவை இரசதானியைப் பெரும் குழப்ப நிலைக்குத் தள்ளியமைக்கும் கலிங்கத் திருமணத் தொடர்புகள் காரணமாய் அமைந்தமை தெளிவாகத் தெரிகின்றது.

விஜயபாகு மன்னனின் மரணத்தைத் தொடர்ந்து அப்போது உயிருடனிருந்த மன்னனின் ஒரே சகோதரனான ஜயபாகு இளவரசனை ஆட்சி பீடமேற்றியது அரச குடும்பத்தவரும் அமைச்சர்களும் பௌத்த பிக்குகளும் சேர்ந்து எடுத்த மரபு ரீதியான வாரிசுரிமைச் சட்டத்தை சரியாக கையாண்டமையினாலாகும். ஜயபாகு அரசனாக முடி சூடியமையால் வெற்றிடமான தக்கிண தேச நிருவாகியான உபராஜ பதவியானது உருகுணையின் ஆதிபாதன் பதவியை வகித்த விஜயபாகு மன்னனின் சகோதரியான மித்தா இளவரசியின் மூத்த மகன் மானாபரணவுக்கு தக்கிண தேச நிருவாகியான உபராஜ பதவியை வழங்கியமையானது பெரும் அரசியல் குளறுபடிக்குக் காரணமாயமைந்தது. அநுராதபுர யுகத்தின் ஆரம்பத்தில் சத்தாதிஸ்ஸ மன்னனின் மறைவின் பின்னர் லஞ்சதீசன் இளவரசனுக்குப் பதிலாக துலத்தன் இளவரசனை அரசனாக்குவதற்கு பௌத்த பிக்குகளின் அனுமதியுடன் அமைச்சர்கள் மேற்கொண்ட முடிவும் இதே போன்றதொரு குழப்ப நிலைக்கு காரணமாக அமைந்தது.

தனக்கு சேர வேண்டிய மகா ஆதிபாத பதவியை தனது மைந்தனுக்கு வழங்கியமையால் கோபமடைந்த விக்கிரமபாகு இளவரசன் ஜயபாகு மன்னனையும் அவனது ஆதரவாளர்களையும் துரத்திவிட்டு பொலன்னறுவையின் ஆட்சியதிகாரத்தைப் பெற்றுக் கொண்டான். இதிலிருந்து சில வியங்கள் தெளிவாகின்றன. அநுராதபுரத்தின் ஆரம்ப கட்டத்திலிருந்தே அரசப் பதவியைப் பெற்றுக் கொண்ட பின்னர் முடிசூட்டு விழாவுக்கு அனுமதி வழங்குவதற்கு சில பிரிவுகளைக் கொண்டதோர் சபை இருந்ததும் அதில் பௌத்த பிக்குகளின் தலைமை பிக்குவும் உள்ளடங்கி இருந்தது ஒரு விடயமாகும். அடுத்த விடயமாவது மரபுரிமையை அல்லது அங்கீகரிக்கப்பட்ட சட்டத்தை அச் சபையானது மீறிய வேளைகளில் அதற்குத் தமது எதிர்ப்பைக் காட்டுவதற்கு உரிமை மீறப்பட்டவர்களுக்கும் முடியுமாயிருந்துள்ளது. விக்கிரமபாகு இளவரசனுக்கு அச்சபையானது வாரிசுரிமையை மறுப்பதற்கான காரணம் அவன் கலிங்க வம்சத்தைச் சேர்ந்தவன் என்பதனாலாகவும் இருந்திருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் ஏற்பட்ட மற்றுமொரு விடயம் யாதெனில் தாய் வழியாக அரசுரிமையைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு உருவானமையாகும். தென்னிந்தியாவில் காணப்பட்ட இம்மரபை பாண்டிய இளவரசனைத் திருமணம் செய்த இளவரசி மித்தா தனது பிள்ளைகளின் நன்மை கருதி செயற்படுத்தியிருக்கலாம். அல்லது கலிங்க இளவரசியின் வயிற்றில் பிறந்த இளவரசனை விட சிங்கள இளவரசியான தனது வயிற்றில் பிறந்தவனே இலங்கையின் அரசுரிமைக்கு ஏற்றவன் என்று மித்தா கருதியிருக்கலாம். எது எவ்வாறான போதிலும் சட்டபூர்வமான அரசன் ஜயபாகுவின் ஆட்சி வருடமே விக்கிரமபாகுவினதும் அவனையடுத்து பொலன்னறுவை ஆட்சியாளனான இரண்டாம் கஜபாகுவினதும் ஆட்சி வருடங்களாக மூலாதாரங்களில் குறிப்பிடப்படுவதிலிருந்து ஆட்சியைக் கைப்பற்றியவர்கள் சட்டபூர்வமான மன்னர்கள் என்று அவர்களாலே ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை என்பதும் அரசுரிமை பற்றிய சட்டத்தை மீறுபவர்கள் என்னதான் பலசாலிகளாக இருந்த போதிலும் அது அவர்களுக்கு நன்மையாக அமைவதில்லை என்பதும் இங்கு கவனிக்கத் தக்கது. மகாபராக்கிரமபாகு மன்னனின் ஆட்சிக் காலம் உதயமாகும் வரை ஆட்சி செய்த அரசர்களை வம்சக் கதை எழுத்தாளர்களால் 'காமபோஜக' எனும் கிராமத் தலைவர்களுக்கு உவமிக்கப்படுவதிலிருந்து அவர்களின் ஆட்சி கீழான நிலையில் இருந்தது. மாத்திரமல்ல முடிசூடாமல் ஆட்சி செய்வது சமகால சமூகத்தவர்களினாலேயே அவமானத்துக் குரியதாக கருதப்பட்ட காரியமாகவும் திகழ்ந்தது.

விஜயபாகு மன்னனின் நிருவாகக் கட்டமைப்பு முறையின் விளக்கத்தில் முக்கியமான விடயங்கள் சில வெளிப்படுகின்றன. மன்னனை அடுத்து முக்கிய பதவியான யுவராஜா எனும் பதவி 'மகாதிபாத' என்றும் வழங்கப்பட்டது. அதனையடுத்து முக்கியம் வாய்ந்த பதவி 'ஆதிபாத' பதவியாகும். கலா ஓயாவுக்குத் தெற்கே பெந்தர கங்கை வரையும் மத்திய மலை நாட்டின் மேற்குச் சரிவு முதல் கடற்கரை வரையுமான தக்கிண தேசம் மகாதிபாதவின் ரட்ட என்பதனால் மகாதிபாத ரட்ட - மாயாரட்ட என்றானது. அது வம்சக் கதைகளின் சில இடங்களில் யுவராஜனின் ரட்ட - யுவராஜரட்ட என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மகா பராக்கிரமபாகு இலங்கை மன்னனான பின்னர் அப்பிரதேசங்களுக்கு நிர்வாகிகளை நியமிக்காதத்திலிருந்து அப்பிரதேசங்கள் அம்மன்னனின் ஆட்சிக் காலத்தில் தமது சுயாதீனத்தன்மையை இழந்திருக்குமென்று நாம் கருதலாம். உபராஜா என்ற பதவிப் பெயர் இல்லாமலாகி யுவராஜா எனும் பதவிப் பெயர் பாவனைக்கு வந்தமை பொலன்னறுவை யுகத்தில் ஏற்பட்ட மற்றுமொரு மாற்றமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச பதவி பற்றிய கொள்கைகளில் மாற்றமேற்பட்டதை இக்காலத்தில் அவதானிக்க முடிந்தது. சக்கரவர்த்தி எனும் பட்டம் பொலன்னறுவைக் காலத்தில் பயன்படுத்தப்பட்டதாக அறிந்தோம். அத்தோடு 'அரசன் தெய்வமாவான்' அல்லது 'மண்ணில் தெய்வத்தின் அவதாரமே மன்னன்' எனும் கருத்துக்கள் இக்காலத்தில் பிரபல்யமடைந்தன. இது போன்ற கொள்கைகள் மிக நீண்ட காலமாகவே இந்தியாவில் தோன்றி நிலவி வந்தவையாகும். ஆயினும் தேரவாத பௌத்த சமயச் செல்வாக்கு காரணமாக அக்கருத்துக்கள் ஆரம்ப காலத்திலேயே இலங்கையரால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. பொலன்னறுவை யுகத்தில் சமஸ்கிருத மொழி மூலமான இலக்கியங்கள் பெருமளவில் பயிலப்பட்டதாலும் இலங்கை அரச குடும்பங்கள் கலிங்க, பாண்டிய அரச குடும்பங்களுடன் நெருங்கிய உறவு கொண்டமையாலும் இக்கருத்துக்கள் பரவியிருக்கலாம். நிஸ்ஸங்கமல்ல மன்னனின் கல்வெட்டுக்களில் இக்கருத்துக்கள் பிரசித்தி பெற்றுள்ளன. 'மனித உருவத்தில் இருக்கும் மன்னர்கள் மனிதவடிவில் இருந்த போதிலும் மிகவும் பலம் வாய்ந்த தெய்வங்களாவர்' எனும் கருத்து நிஸ்ஸங்க மல்லனின் 'கல் பொத்த' (கற்புத்தகம்) எனும் கல்வெட்டில் இவ்வாறு பொறிக்கப்பட்டுள்ளது. அரசர்கள் மனித உருவிலிருந்தாலும் அவர்கள் நர தேவர்கள் என்றபடியால் தெய்வமாகவே அவர்களைக் கருத வேண்டும்.' ஆயினும் இலங்கை மக்கள் அக்கருத்தை அவ்வாறே ஏற்றுக் கொண்டார்களா என்பது சந்தேகத்துக்கிடமானது. மகா பராக்கிரமபாகு மன்னனின் பின்னர் பொலன்னறுவையில் ஆட்சி பீடமேறிய எந்தவொரு மன்னனும் பத்து வருடங்களுக்கு மேல் ஆட்சி செய்ய வில்லை என்பதிலிருந்து அக் கால அரசியலில் நிலவிய பெருங் குழப்பகரமான நிலைமையை நாம் அறிந்து கொள்ளலாம்.

இலங்கையின் அரசனாகப் பதவியேற்பவன் கட்டாயமாக பௌத்த சமயத்தவனாக இருக்க வேண்டும் என்ற ஆரம்ப அநுராதபுரக் காலக் கருத்து இக்காலத்திலும் அதேபோலத் தொடர்ந்தது. பொலன்னறுவை யுகத்தில் மேற்கொள்ளப்பட்ட கலிங்க பாண்டிய திருமணத் தொடர்புகளால் உருவான கலிங்க, பாண்டிய வம்ச ஆட்சியாளர்களால் கூட அவ்வடிப்படைக் கொள்கையை மீற முடியவில்லை என்பது நிஸ்ஸங்கமல்ல மன்னனின் கல்வெட்டுக்கள் மூலம் தெரிகின்றது. 'அரசனின் தாய், தந்தை இருவருமே அரச வம்சத்தைச் சேர்ந்தவர்களாக இருத்தல் வேண்டும்' என்ற கருத்தும் இலங்கையில் வேரோடி இருந்தது. ஆயினும் சில சேனாதிபதிமார் இம் மரபை மீறி தமது சொந்த விருப்பப்படி வெளிநாட்டவரையும் சிம்மாசனத்தில் ஏற்றியும் இறக்கியும் செயற்பட்டமையை மகா பராக்கிரமபாகு மன்னனின் பின்னரான பொலன்னறுவையில் நாம் காண முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மன்னர்கள் தார்மீகவாதிகளாக இருத்தல் வேண்டும்.' எனும் கருத்தும் இக்கால கட்டத்தில் வேரோடியிருந்தது. 'நாடு செழிப்படைவதும் வீழ்ச்சியடைவதும் மன்னனின் தார்மீக, அதார்மீக செயற்பாடுகளின் அடிப்படையிலேயே அமைகின்றது' எனும் கருத்து பௌத்த இலக்கியங்களில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. பொலன்னறுவைக் காலத்தில் எழுதப்பட்ட அதிகமான இலக்கிய நூல்களிலும் இக்கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது. மன்னன் தார்மீகவாதியாக இருந்தால் மட்டுமே மக்களும் தார்மீகவாதிகளாவர்.' என்றும் 'மன்னன் தார்மீகவாதியானால் நாடு முன்னேற்றம் காணும்' என்றும் இலக்கிய நூல்களிலும் வம்சக் கதைகளிலும் இடைக்கிடை வலியுறுத்தப்பட்டுள்ளதைக் காண முடிகின்றது.

அரச பதவியை ஏற்பவன் சிறந்த கல்வியைப் பெற்றவனாகக் காணப்பட வேண்டும் எனும் கருத்தும் அன்றைய சமூகத்தில் பலமாக நிலவியது. அநுராதபுர யுகத்தில் அரசனாவதற்கு முன்னர் இளவரசர்கள் கல்வி கற்ற பௌத்த பிக்குகளிடம் கல்வியைப் பெற்றுக் கொண்டதுடன் ஏனைய கலைகளை அதற்குரிய குருமாரிடமிருந்தும் பெற்றுக் கொண்டுள்ளமையைப் பல்வேறு உதாரணங்கள் மூலம் காண முடிகின்றது. பொலன்னறுவைக் காலத்திலும் இளவரசர்களின் கல்வியில் காட்டப்பட்ட கரிசணையை மகாபராக்கிரமபாகு இளவரசனின் கல்வி பற்றி வம்சக் கதைகள் கூறுவதிலிருந்து புரிந்து கொள்ள முடியும். நிஸ்ஸங்கமல்ல மன்னனும் தனது கல்வெட்டுக்களில் தனது அரசபதவிக்கான தகுதிகளுள் ஒன்றாகத் தான்பெற்ற கல்வியைப் பற்றியும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளான். முதலாம் விஜயபாகு மன்னனும் சிறப்பான கல்வியைப் பெற்றிருந்ததுடன் சிங்கள மொழியில் மாத்திரமல்லாது பாளி மொழியிலும் பாண்டித்தியம் பெற்றிருந்தான் என்பதற்குச் சான்றுகள் உள்ளன. லீலாவதி இராணியின் ஆட்சிக் காலத்தில் பராக்கிரம எனும் தளபதி மதுரிந்த எனும் இளவரசனை பௌத்த சமயம் மற்றும் கலைகளிலும் தேர்ச்சியுடையவனாக எதிர்கால அரச பதவிக்கான பயிற்சியை வழங்கினான் என்று தாட வம்சம்' கூறுகின்றது.

பௌத்த கொள்கைகளைப் பின்பற்றுவதன் மூலம் தானம், இன்சொல், அர்த்தமுள்ள செயற்பாடு, சமத்துவம், எனும் நாற் பண்புகள் மூலம் நாட்டு மக்களை சந்தோஷப்படுத்தி நாட்டை ஆட்சி செய்வது சிங்கள மன்னர்களின் பரம்பரை வழக்கமாகும். அரசர்கள் தமது ஆட்சிக் கொள்கையை வகுத்தது அந்த அடிப்படையிலே ஆகும் என்பதை அநூராதபுர யுகத்தில் போலவே பொலன்னறுவை யுகத்திலும் இலக்கிய நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிஸ்ஸங்கமல்ல மன்னனின் பல கல்வெட்டுக்களிலும் நாட்டு மக்களை மகிழ்விப்பதற்கு அவனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கப்பட்ட தானங்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன. நாட்டு மக்களின் மனம் மகிழ்ச்சியடையும் விதத்தைப் போலவே தமது பொருளாதார மேம்பாட்டுக்காக மன்னன் தனது சக்தியை பூரணமாகப் பிரயோகித்து செயற்பட வேண்டும் என்பதும் நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகளாகும். மகா பராக்கிரமபாகு மன்னன் தக்கிண தேச ஆட்சியாளனாக இருந்த போதும் முழு நாட்டுக்குமே அரசனான பின்னரும் மக்களின் நல்வாழ்வுக்காக செயற்பட்ட விதம் பற்றி வம்சக் கதைகளில் விரிவாகவும் விளக்கமாகவும் கூறப்பட்டுள்ளது. தேரவாத பௌத்த போதனையின்படி ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்த சமத்துவம் எனும் கொள்கை காரணமாக இந்நாட்டு மன்னர்களின் வாழ்க்கையும் சாதாரண மக்களின் வாழ்க்கைக்கு மிகவும் நெருங்கியதாகவே காணப்பட்டது. 'மன்னன் என்பவன் கடவுளாவான்". அல்லது 'கடவுளின் அவதாரமாவான்' எனும் இந்து சமய இலக்கியங்களில் இடம்பெறும் கொள்கையை முன்வைத்து அதனை உறுதிப்படுத்துவதற்கு நிஸ்ஸங்கமல்ல மன்னன் மேற்கொண்ட முயற்சி அவ்வளவு தூரம் வெற்றி பெறாததிலிருந்தும் மேற்கூறியவாறு இலங்கை மன்னர்களின் இயல்பு நிலை உறுதியாகின்றது. விசேடமாக அரசன் பொது மக்களுடன் சேர்ந்து ஒரே விகாரையில் வணக்க வழிபாடுகளில் ஈடுபடுதல், ஒரே தர்மசாயையில் பொது மக்களுடன் நிலத்தில் அமர்ந்தவாறு தர்மோபதேசங்களுக்கு செவிமடுத்தல் முதலிய அம்சங்கள் காரணமாக மன்னர்களால் மக்களை விட்டுத் தூரமாக முடியாதிருந்தது. அதே போன்று பொது மக்களுடன் சேர்ந்து ஏர்பூட்டு விழாவின்போது அரசனும் வயலில் இறங்கி உழுதல், சமய வழிபாட்டுத் தலங்களை அமைக்கும் போது அரசனும் சிரமதானப் பணிகளில் ஈடுபடுதல், குளங்கள் கட்டும்போது அப்பணிகளில் ஈடுபடுதல் என்பன இந்நாட்டு மன்னர்களின் சமத்துவ செயற்பாட்டுக்கான உதாரணங்கள் ஆகும். நாட்டு மக்களின் ஆதரவு மற்றும் அன்பு, கௌரவம் என்பவற்றைப் பெற்றுக் கொள்ளும் முகமாக குற்றமற்றதும் உன்னதமானதுமான ஒரு வாழ்க்கையை மேற்கொள்வதற்கு மன்னன் கடமைப்பட்டிருந்தான். நல்லதொரு மன்னனிடமிருந்து நாட்டு மக்கள் எதிர்பார்த்தது என்ன என்ற கேள்விக்கு வம்சக் கதைகளில் இடம் பெறும் மகா பராக்கிரமபாகு மன்னனின் கூற்று விடை தருகிறது. அதாவது 'உலக மக்களுக்கு சேவையாற்றாது ராஜபோகத்தை அனுபவித்து வாழ்வது என்னைப் போன்றவர்களுக்கு ஏற்றதல்ல.' என்பதே அக் கூற்றாகும். சிறந்த மன்னன் ஒருவனிடம் காணப்பட வேண்டிய குணவியல்புகள் பலவும் 12ஆம் நூற்றாண்டில் வெளியான 'புத்சரண' எனும் நூலில் எழுதப்பட்டுள்ளது. அதன்படி மது, சூது, முதலிய ஒழுக்கமற்ற செயல்களில் ஈடுபடக் கூடாது என்றும் அவ்வாறான செயற்பாடுகளுக்கு மக்களை ஊக்குவிக்கக் கூடாது என்றும் கூறுகின்றது. மேலும் மிருகவதை மற்றும் பொய் பேசுதல் என்பவற்றையும் மன்னன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிர்த்துக் கொள்ள வேண்டும். வயலைப் பாதுகாக்கும் விவசாயி போல மன்னன் மக்களைப் பாதுகாக்க வேண்டும். இரகசியமாகவேனும் அவர்களின் அழிவுக்காக மன்னன் செயற்படக் கூடாது என்றும் அந்நூல் கூறுகின்றது. இதுவே நல்லதொரு அரசாங்கத்தின் அடிப்படையாகக் கருதப்பட்டது. ஆட்சியாளன் ஒழுக்க சீலத்தைப் பாதுகாப்பதுடன் நாட்டையும் செழிப்படையச் செய்தல் வேண்டும். பொலன்னறுவைக் காலத்துக்குரிய கல்வெட்டுக்கள் பலவற்றிலும் இக்கருத்தைக் காண முடிகின்றது. அரசன் அரச பதவி எனும் ஏட்டினை மிகவும் கவனமாகத் தன்னிரு கைகளிலும் ஏந்தியிருக்கும் விதத்திலான ஒரு சிலையே பொலன்னறுவை பொத்குல் விகாரையில் சித்தரிக்கப்பட்டுள்ளதாக பேராசிரியர் பரணவிதான கூறுகின்றார்.

பொலன்னறுவை யுகம் சமஸ்கிருத இலக்கியங்களைப் பயில்வதில் புகழடைந்த யுகமாகும். இதனாலேயே வீட்டுச் சூழல் பற்றிய பழக்க வழக்கங்கள் பற்றி எழுதப்பட்ட 'மனை சூத்திரம்' எனப்படும் சமஸ்கிருத நூலில் இடம்பெறும் பிராமணரின் பழக்க வழக்கங்கள் பற்றிய தகவல்கள் வம்சக் கதைகளிலும் இடம் பெற்றுள்ளன. உதாரணமாகக் கூறுவதாயின் பராக்கிரமபாகு மன்னனின் சிறு பராயத்துக்குரிய பெயர் சூட்டுதல், முதல் உணவூட்டுதல், ஏடு துவக்குதல் எனும் சம்பிரதாயங்கள் பற்றி வம்சக் கதைகள் கூறும் விபரங்கள் அவ்வாறானவையே. பராக்கிரமபாகு இளவரசனின் தாயான ரத்னாவலி கர்ப்பிணியாக இருக்கும்போது பௌத்த பிக்குகளைக் கொண்டு பிரித் ஓதப்பட்டதாகவும் வம்சக் கதைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. இதன்படி ஓரளவுக்கு பிராமணரின் இந்து சமய மரபுகளும் அதிகளவில் பௌத்த மரபுகளும் கலந்ததொரு சமூகமாக பொலன்னறுவை சமூகம் காணப்பட்டது என நாம் கருதலாம்.

அரச நிருவாக நடவடிக்கைகளில் அரசனே பிரதான இடம் வகித்து செயற்பட்டமையே இந்த யுகத்திலும் சாதாரணமானதாகக் காணப்பட்டது. அரசனுக்கு நாட்டு நிலைமைகளைப் பற்றிய தரவுகளை வழங்குவதற்கு 'சரபுருஷ' எனும் உளவு சேவை இருந்தது. பராக்கிரமபாகு இளவரசன் இராசரட்டைக்குச் சென்று கஜபாகு மன்னனின் மாளிகையில் வாழ்கின்ற காலத்திலேயே இராசரட்டையின் அரசியல் தரவுகளை அறிந்து கொள்வதற்காக ஒழுங்குபடுத்தப்பட்டதோர் உளவு சேவையை நடத்தியதாக வம்சக் கதைகளில் கூறப்பட்டுள்ளன. பராக்கிரமபாகு இளவரசன் கௌடில்யரின் 'அர்த்த சாஸ்திரம்' எனும் நூலைப் படித்ததாக வம்சக் கதைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே மேற்கூறப்பட்ட உளவு சேவை அர்த்த சாஸ்திரத்தின் அடிப்படையில் ஒழுங்கமைக்கப் பட்டிருக்கலாம். சுவ மண்டலம் (தனது அரசு), பரமண்டலம் (அன்னிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசு) சாரசக்சுயின் (சரபுருஷ சேவை எனும் கண்களால்) நிதமும் அவதானித்தாக நிஸ்ஸங்கமல்ல மன்னன் தனது கல்வெட்டுக்களில் தொடர்ந்தும் குறிப்பிட்டு வந்துள்ளான். பராக்கிரமபாகு இளவரசனும் மாறுவேடம் பூண்டு இராசரட்டையின் தரவுகளை சேகரித்ததாகவும் வம்சக் கதைகள் கூறுகின்றன. நிஸ்ஸங்கமல்ல மன்னனின் கல்வெட்டுக்கள் நாடெங்கிலும் பரவலாகக் காணப்படுவதன் மூலமும் அவற்றில் அடங்கியுள்ள செய்திகள் மூலமும் அரசன் தானே நேரடியாக நாடெங்கும் சென்று மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் கருத்துக்களையும் அறிந்து கொண்டுள்ளான் என்பது தெரிய வருகின்றது. அவ்வாறு விஜயம் மேற்கொண்ட பிரதேச மக்களுக்கு மன்னன் வரிச்சலுகை வழங்கியுள்ளதுடன் பரிசுகளையும் வழங்கும் நடைமுறையை நிஸ்ஸங்கமல்லனின் துலாபார தானம் பற்றிய விபரங்கள் வெளிப்படுத்துகின்றன.

போர்ப் படைகளை இயக்கும்போது அரசனே தலைமை வகிக்கும் வழக்கம் அநுராதபுர யுகத்தில் காணப்பட்ட போதிலும் பொலன்னறுவை யுகத்தில் அந்நடைமுறை ஓரளவுக்கு மாறியுள்ளமை புலனாகின்றது. விஜயபாகு மன்னன் சோழர்களுக்கு எதிராக ஒரு படையணிக்குத் தலைமை தாங்கிய போதிலும் அந்த யுத்தத்தின் வெற்றிக்கு முக்கிய பங்காற்றியவர்கள் அவனின் படைத் தளபதிகளாவர். இலங்கையின் அரசனான பின்னர் ஏற்பட்ட கிளர்ச்சியை அடக்குவதற்கும் சோழப் பேரரசனுக்கு சவால் விடுத்த வேளையிலும் அவன் படைத் தலைமைத்துவத்தை தானே ஏற்றுக் கொண்டான்.

விஜயபாகு மன்னனின் மகனான விக்கிரமபாகு இளவரசனும் அவனது எதிரிகளான மானாபரண, கீர்த்தி சிறிமேக, சிறிவல்லபன் என்பவர்களுக்குமிடையிலான யுத்தங்களின்போது சுய விருப்பின் பேரில் படைத் தலைமைத்துவத்தை ஏற்றுள்ளான். பராக்கிரமபாகு இளவரசனும் தனது தலைமைத்துவத்தின் கீழ் படையினரைப் பல போர்களிலும் வழி நடத்தியுள்ளான். ஆயினும் அவன் அரசனான பின்னர் தேசிய மட்டப் போர்களின்போது அவனது சேனாதிபதிகளே படைகளுக்குத் தலைமைத்துவம் வழங்கியுள்ளனர். போர் உத்திகள், யுத்த தந்திரங்கள் பற்றி அறிந்திருந்த பராக்கிரமபாகு மன்னன் தனது ஆட்சித் தலைமையகத்திலிருந்து கொண்டே போர்ப் படையினரை வழி நடத்தியதாக வம்சக் கதைகள் கூறுகின்றன. நீண்ட காலமாக இடம் பெற்று வந்த தென்னிந்திய யுத்தங்களை பராக்கிரமபாகு மன்னனின் சேனாதிபதிகளே நடாத்தி வந்துள்ளனர். இம்மன்னனின் உள்நாட்டு யுத்தங்கள் மற்றும் தென்னிந்திய, பர்மிய வெளி நாட்டு யுத்தங்களின்போது திறமை வாய்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேனாதிபதிகள் பலர் உருவானதுடன் அவர்கள் மக்களின் கௌரவத்துக்கும் ஆளானதாக வம்சக் கதைகளும் மற்றும் இலக்கிய நூல்களும் பறைசாற்றுகின்றன. அவர்களுள் சிலர் மன்னனின் மறைவின் பின்னர் அரசியல் களத்திலும் முன்னின்று செயற்பட்டுள்ளனர்.

மன்னனின் தனிப்பட்ட பாதுகாப்புக்கு வேண்டிய பரிவாரத்துக்குரிய வீரர்களைத் தேர்ந்தெடுக்கும்போது மிகவும் அவதானமாக செயற் பட்டுள்ளனர். விஜயபாகு மன்னன் தாழ் குலத்தில் இருந்து தெரிவு செய்தவர்களைத் தனது பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தியதாகவும் அவர்களின் பிள்ளைகள் பேரப்பிள்ளைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பராக்கிரமபாகு மன்னன் பல கலைகளிலும் தேர்ச்சியளித்து தனது பரிவாரப் படையில் சேர்த்துக் கொண்டதாகவும் வம்சக் கதைகள் கூறுகின்றன. நெருக்கமானவர்கள் எனக் குறிப்பிடப்படும் இப்படையினருக்கு வெளிநாட்டு மொழிகளிலும் தேர்ச்சி பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. காலடியிலிருக்கும் குழந்தைகள் அல்லது காலடி அதிகாரிகள் எனச் சமகால இலக்கிய நூல்களிலும் கல்வெட்டுக்களிலும் குறிப்பிடப்படுபவர்கள் இவ்வாறு மன்னனுடன் மிக நெருக்கமாக செயற்பட்ட பாதுகாப்புச் சேகவகர்களாவர்.

அநுராதபுர யுகத்தின் இறுதிப் பகுதியில் அரச மாளிகையில் மன்னனின் தனிப்பட்ட பாதுகாப்புக் கருதி பணியிலமர்த்தப்பட்ட 'அகம்படி' படையினரை ஒத்ததாக விஜயபாகு மன்னனும் தமிழர்களான 'வேளைக்காரர்' அல்லது வேளாளப் படையிரை தனது மெய்ப்பாதுகாவலர்களாக சேவையில் ஈடுபடுத்தியிருந்தான். ஆயினும் மன்னன் சோழர்களுக்கு எதிரான யுத்தமொன்றுக்கு ஆயத்தமான வேளை அதனை எதிர்த்து வேளைக்காரப் படையினர் கிளர்ச்சி செய்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. விஜயபாகு மன்னனின் மகனான விக்கிரமபாகு இளவரசன் இவ்வேளைக்காரப் படையினரின் உதவியுடனே தனது உறவினர்களை எதிர்த்துப் போரிட்டுள்ளான். விஜயபாகு மன்னனின் பின்னர் நாட்டில் குழப்பகரமான நிலைமை ஏற்பட்ட போது வட பகுதிக்குப் பொறுப்பான தலைமைப் பிக்குவான முகலன் தேரரின் வேண்டுகோளுக்கிணங்க தலதா மாளிகையையும் அதற்குரிய சொத்துக்களையும் உயிரைப் பணயம் வைத்துப் பாதுகாப்பதாக சத்தியம் செய்ததாக 'வேளைக்காரன் பட்டயம்' எனும் கல்வெட்டு கூறுகின்றது. ஆயினும் பராக்கிரமபாகு இலங்கை மன்னனான கால கட்டத்தில் வேளைக்காரன் படை பற்றிய எந்தவொரு தகவலும் கிடைக்கப்பெறவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னனுக்கு மிக நெருக்கமான ஆலோசனை சபையாக அமைந்தது அரசவையாகும். பொலன்னறுவை யுகத்தின் கல்வெட்டுகளில் 'ரஜகன', 'அமதிகன' எனும் பதங்கள் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது இந்த அரச சபை என நாம் கருதலாம். இச்சபையானது சட்ட ரீதியிலும் ஒழுங்கமைப்பிலும் முறைப்படி கட்டியமைக்கப்பட்டதாகும். முதலாம் விஜயபாகு மன்னனின் 'பனாகடுவ செப்பு சாசனம்' இவ்வாறு கூறுகின்றது, தனக்கும் தனது குடும்பத்துக்கும் பெரிதும் துணையாயிருந்த புதல்வனாவுக்கு ஏபா, மாபா மற்றும் ரஜகன முன்னிலையிலேயே வரப்பிரசாதங்கள் வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ரஜகன (அமைச்சரவை) வில் அரச குடும்பத்தவர்கள் மட்டுமல்ல பிரதானமாக அமைச்சர்களும் உள்ளடங்குவர். முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் பற்றிய அரச கட்டளையானது அரச சபையிலேயே பிறப்பிக்கப்பட்டது.

விஜயபாகு மன்னனின் மரணத்தின் பின்னர் மகாதிபாதன் அல்லது யுவராஜா பதவி பற்றி மேற்படி அரசவை மேற்கொண்ட தீர்மானத்தை மன்னனின் மகன் விக்கிரமபாகு ஏற்றுக்கொள்ளாத காரணத்தால் ஏற்பட்ட கருத்து முரண்பாடு அரை நூற்றாண்டாக இடம்பெற்ற உள்நாட்டுக் குழப்பத்துக்குக் காரணமாயமைந்தது. இரண்டாம் கஜபாகு மன்னனின் கல்வெட்டிலும் அரசவை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. நிஸ்ஸங்கமல்ல மன்னனின் தொரட்டியாவ சாசனம்' கூறுவதன்படி அரண்மனை அமைத்த அமைச்சருக்கான பரிசில்கள் வழங்கப்பட்டது அமைச்சர்கள் புடை சூழ்ந்த அத்தாணி மண்டபத்திலிருந்தாகும். பட்டத்து இராணியர் இருவர், யுவராஜா பதவி வகித்தத மாபா, சேனாதிபதி, அதிகாரம் எனும் பிரதானிகள் மூவர் மற்றும் சபாபதினா எனும் தலைமை நீதிபதி என்போர் அரசவையில் இடம் பெற்றனர். சில வேளைகளில் அரசவை உறுப்பினர் எண்ணிக்கையில் மாற்றங்கள் ஏற்பட்ட போதிலும் அரச நிர்வாகத்தில் முக்கியமான தீர்மானங்களை மேற்கொள்வதில் இந்த ராஜ சபையானது மிகவும் முக்கியத்துவம் பெற்றுள்ளதென நாம் கருதலாம். இப்போது 'ராஜசபா மண்டபம்' எனப்படும் நிஸ்ஸங்கமல்ல மன்னனின் அரசவை கூடும் கட்டடத்தின் கற்றூண்களில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுக்களில் பொலன்னறுவை அரசவை கூடிய முறையும் அதில் பங்குபற்றிய அதிகாரிகள் மற்றும் பரிவாரங்கள் பற்றியும் அதிகளவிலான தரவுகள் கிடைக்கின்றன. இந்தக் கற்றூண்களில் பொறிக்கப்பட்டுள்ள எல்லாப் பெயர்களும் அரசவையின் உறுப்பினர்களின் பெயர்கள் என நாம் பிழையாக விளங்கிக் கொள்ளக் கூடாது.

மாபா, ஏபா, தளபதி மற்றும் பிரதானிகள் என்போர் கட்டாயமாக அரசவை உறுப்பினர்களாவர். புத்தகம் எழுதுவோர், அகம்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படையினருக்குப் பொறுப்பான சபை, உளவுச் சேவையினர் என்போர். அரசவை கூடும்போது அறிக்கை எழுதுதல், பாதுகாப்பு வழங்குதல், அரச துறைகள் பற்றிய தரவுகளை வழங்குதல் எனும் காரியங்களுக்காக தேவைக்கேற்ப அழைக்கப்படுவர். 14ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட 'நிகாய சங்கிரஹய' எனும் நூலில் பராக்கிரமபாகு மன்னனால் பதவி வழங்கப்பட்ட அரச அதிகாரிகளின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவ்வாறான பதவிப் பெயர்கள் வருமாறு, அதிகார, செனவிரத், ஏபா, மாபா, மஹலேனா, மஹரட்டினா, அநுனா, சபாபதினா, சிட்டுனா, சிரித்லேனா, துலேனா, வியன்னா, மஹவெதனா, மஹநெகதினா, தஹம் பசக்னா என்பனவாகும். இப் பதவிகளைப் பெற்ற அனைவரும் அரச சபை அங்கத்தவர்கள் எனக் கருத முடியாது. அரசனை அடுத்து வர வேண்டிய மாபா, ஏபா எனும் பதவிகளை அதிகார, செனவிரத் எனும் பதவிகளுக்குப் பின்னால் குறிப்பிடுவதிலிருந்து 'நிகாய சங்கிரஹய' அப்பதவிப் பெயர்களை அரசசபைக்கு உரிய ஒழுங்கு முறையில் குறிப்பிடவில்லை என்பது புலனாகிறது.

இந்தப் பதவிப் பெயர்ப்பட்டியலில் இடம் பெறும் 'அதிகார' எனும் பதவி கண்டி இராச்சியத்தில் இடம்பெற்ற 'மகாதிகாரம்' எனும் பதவிக்கு சமனானது சில வேளைகளில் இன்றைய அமைச்சர் பதவிக்கு நிகரானதாகவும் இருந்திருக்கலாம். 'செனவிரத்' என்பது சேனாதிபதிகள் சபையின் தலைமைப் பதவியாக இருக்கலாம். 'ஏபா' என்பது சிறு பிரதேசம் ஒன்றுக்குப் பொறுப்பான இளவரசனாகும். அவனிலும் உயர்ந்த இளவரசன் 'மாபா' பதவியை வகிப்பான். அதாவது மாபா என்பவன் 'முடிக்குரிய இளவரசன்' எனும் கருத்தையும் தருகின்றது. முதலாம் பராக்கிரமபாகு மன்னன் பதவியேற்ற பின்னர் ஏபா, மாபா பதவிகளுக்கு யார், யாரை நியமித்தான் என்பது பற்றி வம்சக் கதைகளில் எதுவும் இடம்பெறவில்லை. எனவே பலம் வாய்ந்த மத்திய அரசு ஒன்றின் மூலம் பராக்கிரமபாகு நாட்டை நிர்வகித்துள்ளான் என்று வரலாற்றியலாளர்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

'மஹலேனா' அரச நடவடிக்கைகள் தொடர்பான செயலாளர் ஆவார். 'மஹரட்டினா' ரட்ட எனப்படும் சிறிய நிருவாக அலகுக்குப் பொறுப்பான அதிகாரி என நாம் கருதலாம். அநுராதபுர யுக கல்வெட்டில். ரட்டிய, ரட்டிக, ரட்டலத்தன எனும் பெயர்களால் அப்பதவி குறிப்பிடப்பட்டுள்ளது. 'அனுனா' என்பது சேனாதிபதியின் அடுத்த நிலைப் பதவி என பேராசிரியர் பரணவிதான கருதினாலும் அது சந்தேகத்துக்கிடமானது. சில வேளைகளில் மஹரட்டினாவுக்கு உதவியாளராகக் கடமை வகித்தவரின் பதவிப் பெயரே 'அனுனா' வாக இருக்கலாம் என நாம் கருதலாம். 'சபாபதினா' என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடரட்டியாவ சாசனத்திலும் அவ்வாறே குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது தலைமை நீதிபதிப் பதவியாகும். 'சிட்டுனா' என்பது வர்த்தக நிலையங்களுக்குப் பொறுப்பான அமைச்சரின் பதவியாக இருக்கலாம். சிரித் லேனா' என்பது சட்டம் தொடர்பான அமைச்சரவைக்குப் பொறுப்பான உத்தியோகத்தின் பதவியாகும். ஏனெனில் 'சட்டம்' எனும் பதம் கல்வெட்டுக்களில் 'சிரித்' எனவும் வம்சக் கதைகளில் 'சாரித்த' எனவும் குறிப்பிடப்பட்டுள்ளன. லேனா என்பது தூதுக் குழுவின் தலைவர் அல்லது வெளிநாட்டுத் தூதுவராலயத்தின் தலைவர் எனக் கருதலாம். வியன்னா என்பது பண்டிதர்களின் தலைமைப் பதவி என பரண விதான கருதுகின்றார். அதற்கு அவர் காட்டும் காரணம் முதலாம் பராக்கிரமபாகு மன்னனின் ஆட்சிக்கால நிறுவனங்களுள் ஒன்றாக 'வியன்பத் அட்ட கணய' காணப்பட்டமையாலாகும். ஆயினும் அது அக்காலத்தின் பௌத்த பிக்குமார் சமூகத்தின் கல்வி நிறுவனங்கள் எட்டாகும் என பொலன்னறுவை மற்றும் அதற்குப் பின்னரான கால மூலாதாரங்கள் மூலம் அறிய முடிகின்றது. எனவே அப்பதவிப் பெயர்ப்பட்டியலில் இடம்பெறும் 'வியன்னா' என்பது அந்த எட்டுக் கல்வி நிலையங்களினதும் செயற்பாடு தொடர்பான நிறுவனத்தின் தலைமைப்பதவி எனக் கருதுவதே பொறுத்தமானதாகும். அரசவை வைத்தியர்களின் தலைமை வைத்தியரே 'மஹ வெதனா' ஆவார். பொலன்னறுவை யுகத்திற்குரிய மருத்துவ நிலையமொன்று அண்மைக் கால தொல்பொருள் ஆய்வுகளின்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சிறப்பான வைத்தியத்துறை நாட்டில் நிலவியுள்ளது என்பதை நாமறியலாம். 'மஹநெகதினா' என்பவர் சோதிடர்கள் மற்றும் சுப நேரம் கணிப்பாளர்களின் தலைவர் என்றும் அவராலேயே ஆண்டுக்குரிய பஞ்சாங்கம் தயாரிக்கப்பட்டது என்றும் பேராசிரியர் பரணவிதான கூறுகின்றார். வம்சக் கதைகளில் 'சங்வத்சர நாயக' எனும் பெயரால் குறிப்பிப்பிடப்படுவதும் இப்பதவியே ஆகும். அவரே அரச மாளிகையின் அனைத்து நடவடிக்கைகளின் பொருட்டும் சுப நேரங்களைக் கணித்துள்ளார் என்றும் நாம் கருதலாம். 'தஹம் பசக்னா' என்பதற்கு இரு அர்த்தங்கள் தரப்படுகின்றன. ஒன்று நீதிமன்ற நிர்வாக நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான அதிகாரி என்பதாகும். அடுத்தது மன்னனின் புண்ணிய, தர்ம காரியங்களுக்குப் பொறுப்பான அதிகாரி என்பதாகும். தம்பதெனிய யுகத்திலும் அரசனின் சமய அலுவல்கள் தொடர்பாக ஓர் அதிகாரி நியமிக்கப்பட்டிருந்தார் என்பதிலிருந்து சிங்கள மன்னர்கள் தமது சமய சடங்கு நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தும் முகமாக ஆரம்பக் காலந்தொட்டே அலுவலர் ஒருவரை நியமனம் செய்திருந்தனர் என்பது தெரிய வருகின்றது. இதன்படி 'தஹம் பசக்னா' எனும் பதவி அவ்வாறான அலுவலரையே குறிக்கின்றது என்று கருதுவதே பொருத்தமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நிகாய சங்கிரஹய ' மற்றும் வம்சக் கதை நூல்களில் குறிப்பிடப்படும் பராக்கிரமபாகு மன்னனின் அதிகாரிகள் பற்றிய விபரங்களும் கல்வெட்டுக்களில் கூறப்பட்டுள்ள நிஸ்ஸங்கமல்ல மற்றும் பொலன்னறுவை மன்னர்களின் அலுவலரின் பதவிப் பெயர்கள் பற்றிய விபரங்களும் பொலன்னறுவை யுகத்தில் அரச உயர் பதவி வகித்தவர்களின் பதவிப் பெயர்கள் பற்றிய ஓரளவு சரியான தெளிவைத் தருகின்றன. இந்தப் பதவிப் பெயர்களுடன் நிஸ்ஸங்கமல்ல மன்னனின் 'ராஜசபை' கல் தூண்களில் காணப்படும் குறிப்புகளையும் சேர்த்துப் பார்க்கும்போது அரசனின் தலைமையிலான அரசவை ஒன்று கூடிய விதம், அங்கு ஒவ்வோர் அதிகாரிகளுக்கும் ஆசனங்கள் ஒதுக்கியிருந்த விதம் என்பன பற்றி நாம் அறிந்து கொள்ளலாம்.

மகா விஜயபாகு மன்னன் சோழர்களைத் தோற்கடித்து இலங்கையை ஒன்றுபடுத்திய பின்னர் கவனம் செலுத்திய விடயங்களில் முக்கியமானது அநுராதபுரத்தில் நிலவிய ஆட்சிமுறையை மீண்டும் நடைமுறைப்படுத்துவதாகும். ஆட்சி முறைக்கான வியூகத்தை அமைக்கும் போது விஜயபாகு அதற்கான முயற்சிகளை மேற்கொண்டதை நாம் ஏற்கனவே அறிந்தோம். மத்திய ஆட்சியினதும் பிரதேச ஆட்சியினதும் கீழ்மட்டம் வரையிலான அனைத்துப் பதவிகள் வம்சக் கதைகளில் குறிப்பிடப்படாத போதிலும் பொலன்னறுவை யுக மன்னர்களின் கல்வெட்டுக்களை ஆராயும்போது அது பற்றிப் பூரண விளக்கம் ஒன்றைப் பெற்றுக் கொள்ள முடிகிறது. விஜயபாகு மன்னனின் மறைவைத் தொடர்ந்து ஐம்பது ஆண்டு காலத்தில் நிலவிய உள்நாட்டு யுத்த நிலை காரணமாக அவ்வாட்சி முறை இல்லாமற் போனது. மேலும் நிருவாக முறை சீர் குழைந்த கால ஆட்சியாளர்களை வம்சக் கதையாளர்கள் கிராமத் தலைவர்களுக்கு ஒப்பிடுகின்றனர். பராக்கிரமபாகு மன்னன் மாயாரட்டையின் அல்லது தக்கிண தேச ஆட்சியாளனாக இருந்த போதே ஆட்சி நிர்வாக நடவடிக்கை பற்றி அக்கறை எடுத்தான். அது பற்றிய பல விபரங்கள் வம்சக் கதைகளில் காணப்படுகின்றன. இந்த விபரங்களையும் பொலன்னறுவைக் கால கல்வெட்டுக்களையும் பயன்படுத்தி அரச நிருவாக நடவடிக்கைகளில் ஈடுபட்ட பல்வேறு தராதரங்களைச் சேர்ந்த அரச அலுவலர்களைப் பற்றிய விபரங்களையும் நாம் பெற்றுக் கொள்ளக் கூடியதாயிருக்கிறது.

அநுராதபுர யுகத்தில் நிலவிய நிருவாக முறையை மீண்டும் கட்டியெழுப்புவதன் பிரதிபலனாய் அமைந்தது அக்காலத்தில் காணப்பட்ட அரச பதவிகளை இக்காலத்திலும் காணக்கூடியதாக இருந்தமையாகும். அநுராதபுர யுகத்தின் இறுதிக் கால கல்வெட்டுக்களில் காணப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரக்ஸமண, தெமள அதிகாரி, தண்டநாயக முதலிய பதவிகளை பொலன்னறுவை யுகத்துக்குரிய கல்வெட்டுக்களிலும் வம்சக்கதைகளிலும் காண முடிகின்றமை அதற்குச் சிறந்த சான்றாகும். ஐத்தகாஹக, அசிக்காஹக எனும் பதவிகளும் இக்கால கட்டத்தில் காணப்பட்ட போதிலும் அநுராதபுர யுகத்தில் காணப்பட்ட அளவிற்கு அப்பதவிகள் பலம் பொருந்தியதாகக் காணப்பட்டமைக்கான சான்றுகள் இல்லை. முதலாம் பராக்கிரமபாகு மன்னனின் நிர்வாக ஒழுங்கமைப்பு பற்றிய தகவல்களில் சங்க நாயக, கேசதாது நாயக எனும் இரு பதவிகளைக் காண முடிகின்றது. முதலாம் விஜயபாகு மன்னனின் ஆட்சிக்கு எதிராகக் கிளர்ச்சி செய்த மூன்று சகோதரர்களில் ஒருவனுக்கு கேசதாது நாயக எனும் பதவி வழங்கப்பட்டதிலிருந்து இப்பதவியை வகித்தவர் ஓரளவு படைபலம் பொருந்தியவராகத் திகழ்ந்தமை தெரிய வருகின்றது. பாண்டாகாரதிகாரி அல்லது 'பண்டார பொத்தகி' எனும் பெயர்களால் வம்சக் கதைகளில் குறிப்பிடப்படும் பதவி 'பண்டார பொதுன்' எனும் பெயரால் கல்வெட்டுக்களில் காணப்படும் பதவியாக இருக்கலாம். திறைசேரிக்குப் பொறுப்பான பதவிகளாக அவை இருந்திருக்கலாம். 'கம்மநாத' (கைத்தொழில் துறை தலைவர்) 'கஞ்சுகி நாயக' (அரசனின் ஆடைகளுக்குப் பொறுப்பான அதிகாரி) எனும் அதிகாரிகள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளன. 'ஜீவித பொத்த' என்பவர் அரச சேவைகளுக்காக வழங்கப்பட்ட காணிகளுக்குரிய ஆவணங்களுக்குப் பொறுப்பான அதிகாரியாவார் என பேராசிரியர் பரண விதான நம்பிக்கை தெரிவிக்கிறார்.

'தம்மகேஹநாத' எனும் ஒரு புதிய பதவி பற்றியும் வம்சக் கதைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. அது 'தம்மாகார', 'தம்ம மந்திர' எனும் பெயர்களால் அழைக்கப்படும் அரசனின் தர்ம சாஸ்திர நூலகத்துக்குப் பொறுப்பான பதவியாக இருந்திருக்கலாம். முதலாம் விஜயபாகு மன்னன் இந்த தம்மமந்திர எனும் கட்டடத்திலிருந்து நூல்களை எழுதினான் என வம்சக் கதைகளில் குறிப்பிடப்பட்டிருப்பதால் மேற்படி தீர்மானம் சரியானதாகும். 'அரக்மேனா' என்பது அநுராதபுரத்தின் இறுதிப் பகுதியிலும் பொலன்னறுவை யுகத்திலும் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு பதவிப் பெயராகும். 'அரக்மேனா' எனும் பதத்தை விரிவுபடுத்தினால் ஏதோவோர் பாதுகாப்பு நடவடிக்கைக்குத் தலைமைத்துவம் கொடுத்த பதவி என்பது புலனாகிறது. கல்வெட்டுக்களில் போன்றே 'மகா போதி வம்சம்' எனும் நூலிலும் பாதுகாப்பு நடவடிக்கைகளுடன் சேர்த்தே இப்பதவி பற்றிக் குறிப்பிடப்பட்டிருப்பதால் மகாபோதி எனும் புனித அரச மரத்துக்குப் பொறுப்பான பாதுகாப்பு அதிகாரியின் பதவியாக 'அரக்மேனா' பதவியை நாம் இனங்காணலாம். அது மத்திய கால இலங்கையின் மிக முக்கியத்துவம் வாய்ந்த பதவியாகக் காணப்பட்டது. சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலாதாரங்களில் இப்பதவியானது 'அரக்ஸமண' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எழுதுவினைஞர்கள் 'லெய்தரு' எனும் பெயரால் குறிப்பிடப்பட்டுள்ளனர். பொலன்னறுவை யுகத்தில் அரச அலுவல்கள் யாவும் சிங்கள மொழி மூலமே நிறைவேற்றப்பட்டுள்ளன. ஆயினும் தமிழர்கள் அதிகமாக வாழ்ந்த பிரதேசங்களில் அவர்கள் சம்பந்தமான அரச கட்டளைகள் வெளியிடப்பட்ட ஆவணங்களில் தமிழ் மொழியும் பயன்படுத்தப்பட்டுள்ளதை முதலாம் விஜயபாகு மன்னனின் காலத்துக்கு சற்று பின்னர் எழுதப்பட்ட 'வேளைக்காரன் பட்டயம்' எனும் சுவர்க் கல்வெட்டும் இரண்டாம் கஜபாகுவின் காலத்துக்குரிய 'புதுமுத்தாவ' குகைக்கல்வெட்டும் பராக்கிரமபாகுவின் காலத்துக்குரிய நயினாத் தீவுக் கல்வெட்டும் பறைசாற்றுகின்றன.

நாட்டில் காணப்பட்ட வளங்களிலிருந்து பூரணமான பயனைப் பெற்றுக் கொள்வதற்கு முயற்சி செய்த காலகட்டமாக நாம் பொலன்னறுவை பராக்கிரமபாகுவின் ஆட்சிக் காலத்தைக் குறிப்பிடலாம். இம்மன்னன் மாயா ரட்டையின் அல்லது தக்கிண தேச ஆட்சியாளனாக இருந்தபோது மேற்கொண்ட பொருளாதார நடவடிக்கைகள் பற்றி வம்சக் கதைகளில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. பொலன்னறுவைக் காலத்தில் பொருளாதாரம், படைபலம் இரண்டிலும் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இவ்விரு அம்சங்களையும் ஒழுங்குபடுத்தல் மற்றும் நிருவகித்தல் என்பவற்றுக்குப் பொறுப்பான அமைச்சர்கள் இருவரும் முதலமைச்சர்கள் அல்லது பிரதான அமைச்சர்கள் எனப்பட்டனர். இவை தவிர 'கணகாமச்ச' எனும் அமைச்சர் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. முதலாம் பராக்கிரமபாகு தக்கிண தேச ஆட்சியாளனாக இருந்த காலத்தில் சிவனொளிபாத மலை முதல் மேற்குக் கடற்கரை வரையிலான பிரதேசத்தில் மண்ணுக்குள் மறைந்துள்ள செல்வங்களுக்குப் பொறுப்பாக 'அந்தரங்கதூர' எனும் பதவி உருவாக்கப்பட்டதாகவும் வம்சக் கதைகள் கூறுகின்றன. இதன்படி கடலில் கிடைத்த முத்துக்கள் நாட்டினுள் கிடைத்த இரத்தினம் மற்றும் யானை, யானைத் தந்தம் எனும் செல்வங்களைப் பெற்றுக் கொள்வதற்குப் பொறுப்பான துறையாக 'அந்தரங்க' என அழைக்கப்பட்டதாக ஊகிக்க முடிகின்றது. அதன் பொறுப்பாளரின் பதவி 'அந்தரங்கதூர' எனப்பட்டதாக நாம் கருதலாம். கௌடில்யரின் 'அர்த்த சாஸ்த்திர' நூலில் குறிப்பிடப்படும் 'ஆகரத்யக்ஷ' என்பதும் இப்பதவியே ஆகும். அந்தரங்க என்பது அவர்களுக்கு மன்னனை இலகுவாக சந்திக்கக் கூடியதாக இருந்தமையாலாகும் என பேராசிரியர் பரணவிதான கூறும் கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு முறைப்படியான இராணுவப் படை ஒன்றை ஒழுங்கமைத்தமை பற்றிய சரியான தகவல்களும் பராக்கிரமபாகு மன்னனின் தக்கிண தேச ஆட்சிக்காலத்திலே ஆரம்பமாவதை அறிய முடிகின்றது முதலாம் விஜயபாகு மன்னன் சோழர்களை இலங்கையிலிருந்து வெளியேற்றுவதற்கு இராணுவப் படையொன்றை அமைத்த போதிலும் அது பற்றிய விபரங்களை அறிய முடியவில்லை. தக்கிண தேச ஆட்சியாளனாக இருந்தபோது பராக்கிரமபாகு தனது நிர்வாகப் பிரதேசத்தைப் பன்னிரண்டு மண்டலங்களாகப் பிரித்து ஒவ்வொரு மண்டலத்துக்கும் பொறுப்பாக ஒவ்வொரு மண்டலப் பொறுப்பதிகாரிகளையும் நியமித்திருந்தான். அந்தப் பன்னிரண்டு பேரின் கீழும் 84 சாமந்த எனும் அதிகாரிகள் காணப்பட்டனர். நிஸ்ஸங்கமல்ல மன்னனின் ராஜ சபையில் 'சௌராசி' (எண்பத்து நான்கு பேர்) என்று குறிப்பிடப்படுவதும் மேற்படி மண்டல அதிகாரிகளையே என நாம் கருதலாம். இந்த சாமந்த எனும் அதிகாரிகளால் தமக்குப் பொறுப்பான பிரதேசங்களிலிருந்து படையினர் திரட்டிக் கொள்ளப்பட்டனர். அத்துடன் சாமந்த, மண்டலம், தளபதி எனும் ஒழுங்கு முறையில் இராணுவம் கட்டமைக்கப்பட்டிருந்தது. காவன்திஸ்ஸ மன்னனின் காலத்தில் 'யோதர்' (மாமல்லர்கள்) எனும் பத்து வீரர்களின் கீழ் இராணுவம் ஒழுங்குப்படுத்தப்பட்டமை இதற்குச் சமமானதாகும். மேலும் இக்கால கட்டத்தில் மலையகம் மற்றும் 'பஸ்யெதுன்ரட்ட' எனும் சதுப்பு நிலப் பகுதிகளிலும் மக்கள் குடியேறியமையால் நாடு முழுதும் கிராமங்களும் நகரங்களும் தோற்றம் பெற்றிருக்கலாம். எனவே ஒவ்வொரு பிரதேசத்திலிருந்தும் இராணுவத்தில் சேர்க்கப்பட வேண்டிய வீரர்களின் எண்ணிக்கை குறிப்பிடப்பட்டிருக்கலாம். உருகுணையில் அட்டதஹஸ் ரட்ட (8000) தொலஸ் தஹஸ்ரட்ட (12000) என நிர்வாகப் பிரிவுகளின் பெயரமைந்தமை அப்பகுதிகளின் இராணுவ எண்ணிக்கையைப் பொறுத்ததாக இருக்கலாம் எனப் பேராசிரியர் வில் ஹெல்ம் கைகர் என்பவர் கூறுகிறார். ஆயினும் உருகுணைப் பிரதேசத்தின் அவ்விரு பிரிவுகளிலும் அடங்கியிருந்த கிராமங்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலும் அப்பெயர்கள் ஏற்பட்டிருக்கலாம் எனவும் நாம் கருதலாம். விவசாயிகள் மட்டுமல்ல வில்வித்தையில் திறமை கொண்ட வேடர்களும் படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர். அரசனின் பாதுகாப்புக்காக 'வேளைக்காரப் படை' எனும் தமிழ் படையினர் பொலன்னறுவைக் காலத்தில் இருந்துள்ள போதிலும் முதலாம் பராக்கிரமபாகுவின் காலத்தில் அப்படை இல்லாது போனாலும் சேர நாடு மற்றும் வெளி நாட்டு வீரர்களைக் கொண்ட படைப்பிரிவொன்று காணப்பட்டது.

முதலாம் பராக்கிரமபாகு மன்னனின் காலத்தில் நிலையான இராணுவம் ஒன்றிருந்தமை பற்றி எதுவித சந்தேகமுமில்லை. இராணுவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டமைப்பு பற்றி வம்சக் கதைகள் கூறும் விபரங்கள் பர்மா மற்றும் தென்னிந்திய ஆக்கிரமிப்புக்கள் பற்றிப் பார்க்கும்போது தெளிவாகத் தெரிகின்றது. இம் மன்னனிடம் வெளிநாட்டுப் படையெடுப்புகளை நடாத்தக் கூடிய அளவிற்கு கடற்படை (கப்பல் படை) ஒன்றும் காணப்பட்டுள்ளது. வடக்கிலும் கிழக்கிலும் காணப்பட்ட பல்வேறு துறைமுகங்களிலும் கப்பற்படை ஒழுங்குப்படுத்தப்பட்ட விதம் பற்றி வம்சக் கதைகள் விரிவாகக் கூறுகின்றன. 'நிகாய சங்கிரஹவிலும் மகா பராக்கிரமபாகுவின் கப்பற் படை பற்றிக் கூறப்பட்டுள்ளது. நிஸ்ஸங்கமல்ல மன்னனும் சோழருக்கு சவால் விடுவதற்கு இராமேஸ்வரம் வரை சென்றது கடற்படையினருடனாக இருக்கலாம். வம்சக் கதைகள் கூறும் இலங்கை மன்னர் இருவருக்கிடையில் இடம்பெற்ற ஒரேயொரு கடற்படை யுத்தம் பராக்கிரமபாகு, கஜபாகுவுக்கிடையே முத்துக்குளிக்கும் கடற்பரப்பு சம்பந்தமாக ஏற்பட்டதாகும். இத்தகவல்கள் மூலம் பாரிய கடற்படையைக் கொண்டிருந்த சோழப் பேரரசுக்கு மாத்திரமல்ல வெளி நாடுகளுக்கும் சவால் விடும் அளவிற்கு பொலன்னறுவை யுகத்தில் சில மன்னர்கள் கடற்படை வைத்திருந்ததாக நாம் அறியக் கூடியதாக உள்ளது.

## பொலன்னறுவை யுகத்தின் பின்னர் நிருவாக முறை

கி.பி. 1215 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கலிங்க மாகனின் ஆக்கிரமிப்பு இலங்கை எதிர் கொண்ட மிகப் பயங்கரமானதோர் ஆக்கிரமிப்பாகும். இதனால் நாட்டில் ஏற்பட்ட அழிவு நாசங்களை விரிவாக விளக்கும் வம்சக் கதைகள் அவ்வாக்கிரமிப்புக்குக் கூறும் காரணம் யாதெனில் இலங்கையர் முற்பிறப்பில் செய்த பாவம் காரணமாக இலங்கைக்குப் பொறுப்பான தெய்வம் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்ட வேளையிலே மாகனின் ஆக்கிரமிப்பு நிகழ்ந்துள்ளது என்பதாகும். வம்சக் கதையாளர்கள் கூறும் இக்காரணத்திற்கு ஆழமான கருத்துள்ளது. இவ்வாக்கிரமிப்பானது நாட்டை சூறையாடுவதற்கு மட்டுமோ அல்லது அன்றைய ஆட்சியாளனை விரட்டி விட்டு அதிகாரத்தைப் பறித்துக் கொள்ளவோ நடைபெற்றதொன்றல்ல. இராசரட்டையை அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்பபட்ட சிங்கள நாகரிகத்தின் அனைத்து அம்சங்களையும் அடியோடு அழிப்பதன் அடையாளமாய் அமைந்த இவ்வாக்கிரமிப்புப் பற்றி வம்சக் கதைகள் மிகவும் சோகமாகவே கூறுகின்றன.

கலிங்க மாகனின் ஆக்கிரமிப்பில் காணப்படும் தெளிவான இலட்சணம் ஆட்சி நிருவாகத்தையும் சமூகவமைப்பையும் முழுமையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாதொழிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட செயற்பாடாகும். நாட்டின் நிருவாக நடவடிக்கைககளில் பதவி வகித்த சமூகப் பிரிவினரை அல்லது தாழ் குலத்தவரை பல்வேறு இம்சைகளுக்கும் ஆளாக்கிய விதமும் அவர்களை அழித்தொழித்த விதமும் வம்சக் கதைகளில் தெளிவாக விபரிக்கப்பட்டுள்ளது. மாகனின் கொடுமைககளிலிருந்து தப்பி உருகுணைக்கும் மாயாரட்டைக்கும் புலம் பெயர்ந்த பிரபுக்கள் அவ்வப்பகுதிகளில் முகாமிட்டு அப் பிரதேசங்களைப் பாதுகாத்து வந்தனர். மாகனின் படையினரிடமிருந்து பாதுகாப்புப் பெறுவது தவிர அத்தலைவர்களுள் ஒருவரினாலாவது முறையான ஆட்சி நிர்வாகத்தைக் கொண்டு செல்ல முடியவில்லை. தம்பதெனிய இராச்சியத்தின் முதலாவது ஆட்சியானனாக மூன்றாம் விஜயபாகு மன்னனுக்குக் கூட ஒழுங்கமைந்நதோர் ஆட்சி முறையைக் கட்டியெழுப்புவதற்கு சந்தர்ப்பம் கிட்டவில்லை. அவனது மகனான இரண்டாம் பராக்கிரமபாகு மன்னனுக்கு பொலன்னறுவையிலிருந்து மாகனைத் துரத்த முடிந்தது தனதாட்சிக் காலத்தின் இறுதிப் பகுதியிலாகும். அதாவது 1255 ஆம் ஆண்டிலாகும். நாடு முழுமையாக ஒரு யுத்த சூழ்நிலைக்குத் தள்ளப்பட்ட துர்ரதிஷ்டவசமான அரை நூற்றாண்டளவிலான கால கட்டம் பழைய சிங்கள ஆட்சி நிருவாக முறை முற்றாக அழிந்து சீரழிந்து போனதொரு யுகமாக சித்திரிக்கப்படுவது இதனாலாகும்.

இரண்டாம் பராக்கிரமபாகு மன்னன் பழைய சிங்கள ஆட்சி முறையை மீண்டும் கட்டியெழுப்புவதற்குக் கடும் முயற்சி மேற்கொண்ட போதிலும் அது முழுமையாக வெற்றியளிக்கவில்லை என்றே சொல்ல வேண்டும். இம்மன்னன் 1270 ஆம் ஆண்டு பொலன்னறுவையில் தனது முடி சூட்டு விழாவை நடாத்திய போதும் அந்நகரத்தைத் தனது நிருவாக மையமாகக் கொண்டு செயற்பட்டதாகத் தெரியவில்லை. ஆக்கிரமிப்பினால் அழிவுற்ற பொலன்னறுவை நகரம் தொல்பொருள் எச்சமொன்றாகக் காணப்பட்ட அதே வேளை அதனைக் சூழ்ந்த பகுதிகள் பெருங் காடாகவும் காணப்பட்டன. எனவே, அதனைச் திருத்தி அல்லது புனரமைத்து மீண்டும் தலைநகராக்குவது மிகவும் சிரமமான காரியமாகக் காணப்பட்டமை அந்நகரம் கைவிடப்பட்டமைக்கான காரணமாக இருக்கலாம். இரண்டாம் பராக்கிரமபாகு மன்னனின் ஆட்சியின் கீழ் மாயாரட்டை (தக்கிண தேசம்) மலைநாடு, உருகுணைக்குரிய தென்கிழக்கு சமவெளி என்பன உட்பட்டன. இப்பிரதேசங்களில் இம் மன்னனின் அமைச்சர்கள் அமுல்படுத்திய பல்வேறு கலாச்சார நடவடிக்கைகள் பற்றி மூலாதாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

அரசாட்சி, அரசுரிமை பற்றிய கொள்கையில் பாரிய மாற்றங்கள் ஏற்படாத போதிலும் மன்னனின் அதிகாரம் மற்றும் நிலைமை பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்று மேலதிகமாக வர்ணிக்கப்படுவது மூலாதாரங்கள் வெளிப்படுத்தும் உண்மையாகும். இந்நிலைமை நிஸ்ஸங்கமல்ல மன்னன் உள்ளிட்ட பொலன்னறுவைக் கால மன்னர்களின் கல்வெட்டுக்களிலும் காணப்படுகின்றன. இரண்டாம் பராக்கிரமபாகு மன்னனின் பெயருக்கு முன்னால் 'திரீ சிங்களாதீஸ்வர' எனும் பட்டம் பயன்படுத்தப்பட்டுள்ளது. பழைய சிங்கள மன்னராட்சிக்கு உட்பட்ட விசாலமான ஒரு பிரதேசம் அவனின் ஆட்சியின் கீழ் வந்த போதிலும் பொலன்னறுவைக்கு வடக்கே அமைந்த பிரதேசம் அவனது ஆணைக்கு அடங்கியதாகத் தெரியவில்லை. ஆயினும் அக்கால கட்டம் முதல் சிங்கள அரசாட்சியின் இறுதிக் காலம் வரை ஆட்சி செய்த மன்னனர்கள் எல்லோரும் போல் தமது ஆவணங்களில் அப் பட்டத்தை தமது பெயருக்கு முன்னால் சேர்ந்துக் கொண்டுள்ளனர். பதினான்காம் நூற்றாண்டின் ஆரம்பம் முதல் யாழ்குடா நாடு ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆட்சியின் கீழ் இருந்து வந்தது. தென்னிந்தியாவின் சேர, சோழ, பாண்டிய நாடுகளிலிருந்து இடம் பெயர்ந்த வியாபாரிகள், கூலிப்படையினர், ஆக்கிரமிப்பாளர் மற்றும் புலம் பெயந்தோரே வட பகுதியில் பெரும்பான்மை சமூகமாகக் காணப்பட்டனர். யாழ்குடா நாட்டில் ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆட்சி நிலவிய போதிலும் அவர்கள் அங்கு ஆட்சியைக் கைப்பற்றியவர்களே தவிர சட்டபூர்வமான ஆட்சியாளர்கள் அல்ல என்பதனாலேயே சிங்கள மன்னர்கள் தொடர்ந்தும் தமது பெயருக்கு முன்னால் 'திரீ சிங்களாதீஸ்வர' எனும் பெயரை அரச ஆவணங்களில் பயன்படுத்தி வந்துள்ளனர்.

இக்கால பகுதியிலும் சிங்கள மன்னர்கள் பிரயோகித்த பிரபலமான புகழ் நாமமாக 'சக்கரவர்த்தி' எனும் அடைமொழி காணப்பட்டது. இந்திய அரசியல் நூல்களின்படி 'அரசனுக்கும் அரசன்' எனும் பொருளிலே அப்பெயர் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆயினும் அங்கும் மிகப் பலவீனமான மன்னர்களும் தமது பெயருக்கு முன்னால் 'சக்கரவர்த்தி' எனும் பட்டத்தைப் பயன்படுத்தியுள்ளனர். முஸ்லீம்களின் ஆக்கிரமிப்புக் காரணமாக தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்த பிராமணர்களும் அவர்களால் பிரபலமான சமஸ்கிருத மொழியிலான இலக்கியங்களும் சிங்கள அரச சபைக்குள் இப்புகழ் நாமத்தை அறிமுகப்படுத்தியிருக்கலாம்.

அநுராதபுர யுகத்தின் இறுதிக் கால மன்னர்கள் பயன்படுத்திய 'சிறிசங்கபோ' மற்றும் 'அகாசலமெவன்' முதலிய பட்டங்களைப் பொலன்னறுவைக் கால மன்னர்களும் பயன்படுத்தியுள்ளமையைக் காண முடிகின்றது. ஆயினும் 'சிறிசங்கபோ' எனும் பட்டப் பெயரையே அதிகமான மன்னர்கள் பயன்படுத்தியுள்ளனர். எட்டாம் வீர பராக்கிரமபாகு மன்னனின் 'ஒறுவல சாசன' த்தில் அவனது தந்தையான ஆறாம் பராக்கிரமபாகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னனின் பெயருக்கு முன்னால் 'போதிசத்வாவதார' எனும் பெயர் பயன்படுத்தப்பட்டுள்ளது. போதிசத்துவர் எனும் பௌத்த சமயக் கொள்கை மத்திய காலத்தில் இலங்கையில் பிரபல்யமடைந்த மகாயான பௌத்த வாதத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. 'அரசன் சாதாரண மனிதன் அல்ல போதிசத்துவர் ஆவான்' அல்லது 'போதி சத்துவரின் மறு அவதாரமே மன்னனாவான்' எனப் பிரபல்யமடைந்த கருத்துகள் ஒரு வகையில் இலங்கையின் அரசியல் மற்றும் அரசுரிமை பற்றிய தேரவாத பௌத்தக் கருத்துக்களிலிருந்தும் வேறுபட்டதாக அமைந்தது.

இக்கால மன்னர்கள் தமது பெயருக்கு முன்னால் சக்கரவர்த்தி மற்றும் திரி சிங்களாதீஸ்வர எனும் பெயர்களைப் பயன்படுத்தியுள்ள போதிலும் அது அவர்களின் உண்மையான அரசியல் ஆதிபத்தியத்தைக் காட்டுபவை என நாம் கருத முடியாது. அநுராதபுரம் அல்லது பொலன்னறுவைக் கால அரசியல் ஆதிபத்தியத்தை விட வேறுபட்ட முறையிலான அரசியல் முறையொன்று இக் காலகட்டத்தில் நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் கட்டியெழுப்பட்ட விசேட இலட்சணமாகும். எப்போதாவது முடிசூட்டு விழாவை நடத்தியதாக எந்தவொரு மூலாதாரத்திலும் காண முடியாத ஆரிய சக்கரவர்த்திகளின் ஆட்சி அதற்குச் சிறந்த உதாரணமாகும். அவர்கள் யாழ்ப்பாணத்தின் மன்னர்களாக முடிசூடப்படாத போதிலும் அப்பிரதேச ஆட்சியதிகாரம் அவர்களின் கைகளிலே காணப்பட்டது. ஆறாம் பராக்கிரமபாகு மன்னன் தவிர இக்காலத்துக்குரிய வேறெந்தவொரு சிங்கள மன்னர்களாலும் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் தமது அதிகாரத்தை நிலைநாட்ட முடியவில்லை.

சிங்கள அரசர்களினதும் ஆட்சிப் பிரதேசங்களிலிருந்தும் ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆட்சிப் பிரதேசத்திலிருந்தும் நீங்கி தனிப்பட்ட வகையில் சுயாதீனமான முறையில் செயற்பட்ட பிரதேச ஆட்சியாள்ர்களைக் குறிப்பிடுவதற்கு 'வன்னி' எனும் பிரிவுப் பெயர் அக்கால மூலாதாரங்களில் பயன்படுத்தப்பட்டிருப்பதைக் காணலாம். இச் சொல் மூன்றாம் விஜயபாகு மன்னன் தொடர்பாகவே முதன் முதலாக வம்சக் கதைகளில் சேர்க்கப்பட்டுள்ளது. அம் மன்னன் ஆரம்பத்தில் ஒரு 'வன்னியன்' என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. பாளி மொழியிலும் சமஸ்கிருதத்திலும் காட்டைக் குறிப்பதற்குப் பயன்படும் 'வன(ம்)' எனும் சொல்லை அடியாகக் கொண்டே 'வன்னி' எனும் சொல் உருவாக்கியிருக்கலாம். அப்பிரதேச ஆட்சியாளனும் 'வன்னியர்' எனும் பெயராலேயே அழைக்கப்பட்டனர். இக்கால பகுதியில் நிலவிய வன்னி ஆட்சிப் பிரதேசங்கள் பதினெட்டு (18) ஆகும் என 'கிரா சந்தேசய' நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நிகாய சங்கிரஹய' நூலின்படி அவ்வெண்ணிக்கை முன்னூற்று அறுபத்து நாலு (364) ஆகும். இந்த நூலிலும் வன்னி பற்றியும் வன்னியர் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. நாட்டில் அரசியல் ஐக்கியம் சீர்குலைந்தமையால் மன்னர்களால் தமது பிரதேசங்களுக்குப் பாதுகாப்பு வழங்க முடியாதிருந்தமையாலும் அப்பகுதிப் பிரதானிகள் தமது பகுதி மக்களுக்குப் பாதுகாப்பு வழங்கி அரை குறை ஆட்சியாளர்களாக செயற்பட்டமை காரணமாகவே வன்னிகள் உருவானதாக நாம் கருதலாம். யாழ்ப்பாண குடாநாட்டுக்கும் தென் மேற்கு ஈர வலயத்தில் அமைந்திருந்த தம்பதெனிய, கம்பளை, கோட்டை முதலிய தலைநகர்களுக்கும் இடைப்பட்ட பரந்த நிலப் பரப்பின் ஆட்சியதிகாரம் வன்னியரிடமே காணப்பட்டது. சிங்கள நாகரிகத்தின் பிறப்பிடமான வடக்கு மற்றும் தென்கிழக்கு சமவெளிப் பிரதேசங்களில் 'வன்னியர்' என அழைக்கப்பட்ட பிரதேச ஆட்சியாளர்கள் பலர் இருந்ததாக சூளவம்சம், பூஜாவலிய, ராஜாவலிய, நிகாய சங்கிரஹய எனும் நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் பிரித்தானியர் ஆட்சிக் கால அரச ஆவணங்களிலும் காண முடிகின்றது.

வன்னியர் தமது நிருவாகப் பிரதேசத்தில் கொண்டிருந்த ஆட்சியதிகாரம் பற்றி விபரமாகக் கூறுமளவிற்கான விடயங்கள் இக்கால மூலாதாரங்களில் காணப்படவில்லை. வன்னியர்கள் சிங்கள அரசர்களுக்கு அல்லது யாழ்ப்பாண ஆட்சியாளர்களுக்கு சார்பாக இருந்தது அம் மன்னர்களின் பலம், பலவீனத்தைப் பொறுத்ததாகும். பொலன்னறுவைக்கு வடக்கே இருந்த வன்னியர்கள் யாழ்ப்பாண ஆட்சியாளர்களின் அதிகாரத்தை ஏற்றுக் கொண்ட போதிலும் யால, பானம, மட்டக்களப்பு முதலிய பிரதேச வன்னியர்கள் சிங்கள மன்னர்களின் அதிகாரத்தையே அங்கீகரித்துள்ளனர். அநுராதபுரம், பொலன்னறுவை பகுதிகளிலும் கூட வன்னியர்கள் இருந்துள்ளனர். அவர்கள் சில காலங்களில் யாழ்ப்பாண ஆரியச் சக்கரவர்த்திகளினதும் சில காலங்களில் சிங்கள மன்னர்களினதும் ஆட்சியை அங்கீகரித்துள்ளனர். பொலன்னறுவை வீழ்ச்சியின் பின்னர் அவதானிக்கத்தக்க மேற்படி அரசியல் கலாசாரமானது நாட்டின் அரசியல் உறுதிப்பாடு தொடர்பாக மிகவும் பாதிப்புச் செலுத்தியுள்ளது. கம்பளை யுகத்தின் போது ஆரியச் சக்கவர்த்தி ஆட்சியாளர்களுள் ஒருவன் மத்திய மலை நாட்டின் மாத்தளைப் பிரதேசம் மற்றும் மேற்குக் கரையில் வத்தளை, களனி பிரதேசங்களிலும் தனது அதிகாரத்தை நிலைநாட்டியது வன்னி ஆட்சியாளர்களை அடக்கிக்கொண்டாகும். ஆறாம் பராக்கிரமபாகு மன்னன் ஆரியச் சக்கரவர்த்திகளிடமிருந்து யாழ்ப்பாணத்தை மீட்பதற்கு முன்னர் பதினெட்டு வன்னிகளையும் வெற்றி கொண்டதாக 'கிரா சந்தேசய' எனும் நூல் கூறுகின்றது. எனவே வன்னி என்பது இவ்விரு இராச்சியங்களினதும் அதிகாரப் போட்டியை தீர்மானிக்கும் ஒரு காரணியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்திருந்தது. சில மூலாதாரங்களில் முன்னூற்று அறுபத்து நாலு (364) வன்னிகள் பற்றிக் குறிப்பிடுவதிலிருந்து பெரு வன்னிப் பரப்புக்குள் சிறு வன்னிகளும் காணப்பட்டமையை அறிய முடிகிறது. அவை சிங்கள மொழியிலும் 'சிறுவன்னி' என்றே குறிப்பிடப்படுகின்றது. வன்னியர்களுள் வியாபாரிகளும் விவசாயிகளும் இருந்ததாக 'பெரகும் சிறித' நூலின் மூலம் அறிய முடிகின்றது. அவ்வவ் பிரதேசங்களிலோ கிராமங்களிலோ வாழ்ந்த மக்கள் தமது பாதுகாப்புக் கருதி தமது குலத் தலைவர்களின் தலைமையில் வன்னியாக ஒழுங்கமைந்தமை இதன் மூலம் தெரிய வருவதுடன் அவற்றுள் சிறியவையாக அமைந்தவை 'சிறு வன்னி' எனப்பட்டிருக்கலாம்.

தம்பதெனியக் காலம் முதல் அரச நிருவாகத்தில் 'பிரதிராஜ' என அழைக்கப்பட்ட பிரபல்யமான பதவி பற்றிய குறிப்புகள் கம்பளை, கோட்டை யுகங்களில் எழுதப்பட்ட 'நிகாய சங்கிரஹய', 'சத்தர்ம ரத்னாகரய' நூல்களில் காணப்படுகின்றன. இரண்டாம் பராக்கிரமபாகு மன்னனின் தேவா எனும் முதலமைச்சருடன் தொடர்புடையதாகவே 'பிரதிராஜ' எனும் பதவிப்பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. 'பூஜாவலிய' எனும் நூலில் முதலமைச்சரின் பெயர் பிரதிராஜதேவ என்றே தொடர்ந்தும் குறிப்பிட்டுள்ளது. மன்னனின் சார்பில் அதிக பணிகளை நிறைவேற்றிய முதலமைச்சரே மாயாரட்டை மற்றும் தென் பிரதேச அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டார். 'பிரபுராஜ' என்பது கம்பளை யுகத்தில் காணப்பட்ட சிறப்பான பதவியாகும். கம்பளைக் கால கல்வெட்டுக்களில் இப்பதவிப் பெயர் இடம் பெற்றுள்ளது. முடி சூடிய அரசர்கள் பெயரளவு நிருவாகிகளாக இருந்த வேளை 'பிரபுராஜ' பதவி வகித்தவரே அரசனின் பணிகளை நிறைவேற்றி வந்தார். கம்பளை மூன்றாம் விக்கிரமபாகு மன்னனின் முதலமைச்சரான நிஸ்ஸங்க அழகக்கோனாரே முதலாவது 'பிரபுராஜ' பதவி வகித்தவராவார். அவர் ஒரு சந்தர்ப்பத்தில் இலங்கையின் அரசன் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளார். இங்கு முடிசூடிக் கொண்ட மன்னர்கள் முதல் இடத்திலும் பிரதிராஜ மற்றும் பிரபுராஜ என்பவர்கள் இரண்டாம் இடத்திலும் காணப்பட்டனர். இது மத்திய காலத்தில் உலக நாடுகள் அதிகமானவற்றுள் நிலவிய அரசியலின் விசேட பண்பாகும். இரண்டாம் நிலை ஆட்சியாளர்கள் பெரும்பாலும் மன்னனின் கிட்டிய உறவினர்களாவர். கம்பளை அரச குடும்பத்துடன் உறவு ரீதியாக நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த மற்றொரு பிரதானிகள் குடும்பம் சேனாதிலங்கார செனவிரத் குடும்பமாகும்.

கம்பளை யுகத்தின்போது அரசுரிமை தொடர்பாக புதியதோர் மரபு கடைப்பிடிக்கப்பட்டதைக் காண முடிகிறது. சொத்துரிமையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசுரிமையும் தாய் வழியில் வந்தமை இக்கால கட்டத்தில் நிலவியது. இது தென்னிந்தியாவின் சேர நாட்டில் காணப்பட்ட பண்பாகும் என வரலாற்றியலாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். ஆட்சிக்கு உரிமை கோருவதும் தாய் வழிப் பண்பாக மாறியிருந்தது. அதன்படி அரசன் இறந்த பின்னர் சிம்மாசன உரிமை அவனது மகனைச் சேராமல் மன்னனின் சகோதரியின் மூத்த மகனைச் சேர்ந்தது. எனவேதான் அரச பதவிக்கு நிகரான பிரதி ராஜ மற்றும் பிரபு ராஜ பதவிகள் தோற்றம் பெற்றுள்ளன என்பதை அறிய முடிகின்றது. இதிலிருந்து தெளிவாகும் மற்றுமொரு விடயம் என்னவெனில் இக்கால கட்டத்தில் ஆட்சி பீடமேறிய அரசர்களால் தனியாகத் தமது ஆட்சி நிருவாக நடவடிக்கைகளை மேற்கொள்வதில் ஏற்பட்ட சிரமமாகும். மாகனின் ஆக்கிரமிப்பால் இலங்கையில் நிலவிய சிங்கள மன்னராட்சி முறை சீரழிந்தமையால் ஏற்பட்ட விளைவு யாதெனில் வெவ்வேறு பிரதேசங்களிலும் பிரதேச ஆட்சியாளர்கள் தோன்றியமையாகும். இக்கால கட்டத்தில் சிங்கள மன்னராட்சி அதிகாரத்தின் கீழிருந்த மாயாரட்டை, மலைநாடு, உருகுணை ஆகிய பிரதேசங்கள் புவியியல் ரீதியாக வெவ்வேறுபட்டவையாகும். உருகுணையின் பெரும்பாலன பகுதிகள் வன்னியரின் நிர்வாகத்தின் கீழே காணப்பட்டன. மலைகளாலும் நதிகளாலும் சூழப்பட்டு புவியியல் ரீதியாக தனிமைப்படுத்தப்பட்டிருந்த மலைநாடு மற்றும் மாயாரட்டையின் புவியியல் அமைப்பு அப்பிரதேசங்களில் அரைகுறையான சுயாதீன ஆட்சியாளர்கள் உருவாகக் காரணமாக அமைந்தது. கம்பளை, றைகம எனும் சம பலமுள்ள இராசதானிகள் உருவாவதிலும் புவியியல் நிலை செல்வாக்குச் செலுத்தியுள்ளது. பழைய அரச குடும்பங்களின் வம்ச வழியில் நேரடியாக வருபவர்கள் முடி சூடிக் கொண்ட மன்னனாக மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட போதிலும் ஒவ்வொரு பிரதேசத்தினதும் உண்மையான ஆட்சியதிகாரம் அப்பிரதேச வன்னியர்களிடம் அல்லது பிரபுராஜ எனும் குடும்பங்களிடமே காணப்பட்டது. பிரதிராஜ அல்லது பிரபுராஜ பதவிகள் தோன்றுவதற்குக் காரணம் சிங்கள மன்னனராட்சி சீரழிந்து பொருளாதார, சமூக நிலைமைகளும் சீரழிந்த நிலையின் அரசியல் பின்னணியாகும்.

மத்திய கால சிங்கள அரசன் ஒருவன் தனது நாளாந்த செயற்பாட்டை மேற்கொண்டமைக்கான சிறந்த உதாரணமொன்றை தம்பதெனிய யுகத்துக்குரியதாகக் கருதப்படும். 'கந்தவுறு சிறித' எனும் நூலில் காணலாம். இரண்டாம் பராக்கிரமபாகு மன்னனன் கந்தவுறு நகர (பாசறை நகரம்) அல்லது பொலன்னறுவையில் தங்கியிருந்த சிறிது காலத்தில் அவனது தினசரி நடவடிக்கைகள் அந்நூலில் இடம் பெற்றுள்ளதாக நம்பப்படுகிறது. கௌடில்யரின் 'அர்த்த சாஸ்திரம்' நூலில் மன்னனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாள் நடவடிக்கைகள் பற்றிக் கூறப்பட்டுள்ள கருத்துக்களே 'கந்தவுறு சிறித' நூலிலும் காணப்படுகின்றன. ஆயினும் அது பௌத்த சமயத்துக்கு ஏற்றவாறு மாற்றி எழுதப்பட்டுள்ளது. அதன்படி பகல் பொழுதின் முப்பது மணித்தியாலமும் (சிங்கள நேரப்படி) அரசனுக்குரிய காரியங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

அரசனொருவனின் ஆட்சி வருடம் அவன் முடிசூட்டப்பட்ட நாளிலிருந்தே கணிக்கப்டுகின்றது. அரச ஆவணங்களில் ஆட்சியாண்டுடன் புத்த வருடமும் குறிப்பிடுவது இக்காலத்தில் பிரபலமானதொரு நடைமுறையாகக் காணப்பட்டது. 'சுவர்ணாபிஷேகம்' எனும் பெயரில் முடிசூட்டு விழா நடாத்தப்பட்டதாக எட்டாம் வீர பராக்கிரமபாகு மன்னனின் 'ஒறுவல சாசனம்' மூலம் அறிய முடிகின்றது. ராஜாபிஷேகத்துடன் நடாத்தப்பட்ட 'மௌலிமங்கல்ய' அல்லது 'முடிசூட்டு விழா' வின் ஆண்டு நிறைவு விழா ஆண்டு தோறும் கொண்டாடப்பட்டு வந்துள்ளது. ஆறாம் பராக்கிரமபாகு மன்னன் பற்றி அச்சாசனத்தில் குறிப்பிடும்போது ஐம்பத்தைந்து தடவைகள் முடி சூடும் வரை மன்னன் உயிர் வாழ்ந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதிலிருந்து ஆண்டு தோறும் முடிசூட்டு விழா நடைபெற்று வந்துள்ளமையை அறிந்து கொள்ள முடிகின்றது.

## அரசியல் நிருவாகத்தின் பிரதான பதவிகள்

'கந்தவுறு சிறித' நூலில் மன்னன், யுவராஜன், செனவிரத், ஏபா, மாபா எனும் ஐம்பெரும் அரச பிரதானிகள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. சேனாநாயக, தஹம்பசக்னா, மஹ நெகதினா, மஹவெதனா, சிட்டுனா முதலிய 'கந்தவுறு சிறித' குறிப்பிடும் பதவிகள் மகாபராக்கிரமபாகு மன்னனின் காலத்துடன் தொடர்புபட்டதாக 'நிகாய சங்கிரஹய' விலும் குறிப்பிடப்பட்டுள்ளன. கந்தவுறுசிறிதவில் குறிப்பிடப்பட்டுள்ள மஹவியன்னா எனும் பதவி 'நிகாய சங்கிறஹில் வியன்னா எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோல 'ரட்டநாயக' எனும் பதவி 'நிகாய சங்கிரஹய'வில் மஹரட்டினா என்று வருகின்றது. மேலும் தம்மகேஹநாத மற்றும் சிஹானா எனும் பதவிகள் பொலன்னறுவை யுகத்திலும் காணப்பட்டதுடன் இப்பதவிகள் வம்சக் கதைகளில் தம்மகேஹ நாத என்றும் அசிக்காஹ நாத என்றும் எழுதப்பட்டுள்ளன. இது தவிர தம்பதெனிய யுகத்தில் அரசவையில் சேவையாற்றிய அரக்மேனா, மஹதொரனா, மஹவெதனா, முலங்கினா முதலிய பல அதிகாரிகள் பற்றியும் 'கந்தவுறு சிறித' குறிப்பிட்டுள்ளது. இது பற்றி 'இலங்கைப் பல்கலைகழகத்தின் இலங்கை வரலாறு' எனும் நூலின் முதலாம் பகுதியின் இரண்டாம் அரைப் பகுதியில் மிக நீண்ட விளக்கம் தரப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டை யுகத்தின் அரச சபையின் அமைப்பு பற்றிய கவிதை வடிவிலான விளக்கம் 'ஹங்சசந்தேசய' காவியத்தில் காணப்படுகின்றது. அதன்படி அரசன் தனக்குரிய ஆடை, ஆபரணங்களுடன் நிலத்தில் விரிக்கப்பட்ட வெள்ளைத் துணியின் மீது நடந்து வந்து சிம்மாசனத்தில் வீற்றிருப்பான். அதன் பின்னர் இளவரசர்கள் வந்து மன்னனின் இரு புறத்திலும் அமர்வர். அதன் பின்னர் முறைப்படி மஹன்தே ஏகநாயக அவர்களும் சாசனம் எழுதும் திருவரங்கமு அவர்களின் பரம்பரையில் வந்தவரும் பண்டாரநாயக பதவி வகிப்பருமான விக்கிரமசிங்க அதிகாரம் அவர்களும் சேனாநாயகமாரும் வாசல முதலியார்களும் அரச நிதி செயலக முதலிமாரும் வாசல முகவெட்டி எனும் அலுவலர்களும் வந்து தமக்குரிய ஆசனங்களில் அமர்வர். இவை தவிர அந்நூலில் அதிகரணநாயக (தலைமை நீதிபதி), அர்த்தநாயக, சாமான்த நாயக எனும் பதவிப் பெயர்களும் இடம் பெற்றுள்ளன. அர்த்த நாயக என்பது அரச வளங்களுக்குப் பொறுப்பான அதிகாரிகளின் தலைவராகவும் சாமன்த நாயக என்பவர் திசா நாயக்கவின் கீழிருந்த பிரதேச நிருவாகியாகவும் இருந்திருக்கலாம். மேலும் கஜநாயக (பட்டத்து யானைகளுக்குப் பொறுப்பான அதிகாரி), பது நாயக (வரி அறவிடும் அதிகாரி) முதல் நாயக (நாணய வெளியீட்டு அதிகாரி) மஹ வெலந்தனா (வர்த்தகத்துறை அதிகாரி) மஹ தொரனா (அரசவையின் பாதுகாப்பு அதிகாரி) முலங்கினா (சமயலறைக்குப் பொறுப்பான அதிகாரி) முதலிய பதவிப் பெயர்களும் 'கந்தவுறு சிறித' நூலில் காணப்படுகின்றது. அநுராதபுர, பொலன்னறுவை யுகங்களிலும் இவ்வாறான பதவிகள் காணப்பட்ட போதிலும் அப்பதவிப் பெயர்கள் வம்சக் கதைகளில் பாளி மொழியமைப்பிலேயே குறிப்பிடப்பட்டுள்ளன. 'கந்தவுறு சிறித' வில் காணப்படும் சிறப்பு தம்பதெனிய யுகத்தின் பதவிப் பெயர்கள் பாவனையில் உள்ள சிங்கள மொழியில் அமைந்துள்ளமையாகும்.

அரச சேவையில் அதி உயர் பதவியிலிருப்போரை அமாத்ய அல்லது அமெதி (அமைச்சர்) என்றழைப்பது பொலன்னறுவை யுகத்தின் பின்னர் காணக்கூடிய பண்பாகும். அநுராதபுர, பொலன்னறுவை யுகங்களிலும் இப்பதவி 'அமச்ச' என்று வழங்கப்பட்டுள்ளது. அக்கால கட்டத்தில் அது தராதரம் பராது உயர் பதவி வகித்தோரைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் பொலன்னறுவை யுகத்துக்குப் பிற்பட்ட காலத்தில் அப்பதவியானது அதை விடவும் உயர்ந்த அந்தஸ்துடைய பதவிக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. இரண்டாம் பராக்கிரமபாகு மன்னனின் தேவ பிரதிராஜ எனும் அமைச்சரின் பெயர் 'பூஜாவலிய' வில் பிரதம அமைச்சர் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. 'குத்தில காவியம்' எனும் நூலில் 'முழு இலங்கைக்கும் முதலமைச்சராக விளங்கிய சலாவத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சிலாபம்) ஜயபால அவர்கள்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கம்பளைக் காலத்துக்குரிய கல்வெட்டுக்களிலும் சில அமைச்சர்கள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இவ்வாறான அமைச்சர்கள் பற்றிக் குறிப்பிடும் சந்தர்ப்பங்களை அவதானிக்கும் போது அவர்கள் உயர் அரச அதிகாரிகளை விடவும் அதிகாரம் பெற்றவர்களாக இருந்துள்ளமை தெரிய வருகின்றது. எனவே பிரதம அமைச்சரின் கீழ் அரசின் குறிப்பிட்ட ஒவ்வொரு துறைக்கும் பொறுப்பான அதிகாரி அமைச்சர் எனப்பட்டார் என்று கருதுவது பொருத்தமல்ல கம்பளை யுகத்துக்குரிய 'மயுர சந்தேச' வில் சன்னஸ் எனப்படும் சாசன அமைச்சர் ஒருவர் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் அரச சாசனங்கள் மற்றும் வெளியீடுகளுக்குப் பொறுப்பான அமைச்சராக இருந்திருக்கலாம். இப் பதவியானது கோட்டை யுகம் முழுதும் இருந்து வந்தது.

அகம்படி படையினர் அல்லது கூலிப்படையினர் பொலன்னறுவை யுகத்தில் காணப்பட்டதைப் போலவே தொடர்ந்து வந்த காலங்களிலும் காணப்பட்டனர். ஆரம்ப கால இலங்கையில் காணப்பட்ட விவசாய பொருளாதார சமூகத்தில் மன்னனுக்கு நிலையானதோர் இராணுவம் காணப்படவில்லை. எனவே காணி உரிமை தொடர்பான அடிப்படையிலேயே இராணுவ சேவைக்கு ஆட்கள் திரட்டப்பட்டனர். ஆயினும் கம்பளை முதல் கோட்டை யுகம் வரையிலான காலப்பகுதிக்குரிய கல்வெட்டுக்களில் காணப்படும் தரவுகளின்படி சிங்களப் படையினர், தமிழ்ப் படையினர் என்று இரு படைப் பிரிவுகள் பற்றி அறிந்து கொள்ள முடிகிறது. அரசனின் சில கொடுப்பனவுப் பத்திரங்களின் இறுதியில் சிங்கள இராணுவம், தமிழ் இராணுவம் எனும் இரு பிரிவனரும் சாட்சிகளாகக் குறிப்பிடப்படுவதிலிருந்து அது மேலும் தெளிவாகின்றது. இக்காலகட்டத்தில் காணப்பட்ட இராணுவ அமைப்பு தொடர்பாக கம்பளை, கோட்டை, கண்டி காலங்களுக்குரிய மூலாதாரங்களில் இருந்து தகவல்கள் கிடைக்கின்றன. அதன்படி 'அகம்படி' எனப்பட்ட இராணுவம் பற்றி அதிக விபரங்களை இக்கால கட்டத்தில் அறிந்து கொள்ள முடிகின்றது. 'நெத்தி அகம்படி' மற்றும் 'மூகல அகம்படி' எனும் விசேட இராணுவம் பற்றி 'தம்பதெனிய அஸ்ன' எனும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் நெத்தி அகம்படி என்பது பயிற்சி பெறும் இராணுவத்தினராக இருக்கலாம் என்று பேராசிரியர் பரணவிதான கருதுகிறார். கோட்டை யுகத்துக்குரிய 'மடவள கல்வெட்டில்' குறிப்பிடப்படும் தும்பரை அகம்படியர் பத்துப்பேர் எனும் வரிகளும் இங்கு கவனிக்கத் தக்கவை. அவர்களும் விசேட அகம்படி இராணுவத்தின் அங்கத்தவர்களாயிருக்கலாம். அது தவிர இராணுவ சேவையுடன் தொடர்பான பதவிகள் என்று கருதத் தக்கதான 'அதாவுதபாலயன்', 'யன என பாலயன்', மினிவன் பாலயன்', 'கொன்த பாலயன்', 'லேகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலயன்', 'புலத்கெய் பாலயன்' எனும் இராணுவ சேவைப் படையினர் பலர் பற்றியும் இக்கால இலக்கிய மூலாதாரங்களின் மூலமும் கல்வெட்டுகள் மூலமும் நாம் அறிந்து கொள்ளக் கூடியதாயுள்ளது.

## நீதிமன்ற முறை (பொலன்னறுவை யுகமும் அதன் பின்னரும்)

பொலன்னறுவை யுகத்தில் நீதித் துறை எவ்வாறு செயற்பட்டது என்பதை அறிந்து கொள்வதற்கான சான்றுகள் மிகவும் சொற்பமானவை. முதலாம் விஜயபாகு மன்னன் சோழரிடமிருந்து நாட்டை மீட்டெடுத்த பின்னர் அநுராதபுர யுகத்தின் இறுதிப் பகுதியில் நிலவிய ஆட்சி முறையை அமுல்படுத்தவே முயற்சித்ததாக வம்சக்கதை மூலம் தெரிய வருகின்றது. அதே வம்சக் கதையின்படி அமைச்சர்களின் அதிகாரம் மற்றும் பணிகள் என வகுத்த மன்னன் வரிகளை விதித்துள்ளதுடன் அவற்றை சேகரிக்கும் முறையொன்றையும் கடைப்பிடித்துள்ளான். அத்துடன் மன்னன் தர்ம நியாயப்படி நீதிமன்றத் தீர்ப்புகளையும் வழங்கியுள்ளான். இங்கு குறிப்பிடப்படும் 'தர்ம நியாயம்' என்ற சொல்லுக்கு விளக்கம் தரப்படாத போதிலும் தர்மம் என்றால் அரச தர்மம், புத்த தர்மம், மரபு தர்மம் என்றும் 'நியாயம்' என்பது சராசரி நீதியைக் குறிக்கும் எனவும் நாம் கருதலாம். அனுராதபுரத்தில் நிலவிய ஆட்சி முறையில் அரசனே நீதித் துறையின் உயர் பதவி வகித்தான். ஏதேனுமொரு பிரச்சினை அல்லது பிரசைகளுக்கு இழைக்கப்படும் அநீதி தொடர்பாக குற்றவாளிகளுக்கு மரண தண்டனை வரை வழங்கும் அதிகாரமும் அரசனிடமே காணப்பட்டது. ''அரசனால் தண்டனை வழங்கப்படுவது நோய்க்கு மருந்து கொடுப்பது போன்றது'' என நிஸ்ஸங்கமல்லனின் 'கல்பொத்த' கல்வெட்டு கூறுகின்றது. மேலும் அவனது மற்றுமொரு கல்வெட்டில் வயதான காலத்தில் பராக்கிரமபாகு மன்னனால் கடுந் தண்டனை வழங்கப்பட்ட குற்றவாளிகளுக்கு தன்னால் மன்னிப்பு வழங்கப்பட்டது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அரசனிடம் காணப்பட்ட வரையறையற்ற அதிகாரம் காரணமாக நீதிமன்றம் முறையாக செயற்படாதபோது மக்கள் பல இன்னல்களுக்கு முகங்கொடுக்க நேரிட்டது என்பதை இதன் மூலம் புரிந்து கொள்ளலாம். முதலாம் பராக்கிரமபாகு மன்னனை அடுத்து ஆட்சிபீடமேறிய இரண்டாம் விஜயபாகு மன்னன் 'மனுநீதி' தவறி ஆட்சி செய்யததாக வம்சக் கதை கூறுகின்றது. நிஸ்ஸங்கமல்ல மன்னனின் 'கல்பொத்த' உள்ளிட்ட பல கல்வெட்டுகளிலும் மனுநீதி பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. வம்சக் கதைகளில் இளவரசன் பராக்கிரமபாகுவின் கல்வி பற்றிக் குறிப்பிடுகையில் அவன் கௌடில்யர் மற்றும் மனு ஆகியோரின் நீதிப் புத்தகங்களை நன்கு கற்றதாகவும் கூறுகின்றது. சமஸ்கிருத இலக்கியத்தின் செல்வாக்கு அதிகமாக நிலவிய பொலன்னறுவை யுகத்தில் வம்சக் கதையில் அவ்வாறு எழுதப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதிலும் இலங்கை போன்றதொரு நாட்டிலே மனுநீதி எனும் இந்து சமய நீதி முறை அவ்வாறே செயற்படுத்தப்பட்டதா என்பது கேள்விக்குறியதே எது எவ்வாறான போதிலும் பௌத்த நீதி முறைக்கு மேலதிகமாக இந்து நீதி முறையும் இக்காலகட்டத்தில் நிலவியதாக நாம் கருதலாம்.

முதலாம் பராக்கிரமபாகு மன்னனின் காலத்தில் இயல்பான நீதித் துறையை பார்க்கிலும் அரச ஆணைகள் பலமாக செயற்பட்டுள்ளமையை அதன் பின் வந்த இரண்டாம் விஜயபாகு, நிஸ்ஸங்கமல்ல மன்னர்களின் காலத்துக்குரிய மூலாதாரங்கள் மூலம் தெரிய வருகின்றது. பராக்கிரமபாகு மன்னனால் தண்டனை வழங்கப்பட்டு சிறை வைக்கப்பட்டிருந்த கைதிகளை இரண்டாம் விஜயபாகு மன்னன் விடுதலை செய்ததாகவும் அதே காலத்தில் அரச உடைமையாக்கப்பட்ட நிலங்களை இம்மன்னன் உரியவர்களிடம் ஒப்படைத்ததாகவும் வம்சக் கதை கூறுகின்றது. இவ்விடயங்களுடன் நிஸ்ஸங்கமல்ல மன்னனின் கல்வெட்டுக் குறிப்புகளையும் அவதானிக்கும் போது பராக்கிரமபாகு மன்னனின் மையப்படுத்தப்பட்ட ஆட்சி தனி மனித சுதந்திரத்தை மிகவும் பாதித்துள்ளமையை அறிய முடிகிறது.

சட்டத்தை அமுல்படுத்தி நீதியை நிலைநாட்டும் உரிமை தனியாக மன்னனிடம் மட்டுமே காணப்பட்ட போதிலும் நாட்டில் எல்லா நீதிமன்றங்களிலும் அவனே தீர்ப்பு வழங்கினான் எனக் கருத முடியாது. நிஸ்ஸங்கமல்ல மன்னன் நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலும் நீதிமன்றங்களை நிறுவினான் எனக் கூறும் அவனது கல்வெட்டுகள் மேற்படி கருத்தை உறுதி செய்கின்றன. முதலாம் விஜயபாகு மன்னன் ஆட்சி பீடமேறி சிறிது காலத்தில் கிளர்ச்சியொன்றை மேற்கொண்ட மூன்று சகோதரர்களில் ஒருவன் தம்மகேஹக நாத எனும் தர்ம நீதிமன்றத்தின் தலைவன் அல்லது தலைமை நீதிபதியாவான் என்ற கருத்து நிலவிய போதிலும் தம்பதெனிய யுகத்துக்குரிய 'தலதா சிறித' நூலில் இடம்பெறும் 'தஹம் கெய்னா' எனும் பதவி குறிப்பிடப்படுவதிலிருந்து இவ்விரு பதவிகளாலும் குறிப்பிட்டதொரு சமயப்பணி தொடர்பாகப் பொறுப்பேற்றிருந்த அரச அதிகாரியின் பதவியே சுட்டிக் காட்டப்படுகிறது என்று கருதுவதே சாலப் பொருந்தும். நிஸ்ஸங்கமல்ல மன்னனின் 'தொரட்டியாவ சாசனத்தில் சபாபதினா என்றொரு பதவி குறிப்பிடப்பட்டுள்ளது. பராக்கிரமபாகு மன்னனின் நிருவாகக் கட்டமைப்பு பற்றிக் குறிப்பிடும் 'நிகாய சங்கிரஹய' நூலிலும் 'சபாபதினா' எனும் பதவி குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விரு மூலாதாரங்களிலும் குறிப்பிடப்படும் 'சபாபதினா' என்பவர் அரசனை அடுத்து காணப்பட்ட உயர் நீதிமன்றத்தின் தலைவர் என்று கருதவும் முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நிகாய சங்கிரஹய' வில் இடம் பெறும் பதவிப் பெயர்களுள் 'தஹம் பசக்னா' என்பதும் ஒன்றாகும். தஹம் (தர்ம) என்பது சமஸ்கிருத அரசியல் இலக்கியத்தில் சட்டத்தைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு பொதுச் சொல்லாகும். அதன்படி 'தஹம் பசக்னா' சட்டத்தை நடைமுறைப்படுத்தி நீதியை நிலைநாட்டும் உத்தியோகத்தர் எனக் கருதினால் அவர் நீதிமன்ற நிருவாகத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களின் தலைவராவார் என நாம் கருதலாம். தொரட்டியாவ சாசனத்தில் சபாபதி எனும் பதவியுடன் இணைந்ததாக 'தஹம் பஸ்ஹரே' எனும் சொல்லும் இடம் பெறுவதாகக் கூறும் பேராசிரியர் பரணவிதான அது 'தஹம்பசக்னா' என்பதற்கு இணையானது எனவும் இனங்காட்டுகிறார். நிஸ்ஸங்கமல்ல மன்னனின் 'நீலபொல ராஜமகா விகாரை' சாசனத்தில் தஹம்படஹெரி (தர்ம பாண்டாகாரிக) எனும் பெயரில் இப்பதவி குறிப்பிடப்பட்டுள்ளது. தஹம் பசக்னா என்பது சமயத்தோடு தொடர்பான பதவி என்ற கருத்தும் காணப்படுகிறது. நிஸ்ஸங்கமல்ல மன்னனின் 'கல்பொத்த' கல்வெட்டில் எல்லாக் குடியிருப்புப் பிரதேசங்களிலும் 'தர்மாதிகரண' எனும் நீதி மன்றங்கள் மூலம் அநீதியை ஒழித்து நீதியை நிலைநாட்டியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே முதலாம் விஜயபாகு மன்னனைப்போலவே இவனும் நீதிமன்ற நடவடிக்கைகளைப் புனரமைத்து நீதியை நிலைநாட்டுவதற்குரிய விதத்தில் செயற்பட்டுள்ளான் என நாம் கருதலாம்.

பொலன்னறுவை யுகத்தில் எழுதப்பட்டதாகக் கருதப்படும் சில இலக்கிய நூல்களில் நீதிமன்ற செயற்பாடுகள் பற்றிக் குறிப்பிடப்படும் பகுதிகளையும் காண முடிகின்றது. 'தம்பியா அட்டுவா கற்றபதய' எனும் நூல் 'வினிஜயிகா' எனும் பாளிச் சொல்லுக்கு நீதிபதிகள் எனும் கருத்தைக் கூறுவதோடு நீதி வழங்குவதற்கு அதிகாரம் பெற்ற அதிகாரிகளே அப்பெயரால் அழைக்கப்பட்டதாகவும் கூறுகின்றது. இந்நூலில் மற்றுமோர் இடத்தில் இடம்பெறும் 'வினிஸ்ஸயமகாமந்த' என்பதற்கு நீதிமன்ற முதலமைச்சர் எனும் அர்த்தமும் வழங்கப்பட்டுள்ளது. இவ்விரு பாளிச் சொற்களுக்கும் புத்த பெருமான் கால இந்தியாவில் நடந்த சம்பவங்களின் அடிப்படையிலேயே அர்த்தம் தரப்பட்டுள்ளது. 'புத்தசரண' எனும் நூலில் 'சஹய' எனும் உத்தியோகத்தர்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்கள் நீதிமன்றச் சபை உறுப்பினர்களாக அல்லது நீதிமன்ற செயற்பாடுகளுக்கு உதவியாகவிருந்த உத்தியோகத்தர்களாக இருந்திருக்கலாமெனப் பேராசிரியர் சிறிமல் ரன்வெல்ல கருதுகின்றார். அவ்வுத்தியோகத்தர் எவ்வாறு தெரிவு செய்யப்பட்டார்கள் என்பதை அறிய முடியவில்லை. இலக்கிய மூலாதாரங்களின் படி சரீரத் தண்டனை, எச்சரித்தல், அபராதம் விதித்தல், சிறையிலடைத்தல், சொத்துக்களைப் பறிமுதல் செய்தல், மரண தண்டனை, நாடு கடத்துதல் எனும் தண்டனை முறைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலத்தில் விதிக்கப்பட்டதாக அறியமுடிகின்றது. இத்தண்டனைகளை விதிக்கக் கூடிய அதிகாரம் அரசனிடமே காணப்பட்டதாக 'அமாவத்துர' எனும் நூல் கூறுகின்றது. 'தம்பியா அட்டுவா கற்றபதய' நூலில் சரீரத் தண்டனை, வாய்மொழித் தண்டனை, அபராதம் விதிக்கும் தண்டனை எனும் மூன்று தண்டனை முறைகள் பற்றிக் கூறப்படுகின்றது.

அநுராதபுர யுகத்தில் போன்று நீதித்துறை பற்றி விரிவாகக் கூறும் கல்வெட்டுகள் இக்காலத்தில் கிடைக்காத போதிலும் மேற்கூறிய இலக்கிய மூலாதாரங்களின் தகவல்களை முதலாம் விஜயபாகுவின் 'பனாகடுவ செப்புசாசனம்' உறுதிப்படுத்தும் தகவல்களைத் தருகிறது. மன்னனுக்கு உதவி செய்த புதல்னா என்பவனுக்கும் அவன் பரம்பரையினருக்கும் வழங்கப்பட்ட சலுகைகள் பற்றியே செப்பு சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு அவனுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் பற்றிப் பார்க்கும்போது அக்கால மன்னர்களுக்கு நீதித் துறையில் காணப்பட்ட எல்லையற்ற அதிகாரத்தை நாம் அறிந்து கொள்ளலாம். ஏனெனில் ''புதல்னாவின் பரம்பரையில் வரும் ஒருவர் தண்டனைக்குரிய குற்றம் புரிந்தாலும் அவர்களை விசாரணைக்குற்படுத்தி எச்சரிக்கை செய்யகூடாது. சிறையிலடைத்து அவர்களை அசௌகரியப்படுத்தக் கூடாது. மரண தண்டனை வழங்குமளவிலான குற்றங்களைப் புரிந்தாலும் அவர்களுக்கு மூன்று தடவைகள் மன்னிப்பு வழங்ப்பட வேண்டும். ஏதேனும் ஒரு குற்றச் செயலின் பொருட்டு அவர்களின் காணி, நிலம், சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படக் கூடாது. அவர்களால் ஏதேனும் ராஜதுரோகமிழைக்கப் பட்டாலும் அரசனே அவர்களிடம் சென்று நாடு கடத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமே தவிர அவர்களை அவமானப்படுத்தக் கூடாது'' என்று பனாகடுவ செப்பு சாசனத்தில் தெளிவாக எழுதப்பட்டுள்ளது.

வம்சக்கதை விபரிக்கும் வகையில் அரசனுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்வது அரச குற்றமாகும். எனவே விஜயபாகு மன்னனுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்த மூன்று சகோதரர்களுக்கும் மரண தண்டனை வழங்கப்பட்டது. மேலும் இம்மன்னனுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்த வேளைக்காரன் படையின் தலைவர்கள் கைது செய்யப்பட்டு எரித்துக் கொல்லப்பட்டனர். பராக்கிரமபாகு மன்னனுக்கு எதிராக உருகுணையில் கிளர்ச்சி செய்தவர்கள் உயிருடன் எரிக்கப்பட்டும் தூக்கிலிட்டும் கொலை செய்யப்பட்டனர். 'இராஜதுரோக குற்றமிழைத்தவர் தானாக இருந்தாலும் தனது குடும்பத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் மரண தண்டனைக்கு ஆளாக்கப்பட வேண்டும்' என்று ஒரு கல்வெட்டில் நிஸ்ஸங்கமல்ல மன்னன் பொறித்துள்ளான். இராஜதுரோக குற்றச் செயலுக்கு சமமாகக் கருதப்பட்டது அரச உடமைகளை முறைகேடாகப் பாவிப்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்குற்றத்தைப் புரிந்தவர்கள் கடுந் தண்டனைக்கு உள்ளாக்கப்படுவர் என நிஸ்ஸங்கமல்ல மன்னனின் 'வான் - உல்பத' கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது.

நீதிமன்ற நடவடிக்கைகள் பற்றி விரிவாகக் கூறும் பொலன்னறுவைக் கால கல்வெட்டுகள் கிடைத்ததில்லை ஆயினும் முதலாம் விஜயபாகு மன்னன் அநுராதபுரக் கால ஆட்சி நிருவாக முறையையே கொண்டு நடாத்தினான் எனின் அநுராதபுரக் கால நீதிப் பரிபாலன முறையே பொலன்னறுவைக் காலத்திலும் நிலவியதென நாம் கருத இடமுண்டு. நாட்டின் சகல பகுதிகளிலும் வழக்குகளை விசாரித்து தீர்ப்பு வழங்குவது மன்னனின் நோக்கமாக இருந்திருக்காது. அநுராதபுர யுகத்துக்குரிய 'வேவல்கெட்டிய சுவர்க்கல்வெட்டு' மற்றும் 'பதுளை தூண் கல்வெட்டு' என்பனவற்றின் மூலம் அவ்வவ்பிரதேசங்களில் பிரதேச வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்கியது பத்துக் கிராமப் பிரதானிகளைக் கொண்ட ஒரு சபையின் மூலமாகும். வேவல்கெட்டிய கல்வெட்டின் படி பத்துக் கிராமப் பிரதானிகள் சேர்ந்து சொல்லும் தீர்ப்பானது மீண்டும் தேவைப்படும் போது பார்க்கும் வகையில் எழுதி வைக்கப்பட்டிருப்பதும் அவசியமாகும். சில வேளைகளில் பிரதேச நீதிமன்றத் தீர்ப்பை வாதி அல்லது பிரதிவாதி மீள் பரிசீலனைக்காக மத்திய அரசிடம் முன்வைக்கும்போது அதனை ஆராயும் அதிகாரிக்கு வழக்கு மற்றும் தீர்ப்பு தொடர்பான விபரங்களை அறிந்து கொள்வதற்காக தீர்ப்புகளை எழுதி வைக்கும் வழக்கம் இருந்திருக்கலாம்.

அநுராதபுர மன்னனான நான்காம் உதய மன்னனின் ஆணைப்படியே பதுளை தூண் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. அதன் பிரதான நோக்கம் யாதெனில் ஹோரபிட்டிகம பதிய எனப்படும் வியாபார நிலையம் பற்றிய சட்ட திட்டங்களை வெளியிடுவதாகும். மத்திய கால இலங்கையில் நிலவிய நீதி பரிபாலனம் பற்றி அறிந்து கொள்வதற்கு 'பதுளை தூண் கல்வெட்டு' நல்லதொரு மூலாதாரமாகும். அரசாங்க அதிகாரிகள் புரியும் இலஞ்சம் வாங்குதல் மற்றும் கிராமவாசிகளின் உடைமைகளை வலுக்கட்டாயமாகப் பறித்தெடுத்தல் முதலிய குற்றங்கள் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அவை தடுக்கப்பட்டுள்ளன. இதிலிருந்து நாட்டு மக்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதில் மன்னன் காட்டிய அக்கறையை அறிந்து கொள்ள முடிகிறது. அவ்வப் பிரதேசங்களில் நிலவும் குற்றங்கள் தொடர்பான குற்றவாளிகளைக் கைது செய்வதற்கு கிராமத் தலைவர்கள் ஊக்கமளிக்கப்பட்டதிலிருந்து சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாப்பது அரசின் கடமை மாத்திரமல்ல அது சமூகத்தினதும் கடமையாகும் எனும் கருத்து உணர்த்தப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கல்வெட்டில் குறிப்பிடப்படும் பத்துக் கிராமசபை அங்கத்தவர்களும் நீதிமன்றப் பொறுப்புகளை ஏற்பதற்குப் பொறுத்தமான ஆன்ம தைரியம் உடையவர்களாகவும், நீதியைப் பாதுகாப்பதற்கான உயர் குணங்களைக் கொண்டவர்களாகவும் அறிவுக் கூர்மை உடையவர்களாகவும் காணப்பட்டமை தெரிய வருகின்றது.

நேரடியாகவே நீதிமன்றச் செயற்பாடுகளுக்குரிய தகவலொன்றைத் தரும் 'புதுமுத்தாவ தூண் கல்வெட்டு' இரண்டாம் கஜபாகு மன்னனின் காலத்துக்குரியதாகும். தமிழ் மொழியில் எழுதப்பட்டுள்ள இக்கல்வெட்டில் இரு சாதியினருக்கிடையில் தத்தமது சேவைகள் தொடர்பாக ஏற்பட்ட பிரச்சினையை பஞ்ச பிரதானிகள் தீர்த்து வைத்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அக் காலத்தில் கந்தளாய் அருகே வாழ்ந்த தமிழர் சமூகத்திலேயே மேற்படி பிரச்சினை எழுந்துள்ளது.

தம்பதெனிய யுகத்துக்குரிய நீதிமன்றச் செயற்பாடுகள் தொடர்பான விபரங்கள் அடங்கிய மூலாதாரங்கள் கிடைக்கவில்லை. இந்த யுகத்துக்குரிய 'கந்தவுறுசிறித' எனும் நூலில் மன்னன் யுவராஜா, செனவிரத், ஏபா, மாபா எனும் அரசின் முக்கிய பதவிகளுக்கு மேலதிகமாக பஞ்ச பிரதானிகள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. 'புதுமுத்தாவ' கல்வெட்டிலும் குறிப்பிடப்படும் மேற்படி ஐந்து பிரதானிகளும் அரசவையில் அமரும் தகுதி பெற்ற வெவ்வேறு குலங்களின் தலைவர்களாக இருந்திருக்கலாம் என்று பேராசிரியர் பரண விதான கருதுகின்றார். ஆயினும் இக்கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாமலிருக்கின்றது. ஏனெனில் அக்கால சமூகவமைப்பில் ஐந்து குலங்கள் மட்டுமா இருந்தன, அவை எவை, என்பது பற்றிய தெளிவின்மையாகும். 'பஞ்ச பிரதானிகள்' எனும் பதம் பொலன்னறுவை மற்றும் தம்பதெனிய எனும் இரு யுகங்களுக்குமுரிய மூலாதாரங்களில் குறிப்பிடப்படுவதாலும் 'கந்தவுறு சிறித' வின்படி அப்பிரதானியர் அரசவையில் அமரும் தகுதி பெற்றவர்களாகக் குறிப்பிட்டபடுவதாலும் நீதித்துறையின் உயர் அதிகாரம் பெற்றிருந்த மன்னனுக்கு அடுத்ததாகக் காணப்பட்ட மேன் முறையீட்டு நீதிமன்றமே 'பஞ்ச பிரதானிகள்' என்று கருதவும் முடியாது. ஏனெனில் 'கந்தவுறு சிறித' நூலிலே தஹம் பசக்னா' எனும் பதவியும் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பதவியை வகித்தவர் நீதிமன்ற செயற்பாடுகளின் பிரதானி எனக் கருதவும் முடியும். கோட்டை யுகத்தின் அரச சபையைப் பற்றி வர்ணிக்கும் 'ஹங்ச சந்தேசய' விலும் நீதிமன்றத் தலைமைப் பதவி பற்றிக் குறிப்பிடப்படவில்லை. கோட்டை யுகத்துக்கு சம காலத்தில் எழுதப்பட்டதாகக் கருதப்படும் 'அளுத் நுவர சுவர்க் கல்வெட்டு' ரட்ட நாயக மற்றும் திசா நாயக எனும் இரு பதவிகள் பற்றிக் குறிப்பிடுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டம், நீதி நிருவாகம் என்று அதிகாரம் தெளிவாகப் பிரிக்கப்படாதிருந்த அக்காலத்தில் மேற்படி அரச பிரதானிகளுக்கு வழங்கப்பட்டிருந்த நிருவாக நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக தமது ஆட்சிப் பிரதேசங்களில் நீதிமன்ற நடவடிக்கைகளுக்காகவும் ஓரளவு அதிகாரம் அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்ததாக நாம் கருதலாம்.

முழுமையாகப் பார்க்கும்போது நீதிமன்ற செயற்பாடுகளின் இறைமை அதிகாரம் மிக்கவனாக அரசனே காணப்பட்டான் எனும் முடிவுக்கு நாம் வரலாம். மேலும் 'பத்து கிராமத் தலைவர்கள்', 'பஞ்ச பிரதானிகள்', 'சபாபதினா' முதலிய நிறுவனங்களும் அலுவலர்களும் அரசனுக்கு மாத்திரம் இரண்டாம் நிலையில் இருந்தபடி நீதிமன்ற அதிகாரத்தைக் கொண்டிருந்ததுடன் தத்தமது பிரதேசங்களில் ஏற்படக் கூடிய சிறு பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தல் மற்றும் சிறிய குற்றங்களுக்குரிய தீர்ப்புகளை வழங்குதல் முதலிய செயற்பாடுகளை நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நிருவாகம் புரிந்து வந்த ரட்டநாயக மற்றும் திசாநாயக முதலிய அதிகாரம் பெற்ற பிரதானிகள் மூலமே நடைபெற்றுள்ளன என்று நாம் கருதலாம்.

## உசாத்துணை நூல்கள்


1. இலங்கைப் பல்கலைகழகத்தின் இலங்கை வரலாறு தொகுதி I, பகுதி II, அத்தியாயம் VII

2. புரதான இலங்கை - டபிள்யூ. ஏ. ஜயவர்தன 1964, கொழும்பு

3. மத்திய கால இலங்கையின் பாதுகாப்பு ஒழுங்கமைப்பு - ரீ.ஜீ. குலதுங்க 1968, கொழும்பு

4. புரதான யுக வரலாறு 2, சரதி வெளியீடு 1962, கொழும்பு

5. இலங்கை வரலாற்றுச் சுருக்கம் எச். டபிள்யு. கொட்ரின்டன் 1962 கொழும்பு

6. கம்பளை யுகம் - கஹட்டபிட்டிய ஸ்ரீ தீராநந்த தேரர் 1965, கொழும்பு

7. பொலன்னறுவை யுக வரலாறு I சரதி வெளியீடு, 1962 தெஹிவளை

8. மத்திய கால இலங்கை வரலாறு ஏ.லியன கமகே 1989, கொழும்பு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலுக்குரிய காலப்பகுதியில் இலங்கையை ஆட்சி செய்த அரசர்களின் ஆட்சிக் கால ஒழுங்கமைப்பு பின்வருமாறு

| மன்னர்கள் | ஆட்சிக்காலம் |
| --- | --- |
| | கி.பி - கி.பி |
| 5ஆம் மகிந்தன் | 982 - 1029 |
| 6ஆம் காசியப்பன் | 1029 - 1040 |
| மகலான கீர்த்தி | 1040 - 1042 |
| விக்கிரம பாண்டியன் | 1042 - 1043 |
| ஜகதிபால | 1043 - 1046 |
| பராக்கிரம பாண்டியன் | 1046 - 1048 |
| லோகேஸ்வரன் | 1048 - 1054 |
| 7ஆம் காசியப்பன் | 1054 - 1055 |
| 1ஆம் விஜயபாகு | 1055 - 1110 |
| 1ஆம் ஜயபாகு | 1110 - 1111 |
| 1ஆம் விக்ரமபாகு | 1111 - 1132 |
| 2ஆம் கஜபாகு | 1132 - 1153 |
| 1ஆம் பராக்கிரமபாகு | 1153 - 1186 |
| 2ஆம் விஜயபாகு | 1186 - 1187 |
| நிஸ்ஸங்கமல்லன் | 1187 - 1196 |
| 2ஆம் விக்கிரமபாகு | 1196 - |
| சோட கங்க | 1196 - 1197 |
| லீலாவதி (1ஆம் முறை) | 1197 - 1200 |
| சாகச மல்லன் | 1200 - 1202 |
| கல்யாணவதி | 1202 - 1208 |
| தர்மாசோகன் | 1208 - 1209 |
| அதிகடிக | 1209 - |
| லீலாவதி(2ஆம் முறை) | 1009 - 1210 |
| லோகேஸ்வரன் | 1210 - 1211 |
| லீலாவதி(3ஆம் முறை) | 1211 - 1212 |
| பராக்கிரம பாண்டியன் | 1212 - 1215 |
| மாகன் | 1215 - 1232 |
| 3ஆம் விஜபாகு | 1232 - 1236 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 2ஆம் பாராக்கிரமபாகு | 1236 - 1270 |
| 4ஆம் (போசத்) விஜபாகு | 1271 - 1272 |
| 1ஆம் புவனேகபாகு | 1272 - 1284 |
| அரசனில்லாக் காலம் | 1284 - 1287 |
| 3ஆம் பாராக்கிரமபாகு | 1287 - 1292 |
| 2ஆம் (ஸ்ரீனிவாச) புவனேகபாகு | 1292 - 1302 |
| 4ஆம் (பண்டித) பாராக்கிரமபாகு | 1302 - 1326 |
| 3ஆம் (வன்னி) புவனேகபாகு | 1326 -? |
| 5ஆம் (சவுலு) விஜயபாகு | - -1347 |
| 4ஆம் புவனேகபாகு | 1341 - 1351 |
| 5ஆம் பாராக்கிரமபாகு | 1344 - 1359 |
| 3ஆம் விக்கிரமபாகு | 1357 - 1374 |
| 5ஆம் புவனேகபாகு | 1372 - 1391 |
| 1ஆம் வீரபாகு | 1391 - 1409 |
| செங்கடகல பாராக்கிரமபாகு (பாராக்கிரம ஏபா) | 1410 - 1417 |
| தெதிகம பாராக்கிரமபாகு | 1415 - 1460 |
| 6ஆம் பாாரக்கிரமபாகு (ஜயவர்த்தனபுர) | 1415 - 1467 |
| 2ஆம் ஜயபாகு | 1467 - 1469 |
| 6ஆம் புவனேகபாகு | 1469 - 1480 |
| 7ஆம் (பண்டித) விக்கிரமபாகு | 1480 - 1490 |
| 8ஆம் (வீர) பாராக்கிரமபாகு | 1490 - 1509 |
| 4ஆம் விஜயபாகு | 1509 - 1521 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 5

## வெளிநாட்டுக் கொள்கை

இலங்கை வரலாறு பற்றிக் கற்கும்போது இதுவரை காலமும் அதிக கவனம் செலுத்தாத பகுதியாக இருப்பது ஆதி காலந்தொட்டு இந்நாடு கடைப்பிடித்து வந்த வெளிநாட்டுக் கொள்கையாகும். இத் தலைப்புக்குரிய அதிகமான விடயங்கள் 'வெளிநாட்டுறவுகள்' எனும் தலைப்பில் ஆராயப்பட்ட போதிலும் வெளிநாட்டுத் தொடர்புகள் சமய ரீதியானவை என்றும் கலாசார ரீதியானவை என்றும் உப தலைப்புக்களாக ஆராயப்பட்டதே தவிர இலங்கையில் நிலவி வந்த அரசுகள் தெளிவான வெளிநாட்டுக் கொள்கையொன்றைக் கடைப்பிடித்தனவா என்பது பற்றித் தெரியவில்லை. குறைந்தது தேவ நம்பிய திஸ்ஸ மன்னன் காலம் முதல் இலங்கை வெளிநாட்டுக் கொள்கை ஒன்றைக் கடைப்பிடித்து வந்ததாக அண்மைக் கால ஆய்வுகள் கூறுகின்றன.

இலங்கை இந்து சமுத்திரத்திலமைந்துள்ள ஒரு தீவாக இருந்த போதிலும் அது இந்திய துணைக் கண்டத்துக்கு அண்மையில் அமைந்துள்ள காரணத்தால் இந்தியாவுடன் இணைந்தவொரு வெளிநாட்டுக் கொள்கையையே இலங்கையும் பின்பற்றி வந்துள்ளது. இந்திய அரசியல் சிந்தனையாளர்கள் போதித்த வெளிநாட்டுக் கொள்கை 'மண்டல நியாயம்' என்ற அடிப்படையில் அமைந்திருந்தது. தனது பலத்தைப் பரவலடையச் செய்ய விரும்பும் இராச்சியமானது தனது அயலில் அமைந்துள்ள பன்னிரண்டு இராச்சியங்களை அடிப்படையாகக் கொண்டு விரிவாக்கம் செய்யப்பட்ட 'மண்டல நியாயக் கொள்கை' என்பது இந்திய மன்னர்களால் தெளிவாக மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுக் கொள்கையாகும். இலங்கையின் அமைவிடம் காரணமாக மேற்படி வெளிநாட்டுக் கொள்கை எமது நாட்டுக்கு ஏற்றதாக அமையாதபோதும் இந்தியாவின் பல்வேறு இராச்சியங்களுடனும் தொடர்புகளை மேற்கொண்ட சமயங்களில் இந்நாட்டு மன்னர்களால் இந்திய வெளிவுறவுக் கொள்கையே ஓரளவுக்குப் பின்பற்றப் பட்டுள்ளமை தெரிய வருகின்றது.

ஐந்தாம் நூற்றாண்டு வரை இந்திய இராச்சியங்கள் இலங்கையின் அரசியல் நிலைப்பாட்டுக்கு சவாலாக அமையவில்லை என்பதை அறிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிகின்றது. மௌரியப் பேரரசுடன் இலங்கைக்கிருந்த தொடர்பின் உச்ச பயனாக பௌத்த சமயமும் இந்தியக் கலைகளின் பல்வேறு அம்சங்களும் இலங்கையில் அறிமுகமானதைக் குறிப்பிடலாம். இலங்கையில் தோன்றி வளர்ச்சியடைந்த தேசிய ரீதியிலான இராச்சியத்திற்கு ஐந்தாம் நூற்றாண்டு வரை வட இந்திய கலாசாரச் செல்வாக்கு நிலவியமையாலும் தென்னிந்தியாவில் பலம் வாய்ந்த இராச்சியங்கள் தோற்றம் பெறாமையாலும் இந்திய இராச்சியங்களுடன் பின்பற்றப்பட வேண்டிய வெளியுறவுக் கொள்கை பற்றி இலங்கை அரசர்கள் கவனம் செலுத்தியதாகத் தெரியவில்லை. ஆயினும் சேர, சோழ, பாண்டிய எனும் இன ரீதியிலும் புவியியல் அமைப்பிலும் ஒழுங்கமைந்த தென்னிந்திய இராச்சியங்கள் உருவான ஐந்தாம் நூற்றாண்டின் பின்னர் மேற்படி வெளியுறவுக் கொள்கையில் தெளிவான மாற்றங்கள் ஏற்பட்டன. இலங்கையில் வளர்ச்சி கண்டிருந்த சிங்கள இராச்சியத்தின் நிலைப்பாட்டுக்கும் பாதுகாப்பிற்கும் மேற்படி தென்னிந்திய இராச்சியங்களுடன் தொடர்புகளை வைத்துக் கொள்வதன் அவசியத்தை உணர்ந்த சிங்கள மன்னர்கள் தமது அயல் இராச்சியங்களுடன் தொடர்புகளை மேற்கொள்வதற்காக 'மண்டல நியாயம்' எனும் இந்திய வெளியுறவுக் கொள்கையையே கடைப்பிடித்தனர்.

மானவர்ம இளவரசன் பல்லவ இராச்சியத்தின் உதவியுடன் அநுராதபுர சிம்மாசன உரிமையைப் பெற்றுக்கொண்டமையானது தென்னிந்திய அரசியல் போக்குடன் இலங்கை தொடர்புகொள்வதற்கு முக்கியமான காரணியாக அமைந்தது. பல்லவ இராச்சியத்திற்குத் தெற்கே வளர்ச்சியடைந்து வந்த பாண்டிய இராச்சியத்தால் பல்லவ சிங்கள உறவு தமக்கு எதிரான வெளியுறவுக் கொள்கை என்றே கருதப்பட்டது. ஆயினும் மண்டல நியாயக் கொள்கையின்படி தமக்கு சமீபமாக எழுச்சியடைந்து வரும் இராச்சியத்துக்கு எதிராக அதன் எதிரி இராச்சியத்துடன் தொடர்புகளை மேற்கொள்வது அவசியமாகும் என்பதால் சிங்கள மன்னர்கள் பல்லவ இராச்சியத்துடன் மேற்கொண்ட தொடர்புகளை நாம் தெளிவாக விளங்கிக் கொள்வது அவசியமாகும்.

விந்திய மலையின் தென் பிரதேச ஆதிக்கத்துக்காகப் போட்டியிட்ட பல்லவ, சாளுக்கிய மன்னர்களின் நீண்ட காலப் போராட்டத்தின் விளைவாக அவ்விரு இராச்சியங்களும் வீழ்ச்சியடைந்தன. இலங்கைக்குச் சமீபமாக அமைந்திருந்த பல்லவ இராச்சியத்தின் முடிவினால் இலங்கைக்கு ஏற்பட்ட வெளியுறவு வெற்றிடமானது பாண்டியர்களின் மற்றுமொரு எதிரியான சோழர்களினால் நிரப்பப்பட்டது. சேர இராச்சியம் தென்னிந்தியாவில் ஒரு போதும் பேரரசாக எழுச்சியடையாத காரணத்தால் தென்னிந்தியாவின் அதிகாரச் சமநிலையானது சோழர், பாண்டியரிடையே மாத்திரமே நிலவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தது. பல்லவ இராச்சியத்தின் வீழ்ச்சியின் பின்னர் இராச்சிய ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்ட மேற்படி இராச்சியங்கள் இரண்டிலிருந்தும் ஒதுங்கியிருப்பதற்கு இலங்கையால் முடியாதிருந்தது. சோழ, பாண்டிய அதிகாரப் போட்டியின் முதல் சுற்றில் பாண்டியரின் கையோங்கியிருந்தமையாலும் இலங்கை பல்லவருடன் தொடர்பு வைத்திருந்த காலகட்டத்தில் ஸ்ரீ மார ஸ்ரீ வல்லப பாண்டியனால் இலங்கை ஆக்கிரமிக்கப்பட்டமையாலும் சிங்கள, பாண்டிய எதிர்ப்பு உச்சக் கட்டத்தில் காணப்பட்டது. ஆயினும் பாண்டியரின் எழுச்சி தற்காலிகமானது என்பதை பாண்டிய இராச்சியத்தினுள்ளே முளைவிட்ட சிம்மாசன உரிமைப் போராட்டம் வெளிப்படுத்தியது. இரண்டாம் சேன மன்னனின் படையினரால் வரகுணவர்மன் எனும் இளவரசனுக்குப் பாண்டிய சிம்மாசனம் பெற்றுக் கொடுக்கப்பட்டமையானது இலங்கை மன்னர்களுக்குத் தமது கிட்டிய எதிரியை அடக்குவதற்கு வாய்பான சந்தர்ப்பமாக அமைந்ததுடன் பாண்டிய இராச்சியத்தின் தலைவிதியைத் தீர்மானிக்கும் உரிமை தம்மைச் சார்ந்தது என்று சிங்கள மன்னர்களைக் கருதவும் செய்த நிகழ்வாக அமைந்தது. இரண்டாம் சேன மன்னனின் காலத்திலிருந்து சிங்கள - பாண்டிய நட்புறவை வளர்ப்பதற்கு மேற்படி உரிமையைப் போன்றே தென்னிந்தியாவில் புதிதாக வளர்ந்து வந்த அரசியல் பலசாலியான சோழரிடமிருந்து பாதுகாப்புப் பெறுவதும் காரணமாக அமைந்ததெனக் கருத இடமுண்டு. சேர நாடு பலவீனமான இராச்சியமாக விளங்கிய போதிலும் இலங்கை அதனுடன் நட்புறவை பேணி வந்ததும் இதனாலேயாகும். ஆயினும் சோழருக்கு எதிரான இந்த சேர, பாண்டிய, சிங்களக் கூட்டணி சோழ இராச்சிய அதிகாரத்தின் முன்னால் வேகமாகப் பலமிழந்து போனது. முதலாம் பராந்தகன் எனும் சோழப் பேரரசன் தனது எதிரியான பாண்டியரைத் தோற்கடித்து அவர்களின் தலைநகரான மதுரையில் வைத்து முடிசூடுவதற்கு மேற்கொண்ட முயற்சியின் விளைவாக பாண்டியரின் நட்பு நாடான இலங்கையும் சோழரின் ஆக்கிரமிப்புக்கு ஆளானது. இது பற்றி இலங்கை வரலாறு முதலாம் பாகத்தில் விளக்கமாக எழுதப்பட்டுள்ளது.

சோழப் பேரரசர்கள் கடைப்பிடித்த திக்விஜயக் கொள்கையின் இரண்டாவது கட்டம் இராஜராஜ சோழனால் ஆரம்பிக்கப்பட்டது. இப் பேரரசனின் காலத்தில் பாண்டிய, சேர இராச்சியங்களிரண்டும் சோழப் பேரரசின் கீழ் முழுமையாகக் கொண்டு வரப்பட்டதுடன் இந்து சமுத்திரத்தில் இந்தியாவுக்கு அண்மையிலும் சேய்மையிலும் அமைந்திருந்த தீவுகளையும் சோழப் பேரரசின் கீழ்க் கொண்டு வருவதற்கான முயற்சிகளும் இராஜராஜ சோழ மன்னனின் காலத்திலேயே மேற்கொள்ளப்பட்டது. இதன் விளைவாகவே 1017 ஆம் ஆண்டு சோழரால் இலங்கை கைப்பற்றப்பட்டதும் அநுராதபுர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராசதானி வீழ்ச்சியடைந்ததுடன் வட இலங்கை சோழப் பேரரசின் ஒரு மண்டலமாக அல்லது குடியேற்றமாக மாறியதுடன் அநுராதபுரத்தின் இறுதி மன்னனான ஐந்தாம் மகிந்தன் கைதியாக சோழ நாட்டுக்குக் கொண்டு செல்லப்பட்டான். இவை பற்றியும் முதலாம் பாகத்தில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

அநுராதபுர யுகத்தின் இறுதிப் பகுதியில் ஆட்சிசெய்த அரசர்கள் கடைப்பிடித்த சோழர் எதிர்ப்புக் கொள்கைக்கான பிரதான சவால் என்னவெனில் அவர்களின் தென்னிந்திய நண்பர்களான சேரரும் பாண்டியரும் சோழராதிக்கத்தின் முன்னால் தமது இராச்சியங்களையே இழந்தமையாகும். எனவே அச்சவாலுக்கு முகங் கொடுப்பதற்காக சோழ இராச்சியத்துக்கு வடக்கே அமைந்திருந்த இராச்சியங்களுடன் சிங்கள மன்னர்கள் உறவு வைத்துக் கொள்ள முயன்றுள்ளமை தெரிய வருகின்றது. இவ்வாறானதொரு வெளியுறவுக் கொள்கை முதன்முதலாக வெளிப்படுவது அநுராதபுர மன்னர்களுள் பிரபலமானவர்களுள் ஒருவரான நான்காம் மகிந்தனின் காலத்திலாகும். இம்மன்னன் இலங்கையில் சத்திரிய குலப் பெண்கள் இருந்த நிலையில் கலிங்க இளவரசியைத் திருமணம் செய்து தனது பட்டத்து இராணியாக்கிக் கொண்டான் என்று மகா வம்சம் கூறுகின்றது. நான்காம் மகிந்த மன்னனின் கலிங்கத் திருமண உறவு சிங்கள மன்னர்களின் சோழர் எதிர்ப்புக் கொள்கையைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கான ஆரம்ப நடவடிக்கையாக அமைந்ததைப் பொலன்னறுவை யுக மன்னர்களின் திருமண உறவுகளைப் பரிசீலிக்கும் போது தெரிய வருகின்றது.

கலிங்கத் தேசத்தைத் தமது நண்பர்களாக வைத்துக் கொண்ட போதிலும் இலங்கையின் சோழர் எதிர்ப்புக் கொள்கையை முன்னெடுப்பதில் அவர்களிடமிருந்து உதவிகள் கிடைக்காமைக்கான காரணம் கலிங்க தேசம் தனது தென் எல்லையைப் பாதுகாப்பதற்காக சோழருடன் கடும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமையாகும். தமது உள்நாட்டுப் பிரச்சினைக்கு உதவி பெறுவதற்கு வெகு தொலைவிலிருக்கும் இலங்கையை விட தமக்கு அருகில் இருக்கும் சோழரின் எதிரிகளான சாளுக்கியரின் உதவியைப் பெற்றுக் கொள்வதே தமக்குப் பயனுடையதெனக் கலிங்க மன்னர்கள் கருதியிருக்கலாம். செழிப்பு மிக்க பிரதேசமான வெங்கியைக் கைப்பற்றுவதில் சாளுக்கிய மன்னன் முதலாம் சோமேஸ்வரனுக்கும் சோழப் பேரரசனான வீர ராஜேந்திர சோழனுக்குமிடையே 1062 ஆம் ஆண்டு முதல் 1068 ஆம் ஆண்டு வரை தொடர்ந்தும் மோதல் இடம் பெற்றது. இப்போரில் தோல்வியடைந்த சோமேஸ்வர மன்னன் கூடல் சங்கமம் எனும் நதியில் குதித்து தற்கொலை செய்து கொண்டான். அதனையடுத்து கல்யாணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராச்சியத்தின் அரசனாக இரண்டாம் சோமேஸ்வரன் ஆட்சிபீடமேறிய போதும் அவனை எதிர்த்து ஆட்சிபீடமேறிய அவனது தம்பியான விக்கிரமாதித்தன் சாளுக்கிய இராச்சியத்தை மாத்திரமல்ல சோழர்களால் வெற்றி கொள்ளப்பட்ட வெங்கிப் பிரதேசத்தை மீட்பதற்காகவும் பல போர்களில் ஈடுபட்டான். இப்போர்களின்போது சோழப் பேரரசனுக்கு எதிரான சோழ இளவரசர்களினதும் கலிங்க மன்னனினதும் உதவியை விக்கிரமாதித்தன் பெற்றுக் கொண்டான். கிருஷ்ணா நதிக் கரையில் விஜயவாடா எனுமிடத்தில் நடைபெற்ற கடுஞ் சமரில் விக்கிரமாதித்தனையும் அவன் நண்பர்களையும் வீர இராஜேந்திர சோழன் படுதோல்வியடையச் செய்தான்.

இந்தத் தென்னிந்தியப் பின்னணியானது 1029 முதல் 1053 வரையிலான இலங்கையின் சோழர் எதிர்ப்புப் பற்றி ஆராயும்போது முக்கியத்துவம் பெறுகின்றது. நாலாம் மகிந்த மன்னனின் கலிங்க தேச திருமண உறவு காரணமாக இலங்கைக்கு அரசியல் ரீதியாகவோ யுத்த ரீதியாகவோ எதுவித நன்மைகளும் விளையாத போதிலும் இலங்கையின் சோழர் எதிர்புக் கொள்கையை முன்னெடுப்பதில் கலிங்கத் தேசத்து உறவைப் பேணுவது அவசியம் என்பதை இலங்கை மன்னர்கள் உணர்ந்து செயற்பட்டமை தெரிய வருகின்றது.

சோழப் பேரரசுக் கொள்கைக்கு எதிரான கூட்டணி அமைத்து ஒன்று திரளுவதற்கு தென்னிந்திய இராச்சியங்களும் இளவரசர்களும் மேற்கொண்ட முயற்சியின் உப விளைவுகளை இலங்கையின் சோழர் எதிர்ப்புப் போராட்டங்களின்போதும் காண முடிந்தது. மகலான கித்தி எனும் சிங்களத் தலைவன் சோழர்களால் கொலை செய்யப்பட்ட பின்னர் சோழருக்கு எதிரான சிங்களப் படைக்குத் தலைமை தாங்கியவன் விக்கிரம பாண்டியன் எனும் இளவரசனாவான். இவன் சோழருக்குப் பயந்து தனது நாட்டிலிருந்து இலங்கைக்குத் தப்பி வந்த பாண்டிய இளவரசனாவான். இலங்கையில் நிலவிய சோழர் எதிர்ப்பு நடவடிக்கைகள் பற்றிப் போதிய விளக்கம் பாண்டிய இளவரசனுக்கு இருந்ததாக வம்சக் கதைகள் கூறுகின்றன. தமது இராச்சியங்கள் சோழரால் வெற்றி கொள்ளப்பட்ட பின்னரும் அவர்களுக்கு எதிராகப் போர் புரிந்த சிங்கள, பாண்டிய அரச வம்சங்களின் இரண்டாம் நிலைத் தலைவர்கள் தமக்கிடையே புரிந்துணர்வுடன் செயற்பட்டமையையே விக்கிரம பாண்டியனின் சிங்களப் படைக்கான தலைமைத்துவம் சுட்டிக் காட்டுகிறது. என்றாலும் இத் தலைவர்களிடம் நிலவிய விரோதக் கொள்கைகளினாலோ என்னவோ ஜகதிபால எனும் இந்தியத் தொடர்புள்ள ஒரு தலைவனால் விக்கிரம பாண்டியன் கொல்லப்பட்டான். 'இராமர் வம்சத்தில் பிறந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயோத்தியிலிருந்து இலங்கை வந்த மிகவும் பலம் பொருந்திய இளவரசன்' என வம்சக் கதைகள் வர்ணிக்கும் ஜகதிபாலவும் 'சிங்களாதீஸ்வர வீரசலாமேக' என்று இராஜாதிராஜ சோழப் பேரரசனின் 'மணி மங்கலம்' கல்வெட்டில் கூறப்படும் ஆட்சியாளனும் ஒருவனே என்று பேராசிரியர் பரணவிதான அவர்கள் கூறுகின்றார். இவ்விரு மூலாதாரங்களிலிருந்தும் மேற்படி இளவரசன் வட இந்தியாவிலிருந்து வந்துள்ளமை தெளிவாகின்றது. அதாவது வட இந்தியாவில் இஸ்லாமியப் பேரரசு விரிவடைந்த காலத்தில் தென்னிந்தியாவுக்குத் தப்பி வந்த இளவரசன் இலங்கைக்கு வந்திருக்கலாம் என்று கருத இடமுண்டு. ஜகதிபபால இளவரசன் நான்கு வருடங்களில் சோழரால் கொலை செய்யப்பட்ட பின்னர் மீண்டும் சிங்களப் படையினருக்குப் பராக்கிரம பாண்டியன் எனும் தென்னிந்திய இளவரசன் தலைமை தாங்கினான். இவன் பாண்டிய மன்னனின் மகனாவான் என்று வம்சக் கதைகள் தெளிவாகக் கூறுகின்றன. இது தவிர மேற் கூறப்பட்ட 'மணி மங்கலம்' கல்வெட்டில் ஈழத்தின் அதிபதியான கண்ணரன் (கிருஷ்ண வம்சம்) ஸ்ரீ வல்லபன் (ஸ்ரீவல்லப) மதனராஜன் எனும் ஆட்சியாளன் சோழரிடம் தோல்வியடைந்ததாகக் குறிப்பிட்டுள்ளது. சோழர் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்குத் தலைமைத்துவம் வழங்கிய தலைவர்களுள் மேற்படி கல்வெட்டில் கூறப்படும் பெயர் வம்சக் கதைகளில் குறிப்பிடப்படவில்லை என்றாலும் அவன் ராஷ்டிரகூட இராச்சியத்திலிருந்து இலங்கை வந்த தலைவனாக இருக்கலாம் என்று பேராசிரியர் பரணவிதான கருதுகின்றார். ஏனெனில் பதினோராம் நூற்றாண்டின் மத்திய காலப்பகுதியில் விந்திய மலைக்குத் தெற்கே சோழருக்குப் பெருஞ்சவாலாக விளங்கியது ராஷ்டிரகூட இராச்சியமாகும். அவ்வாறானதொரு நிலைமையின் கீழ் இலங்கையின் சோழர் எதிர்ப்புப் போராட்டமும் மேற்குத் தக்கணத்தின் சோழர் எதிர்ப்புப் போராட்டமும் ஏதோ ஒரு வகைகளில் கைகோர்த்துக் கொண்டு செயற்பட்டதாகவும் கருதுவதற்கு இடமுண்டு.

சோழராதிக்கம் இலங்கையில் நிலவிய கால கட்டத்திலும் சிங்களவர் மேற்கொண்ட சோழர் எதிர்ப்புப் போராட்டமானது தென்னிந்தியாவின் சோழர் எதிர்ப்புப் போராட்டத்துடன் கை கோர்த்து செயற்பட்டமைக்கான ஆதாரங்கள் சோழரின் கல்வெட்டுக்களிலிருந்து கிடைக்கப் பெற்றுள்ளன. முதலாம் இராஜராஜ சோழனின் இருபத்தேழாம் ஆட்சி வருடத்துக்குரிய அவனது கல்வெட்டொன்றில் (தான்) தெற்கின் நட்பரசர் மூவருள் மானாபரண மன்னனின் பெரிய மாணிக்கக் கல் பதித்து அலகரிக்கப்பட்டதும் பிரிக்க முடியாத தங்க மானைக் கொண்டதுமான அழகிய மகுடத்தைச் சூடிய தலையைப் போர்க்களத்தில் வைத்து வெட்டி வீழ்த்தியதாகக் குறிப்பிட்டுள்ளான். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நட்பு மன்னர்கள் மூவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண்டிய, சேர, சிங்கள மன்னர்கள் என்றும் மானாபரன இலங்கை மன்னன் என்றும் பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரி கருதுகின்றார். என்றாலும் இக் கால கட்டத்தில் இலங்கையில் மாணாபரண என்ற பெயரில் மன்னன் ஒருவன் ஆட்சிசெய்யதாக வம்சக் கதைகளில் குறிப்பிடப்படாமையினால் அதனை உறுதி செய்வது கடினம். என்றாலும் அநுராதபுர யுகத்தின் இறுதிக் காலத்தில் சிங்கள மன்னர்கள் கடைப்பிடித்த சோழர் எதிர்ப்புக் கொள்கையைத் தொடர்ந்து முன்னெடுக்கும்போது தென் பகுதி அரசர்களின் நட்புக் கூட்டணியை நலிவடையச் செய்வது தமது வெளிநாட்டுக் கொள்கையின் பெரு வெற்றியாக சோழரினால் கருதப்பட்டமை தெளிவாகின்றது.

1053 ஆம் ஆண்டின் பின்னர் இலங்கையில் சோழர் எதிர்ப்பு இயக்கம் கித்தி அல்லது விஜயபாகு இளவரசனாலேயே முன்னெடுக்கப்பட்டது. இவன் இலங்கைத் தலைவர்களான புத்தராஜ, தேவமல்ல முதலியோருடன் ஏற்படுத்திக் கொண்ட நட்புக் கூட்டு தவிர தென்னிந்தியாவில் சோழரின் எதிரிகளுடன் தொடர்பு கொண்டமை பற்றி எதுவித தகவலும் கிடைக்கவில்லை. என்றாலும் அவன் 1055 - 1056 காலகட்டத்தில் கதிர்காமத்தைத் தனது அதிகார மையமாகக் கொண்டு செயற்பட்ட காலத்தில் பர்மாவுடன் தொடர்புகளை வைத்திருத்தமையை நாம் ஏற்கனவே அறிந்தோம். இத்தொடர்பு வெளிநாட்டு வர்த்தகத்துடன் தொடர்பானது என்ற பிரபலமான கருத்தை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனெனில் வெளிநாட்டு வர்த்தக உறவுகளை வைத்துக் கொள்ளும் அளவிற்கு கதிர்காமம் வளர்ச்சியடைந்த நிலையில் காணப்படவில்லை. இக்காலப் பகுதியில் சோழப் பேரரசின் ஆக்கிரமிப்புக் கொள்கை காரணமாக தென்னிந்தியாவும் இலங்கையும் மாத்திரமல்ல இந்து சமுத்திரத்தில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த தென்கிழக்காசிய தீவுகளும் ராமஞ்ஞ தேசம் எனும் தென் பர்மாவும் கூட அழுத்தங்களுக்கும் அவதிகளுக்கும் ஆளாயின. எனவே ராமஞ்ஞ தேச ஆட்சியாளன் தன்னாலியன்ற உதவிகளை இலங்கையின் சிங்கள மன்னனுக்கு வழங்க முன்வந்ததாக ஏன் கருதக் கூடாது என்பது ஆய்வு செய்யப்பட வேண்டியதாகும்.

முதலாம் விஜயபாகு மன்னன் இலங்கை மன்னனான பின்னர் அரை நூற்றாண்டு காலமாக நிலவிய சோழராட்சியில் சீரழிந்த நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்ட அதே வேளை பாதுகாப்பான வெளியுறவுக் கொள்கை ஒன்றைக் கடைப்பிடித்தமையையும் அறிய முடிகின்றது. இயல்பான சோழர் எதிர்ப்புக் கொள்கைக்கு மேலதிகமாக சோழர் இலங்கையின் பெரும் பகுதியை தமது ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்தமையானது சோழர் எதிர்ப்புக் கொள்கைக்கு அடிப்படையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்தது. அதே கால கட்டத்தில் சோழர்கள் இந்தியாவில் சாளுக்கியர் மற்றும் ராஷ்டிரகூட இராச்சியங்களின் கடும் எதிர்ப்புக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்த போதிலும் அதனால் இலங்கை அரசர்கள் இந்தியா தொடர்பாக உதாசீனமான கொள்கை ஒன்றைக் கடைப்பிடிக்கக் காரணமாய் அமையவில்லை. அதே போன்று தேவையில்லாத வகையில் தென்னிந்திய அரசியலில் தலையிடாமல் இருப்பதும் அவசியமாக இருந்தது. ஏனெனில் நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு மன்னர்கள் தமது முழுப் பலத்தையும் பயன்படுத்த வேண்டி இருந்தது. இந்நிலைமையில் முதலாம் விஜயபாகு மன்னன் 'மண்டல நியாயக் கொள்கை' யைக் கடைபிடித்து தென்னிந்தியாவின் சோழர் எதிர்ப்பு இராச்சியங்களுடன் தூதுவராலயத் தொடர்புகளையும் விவாகத் தொடர்புகளையும் மேற்கொண்டு வலயத்தில் சோழரைத் தனிமைப்படுத்தும் முறையைக் கடைப்பிடித்தான். "வெற்றிகரமான வெளிநாட்டுக் கொள்கையைக் கடைபிடிக்கும் இராச்சியங்கள் தமது பிரதான எதிரியை நேரடியாக எதிர்ப்பதற்கு முடியாத சந்தர்ப்பங்களில் நட்பு நாடுகளுடனும் பலவீனமான இராச்சியங்களுடனும் தொடர்புகளை ஏற்படுத்தி உறவுகளை வளர்த்துக் கொண்டு பிரதான எதிரியை சுற்றி வளைக்க வேண்டும்" என்று 'மண்டல நியாயம்' ஊடாக கௌடில்யர் விளக்கம் தருகின்றார்.

விஜயபாகு மன்னனின் ஒரு மனைவியான லீலாவதி இலங்கையில் சோழர் எதிர்ப்புப் படைக்குத் தலைமை தாங்கிய ஜகதிபால என்பவனின் மகளாவாள். இந்த இளவரசியும் அவளது தாயும் சோழ நாட்டில் சிறை வைக்கப்பட்டிருந்தனர் என்றும் எப்படியோ தப்பிக் கொண்ட அவ்விருவரும் 1075 ஆம் ஆண்டு இலங்கை வந்து விஜயபாகு மன்னனை சந்தித்தனர் என்றும் அச்சமயம் மன்னன் இளவரசியைத் திருமணம் செய்து தனது பட்டத்து இராணியாக்கிக் கொண்டான் என்றும் வம்சக் கதைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. பெண்கள் இருவர் பலம் வாய்ந்த இராச்சியமொன்றின் சிறையிலிருந்து தப்பிக் கப்பலேறி இலங்கை வருவதாயின் அவர்களுக்குத் தென்னிந்தியாவின் சோழரின் எதிரிகள் உதவி செய்திருக்கலாம் என்று நாம் கருதலாம். இவ்வாறு சோழரின் எதிரிக் குடும்பமொன்றில் திருமண உறவு வைத்துக் கொண்டமையமானது விஜயபாகு மன்னனின் சோழர் எதிர்ப்புக் கொள்கையின் ஆரம்பமாகும். பின்னர் விஜயபாகு மன்னன் கலிங்கத் தேசத்திலிருந்து திரிலோக சுந்தரி எனும் இளவரசியை வரவழைத்துத் திருமணம் செய்து கொண்டான். கலிங்க வம்சத்தில் நான்காம் மகிந்த மன்னனே முதன்முதலாகத் திருமண உறவு வைத்துக் கொண்ட இலங்கை மன்னன் என்பதையும் நாம் ஏற்கனவே அறிந்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது இந்தியாவில் சோழரின் எதிரணியில் முக்கியமான செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்த கலிங்க மன்னனுக்கு திரிலோக சுந்தரி இளவரசி என்ன உறவு என்பது பற்றி தெளிவாகத் தெரியவில்லை. எது எப்படியாயினும் சோழ நாட்டுக்கு வடக்கே அமைந்திருந்த அதன் எதிரி இராச்சியமொன்றில் திருமண உறவை வைத்துக் கொண்டது இலங்கையின் சோழர் எதிர்ப்பு வெளிநாட்டுக் கொள்கையைப் பிரபல்யப்படுத்துவதற்காகும் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை. மேற்படி கலிங்க இளவரசியுடன் மூன்று கலிங்க இளவரசர்களும் வந்ததாக வம்சக் கதைகள் கூறுகின்றன. விஜயபாகு மன்னன் தனது சோழர் எதிர்ப்பை வெளிப்படையாகக் காட்டியது அவனது தங்கை மித்தாவின் திருமணத்தின்போதாகும். ஏனெனில் மித்தாவைப் பெண் கேட்டு சோழ நாட்டிலிருந்து தூது வந்த போதிலும் அதனை மறுத்த விஜயபாகு அவளைப் பாண்டிய இளவரசன் ஒருவனுக்குத் திருமணம்செய்து கொடுத்ததாகவும் கூறப்படுகின்றது. மித்தா இளவரசியைப் பெண் கேட்டனுப்பிய தூது உண்மையாயின் அக்காலத்தில் மேற்கே அமைந்திருந்த சாளுக்கிய இராச்சிய எழுச்சியின் முன்னால் வீழ்ச்சியடைந்து கொண்டிருந்த சோழப் பேரரசு சிங்கள அரசுடன் நட்புறவைப் பேணுவதற்காக மேற்கொண்ட இராஜ தந்திரமாகவும் அதனை நாம் கருதலாம். சோழருக்கு எதிரிகளான பாண்டிய அரச வம்ச இளவரசனுக்குத் தனது தங்கையைத் திருமணம் செய்து கொடுத்ததன் மூலம் விஜயபாகு மன்னன் அநுராதபுர யுகத்தின் இறுதி மன்னர்கள் கடைப்பிடித்த வெளியுறவுக் கொள்கையைக் கடைப்பிடித்ததுடன் சிங்கள பாண்டிய தொடர்புகளுக்கும் அத்திவாரமிட்டுள்ளான் என்பது தெரிகிறது. இது தவிர விஜயபாகு மன்னன் சாளுக்கியரின் தேசமான கர்நாடகத்துடனும் காணிக்கைகளையும் தூதுவர்களையும் பரிமாறிக் கொண்டான். இக் காரணிகளை சீர்தூக்கிப் பார்க்கும்போது விஜயபாகு மன்னன் சோழருக்கு எதிரான இராச்சியங்களுடன் அரசியல் திருமண உறவுகளைப் பேணுவதைத் தன் வெளியுறவுக் கொள்கையாகக் கடைப்பிடித்தமை தெரிகின்றது. இதன் மூலம் சோழரைத் தனிமைப்படுத்துவதும் தனது இராச்சியத்தைப் பாதுகாத்துக் கொள்வதும் அவனது நோக்கமாகும். இது வெற்றிகரமானதொரு வெளிநாட்டுக் கொள்கை என்பது தெரிய வருகின்றது. ஏனெனில் அக்காலகட்டத்தில் அசௌகரியமான சூழ் நிலையிலிருந்த சோழப் பேரரசன் மித்தாவைப் பெண் கேட்டு பொலன்னறுவை அரசவைக்கு ஒரு தூதுக் குழுவை அனுப்பியதிலிருந்து அது தெளிவாகின்றது. எனவே இந்த சோழர் எதிர்ப்புக் கொள்கையின் உண்மை நிலையை 1085இல் சிங்களவர், சோழர் இடையே வெளிப்படையாக ஏற்பட்ட எதிர்ப்பு நடவடிக்கைகள் ஊர்ஜிதம் செய்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1085ஆம் ஆண்டு கர்நாடகம், மற்றும் சோழநாடு எனும் இராச்சியங்களிலிருந்து பொலன்னறுவை வந்த தூதுக் குழுக்கள் கௌரவத்துடன் வரவேற்கப்பட்டன. ஆயினும் விஜயபாகு மன்னன் தனது தூதுவர்களுடன் கர்நாடகத் தூதுக்குழுவினரையே முதலில் திருப்பியனுப்பினான். இது நேரடியாகவே சோழரை மனம் நோகச் செய்யப்பட்டதாகும். ஏனெனில் சோழ நாட்டின் ஊடாகப் பயணம் செய்த சிங்களத் தூதுவர்களை கைது செய்து அவர்களின் காது, மூக்கு முதலிய உறுப்புகளை அறுத்து ஏற்கனவே சோழர் இலங்கைக்கு அனுப்பி இருந்தனர். இதனால் கோபமடைந்த மன்னன் பொலன்னறுவையிலிருந்த சோழத் தூதுவர்களை அழைத்து அவர்களுக்குப் பெண்களின் ஆடையணிகளை அணிவித்து தனது யுத்தப் பிரகடனத்தைத் தெரிவிக்குமாறு அனுப்பி வைத்தான். அதனைத் தொடர்ந்து விஜயபாகு மன்னன் இரண்டு துறைமுகங்களில் சோழருக்கு எதிராகப் படை திரட்டினான். என்றாலும் அதனை எதிர்த்து வேளைக்காரன் படை கிளர்ச்சி செய்தமையால் அப்படையெடுப்பு இடை நடுவில் கைவிடப்பட்டதை நாம் ஏற்கனவே பார்த்தோம் ஆயினும் சோழப் பேரரசு விஜயபாகுவின் சவாலுக்கு எதிர் நடவடிக்கை எதுவும் மேற்கொண்டதாக வம்சக் கதைகளில் குறிப்பிடப்படவில்லை வேளைக்காரன் படை எனும் கூலிப் படையினரின் கிளர்ச்சியானது சோழரின் தூண்டுதலாலேயே இடம் பெற்றது என்ற கருத்தையும் நாம் புறக்கணிக்க முடியாது. அது சோழர்கள் மேற்கு கர்நாடகத்தில் சாளுக்கியருடன் கடுமையான மோதலில் ஈடுபட்டிருந்த காலமென்பதால் அக்காலகட்டத்தில் இலங்கை மீது படையெடுப்புகள் இடம்பெறவில்லையாயினும் அதற்குப் பதினைந்து ஆண்டுகளுக்குப் பின்னர் அவ்வாறானதோர் ஆக்கிரமிப்பு பற்றிய அச்சம் இலங்கையில் நிலவியது. ஏனெனில் 1100 - 1101 காலப்பகுதியில் விஜயபாகு மன்னன் தனது படையினருடன் மகாதித்த (மன்னார்) துறைமுகத்தில் சோழர் படையை எதிர்ப்பார்த்திருந்ததாகக் கூறப்படுகின்றது.

முதலாம் விஜயபாகு மன்னன் ராமஞ்ஞு தேசம் எனும் தென் பர்மாவுடன் வைத்திருந்த நல்லுறவுகளைத் தொடர்ந்தும் பேணும் வெளியுறவுக் கொள்கையைக் கடைப்பிடித்து வந்தான். இத்தொடர்பினால் இலங்கையில் பௌத்த சமய மறுலர்ச்சி ஏற்பட்ட விதம் பற்றி இதே நூலில் ஏழாம் அத்தியாயத்தில் விளக்கப்பட்டுள்ளது.

விஜயபாகு மன்னனின் மறைவைத் தொடர்ந்து (1110 - 1111) முதலாம் பராக்கிரமபாகு மன்னன் 1153 இலங்கை மன்னனாகும் காலம் வரையிலான கால கட்டம் வெளிநாட்டுக் கொள்கை மட்டுமன்றி உள்நாட்டுக் கொள்கை கூட கடைப்பிடிக்கப்படாத துரதிஷ்ட காலமாகும். இதற்குப் பிரதான காரணம் விஜயபாகு மன்னனின் திருமண உறவுகளால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிம்மாசன உரிமை தொடர்பில் ஏற்பட்ட பாண்டிய, கலிங்க அரச வம்சங்களுக்கிடையிலான அதிகாரப் போட்டியாகும். இந்த சிம்மாசன உரிமைப் போராட்டமானது பொலன்னறுவை யுகம் முழுதும் தொடர்ந்தது.

மகா பராக்கிரமபாகு மன்னன் நாட்டின் பொருளாதார, மானுட வளங்களை உரிய முறையில் பிரயோகித்து வெற்றிகரமாக முன்னெடுத்த உள் நாட்டுக் கொள்கை காரணமாக இலங்கை தென்னாசிய தென் கிழக்காசிய வலயத்தில் பிரபல்யமானதொரு இராச்சியமாகத் திகழ்ந்தது. பராக்கிரமபாகு மன்னன் ராமஞ்ஞதேசம் மற்றும் தென்னிந்தியாவுடன் மேற்கொண்ட போர்கள் தொடர்பாகக் கூறப்படும் அவனது கடற் படையானது சோழரின் பெரு வெற்றிக்குக் காரணமாயமைந்த அவர்களது கடற்படைக்கு சமமானதாகக் காணப்பட்டது.

ராமஞ்ஞ தேசத்துடன் நிலவிய நல்லுறவில் விரிசல் ஏற்பட்ட விதமும் அதனால் பராக்கிரமபாகு மன்னனின் கடற்படை அந்நாட்டைக் கைப்பற்றிய விதமும் ஏற்கனவே விளக்கப்பட்டுள்ளது. இவ்விபரங்களின்படி விஜயபாகு மன்னனைப் போன்றே பராக்கிரமபாகு மன்னனும் ராமஞ்ஞ தேசத்துடன் நல்லுறவுகளை வளர்த்துக் கொள்ள விரும்பியமைக்கான காரணம் இரு நாடுகளும் தேரவாத பௌத்த கொள்கையைக் கடைப்பிடித்தமையும் இரு நாடுகளுக்கிடையேயும் காணப்பட்ட வர்த்தகத் தொடர்புகளுமாகும். பர்மாவுடன் மாத்திரமல்லாது நிகழ்காலத்தில் லாவோஸ், கம்பூச்சியா என்றழைக்கப்படும் நாடுகளுடனும் இலங்கை வர்த்தகத் தொடர்புகளை வைத்திருந்தது. இந்த நாடுகளில் இலங்கை எந்தளவுக்கு கௌரவமும் மதிப்பும் பெற்றிருந்ததென்றால் இலங்கை இளவரசி ஒருவரைத் திருமணம் செய்துகொள்வதை அந்நாடுகள் உயர்வாகக் கருதின. பர்மாவுடன் இலங்கை யுத்தம் செய்வதற்குக் காரணமயமைந்ததும் கம்பூச்சியாவுக்கு அனுப்பப்பட்ட இலங்கை இளவரசி பர்மாவால் கடத்தப்பட்டமையாகும். இவ்வாறு இலங்கையிலிருந்து பர்மா முதலிய நாடுகளுக்கு அனுப்பபட்ட இளவரசியர் பற்றிய விபரங்கள் வம்சக் கதைகளில் அதிகம் இடம்பெறாத போதிலும் இலங்கையுடனான தூதுவராலயத் தொடர்புகள் மூலம் அந்நாடுகளில் பௌத்த சமய மறுமலர்ச்சி ஏற்பட்டதாகப் பர்மிய வம்சக் கதைகளில் எழுதப்பட்டுள்ளன.

அந்த மூலாதாரங்களில் கூறப்படும் விபரங்களுக்குப் பேராசிரியர் ஜீ. எச். லூஸ் அவர்கள் விளக்கம் கூறும்போது மகா விஜயபாகு மன்னனின் சமகாலப் பர்மிய ஆட்சியாளனான கியன்சித்த மன்னனின் காலத்தில் இலங்கையுடன் நிலவிய சமயத் தொடர்பு காரணமாக அது வரை மந்திரத் தன்மையுடன் பர்மாவில் நிலவி வந்த பௌத்த சமயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் நிலவிய தேரவாதத் தன்மையைப் பெற்றதாகக் கூறுகின்றார். 1080ஆம் ஆண்டு அங்கு நிர்மாணிக்கப்பட்ட பதொத்மய விகாரை முற்று முழுதாக இலங்கை விகாரைகளின் சித்திர, சிற்ப வேலைகளைத் தழுவியதாக அமைக்கப்பட்டது.

பர்மாவின் பகான் எனுமிடத்தில் கிடைக்கப்பெற்ற கல்வெட்டொன்றின் படி பர்மாவில் புத்த சாசனத்தில் காணப்பட்ட குறைகளை அகற்றி மாற்றங்களைச் செய்தவர் இலங்கையைச் சேர்ந்த ஆனந்த தேரர் ஆவார். அவருக்கு உதவியாக இருந்தவரும் ஜயவர்தன எனும் சிங்கள அமைச்சர் ஒருவராவார். இவ்வமைச்சர் வதங்சிகா எனும் இராணியின் மருமகனாவார். இந்த வதங்சிகா இராணி யார்? என்று திட்டவட்டமாகத் தெரியாத போதிலும் இலங்கையிலிருந்து சென்றதொரு இளவரசியாக இருக்கலாம் என்று கருதும் பேராசிரியர் ஜீ.எச்.லூஸ் அக்காலத்தில் இலங்கை, பர்மா மற்றும் அதன் அயல் நாடுகளுடன் நிலவிய விவாக உறவுகள் பற்றியும் அவதானம் செலுத்துகின்றார். முதலாம் பராக்கிரமபாகு மன்னனின் காலத்தில் கம்பூச்சியாவுக்கு அனுப்பபட்ட இளவரசி பற்றிய விபரங்கள் பர்மிய மூலாதாரங்களுடனும் ஒத்துப்போகின்றன.

முதலாம் பராக்கிரமபாகு மன்னனின் வெளியுறவுக் கொள்கையின் முக்கியமான அம்சம் யாதெனில் அவர் தென்னிந்தியாவுடன் நீண்ட காலமாக மேற்கொண்ட யுத்தமாகும். அந்த யுத்தத்தின் இறுதி விளைவு எவ்வாறான போதிலும் இலங்கை தனது தேச எல்லைக்கு வெளியே தனது ஆணைக்கு அடிபணியும் இராச்சியங்களைப் பெற்றுக் கொள்வதற்கான முயற்சியாக அது காணப்பட்டது. இரண்டாம் சேன மன்னனின் ஆட்சிக் காலத்தில் வரகுணவர்மன் இளவரசனுக்குப் பாண்டிய சிம்மாசன உரிமையைப் பெற்றுக் கொடுத்தமையால் ஏற்பட்ட முரண்பாடுகள் அதற்குச் சிறந்த உதாரணமாகும். பராக்கிரமபாகு மன்னனின் ஆட்சிக் காலத்தில் சோழப் பேரரசனாக இருந்தவன் இரண்டாம் இராஜராஜசோழன் (1150 - 1176)ஆவான். சோழரின் அரச மரபுப்படி மன்னனோடு நீண்ட காலமாக சேர்ந்து ஆட்சி செய்த அம்மன்னனின் மகனான இரண்டாம் இராஜாதிராஜ சோழன் 1176 ஆம் ஆண்டு சோழ மன்னனாக முடி சூட்டப்பட்டான். பராக்கிரமபாகு மன்னன் ஆட்சி பீடமேறுவதற்கு எண்பத்து மூன்று வருடங்களுக்கு முன்னரே அதாவது 1070 ஆம் ஆண்டின் பின்னர் இலங்கை மீது சோழர் எவ்வித ஆக்கிரமிப்பையும் மேற்கொள்ளவில்லை. மேற்குக் கர்நாடகத்தில் சாளுக்கியர் மற்றும் தென்னிந்திய எதிரிகளுடன் நிரந்தரமான யுத்தத்தில் ஈடுபட்டிருந்தமையாலும் முதலாம் குலோதுங்க சோழப் பேரரசனுக்குப் பின்னர் ஏற்பட்ட சிம்மாசன உரிமைப் போராட்டத்தினாலும் சோழப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரரசானது இக்கால கட்டத்தில் வீழ்ச்சியுற்று தென்னிந்தியாவின் இராச்சியங்களுள் ஒன்றாக மட்டும் விளங்கியது.

சோழ இராச்சியம் தனது பேரரசுத் தன்மையை இழந்திருந்த போதிலும் அப்போது நிலவிய தென்னிந்திய இராச்சியங்களுள் மிகவும் பிரபல்யமானதாக அது திகழ்ந்தது. முதலாம் விஜயபாகு மன்னனின் பின்னர் இலங்கை மீதான சோழரின் ஆக்கிரமிப்புகள் பற்றியோ தூதுவராலயத் தொடர்புகள் பற்றியோ இலங்கையின் வம்சக் கதைகளிலோ சோழக் கல்வெட்டுகளிலோ காண முடியவில்லை. அநுராதபுர யுகத்தின் இறுதிக் கால மன்னர்களைப் போன்றே பொலன்னறுவை யுகத்தில் விஜயபாகு மன்னனும் அவன் மகனான விக்கிரமபாகு மன்னனும் சோழ நாட்டுப் படையினரைக் கொண்ட கூலிப் படையினரைத் தமது பாதுகாப்புக் கருதி வைத்திருந்தனர் என்பதை ஏற்கனவே அறிந்தோம். ஆயினும் பராக்கிரமபாகு மன்னன் தாழ்த்தப்பட்ட சாதியிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட இளைஞர்களைத் தனது பாதுகாப்புப் படையாகப் பயன்படுத்தினான் என்று வம்சக் கதைகள் கூறுவதிலிருந்து தனது உள்நாட்டுக் கொள்கையில் போன்றே வெளி நாட்டுக் கொள்கையிலும் எந்தவொரு சிறிய வெளிநாட்டுத் தலையீடும் இடம் பெறாமல் மன்னன் ஜாக்கிரதையாக இருந்தமையை அறிந்து கொள்ள முடிகின்றது. பராக்கிரமபாகு தேசிய ரீதியாகப் புகழ் பெற்றிருந்த அவனது பதினாறாவது ஆட்சி வருடத்தில் (1169) பாண்டிய நாட்டு சிம்மாசன உரிமைப் போராட்டத்தில் தலையிட நேர்ந்தமைக்கான காரணம் அங்கிருந்து வந்த போருதவி ரீதியிலான அழைப்பாகும். அக்காலகட்டத்தில் பாண்டிய அரசனாக இருந்த பராக்கிரம பாண்டியன் தலைநகரான மதுரையிலிருந்து விரட்டப்பட்டு குலசேகரன் என்பவன் சிம்மாசனத்தைக் கைப்பற்றியமை மேற்படி பிரச்சினைக்குக் காரணமாயமைந்தது. இதனால் பாண்டி நாட்டில் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தம் பற்றி ஏற்கனவே அறிந்தோம். பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரி அவர்கள் கூறுவதன்படி அந்தச் சந்தர்ப்பத்தில் பராக்கிரம பாண்டிய மன்னன் பராக்கிரமபாகு மன்னனிடம் உதவி கோர, குலசேகரன் சோழ மன்னனிடம் உதவி கோரி நின்றான். எனவே சிறிது காலத்தில் அந்த யுத்தமானது சிங்களவர், சோழரிடையே முன்பு நிலவி வந்த போராட்டத்தின் மற்றுமொரு கட்டமாக அமைந்தது.

இந்த யுத்தம் சிறிது காலத்திலேயே சோழ, சிங்கள அதிகாரத்தை அளவிடும் பாரிய யுத்தமாகப் பரிணமித்ததாக வம்சக் கதைகளின்படி அறிய முடிகின்றது. பராக்கிரமபாகு மன்னனின் இறுதிப் பதினாறு வருடங்களும் யுத்தம் தொடர்ந்ததாகவும் அது வெற்றி தோல்வியின்றி முடிவடைந்ததாகவும் வம்சக் கதைகள் கூறுகின்றன. ஆனால் சோழக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வெட்டுக்களில் அந்த யுத்தமானது பராக்கிரமபாகு மன்னனின் மரணத்தின் பின்னரும் தொடர்ந்ததாகக் கூறப்பட்டுள்ளது. எது எவ்வாறாயினும் வம்சக் கதைகளிலும் சோழர் கல்வெட்டுக்களிலும் கூறப்படும் முக்கியமான செய்தி என்னவெனில் குலசேகரன் ஒரு சமயம் கட்சி மாறி பராக்கிரமபாகு மன்னனுடன் நண்பனானான். அப்போது சோழர்கள் ஸ்ரீ வல்லப எனும் சிங்கள இளவரசன் மூலம் இலங்கையைக் கைப்பற்றுவதற்கு முயற்சித்தனர். அத்தோடு பராக்கிரமபாகு மன்னனுக்குத் துரோகமிழைத்த பராக்கிரம பாண்டிய மன்னனின் மகன் வீர பாண்டியன் என்பவன் குலசேகரனைத் தோற்கடிப்பதற்காக சோழரின் உதவியைப் பெற்று பாண்டிய சிம்மாசனத்தைப் பெற்றுக் கொண்டான்.

தொடர்ந்து பதினாறு வருடங்களாக வெளி நாடொன்றிலிருந்து யுத்தமொன்றை நடாத்தியமையும் அதன் மூலம் தனது பரம்பரை எதிரியான சோழரின் ஆதிக்கத்தை தென்னிந்தியாவுக்குள் மட்டுப்படுத்த முடிந்தமையும் பராக்கிரமபாகு மன்னனின் வெளிநாட்டுக் கொள்கையின் ஒரு விதமான வெற்றியை வெளிப்படுத்தும் அம்சங்களாகும். இந்த யுத்தமானது சேர, பாண்டிய சிங்களக் கூட்டணியின் பாரம்பரிய பலத்தைத் தொடர்ந்தும் காப்பாற்றி வந்ததாகக் கூறும் நீலகண்ட சாஸ்திரி அவர்கள் இந்த யுத்தத்தின் மூலம் பாண்டியரின் பலம் மீண்டும் மேலெழுந்தது. அத்துடன் புதிய சக்தியுடன் எழுச்சியடைந்த பாண்டிய இராச்சியமானது எதிரெதிராக செயற்பட்ட இரு இராச்சியங்களையும் (சோழ, சிங்கள) விரைவாக விழுங்கிக் கொண்டதாகவும் கூறுகின்றார். இக்கூற்றானது பொலன்னறுவை வீழ்ச்சியின் பின்னரான கால கட்டத்துடன் மிகவும் பொருந்துகின்றது.

முதலாம் பராக்கிரமபாகு மன்னனைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த இரண்டாம் விஜயபாகு மன்னனின் குறுகிய ஆட்சிக் காலத்தில் தென்னிந்தியா தொடர்பாக எவ்விதமான வெளிநாட்டுக் கொள்கையைக் கடைப்பிடித்தான் என்பதற்கான சான்றுகள் இல்லை. எனினும் ராமஞ்ஞ தேசத்துடன் நிலவி வந்த நட்புறவைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் சென்றுள்ளான். இந்தியாவுடனான உறவில் அடுத்து கரிசனைகாட்டிய ஆட்சியாளன் நிஸ்ஸங்கமல்ல மன்னனாவான். அவன் தனது கல்வெட்டில் குறிப்பிடும் வெளிநாட்டு ஆக்கிரமிப்புகள் பற்றி வம்சக் கதைகளில் காணப்படவில்லை. நிஸ்ஸங்கமல்ல மன்னன் கலிங்க வம்சத்தைச் சேர்ந்தவன் என்பதால் அவனது கல்வெட்டுக்களில் விடப்பட்டுள்ள அறைகூவல்கள் சோழ, பாண்டிய எதிர்ப்பையே வெளிப்படுத்துகின்றன. அது தவிர அக்காலப் பகுதியில் பாண்டிய இராச்சிய மன்னன் சோழர் உதவியுடன் ஆட்சிக்கு வந்தவனாகக் காணப்பட்டமையும் இவ்வெதிர்ப்புக்குக் காரணமாயிருந்தி ருக்கலாம். சோழ, பாண்டிய இராச்சியங்களை தனது எதிரிகளாகக் கருதிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிஸ்ஸங்கமல்ல மன்னன் கர்நாடகம், நெல்லூர், கலிங்கம் (ஒரிஸ்ஸா), ஆந்திரா, குஜராத், கௌட(வங்காளம்) எனும் இந்திய இராச்சியங்களுடனும் அரமண(பர்மா), கம்போடியா முதலிய இராச்சியங்களுடனும் நட்புறவைப் பேணி வந்ததாகவும் தனது கல்வெட்டுக்களில் குறிப்பிட்டுள்ளான். மேலும் நிஸ்ஸங்கமல்ல மன்னன் கலிங்க, பாண்டிய இராச்சியத்துக்குத் தூதராக அனுப்பிய ஹெலவான ரக் எனும் பிரதானிக்கு அளித்த பரிசுகள் பற்றிய விபரம் அல்லை செப்பு சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நிஸ்ஸங்கமல்ல மன்னனின் சோழ, பாண்டிய எதிர்ப்பு வெளிநாட்டுக் கொள்கையானது அக்காலப் பகுதியில் தென்னிந்திய இராச்சியங்களுக்கிடையில் நிலவிய உறவில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதைத் தீர்மானிப்பதற்குப் போதிய தரவுகள் மூலாதாரங்களிலே காணப்படவில்லை. ஆயினும் அம்மன்னனின் கல்வெட்டுக்கள் இராமேஸ்வரத்திலும் காணப்படுவதிலிருந்து நிஸ்ஸங்கமல்ல மன்னன் யுத்தம் செய்யும் நோக்கத்துடன் தென்னிந்தியாவுக்குச் சென்றிருக்கலாம் என்ற பேராசிரியரின் கருத்து கவனிக்கத்தக்கது. பாண்டிய நாட்டில் ஏற்பட்ட சிம்மாசன உரிமை தொடர்பான சிவில் யுத்தமானது பராக்கிரமபாகு மன்னனின் மறைவைத் தொடர்ந்து சில காலம் நீடித்தது என்பதைக் கவனத்தில் எடுக்கும் போது பேராசிரியரின் கருத்தின் முக்கியத்துவம் புலனாகின்றது.

தென்னிந்திய யுத்தங்களில் இரண்டாவது பரம்பரை ஈடுபட்டதை நிஸ்ஸங்கமல்ல மன்னனின் ஆட்சிக் காலத்தில் அவதானிக்க முடிந்தது. ஆரம்பத்தில் பராக்கிரம பாண்டியன் சட்டபூர்வமான அரசன் என்பதை ஏற்றுக் கொள்ளாத விக்கிரம பாண்டியன் எனும் இளவரசன் அவனுக்கு எதிராகப் போரிட்டான். குலோதுங்க சோழன் எனும் சோழ மன்னனின் ஒன்பதாவது(1178-1218) ஆட்சி வருடத்துக்குரிய ஒரு கல்வெட்டில் மூக்கறுக்கப்பட்ட சிங்களப் படை வீரர்கள் பெரும் சமுத்திரப் பரப்புக்குள் விரட்டப்பட்டனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதே போன்று மதுரை, இலங்கை என்பவற்றைத் தான் வெற்றி கொண்டதாகவும் அம்மன்னனின் கல்வெட்டுக்கள் பலவற்றிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கல்வெட்டுக்கள் கூறும் யுத்தங்கள் பராக்கிரமபாகு மன்னனின் ஆட்சிக் காலத்தின் பின்னர் நிகழ்ந்தவையாக இருக்கலாம் என்று கருதுவதற்கு இடமிருப்பது போலவே நிஸ்ஸங்கமல்ல மன்னனின் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள யுத்தக் கப்பல் பயணங்கள் போலிப் புகழுக்காக எழுதப்பட்டவையல்ல என்று கருதவும் இடமுண்டு. ஒருவரின் பிரதேசத்தை அடுத்தவர் ஆக்கிரமிப்பது எவ்வாறாயினும் மன்னர்கள் இருவரும் பாண்டிய சிம்மாசனத்துக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்தும் இடம்பெற்ற மோதல்களில் ஒரே கட்சியில் சேர்ந்து செயற்பட்டிருக்கலாம். நிஸ்ஸங்கமல்ல மன்னன் தான் சோழ, பாண்டிய இராச்சியங்கள் இரண்டையும் ஆக்கிரமித்ததாக கூறுவதற்கான காரணம் சோழரின் உதவி பெற்ற பாண்டிய இளவரசன் சிம்மாசனத்தைக் கைப்பற்றி யிருந்தமையாலாகும் என்று கருத இடமுண்டு. சிம்மாசன உரிமைப் போட்டியில் வெற்றியடைந்த அப்பாண்டிய இளவரசன் யார் என்பதை எந்தவொரு மூலாதாரத்தின் மூலமும் அறியமுடியவில்லை. நிஸ்ஸங்கமல்ல மன்னன் இராமேஸ்வரத்தில் இடிந்துபோயிருந்த கோயிலொன்றை புனரமைத்ததாகவும் அங்கிருந்தவாறே இசை, நடனக் கச்சேரிகளைக் கண்டு களித்ததாகவும் கூறும் கூற்றுகளிலிருந்து அவன் அப்பிரதேசத்தில் ஏதோ ஒரு வகையில் பலம் பெற்றிருந்தான் என்பதை அறிய முடிகின்றது. இலங்கைப் படையொன்றுக்குத் தலைமை தாங்கி தென்னிந்தியா சென்ற முதலாவது இலங்கை மன்னன் நிஸ்ஸங்க மல்ல மன்னனாவான். மகா பராக்கிரமபாகு மன்னனின் காலத்தில் தீவிரமடைந்த சிங்கள சோழ எதிர்ப்பை முன்னெடுத்துச் செல்வதிலும் அதே சமயத்தில் சோழருக்கு எதிரிகளான தென்னிந்திய இராச்சியங்களுடன் நட்புறவை வளர்த்துக் கொள்வதுமான நிஸ்ஸங்கமல்ல மன்னனின் வெளிநாட்டுக் கொள்கை ஒரு வகையில் வெற்றியளித்ததாகவே தெரிகின்றது.

நிஸ்ஸங்கமல்ல மன்னனின் மரணத்தைத் தொடர்ந்து இலங்கையில் ஏற்பட்ட அரசியல் குழப்பம் நிலவிய காலப்பகுதியில் கலிங்க வம்சத்தவரின் கையே ஓங்கி இருந்தமையால் இக்காலம் கலிங்க யுகம் எனப்படுகின்றது. நாலாம் மகிந்த மன்னனால் ஆரம்பித்து வைக்கப்பட்ட விவாகத் தொடர்புகள் முதலாம் விஜயபாகு மன்னனால் மேலும் உறுதிப்படுத்தப்பட்டது. எனவே முதலாம் பராக்கிரமபாகு மன்னனின் பின்னர் இலங்கைச் சிம்மாசன உரிமை தொடர்பில் வேறு யாருக்கும் இல்லாத உரிமை கலிங்க வம்சத்தைச் சேர்ந்த தனக்குள்ளது என்று கூறுமளவுக்கு நிஸ்ஸங்கமல்ல மன்னன் உள்ளிட்ட கலிங்க வம்சம் துணிவு பெற்றிருந்தது. இக்காரணங்களை முற்படுத்தி பொலன்னறுவையின் இறுதிப் பகுதியில் ஏற்பட்ட கலிங்க, பாண்டிய வம்சங்களுக்கிடையிலான சிம்மாசன உரிமைப் போராட்டமானது பொலன்னறுவை இராச்சியத்தை வீழ்ச்சிக்கிட்டுச் சென்று அதன் முடிவுக்குக் காரணியாக அமைந்தது.

எவ்வாறாயினும் நிஸ்ஸங்கமல்ல மன்னனின் பின்னர் எந்தவொரு இலங்கை ஆட்சியாளனும் தென்னிந்தியாவை ஆக்கிரமிப்புச் செய்ய முற்பட்டதாக தெரியவில்லை. அதற்காக சோழர் இலங்கையை எதிரியாகக் கருதாமல் இருக்கவுமில்லை. ஏனெனில் தமது பரம்பரை எதிரியான கலிங்க வம்சம் இலங்கையின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றமையை சோழரால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுமையுடன் சகித்துக் கொண்டிருக்க முடியவில்லை. நிஸ்ஸங்கமல்ல மன்னனின் மறைவையடுத்து ஒரு வருடத்தினுள் மூன்று ஆட்சியாளர்கள் ஆட்சிபீடமேறியதிலிருந்து இலங்கை அரசியலின் பலவீனமான நிலை தெரிய வருகிறது. இக்குழப்பமான நிலையில் சோழர் மீண்டும் இலங்கை மீதான தமது ஆக்கிரமிப்புக் கொள்கைக்கு உயிரூட்டினர். சசந்தாவத நூலுக்காக எழுதப்பட்ட புராணத்தில் லீலாவதி இராணியின் முதலமைச்சராக இருந்த தளபதி கீர்த்தி என்பவனால் மூன்று முறை சோழர் தோற்கடிக்கப்பட்டதாக எழுதப்பட்டுள்ளது. இம்மூலாதாரத்தின் படி இருதடவைகள் மன்னாரில் தரையிறங்கிய ஆக்கிரமிப்பாளர்கள் அநுராதபுரம் வரை சென்றுள்ளனர். மூன்றாவது தடவை சிலாபத்தில் தரையிறங்கி குருணாகலைக்கு சமீபமாகவுள்ள ஸ்ரீபுர எனுமிடம் வரை சென்றுள்ளனர். இவ்வாக்கிரமிப்புக்களில் ஒன்று அல்லது இரண்டு நிஸ்ஸங்கமல்ல மன்னனின் பின்னர் லீலாவதி இராணி ஆட்சி பீடமேற முன்னர் இருந்த மூன்று ஆட்சியாளர்களின் காலத்தில் நிகழ்ந்திருக்கலாம் என்று பேராசிரியர் பரணவிதான கருதுகின்றார். மூன்றாம் குலோத்துங்க சோழனும் தான் வெற்றி கொண்டதாகக் கல்வெட்டுக்களில் பொறித்த ஆக்கிரமிப்புக்களும் அவையாகவே இருக்கலாம். ஏனெனில் எந்தவொரு அணியுமே இப்போர்களில் தெளிவான வெற்றியைப் பெறவில்லை.

இலங்கையில் அக்காலத்தில் நிலவிய அரசியல் குழப்ப நிலை ஒரு முடிவுக்கு வரும் வரை சாகசமல்ல மன்னன் (1200-1202) சோழ நாட்டின் கஹகொடைப் பட்டணத்தில் இருந்ததாக அம்மன்னின் பொலன்னறுவை சுவர்கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையுடன் நிலவிய எதிர்ப்பு நடவடிக்கைகளைக் கைவிட்ட சோழர்கள் ஏன் இலங்கையின் எதிர்கால மன்னனுக்கு உதவினார்கள் என்பதும் கேள்விக்குரியதே. சிலவேளை சிங்கள மன்னர்கள் பாண்டிய நாடு தொடர்பாக கையாண்ட கொள்கையின்படி சோழர்களும் தமக்கு சார்பான இளவரசன் ஒருவனை இலங்கையின் சிம்மாசனத்தில் ஏற்றுவதற்கு முயற்சித்திருக்கலாம். கல்யாணவதி இராணியின் காலத்தில் தமிழர் படையெடுப்பொன்று நிகழ்ந்ததாக மினிப்பே சுவர்க் கல்வெட்டு கூறுகின்றது. அதுவும் ஒரு சோழர் ஆக்கிரமிப்பாக அமைந்திருக்கலாம் எனக் கருதுவதற்கான காரணம் சோழரின் உதவியைப் பெற்று சிம்மாசனம் ஏறிய சாகசமல்லன் மன்னனை அவசரமாகப் பதவி நீக்கம் செய்வதற்காக இவ்வாக்கிரமிப்பு நிகழ்ந்திருக்கலாம் என்று கருதலாம். இவ்வரசியல் குழப்ப நிலையில் சோழரின் உதவியை நேரடியாகப் பெற்றுக் கொண்ட அரசனாக அணிகங்க சோழன் (1203) காணப்பட்டான். சோழப் படையினரின் உதவியுடன் பொலன்னறுவை ஆட்சியாளனான இம்மன்னன் பதினாலு நாட்களுள் கொலை செய்யப்பட்டான். அதன் பின்னர் சில காலம் இலங்கையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோழரின் செல்வாக்கு குறைந்தது போலக் காணப்பட்ட போதிலும் லோகேஸ்வர மன்னனின் காலத்தில் (1210-1211) சோழர் மீண்டும் ஒரு முறை இலங்கையை ஆக்கிரமித்தனர். சோழரின் இவ்விறுதி ஆக்கிரமிப்பை லோகேஸ்வர மன்னன் முறியடித்தான். அக்காலப் பகுதியில் தென்னிந்தியாவில் சோழராதிக்கம் வீழ்ச்சியடைந்து கொண்டிருந்ததுடன் அவ்வதிகாரம் பாண்டியருக்குக் கைமாறியிருந்தது. இலங்கையிலும் பராக்கிரம பாண்டியன் எனும் பாண்டிய இளவரசன் ஒருவனே ஆட்சியாளனாக இருந்தமையும் கவனிக்கத்தக்கது. எழுச்சியடைந்து வந்த பாண்டியப் பேரரசுக்கும் பராக்கிரம பாண்டியனுக்கும் இடையில் தொடர்புகள் நிலவியமை பற்றி சரியாகத் தெரியவில்லை. ஆயினும் பராக்கிரம பாண்டியன் இலங்கை மன்னனானதை அதுவரை பொலன்னறுவை அரசியலில் செல்வாக்குச் செலுத்திய கலிங்க வம்சத்தவர்களால் பொறுத்துக் கொண்டிருக்க முடியவில்லை. எனவே தான் மாகன் எனும் கலிங்க இளவரசன் பாரியதொரு சேரநாட்டுப் படையின் உதவியுடன் இலங்கையை ஆக்கிரமித்து பராக்கிரம பாண்டியனின் கண்களைக் குருடாக்கி அவனிடமிருந்து ஆட்சியை அபகரித்துக் கொண்டான். இவ்வாக்கிரமிப்பின்போது சிங்களவரின் பழைய நண்பர்களான சேர நாட்டினரும் ஈடுபட்டமைக்கான காரணம் தென்னிந்தியாவில் எழுச்சியடைந்து வந்த பாண்டியரின் அதிகாரத்துக்கான எதிர்ப்பின் வெளிப்பாடாகவும் இருக்கலாம்.

கலிங்க மாகனால் பொலன்னறுவை ஆக்கிரமிக்கப்பட்ட பின்னர் தமது உயிர்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக சிங்கள அரச பிரதானியர் உருகுணை, மாயாரட்டை, மலைநாடு ஆகிய பகுதிகளுக்குத் தப்பிச் சென்றமையானது இராசரட்டையை அடிப்படையாகக் கொண்டமைந்த சிங்கள இராசதானியின் முடிவை உறுதிப்படுத்திய நிகழ்வாக அமைந்தது. சிங்கள அரசர் சில காலம் சோழரின் எதிரிகளாகவும் சில காலம் பாண்டியரின் எதிரிகளாகவுமான வெளிநாட்டுக் கொள்கையைக் கடைப்பிடித்த போதிலும் அது இலங்கைக்கும் தென்னிந்தியாவில் அருகருகே அமைந்திருந்த இராச்சியங்கள் இரண்டிற்கும் இடையிலான சமூக, கலாசாரத் தொடர்புகளுக்கு எந்த விதத்திலும் பாதிப்பாக அமையவில்லை. மாகனின் கொடூரமான செயற்பாடுகளால் பாதிக்கப்பட்ட வாசீஸ்வர தேரர் தலைமையிலான பௌத்த பிக்குகள் புனிதத் தந்த தாது, பாத்திர தாதுக்களை ஒளித்து வைத்து சோழ, பாண்டிய தேசங்களுக்குப் பாதுகாப்புக் கருதிச் சென்றதாக வம்சக் கதைகள் கூறுகின்றன. தென்னிந்தியப் பிரதேசங்களில் காணப்பட்ட பௌத்த நிலையங்களுக்கும் இலங்கை பௌத்த நிலையங்களுக்கும் இடையே காணப்பட்ட நிரந்தரத் தொடர்புகளே இந்த இக்கட்டான சந்தர்ப்பத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் தேரர்களுக்குக் கைகொடுத்ததாக நாம் கருதலாம்.

பொலன்னறுவை இராசதானியின் வீழ்ச்சிக்கு சம காலத்திலேயே தென்னிந்திய சோழ இராச்சியமும் வீழ்ச்சியடைந்தமையை பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியின் கூற்று நன்கு தெளிவுபடுத்துகின்றது. மூன்றாம் குலோதுங்க சோழனின் ஆட்சி முடிவே (1216) சோழ இராச்சியத்தின் முடிவாகவும் அமைந்தது. அவனையடுத்து ஆட்சிபீடமேறிய மூன்றாம் இராஜராஜ சோழன் குறுநில மன்னர்களால் சிறை வைக்கப்பட்டான். அப்போது அவனது உயிரைக் காப்பாற்றியதும் முன்னர் சோழரின் குறுநில மன்னனாக இருந்த இரண்டாம் வீர நரசிங்க எனும் மன்னனாவான். தென்னிந்தியாவில் இவ்வாறான அரசியல் பிரச்சினைகள் நிலவிய சமயங்களிலும் சிங்கள இளவரசர்கள் சோழர் எதிர்ப்பு நடவடிக்கைகளில் பங்கெடுத்தனர் என்பதை திருவந்திபுரத்தில் உள்ள சோழக் கல்வெட்டொன்று கூறுகின்றது. ஏனெனில் கோப்பெருஞ் சிங்கம் எனும் கிளர்ச்சித் தலைவனுடன் சேர்ந்து செயற்பட்ட பராக்கிரம எனும் இளவரசன் ஹொய்சால இராச்சிய சேனாதிபதி ஒருவனால் கொலை செய்யப்பட்டதாக அக்கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிங்கள - சோழப் போராட்டத்தின் முடிவில் பாண்டிய இராச்சியம் புதிதாக எழுச்சியடைந்தது. பாண்டியப் பேரரசின் இரண்டாவது எழுச்சியானது தென்னிந்தியாவைப் போன்றே இலங்கை அரசியலிலும் பாதிப்புச் செலுத்தியது என்பதை இரு நாட்டு மூலாதாரங்களின் மூலமும் அறிய முடிகின்றது. விசேடமாக வட இலங்கையின் நடவடிக்கைகளில் இரண்டாவது பாண்டியப் பேரரசு செல்வாக்குச் செலுத்தியுள்ளமையைப் பாண்டியக் கல்வெட்டுக்கள் மூலம் அறியமுடிகின்றது. ஏனெனில் அவர்கள் யுத்த வெற்றி கொண்ட பிரதேசங்களுள் இலங்கையின் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளது. அக்காலக் கட்டத்தில் வட இலங்கையை ஆட்சி செய்த கலிங்க மாகன் பற்றிய தகவல்கள் வம்சக் கதைகளில் இடம்பெறாத காரணத்தால் மேற்கூறப்பட்ட பாண்டிய வெற்றிகள் எவ்வாறானவை என்று நிச்சயிக்க முடியாதுள்ளது. ஆயினும் இரண்டாம் பராக்கிரமபாகு மன்னன் பாண்டியரின் உதவி பெற்றே கலிங்க மாகனை இலங்கையிலிருந்து துரத்தியதாக பேராசிரியர் பரணவிதான கூறுகின்றார். அதன்படி பாண்டியக் கல்வெட்டுக்கள் கூறும் வெற்றி இரண்டாம் பராக்கிரமபாகு மன்னனின் உதவிக்கு வந்த பாண்டியப் படையினர் சிங்களப் படைகளுடன் சேர்ந்து ஈட்டிய வெற்றியாக இருக்கலாம்.

இரண்டாவது பாண்டியப் பேரரசின் சிறப்பு மிகு காலகட்டமான ஜடாவமர்மன் சுந்தரபாண்டியப் பேரரசனின் (1251 இன் பின்னர்) ஆட்சிக்காலத்தில் சேர, சோழ, மற்றும் ஹொய்சால இராச்சியங்களும் பாண்டியப் பேரரசின் கீழ்க் கொண்டு வரப்பட்டன. இலங்கை மன்னன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரத்தினங்கள், யானைகள் என்பவற்றை சுந்தர பாண்டியனுக்குக் கப்பமாக செலுத்தியதாக 1258 இன் பின்னர் எழுதப்பட்ட பல பாண்டியக் கல்வெட்டுக்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளன. அதே சம காலத்தில் ஆட்சி செய்த ஜடாவர்மன் வீர பாண்டிய மன்னன் தான் இலங்கையை சாவகன் எனும் மன்னனின் தலையுடன் மணி முடியையும் வென்றதாகத் தனது கல்வெட்டுக்கள் சிலவற்றில் பொறித்துள்ளான். இக்கல்வெட்டுக்களில் ஆரம்பத்தில் இலங்கையிலிருந்து பாண்டிய நாட்டுக்கு வந்த அமைச்சர் ஒருவரின் வேண்டுகோலினாலேயே வீரபாண்டிய மன்னன் இலங்கையை ஆக்கிரமித்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு பாண்டியப் பேரரசன் இலங்கை விடயத்தில் தலையிட வேண்டி நேர்ந்தது இரண்டாம் பராக்கிரமபாகு மன்னின் காலத்தில் இடம்பெற்ற சந்திரபானு எனும் ஜாவா மன்னனின் ஆக்கிரமிப்பிலிருந்து தம்பதெனிய இராச்சியத்தைப் பாதுகாப்பதற்காகும் என்று பேராசிரியர் பரணவிதான கூறுகின்றார். சந்திரபானுவை எதிர்ப்பதற்கு பாண்டியப் பேரரசின் உதவி பெற்றுக் கொண்டதாக இலங்கை மூலாதாரம் எதிலும் குறிப்பிடப்படவில்லை. ஆயினும் பாண்டியப் பேரரசின் உதவி கிடைக்காவிட்டால் பொலன்னறுவையை மீட்பதற்கும் அங்கு வைத்து முடிசூடுவதற்கும் இரண்டாம் பராக்கிரமபாகுவால் முடியாமல் போயிருக்கும் என்று மேலும் பேராசிரியர் கூறுகின்றார்.

இரண்டாவது பாண்டியப் பேரரசின் ஆட்சியாளர்கள் இலங்கை அரசியல் நடவடிக்கைகளில் தலையிட்டமையை பதின்மூன்றாம் நூற்றாண்டு முழுவதும் காணக்கூடியதாயிருந்தது. சந்திரபானுவின் ஆக்கிரமிப்பை பாண்டியரின் உதவியுடன் இரண்டாம் பராக்கிரமபாகுவால் முறியடிக்க முடிந்த போதிலும் பொலன்னறுவையைத் தலைநகராகக் கொண்டு தனது இராச்சியத்தை அமைத்துக் கொள்வது முடியாத காரியமாயிற்று. மாகனின் படைகளை எதிர்த்து இரண்டாம் பராக்கிரமபாகு மன்னன் மேற்கொண்ட போர் நடவடிக்கைகள் பற்றி இலங்கை மூலாதாரங்கள் விளக்கம் தந்த போதிலும் அதன் பின்னர் அமைச்சர்களால் மேற்கொள்ளப்பட்ட தென் பகுதி நடவடிக்கைகள் பற்றியே விவரிக்கப்படுகின்றது. ஏனெனில் சந்திரபானுவின் தோல்வியைத் தொடர்ந்து வட இலங்கை பாண்டியரின் ஆதிக்கத்தின் கீழ் சந்திரபானு மன்னனின் மகனால் பராமரிக்கப்பட்டு வந்தமையாலாகும். இந்த ஜாவா ஆட்சியாளன் சில காலம் பாண்டிய மன்னனுக்கு முரண்பட்ட போதிலும் பின்னர் வீரபாண்டிய மன்னனுக்குக் கப்பமும் பரிசில்களும் வழங்கியதாகப் பாண்டிய கல்வெட்டொன்றில் கூறப்பட்டுள்ளது. 10 வருடங்களுள் இரு தடவைகள் இலங்கை மீது படையெடுத்த வீரபாண்டியன் வட இலங்கையில் தனது குறுநில மன்னனாக இருப்பதற்கு சந்திரபானுவின் மகனுக்கு அனுமதி வழங்கியிருக்கலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரி கருத்துத் தெரிவிக்கின்றார். அப்பாண்டிய ஆக்கிரமிப்புக்களுள் ஒன்று 1258ஆம் ஆண்டுக்கு முன்னர் ஜடாவர்மன் வீர பாண்டியனாலும் அடுத்த ஆக்கிரமிப்பு 1263ஆம் ஆண்டளவில் ஜடாவர்மன் சுந்தர பாண்டியனாலும் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என்றும் கருதப்படுகின்றது.

இலங்கையின் வடக்கே ஓர் இராச்சியமும் தெற்கே ஓர் இராச்சியமும் நிலவியமை இரண்டாவது பாண்டியப் பேரரசுக்கு இலங்கை தொடர்பான வெளிநாட்டுக் கொள்கையைத் தொடர்வதற்கு இலகுவாக இருந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. விசேடமாகத் தனது குறுநில மன்னனாக வடக்கில் சந்திர பானுவின் மகன் ஆட்சி செய்தமையும் இரண்டாவது பராக்கிரமபாகுவின் பின்னர் ஆட்சிக்கு வந்த தம்பதெனிய பரம்பரையைச் சேர்ந்த மன்னர்கள் மேல் பாண்டிய மன்னர்களுக்குப் பாரிய செல்வாக்கைச் செலுத்த முடிந்ததாகவும் கருத இடமுண்டு. நாலாம் விஜயபாகு மன்னன் ஆட்சிபீடமேறி இரண்டு வருடங்களுள் மித்த எனும் தளபதியால் கொலை செய்யப்பட்டதாக ஏற்கனவே அறிந்தோம். சதிகாரர்களை முறியடித்து மன்னனான முதலாம் புவனேகபாகு மன்னனுக்கு மேலும் பல உள்நாட்டு எதிரிகளின் தொல்லைகளுக்கு முகங்கொடுக்க நேரிட்டது. அந்த நெருக்கடியான காலகட்டத்தில் காலிங்கராயர் மற்றும் சோடாங்கன் எனும் இரு தளபதியரின் கீழ் வந்த படையினர் இலங்கையை ஆக்கிரமித்தனர். இப்படையெடுப்பானது மித்த எனும் தளபதியின் உள்நாட்டுக் கிளர்ச்சிக்கு சமகாலத்திலேயே இடம்பெற்ற காரணத்தால் தென்னிந்தியப் படையெடுப்பாளர்கள் ஏற்கனவே மித்தவுடன் செய்து கொண்ட உடன்படிக்கையொன்றின் பிரகாரமே படையெடுத்திருக்கலாம் என்று பேராசிரியர் பரணவிதான அவர்கள் விளக்கம் தருகிறார்.

ஜடாவர்மன் சுந்தர பாண்டிய மன்னனையடுத்து ஆட்சி பீடமேறிய மாரவர்மன் குலசேகர பாண்டிய மன்னனின் பதினோராம் ஆட்சி வருடத்திற்குரிய (1279 - 1280) கல்வெட்டொன்றில் தான் ஈழம் முதலிய நாடுகளை வெற்றி கொண்டதாகவும் குறிப்பிட்டுள்ளான். மேற்படி மூன்று பாண்டியப் பேரரசர்களினதும் காலத்தில் காலிங்கராயர் எனும் பலம் வாய்ந்த அமைச்சரின் பெயர் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டிருப்பதால் இலங்கையை ஆக்கிரமித்த காலிங்கராயரும் அவரே என்று ஏற்றுக் கொள்ளப்பட்டது. நிலைமை அவ்வாறெனின் தம்பதெனிய இராச்சியத்தின் நிருவாக நடவடிக்கைகளைக் குழப்புவதற்கான சதி வேலைகளில் பாண்டிய மன்னர்கள் சம்பந்தப்பட்டிருப்பதுடன் தம்பதெனிய இராச்சியத்தின் எதிரிகளுக்குப் படையுதவியையும் வழங்கியுள்ளனர் எனக் கருதமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு காலத்தில் தமது இராச்சியத்துள் நிலவிய அரசியல் பிரச்சினைகளின் போது இலங்கையின் உதவியைப் பெற்று அவற்றுக்குத் தீர்வு கண்ட பாண்டியர் தென்னிந்தியாவில் தமது எதிரிகளை அடக்கி அப்பிரதேசங்களில் தமது அதிகாரத்தை நிலை நிறுத்திக் கொண்டனர். அதனைத் தொடர்ந்து இலங்கை அரசியலுடன் தொடர்புபட்ட பல்வேறு பிரிவினருக்கும் உதவிகளை வழங்கி இலங்கை அரசியலைப் பலவீனப் படுத்துவதற்கு மேற்கொண்ட முயற்சியானது அதுவரை காலமும் தென்னிந்திய மற்றும் இலங்கை இராச்சியங்கள் பின்பற்றிய வெளிநாட்டுக் கொள்கையின் மற்றுமொரு படிமுறையாகும்.

முதலாம் புவனேகபாகு மன்னனால் தற்காலிகமாக தனது உள்நாட்டு, வெளிநாட்டு எதிரிகளை வெற்றி கொள்வதற்கு முடிந்த போதிலும் அவன் சில வருடங்களில் தனது தலைநகரை தம்பதெனியாவிலிருந்து யாப்பகுவைக்கு மாற்றியதிலிருந்து தெரிய வருவது யாதெனில் அவன் வட இலங்கையை ஆட்சிசெய்த பாண்டியரின் குறுநில மன்னனின் இடைஞ்சல்கள் தொடர்பாகக் கவனம் செலுத்தியமையாலாகும். இக்கால கட்டத்தில் அரசின் பிரதான வருமான மார்க்கம் வெளிநாட்டு வர்த்தகமாகும் என்பதை இரண்டாம் புவனேகபாகு மன்னன் எகிப்திய சுல்தானிடம் தூதுக் குழுவை அனுப்பியதன் மூலம் தெரிய வருகின்றது. புவனேகபாகு மன்னனின் பின்னர் அதாவது 1284ஆம் ஆண்டின் பின்னர் தம்பதெனிய அரச பரம்பரையினர் முகங்கொடுக்க நேரிட்ட துரதிஷ்டவசமான நிலைமைக்குப் பாண்டிய பேரரசர்கள் கடைபிடித்த வெளிநாட்டுக் கொள்கைகளே காரணம் என்று கருத இடமுண்டு. புவனேகபாகு மன்னனின் பின்னர் அரசனில்லா நிலை பற்றி வம்சக் கதைகள் கூறுகின்றன. அரசனில்லா நிலை என்பதற்கு இரண்டு கருத்துக்களுண்டு. ஒன்று இரு மன்னர்களுக்கு இடைப்பட்ட ஆட்சியாளன் இல்லாத நிலையாகும். இரண்டாவது வெளிநாட்டு அரசன் ஒருவனின் ஆட்சிக் காலமாகும். இவ்விடத்தில் பேராசிரியர் பரணவிதான அவர்களின் கருத்துப்படி இரண்டாம் சந்திரபானு யாப்பகுவவை வந்து ஆட்சி புரிந்துள்ளான். அதற்கிடையில் ஆரியச் சக்கரவர்த்தி எனும் தளபதியால் இலங்கை ஆக்கிரமிக்கப்பட்டதாகவும் குறிப்பிடப்படுகின்றது. வம்சக் கதைகளின்படி ஆரியச் சக்கரவர்த்தியின் தலைமையில் இலங்கைக்குப் படைகளை அனுப்பியது பாண்டிய நாட்டரசனாகும். ஆரியச் சக்கரவர்த்தியின் படையினர் சுபகிரி அதாவது யாப்பகுவயை ஆக்கிரமித்து அங்கிருந்த புனித தந்த தாதுவுடன் பெறுமதி மிக்க பொருட்களையும் கொண்டு சென்று குலசேகர பாண்டிய மன்னனிடம் கையளித்தனர். இந்தக் குழப்பகரமான நிலைமையை தனக்குச் சாதகமாக்கிக் கொண்ட வட இலங்கை ஆட்சியாளனான இரண்டாவது சந்திரபானு யாப்பகுவைக் கைப்பற்றிக் கொண்டான். நான்காம் விஜயபாகுவின் மகனுக்கும் முதலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவனேகபாகுவின் மகனுக்குமிடையில் ஏற்பட்ட அரசுரிமைப் போட்டியால் பலவீனமடைந்த யாப்பகுவ இராசதானியின் பிரதானிகள் இரண்டாம் சந்திரபானுவிடமிருந்து தமது இராசதானியை மீட்டுத் தருமாறு பாண்டியப் பேரரசிடம் உதவி கோரியதன் பிரதிபலனாகவே பாண்டியப் படையினர் இலங்கை வந்ததாகப் பேராசிரியர் பரணவிதான கருத்துத் தெரிவிக்கிறார். நான்காம் விஜயபாகுவின் புதல்வனான மூன்றாம் பராக்கிரமபாகு இளவரசனால் ஆட்சிபீடமேற முடிந்ததும் அதன் பின்னர் புனித தந்ததாது மற்றும் பாத்திர தாதுக்களை மீட்டுக் கொள்ள முடிந்ததும் பாண்டியப் பேரரசனான மாறவர்மன் குலசேகர பாண்டியனின் உதவியுடனாகும் என்று அவர் மேலும் கருத்துத் தெரிவித்துள்ளார். மேலும் மூன்றாம் பராக்கிரமபாகு மன்னனால் தனது ஆட்சித் தலைநகராகப் பொலன்னறுவையை வைத்துக் கொண்டதும் பாண்டிய மன்னனின் உதவி கிடைத்தமைக்கான சான்றாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

சீனா இக்காலப் பகுதியில் இலங்கை அரசியலில் அக்கறை செலுத்தியமையை முதன் முதலாகக் காண முடிந்தது. இந்து சமுத்திரத்தின் கடற்படை ஆதிக்கத்தை இக்கால கட்டத்தில் சீனா தனது கைகளில் வைத்திருக்க விரும்பியமை அக்காலப் பகுதிக்குரிய சீன மூலாதாரங்களின் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. இலங்கையைச் சூழவுள்ள கடற்பரப்பில் சீனாவுக்கு மிகப்பெரும் சவாலாக அமைந்தது கடற்படை பலம் மிக்க தென்னிந்திய சேர, சோழ, பாண்டிய இராச்சியங்கள் என்பது தெளிவாகும். சீன மூலாதாரங்களின்படி கூப்பிளைக்கான் எனும் சீனப் பேரரசன் புனித தந்த தாது மற்றும் பாத்திரத் தாதுக்களை அடைந்து கொள்வதற்காக 1282ஆம் ஆண்டு இலங்கைக்குத் தூதுக் குழுவொன்றை அனுப்பியுள்ளான். ஆயினும் அக்காலப்பகுதியில் அப்புனிதப் பொருள்கள் இலங்கையில் இருக்கவில்லை. எனவே அவற்றைத் தேடி 1287ஆம் ஆண்டு தென்னிந்தியாவின் மலபார் பகுதிக்கு சீனப் பேரரசன் தூதுக் குழுவொன்றை அனுப்பியுள்ளான். ஆனால் அவை அங்கும் இருக்கவில்லை இதிலிருந்து தெரிய வருவது என்னவெனில் 1287ஆம் ஆண்டாகும்போது புனித தாதுக்கள் மீண்டும் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டிருந்தமையாகும். இலங்கை அரசுரிமையின் சின்னங்களாகக் கருதப்பட்ட புனித தந்த தாது மற்றும் பாத்திர தாதுக்களை சீனப் பேரரசன் அடைந்து கொள்ள முயற்சித்தமைக்கான காரணம் பௌத்த சமயத்தோடு தொடர்புபட்டதா அல்லது இலங்கை ஊடாக இந்து சமுத்திரத்தில் ஆதிக்கம் செலுத்தி வந்த சேர, சோழ, பாண்டிய இராச்சியங்களை எச்சரிப்பதோடு தொடர்புபட்டதா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

மூன்றாம் பராக்கிரமபாகு மன்னன் பாண்டியர் தொடர்பாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைப்பிடித்த கொள்கை இலங்கையின் தேசிய கௌரவத்தை இழிவுப்படுத்தியதாகவும் கருதப்பட்டது. முதலாம் புவனேகபாகுவின் மகன் படை திரட்டிப் பொலன்னறுவையை ஆக்கிரமித்து மூன்றாம் பராக்கிரமபாகுவைத் தோற்கடித்து புனித சின்னங்களைக் கைப்பற்றி இரண்டாம் புவனேகபாகு எனும் பெயரில் மன்னனானான். மூன்றாம் பராக்கிரமபாகு நாட்டின் கௌரவத்தைப் பாண்டியரிடம் தாரை வார்த்ததால் கவலையுற்றிருந்த இலங்கை மக்கள் இரண்டாம் புவனேகபாகு மன்னனுக்கு ஆதரவாக செயற்பட்டிருக்கலாம் என்றும் நம்பப்படுகின்றது. வரலாற்று மூலாதாரங்களில் பொலன்னறுவை பற்றி எழுதப்பட்டுள்ள இறுதியான சந்தர்ப்பம் இதுவல்ல.

குருணாகலை இராசதானி காலத்தில் யாழ்ப்பாணம் உள்ளிட்ட வட பகுதிக்கு தனியானதொரு ஆட்சி நிருவாகம் அமைந்திருந்ததாக ஏற்கனவே அறிந்திருந்தோம். அவ்வாறானதொரு ஆட்சிமுறை உருவாவதில் பாண்டியர் கடைப்பிடித்த இரட்டை வேட வெளிநாட்டுக் கொள்கை செல்வாக்குச் செலுத்தியிருப்பதாக நாம் கருதலாம். மாறவர்மன் குலசேகர பாண்டியனால் ஜாவா நாட்டு சந்திரபானு மன்னனின் மகனை மட்டுப்படுத்துவதற்காக இலங்கைக்குப் பாண்டிய படைகள் அனுப்பப்பட்டன. ஆயினும் அதன் பின்னர் அவனையே பாண்டியப் பேரரசின் வட இலங்கையின் குறுநில மன்னனாக ஆட்சி புரிவதற்கும் பாண்டியர்களால் இடமளிக்கப்பட்டது. மேலும் யாப்பகுவ இராசதானியில் இடம்பெற்ற உள்நாட்டுப் பிரச்சினைகளைப் பயன்படுத்தி அதனையும் பாண்டியப் பேரரசுக்குக் கட்டுப்பட்ட இராச்சியமாக மாற்றியமைத்ததும் மாறவர்மன் குலசேகர பாண்டிய மன்னனேயாவான். சந்திர பானுவின் மகனைப் பற்றிய மேலதிக விபரங்கள் மூலாதாரங்களில் கிடைக்காத போதிலும் அதன் பின்னர் உருவான யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்ட வட இலங்கையின் ஆரியச் சக்ரவர்த்தி எனும் ஆட்சியாளர் பிரிவு உருவாவதற்கும் பாண்டியரின் உதவி ஒத்தாசைகள் கிடைத்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது. 14ஆம் நூற்றாண்டின் முதல் அரைப்பகுதியில் தென்னிந்தியாவில் இஸ்லாமியப் பேரரசின் செல்வாக்குக் காரணமாகப் பாண்டிய இராச்சியம் வீழ்ச்சியடைந்தது.

அதன் பின்னர் உருவான காலகட்டத்தில் இலங்கையின் அரசியல் நடவடிக்கை தொடர்பாக முக்கியம் பெறுவது 1336 இல் உருவான விஜய நகரப் பேரரசு ஆகும். இப்பேரரசின் மிகப் பிரபல்யமான மன்னன் முதலாம் புக்கான் (1356 - 1377) ஆவான். தென்னிந்தியாவில் பரவியிருந்த பாரிய இஸ்லாமிய ஆதிக்கத்தை இம்மன்னன் முடிவுக்குக் கொண்டு வந்தான். இப்பேரரசனின் மகனான குமார கம்பன் எனும் மன்னன் பாண்டியத் தலைநகரான மதுரையில் நிலவிய சுல்தான் ஆட்சியையும் முடிவுக்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு வந்து இந்தியாவின் தென் எல்லையையும் விஜய நகரப் பேரரசினுள் கொண்டு வந்தான். அதன் பின்னர் மதுரை முதலிய பிரதேசங்களையும் குமார கம்பனே ஆட்சி செய்தான். இவ்வாறு விஜயநகரப் பேரரசின் தோற்றம் இலங்கை மீதான முஸ்லிம் ஆட்சியாளர்களின் ஆதிக்கத்தைத் தடுப்பதில் செல்வாக்குச் செலுத்தியுள்ள பிரதான காரணி என்று நாம் கருதலாம். பெரிஸ்டா எனும் தேச சஞ்சாரியின் அறிக்கைப்படி இலங்கையும் இக்காலத்தில் விஜயநகரப் பேரரசின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்தது. அவரது அறிக்கையின்படி மலபார் மற்றும் இலங்கைத் தூதுவர்கள் விஜயநகர அரசவையில் இருந்துள்ளனர். அந்நாட்டு அரசர்கள் ஆண்டு தோறும் விஜயநகர அரசனுக்குப் பரிசில்களை அனுப்பிக் கொண்டிருந்தனர். பெரிஸ்டாவின் அறிக்கையில் கூறப்படும் இலங்கை என்பது ஆரியச் சக்கரவர்த்திகளால் ஆளப்பட்ட யாழ்ப்பாண இராச்சியமாகும் என்று பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரி கூறுகின்றார். அதே போல இந்தியாவின் தென் எல்லைக்கும் வட இலங்கைக்கும் நிலவிய மிகக் கிட்டிய உறவு காரணமாக விஜயநகரப் பேரரசில் இரண்டாம் ஹரிஹரன் 1377 இல் ஆட்சிபீடமேறிய சில ஆண்டுகளில் பேரரசின் பல இடங்களிலும் அவனுக்கு எதிரான கிளர்ச்சிகள் ஏற்பட்டன. அச்சந்தர்ப்பத்தில் தென்னிந்திய தமிழ்ப் பிரதேசங்களும் வட இலங்கையும் விஜயநகரப் பேரரசிலிருந்து விடுபட்டன. ஆயினும் மன்னனின் மகனான விருபண உடையார் எனும் இளவரசன் மீண்டும் தமிழ்ப் பிரதேசங்களையும் இலங்கையையும் விஜயநகரப் பேரரசுடன் இணைத்துக் கொண்டான். இம் மன்னனின் ஆலம்பூண்டி சாசனம் (1385) இவ்வெற்றி பற்றிக் கூறுகின்றது. இச்சாசனத்தில் இலங்கையைக் கைப்பற்றியமை விஜயநகர அரசு பெற்றுக் கொண்ட பெரு வெற்றியாகும். எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயினும் அது யாழ்ப்பாணத்தைத் தலை நகராகக் கொண்ட வட இலங்கை என நாம் கருத்தில் கொள்ள வேண்டும் என்று பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரி கூறுகின்றார். அவரின் கருத்துப்படி யாழ்ப்பாணம் உள்ளிட்ட இலங்கையின் வடபகுதி இரண்டாம் ஹரிஹரனின் காலம் முழுதும் விஜய நகரப் பேரரசின் கீழே இருந்து வந்துள்ளது. 1399ஆம் ஆண்டுக்குரிய இரண்டாம் ஹரிஹரனின் நல்லூர் சாசனத்தில் தான் கிழக்கு, மேற்கு, தெற்கு சமுத்திராதீஸ்வரன் எனக்குறிப்பிட்டுள்ளான். அத்துடன் விருபண உடையார் மன்னன் தனது தென்னிந்திய, வட இலங்கை வெற்றிக்கான பூஜையாக இராமேஸ்வரத்தில் இராமநாதக் கடவுளின் முன்னிலையில் தனது எடைக்கு நிகரான தங்கத்தைக் காணிக்கையாக வழங்கியதாக அரியூர் சாசனம் கூறுகின்றது. மீண்டும் இப்பிரதேசங்கள் விஜய நகரப் பேரரசின் வீழ்ச்சியின் பின்னரே விடுதலையானதாக நூதிஸ் எனும் போர்த்துக்கேய வரலாற்று எழுத்தாளர் கூறும் விடயங்களிலிருந்து தெளிவாகின்றது. பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரி இலங்கை மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னிந்திய மூலாதாரங்களை மிக நுணுக்கமாக ஆராய்ந்து அறிந்ததன் பின்னர் வெளியிட்ட மேற்படி கருத்தானது யாழ்ப்பாணத்தில் சுயாதீனமான தமிழ் இராச்சியமொன்று 14ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் முதல் நிலவியது என்ற கருத்தை நம்புவதற்குத் தடையாக உள்ளது.

கோட்டை இராச்சியத்தின் ஆறாம் பராக்கிரமபாகு மன்னனுக்கும் தனது பாதுகாப்புக்காக தென்னிந்திய அரசியல் நிலைவரத்தை மையமாகக் கொண்ட வெளிநாட்டுக் கொள்கையொன்றைக் கடைப்பிடிக்க நேர்ந்ததாகத் தெரிகிறது. இம்மன்னனுக்கு சம காலத்தில் விஜயநகரப் பேரரசில் இரண்டாம் தேவராயர் (1422-1467) ஆட்சி புரிந்தார். அச்சமயத்தில் மதுரையிலிருந்த அவனது பிரதியரசனான லக்கண்ண தண்டநாயகன் என்பவன் யாழ்ப்பாணம், நாகப்பட்டனம், ஈழம் முதலிய பிரதேசங்களை அழிப்பதற்காக குதிரைப் படையொன்றைத் தயார்படுத்தியதாகவும் அதற்காகவென்று சமுத்திர யாத்திரை தானம் ஒன்றை வழங்கியதாகவும் 1435ஆம் ஆண்டுக்குரிய விஜயநகரக் கல்வெட்டு ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. அக்காலகட்டத்தில் ஆறாம் பராக்கிரமபாகு மன்னன் யாழ்ப்பாணம் தவிர இலங்கையின் ஏனைய பிரதேசங்களில் தனது ஆட்சியை உறுதிப்படுத்தியிருந்தான். லக்கண்ண தண்டநாயகனின் ஆக்கிரமிப்பு வெற்றியளித்தமையால் இரண்டாம் தேவராயரின் 1440ஆம் ஆண்டுக்குரிய கல்வெட்டொன்றில் 'ஈழம் திறைகொண்ட' எனும் அடைமொழி பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்று பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரி கருத்துத் தெரிவிக்கின்றார். ஆயினும் சம கால சிங்கள மூலாதாரங்களில் அதற்கு மாறான நிலைமை சித்தரிக்கப்படுவதால் அக் கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாதுள்ளது.

சிங்கள மூலதாரங்களின்படி ஆறாம் பராக்கிரமபாகு மன்னனின் படையினருக்கும் விஜய நகர அரசன் மலவராயனின் படைகளுக்கும் இடையே கடல் மார்க்க வர்த்தகத்தை அடிப்படையாகக் கொண்டே பிணக்கேற்பட்டுள்ளது. ஆறாம் பராக்கிரமபாகு அனுப்பிய சரக்குக் கப்பலொன்றை மலவராயரின் படையினர் கடத்திச் செல்லவே அக்கடல் கொள்ளையை ஆறாம் பராக்கிரமபாகுவின் படையினர் முறியடித்துள்ளனர். தத்தமது வெற்றிகளையே இரு தரப்பினரும் பறைசாற்றிக் கொள்வதால் உண்மை நிலையை அறிய முடியாது போனாலும் இரு இராச்சியங்களுக்குமிடையே இலங்கையைச் சூழ்ந்த கடற் பரப்பில் வெளிநாட்டு வர்த்தகத்தை மையமாகக் கொண்டு பல போர்கள் இடம் பெற்றுள்ளமையை விளங்கிக் கொள்ள முடிகின்றது. இலங்கையிலிருந்து கறுவா ஏற்றிச் சென்ற கப்பலொன்றை தென்னிந்தியர்கள் கைப்பற்றியமையால் இலங்கைப் படையினர் அதிவீரராம பட்டினத்தை ஆக்கிரமித்ததாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெலன்டைன் எனும் போர்த்துக்கேய எழுத்தாளர் குறிப்பிட்டுள்ளார். இது கிராசந்தேசய எனும் சிங்களத் தூது இலக்கியம் கூறும் அதிவீரராம பட்டினம் பற்றிய விடயத்துடன் ஒத்துப் போகிறது.

லக்கண்ண தண்ட நாயகன் 1442ஆம் ஆண்டு இலங்கையின் கடல் எல்லை வரை பயணஞ் செய்ததாக 1443ஆம் ஆண்டு தேவராயரின் அரசவைக்கு விஜயம் செய்த அப்துல் ரசாக் எனும் பாரசீகர் குறிப்பிடும் கூற்று விஜயநகர கல்வெட்டுக்கள் கூறும் விடயங்களுடன் ஒத்திருக்கின்றது. எனவே கோட்டை இராச்சியமும் விஜய நகரப் பேரரசும் வெளிநாட்டு வர்த்தகம் தொடர்பில் அடிக்கடி மோதிக் கொண்டதாக நாம் கருதலாம். சிங்கள மூலாதாரங்களில் விஜய நகரம் கன்னடம் (கர்நாடகம்) என்றே குறிப்பிடப்படுகின்றது.

விஜயநகரப் பேரரசின் அதிகாரம் தென்னிந்தியாவின் தமிழ் பிரதேசங்களில் இல்லாமல் போவதற்கான பிரதான காரணம் தென் காசியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த அரிகேசரி பராக்கிரம பாண்டிய (1442-1461) மன்னனின் அதிகாரமாகும். இம்மன்னன் வெவ்வேறு பிரதேசங்களிலும் ஈட்டிய தனது யுத்த வெற்றிகள் பற்றி அவனது கல்வெட்டுகள் கூறுகின்றன. தான் வெற்றி கொண்ட ஒரு பிரதேசமாக பராக்கிரம பாண்டிய மன்னன் சிங்கை எனுமிடத்தைக் குறிப்பிட்டுள்ளான். இங்கு குறிப்பிடப்படும் சிங்கை என்பது சிங்கை நகரைத் தலைமையகமாகக் கொண்டு வட இலங்கையில் நிலவிய ஆரியச் சக்கரவர்த்தியின் இராச்சியமாகும். விஜயநகரப் பேரரசின் வீழ்ச்சியைத் தொடர்ந்து அவர்களின் ஆதரவில் இயங்கி வந்த ஆரியச் சக்கரவர்த்திகளின் அதிகாரமும் பலவீனமடைந்தது. 1450ஆம் ஆண்டு வரை ஆறாம் பராக்கிரமபாகு மன்னனால் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்குக் காலதாமதம் ஏற்பட்டமைக்கும் விஜய நகரப் பேரரசின் பாதுகாப்பு யாழ்ப்பாணத்துக்கு இருந்தமை காரணமாகும் என்று நாம் கருதலாம். அரிகேசரி பராக்கிரம பாண்டிய மன்னனின் கீழ் எழுச்சியடைந்த பாண்டிய அதிகாரம் யாழ்ப்பாணம் மீது செல்வாக்குச் செலுத்திய விதம் தெளிவாக இல்லை. ஆகவே 1449-1450ஆம் ஆண்டுக்குரிய மேற்படி கல்வெட்டுக்களில் குறிப்பிடப்படும். சிங்கை வெற்றி என்பது போலியான பெருமைப் பிரச்சாரம் என்று கருதவும் இடமுண்டு. ஏனெனில் 1450ஆம் ஆண்டாகும்போது சப்புமல் குமாரவால் யாழ்ப்பாணம் வெற்றி கொள்ளப்பட்டிருந்தது.

கோட்டை இராசதானியின் ஆரம்பக் கட்டத்தில் சீனா இலங்கை அரசியலில் தலையிட்டமை பற்றி இதற்கு முன்னர் விரிவாக ஆராயப்பட்டது. தென்னிந்திய இராச்சியங்களிடமிருந்தும் முஸ்லிம்களிடமிருந்தும் சீனாவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து சமுத்திர வர்த்தகம் மீது விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்களை முறியடித்து இந்து சமுத்திர வர்த்தக ஆதிக்கத்தை தம் வசம் வைத்துக் கொள்ளும் பொருட்டு நீண்ட காலமாக மேற்கொண்ட முயற்சிகள் சீன வம்சக் கதைகளில் காணப்படும் மேலைத் தேசத்துக்கு மேற்கொண்ட கடற் பயணங்கள் பற்றிய அறிக்கைகள் மூலம் அறிய முடிகின்றது. இந்து சமுத்திர நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதில் இலங்கை இன்றியமையாத மத்திய நிலையமாக விளங்கியது. தமக்கு விருப்பமான ஒருவரை இலங்கை சிம்மாசனத்தில் அமர்த்துவதில் சீனர்கள் காட்டிய ஆர்வம் அவர்களின் வெளிநாட்டுக் கொள்கையின் ஓர் அம்சமாக அமைந்திருக்கலாம்.

## உசாத்துணை நூல்கள்


1. Foreign Relations of Srilanka W.L.B. MENDIS
2. இலங்கைப் பல்கலைக்கழக இலங்கை வரலாறு
3. தென்னிந்திய வரலாறு - கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் - 6

# பொருளாதாரமும் சமூக நிலைமையும்

## பொருளாதார நிலைமை

### விவசாயம்

அநுராதபுரக் காலத்தைப் போன்றே பொலன்னறுவைக் காலத்திலும் உலர் வலயத்தில் அதாவது இலங்கையின் வடக்கு கிழக்கு மற்றும் தென் கிழக்குச் சமவெளிப் பிரதேசம் குடிச் செறிவு மிக்கதாகக் காணப்பட்டது. ஆயினும் முதலாம் பராக்கிரமபாகு மன்னன் காலத்தில் மத்திய மலை நாட்டிலும் தென் கிழக்கு ஈர வலயத்திலும் இடம்பெற்ற அபிவிருத்தி வேலைகள் காரணமாக அப்பிரதேசமும் குடிச்செறிவு மிக்கதாக மாறியது. இராசரட்டைப் பிரதேசத்தைக் கைவிட்டு மக்கள் இப் பிரதேசத்திற்குப் புலம் பெயர்ந்த காரணத்தால் ஈரவலயத்தில் மேலும் சனத்தொகை அதிகரித்தது. இவ்வாறு தென் கிழக்குப் பிரதேசத்துக்கு இடம்பெயர்ந்த மக்களுக்கு புதியதொரு புவியியல் சூழலுக்கு முகங்கொடுக்க நேர்ந்தது. இப் பிரதேசத்திற்கு வருடத்தில் கூடிய காலம் அதிக மழை வீழ்ச்சி கிடைத்தது. எனவே அங்கு மரஞ்செடி கொடிகள் அடர்த்தியாகவும் செழிப்பாகவும் வளர்ந்தன. அத்தோடு இங்கு பரந்து விரிந்த சமவெளிகள் காணப்படவில்லை. இந்நிலையானது நெல்லை முதன்மையாகக் கொண்ட வரையறைகுறப்பட்ட விவசாய முறை ஒன்றுக்கே ஏற்றதாக அமைந்தது. நெற் பயிருக்கு மேலதிகமாக தென்னை, பலா, ஈரப்பலா, பாக்கு, வெற்றிலை, மிளகு முதலிய தோட்டப் பயிர்களுக்கும் இக்காலநிலை ஏற்றதாக இருந்தது. பொலன்னறுவை இராச்சியம் வீழ்ச்சியடைந்த பின்னரும் இலங்கையின் பொருளாதாரத்தில் நெற்பயிர்ச் செய்கை பிரதான இடம்பெற்றிருந்தது.

மேட்டு நிலம், சேற்று நிலம் இரண்டிலுமே நெல் பயிரிடப்பட்ட போதிலும் சேற்று நில நெற் பயிர்ச் செய்கையே சிறப்பிடம் பெற்றது. 13ஆம் நூற்றாண்டுக்குரிய 'சத்தர்மரத்னாவலி' எனும் நூலில் மேட்டுநில நெற் செய்கை பற்றியும் ஹெல் எனப்படும் நெல் வகை விளைந்த நிலம் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்காலப் பகுதிக்குரிய 'பூஜாவலிய' எனும் நூலிலும் பெருநெல், சிவப்பு ஹெல், ஹீனட்டி முதலிய நெல்லினங்கள் பற்றி எழுதப்பட்டுள்ளது. இதே நூலில் இடம்பெறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்புகளின்படி எருமைகள் மூலமும் எருதுகள் மூலமும் வயல் உழப்பட்டதாகவும் அக்கால நெற்பயிர்ச் செய்கை முறையானது இன்றைய கிராமப் புறங்களில் மேற்கொள்ளப்படும் பாரம்பரியப் பயிர்ச்செய்கையைப் போன்றே இடம்பெற்றுள்ளதை அறிய முடிகின்றது. வயலில் களை பிடுங்குதல், நெற் பயிரில் ஏற்படும் நோய்களுக்கு மந்திர தந்திரங்களைக் கையாளுதல் என்பன பற்றி 'புத்தசரண,' 'சத்தர்ம ரத்னாவலிய' எனுமிரு நூல்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் பெரும் போகம், சிறு போகம் எனுமிரு போகங்களிலே நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.நெற் பயிர்ச் செய்கையின்போது பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் பற்றியும் அக்கால இலக்கியங்களின் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. அவற்றுள் கலப்பை, மட்டப் பலகை, கலப்பை பூட்டும் குறுக்குத் தடி, கத்தி, அரிவாள், மண்வெட்டி முதலியன பற்றிய விபரங்கள் சிறப்பாக 'பூஜாவலியவிலும் 'சர்தர்மரத்னாவலிய'விலும் கூறப்பட்டுள்ளன.

விவசாய நடவடிக்கைகளில் வயல் உழுதல் மற்றும் அறுவடை வேலைகளின்போது தேவையான மனித உழைப்பை விவசாயிகள் தமது ஒற்றுமை, நெருங்கிய தொடர்புகள் என்பன மூலம் பெற்றுக் கொண்டனர். இக்கால விவசாயிகள் 'அத்தம் முறை' எனும் அடிப்படையில் தமது உழைப்பைப் பரிமாறிக் கொள்வது போன்றே அக்காலத்திலும் சிரமப் பரிமாற்றம் மூலம் உழைப்பு பெற்றுக் கொள்ளப்பட்டது என்பதில் எதுவித சந்தேகமுமில்லை. மேலும் அன்றாட விவசாய வேலைகளுக்கு கூலித் தொழிலாளர் மூலம் உழைப்பைப் பெற்றுக் கொண்டதாக இலக்கிய மூலாதரங்கள் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. இவை தவிர நிலமில்லா விவசாயிகள் விளைச்சலின் ஒரு பகுதியை நில உரிமையாளருக்கு வழங்கும் 'அந்த' எனும் முறையிலும் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர் என்பதை 'பூஜாவலிய, 'சத்தர்ம ரத்னாவலிய' எனும் நூல்கள் மூலம் அறிய முடிகின்றது. மேலும் மன்னன், பிரதானிகள் மற்றும் பௌத்த விகாரைகளுக்கு உரிய நிலங்களில் வாழ்ந்த விவசாயிகள் ஆகியோர் அந்நிலத்தில் பயிரிட்டு விளைச்சலின் குறிப்பிட்ட ஒரு பகுதியை நில உரிமையாளருக்கு வழங்கி வந்தனர். மேற்படி விவசாய முறைகளைக் கூர்ந்து அவதானிக்கும்போதும் சமூகத்தின் அரசியல், பொருளாதார நிலைமைகளை ஆராய்ந்து பார்க்கும்போதும் பல்வேறு வாழ்க்கைத் தரங்களையுமுடைய மக்கள் (பிரதானி, விவசாயி, கூலித்தொழிலாளி) ஒற்றுமையுடன் வாழ்ந்திருப்பதை அறிந்து கொள்ள முடிகின்றது.

நெற் செய்கை தவிர புராதன இலங்கையில் சேனைப் பயிர்ச் செய்கையும் சிறப்பிடம் பெற்றிருந்தது. விஷேடமாக நாட்டினுள்ளே உலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலயத்திலேயே சேனைச் செய்கை மேற்கொள்ளப்பட்டது. பொலன்னறுவை இராசதானியில் நிஸ்ஸங்கமல்ல மன்னன் தனது கல்வெட்டுக்களில் சேனைச் செய்கையாளரிடம் அறவிடப்பட்டு வந்த 'கத்தி அட' எனும் சேனை வரியை நீக்கியதாகக் குறிப்பிட்டுள்ளான். மேலும் தம்பதெனிய மற்றும் கோட்டை யுகங்களில் எழுதப்பட்ட இலக்கியங்களில் சேனைப் பயிர்ச் செய்கை பற்றி எழுதப்பட்டுள்ளது. பரம்பரையாக நிலவி வந்த சேனை செய்முறையானது பதின்மூன்றாம் நூற்றாண்டின் மத்திய பகுதியில் இராசரட்டையின் நீர்ப்பாசன முறைக் கட்டமைப்பு சீரழிந்ததைத் தொடர்ந்து அப்பகுதியில் எஞ்சியிருந்த மக்களால் தொடர்ந்தும் மேற் கொள்ளப்பட்டிருக்கலாம் என்று நாம் கருதலாம்.

இக்காலப்பகுதிக்குரிய புத்சரண, வெசதுருதா சன்னய, சிங்கள தூபவம்சம், சத்தர்மரத்னாவலிய, சத்தர்மாலங்காரய, சிங்கள போதி வம்சம், சத்தர்ம ரத்னாகரய முதலிய நூல்களிலும் சேனைகளில் பயிரிடப்பட்ட பயிர்கள், தானியங்கள், மரக்கறி வகைகளின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. பல்வேறு விதமான பயிர்களில் கரும்பும் பருத்தியும் முதலிடம் பெறுகின்றன. தானிய வகைகளில் உளுந்து, பாசிப்பயறு, குரக்கன், கடுகு, சீரகம், எள் முதலியவற்றின் பெயர்கள் அடிக்கடி குறிப்பிடப்பட்டுள்ளன.

மரக்கறி, வகைகளுள் கத்தரி, வெள்ளரி, பூசணி, என்பன பற்றி குறிப்பிடப்பட்டுள்ளன. பருத்தி, கரும்பு, எள் என்பன விவசாயத்தில் முக்கிய இடம்பெற்றன. அவை விதைக்கப்பட்ட சேனைகள் பற்றி இலக்கிய மூலாதாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. பிரதானிகள் பயன்படுத்திய பட்டுத்துணி இறக்குமதி செய்யப்பட்ட போதிலும் பொதுமக்களின் பாவனைக்குரிய பருத்தித் துணி இலங்கையிலேயே உற்பத்தி செய்யப்பட்டதாக அறிய முடிகின்றது. அதன்படி நூல் நூற்றல், துணி நெய்தல் முதலிய செயற்பாடுகளில் மக்கள் ஈடுபட்டுள்ளமையும் புலப்படுகின்றது விவசாயமும் நெசவுத் தொழிலும் ஒன்றுடனொன்று கைகோர்த்து வளர்ச்சி கண்டுள்ளன. கரும்பிலிருந்து வெல்லம் தயாரிக்கப்பட்டதுடன் கருப்பஞ்சாறு பிழியும் கை இயந்திரம் பற்றியும் இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

உலர் வலயத்தில் வாழ்ந்த மக்கள் நெய், நல்லெண்ணெய், இலுப்பெண்ணெய் என்பவற்றை சமையலுக்குப் பயன்படுத்தியதுடன் நெய் மற்றும் இலுப்பெண்ணெய் என்பவற்றை விளக்கேற்றுவதற்கும் பயன்படுத்தியுள்ளனர். பதின்மூன்றாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் உலர் வலய நாகரிகம் வீழ்ச்சியடைந்ததுடன் மக்கள் தென்மேற்கு ஈரவலயத்தில் வாழத் தலைப்பட்டதுடன் பெரும்பாலும் தேங்காய் எண்ணெய் பாவனைக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழக்கப்பட்டனர். வீட்டுத் தோட்டமும் ஆரம்ப காலம் முதலே விவசாயப் பொருளாதாரத்தில் முக்கிய இடம் வகித்தது. வீட்டுப் பூங்கா, வீட்டு நிலம், வீட்டுத் தோட்டம் எனும் பல பெயர்களில் இலக்கிய மூலாதாரங்களில் குறிப்பிடப்படுவது வீட்டைச் சூழ பயிரிடப்பட்ட நிலங்களாகும். தென்னை, பாக்கு, கித்துல், மா, எலுமிச்சை, தோடை, புளி, பலா, வெற்றிலை, இஞ்சி, சீரகம், மிளகு முதலிய பயிர்கள் வீட்டுத் தோட்டங்களில் பயிரிடப்பட்டன.

இராசரட்டை நாகரிகத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர் தென், தென் மேற்குப் பிரதேசங்களில் தனிப் பயிராக தென்னை பாரிய அளவில் பயிரிடப்பட்டது. ஈரவலய கரையோரத்தின் கால நிலை தென்னைக்கு மிகவும் உகந்ததாகக் காணப்பட்டது. வம்சக் கதைகளில் போலவே தூது இலக்கியங்களிலும் களுத்துறை, பெந்தோட்டை, தொட்டகமுவ, மொரட்டுவை, கம்புறுகமுவ, களனி, காரகல முதலிய இடங்களில் காணப்பட்ட தென்னந்தோப்புகள் பற்றி வர்ணிக்கப்பட்டுள்ளன. கறுவாப் பயிர்ச்செய்கை பற்றிய தகவல்களையும் பதின்மூன்றாம் நூற்றாண்டிலேயே அறியக் கூடியதாக உள்ளது. உணவைப் பாதுகாத்து வைக்கக் கூடிய ஒரு வாசனைத் திரவியம் என்ற வகையில் கறுவாவுக்கு ஐரோப்பிய நாடுகளில் பெரும் கிராக்கி நிலவியது. எனவே காடுகளில் வளர்ந்த இயற்கைத் தாவரமான கறுவா இக்காலப் பகுதியில் முக்கியமான வர்த்தகப் பயிராக மாறியது படிப்படியாக அது பதினைந்தாம் நூற்றாண்டின் பின்னர் பெருந்தோட்டப் பயிராக உருவெடுத்தது.

இக்காலப் பகுதியில் அதற்கு முன்னைய காலத்தைப் போன்றே விலங்கு வளர்ப்புக்கும் முக்கியத்துவம் வழங்கப்பட்டது. எருமைகளும் பசு மாடுகளும் பரவலாக வளர்க்கப்பட்டதுடன் ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு பற்றிய தரவுகளும் கிடைக்கின்றன. உழவுக்கும் சூடு மிதிப்புக்கும் மாடுகளைப் பயன்படுத்தியுள்ளமையை அறிய முடிகின்றது. உணவு வகைகளுள் பாலுக்கும் பால் உணவுகளுக்கும் முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. பதினைந்தாம் நூற்றாண்டு இலங்கையர் பற்றி எழுதியுள்ள சீன எழுத்தாளரான மாஹுவான் என்பவர் இலங்கையர் தயிரும் நெய்யும் இன்றி உணவு உட்கொள்ள மாட்டார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளார்.

### நீர்ப்பாசனம்

அநுராதபுர யுகத்தில் ஆரம்பமாகி படிப்படியாக வளர்ச்சியடைந்த நீர்ப்பாசனத் துறை பொலன்னறுவை யுகத்தில் முதலாம் பராக்கிரமபாகு மனனனின் காலத்தில் முழுமையடைந்தது. சோழர்களை வெற்றி கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் விஜயபாகு மன்னன் சோழராட்சியில் சீரழிந்துபோன இலங்கையின் புராதன நீர்ப்பாசன முறையைப் புனரமைப்பதிலே கவனம் செலுத்தினான். எனவே அவனால் புதிய நீர்ப்பாசன முயற்சிகளில் கவனம் செலுத்துவது முடியாத காரியமாயிருந்தது. எனினும் விஜயபாகு மன்னன் புதுகுண வாவியை நிர்மாணித்தான். அது ஊவா மாகாணத்தில் தென் கிழக்கு மூலையில் அமைந்துள்ளதுடன் இன்றும் ஒரு வரலாற்றுத் தடயமாகக் காணப்படுகின்றது.

முதலாம் விஜயபாகுவினால் நீர்ப்பாசனப் புனரமைப்பு நடவடிக்கைகள் பலவும் மேற்கொள்ளப்பட்டன. அவற்றுள் மின்னேரிய வாவிக்கு நீரை வழங்கிய எலஹரக் கால்வாயின் உடைந்த பகுதிகளைச் சீர்த்திருத்தியமையானது முக்கிய நடவடிக்கையாகும். இதனால் மின்னேரியா, கவுடுல்ல, கந்தளாய் முதலிய குளங்கள் இணைக்கப்பட்ட பாரியதொரு நீர்ப்பாசனக் கட்டமைப்பு தொடர்ந்தும் பேணப்பட்டது. மேலும் மகாகணதராவ, இனாமலுவ, நாச்சதுவ (நாச்சியார் தீவு) ஆகிய குளங்களும் விஜயபாகுவால் புனரமைக்கப்பட்டன.

முதலாம் விஜயபாகு மன்னனின் பின்னர் ஏற்பட்ட சிம்மாசன உரிமைப் போராட்டம் காரணமாகவும் நாடு பல இராச்சியங்களாகப் பிளவு பட்டமையாலும் நீர்ப்பாசன நடவடிக்கைகள் சீர்குலைந்தன. இக் காலத்தில் ஆட்சி உரிமைக்காக ''போரில் ஈடுபட்ட இளவரசர்கள் நீர் நிறைந்த குளங்களின் கட்டுகளையும் கலிங்கலையும் உடைத்தனர்.'' என்று வம்சக் கதைகள் வர்ணிக்கின்றன. 1140ஆம் ஆண்டு பராக்கிரமபாகு இளவரசன் தக்கிண தேச ஆட்சியாளனாகும் வரையில் இந்நிலை தொடர்ந்தது.

முதலாம் பராக்கிரமபாகு மன்னனால் மேற்கொள்ளப்பட்ட நீர்ப்பாசன நடவடிக்கைகளை இரண்டு கட்டங்களாக வகுத்து நோக்கலாம். 1140 முதல் 1153 வரை தக்கிண தேச ஆட்சியாளனாயிருந்த காலம் முதற் கட்டமாகும். 1153 முதல் 1186 வரை முழு இலங்கைக்கும் மன்னனான பொலன்னறுவைக் காலம் இரண்டாம் கட்டமாகும்.

தக்கிண தேசத்தை அபிவிருத்தி செய்வதற்காகப் பராக்கிரமபாகு மன்னன் பின்பற்றிய வேலைத் திட்டம் பற்றி அம்மன்னனின் கூற்றை வம்சக் கதைகள் இவ்வாறு பதிவு செய்துள்ளன. ''எனக்குரிய அரசில் மழை நீரால் போசிக்கப்படும் பல்வேறு வகையான விவசாய நிலங்களுடன் ஒப்பிடுகையில் நதிகளாலும் குளங்களாலும் போசிக்கப்படும் விவசாய நிலங்கள் சொற்பமாகும். அதிகமான மலைகளையும் அடர்த்தியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காடுகளையும் கொண்டுள்ள இவ்வாறானதொரு நாட்டில் வானத்திலிருந்து விழும் ஒரு துளி நீராவது மக்களுக்குப் பயன்படாது வீணே கடலைச் சென்றடையக் கூடாது."

தக்கிண தேசத்தில் பாயும் நதிகளுள் ஒன்றான தெதுறு ஓயாவிற்குக் குறுக்காக மூன்று இடங்களில் அணை கட்டிய பராக்கிரமபாகு மன்னன் அதிலிருந்து நீர்ப்பாசன நடவடிக்கைகளை மேற்கொண்டான். அவ்விடங்கள் கொட்டபத்த, சூகர நிஜ்ஜர, தோரதாத்திக என்பவையாகும் என்று வம்சக் கதைகளில் குறிப்பிடபப்பட்டுள்ளது. இன்றைய ரத்தம்பலா ஓயவுக்கும் மற்றும் தெதுறு ஓயவுக்கும் இடைப்பட்ட பிரதேசத்திற்கு நீரை வழங்கிய கொட்டபத்த அணைக்கட்டின் தடயங்களை இன்று காண்பதற்கில்லை. இந்த அணைக்கட்டுக்கு முன்னர் அமைக்கப்பட்ட சூகரநிஜ்ஜர அணைக்கட்டு அமைந்திருந்தது இன்றைய எபவலப்பிட்டிய எனும் இடத்திலாகும். இந்த அணையிலிருந்து கொண்டு செல்லப்பட்ட நீர் நிக்கவரட்டியவில் அமைந்திருந்த மாகல்ல குளத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. மூன்றாவது அணைக்கட்டு ஹக்வட்டுன்னா ஓய மற்றும் கிம்புல்வானா ஓய எனும் இரு கிளையாறுகள் ஒன்றிணைந்த தோரதத்திக எனுமிடத்தில் அமைக்கப்பட்டது. இவ்விடம் இன்று தெமோதர என்று அழைக்கப்படுகின்றது. இவ்வணையில் ஆரம்பமான கால்வாய் ஊடாக தல கல்ல குளத்துக்கு நீர் அனுப்பப்பட்டது.

பராக்கிரமபாகு தக்கிணதேச ஆட்சியாளனாக இருந்தபோது பராக்கிரமபுரம் அவனது தலைநகராக இருந்தது. அது இன்றைய ஹெட்டிபொல எனுமிடத்திற்கு அருகில் உள்ள பண்டுவஸ்நுவர என்று அறியப்பட்டுள்ளது. அங்கு ஆரம்ப காலத்தில் அமைக்கப்பட்டிருந்த பண்டா வாவியை ஆயிரம் ஏக்கர் தண்ணீரைக் கொள்ளக்கூடிய வகையில் பராக்கிரமபாகு மன்னன் பெருப்பித்தான். பராக்கிரம சமுத்திரம் எனப்பட்ட அக்குளம் 'பாண சமுத்திரம்' என்றும் அழைக்கப்பட்டது. இது தவிர தக்கிண தேசத்தில் ஐம்பத்து மூன்று குளங்கள் இம்மன்னனால் புனரமைக்கப்பட்டுள்ளன.

1153 முதல் 1186 வரையிலான பராக்கிரமபாகுவின் 33 வருட ஆட்சிக் காலத்தில் அவனால் 165 அணைகளும் 391 கால்வாய்களும் 163 பெரிய குளங்களும் 2376 சிறிய குளங்களும் அமைக்கப்பட்டதாக வம்சக் கதைகள் கூறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்ப்பாசனத் துறைக்குப் பராக்கிரமபாகு செய்த பாரிய பங்களிப்பு பொலன்னறுவையில் பராக்கிரம சமுத்திரத்தை அமைத்தமையாகும். இலங்கையிலே அதி விசாலமான இந்தக் குளம் தோபா வாவி, தும்புளுவாவி எனும் இரு குளங்களை இணைத்து உருவாக்கப்பட்டதாகும். இன்றைய நிலையில் பராக்கிரம சமுத்திரத்தின் குளக்கட்டின் நீளம் 8.5 மைல்களாகவும் உயரம் 40 அடிகளாகவும் 5350 ஏக்கர் பரப்பளவில் குளம் பரந்து விரிந்துள்ளது. அத்துடன் 18200 ஏக்கர் விவசாய நிலம் இக்குளம் மூலம் போசிக்கப்படுகின்றது. மகாவலியின் கிளையாறான அம்பன் கங்கைக்குக் குறுக்காக அங்கமடில்ல எனுமிடத்தில் அணை கட்டி அங்கிருந்து ஆகாய கங்கை எனும் கால்வாய் மூலம் பராக்கிரம சமுத்திரத்துக்கு நீர் வழங்கவும் மன்னன் ஏற்பாடு செய்திருந்தான். அவை தவிர கிரித்தல வாவியிலிருந்தும் பராக்கிரம சமுத்திரத்திற்கு ஒரு கால்வாய் மூலம் நீர் வழங்கப்பட்டது. பூஜாவலிய, ராஜ ரத்னாகரய எனும் இலக்கிய மூலாதாரங்களில் பராக்கிரம சமுத்திரம் மகா சமுத்திரம் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பிரதான குளம் தவிர மகா பராக்கிரமபாகு மன்னன் மகிந்த தடாகம், பராக்கிரம தடாகம், ஏகாஹவாவி, பராக்கிரம சாகரம் எனும் குளங்களையும் அமைத்ததாக வம்சக் கதைகள் கூறுகின்றன. அவற்றுள் மகிந்த தடாகம் எனும் குளம் அநுராதபுர இராசதானியின் முதலாம் அக்போ மன்னனால் அமைக்கப்பட்ட அதே பெயரில் உள்ள குளத்தை பராக்கிரமபாகு விசாலப்படுத்தியதாயிருக்கலாம். காரகங்கையிலிருந்து வெட்டப்பட்ட கோதாவரி வாய்க்காலிலிருந்து பராக்கிரம சாகரம் நீரைப் பெற்றதாகவும் வம்சக் கதைகள் குறிப்பிடுகின்றன. பராக்கிரம சாகரம் எனும் குளம் மின்னேரிய ஓயாவுக்கும் பராக்கிரம சமுத்திரத்துக்கும் இடையில் அமைந்தது என்று சீ.டப்ளியூ. நிக்கலஸ் என்பவர் கருதுகின்றார். அதன் சிதைவுகளை இப்போதும் காணக்கூடியதாய் உள்ளது. ஆயினும் பராக்கிரம தடாகம், ஏகாஹவாவி எனும் குளங்களின் தடயங்களை இன்று காண முடியவில்லை.

முதலாம் பராக்கிரமபாகு மன்னனால் புனரமைக்கப்பட்ட குளங்களாக மின்னேரிய வாவி, கிரித்தல வாவி, மஹகல் கடவல வாவி, கவுடுல்ல வாவி, கலாவாவி, மகா கணதராவ வாவி, பதவிய வாவி, கண்டலம வாவி, நாச்சியாதீவு வாவி, யோத வாவி, அங்கமுவாவி, பாண்டிக்குளம், உறுவெல வாவி (உருகுணையின் எத்திமலே குளம்) என்பவற்றைக் குறிப்பிடலாம்.

மகா பராக்கிரமபாகு மன்னனுக்குப் பின்னர் இலங்கையில் எந்தவொரு மன்னனாலும் பாரிய குளங்கள் அமைக்கப்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிஸ்ஸங்மல்ல மன்னன் நிஸ்ஸங்க சமுத்திரம் எனும் குளத்தை அமைத்ததாக அவனது கல்வெட்டுக்கள் கூறுகின்றன. அது பராக்கிரமபுரவில் உள்ள பண்டாவாவி என்று கருதப்படுகின்றது. பொலன்னறுவையை ஆட்சி செய்த கல்யாணவதி இராணியால் குருணாகலை மாவட்டத்தில் உள்ள பதலேகொட குளம் புனரமைக்கப்பட்டதாகக் கல்வெட்டொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

புராதன இலங்கையில் பாரிய நீர்பாசனக் கட்டமைப்புக்களை அமைப்பதற்கான உழைப்பை மன்னர்கள் எவ்வாறு பெற்றுக் கொண்டனர்? என்று ஆராய்வோமானால் அதற்காகக் குளத்து நீரைப் பயன்படுத்தும் கிராம மக்களின் உழைப்பைப் பெற்றுக் கொண்டதற்கான சாட்சிகள் கிடைக்கின்றன. ஒன்பதாம், பத்தாம் நூற்றாண்டுகளுக்குரிய கல்வெட்டுக்களில் 'வெவ்மெஹெ' எனும் பதம் குறிப்பது குளங்களை அமைப்பதற்கும் புனரமைப்பதற்கும் மக்களால் வழங்கப்பட்ட சேவையையே ஆகும் என்று நாம் கருதலாம்.

1215ஆம் ஆண்டு மாகனின் ஆக்கிரமிப்பு வரை தலைநகரான பொலன்னறுவையில் தொடர்ச்சியாக நிகழ்ந்த சிம்மாசன உரிமைப் போராட்டம் காரணமாக எந்தவொரு ஆட்சியாளனுக்கும் நீர்ப்பாசன நடவடிக்கைகள் தொடர்பாகக் கவனம் செலுத்த முடியவில்லை. மாகனின் ஆக்கிரமிப்பினால் ஏற்பட்ட அழுத்தங்கள் காரணமாக இராசரட்டை, உருகுணை என்பவற்றை தமது பூர்வீகமாகக் கொண்டிருந்த மக்கள் சம தரையில் அமைந்திருந்த தமது விவசாய நில புலன்களைக் கைவிட்டு மத்திய மலை நாட்டுக்கும் தென்மேல் சமவெளிப் பகுதிக்கும் புலம் பெயர்ந்தனர். எனவே ஆயிரத்து இருநூறு ஆண்டுகளாக இராசரட்டையிலும் உருகுணையிலும் கட்டியெழுப்பப்பட்ட நீர்ப்பாசன தொழினுட்பம் அழிவுற்றது. அரச அனுசரணையுடன் பாரிய குளங்கள், கால்வாய்கள், அணைக்கட்டுகள் என்பவற்றுக்குப் புறம்பாக மக்களின் கூட்டுறவால் சிறு குளங்களும் தனியார் முயற்சிகளால் கால்வாய்களும் அமைக்கப்பட்டமையை ஆரம்ப காலந்தொட்டு அவதானிக்க முடிந்தது. பொலன்னறுவைக் காலத்திலும் இம்முறை அமுலில் இருந்தமையை முதலாம் விக்கிரமபாகு மன்னனின் காலத்துக்குரிய 'கஹம்பிலியாவ' கல்வெட்டில் காணப்படும் குறிப்பின் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது.

குளங்கள் மற்றும் நீர்ப்பாசனத் திட்டங்கள் மூலம் விவசாயிகளுக்கு நீர் விநியோகம் செய்வது 'நீர்ப்பங்கு' என்று அழைக்கப்பட்டதாக விசுத்திமார்க சன்னய' எனும் நூலின் மூலம் அறிய முடிகின்றது. கல்வெட்டுக்களில் அது 'நீர்ப் பிரிவு' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதிலிருந்து வயல்களுக்குத் தேவைப்படும்போது நீர் விநியோகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்டுள்ளது. அல்லது பங்கு பங்காக நீர் பிரித்து வழங்கப்படும் நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளது என்பதை அறிந்து கொள்ளக் கூடியதாயுள்ளது. இவ்வாறு விவசாயிகள் பெற்றுக் கொண்ட நீருக்காக அரசுக்கு வரி செலுத்தியுள்ளனர்.

புராதன இலங்கையில் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட நீர்ப்பாசனத் துறையும் அதன் மேல் கட்டியெழுப்பப்பட்ட நாகரிகமும் பதின்மூன்றாம் நூற்றாண்டின் பின்னர் அழிவுக்குள்ளானது. அதனால் மக்களும் தென்மேற்குத் திசை நோக்கிப் புலம்பெயர்ந்தமை தெளிவாகின்றது. இவ்வாறு சிங்கள இராசதானிகள் இடம்பெயர்ந்த பின்னரும் நாட்டில் விவசாயமே பொருளாதாரத்தின் அடிப்படையாக அமைந்தது. விசேடமாக பதின்னான்காம், பதின்னைந்தாம் நூற்றாண்டுகளில் வெளிநாட்டு வர்த்தகம் முன்னரை விட முக்கியத்துவம் பெற்றதைக் காண முடிகின்றது.

பதின்மூன்றாம் நூற்றாண்டின் பின்னர் நீர்ப்பாசனக் கட்டமைப்பு செயலிழப்பதற்கும் இராசரட்டையின் செழிப்பு உடனடியாக அற்றுப் போவதற்குமான காரணம் என்ன? என்பதற்குக் கல்விமான்கள் பல விதமான கருத்துக்களை முன்வைக்கின்றனர். காலநிலையின் விபரீதத்தால் இராசரட்டையின் நெல் விவசாயம் சீரழிந்து போனமையால் மக்கள் குளங்களையும் அது சார்ந்த பிரதேசங்களையும் கைவிட்டு தென்மேல் பிரதேசங்களுக்கு இடம்பெயர்ந்தனர் என்பது ஒரு சாராரின் கருத்தாகும். ஆயினும் பழைய இராசரட்டையின் காலநிலை நிகழ் காலத்தின் காலநிலையை விட பாரிய மாற்றங்களுக்கு உள்ளானதென்று கூறுவதற்கு எதுவித சாட்சிகளும் இல்லை. முற்காலத்தில் இராசரட்டை நதிகளில் பாய்ந்த நீரின் அளவு மற்றும் அப்பகுதி பெற்ற மழை வீழ்ச்சியின் அளவு என்பன நிகழ்காலத்தை விடவும் வேறுபட்டுக் காணப்படவில்லை என்பது புவியியல் அறிஞர்களின் கருத்தாகும். தற்காலத்தில் ஈரவலய, உலர் வலயங்களைப் பிரிக்கும் எல்லைக் கோடானது முற்காலத்திலும் அவ்வாறே காணப்பட்டது. பழைய நீர்ப்பாசன நடவடிக்கைகளின் தடயங்கள் யாவும் நிகழ்கால உலர் வலயத்திலேயே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. எனவே காலநிலை மாற்றத்தால் பதின்மூன்றாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் இராசரட்டையின் பொருளாதாரக் கட்டமைப்பு மற்றும் அதன் செழிப்புத் தன்மை என்பன இல்லாதொழிந்தன என்ற கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாதுள்ளது.

இராசரட்டையின் வீழ்ச்சிக்கான காரணத்தை அறிய முற்படும் பலரும் அப்பிரதேசத்தில் மண்ணரிப்பு ஏற்பட்டு அதன் மூலம் மண் வளமிழந்ததனால் விவசாயமும் வீழ்ச்சியடைந்தது என்று கூறுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராசரட்டையின் செழிப்புத் தன்மை இல்லாது போனமைக்கும் இதே காரணத்தைக் கூறுகின்றனர். எனவே மண்ணரிப்புக்குட்பட்டமை, மண் வளமிழந்தமை பற்றி ஆய்வுகளை மேற்கொண்ட புவியியலறிஞரான ரோட்ஸ் மர்பி அக்கருத்தை ஊர்ஜிதம் செய்யக்கூடிய எந்தவொரு தடயமும் கிடைக்கவில்லை என்கின்றார். இராசரட்டையின் செழிப்புத் தன்மை அற்றுப் போனமைக்கு மலேரியா நோயே காரணம் என்பது மற்றுமொரு அபிப்பிராயமாகும். ஆயினும் பேராசிரியர் பரணவிதான அவர்களின் கருத்துப்படி மலேரியா நோயினால் இராசரட்டை நாகரிகம் வீழ்ச்சியடைந்ததா? அல்லது அதன் வீழ்ச்சியின் பின்னர் உடைந்து போன குளங்கள், வாய்க்கால்களில் தேங்கிய நீரினால் அந்நோய் பரவியதா? என்ற கேள்விக்கு விடை காண்பது கடினமானதாகும்.

மற்றும் சில அறிஞர்களின் கருத்துப்படி பொலன்னறுவை யுகத்தின் இறுதிக் காலப்பகுதியில் இந்தியாவிலிருந்து மேற்கொள்ளப்பட்ட மாகனின் ஆக்கிரமிப்பே பிரதான காரணமாகும். ஆயினும் பதின்மூன்றாம் நூற்றாண்டில் மேற்கொள்ளப்பட்டதைப் போன்ற பாரிய ஆக்கிரமிப்புக்கள் அதன் முன்னரும் இராசரட்டை மீது மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1017ஆம் ஆண்டு முதல் 1070ஆம் ஆண்டு வரையிலான அரை நூற்றாண்டுக்கும் மேற்பட்ட காலம் சோழர்கள் இராசரட்டையுற்பட்ட வட இலங்கை முழுவதையும் ஆட்சி செய்துள்ளனர். ஆனால் அதன் பின்னர் மீண்டும் அங்கு சிங்கள இராசதானி சிறப்பாக வளர்ச்சியடைந்தது. எனவே பதின்மூன்றாம் நூற்றாண்டில் கலிங்க மாகனின் படையெடுப்பே இராசரட்டையின் வீழ்ச்சிக்கும் நீர்ப்பாசனக் கட்டமைப்பின் சீரழிவிற்கும் காரணம் என்று முற்று முழுதாக ஏற்றுக் கொள்ள முடியாது.

இராசரட்டை நாகரிக வீழ்ச்சிக்கு ஏதுவாயமைந்த பல்வேறு காரணிகளுள் முக்கியமான காரணியாக பொலன்னறுவை யுகத்தின் இறுதியில் மத்திய ஆட்சி நிருவாகத்தில் ஏற்பட்ட சரிவைக் குறிப்பிடலாம். முதலாம் பராக்கிரமபாகுவின் ஆட்சிக் காலத்தில் மத்திய நிருவாகமும் நீர்ப்பாசன நடவடிக்கைகளும் அதற்கு முன்னைய காலத்தில் நிலவியதை விட சிறப்பாகக் காணப்பட்டது. இந்த மத்தியப்படுத்தப்பட்ட ஆட்சி முறையும் நீர்ப்பாசனத் துறையின் நிருவாகமும் ‘குலீன’ (தாழ்த்தப்பட்ட சாதியினர்) என்று வம்சக் கதைகளில் குறிப்பிடப்படும் பிரதேசத் தலைவர்களினாலேயே செம்மையாக முன்னெடுத்துச் செல்லப்பட்டுள்ளது. ஆயினும் நிஸ்ஸங்கமல்ல மன்னனுக்குப் பின்னர் ஆட்சி பீடமேறிய பொலன்னறுவை மன்னர்களின் பலவீனம் காரணமாக மத்திய நிருவாகத்தை அவர்களால் திறமையாகச் செயற்படுத்த முடியாமற் போனது. மாகனின் ஆட்சிக் காலத்தில் தாழ்த்தப்பட்ட சாதியினருடன் கடுமையாக நடந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டதுடன் அவர்கள் அவமானப்படுத்தவும்பட்டனர் என்று வம்சக் கதைகள் கூறுகின்றன. இவ்வாறான காரணங்களால் பொலன்னறுவை யுகத்தின் இறுதிக் காலத்தில் குளங்கள் கால்வாய்களை நிருவகித்து வந்த சமூக அமைப்பு சீர்குலைந்தது. இது போன்ற காரணங்களாலும் பதின்மூன்றாம் நூற்றாண்டிலிருந்து தொடர்ந்து இலங்கை மீது மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு ஆக்கிரமிப்புக்களாலும் குளத்தை அடிப்படையாகக் கொண்டமைந்த இராசரட்டையின் செழிப்புத் தன்மை படிப்படியாக வீழ்ச்சியடைந்து அழிந்து போனதாகப் பேராசிரியர் பரண விதான உள்ளிட்ட வரலாற்றாசிரியர்கள் விளக்கம் தருகின்றனர்.

## உள்நாட்டு வர்த்தகம்

புராதன இலங்கையின் விவசாய சமூகத்தில் கிராமங்கள் தன்னிறைவடைந்து திகழ்ந்த காரணத்தால் இன்று போல் உள்நாட்டு வர்த்தகம் விரிவடைந்ததாகக் காணப்படவில்லை. ஆயினும் உப்பு முதலிய அத்தியவசியப் பொருட்கள் கரையோரத்திலிருந்து வியாபாரிகளால் உள்நாட்டுக்குள் கொண்டு வந்து விநியோகிக்கப்பட்டன. அத்தோடு நாட்டின் சில பகுதிகளில் மாத்திரம் விளைந்த இஞ்சி முதலிய வாசனைத் திரவியங்களையும் சில பகுதிகளில் உற்பத்தி செய்யப்பட்ட துணிவகைகளையும் பெண்களுக்குரிய ஆபரணங்களையும் விநியோகிக்கும் பணியில் வியாபாரிகளால் குறிப்பிடத்தக்கதொரு சேவையாற்றப்பட்டுள்ளதை அவதானிக்கலாம். நகர்ப்புறத்தில் வாழ்ந்த பிரதானிகளுக்காக வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நறுமணப் பொருட்கள் மற்றும் விலை உயர்ந்த பட்டு முதலிய துணி வகைகளையும் விநியோகம் செய்த வியாபாரிகளால் ஏற்றுமதிக்குத் தேவையான வர்த்தகப் பொருட்களும் ஒன்று சேர்க்கப்பட்டன.

உள்நாட்டு வர்த்தகம் நகர்ப்புறங்களில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டன. பொலன்னறுவை நகரின் சில வீதிகள் வியாபார நிலையங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அங்கு எல்லாவிதமான பொருள்களையும் காண முடிந்ததாகவும் வம்சக் கதைகள் குறிப்பிடுகின்றன. பொலன்னறுவையின் வீழ்ச்சிக்குப் பின்னர் சிறிது காலம் தலைநகராகத் திகழ்ந்த குருணாகலையிலும் வர்த்தக வீதிகளைக் காண முடிந்ததாக 'குருணாகல விபரம்' எனும் ஏட்டுச் சுவடி மூலம் அறியக் கூடியதாயுள்ளது. பிரதான நகரங்கள் தவிர உள் நாட்டில் வர்த்தகப் பொருள்களை விநியோகம் செய்வதற்காக நியம்கம் அல்லது நிகம் எனும் சிறு நகரங்களும் காணப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதோட்டத்திலிருந்து அநுராதபுரத்திற்கும் ஜம்புகோள பட்டினத்திலிருந்து அநுராதபுரத்திற்கும் மாகமவிலிருந்து பொலன்னறுவைக்கும் அநுராதபுரத்திற்கும் திருகோணமலையிலிருந்து பொலன்னறுவைக்குமான பாதைகள் பொலன்னறுவை யுகத்தில் காணப்பட்டன. உருகுணையின் மாகமவிலிருந்து பொலன்னறுவைக்கும் திருகோணமலையிலிருந்து பொலன்னறுவைக்கும் அமைந்திருந்த பாதைகள் பற்றி நிஸ்ஸங்கமல்ல மன்னனால் அமைக்கப்பட்ட மைல் கற்றூண்கள் சாட்சி பகர்கின்றன. இப்பிரதான பாதைகள் தவிர நாடு முழுதும் வண்டிப் பாதைகளையும் காணக் கூடியதாக இருந்தது. தம்பதெனிய, கம்பளை, கோட்டை காலங்களில் ஈரவலயத்தில் வீதி அமைப்புகள் வளர்ச்சியடைந்திருந்தாக தூது இலங்கியங்கள் மூலம் அறியக் கூடியதாயுள்ளது. அதன்படி தெவுந்தர, மாத்தறை, வெலிகம, காலி, ஹிக்கடுவ, பெந்தோட்டை, பேருவளை, களுத்துறை, பாணந்துறை, கொழும்பு, வத்தளை, நீர்கொழும்பு, சிலாபம், புத்தளம், மன்னார் ஊடாக யாழ்ப்பாணம் வரை அமைந்திருந்த கரையோரப் பாதை பற்றி 'கோகில சந்தேசய' (குயில் விடுதூது) எனும் இலக்கியத்தின் வாயிலாக அறிய முடிகின்றது. இப்பாதையில் தெவுந்தரயிலிருந்து வத்தளை வரையான பகுதி பற்றி வேறு தூது இலக்கியங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளன. அதே போன்று கம்பளையிலிருந்து வத்தளை மற்றும் கொழும்பு வரையில் அமைந்திருந்த வீதி பற்றி மயுர சந்தேச, திசர சந்தேச எனும் நூல்கள் குறிப்பிடுகின்றன. அத்துடன் ஜயவர்தனபுரவிலிருந்து களனிக்கும் காரகலைக்கும் அமைந்திருந்த வீதிகள் பற்றிய விபரங்கள் 'சலலிஹினி சந்தேசய' (பூவை விடு தூது) மற்றும் ஹங்ச சந்தேசய (அன்னம் விடு தூது) எனும் நூல்களிலும் காணப்படுகின்றன. இவ்வாறான வீதிகள் உள்நாட்டு வர்த்தகத்திற்குப் பெரிதும் துணை புரிந்தன. வண்டிகள் மூலம் பொருட்களைக் கொண்டு சென்ற வியாபாரிகள் பற்றிய விபரங்களையும் தூது இலக்கியங்கள் மூலம் அறிய முடிகின்றது.

வர்த்தகத்துக்காக நகரங்களுக்குள் கொண்டு வரப்பட்ட பொருட்களுக்கு 'சுங்கம்' எனும் பெயரில் வரி அறவிடப்பட்டது. இவ்வரி அறவிடப்பட்ட இடம் பொலன்னறுவைக் காலம் முதல் 'மடிகே' என்றழைக்கப்பட்டது. கம்பளை கோட்டை காலங்களில் தீர்வை வரிகள் அறவிடப்பட்ட இடங்களாக அட்ட(8) மடிகே மற்றும் நவ தொட்டமுன என்பன குறிப்பிடப்படுகின்றன.

தூரப் பிரதேசங்களில் அமைந்த கிராமங்களின் வர்த்தகமானது தோளில் சுமக்கப்பட்ட காவுகள் மூலமும் தலையில் சுமக்கப்பட்ட 'பொட்டனி' எனும் பொதிகள் மூலமும் கிராமத்துக்குக் கிராமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாபாரிகளால் கொண்டு செல்லப்பட்டதன் மூலமே நடைபெற்றன. இவ்வியாபாரிகள் பணக் கொடுக்கல் வாங்கல் மற்றும் பண்டமாற்று முறையிலும் வியாபாரம் செய்துள்ளனர். பொலன்னறுவை இராசதானியின் இறுதி வரையிலும் 'கஹவணு' மற்றும் 'மஸ்ஸ' எனும் நாணயங்கள் புழக்கத்தில் இருந்துள்ளன. முதலாம் பராக்கிரமபாகு, நிஸ்ஸங்கமல்ல, சாஹஸமல்ல, லீலாவதி, இரண்டாம் பராக்கிரமபாகு ஆகிய ஆட்சியாளர்களின் பெயர் குறிப்பிடப்பட்ட நாணயங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. பதினான்காம் நூற்றாண்டு முதல் கஹவணு, மஸ்ஸ முதலிய நாணயங்களுக்கு மேலதிகமாக 'பணம்' எனும் நாணயமும் புழக்கத்திற்கு வந்துள்ளது. நாணயம் வெளியிடுவது இலங்கை அரசனுக்கு மாத்திரம் காணப்பட்ட தனிப்பட்ட அதிகாரமாகும் என்று அக்காலப் பகுதிக்குரிய கல்வெட்டுக்களிலும் இலக்கிய மூலாதாரங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளன.

## வெளிநாட்டு வர்த்தகம்

தலைநகரங்கள் தென் மேற்குத் திசை நோக்கில் புலம் பெயர்ந்த பின்னர் அதாவது 13ஆம் நூற்றாண்டின் மத்திய பகுதியில் இந்து சமுத்திரத்தில் வளர்ச்சியடைந்து வந்த வெளிநாட்டு வர்த்தகத்தின் மீது இலங்கை ஆட்சியாளர்களின் கவனம் திரும்பியதைக் காண முடிந்தது. தென்மேற்கு ஈரவலயத்தில் விளைந்த கறுவா, மிளகு, ஏலம், கராம்பு முதலிய வாசனைத் திரவியங்களும் அப்பகுதிகளில் கிடைக்கப் பெற்ற முத்து, மாணிக்கம் என்பனவும் வெளிநாட்டு வர்த்தகத்தில் முக்கியத்துவம் பெற்றன.

இலங்கையில் வந்து வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்ட வர்த்தகக் குழுவினரை 'நாநாதேசிகள்' என்று கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. அதேபோல வளஞ்சியர், நகரத்தார் எனும் பெயர்களில் அழைக்கப்பட்ட தென்னிந்திய வர்த்தகக் குழுவினர் பற்றிய குறிப்புகளும் காணப்படுகின்றன. இவ்வாறான வெளிநாட்டு வர்த்தகக் குழுக்களின் வர்த்தக நிலையங்கள் மாந்தோட்டம், அநுராதபுரம், பதவிய, வாகல்கட, ஆனஉலுந்தாவ, விஹாரஹின்ன எனுமிடங்களில் காணப்பட்டதை அங்கு கிடைத்த கல்வெட்டுக்கள் மூலம் அறியக் கூடியதாகவுள்ளது.

இதற்கு முன்னைய காலங்களில் போன்றே இக்கால சமூகத்தில் அரசர்கள், அமைச்சர்கள் எனும் பிரதானிகளுக்கான ஆடம்பரப் பொருள்கள் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. அவற்றுள் பட்டுத் துணி, நறுமணப் பொருள்கள், பீங்கான், திராட்சை ரசம் என்பன இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றன. இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்களுள் முத்து மாணிக்கம், யானை, யானைத் தந்தம் என்பனவும் இடம் பெற்றன. முன்னரைவிட தம்பதெனிய காலம் முதல் கறுவா, மிளகு முதலிய வாசனைத் திரவியங்கள் ஏற்றுமதி வர்த்தகத்தில் முக்கிய இடம் பிடித்ததைக் காண முடிகின்றது. 15 ஆம் நூற்றாண்டின் மத்தியிலிருந்து இடம் பெற்ற சிலுவைப் போர்கள் காரணமாக வெளிநாட்டு வர்த்தகம் மேலும் வளர்ச்சி கண்டது. குளிர் காலநிலை நிலவும் ஐரோப்பிய நாடுகளில் உணவுப் பொருள்களை நீண்ட நாட்கள் பாதுகாத்து வைப்பதற்கு கறுவா முதலிய வாசனைத் திரவியங்கள் தேவைப்பட்டன. அவை ஐரோப்பியரிடையே பிரபல்யமடைந்தன. எனவே சிலுவைப் போர்களின் போதும் அதன் பின்னரும் கீழைத்தேய, மேலைதேய வர்த்தகத்தில் வாசனைத் திரவியங்கள் பிரதான இடம் பெற்றன.

சர்வதேச வர்த்தகத்தில் இலங்கையின் இரத்தினங்களுக்கு இருந்த முக்கியத்துவம் காரணமாக இந்திய இலக்கியங்களில் இலங்கையின் பெயர் 'இரத்தின துவீபம்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கால கட்டத்தில் இலங்கை பற்றிய குறிப்புகளை எழுதியுள்ள மாரிஞொலி, இபின் பதூதா, ஜோன் மன்டவில், மார்க்கோ போலோ, சா - ஓ- ஜுகுவா போன்ற தேச சஞ்சாரிகள் இலங்கையின் இரத்தினங்களின் பெறுமதி பற்றிக் குறிப்பிட்டுள்ளனர்.

சிவனொளிபாத மலை முதல் மேற்குக் கரை வரையிலான நிலத்துக்கு அடியில் காணப்படும் வளங்களை முறையாகப் பயன்படுவதற்காக 'அந்தரங்கதூர' எனும் விசேட அமைச்சர் ஒருவரை நியமித்தமை பற்றி வம்சக் கதைகள் கூறுகின்றன. யாப்பகுவை முதலாம் புவனேகபாகு (1272 - 1284) மன்னனால் மிசர் (எகிப்து) நாட்டின் சுல்தானுக்கு அனுப்பபட்ட கடிதத்தில் தன்னிடம் எல்லா விதமான இரத்தினங்களும் முத்துக்களும், ஏராளமாக இருப்பதுடன் கப்பல்கள், யானைகள், மஸ்லின் துணி, அகில், கறுவா என்பனவும் இருப்பதாகவும் எழுதப்பட்டிருந்தது. அதன்படி அக்கால கட்டத்தில் மேற்படி வர்த்தகப் பொருட்கள் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டதாக நாம் அறிந்து கொள்ளலாம்.

முதலாம் பராக்கிரமபாகு மன்னன் ராமஞ்ஞ தேசத்துடன் மேற்கொண்ட யுத்தம் பற்றி வம்சக் கதைகளில் கூறப்படும் விபரங்களை ஆராயும்போது ராமஞ்ஞ தேசம் மற்றும் இலங்கை நாடுகளுக்கிடையில் யானை வர்த்தகம் இடம் பெற்றுள்ளதை அறிய முடிகின்றது. இலங்கையிலிருந்து சென்ற வர்த்தகர்கள் ராமஞ்ஞ தேசத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானைகளை விலை கொடுத்து வாங்கியதாக அத்தகவல்கள் மூலம் அறிய முடிகின்றது. இவ்வாறு ராமஞ்ஞ தேசத்திலிருந்து யானைகளை இலங்கை இறக்குமதி செய்வதற்கான காரணம் பற்றிக் கருத்துரைக்கும் சீ.டபிள்யூ. நிக்கலஸ் அவர்கள் அந்நாட்டில் காணப்பட்ட தந்தங்களை உடைய பெரிய யானைகளை இலங்கையின் சமய மற்றும் அரச உற்சவங்களுக்கு மிகவும் ஏற்றவையாகக் காணப்பட்டன என்கின்றார்.

நாட்டின் ஏற்றுமதியில் பெரும் பங்கு மன்னனின் தனியதிகாரத்தின் கீழ் நிலவியது. அரசனால் மாணிக்கச் சுரங்கங்களைப் பாதுகாக்கும் பொருட்டு காவலர்கள் நியமிக்கப்பட்டிருந்ததாக பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த அராபிய எழுத்தாளரான அபூசயித் குறிப்பிட்டுள்ளார். முத்துக் குளிக்கும் கடற்பரப்பும் மன்னனின் தன்னாதிக்கத்தின் கீழே காணப்பட்டது. கடலாதெனிய கல்வெட்டின்படி யானை வர்த்தகம், இரத்தினக்கல் அகழ்தல் என்பன அரசனைத் தவிர வேறு எவராலும் மேற்கொள்ள முடியாத தொழில்களாக காணப்பட்டன.

அக்காலகட்டத்தில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட ஆடம்பரப் பொருட்களுள் விலை மதிப்பு மிக்க துணி வகைகள் பற்றி ஏற்கனவே குறிப்பிடப்பட்டது. சீனாவின் பட்டுத் துணி போலவே இந்தியாவின் காஸ்மீர் பட்டு, பனாரஸ் பட்டு என்பன பற்றியெல்லாம் இலங்கை இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும் இந்தியாவின் இலக்கிய மூலாதாரங்களான 'ராஜதரங்கணீ' முதலியவற்றில் இலங்கையிலிருந்து இந்தியாவுக்குப் பெறுமதியான துணி வகைகள் கொண்டு வரப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. சில வேளைகளில் இலங்கையில் நெய்யப்பட்ட துணி வகைகளுக்கு இந்திய பிரபுக்களிடம் கிராக்கி ஏற்பட்டிருக்கலாம். அல்லது சீனாவிலிருந்து இலங்கைக்குக் கொண்டு வரப்பட்ட பட்டுத் துணி இங்கிருந்து இந்தியாவுக்கு மீள் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கலாம்.

அரசனதும் போர் வீரர்களினதும் பாவனைக்காக இலங்கைக்கு குதிரைகளும் இறக்குமதி செய்யப்பட்டதையும் அறிய முடிகின்றது. யாழ்ப்பாணம் நயினா தீவில் கண்டெடுக்கப்பட்ட முதலாம் பராக்கிரமபாகு மன்னனின் தமிழ்க் கல்வெட்டின் மூலமும் சீன எழுத்தாளரான சா - ஓ - ஜுகுவாவின் குறிப்புகளின்படியும் இலங்கைக்குக் குதிரைகள் இறக்குமதி செய்யப்பட்டமை உறுதிப்படுத்தப்படுகின்றது. இக்குதிரைகள் இந்தியாவின் சிந்துப் பிரதேசத்திலிருந்து தருவிக்கப்பட்டிருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஷேடமாக சீனாவிலிருந்து இலங்கைக்குப் பீங்கான் பொருட்கள் தருவிக்கப்பட்டதாக திருக்கேதீஸ்வரம், தெடிகம பிரதேசங்களிலிருந்து கிடைக்கப் பெற்ற தொல்பொருட்கள் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. சா - ஓ - ஜுகுவா அவர்களும் சீனாவிலிருந்து இலங்கைக்குப் பீங்கான் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார். இது தவிர இந்தியாவிலிருந்தும் தென்கிழக்காசிய நாடுகளிலிருந்தும் மத்திய கிழக்கிலிருந்தும் கற்பூரம், சந்தனம் எனும் நறுமணப் பொருட்களுடன் திராட்சை ரசமும் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டன. அல் இத்ரீஸி எனும் அராபிய புவியியலறிஞரால் 1154 ஆம் ஆண்டு எழுதப்பட்ட குறிப்பின்படி சீன நாட்டுக் கப்பல்களின் மூலம் மெசபத்தேமியா மற்றும் பாரசீக நாடுகளில் உற்பத்தி செய்யப்பட்ட திராட்சை ரசம் இலங்கைக்குக் கொண்டு செல்லப்பட்டதை அறிய முடிகின்றது.

## பிரதான துறைமுகங்கள்

சர்வதேச வர்த்தகத்தில் இலங்கையின் துறைமுகங்கள் பிரதான இடம் பெற்றன. இராசரட்டை நாகரிகம் வீழ்ச்சியடைவதற்கு முன்னர் நாட்டின் வடபகுதியிலமைந்த துறைமுகங்களே பிரதான துறைமுகங்களாக விளங்கின ஆயினும் 13 ஆம் நூற்றாண்டு முதல் தென்மேற்குத் திசை நோக்கி அரசர்களினதும் பொது மக்களினதும் கவனம் ஈர்க்கப்பட்டதால் நாட்டின் தெற்கு, தென்மேற்குக் கரையிலமைந்த துறைமுகங்கள் முக்கியத்துவம் பெறலாயின.

13 நூற்றாண்டின் நடுப் பகுதி வரையில் வெளிநாட்டு வர்த்தகத்தில் முக்கிய இடம் பெற்றது வடக்கில் அமைந்திருந்த மாதோட்டம் எனும் மன்னார் துறைமுகமாகும். மத்திய காலத்தில் முக்கியத்துவம் பெற்றது ஊராதோட்டை என்று அழைக்கப்பட்ட ஊர்காவற்றுறை துறைமுகமாகும். முதலாம் பராக்கிரமபாகு மன்னனின் ஆட்சிக் காலத்தில் குதிரைகள் மற்றும் வர்த்தகப் பொருட்களை ஏற்றி வந்த வெளிநாட்டுக் கப்பல்கள் ஊர்காவற்றுறை துறைமுகத்தை வந்தடைந்ததாக நைனா தீவு தமிழ்க் கல்வெட்டின் மூலம் அறியமுடிகின்றது. கப்பலொன்று கடலில் மூழ்கும் போது கடைப்பிடிக்கப்பட வேண்டிய விடயங்கள் இக் கல்வெட்டில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

“ அரசனுக்காக யானைகளோ குதிரைகளோ ஏற்றி வரப்பட்ட கப்பலொன்று கடலில் மூழ்கும் போது மீட்கப்பட்ட பொருட்களில் நான்கில் ஒரு பகுதி திறைசேரிக்குச் சேர வேண்டும் மூன்று பகுதி உரிமையாளருக்கு மீதப்படுத்தப்பட வேண்டும் வர்த்தகக் கப்பலொன்று மூழ்கும்போது மீட்கப்பட்ட பொருட்களுள் இரண்டில் ஒரு பகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறைசேரிக்கும் மற்றைய ஒரு பகுதி உரிமையாளருக்கும் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

பத்தாம் நூற்றாண்டு முதல் இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகத்தில் ஒரேயடியாகப் பிரவேசித்த மேற்கு மற்றும் தெற்குக் கரைத் துறைமுகங்களாக புத்தளம், சிலாபம், நீர்கொழும்பு, வத்தளை, கொழும்பு, பாணந்துறை, களுத்துறை, பேருவளை, காலி, வெலிகம, மாத்தறை, தெவுந்தற (தேவேந்திர முனை) என்பன குறிப்பிடப்படுகின்றன. இந்தத் துறைமுகங்களில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தோர் பெரும்பாலும் முஸ்லீம்களே என்று உள்நாட்டு வெளிநாட்டு மூலாதரங்கள் மூலம் அறிய முடிகின்றது. இத் துறைமுகங்களை மையமாகக் கொண்டு வளர்ச்சியடைந்த வெளிநாட்டு வர்த்தகம் ஒழுங்கமைந்த முறையில் நிருவகிக்கப்பட்டுள்ளமையையும் அறிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது.

தம்பதெனிய இரண்டாம் பராக்கிரமபாகு மன்னனின் ஆட்சிக் காலத்தில் தெவிநுவர துறைமுகத்தின் நிருவாகம் 'மகாபண்டித'ரின் கீழ் இருந்ததாக அம் மன்னனின் காலத்துக்குரிய 'தெவுந்தற கல்வெட்டு' மூலம் அறியக் கூடியதாயுள்ளது. அரசாங்கத்துக்கு தீர்வை வரி செலுத்தாமல் இருப்பதற்கு வர்த்தகர்களால் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் தடுக்கப்பட வேண்டும் என்றும் அக்கல்வெட்டில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதாவது வெளிநாட்டு வர்த்தகர்களால் இலங்கை அரசாங்கத்துக்கு வழங்கப்பட வேண்டிய சுங்கவரி அல்லது தீர்வை வரி கட்டாயம் அறவிடப்பட வேண்டியதொன்றாகும். மேலும் துறைமுகத்தில் கடைகள் திறப்பதும் அல்லது அதிகாரிகளுக்குப் பரிசுகள் வழங்குவதும் வெளி நாடுகளிலிருந்து களவாகக் கொண்டு வரப்படும் பொருட்களை நண்பர்களிடம் வைப்பதும் தடுக்கப்பட வேண்டும் என்றும் அக் கல்வெட்டில் விளக்கம் தரப்பட்டுள்ளது.

இலங்கை அரசர்கள் கடல் வர்த்தகத்திலும் கப்பல் போக்குவரத்திலும் கரிசணை காட்டியுள்ளமைக்கான சாட்சிகள் காணப்படுகின்றன. முதலாம் விஜயபாகு மன்னனின் ஆட்சிக் காலத்தில் ராமஞ்ஞ தேசத்திலிருந்து பொருட்களை ஏற்றி வந்த கப்பல்கள் தென்பகுதித் துறைமுகங்களை வந்தடைந்தன. முதலாம் பராக்கிரமபாகு மன்னன் தக்கிண தேச ஆட்சியாளனாக இருந்தபோது வெளிநாடுகளுக்குப் பொருட்களை ஏற்றுமதி செய்வதில் அதிக அக்கறை காட்டியதாக வம்சக் கதைகள் மூலம் அறிய முடிகின்றது. மேலும் முதலாம் பராக்கிரமபாகுவின் காலத்தில் இலங்கையில் கப்பல் கட்டும் தொழில் சிறந்து விளங்கியதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது வெளிநாட்டு ஆக்கிரமிப்புக்காக கப்பல் கட்டிய விபரங்கள் மூலம் அறியக் கூடியதாகயுள்ளது. 14 ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாண ஆட்சியாளரான ஆரியச் சக்கரவர்த்திகளிடம் பெருந்தொகையான கப்பல்கள் இருந்ததாகவும் அவற்றின் மூலம் அவர்கள் வெளிநாட்டு வர்த்தகத்தில் ஈடுபட்டதாகவும் இபின் பதூதா குறிப்பிடுகின்றார். இது தவிர இக்காலப் பகுதிக்குரிய சீன மூலாதாரங்களின்படி பாரியதும் சக்தி வாய்ந்ததுமான சிங்களக் கப்பல்கள் இருந்ததாக அறிந்து கொள்ள முடிகின்றது.

## இலங்கையுடன் நெருக்கமாக வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்ட நாடுகள்

வட இந்தியாவின் காசியிலிருந்து துணி வகைகளும் குதிரைகளும் இங்கு இறக்குமதி செய்யப்பட்ட போதிலும் இக்காலப் பகுதியில் வெளிநாட்டு வர்த்தகத் தொடர்பில் முக்கியத்துவம் பெற்றது தென்னிந்தியாவாகும். தென்னிந்தியாவின் வளஞ்சியர், நாநாதேசிகர், நகரக்காரர் எனும் வணிக குலத்தவர்கள் 13 ஆம் நூற்றாண்டு வரையில் இலங்கையின் உள்நாட்டு வர்த்தகத்திலும் இந்தியாவுடனான வெளிநாட்டு வர்த்தகத்திலும் அதிக ஆர்வத்துடனும் அக்கறையுடனும் ஈடுபட்டிருந்தனர். அவர்கள் தென் கிழக்காசிய நாடுகளுடனும் வர்த்தகத் தொடர்பு வைத்திருந்தமைக்கு எழுத்து மூலமான சாட்சிகள் கிடைத்துள்ளன. பதின்மூன்றாம் நூற்றாண்டின் பின்னர் மேற்படி வணிக குலத்தவர் பற்றி அதிகமாக அறிந்து கொள்ள முடியவில்லை. ஆயினும் இக்குலத்தவர்கள் தவிர்ந்த வேறும் தென்னிந்திய வர்த்தகர்கள் இலங்கையுடன் தொடர்ந்தும் வர்த்தகத் தொடர்புகளை வைத்திருந்தனர். பதினைந்தாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் போர்த்துகேயரான பாபோர்சா என்பவரின் கூற்றுப்படி கொரமண்டல், விஜயநகர், மலபார் முதலிய பிரதேச வர்த்தகர்கள் இலங்கை மன்னனிடம் யானைகளைக் கொள்வனவு செய்வதற்காக இங்கு வந்துள்ளனர்.

நீண்ட காலமாக இலங்கை சீனாவுடன் வர்த்தகத் தொடர்பு வைத்திருந்தமைக்கான சான்றுகள் பலவுள்ளன. கி.பி 976 - 1265 வரையிலான சீனப் பேரரசர்கள் அனைவரதும் காலங்களுக்குரிய நாணயங்கள் பொலன்னறுவை, யாப்பகுவ, அநுராதபுர, குருணாகல, அலுத்வெவ, நிந்தவூர், கல்முனை, தலைமன்னார் முதலிய இடங்களிலிருந்து கிடைத்துள்ளன. சீன மட்பாண்டங்களின் சிதைவுகள் பொலன்னறுவை, பண்டுவஸ்நுவர, தெடிகம முதலிய இடங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டெடுக்கப்பட்டுள்ளன. பதினைந்தாம் நூற்றாண்டின் முதலாவது தசாப்தத்தில் இடம் பெற்ற 'செங்ஹோ'வின் ஆக்கிரமிப்புக்கும் வர்த்தகமே காரணமாய் அமைந்துள்ளது. 1432, 1436, 1445, 1449 ஆகிய வருடங்களில் இலங்கையிலிருந்து சீனாவுக்கு தூதுக் குழுக்கள் அனுப்பப்பட்டதாக சீன நாட்டு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயினும் பதினைந்தாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து சீனாவில் மிங் வம்சத்தின் அதிகாரம் நலிவடைந்து சென்றது. வர்த்தக நடவடிக்கைகளின்போது சீனாவிடமிருந்த தங்கம் வெளிநாடுகளைச் சென்றடைந்தமையால் அந்நாட்டின் பொருளாதாரம் மேலும் வீழ்ச்சியடைந்தது. இதற்குப் பதிலீடாக சீனப் பேரரசர்கள் வெளிநாட்டு வர்த்தகத்துக்கு வரையறை விதித்தனர். இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான வர்த்தகத் தொடர்புகளும் இதனால் குறைவடைந்திருக்கலாம் என்பதில் எதுவித சந்தேகமுமில்லை.

இக்காலப் பகுதியில் முதலாம் விஜயபாகு மன்னனின் ஆட்சிக் காலந்தொட்டே இலங்கை ராமஞ்ஞதேசத்துடன் (பர்மா) வர்த்தகத் தொடர்பு வைத்திருந்தது. விஜயபாகு மன்னன் அதிகமான வர்த்தகப் பொருட்களை பர்மாவுக்கு அனுப்பியதாகவும் அதற்குப் பதிலாக கற்பூரம், சந்தனம், பல்வேறு துணிமணிகள் அடங்கிய கப்பல்கள் அங்கிருந்து இலங்கைக்கு அனுப்பப்பட்டதாகவும் வம்சக் கதைகள் கூறுகின்றன. முதலாம் பராக்கிரமபாகு மன்னனின் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பர்மா மீதான ஆக்கிரமிப்புக்கான காரணமும் அந்த நாட்டில் வைத்து சிங்கள வர்த்தகர்கள் மீது இழைக்கப்பட்ட அநீதியான செயற்பாடாகும். ஆயினும் பொலன்னறுவை யுகத்தின் பர்மாவுடன் நடைபெற்ற வர்த்தகத் தொடர்புகள் எவ்வாறானவை என்ற முடிவுக்கு வருவது கடினமாகவுள்ளது எனினும் பொலன்னறுவை யுகத்தின் பின்னர் பர்மாவுடன் இலங்கை கலாசாரத் தொடர்புகளைத் தொடர்ந்தும் பேணி வந்துள்ளது. பதினைந்தாம் நூற்றாண்டுக்குரிய பர்மாவின் 'கல்யாணி' எனும் கல்வெட்டு மூலம் அந்த நூற்றாண்டு வரையிலும் அந்நாடு இலங்கையுடன் கலாசாரத் தொடர்புகள் வைத்திருந்ததை அறிந்துகொள்ள முடிகின்றது.

இலங்கைக்கும் மலாக்கா முதலிய தென் கிழக்காசிய நாடுகளுக்குமிடையில் அதிகளவில் வர்த்தகத் தொடர்புகள் காணப்பட்டதாக தேச சஞ்சாரிகளின் குறிப்புகள் மூலம் அறிய முடிகின்றது. மலாக்காவிலிருந்து இலங்கைக்கு பெலெக் (தகரம்) எனப்படும் உலோக வகை இறக்குமதி செய்யப்பட்டதாக சங் - த - யுவான் குறிப்பிடுகின்றார். இலங்கையின் உற்பத்திப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்காக மலாக்கா நாட்டுக் கப்பல்கள் இலங்கைக்கு அனுப்பட்டதாக பதினாறாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றாண்டு ஆரம்பத்தில் பாபோரசா குறிப்பு எழுதியுள்ளார். சா-ஓ-ஜுகுவா என்பவரின் குறிப்புகளின்படி சுமாத்திராவுடனும் இலங்கை வர்த்தகத் தொடர்புகள் வைத்திருந்ததை அறிய முடிகின்றது.

இந்திய, சீன, அராபிய வர்த்தகர்கள் இந்து சமுத்திரத்தில் நிலவிய சர்வதேச வர்த்தகத்தில் பங்கெடுத்தனர். போர்த்துகேயர் கீழைத்தேசத்திற்கு வரும் வரையிலும் இலங்கையைச் சூழ நடைபெற்ற இந்த சர்வதேச வர்த்தகத்தின் இடைத் தரகர்களாகச் செயற்பட்டவர்கள் முஸ்லீம்களாவர்.

## வர்த்தகப் பாதைகள் :

இந்து சமுத்திரத்தை சூழவிருந்த நாடுகளின் வர்த்தகப் பொருட்கள் பாரசீகப் பள்ளத்தாக்கு ஊடாக அமைந்திருந்த தரை வழிப் பாதைகளூடாகவும் இரண்டு கடல் மார்க்கங்கள் ஊடாகவும் ஐரோப்பாவுக்கு கொண்டு செல்லப்பட்டன. இரு கடற் பாதைகளுள் ஒன்று ஏடன் மற்றும் செங்கடல் ஊடாக அலக்சாந்திரியா வரை சென்றது. அடுத்த பாதை ஹோம்ஸ் எனும் வர்த்தக நகரம் மற்றும் பாரசீகக் குடா ஊடாக கொன்ஸ்தாந்து நோபிள் வரை சென்றது. இப் பாதைகளின் ஊடாக அராபிய வர்த்தகர்கள் கீழைத்தேச வர்த்தகப் பொருட்களை மத்திய தரைக் கடலின் வர்த்தக நகரங்களுக்குக் கொண்டுபோய் ஐரோப்பிய வர்த்தகர்களிடம் சேர்த்தனர். விஷேடமாக இத்தாலிய வர்த்தகர்களே அங்கு முக்கியத்துவம் பெற்றனர்.

சிலுவைப் போர்களின் மற்றுமொரு விளைவாக 1453 ஆம் ஆண்டு துருக்கியரால் கொன்ஸ்தாந்துநோபிள் நகரம் கைப்பற்றப்பட்டது. பாரசீகக் குடாவின் ஊடாக நடைபெற்ற வர்த்தகத்தின் மத்திய நிலையமாக விளங்கிய இந்நகரம் துருக்கிய முஸ்லீம்களால் கைப்பற்றப்பட்ட பின்னர் ஐரோப்பியருக்கு கீழைத்தேச வர்த்தகப் பொருட்களை செங்கடல் பாதையின் வர்த்தக மத்திய நிலையத்தின் ஊடாக மாத்திரமே பெற்றுக் கொள்ள முடிந்தது. ஆயினும் துருக்கியர் கொன்ஸ்தாந்து, நோபிளை கைப்பற்றி சிறிது காலத்தின் பின்னர் எகிப்திய சுல்தான் செங்கடல் மார்க்க வர்த்தகத்திற்கான வரிகளை அதிகரித்தமையால் அவ் வர்த்தகம் தடைப்பட்டது. எனவே ஐரோப்பியர் நாடுகாண் பயணங்கள் மூலம் கீழைத்தேசத்தை அடைந்த பின்னர் இலங்கையுட்பட பெரும்பாலான ஆசிய நாடுகளின் வர்த்தகம் அவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டது எனவே ஆசிய நாடுகளின் வர்த்தக வளங்களால் ஐரோப்பிய நாடுகள் செல்வம் கொழிக்கும் நாடுகளாக மாறின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியா, சீனா முதலிய நாடுகளிளுக்கிடையிலான வர்த்தகம் தரை மார்க்கப் பட்டு வீதி ஊடாகவும் கடல் மார்க்கப்பட்டு வீதி ஊடாகவும் நடை பெற்றது. மேற்கு நாடுகள் இந்தியாவுடன் தொடர்பு கொண்ட கடற் பாதை இந்தியாவின் மேற்குக் கரையில் அமைந்திருந்த குவிலொன் மற்றும் மலேசியாவின் கேடா துறைமுகம் என்பவற்றை மத்திய நிலையமாகக் கொண்டு தென்கிழக்கு ஆசியா வரை அமைந்திருந்தது. இந்தக் கடல் மார்க்கப் பட்டுப் பாதையின் மத்தியில் இலங்கை அமைந்திருந்தமையால் சர்வதேச வர்த்தகத்தில் அது முக்கியத்துவம் பெற்றது.

## சமூகநிலை

பதினோராம் நூற்றாண்டு முதல் பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதி வரையிலான காலப் பகுதியில் இலங்கையின் சமூக நிலையை அறிந்து கொள்ள உதவும் இலக்கிய மூலாதாரங்களும் தொல்பொருள் மூலாதாரங்களும் கணிசமான அளவு காணப்படுகின்றன. இம் மூலாதாரங்களின் மூலம் வெளிப்படும் விபரங்களின்படி அநுராதபுரக் கால சமூக அமைப்பைவிட இக்கால சமூகவமைப்பு வேறுபட்டதாகக் காணப்பட்டது. பத்தாம் பதினோராம் நூற்றாண்டுகளில் இடம்பெற்ற தென்னிந்திய ஆக்கிரமிப்புகளே சமூகவமைப்பு மாற்றத்திற்கான பிரதான காரணியாகும். தென்னிந்திய ஆக்கிரமிப்புகளுடன் இடம் பெற்ற புலம் பெயர்வுகள் காரணமாக அவர்களின் சமூக நிறுவனங்களின் செல்வாக்கு இலங்கை சமூகவமைப்பிலும் தாக்கம் செலுத்தியுள்ளதை அவதானிக்க முடிகின்றது. பிராமண, சத்திரிய, வைசிய, சூத்திர குல மரபுடன் உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி மற்றும் உத்தம குலம், தீண்டத் தகாத குலம் எனும் சொற்கள் இக்கால மொழியமைப்பில் பிரயோகிக்கப்படுவதைக் காண முடிகின்றது.

இக்கால இலங்கைச் சமூகம் சில கோத்திரங்களாகவும் குலங்களாகவும் வம்சங்களாகவும் அமைந்திருந்தது. அநுராதபுர யுகத்தில் காணப்பட்ட இலம்பகர்ண, மோரிய கோத்திரங்கள் தவிர கிலிங்கு, பலிபோஜக, மோனசீஹ முதலிய சில கோத்திரங்களின் பெயரும் இக் கால மூலாதாரங்களில் காணப்படுகின்றன. கலிங்க வம்சம், பாண்டிய வம்சம், சந்திரவம்சம், அல்லது சோமவம்சம், கிரிவம்சம், போதாஹார வம்சம், வணிக் வம்சம், கணவாசி வம்சம், மெஹணவர வம்சம் எனும் பல வம்சங்களின் பெயர்களும் இக்கால மூலாதாரங்களில் குறிபிடப்பட்டுள்ளன. இக்காலப் பகுதியில் வம்சம் என்பதற்கு குலம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனம் முதலிய பதப் பிரயோகங்களும் இடம் பெற்றுள்ளன. அரச, பிராமண வர்த்தக, விவசாய குலங்கள் பொலன்னறுவை யுகம் முதல் நிலவி வந்தன. இவை தவிர தொழில் அடிப்படையில் கொல்லர், குயவர், பொற்கொல்லர், வண்ணார், நெசவாளர் முதலிய குலங்கள் பற்றியும் பொலன்னறுவை யுகத்துக்கு உரியதாகக் கருதப்படும் ''மகா போதி வம்ச கிரந்த பத விவரண' எனும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. முதலாம் விஜயபாகு மன்னனின் கல்வெட்டுக்களில் தாழ்த்தப்பட்ட சாதியினரைக் குறிப்பதற்கு 'அதம இனம்' என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதிலிருந்து அக்கால சமூகம் உயர்சாதி, தாழ்சாதி எனும் இரு பிரிவுகளாக இருந்துள்ளமை தெரிய வருகின்றது. அரசன், அமைச்சர், மற்றும் அரசாங்க அதிகாரிகள் உயர் குலத்தவராகக் கருதப்பட்டதுடன் நெய்தல், வனைதல், உலோக வேலை எனும் தொழில்களில் ஈடுபட்டவர்கள் வாழும் கிராமங்கள் அத் தொழில்களின் பெயராலேயே அழைக்கப்பட்டுள்ளன. உதாரணமாக கும்பல் கம, படல்கம, கும்புறு கமுவ முதலிய கிராமப் பெயர்களைக் குறிப்பிடலாம்.

இக்காலப் பகுதியில் திருமணங்களின்போது குலமுறை செல்வாக்குச் செலுத்தியுள்ளது. ஒரே குலத்தைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளுக்கிடையே திருமணங்கள் நடைபெற்றுள்ளன. ஆயினும் மாற்றுக் குலத்தவரிடையேயும் அபூர்வமான முறையில் சில திருமண உறவுகள் மேற்கொள்ளப்பட்டமையையும் காண முடிகின்றது. சாதாரணமாக இருதரப்புப் பெற்றோரின் சம்மதத்துடனேயே திருமணங்கள் நடைபெற்றுள்ளன. இக்காலப் பகுதியில் ஒரு கணவனுக்கு ஒரு மனைவி, ஒரு மனைவிக்கு ஒரு கணவன் என்ற அடிப்படையிலேயே திருமண உறவு அமைந்துள்ளமையை அறிய முடிகின்றது. அரசனைப் பொறுத்தவரையில் அவனுக்குப் பட்டத்து இராணி தவிர அந்தப்புரத்தில் பல மனைவியர் இருந்துள்ளனர். ஆனால் சாதாரண மக்களிடம் பலதார மணம், பலபுருஷ மணம் இடம் பெற்றுள்ளதை அறிய முடியவில்லை. இக்கால கட்டத்தில் மாமன் மகள், அத்தை மகள் எனும் அடிப்படையில் இரத்த உறவினரிடையே அதிகமாக திருமண உறவுகள் நிகழ்ந்துள்ளதையும் அறிய முடிகின்றது. அத்துடன் உணவுப் பழக்க வழக்கங்களிலும் அன்றாட வாழ்க்கை நடைமுறைகளிலும் குல முறை செல்வாக்குச் செலுத்தியுள்ளதை அறிய முடிகின்றது. உயர் குலத்தவருடன் தாழ் குலத்தவர் ஒன்றாக அமர்ந்து உணவு உட்கொள்வது பெரும் குற்றமாகக் கருதப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுராதபுர காலத்தைப் போலவே இக்காலப் பகுதியிலும் சமூகவமைப்பில் குடும்பமே முதலிடம் பெற்றது. கணவன், மனைவி, பிள்ளைகள் ஒரு குடும்பமாகக் கருதப்பட்டனர். ஆண் பிள்ளைகள் திருமணம் செய்த பின்னரும் பெற்றோருடன் வாழ்ந்தமையால் ஒரே வீட்டில் தந்தை, மகன், பேரப் பிள்ளைகள் என்று இரண்டு, மூன்று தலை முறைகள் ஒன்றாய் வாழ்வதை சாதாரணமாகக் காண முடிந்தது. குடும்பத் தலைவர் தந்தையாவார். அவரின் மறைவையடுத்து மூத்த மகன் குடும்பத் தலைவராவர்.

பொலன்னறுவைக் கால சமூக அமைப்பில் பெண்களின் நிலை ஆண்களை விடத் தாழ்ந்ததாகவே காணப்பட்டது. அநுராதபுர யுகத்திலும் பொலன்னறுவை யுகத்திலும் அரச குலப் பெண்கள் சில சமயங்களில் அரச பதவியை வகித்துள்ளமையைக் காண முடிகின்றது. லீலாவதி, கல்யாணவதி என்போர் இதற்கு உதாரணமாவர். இக்காலப் பகுதிக்குரிய 'புத்சரண', 'சத்தர்ம ரத்னாவலிய,' 'சத்தர்மாலங்காரய,' 'காவிய சேகர' முதலிய இலக்கிய நூல்களில் வட இந்திய சமூக அமைப்பை அடிப்படையாகக் கொண்டு ஜாதகக் கதைகளை மொழிபெயர்க்கும் போது பெண்களை மிகவும் தாழ்வானவர்களாகக் கருதி அவர்களைப் பற்றி இழிவான குறிப்புகள் எழுதப்பட்டுள்ளன. ஆயினும் இலங்கையில் நீண்ட காலமாக நிலவி வந்த பௌத்த கலாசாரத்தால் கட்டியெழுப்பட்ட சமூகத்தில் பெண்களின் நிலை அவ்வளவு தூரம் தாழ்த்தப்பட்டதாக அமைந்திருக்கவில்லை. அக்காலப் பகுதியில் பெண்கள் பொதுவாக வீட்டு வேலைகளிலும் சமையல் மற்றும் தோட்ட வேலைகளிலும் ஈடுபட்டிருந்த போதிலும் உயர் குடும்பப் பெண்கள் எழுதவும் வாசிப்பதற்குமான கல்வியறிவைப் பெற்றனர் என்று தரவுகள் கூறுகின்றன. கம்பளைக் காலத்தில் பத்மாவதி தேவியும். கோட்டை யுகத்தில் உலகுடைய தேவியும் சமய கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தமையை உதாரணங்களுடன் எடுத்துக் கூறக் கூடியதாக உள்ளது.

இக்காலப் பகுதியில் அரச குடும்பத்திலும் பிரபுக்கள் குடும்பங்களிலும் இருந்து பன்சலை, விகாரை, கிராமங்களில் குறிப்பிட்ட சேவைகளில் ஈடுபட்டிருந்தோரைப் பற்றிய தகவல்களும் கிடைக்கப் பெற்றுள்ளன. அவர்கள் அடிமைகள், பரிவாரங்கள், பணியாட்கள் எனும் பெயர்களில் குறிப்பிடப்பட்டுள்ளனர். இங்கு அடிமைகள் என்று குறிப்பிடப்படுவோர் தனது எஜமானுக்குப் பல்வேறு வழிகளிலும் உதவி புரிந்தவர்களாக வாழ்ந்த கிராம மக்களில் ஒரு பிரிவினராவர். இங்கு பிரயோகிக்கப்பட்ட அடிமை என்ற சொல் ஐரோப்பிய வரலாற்றில் கூறப்படும் அடிமை என்ற அர்த்தத்தைத் தராது என்பதை நாம் கவனத்தில் கொள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். அதாவது இங்கு அடிமை என்பதன் அர்த்தம் உதவி செய்பவர்கள்' என்ற பொருளையே புலப்படுத்துகின்றது. ஐரோப்பிய அடிமைகளைப் போலல்ல. இங்கு அடிமை என்று கூறப்பட்டவர்களுக்கு அதிகளவு சுதந்திரம் வழங்கப்பட்டிருந்தது. பன்னிரண்டாம் அல்லது பதிமூன்றாம் நூற்றாண்டுக்குரியதாகக் கருதப்படும் பெந்தற எனுமிடத்தில் அமைந்துள்ள கலபாத்த விகாரைக் கல்வெட்டு ஒன்றில் ''இவ் விகாரையில் வசித்து வரும் பிக்குகளுக்கு பணிவிடைகள் செய்வதற்காக அடிமைகள் இரு பிரிவினர் இருந்துள்ளனர்.'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விரு பிரிவினரும் அன்வயா அடிமைகள், ரன் அடிமைகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளனர். இங்கு அன்வயா என்ற பெயரில் குறிப்பிடப்படுவோர் விகாரைக் கிராமங்களில் பரம்பரையாக வாழ்ந்து வரும் பிரதானிகள் குடும்பத்துக்குரிய மக்களுள் ஒரு பிரிவினராவர். இது தவிர மங்கள அடிமைகள் எனும் பிரிவினர் பற்றி கம்பளைக் காலத்துக்குரிய லங்காதிலக கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கு குறிப்பிடப்படுவது திருமண தினத்தில் மண மக்களுக்கு சீதனமாக வழங்கப்படும் பரம்பரை அடிமைகள் என்று கருதப்படுகின்றது. கோட்டை யுகத்துக்குரிய 'காவிய சேகர' எனும் காவியத்திலும் இடம் பெறும் அடிமை மற்றும் பணியாட்கள் எனும் இரு சொற்களும் வீட்டு வேலைகளில் ஈடுபட்டு வந்த வேலைக்காரர்களையே குறிக்கின்றது. இதிலிருந்து கோட்டை காலம் வரை இவ்வாறான சமூக அமைப்பு நிலவி வந்துள்ளதை நாம் அறிந்து கொள்ள முடிகின்றது.

### வீடு, மனைகள்:-

இக்காலப் பகுதியிலும் மனிதர்கள் தாம் வாழ்ந்த வீடுகளைத் தமது சமூக அந்தஸ்துக்கு ஏற்ற வகையில் அமைத்துக் கொண்டிருந்தனர். களிமண் சுவராலும் ஓலை அல்லது வைக்கோல் வேயப்பட்ட கூரையாலும் ஆன ஒன்று அல்லது இரண்டு அறைகளைக் கொண்ட குடிசை வீடுகள் ஏழைகளுக்குரியதாயிருந்தன. கருங்கல் அல்லது செங்கல்லால் கட்டப்பட்ட சுவருடனும் ஓடு வேயப்பட்ட கூரையாலும் ஆன பல அறைகளைக் கொண்டிருந்த வீடுகள் பிரதானிகளுக்குரியவையாகக் காணப்பட்டன. (சில பிரதானிகளில் வீடுகளில் மேல் மாடியும் காணப்பட்டது.)

'சத்தர்மரத்னாவலிய' எனும் நூலில் இடம் பெறும் 'மரத்தினாலான சுவரை களிமண் பூசி மரத்தை மறைப்பது போல' எனும் உவமைத் தொடர் மூலமும் கீழ் மாடியில் சாணமிட்டு மெழுகி அமருவதற்கு ஆணையிட்டு' எனும் வாக்கியம் மூலமும் அக் கால வீடுகள் பற்றி அறிந்து கொள்ள முடிகின்றது. கோட்டை நகரில் அமைந்திருந்த நகர வாசிகளின் வீடுகள் பற்றித் தூது இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளன அந்த வீடுகளில் நிலா முற்றம் இருந்ததாகவும் தரவுகள் கூறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழை வீடுகளிலும் பணக்கார வீடுகளிலும் சமயலறைகள் காணப்பட்டன.

இக்காலப் பகுதியில் வீட்டுப் பாவனைப் பொருட்களின் பெயர்களையும் இலக்கியங்களில் காண முடிகின்றது. அவையாவன கட்டில், நாற்காலி, சட்டி, பானை, கரண்டி, கத்தி, கோடாரி, அரிவாள், துருவலகு, உரல், உலக்கை, என்பவையாகும். இவற்றுக்கு மேலதிகமாக செல்வந்த வீடுகளில் பயன்படுத்தப்பட்ட பல்லக்கு, பெட்டகம், கம்பளி, கம்பளம், கால் துடைப்பம், தங்கத் தட்டு, வெள்ளித்தட்டு, படுக்கை விரிப்புகள், திரைச் சீலைகள் முதலிய பல பொருட்களின் பெயர்களையும் சம கால இலக்கியங்களில் காண முடிகின்றது.

## உணவு, பான வகைகள்

அக்காலப் பகுதியிலும் இலங்கையரின் பிரதான உணவு நெல்லரிசிச் சோறாகும். சோறு சமைப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட சாதாரண அரிசி வகைகளைத் தவிர விஷேடமான அரிசி வகையொன்று பற்றி இக் கால இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. தவிட்டரிசி, புழுங்கலரிசி, பச்சையரிசி, முதலியன சோறு சமைப்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம், முதலியன பிரதான ஆகாரத்தின் பின்னர் உட்கொள்ளப்பட்டன. அதே போல் உணவுக்குப் பயன்படுத்தப்பட்ட மரக்கறி வகைகள் பலவற்றின் பெயர்களையும் இலக்கிய மூலாதாரங்களில் காண முடிகின்றது. அவற்றுள் சாம்பல் வாழை, சுரைக்காய், கத்தரி, கெக்கரிக்காய், மற்றும் கீரை வகைகளும் உள்ளடங்குகின்றன. அரிசிச்சோறு, தவிர பாசிப்பயறு, உளுந்து, எள், சாமை, தினை, குரக்கன், முதலிய தானிய வர்க்கங்களும் உணவுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. பால், தயிர், நெய், வெண்ணெய் முதலிய பாலுணவு வகைகளும் பாணி, கருப்பட்டி என்பனவும் மேலதிக உணவாக உட்கொள்ளப்பட்டுள்ளன. கறிகளை சுவையூட்டுவதற்காக இஞ்சி, கடுகு, சீரகம், மிளகு, வெந்தயம் முதலிய வாசனைத் திரவியங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இராசதானி தென் மேற்கு நோக்கிப் புலம்பெயர்ந்த பின்னர் சமையலுக்குப் பயன்படுத்தப்பட்ட நல்லெண்ணெய், இலுப்பெண்ணெய், நெய் என்பவற்றுக்குப் பதிலாக தேங்காய்ப் பால் அல்லது தேங்காய் எண்ணெய் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இக்காலத்தில் அருந்துவதற்குத் தண்ணீர் தவிர பழரசங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளதை அறிய முடிகின்றது. சமகால இலக்கிய மூலாதாரங்களில் அவ்வாறான எட்டுப் பழ ரச பானங்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவை மாம்பழம், திராட்சை, வாழைப்பழம், வில்வம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழம் முதலியவற்றால் தயாரிக்கப்பட்டிருந்தன. பதநீர், கருப்பஞ்சாறு என்பனவும் பருகுவதற்குப் பயன்பட்டுள்ளன. விசேடமான விழாக்களின் போது பல்வேறு மதுபான வகைகளும் பயன்படுத்தப்பட்டமைக்கான சான்றுகள் உள்ளன. போதையேற்றும் பானங்களில் மதுவுடன் தென்னை, பனை, கித்துல் மரங்களின் பதநீரிலிருந்து தயாரிக்கப்படும் கள் வகைகளும் முக்கியம் பெற்றன. குத்தில காவியம் எனும் கோட்டை யுக இலக்கியத்தில் உதேனிபுரத்தில் இடம் பெற்ற களியாட்ட விழா பற்றிக் குறிப்பிடும் பாடல் வரிகளில் இருந்து அக்காலத்தின் மது பாவனை பற்றி அறிந்து கொள்ள முடிகின்றது.

## ஆடை அணிகள்:

இக்காலத்தில் ஆண், பெண் இருபாலாரும் தோளில் அங்கவஸ்திரம் அல்லது சால்வை அணியும் பழக்கத்தைக் கொண்டிருந்ததாக மூலாதாரங்கள் மூலம் அறிய முடிகின்றது. ஒருவர் இவ்வாறான இரு துணிகளைப் பயன்படுத்தியுள்ளார். ஒன்றின் மூலம் இடுப்பின் மேல் பகுதியும் மற்றையது மூலம் கீழ்ப்பகுதியும் மறைக்கப்பட்டன. மேலுடம்பை மறைப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட துணி வடக்கு வஸ்திரம் என்று சொல்லப்பட்டது. 'பூஜாவலிய' எனும் இலக்கிய நூலில் இடம் பெறும் காசி நாட்டு துணியால் வடக்கு வஸ்திரம் அணிந்து கழுத்தில் முத்தாரம் அணிந்து முகம் மலர்ந்த பெண்கள் சேனை' எனும் வாக்கியத்திலும் காவிய சேகர காவிய நூலில் இடம் பெறும் ''வடக்கு வஸ்திரம் (சால்வை) அணியாது பெண்ணே வீட்டை விட்டும் வெளியேறாதே'' என்ற அறிவுரை வாக்கியத்திலும் நாம் காணக் கூடிய உண்மை அக்காலப் பெண்கள் வீட்டிலும் வெளியிலும் மேலுடம்பை மூடிய ஆடை அணிந்துள்ளனர் என்பதாகும். பெண்கள் தமது தனங்களை மூடும் வகையில் அணிந்த மார்புக் கச்சை பற்றியும் இலக்கிய மூலாதாரங்களில் அதிகமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அக்கால சமூகத்தில் ஆண், பெண் இருபாலாரும் பல்வேறு ஆபரணங்களை அணிந்தமைக்கான சான்றுகளும் கிடைத்துள்ளன. அரசன் அணிந்த ஆபரணங்கள் பற்றிக் கூறும்போது ஆபரணத் தொகுதி பற்றிக் கூறப்பட்டுள்ளது. தம்பதெனியவின் இரண்டாம் பராக்கிரமபாகு மன்னன் அணிந்த ஆபரணங்களுள் நெற்றிப்பட்டம், குண்டலங்கள், மாலை, வளையல், மோதிரம், முத்துப்பட்டம், ஹவடி, ஒட்டியானம், தங்கச் சங்கிலி முதலியன ஒரு தொகுதியாகும் என தம்பதெனிய அஸ்னய மற்றும் சந்தர்மாலங்காரய எனும் நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. உம்மக்க ஜாதகம் எனும் நூலில் குண்டலங்களுடன் கனக, கடக, நுபுர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் ஆபரணங்களையும் செல்வந்தர்கள் அணிந்தவர்களாக எனும் வசனம் மூலம் பிரதானிகள் அல்லது பிரபுக்கள் குடும்பத்தவரும் இத்தகைய ஆபரணங்களை அணிந்துள்ளமையை நாம் அறிந்து கொள்ள முடிகின்றது. அதே போல உம்மக்க ஜாதக' நூலின்படி தோடு, தாலிக் கொடி, பாத மோதிரம் (மெட்டி), பாடகம், நுபுரபாத ஜாலம், சிரஜாலம், கர்ணாபரணம், ஸ்ரீவாலங்காரம், கைப்பொட்டு, எனும் நகைகள் முக்கியமானவையாகும். இவை தவிர மேகலா சங்கிலி எனும் இடுப்பைச் சுற்றி அணியும் ஒரு நகையை உயர் குடும்பப் பெண்கள் அணிந்துள்ளமையையும் இலக்கியங்கள் மூலம் அறிய முடிகின்றது. குண்டலங்கள், மாலை, வளையல், பாதச் சிலம்பு, தங்கச் சங்கிலி என்பன அக் கால ஆண், பெண் இருபாலரும் அணிந்த நகைகளாகும். அவை இரு பாலருக்கும் உரியவை என்ற குறிப்புகளின் மூலம் நாம் அதனை அறிய முடிகின்றது. மேலும் பெண்கள் மலர்களைக் கொண்டு தமது கூந்தலை அலங்கரித்துக் கொண்டதாகவும் இலக்கியங்கள் கூறுகின்றன.

## பழக்க வழக்கங்கள்

தாயின் வயிற்றில் பிறந்தது முதல் இறக்கும் வரையிலான வாழ்நாள் முழுதும் முக்கியமான சந்தர்ப்பங்களை முன் நிறுத்தி பல்வேறு விதமான பழக்கவழக்கங்களை இக் கால மக்கள் பின்பற்றி வாழ்ந்தமைக்கான சான்றுகளை சம கால இலக்கிய மூலாதாரங்களின் மூலம் அறிய முடிகின்றது. குழந்தை பிறந்து சிறிது நேரத்தில் தங்கத்தை உராய்ந்து தாய்ப்பாலுடன் கலந்து சிறிதளவு பருகச் செய்வது அக்கால வழக்கமாகும். இது தங்கப் பால் ஊட்டும் வைபவம் என்றழைக்கப்பட்டது. இவ் வழக்கம் இன்றும் சில கிராமப் புறங்களில் காணப்படுகின்றன. சில தினங்களின் பின்னர் குழந்தைக்கு ஒரு பெயர் வைக்கப்பட்டது. அது பெயர் சூட்டும் வைபவம் என்று இலக்கியங்களில் எழுதப்பட்டுள்ளது. 'பூஜாவலிய' எனும் நூலின்படி பிறந்து ஐந்து தினங்களின் பின்னரே பெயர் சூட்டு விழா இடம்பெற்றுள்ளது. குழந்தைக்கு ஒரு வயதாகும் போது சோறு ஊட்டுதல், காது குத்துதல், தலை முடி இறக்குதல் முதலிய விடயங்கள் மேற்கொள்ளப்பட்டன. சத்தர்மாலங்கார நூலில் அவை முறையே அமுதூட்டும் வைபவம், காது குத்தும் வைபவம், தலைமுடி இறக்கும் வைபவம் என்றே குறிப்பிடப்பட்டுள்ளன. முதல் தடவையாக பிள்ளைக்கு எழுதக் கற்பிக்கும் ஏடு தொடக்கல் என்பது வைபவ ரீதியாகவே அமைந்திருந்தது. 'சத்தர் மாலங்காரய' நூலின்படி பிள்ளைக்கு ஐந்து வயதாகும்போது ஏடு துவக்கப்பட்டுள்ளதை அறிய முடிகின்றது. இவை தவிர சூரிய வைபவம், புத்தாடை புனையும் வைபவம், குடுமி வைபவம் எனும் மூன்று விடயங்கள் 'சத்தர்மரத்னாவலிய' வில் கூறப்பட்டுள்ளன. குடுமி வைபவம் என்பது தலை முடியை மழித்தலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையோடு தொடர்பான வைபவங்களுள் திருமண வைபமே முக்கிய இடத்தைப் பெற்றது. தத்தமது பொருளாதார நிலைமைக்கும் குல முறைக்கும் ஏற்ப திருமண வைபவம் எளிமையாகவோ ஆடம்பரமாகவோ இடம் பெற்றுள்ளதை அறிய முடிகின்றது. அதே போன்று புது மனை குடி புகும் விழாவும் இடம் பெற்றுள்ளது. சில இலக்கிய நூல்களில் புதுமனை புகும் மங்களம் என்று அது குறிப்பிடப்பட்டுள்ளது. இவ் வைபவங்கள் ஒவ்வொன்றின் போதும் பூஜை முறைகள் இடம் பெற்றுள்ளன. அதில் ஒரு முறையாக சுப முகூர்த்தத்திற்கு முன்னர் பௌத்த பிக்குகளுக்கு தானம் வழங்கி அதன் பின்னர் சமயச் சடங்குகள் இடம் பெற்றது. அது தவிர வைபவத்துக்கு வரும் உற்றார் உறவினர்களையும் உபசரித்து மகிழ்ந்தனர்.

ஒருவர் இறந்து விட்டால் அவரது பூதவுடலை ஒரு நாள் அல்லது இரண்டு நாட்களின் பின்னர் வீட்டை விட்டு அப்புறப்படுத்தும்போது இரண்டு முறைகளைக் கடைப்பிடித்தனர். ஒன்று பூதவுடலை இடுகாட்டில் போட்டு விட்டு வருதல். பொதுவாகவே சடலத்தை அடக்கம் செய்யும் வழக்கமும் இருந்துள்ளது. சத்தர்மாலங்காரய, சத்தர்மரத்னாவலிய எனும் இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பூதவுடல் வெற்று மண் குழிகளில் அடக்கப்படாமல் கல்லறைகளில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளது. இரண்டாவது முறையாகப் பின்பற்றப்பட்டது பூதவுடலை சுடுகாட்டுக்கு எடுத்துச் சென்று சிதையில் வைத்து தகனம் செய்வதாகும். பிரதானிகளின் குடும்ப மரணச் சடங்குகளில் இம் முறையே பின்பற்றப்படடிருக்கலாம் என்று கருத இடமுண்டு கோட்டை யுகத்தில் இலங்கைக்கு விஜயம் செய்த சீன இனத்தவரான மாஹுவான் என்பவர் அக் காலத்தில் இலங்கை மக்கள் மரணித்தவர்களின் உடல்களை எரித்த பின்னர் எஞ்சும் அஸ்தியை அடக்கம் செய்ததாகக் குறிப்பிட்டுள்ளார். இன்று போலவே அன்றும் இறந்தவர்களின் நினைவாக நினைவு நாள் தானம் வழங்கும் சமயக் கிரியைகளும் இடம் பெற்றுள்ளதை அறிய முடிகின்றது.

## விளையாட்டுக்களும் விழாக்களும்

இக்காலத்தில் புகழ் பெற்ற விளையாட்டாகப் பந்தாட்டம் காணப்பட்டது. பந்து எனும் சொல் சிங்களத்திலும் அவ்வாறே சமகால இலக்கிய நூல்களான ஜாதக அட்டுவா கற்ற பதய, சத்தர்மாலங்காரய, காவிய சேகர, திசர சந்தேசய என்பவற்றில் இடம் பெற்றுள்ளதைக் காண முடிகின்றது. ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என அனைவரும் இவ்விளையாட்டில் ஈடுபட்டுள்ளனர். அக்கால கோட்டை நகர வீடுகளின் நிலா முற்றத்தில் பெண்கள் பந்தாட்டத்தில் ஈடுபட்டதாக காவிய சேகர மற்றும் திசர சந்தேசய எனும் நூல்கள் கூறுகின்றன. பந்தாட்டத்திற்காகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்தப்பட்ட பந்துகள் லாலீவட்ட, ஹுவட்ட, பெதவட்ட என்று ஒவ்வொரு விளையாட்டுக்கேற்பவும் பல்வேறு பெயர்களைப் பெற்றன. மரத்தினால் செய்யப்பட்ட பந்து லாலீ ஆட்டம் எனும் விளையாட்டுக்காகப் பயன்படுத்தப்பட்டது. குளு ஆட்டம் எனும் விளையாட்டுக்காகப் பயன்படுத்தப்பட்டது. நூலினால் அல்லது துணியினால் செய்யப்பட்ட ஹுவட்ட எனும் பந்தாகும். பெதவட்ட எனும் பெயரில் அழைக்கப்பட்ட பந்து நிலத்தில் படும்போது மேலெழும் தன்மையைக் கொண்டிருந்தது.

நீர் விளையாட்டும் அக்கால ஆண், பெண் இருபாலருக்குமுரிய பொழுது போக்காக அமைந்திருந்தது. இவ் விளையாட்டு நதிகளிலும் பொய்கைகளிலும் இடம் பெற்றன. நீச்சல் மற்றும் சுழியோடுதல் என்பன இவ்விளையாட்டின் முக்கிய அம்சங்களாகும். இவ்விளையாட்டில் ஈடுபட்ட ஆண்கள், பெண்கள் பற்றி கோட்டை யுகத்துக்குரிய காவியங்களில் காண முடிகின்றது.

ஊஞ்சலாட்டமும் அக்காலத்தில் காணப்பட்ட பொழுது போக்கிற்கான விளையாட்டாகும். கவிசிலுமின, சத்தர்ம ரத்னாவலிய, பூஜாவலிய சத்தர்மாலங்காரய, காவிய சேகர, செலலிஹினி சந்தேசய எனும் நூல்களில் ஊஞ்சல் எனும் சொல்லும் அதற்கு சமமான "ஈல்" எனும் சொல்லும் இடம் பெற்றுள்ளதைக் காணமுடிகின்றது. அதே போலவே இக்கால நூல்கள் சிலவற்றில் பம்பரம் எனும் சொல்லும் இடம்பெற்றிருப்பதிலிருந்து பம்பரம் சுழற்றும் விளையாட்டும் அக்கால சிறுவர்களிடத்தே முக்கியத்துவம் பெற்ற விளையாட்டுக்களில் ஒன்றாகக் காணப்பட்டதென்று நாம் கருதலாம்.

இவ்வாறான விளையாட்டுக்கள் தவிர அக்கால மக்கள் பல்வேறு விழாக்களிலும் கலந்துகொண்டு தமது பொழுதை மகிழ்ச்சியாகக் கழித்துள்ளனர். இவ்விழாக்கள் பொதுவாக சமய முக்கியத்துவம் வாய்ந்தவையாகக் காணப்பட்டன. வெசாக், பொசன் முதலிய விழாக்களும் சிவனொளிபாத யாத்திரையும் தளதா பெரஹர ஊர்வலமும் கார்த்திகைப் பூஜையும் இவற்றுள் பிரதான இடம்பெற்றன. வெசாக், பொசன், எசல எனும் விழாக்கள் அம்மாதங்களின் பௌர்ணமி தினங்களிலேயே இடம் பெற்றன. சிவனொளிபாத யாத்திரை, தளதா (தந்த தாது) பெரஹர ஊர்வலம் என்பவனவும் ஆண்டு தோறும் இடம்பெற்று வந்தன. கார்த்திகைப் பூஜை என்று சிங்களத்திலும் அதே தொனியில் அழைக்கப்பட்ட விழா கார்த்திகை மாதத்தில் இடம் பெற்றது. பன்சலை, விகாரை, அரச மாளிகைச் சூழலில் விளக்குகள் ஏற்றி ஒளி பெறச்செய்வதே இவ்விழாவின் முக்கிய அம்சமாகும். சமய சார்பற்ற விழாக்களில் புத்தாண்டு வைபவம் முக்கியத்துவம் பெற்றிருந்தது. அது இன்று போலவே அன்று தமிழ்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களப் புத்தாண்டை முன்னிலைப்படுத்தியே இடம் பெற்றதாகக் கருத இடமுண்டு.

## கல்வி

இக்காலப் பகுதியில் அதாவது பொலன்னறுவை, தம்பதெனியா, யாப்பகுவை, குருணாகலை, கம்பளை, கோட்டை யுகங்களில் இலங்கையில் வாழ்ந்த பண்டிதர்களின் தொகையையும் வெளியிடப்பட்ட நூல்களின் எண்ணிக்கையையும் பார்க்கும்போது அக்காலகட்டம் கல்வியில் உயர் நிலையில் இருந்துள்ளதை அறியக் கூடியதாயுள்ளது. உயர் கல்வியைப் பெறுவதற்காக ஒருவர் தனது ஆயுட்காலம் முழுவதையும் செலவிட வேண்டியிருந்தது. பிள்ளை ஒன்றுக்கு ஐந்து வயதாகும்போது சுப நேரத்தில் ஏடுதுவங்கி அதன் கல்விப் பயணம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதன் பின்னர் பிள்ளையை ஓர் ஆசிரியரிடம் அல்லது கல்வி நிலையத்திற்கு அனுப்பி வைத்தனர். அக்காலத்தில் கல்வி நிலையமாகக் காணப்பட்டது பிரிவெனாவாகும். அநுராதபுரத்தில் பிக்குகளின் வசிப்பிட கல்வி நிலையங்களாக இருந்த பிரிவெனாக்கள் பொலன்னறுவை யுகத்தில் கல்வி நிலையங்களாக மாற்றமடைந்தன. மயுரபாத, விஜயபா, பத்மாவதி, சுனேத்ராதேவி என்பன இக்கால கல்வி நிலையங்களான பிரிவெனாக்களின் பெயர்களாகும். இக்கல்வி நிலையங்களில் பௌத்த பிக்கு மாணவர்களுடன் சாதாரண மாணவர்களும் கல்வி பயின்றனர் என்பதை கிரா சந்தேசய எனும் காவியத்தில் இடம்பெறும் விஜயபா பிரிவென வர்ணணை மூலம் தெளிவாகின்றது. பொலன்னறுவை யுகத்தில் சிறுவர்கள் அதிகளவில் எழுத்தறிவுடையோராகத் திகழ்ந்தனர் என்று 'சூளவம்சம்' கூறுகின்றது. குரு குலத்தில் அதாவது ஆசிரியர்களின் வீடுகளில் மாணவர்கள் கல்வி பயின்றனர். அவர்களுள் மாணவியரும் அடங்கியிருந்தனர்.

இக்காலத்தில் கற்பித்தல் முறைகளாக ஆசிரியர் போதிப்பதைக் கேட்டுக் கிரகித்தல் மற்றும் மனனம் செய்தல் என்பன நடைமுறையிலிருந்தன. மாணவர்கள் இலக்கணங்களை மனனம் செய்ததாகவும் வைத்தியத்துடன் தொடர்பானவற்றை நெட்டுறுப் பண்ணியதாகவும் அர்த்த சாஸ்த்திரம் நூலோடு தொடர்பான உப நூல்களைப் கற்றதாகவும் கிரா சந்தேசய காவியத்தில் விஜயபா பிரிவென பற்றிய பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. வாசிப்பைப் போன்றே எழுதவும் மாணவருக்குப் போதிக்கப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் மணலில் விரலால் எழுதிப் பழகிய பின்னரே ஏட்டுச் சுவடிகளில் எழுத்தாணி கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதப் பயிற்றுவித்ததாக பதின்மூன்றாம் நூற்றாண்டில் இலங்கை வந்த அருட் தந்தை ஜோன் டி. மாரிஞொலி எனும் தேச சஞ்சாரி தனது குறிப்புகளில் எழுதியுள்ளார்.

இக் காலக் கல்வியில் இடம் பெற்ற பல பாடங்கள் பற்றியும் சமகால இலக்கிய நூல்களில் இடம் பெற்றுள்ளன. அப்பாடங்கள் கலைகள் என்றும் சாஸ்திரங்கள் என்றும் இரு பிரிவாகக் காணப்பட்டதாக பூஜாவலிய மற்றும் சத்தர்மாலங்காரய எனும் நூல்கள் கூறுகின்றன. சோதிடம், வில்வித்தை, சட்டம், வைத்தியம் முதலியன கலைகளாகவும் எழுத்து, கணிதம், தர்க்கவியல், மந்திரதந்திரம், புராணம், வரலாறு முதலியன சாஸ்திரங்களாகவும் போதிக்கப்பட்டன. இலக்கணம், தர்க்கவியல், நிகண்டு என்பன இரு பிரிவுகளின் கீழும் போதிக்கப்பட்டுள்ளன. ஆயினும் இப்பாடங்கள் அனைத்தும் பிரிவெனாக்களில் போதிக்கப்பட்டதாக நாம் கருத முடியாது. கிராசந்தேசயவின்படி திரிபிடகம், இலக்கணம், சோதிடக் கலை, வைத்தியக் கலை, அர்த்த சாஸ்திரம், சமஸ்கிருதம், பாளி, தமிழ், காவிய நாடகம் முதலிய பாடங்கள் அக்கால பிரிவெனாக்களில் போதிக்கப்பட்டதாக அறிய முடிகின்றது.

இக்காலப் பகுதியிலும் சமூகத்தின் பிரதான ஜீவனோபாயமாக விவசாயமே காணப்பட்டது. மேலும் புடைவைக் கைத்தொழில், உலோகக் கைத்தொழில், தச்சுத் தொழில் முதலிய தொழில்களும் நிலவியமைக்கான சான்றுகள் கிடைத்துள்ளன. அத்துடன் கால் நடை வளர்ப்பும் வர்த்தகமும் பொருளாதார மார்க்கங்களாகத் திகழ்ந்துள்ளன.

## உசாத்துணை நூல்கள்


1) மத்திய கால இலங்கை - பேராதனை - 1971 இந்திர கீர்த்தி சிறிவீர

2) இலங்கைப் பல்கலைக் கழகத்தின் இலங்கை வரலாறு தொகு I, பகுதி II வித்தியாலங்கார பல்கலைக்கழகம் - 1972

3) மத்திய கால இலங்கைச் சமூகம் - எம்.பீ.ஆரியபால

4) CULTURE OF CEYLON IN MEDIVAL TIMES - W. GEIGER




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 7

## சமயம்

கற்பதற்கு எளிதாக அமையும் பொருட்டு, கீழே குறிப்பிடப்படும் காலப்பகுதி சோழ, பொலன்னறுவை, புலப்பெயர்ச்சி, தென்மேற்கு, அபிவிருத்தி, ஒளிமயமான என்ற அடிப்படையில் பல உப யுகங்களாகப் பிரிக்கப்பட்டு இவ்வத்தியாயத்தில் ஆராயப்படவுள்ளது. இக்காலப் பிரிவுகளில் சமய நிலவரங்களில் தாக்கத்தினை ஏற்படுத்திய பொதுவான மற்றும் விசேட காரணிகள் மீது கருத்தினைச் செலுத்தியே இப்பிரிவுகள் கணிக்கப்பட்டன என்பதை மாணவர்கள் கவனத்திற் கொள்ளவும்.

### சோழர் ஆட்சிக் காலம் 1017 - 1070

அநுராதபுரத்தை மையமாக வைத்து சுமார் 1300 வருட காலமாக இலங்கை பூராகவும் வளர்ச்சியடைந்து வந்த பௌத்த சமயம் 1017இல் இடம்பெற்ற சோழ ஆக்கிரமிப்புக்கு முன்னர், முன்னேற்றத்தின் அதி உச்ச நிலையை எட்டிப்பிடித்திருந்தது எனக் குறிப்பிடலாம். மகா விகாரை, அபயகிரி, ஜேதவனாராம போன்ற பிரதான பௌத்த மத்திய நிலையங்கள் மூன்றினை அடிப்படையாக வைத்த பௌத்த சமய முப்பிரிவுகள், (நிகாய) ஆயிரக்கணக்கான பௌத்த பிக்குகளை உள்ளடக்கியதாக இருந்தது. அதே வேளை பல்வேறுப்பட்ட கால கட்டங்களில் சக்கரவர்த்திகள், அரசர்கள், முதன் மந்திரிமார்கள், பிரபுக்கள் உள்ளிட்ட சமய அபிமானிகளிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட அனுசரணைகள் கொடுப்பனவுகள் ஒருங்கு திரட்டப்பட்டு ஸ்தூபிகள், உருவச் சிலைகள், விகாரைகள், ஆராமைகள், தான மண்டபங்கள், பூங்காக்கள், பொய்கைகள் போன்ற மனதை ஒருமிக்கச் செய்யும் சமயக் கூறுகளை உள்ளடக்கியதாக அதி வளர்ச்சி கண்டு இருந்தது. அவற்றினை செவ்வனே பரிபாலித்துச் செல்ல இன்றியமையாது தேவைப்படும் பொருளியற் காரணிகளான வயல்கள், நிலபுலன்கள், வேலையாட்கள், பரிவாரங்கள் போன்ற மூலகங்களையும் வாய்க்கப் பெற்று, பொருளாதார வளத்தையும், நிருவாகத் திறனையும் அடைந்து உன்னத நிலையில் செயற்பட்டது. அனுராதபுரத்துக்கு அப்பால் உருகுணை மலைய, மாயா போன்ற பிராந்தியங்களில் கூட மேற்கூறப்பட்ட பௌத்த சமய முப்பிரிவுகளுக்குரிய (நிகாய) விகாரைகள், ஆசிரமங்கள் போன்றவைகளும் அவற்றுக்கான பொருளாதாரக் கட்டமைப்புக்களும் சிறப்பாகக் காணப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபயகிரி மற்றும் ஜேதவன சூழற் பகுதிகளில் மகாயான சார்புக்கு வழி வகுக்கப்பட்டிருந்த போதிலும் சமயத்தின் முப்பிரிவுகள் (நிகாய) பொதுவாக தேரவாத சம்பிரதாயங்களையே பின்பற்றின எனக் கூறலாம். பிக்குமாரின் கல்வி உன்னத நிலையில் இருந்தது. மகா விகாரை, அபயகிரி, ஜேதவன போன்ற மூன்று விகாரைகளின் நிருவாகத்தை அடியொட்டி வளர்ச்சியடைந்த பிரதான எட்டு பிரிவெனாக்கள் காணப்பட்டன. இவைகள் இக்கால கட்டத்தில் இலங்கையின் தொலைவில் அமைந்திருந்த பிராந்தியங்களிலும், வளர்ச்சியடைந்த கிளைகளைக் கொண்டமைந்தன. இவைகள் ''மூலம்'' என்று வழங்கப்பட்டு எட்டு உயர் கல்வி மத்திய நிலையங்களாக அமைந்தன. உத்தரோலக, கப்பூர, மகாநெத்தபாசாத, வாகதீபக, சேனாதிபதி ராஜ, சேலந்தர, சரோகாம, தக்கிண ஆகிய பெயர்களில் எட்டு மூலங்களாக செயற்பட்டன. இவை முறையே உதுரலு, கபார, மகநெத்பா, வஹந்து, செனவிரத், கலதுரு, வல்கம், தகுணு என்று மூலங்களாக சிங்கள அடிப்படை ஆவணங்களில் பதியப்பட்டுள்ளன.

11ஆம் நூற்றாண்டாகும்போது தலைநகரங்களையும், வடக்கின் வர்த்தகத் துறைமுகங்களையும் அண்டி, ஆங்காங்கே தமிழ் மக்கள் குடியேறி இருந்தமைக்கான சான்றுகள் உள்ளன. எனினும் அவர்கள் சிங்கள, பௌத்த சமூகங்களின் ஒரு பகுதியினராக வாழ்ந்தார்களே ஒழிய தனியாக தமிழ், இந்து என்ற அடிப்படையில் பிரிந்து வாழ்ந்தமைக்கான சான்றுகள் இல்லை எனலாம். இக்காலக்கட்டத்தில் பௌத்த விகாரைகளுக்கு அனுசரணை புரிந்து நின்ற தமிழ்த் தலைவர்கள் பற்றியும் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. ஆனால் மேற்குறிப்பிட்ட தமிழ் மக்கள் தொகையினர் முழுமையாக பௌத்த சமயத்தைச் சார்ந்தவர்களாக இருந்தார்கள் என்ற கருத்தினை இது குறிக்காது. இவர்களில் பெரும்பாலானோர் தென் இந்தியாவில், அன்று பரவி இருந்த சிவ, விஷ்ணு வழிபாடுகளில் ஈடுபாடு கொண்டிருந்தமை புலனாகின்றது. அப்போது மாதொட்ட (மாந்தோட்டை), கந்தளாய் போன்ற இடங்களில் சிவன், விஷ்ணு கோயில்கள் எழுந்தருளி இருந்தன.

இத்தகைய சமயப் பின்னணியொன்று நிலவிய காலத்தில்தான் தென்னிந்தியாவில் ஆட்சி புரிந்த முதலாம் இராஜ ராஜசோழன் அனுராதபுரத்தை ஆக்கிரமிப்பதற்காக, சோழப் படையொன்றை அனுப்பி வைத்தான். இப்படை அனுராதபுரத்தில் நிலைகொண்டிருந்த தாது கோபுரங்கள், விகாரைகள், ஆசிரமங்களை உடைத்து தங்கச் சிலைகள் போன்ற பெறுமதிமிக்க பொக்கிஷங்களைச் சூறையாடியமையை வம்சக் கதைகள் பறைசாற்றுகின்றன. பிக்குகள் அனுராதபுரம், பொலன்னறுவைப் பகுதிகளைக் கைவிட்டு மலை நாட்டுக்கும் உருகுணைக்கும் புலம் பெயர்ந்தனர்.பொலன்னறுவையை நிருவாக மத்திய நிலையமாக்கிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட சோழ சிற்றரசன் இடைக்கிடை உருகுணையை ஆக்கிரமித்தமையால், பௌத்த குருமார்களுக்கு அப்பகுதியும் பாதுகாப்பற்றுக் காணப்பட்டது. அதிகமான பிக்குமார் திரிபிடகத்தையும் எடுத்துக் கொண்டு வெளிநாடுகளில் தஞ்சமடைந்தனர். சில பிக்குமார் பர்மாவின் கீழ்ப்பகுதியில் அமைந்திருக்கும் ராமஞ்ஞ தேசத்திற்கும், மற்றும் சிலர் தென்னிந்தியாவின் ஆந்திரா பிரதேசத்திற்கும் சென்றனர். 1017 - 1070 வரை ஆட்சிபுரிந்த சோழர் ஆட்சிக் காலத்தில் இராசரட்டையிலும் உருகுணையிலும் விகாரைகள், ஆராமைகள் பாழடைந்ததுடன், பௌத்த சமய மன்றங்கள் கூடச் செயலிழந்தன.

சோழ ஆக்கிரமிப்புக்கு முன்னரும் இந்நாட்டில் குடிகொண்டிருந்த மேற்குறிப்பிடப்பட்ட தமிழ் சனத்தொகுதி சோழ ஆட்சியாளர்களை ஆதரித்து இருப்பர் என்பதில் சந்தேகமில்லை. இவர்களுக்கு சோழ ஆட்சியாளர்களின் உதவி, ஒத்தாசைகள் கிடைத்திருக்கலாம் என்று ஊகிக்க முடியும். ஆக்கிரமிப்பு பட்டாளத்திற்கு மேலதிகமாக சோழ நாட்டில் இருந்து இன்னுமொரு சனத்தொகுதி இக்காலக்கட்டத்தில் இடைக்கிடை இங்கு வந்திருக்கலாம். அதற்குப் பிந்திய காலத்தில் பொலன்னறுவை, கந்தளாய் சூழல்களில் காணக் கூடியதாகவுள்ள பிராமணக் குடியிருப்புக்கள் பற்றி சிந்திக்கும்போது சோழர் ஆட்சிக் காலத்தில் தென் இந்தியாவில் இருந்து அதிகமான பிராமண மக்கள் தொகுதியினர் இந்நாட்டிற்கு குடிபெயர்ந்தார்கள் என்று எண்ணக் கூடியதாகவுள்ளது. சில வேளைகளில் சமய சம்பந்தமான வழிபாடுகள், பூசைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக இவர்களை இந்நாட்டிற்கு வரவழைத்து இருக்கலாம் என ஊகிக்கவும் இடமுண்டு.

சோழ அரசர்கள் சிவ பக்தர்களாவர். ஆட்சியாளர்களின் அனுசரணையின் கீழ் இந்தக் காலத்தில் சிவ வழிபாடுகள் முன்னேற்றமடைந்திருந்தன. புதிதாக சிவன் கோயில்கள் நிர்மாணிக்கப்பட்டது. பொலன்னறுவையில் இன்று காணக் கூடியதாகவுள்ள அழிவுச் சின்னங்களை வைத்து சிவன் கோயில்கள் அந்த யுகங்களில் நிர்மாணிக்கப்பட்டவை என உறுதியாகக் கூறக் கூடியதாகவுள்ளது. புதைப் பொருளாராய்ச்சித் திணைக்களம் உறுதிப்படுத்தியுள்ள இலக்கம் இரண்டு சிவன் கோயிலில் உள்ள கல்வெட்டுக்களின்படி வானவன்மாதேவி ஈஸ்வரம் என்ற பெயரால் குறிப்பிடப்பட்டுள்ளது. வானவன்மாதேவி முதலாம் ராஜராஜ சோழனின் முதன் மனைவியாவார். இலங்கை ஆக்கிரமிப்பை சம்பூரணப்படுத்திய ராஜேந்திர சோழ சக்கரவர்த்தியின் தாயாராவார். அந்த மகாராணியின் ஞாபகார்த்தமாக இந்தச் சிவ தேவாலயம் சோழ ஆட்சியின் ஆரம்பத்திலே நிர்மாணிக்கப்பட்டிருக்க வேண்டுமென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுமானிக்கலாம். அதே போன்று இராஜ ராஜ சக்கரவர்த்திக்குரிய பிரதேச அலுவலர் ஒருவரினால் மாதோட்டத்தில் (மாந்தோட்டம்) நிறுவப்பட்ட இராஜேஸ்வரம் கோவிலும் இந்த யுகத்தைச் சார்ந்ததாகும்.

மேலே குறிப்பிட்டவாறு இந்த யுகத்தில் சைவ சமயத்தினைப் போன்று, வைணவ சமயமும் முன்னேற்றமடைந்தது. கீழே குறிப்பிடப்படும் தேவாலயங்களில் கிடைக்கப்பெற்ற உலோகச் சிலைகள் இடையே சிவன் அல்லது ஈஸ்வரி தேவியுடைய உருவச் சிலைகள் அதிகமாக உள்ளன. மேலும் விஷ்ணு, நடராசா, கார்த்திகேயன், பார்வதி தேவி, கங்கா போன்ற தேவதை, தேவர்களினதும் சம்பந்தர், அப்பர் சுவாமிகள், சுந்தர மூர்த்தி நாயனார் மற்றும் மாணிக்கவாசகர் போன்ற மனிதப் புனிதர்களின் உருவச்சிலைகளையும் காணக் கூடியதாகவுள்ளது.

இந்த யுகத்தில் இராசரட்டையில் இருந்த பௌத்த விகாரைகள், ஆசிரமங்கள் சோழர்களால் அழிக்கப்பட்டதாக வம்சக் கதைகள் குறிப்பிடுவதை முன்னர் படித்தோம். ஆக்கிரமிப்புப் படைகள் விகாரைகள், தாது கோபுரங்களை சிதைத்து அதில் இருந்த பெறுமதியான சிலைகள் போன்றவற்றைச் சூறையாடியதில் சந்தேகமில்லை. எனினும் இந்நாட்டின் ''மும்முடிச்சோழ மண்டலம்'' அல்லது ஈழம் என்று சோழப் பேரரசின் பிராந்தியம் ஒன்றாக தொடர்ந்து பரிபாலித்தல், பேரரசின் இலக்காக இருப்பதனால், ஆக்கிரமிப்பின் பின் பொலன்னறுவை சோழ ஆட்சியாளர்கள் பௌத்த மத விடயத்தில் ஆக்கிரமிப்பற்ற ஒத்துதவும் மனப்பாங்கைக் கொண்டிருந்தார்கள் என வரலாற்று அறிஞர்கள் நம்பிக்கை கொண்டுள்ளார்கள்.

ஆக்கிரமிப்புக் காலகட்டத்தில் சிங்கள பௌத்த மக்களின் பெரும்பான்மையோர் அனுராதபுரம், பொலன்னறுவை போன்ற இடங்களை விட்டு பாதுகாப்பு நோக்கத்திற்காக தப்பிச் சென்ற போதிலும் ஆக்கிரமிப்புக் காலகட்டத்தின் பின்னர் இவர்களிற் சிலர் தமது பாரம்பரிய கிராமிய நில புலன்களை நாடி வந்து திரும்பவும் குடியேறி இருக்கலாம். சோழ ஆட்சியாளர்கள் இவர்களது பௌத்த சமய வாழ்க்கை முறைமைக்கு முட்டுக்கட்டையாக இருந்தார்கள் என்று எண்ண முடியாது. அப்போது இரண்டு, மூன்று நூற்றாண்டுகளாக இந்நாட்டில் இருந்த தமிழ் மக்கள் குறிப்பிடக் கூடியளவு எண்ணிக்கையிலானோர் மேலே குறிப்பிடப்பட்ட விதத்தில் பௌத்த சமயத்தைப் பின்பற்றி சிங்கள, பௌத்த கலாசாரத்தினுள் கவரப்பட்டிருந்தார்கள் எனலாம். இதனாலும் சோழ ஆட்சியாளர்கள் பௌத்த சமயத்தின் மீது சகாயமான முறையிலும் சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தர்ப்பங்களில் அனுசரணையாளர்களாகவும் செயற்பட்டுள்ளார்கள். திருகோணமலைக்கு அண்மிய பகுதியிலுள்ள வெல்கம் விகாரை பற்றி இவர்கள் காட்டிய மனப்பாங்கு இத்தகைய அனுமானத்திற்கு உதவும் ஒரு சான்றாக பிரசித்தி பெற்ற இந்திய தமிழ் வரலாற்று அறிஞரான நீலகண்ட சாஸ்திரி அவர்கள் எடுத்துக் காட்டுகின்றார்கள். கி.பி இரண்டாம் நூற்றாண்டு தொட்டு நீண்ட கால வரலாற்றைக் கொண்ட இந்த பௌத்த விகாரைகள் சோழ ஆட்சியின்போது புனரமைக்கப்பட்டு இராஜ ராஜ சோழ சக்கரவர்த்தியின் பெயரில் இராஜராஜ பெரும்பள்ளி என்று நாமம் சூட்டப்பட்டுள்ளது. தமிழ் பௌத்தத் தலைவர்கள் இந்த விகாரைக்கு அனுசரணை வழங்கியுள்ள முறையை நீல கண்ட சாஸ்திரி அவர்கள் முன்வைக்கும் கல்வெட்டுச் சான்றுகள் நிருபிக்கின்றன.

## பொலன்னறுவைக் காலம் 1070-1215

விஜயபாகு மன்னன் 1070இல் பொலன்னறுவை ஆட்சியைத் தொடங்கும்போது, இராசரட்டையில் நாம் முன்னர் பரீசீலனை செய்த மதப் பின்னணியொன்று தான் நிலவியது. அரை நூற்றாண்டளவு காலமாக இடம் பெற்ற சோழர் ஆட்சியின் விளைவாக உருவான அரசியல், பொருளாதார, கலாசார பிரச்சினைகள் பலவற்றிற்கு விஜயபாகு மன்னன் முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டது. மன்னன் இப்பிரச்சினைகளை சரியாகப் புரிந்து கொண்டு, இணக்க மனப்பாங்குடன் இவைகளை அணுகி, தொலை நோக்கு சிந்தனையுடன் முகங்கொடுத்துள்ளமையை அவன் பற்றிய வம்சக் கதைகளிலும், சமகாலத்து கல்வெட்டுக்களிலும் கிடைக்கும் விபரங்களை ஆய்வு செய்யும்போது தெளிவாகின்றது.

அன்னிய நாட்டு சோழப் படையை முறியடித்த போதிலும் இராசரட்டையில் இருந்த தமிழ் மக்கள் அந்தப் படையின் அனுசரணையின் கீழ் பிரபலமான நிலைமையில் இருந்தனர் எனக் கருதலாம். இத்தேசிய தமிழ் மக்கள் தொகுதியினர் மீது எத்தகைய கொள்கையைப் பின்பற்ற வேண்டும் என்பது விஜயபாகு மன்னனுக்கு உடனடியாக முகங்கொடுக்க வேண்டிய சிரமமான பிரச்சனையாக அமைந்தமைக்கு சந்தேகமில்லை. தமிழ் மக்களின் நம்பிக்கையை வென்றெடுத்து அவர்களைத் தமக்கு சாதகமாக ஆக்கிக் கொள்வதற்கான உபாய வழி வகைகளைக் கையாள்வதே இங்கு மன்னன் அனுசரிக்க வேண்டிய ஒரே வழியாக இருந்திருக்கும்.

மன்னன் வேளைக்காரர் என்று அழைக்கப்பட்ட தென்னிந்திய கூலி படையொன்றை உருவாக்கி, அவர்களுக்கு பாதுகாப்பு சேவைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்படைத்து இருந்தான். விஜயபாகு மன்னனைத் தொடர்ந்து ஆட்சி பீடமேறிய முதலாம் ஜயபாகு தலதா மாளிகையையும் அதற்குரிய சொத்துக்களையும் பாதுகாக்கும் பாரதூரமான பொறுப்பினைக் கூட, வேளைக்கார படை அணியினருக்கு ஒப்படைத்து இருந்தமையை இவர்களால் பொலன்னறுவையில் ஸ்தாபிக்கப்பட்ட பிரசித்தமான வேளைக்கார கல்வெட்டொன்றின் மூலம் அறியமுடிகின்றது.

மன்னன் தமிழ் மக்களது சமய நம்பிக்கைகளுக்கோ அல்லது சித்தாந்தங்களுக்கோ ஊறு விளையும் முறையில் நடந்து கொண்டான் என்பதற்கு எந்தவித சான்றுகளும் கிடைக்கவில்லை. அதற்குப் பதிலாக இவைகள் மீது அனுசரணைக் கொள்கையொன்றைக் கடைப் பிடித்தமைக்கான சான்றுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இது பற்றி பேராசிரியர் செனரத் பரணவிதான அவர்களுடைய கருத்தை கீழே காணலாம். மன்னன் சோழர் ஆட்சிக் காலத்தில் இருந்த சமய வழிபாட்டு ஸ்தலங்களுக்குத் தடைகள் நிகழாவண்ணம், நடாத்திச் செல்வதற்கு இடமளித்துள்ளான். அது மாத்திரமன்றி தமது ஆட்சிக்காலத்தில் தொடங்கிய புதிய சிவதேவாலயங்களுக்கு அனுசரணை வழங்கியுள்ளான் கந்தளாய் சிவதேவாலயம் 'விஜயராஜ ஈஸ்வரம் ' என்றும் அங்கிருந்த பிராமணக் கிராமம் விஜயராஜ சதுர்வேத மங்கலம் என்றும் நாமம் சூட்டப்பட்டமையை உதாரணமாகக் கொள்ளலாம். விஜயபாகு மன்னன் தமிழ் மக்களின் கௌரவத்தையும் ஆதரவையும் பெற்றிருந்தமையை தமிழ் மக்களாலே தமது தேவாலயத்திற்கும் குடியிருப்புக்கும் விஜயராஜ என்ற நாமத்தை சூட்டிக் கொண்டமை மூலம் தெளிவாகின்றது.

சோழர் ஆட்சிக் காலத்தில் இந்நாட்டில் பௌத்த சமயத்தின் விதி முன்பு விபரிக்கப்பட்டுள்ளது. பௌத்த சமய சாசன பொறுப்புதாரிகளான கல்வி அறிவு படைத்த பெரிய பிக்குமார்கள், திரிபிடக கிரந்தம் ஆகியவற்றுடன் வெளிநாடுகளுக்குச் சென்றமையால், சமய கலை ஞானங்களும் பௌத்தசாசனக் கொள்கைகளும் பாசி படர்ந்த நிலையில் இங்கு காணப்பட்டன. சாசன நிலைப்பாட்டிற்கு மூலாதாரமாக அமைந்த உபசம்பதா என்ற பிக்குகளின் துறவுச் சடங்கு எதிர்பார்க்கும் ஒழுக்க விழுமியங்கள், அரை நூற்றாண்டுகள் அளவில் நடந்தேறவில்லை. இதன் காரணமாக பிக்குகள் சமூகம் ஒழுக்கத்தில் வீழ்ச்சியடைந்து, தரிசு நிலம் போன்று காட்சியளித்தது. விஜயபாகு மன்னன் 1070ஆம் ஆண்டில் பொலன்னறுவையில் ஆட்சி பீடம் ஏறி, பௌத்தசாசன புனருத்தாரணத்திற்காக ஆயத்தமாகும்போது ஒழுக்காற்று செயற்பாடொன்றிற்கு குறைந்தளவில் அவசியப்படும் துறவு சீலம் மிகு பிக்குமார் ஐவரைக் கூட தேடிக் கொள்ள முடியாதிருந்தது என மகா வம்சக் கதைகள் குறிப்பிடுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோழ மன்னர் இங்கு ஆட்சி செய்யும்போது இந்நாட்டில் இருந்து புலம் பெயர்ந்து சென்ற தலைமைப் பிக்குமார்களும் அவர்களது மாணவ, மாணவிகள் பரம்பரையினரும் அனுருத்த மன்னனின் (கி.பி.1044 - 1074) அனுசரணைகள் பெற்று பர்மாவில் வாழ்ந்தார்கள். அந்த சிங்கள பௌத்த பிக்குமார்களதும் அவர்கள் எடுத்துச் சென்ற தேரவாத திரிபிடகத்தினதும் உதவியினால் அனுருத்த மன்னன் தமது நாட்டில் தேரவாத பௌத்த சாசனத்தை செழிப்படையச் செய்தான். விஜயபாகு மன்னன் கி.பி 1055 இல் இருந்து உருகுணையை ஆட்சி செய்து கொண்டு, சோழ எதிர்ப்பு யுத்தம் ஆரம்பமான கால கட்டத்தில் பர்மாவில் அனுருத்த மன்னனுடன் சினேகபூர்வமான தொடர்புகளைக் கட்டியெழுப்பி இருந்தான். இதன் பிரகாரம் மன்னன் இந்நாட்டிற்கு மீளவும் உபசம்பதா என்ற துறவுநிலை மதச் சடங்கை ஏற்படுத்துவதற்காக துறவு சீலமிகு பிக்குமார்களை அனுப்பும்படி வேண்டி அனுருத்த மன்னனுக்கு தூதுவர்களை அனுப்பினான். அனுருத்த மன்னன் துறவு சீலம் மிகு இருபது பிக்குமார்களையும் திரிபிடக இலக்கிய நூலையும் வெகுமதியாக வெள்ளை யானை ஒன்றையும் அனுப்பி வைத்தான். விஜயபாகு மன்னன் இவ்வாறனுப்பபட்ட பிக்குமார்கள் மூலம் உபசம்பதா மதக் கிரியைகளை இந்நாட்டில் மீளவும் ஸ்தாபித்து பௌத்த சாசன வஸ்த்துக்களையும், கொள்கைகளையும் உறுதிப்படுத்தினான். இச்சந்தர்ப்பத்தில் பர்மாவில் இருந்து இந்நாட்டிற்கு விஜயம் செய்தவர்கள் பர்மிய இனத்தைச் சார்ந்த பிக்குகளல்லர். சோழர் ஆக்கிரமிப்பின்போது இந்நாட்டில் இருந்து புலம்பெயர்ந்து சென்ற முதன்மை பிக்குமார்களும் அவர்களது மாணவர்களுமே ஆவர் என பேராசிரியர் பரணவிதான அவர்கள் சுட்டிக் காட்டுகின்றார்கள்.

விஜயபாகு இலங்கையின் மன்னன் ஆனபின் கடந்த நாற்பது வருடங்கள் வரையான முழு ஆட்சிக்காலத்திலும் சோழர் ஆட்சிக் காலத்தில் சிதைவுற்று பொலிவிழந்திருந்த அரசியல், பொருளாதார, கலாசார அமைப்புக்களை புனரமைப்பு செய்வதற்காக முயற்சிகளைச் செய்தான். இவரது சமய சேவைகளில் மிகவும் முக்கியமமாக விளங்குவது உருகுணையில் விகாரைகள், தூபிகள் என்பவற்றின் (தாகபைகளின்) புனர்நிர்மாண அலுவல்களாகும். சோழர் ஆக்கிரமிப்பின் காரணமாக உருகுணையின் தூபிகள், விகாரைகள் அழிவுற்றுக் கிடந்தன. அவ்வாறு அழிவடைந்த மாகம பௌத்த முப்பிரிவுகளுக்கு (நிகாய) சொந்தமான விகாரைகள், ஆராமைகள் புனரமைக்கப்பட்டு அதன் பரிபாலனத்திற்கு முன்னைய அரசர்கள் ஒப்படைத்து இருந்த நில புலன்கள் மீண்டும் அவர்களுக்கே வழங்கப்பட்டது. தனது தாயும் தந்தையும் தகனம் செய்யப்பட்டிருந்த இடங்களில் விகாரைகள் நிர்மாணிக்கப்பட்டன. திஸ்ஸமகாராமையில் சந்தகிரி விகாரையும் தெவிநுவரையில் உருவெல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற விகாரையும் நிர்மாணிக்கப்பட்டதுடன் வீரகெட்டியாவிற்கண்மையில் கஹகல் என்ற விகாரையும் திருத்தியமைக்கப்பட்டன. தாதுகர்ப்பம் சித்திரங்களால் அலங்கரிக்கப்பட்டு மஹியங்கன சைத்தியம் மீளவும் நிர்மாணிக்கப்பட்டது. சிவனொளிபாதமலை (ஸ்ரீபாதமலை) விஜயபாகு மன்னனின் அதி விசேட அனுசரணைக்குட்பட்டது. அதன் பராமரிப்பிற்காக கிலிமலை என்ற கிராமம் ஒப்படைக்கப்பட்டது. இவரின் உருகுணை சமய சேவைகளின் பெரும் பகுதி உருகுணையை ஆட்சி செய்த காலமான 1055-1070 ஆண்டுகளுக்குள் நிறைவேற்றப்பட்டிருக்கலாம் எனக் கருத முடியும்.

விஜயபாகு மன்னனின் சமய அலுவல்களில் அடுத்து முனைப்பாகத் தோற்றுவது பொலன்னறுவை தலைநகரும் அதனைச் சூழ நிறைவேற்றப்பட்ட அலுவல்களுமாகும். புனித தந்ததாதுவிற்கு தலைநகரில் மூன்று மாடி மாளிகை அமைக்கப்பட்டது. பொலன்னறுவை புண்ணிய பூமி சதுக்கத்தில் தற்போது அட்டதாகே என்ற பெயரில் வழங்கப்படும் சிதைவுற்ற கட்டடம் தந்ததாது மாளிகைதான் என அதன் முன்னால் அமைக்கப்பட்டுள்ள முன்னர் நாம் இதே அத்தியாயத்தில் குறிப்பிட்ட வேளைக்கார கல்வெட்டுக்களின் மூலம் அறிந்து கொள்ளக்கூடியதாக இருந்ததது. மன்னன் தலைநகரினுள் பல விகாரைகளைக் கட்டி சமய முப்பிரிவைச் சார்ந்த பிக்குமார்களுக்குக் ஒப்படைத்து அவர்களை அங்கே வாழச் செய்தான்.

சோழரின் ஆக்கிரமிப்பின்போது அழிவுற்று சிதைவடைந்த அநுராதபுர விகாரை, ஆராமைகள் அப்போது மனித நடமாற்றமற்ற பகுதியாகவும் காடாகவும் மாற்றமடைந்திருந்தது. பொலன்னறுவை தலைநகராகிய பின்பு மகாவிகாரை, அபயகிரி, ஜேத்தவன போன்ற பௌத்தசமய முப்பிரிவுகளுக்குரிய பிக்குமார்கள் அரச அனுசரணை பெற்றுக் கொண்டு பொலன்னறுவையில் வாழ்ந்தனர். விஜயபாகு மன்னன் சமய முப்பிரிவினருக்கும் பொலன்னறுவையில் பணிக்கொடை வழங்கினான். அனுராதபுரத்தில் இருந்த பிரதான பிரிவெனாக்களை மையமாகக் கொண்டு பொலன்னறுவை தலைநகர்ச் சூழலில் புதிதாக மூலஸ்தானங்களை அமைத்தான். இதில் ஒன்றான கப்பூரமூல நிறுவனத்திற்கு, மன்னனின் மகளான யசோதரா குமாரியினால், பெரிய சிலையகம் நிர்மாணிக்கப்பட்டு வழங்கப்பட்டது. மேலும் சேலந்தர சமூக நிறுவனத்திற்கு மன்னனின் தலைமைப் பட்டத்து இராணியினால் பணிக்கொடையொன்றும் வழங்கப்பட்டது. இவ்வாறு தலைநகரில் வாழ்ந்த ஆயிரக்கணக்கான பிக்குகளுக்கு நிரந்தரமாக தானம் கிடைக்கவும், பிக்குகளுக்காக வழங்கப்படும் நான்கு வகைப் பரிகரணப்பொருட்கள் பெற்றுக் கொள்ளும் வழியாகவும், எலஹர குடியேற்றத்தினையும் அதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசிப்போரையும் பிக்குகளுக்குரிமையாக்கி ஒப்படைக்கப்பட்டது.

பொலன்னறுவையை அண்மித்த பகுதிகளைப் போன்றே வடக்கில் தூரப் பகுதிகளிலும் மன்னன் நிர்மாணித்த பௌத்த புண்ணியத் தலங்களில் சோழர் ஆட்சி செய்தபோது தமிழ், பௌத்த தலைவர்களின் அனுசரணை பெற்று இராஜராஜ பெரும் பள்ளி என்ற பெயரில் அப்போது அழைக்கப்பட்ட வெல்கம் விகாரையும் குறிப்பிடத்தக்கதாகும். அது மட்டுமல்லாது கிரிகண்ட விகாரை, குருந்தி விகாரை மற்றும் யாழ்குடா நாட்டில் ஜம்புகோள விகாரையையும் விஜயபாகு மன்னன் புனரமைப்பு செய்தமை பற்றி வம்சக் கதைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சோழர் ஆக்கிரமிப்பு காரணமாக அதிகளவு அழிக்கப்பட்டவை அனுராதபுர ஸ்தூபிகளும் விகாரைகளுமென மேலே படித்தோம். விஜயபாகு மன்னனின் புனர்நிர்மாணங்களிடையே மிகவும் குறைவாகக் குறிப்பிடப்படுவது அநுராதபுர ஸ்தூபிகளும் விகாரைகளும் என இங்கு நாம் ஞாபகமூட்டிக் கொள்கின்றோம். அவரால் அபயகிரி மற்றும் ஜேதவன அண்மித்த பகுதிகளில் இருந்த தூபிகள், விகாரைகள் புனரமைத்தமை பற்றிய சான்றுகள் இல்லாத அதே வேளை மகாவிகாரை புண்ணியஸ்தலங்களில் ஸ்ரீ மகாபோதிமனை மாத்திரமே புனரமைக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

நிரந்தரமான அரச அனுசரணை காரணமாக பிக்கு குலத்தினர் வாழ்க்கையை நடாத்திச் செல்வது நன்கு ஸ்த்திரப்படுத்தப்பட்டது. துறை சார் சடங்கு (உபசம்பதா) உள்ளிட்ட ஒழுக்க விழுமியங்கள் உரிய நேரத்தில் முறையாகவே நடந்தேறின. இதன்படி ''சீலதர'' (சீலமரு) ''தபோதர''(தவவலிமை) பிக்குகளின் எண்ணிக்கை அதிகரித்தது அனுராதபுர காலத்தின் இறுதி அரைப்பகுதியில் வரிசைப்படுத்தப்பட்டிருந்த எட்டு மூலகங்களுக்காக(அஸ்ட மூல) பொலன்னறுவை தலை நகரில் ஸ்தாபிக்கப்பட்ட மூலஸ்தானங்கள் அல்லது நிறுவனங்களைக் மையமாகக் கொண்டு பௌத்த சமய முப்பிரிவைச் சேர்ந்த பிக்குகளின் கல்வி முன்னேற்றமடைந்தது. இதன் காரணமாக அநுராதபுர யுகத்தின் கடைசி அரைப்பகுதி போன்றே இக்காலத்திலும் பிக்குகள் மீளவும் சனங்களுக்கிடையே அதிகௌரவ அந்தஸ்தினைப் பெறத் தொடங்கினார்கள். அரசர்கள், அமைச்சர்கள் மீது கூடச் செல்வாக்கினை செலுத்தும் அளவிற்கு இவர்கள் மக்கள் ஆதரவினைப் பெற்றவர்களாக இருந்தனர்.

மன்னனின் பட்டத்து அரசி அபயகிரி சமயப்பிரிவை (நிகாயா) சேர்ந்த பிக்குகளின் ஆராமய சம்பிரதாயங்களுக்கு முரணாக நடந்து கொண்டாள். என்ற காரணத்தின் நிமித்தம் அந்த பிக்கு சமூகத்திடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னிப்பு வேண்டியதுடன் பட்டத்து அரசியின் அனைத்து சலுகைகளையும் இரத்து செய்து அவளை தலைநகரில் இருந்து கடத்திவிடவும் ஆணை இடப்பட்டது.

விஜயபாகு மன்னனின் மரணத்தின் பின் ஒருவரை நியமித்துக் கொள்ளும் நடவடிக்கைகளில் கூட பிக்குமார் தலையிட்டு செயற்பட்டதாக அறிய முடிகின்றது. விஜயபாகுவின் மரணத்தின் பின் அவரது சகோதரர் ஜயபாகு என்ற யுவராஜன் பொலன்னறுவையில் சிம்மாசனம் ஏறும்போது, அந்த வெற்றிடம் யுவராஜ பதவிக்குத் தகுதிவாய்ந்தவனாக அன்று உருகுணையில் இளவரசனாக இருந்த விஜயபாகுவின் மகன் விக்கிரமபாகுவிற்குத்தான் உரித்துடையதாகும். ஆனால் அரச சபையில் ஒரு பகுதியினரும் சில பிக்குமார்களுடைய அனுமதியுடன் அந்த வெற்றிடத்திற்கு விஜயபாகு மன்னனின் சகோதரியின் மகன் மானாபரனனை நியமித்து இருந்தனர். இது விக்கிரமபாகுவின் அரச உரிமையைப் பறிக்கும் ஒன்றாக அமைந்தது. கோபமடைந்த விக்கிரமபாகு படைகளின் உதவியுடன் ஜயபாகுவை சிம்மாசனத்தில் இருந்து துரத்திவிட்டு பொலன்னறுவையில் மன்னனாகும் வரை உள்ள காலத்திற்குள் (கி.பி 1111-1153) தொடர்ச்சியாக நிலவிய அரசியல் கலவரங்களுக்கு ஏதுவாக அமைந்த இந்நிகழ்வினைக் காரணமாக வைத்து விக்கிரமபாகு மன்னன் தலை நகரில் வசித்த பிக்குகள் மீதும் பொதுவாக புத்த சாசனத்தின் மீதும் கடுமையான அடக்குமுறை நடவடிக்கைகளை மேற்கொண்டான். விஜயபாகு மன்னன் ஒப்படைத்து இருந்த பௌத்த சாசனத்திற்குரிய ஊர்களையும் நில புலன்களையும் பிக்குகளிடமிருந்து பறித்து தனக்கு சேவையாற்றியவர்களுக்கு ஒப்படைத்துள்ளான். பொலன்னறுவை விகாரை அன்னிய நாட்டுப் படைகளின் இராணுவ பாசறைகளாக மாற்றமடைந்தன. இச்சிக்கலான காலப்பகுதியில் உதுரொலமுல பிரதான தேரர் புத்தரின் புனித தந்ததாதுவையும் புனித பாத்திரத்தினையும் எடுத்துக் கொண்டு உருகுணைக்கு தப்பிச் சென்றார். விக்கிரமபாகுவின் படை தந்ததாதுவிற்குச் சொந்தமான முத்து, மாணிக்கங்கள் போன்ற பெறுமதியான வஸ்த்துக்களை சூறையாடியது. எட்டு மூல நிறுவனங்களில் வசித்த பிக்குமாரும் பாதுகாப்பிற்காக உருகுணைக்குப் புலம் பெயர்ந்து சென்றனர். இவ்வாறு விஜயபாகு மன்னன் பொலன்னறுவையில் நிலைப்படுத்தியிருந்த சாசன அமைப்பின் நிலைமைகள் சில காலத்தின் பின் வீழ்ச்சி கண்டது.

விக்கிரமபாகு மன்னனின் பிக்கு சாசன விரோத நடவடிக்கைகள் பற்றி மக்களிடமிருந்து கடுமையான எதிர்ப்பு ஏற்பட்டதில் வியப்பில்லை. விக்கிரமாகுவின் மனைவியான சுந்தர மகாதேவி, திம்புலாகல ஆராமைக்கு அனுசரணை வழங்கியமை இந்த எதிர்ப்பினை ஓரளவுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது சமப்படுத்துவதற்காக இருக்கலாம். பொலன்னறுவை தலை நகருக்கு பத்து மைல்கள் அளவு தூரத்தில் அமைந்துள்ள திம்புலாகல ஆசிரமம் வலகம்பா மன்னனின் ஆட்சிக் காலத்தில் இருந்து தொடர்ந்து வாழ்ந்த சீலதர(சீலமிகு), தபோதர(தவ வலிமை) பிக்கு பரம்பரையினரால் உள்நாடு, வெளிநாடுகளிலும் புகழடைந்திருந்த ஆசிரம நிறுவனமாகும். அன்று திம்புலாகல ஆரணியத்தில் 500 பிக்குகள் நிரந்தரமாக வாழ்ந்து வந்தனர். சந்தர மகாதேவி திம்புலாக ஆரணியத்தில் ஹிருமகாலென (குகை) சந்த மகா லென, போன்ற இடங்களை புனரமைத்து அவ்விடத்தின் பரிபாலன செலவுகளைச் சமாளிக்க ஊர்களையும், நில புலன்களையும் ஒப்படைத்ததாக திம்புலாகல மாரவீதி கல்வெட்டொன்று குறிப்பிடுகின்றது.

விக்கிரமபாகு மன்னன் இறந்ததன் பின் பொலன்னறுவையில் அரச பதவியேற்ற 2ஆம் கஜபாகு மன்னனுக்கு பௌத்த பிக்குகளின் உதவியை நாடவேண்டி ஏற்பட்டது. பராக்கிரமபாகு மன்னனைத் மாயாரட்டையை தன் வசப்படுத்தி ராசரட்டையை ஆக்கிரமித்து கஜபாகு மன்னனைத் தோற்கடிக்க அண்மித்தபோது சமய முப்பிரிவு தேரர்கள் முன்வந்து இரு மைத்துனர்களிடையே சமாதான ஒப்பந்தமொன்றை ஏற்படுத்தினர். ஒப்பந்தப்படி, முதியவனான கஜபாகு மன்னன் இறக்கும்வரை அவனுக்கு இராசரட்டையை ஆளும் உரிமை ஒப்படைக்கப்பட்டது. அவனது மரணத்தின் பின்னர் இராசரட்டையும் பராக்கிரமபாகு மன்னன் கைவசமாகியது.

1153இல் முழு இலங்கைக்கும் சக்கரவர்த்தியாக பொலன்னறுவையில் அரசபதவியேற்ற பின் ஐக்கிய இலங்கைக்குள் கௌதமரின் பௌத்த சாசனத்தை எழுச்சியடையச் செய்வதே தமது ஒரே அபிலாசை என்று பராக்கிரமபாகு மன்னன் பிரசித்தமாக பிரகடனப்படுத்தினான். அப்போது கடந்த நாற்பது வருட அரசியல் பிரச்சினைகளின்போது சமய முப்பிரிவினைச் சேர்ந்த பிக்குமார் பல்வேறு அரசியற் தலைவர்களுக்கு புரோகிதர்களாக செயற்பட்டு குழுக்களாகப் பிரிந்து இருந்திருப்பார்கள் என்பதில் ஐயமில்லை. பராக்கிரமபாகு பொலன்னறுவையில் அரச பதவியேற்று சிறிது காலம் செல்லும்வரை புனித தந்த தாதுவை உருகுணையில் சுகலா அரசியின் வசம் பாதுகாப்பாக வைத்திருந்தான். பரம்பரையாக புனித தந்ததாதுவின் பொறுப்பாளராகப் பதவி வகித்த அபயகிரி பிரிவைச் சேர்ந்த உதுரொலமூல பிக்குகள் உருகுணை சுகலா அரசிக்கு புரவலர்களாக செயற்பட்டிருப்பர் என ஊகிக்கலாம். பராக்கிரமபாகு மன்னன் அரச பதவியை உறுதிப்படுத்திக் கொள்ள புனித தந்ததாதுவை கைப்பற்றிக் கொள்ளும் பொருட்டு சுகலா அரசிக்கு விரோதமாக உருகுணையில் யுத்தத்தை மேற்கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடினமான நீண்டகால யுத்தத்தின் பின் தந்ததாது கைப்பற்றப்பட்டது. தமது அரசியல் எதிரிகளுக்கு புரவலர்களாக இருந்த பிக்குமார் குழுவினரைப் பணியச் செய்து கொள்ளும் அவசியத்தினை இட்டும் பராக்கிரமபாகு மன்னன் கவனத்தைச் செலுத்தி இருப்பான் என்பதில் ஐயமில்லை. 40 வருடமளவு காலம் பிக்குகள் சுயேச்சையாக செயற்பட்டு வாழ்ந்தமையினால் பிக்குகள் சமூகம் அதிகளவில் சீர்கெட்டுப் போய் இருந்தது.

வம்சக்கதைகள் குறிப்பிடுவதை நோக்கும்போது அன்று பிக்குமார் வசம் இருந்த கிராமங்களில் வாழ்ந்த பிக்குகள் தத்தமது உறவினர்களை மேம்படுத்துவதன்றி வேறு சீலங்கள் தமக்கு இல்லையென்றாற் போல் காலந்தள்ளினர். இதனால் சீலம் பேணும் ஒழுக்கவினயமுள்ள பிக்குமார் ஒழுங்கீன நடத்தையுள்ள கெட்டுப்போன பிக்குகளுடன் சேர்ந்து ஒழுக்க நெறிகளை நடாத்திச் செல்வது ஒரு புறமிருக்க அவரவர்களின் சாஸ்திரக் கலைகளைக் கூட அவர்கள் விரும்பியதாகத் தெரியவில்லை.பிக்குகள் சமூகத்தில் அப்போது நிலவிய ஒழுங்கீன நிலைமையை மாற்றி ஆவன செய்வதற்கு, பராக்கிரமபாகு மன்னன் உறுதி பூண்டான். அப்போது திம்புலாகல ஆரணியத்தில் வாழ்ந்த சீலதர, தபோதர, தர்மதர, (ஒழுக்கம் சார், துறவு சார், சமயம் சார்) மற்றும் அதி கௌரவமிக்க மகா காசியப்ப தேரர் உள்ளிட்ட முக்கிய முதன்மை தேரர்களை அடக்கி தர்ம நீதிமன்ற சபை முன்னிலையில் இலங்கை முழுவதும் பரந்து வாழ்ந்த சமய முப்பிரிவினைச் சேர்ந்த அனைத்து பிக்குகளும் வரவழைக்கப்பட்டார்கள். மாணவர் குழுக்களுடன் அனுராதபுர ஞானபால தேரரும் சப்பிரகமுவ தேரரும் உள்ளிட்ட மொக்கல்லான தேரரும் நாகிந்த பள்ளித் தேரர், மாயாரட்டையில் அனைத்து பிக்குகளும் சேலந்தரவாசி நந்த தேரர் ஆகியோரும் உருகுணை சமய முப்பிரிவிற்குரிய அனைத்து பிக்குகளும் அழைக்கப்பட்டார்கள். பொலன்னறுவை லதா மண்டபத்தில் ஒருங்கு கூடிய தர்ம நீதிமன்ற சபைமுன் தோற்றிய மன்னன், தேரர்கள் அவரவர்களுக்கிடையே ஒற்றுமை ஏற்படுத்துவது தமது ஏகோபித்த அபிப்பிராயமாக இருப்பதாக மகாவிகாரையைச் சேர்ந்த பிக்குகளுக்கு கௌரவமாக வலியுறுத்தினான். அதிகமான பிக்குகள் இத்தகைய ஒற்றுமைக்கு தமது வெறுப்பினைக் காட்டி நின்றனர். நீதிமன்றில் அருகருகே அமர்ந்து இருப்பதைக் கூட சில பிக்குகள் மறுதலித்து நின்றனர். சிலர் தப்புவதற்கு வெளிநாடுகளுக்கு சென்று விட்டனர்.

தர்ம நீதிமன்றம் ஆரம்பித்தது. மன்னன் நீதி சபையின் பின்னணியில் பிரசித்தியற்ற முறையில் மூன்று இரவுகள் தங்கி இருந்து தர்ம நீதி மன்றிற்கு வருகை தந்தான். மகா காசியப்ப தேரரின் தலைமையைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட நீதிமன்றத்தின் முதலில் அழைப்பு விடுக்கப்பட்டது மகா விகாரையைச் சேர்ந்த பிக்குகளுக்காகும். ஒழுக்க வினயமற்ற பிக்குகளை இல்லற வாழ்க்கைக்கு மீளவும் மாற்றி அரச உயர் பதவிகள் அவர்களுக்கு வழங்கப்பட்டன. பின்னர் வலகம்பா காலத்தில் இருந்து தனியான பிரிவொன்றாக (நிகாய) இயங்கி வந்த அபயகிரியைச் சேர்ந்த பிக்குகளும் மகாசேன மன்னனின் காலத்திலிருந்து பிரிந்து வந்த ஜேத்தவன பிரிவைச் சேர்ந்த பிக்குகளும் பரிசீலனைக்குட்பட்டார்கள். இவர்களுக்கிடையே முறையாக துறவு (உபசம்பதா) நிலையைப் பெற்ற ஒரு பிக்கு கூட இருக்கவில்லை என்று குறிப்பிடப்படுகின்றது. முன் கூறப்பட்ட படி சீலம் கெட்ட பிக்குகளுக்கு அரசபதவிகள் வழங்கப்பட்டு இல்லற வாழ்க்கைக்குட் படுத்தப்பட்டதுடன் அதிக பிக்குமார்கள் மூத்த தன்மையில் இருந்து பதவி இறக்கம் செய்யப்பட்டு இளம் பிக்குகளின் அந்தஸ்த்திற்கு மாற்றப்பட்டார்கள். பராக்கிரமபாகு மன்னனினால் செய்யப்பட்ட இந்த சமய சீராக்கம் சிரமமானதொரு நடவடிக்கையாகக் குறிப்பிடப்படுகின்றது.

கி.பி 1165 இல் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கை பௌத்த சமயப் பிரிவுகளின் (நிகாய) ஒற்றுமை என்று குறிப்பிடப்பட்ட போதிலும் உண்மையில் அது சமய சீராக்கல் என்பது மேற்கண்ட விபரங்களைக் கவனமாக நோக்கும்போது புரியக்கூடியதாக உள்ளது. மேலும் ஒரு வகையில் நோக்குகையில் இலங்கை முழுவதும் இருந்த அனைத்து பிக்குமார்களும் ஒரே ஒழுக்க வினயாற்று சம்பிரதாயமொன்றின் கீழ் ஒழுங்குபடுத்தப்பட்டபோது சமய முப்பிரிவுகளினதும் தனித்தனியான செயற்பாடு அகன்று ஒரே பிக்கு சமூகமாக பரிமாற்றமடைந்தமை சமயப் பிரிவின் ஒற்றுமை என்றே குறிப்பிடலாம். இவ்வாறு ஐக்கியப்பட்ட பிக்குகளுக்காக புதிய ஒழுக்காற்று விதிகள் அடங்கிய வரைவுப் பிரதியொன்று தயாரிக்கப்பட்டு கல்விகாரையில் கற்பாறை சுவற்றில் செதுக்கப்பட்டது. இது பொலன்னறுவை சட்ட வரைவு (கதிகாவத) என்று பிரபல்யமாகி இருக்கின்றது. இந்த சட்ட வரைவின் கட்டளைப்படி பிக்குகள் குழு நன்நடத்தைப் பண்பு கொண்டவர்களாக மாற்றமடைந்ததுடன் வருடா வருடம் பிக்கு துறவுச் சடங்கு (உபசம்பதா) விழாக்கோலம் எடுத்தது. பிக்குகள் சமூகம் சீரமைக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டது.

மன்னன் இவ்வாறு சமய முப்பிரிவினையும் ஒரே பிக்குமார் இயக்கமாக மாற்றிய போதிலும் அனுராதபுர இறுதி அரைப் பகுதியில் இருந்து மூன்று பிரிவுகளையும் சேர்ந்த பிக்குமார்கள் பிளவுபட்டு உறுதியாக ஈடேறி வந்த எட்டு மூலங்களையும் அதன் பாட்டில் இயங்கவிடப்பட்டது. விஜயபாகு மன்னனால் இந்த எட்டு மூலங்களுக்காக பொலன்னறுவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைநகரில் நிறுவனங்கள் அல்லது மூலஸ்த்தானங்கள் அமைக்கப்பட்டிருந்தன. பராக்கிரமபாகு மன்னன் தலைநகரில் ஜேதவன விகாரை என்ற பெயரில் பெரிய விகாரையொன்றை நிர்மாணித்து அங்கு எட்டுமூல (அஸ்டமூல) அதிகாரிகளுக்காக மூன்று மாடிக் கட்டடங்கள் எட்டினை பணிக் கொடையாக வழங்கி சாரிபுத்திர மகா தேரருக்கு அதே ஜேதவன விகாரை வளவில் பெரியதொரு மாளிகையை அமைத்துக் கொடுத்தான். சாரிபுத்திர மகாதேரர் என்பவர் ஜேதவன விகாரை சமயப் பிரிவு (நிகாய) சமாதான நீதிமன்றில் தலைமைப் பதவி வகித்த திம்புலாகல காசியப்ப மகாதேரரின் முதன் மாணாக்கர் ஒருவராவார். முச்சமயப் பிரிவின் ஐக்கியத்தின் பின் காசியப்ப மகாதேரர் மீளவும் திம்புலாகல வனவாசமடைந்ததுடன் சாரிபுத்திர மகாதேரர் தலைநகரில் தங்கி புது இயக்கமாக ஒன்று கூடிய பிக்குகளுக்கு தலைமைத்துவம் வழங்கியதாகத் தெரிகின்றது.

மகாசேன மன்னன் காலந்தொட்டு சமய முப்பிரிவுத் தலைமைத்துவத்தின் கீழ் பிளவுப்பட்டுக் கிடந்த இலங்கைப் பிக்குகள் எட்டு நூற்றாண்டுகளின் பின்னர் இவ்வாறு முதன் முறையாக சமய முப்பிரிவின் ஐக்கியத்தின் பின் ஒரு தலைமையின் கீழ் ஐக்கியமடைந்தார்கள். அது தான் சாரிபுத்திர மகா தேரரின் தலைமைத்துவமாகும். அவர் வசித்த ஜேதவன ஆசிரமத்தினுள்ளே மன்னன் எட்டு மூல நிறுவன அதிகாரிகள் எட்டுப் பேருக்கு மூன்று மாடிகள் கட்டடங்கள் எட்டினை பணிக்கொடுடையாக வழங்கினான். எட்டு மூல நிறுவனங்களுக்கு தனித்தனியாக இயங்குவதற்கு இடமளித்து அந்த நிறுவனங்கள் எட்டினையும் சாரிபுத்திர மகாதேரரின் தலைமைத்துவத்தின் கீழ் கொண்டு வரும் ஒரு பிரயத்தனமாக இதைக் கருதலாம். இது இலங்கையின் சகல பிக்குக் குழுவினரதும் முகாமையை ஒரு தலைமைத்துவத்தின் கீழ் அவதானமாக ஒருங்கிணைக்கும் முயற்சியெனக் கூறலாம்.

இது முதல் புத்த பெருமானின் காலத்தில் பாரதத்தில் நிலவியது போன்றும் வலகம்பா ஆட்சிக் காலத்திற்கு முன்னர் இலங்கையில் நிலவியது போன்றும் லௌகீக அரசர்களுக்கும் சமய அனுட்டான அரசின் முதன்மை பீடத் தலைமைத் தேரர்களுக்குமிடையே இருக்கும் நெருங்கிய அன்னியோன்ய உறவு மீளக் கட்டியெழுப்பப்பட்டு அரசும் சாசனமும் கைகோர்த்துக் கொண்டு ஒன்றாக அபிவிருத்தியடையும் போக்கொன்று வளரத் தொடங்கியது. சாரிபுத்திர மகா தேரர் அவர்கள் காலப் போக்கில் மகாசாமி என்றழைக்கப்பட்ட, முதன்மை தேரர் என்ற தலைமைப் பதவியை அடைந்திருந்தார். அடுத்த நூற்றாண்டு 'சங்கராஜ' என்ற மொழி வழக்கில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரயோகிக்கப்பட்ட இந்த முதன்மை சமயத் தலைமைப் பதவியும் அதனையொட்டி வளர்ச்சி கண்ட விடயங்களும் பின்னர் விளக்கப்படும்.

பராக்கிரமபாகு மன்னன் அசோக சக்கரவர்த்தியையும் துட்டகாமினி மன்னனையும் எடுத்துக்காட்டாகக் கொண்டு, புத்தபெருமானின் சாசனத்தை முன்னேற்றுவதற்கு பாரிய சேவைகள் ஆற்றினான். சாரிபுத்திர மகாதேரரதும், எட்டு மூல நிறுவனத்தின் அதிகாரிகள் மகா தேரர்களது பணிக்கொடைகள் அமைந்துள்ள மேற்குறிப்பிட்ட ஜேதவனாராமையில் பிக்குகளின் நலன்கருதி பல விகாரைகள் கட்டினான். தலதா மாளிகை, சிலை மனைகள் தர்ம சாலைகள், போசன சாலைகள், நடமாடும் சாலைகள், குளிப்பதற்கான பொய்கைகள், மலசல கூடங்கள் போன்ற 520 சிறிய, பெரிய எண்ணிக்கையிலான கட்டடங்கள் அவ்விகாரையினுள் அமைத்தமை குறிப்பிடப்படுகின்றது.

அரசன் நிர்மாணித்த மற்றைய கட்டடத் தொகுதி ஆலாஹன பிரிவெனாத் தொகுதியாகும். இது சுபத்தா, ரூபவதி என்ற பெயரில் இரு ஸ்தூபங்களும் ஐந்து மாடிகளிலான லங்காதிலக சிலை மனையும் மூன்று எல்லைகளைக் கொண்ட பத்தசீம பரிசாரகக்களஞ்சியங்களும், தூணில் அமைந்த சிறு அறைகளும் (குடாகார) நீண்ட பெரிய மாடங்களும், தீர்கபாசாத எனும் தீக்கல் வீடுகளும், குளிக்கும் பொய்கைகளும், கழிப்பறைகளும், சோலைகளும் கொண்ட பல கூறுகளை அது உள்ளடக்கிக் கட்டப்பட்டதாகும்.

தலை நகரில் அமைக்கப்பட்ட அடுத்த முக்கியமான விகாரைத் தொகுதி உத்தராராமையாகும். ஆயிரத்து முந்நூறு முழ சுற்றளவுள்ள பெரிய ஸ்தூபியொன்று அங்கு நிர்மாணிக்கப்பட்டது. தென் இந்திய ஆக்கிரமிப்பின்போது சரணடைந்த தமிழ் சிறைக் கைதிகள் மூலம் கட்டப்பட்டதாக இருந்தமையால் அது தமிழ் மகாசேய (தெமல மகாசேய) என்ற பெயரில் பிரபல்யமாகியது. இந்த விகாரைக்கு தெற்கே அமைந்துள்ள கற்பாறையை ஆதாரமாகக் கொண்டு வித்தியாதர குகை, ஹிதி சிலைக் குகை (ஹிதி பிலிம லென) ஹொத்சிலைக் குகை (ஹொத் பிலிம லென) என்று சிலை வைக்கும் மூன்று குகைகள் கட்டப்பட்டன. இந்த இடங்கள் இன்று கல் விகாரை என்று அழைக்கப்படுகின்றது.

மேலும் 'ராஜவேஸ், பூஜாங்க' , என்ற கிளை, நகரத்தில் 'இசிபதன' என்ற பெயரில் விகாரையொன்றும், சிங்கபுர என்ற கிளை நகரில் குசிநார என்ற பெயரிலான விகாரையும், விஜித என்ற கிளை நகரத்தில் வேலுவன என்ற விகாரையும் பல விகாரைகளை உள்ளடக்கியதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்மாணிக்கப்பட்டது. தூதங்கர பிக்குவின் நலன்புரி சமய சேவைகளுக்காக கபில என்ற பெயரில் விகாரையொன்றும் அமைக்கப்பட்டது.

சோழ ஆக்கிரமிப்பின்போது அழிக்கப்பட்ட அனுராதபுர சமய சம்பந்தமான இடங்களைப் புனருத்தாரணம் செய்வதற்கு விஜயபாகு மன்னனுக்கு அவகாசம் கிடைக்கவில்லை. இந்த சிரமமான அலுவலை செய்து முடிக்கும்படி பராக்கிரமபாகு மன்னன் தமது அமைச்சரொருவரை அநுராதபுரத்திற்கு அனுப்பி வைத்தான். அப்போது சோழ ஆக்கிரமிப்பாளர்களினால் முன்பு அழிக்கப்பட்ட 120 முழ ருவன்வெலிசாயவும் 140 முழ உயரத்தினைக் கொண்ட அபயகிரி விகாரையும், 160 முழ உயரமான ஜேத்தவனாராம விகாரையும், 80 முழ உயரங் கொண்ட மிரிஸ்ஸ வெட்டிய விகாரையும் உடைந்து விழுந்து உயரமான மரங்களின் கீழ் புலி, கரடி வாழும் அடர்ந்த காடுகளுக்குள் புதையுண்டு இருந்தது.

அரசன் தமது படைகளைக் கொண்டு துப்பரவு செய்து அங்கு சிதைந்த நிலையில் கிடந்த ஸ்தூபங்களை நன்கமைத்து, வெள்ளை நிறத்தால் செப்பனிட்டு அமைத்தான். கற்கள், இலை தழைகளால் மூடப்பட்ட மண்டபத்தினை துப்பரவு செய்து ஒழுங்கமைத்தான். சோழர்களால் அழிக்கப்பட்டிருந்த நீள, அகல, உயரங்களை 100 முழங்களாக அமைக்கப்பட்ட லோவ மகாபாயவை 1600 கற்றூண்களால் ஆச்சரியப்படும் வகையில் அமைத்தான். தூபராம போன்ற பழைய இடங்களில் பழைய பிரிவெனாக்கள், எல்லை மதில்கள் போன்றவற்றைக் கட்டி மிகிந்தலையில் இருந்த 64 ஸ்தூபிகளையும் விகாரைகள், ஆராமைகளைத் திருத்தியமைத்தான்.

இவ்வாறு பராக்கிரமபாகு மன்னன் 33 வருடங்கள் வரையிலான தமது பதவிக் காலத்தினுள் பிக்குகளின் கல்வி, ஒழுக்கம், நலன் ஓம்பல் விடயங்களுக்காக பலவித வசதிகள் செய்து கொடுத்ததுடன் புத்த பெருமானின் சாசனத்தை முன்னேற்றுவதற்காகப் பெரும்பாலும் பழைய விகாரைகள் அனைத்தையும் புனரமைப்பு செய்து புதிய விகாரை ஆராமைகளைக் கட்டி எழுப்பிக் கொண்டு அபரிமிதமான சாசன சேவைகளைச் செய்திருப்பது புலனாகின்றது.

பராக்கிரமபாகு மன்னனின் காலத்தில் ஏற்பட்ட இந்த சாசன அபிவிருத்தி விசேடமாக பிக்குகளின் சமயங்களில் ஏற்பட்ட மறுமலர்ச்சியின் கீர்த்தி தென்கிழக்காசியா போன்ற பௌத்த நாடுகளுக்கும் பரவியது. இதன் நிமித்தம் அந்த நாட்டின் பிக்குகள் இடைக்கிடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலன்னறுவைக்கு விஜயம் செய்து இங்கு தங்கி இருந்து இந்நாட்டு தேரவாத சமயக் கலை ஞானங்களையும் முறைகளையும் பயின்று தமது தாய் நாடுகளுக்குச் சென்று, அவற்றைத் தம் நாட்டில் புகுத்தினார்கள். பர்மாவின் தலைமைத் தேரரான பன்தகு என்பவர் இத்தகைய பயிற்சி பெற்றவராகும். மேலும் பர்மா தலைமைத் தேரரான உத்தரஜீவ மகாதேரரும் தமது மாணவர்களான ஜப்பட பிக்குவுடன் இலங்கை வந்து பொலன்னறுவையில் சிறிது காலம் தங்கிய பின்னர் தமது தாய் நாட்டிற்குச் சென்று இந்நாட்டு சாசன சம்பிரதாயங்களை அங்கும் ஸ்தாபித்தார்.

பராக்கிரமபாகு மன்னன் காலத்தில் ஏற்பட்ட இந்த சாசன அபிவிருத்தி நிஸ்ஸங்கமல்லன் காலத்திலும் (1187 - 1196) எத்தகைய தடைகளுமின்றி நிலவி வந்தது. தாமும் சமய முப்பிரிவுகளையும் ஐக்கியப்படுத்தியதாக நிஸ்ஸங்க மல்ல மன்னன் தனது கல்வெட்டுக்களில் குறிப்பிட்ட போதிலும் பராக்கிரமபாகு மன்னனுக்கு சமமாகவோ அல்லது மிகவும் உயர்ந்த பிரதிரூபமொன்றினை சனங்கள் முன் நடத்திக் காட்டுவதற்காக நிஸ்ஸங்கமல்ல மன்னன் செய்த பிரசாரக் கொள்கை பற்றி அவதானிக்கும்போது சமய முப்பிரிவுகளை ஐக்கியப்படுத்தியதாக இவர் விடும் அறிக்கை அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததல்ல என்று எண்ணத் தூண்டுகின்றது. எவ்வாறாயினும் நிஸ்ஸங்கமல்ல மன்னன் புத்த சாசனத்தை அபிவிருத்தி செய்வதற்காக பாரிய சேவையொன்று செய்தமைக்கான சான்றுகள் உள்ளன. தம்புள்ளை விகாரையில் இருந்த எழுபத்து மூன்று சிலைகள் தங்கமுலாம் பூசப்பட்டு சுவர்ணகிரி குகை என்ற நாமம் பூண்டது. அனுராதபுர ருவன்வெலி ஸ்தூபத்திற்கு அதி விசித்திரமான பூசை வழிபாட்டு விழாவொன்று நடந்தேறியது. பொலன்னறுவை ரன்கொத் வெஹர (தங்க கோபுரக்கலச விகாரை) மற்றும் சூழலில் சமய கட்டடங்கள் நிஸ்ஸங்கமல்ல மன்னனால் கட்டப்பட்டது. பொலன்னறுவையில் பூசை சதுக்கத்தில் லதா மண்டபம், ஹெட்ட தாகை சதுக்கத்தில் சத்மஹல் பிரசாதய (ஏழுமாடி மாளிகை) என்பன இவரால் அமைக்கப்பட்டதாகும்.

நிஸ்ஸங்கமல்ல மன்னனின் மரணத்தின் பின் கலிங்க மாகனின் (1197-1215) ஆட்சிக் காலத்தினுள் பொலன்னறுவையில் நிரந்தரமான சிம்மாசன உரிமைக்காக கலவரங்கள், யுத்தங்கள் நடைபெற்றன. ஓரிரு வருடங்கள் சில சமயங்களில் மாதக்கணக்கில் ஆட்சியாளர்கள் மாறிக் கொண்டிருந்த இந்த யுகத்தில் சாசன அபிவிருத்திக்கு அத்தியவசியமான அரச அனுசரணை கிடைக்கவில்லை. கல்யாணவதி, லீலாவதி போன்ற இராணிகளின் குறுங்கால ஆட்சியில் இடம்பெற்ற சாசன அனுசரணையொன்று பற்றிய மட்டும் விபரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலப்பெயர்ச்சிக் காலம் 1215 - 1236

நிஸ்ஸங்கமல்லனின் ஆட்சிக் காலத்தின் இறுதியில் இருந்து அதாவது 1197 இருந்து அதிர்ந்து கொண்டிருந்த பொலன்னறுவை இராசதானி 1215இல் மாகனின் ஆக்கிரமிப்பில் சம்பூரணமாக வீழ்ச்சியடைந்தது. ஆகையால் 1215வது வருடம் இலங்கை வரலாற்றுப் போக்கில் அதிவிசேட தடைக்கல்லாக கணிக்கப்படுகின்றது.

பிரதானமாக இலங்கையின் வரண்ட வலயப் பகுதிகளில், 1700 வருடங்கள் வரையிலான காலம்வரை தொடர்ச்சியாக வளர்ச்சி கண்ட நீர்ப்பாசனத்தை அடிப்படையாக கொண்ட கமத் தொழிலை அடியொட்டி இருந்த நாகரீகத்தை அந்த சொந்த பூமியில் இருந்து முற்றாக விரட்டி விட்ட சாபக்கேடு 1215 மாகனின் ஆக்கிரமிப்பாகும். 18 வருடங்களாகத் தலை நகரில் நிலவிய அரசியல் கலவரங்கள் காரணமாக ஆட்டம் கண்டிருந்த இராஜதந்திர திட்டம்., பொருளாதாரத் திட்டம், சமூகத்திட்டம், சாசனத் திட்டம் 1215இல் நடைபெற்ற மாக ஆக்கிரமிப்பின் பின்னர் சம்பூரணமாக வீழ்ச்சியடைந்தது.

மலையாள, கேரளப் பகுதிகளின் கூலிப் படையினர் 24000 பேர்களை உள்ளடக்கிய பட்டாளத்துடன் வந்த ''மாகன் என்பவன் 1215இல் பொலன்னறுவையைக் கைப்பற்றினான். மாகனின் கடுமையான இம்சை நடவடிக்கைகள் எல்லா வம்சக் கதைகளினதும் உணர்வைத் தூண்டக் கூடிய முறையில் விபரிக்கப்பட்டுள்ளன. வம்சக் கதைகளின்படி மாகனின் படை நாங்கள் கேரள மல்லர்கள் என்று இடத்திற்கிடம் தற்பெருமை பேசிக் கொண்டும் ஏசிக் கொண்டும் மக்களின் சால்வைகள், உத்தரியங்கள் போன்ற ஆபரணங்களை சூறையாடினார்கள். மாகப் படைகள் சமூக பரம்பரையாகப் போற்றி வந்த குல அடிப்படையிலான சம்பிரதாயங்களைத் தூக்கி எறிந்தார்கள். மக்களின் கை, கால்களை வெட்டியும் முறித்தும் விட்டார்கள். பல மாட மாளிகைகளைத் தகர்த்தார்கள். மாடுகளைத் தம் வசமாக்கி கட்டி வைத்துக் கொண்டனர். பெரிய செல்வந்தர்களைக் கட்டி வைத்து சித்திரவதை செய்தது மட்டுமல்லாது அவர்கள் வசமிருந்த செல்வத்தை சூறையாடினார்கள். மாகனின் படையினர் சமூகத்தை முழுமையாகச் சீர்குலைத்தனர். மக்கள் மனங்களில் மூட நம்பிக்கைகளைப் புகுத்தி கலப்பற்ற நான்கு குலங்களை கலப்புக்குள்ளாக்கினார்கள். சிங்கள மக்களின் நில புலன்கள் வயல்கள், வீடுகள், மாடுகள், எருமைகள், வேலைக்காரர்கள் போன்ற இவை எல்லாவற்றையும் கேரளப் படையினருக்கு அளித்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகானாலும் அவனது படையினரினாலும் அதிகளவு துன்பத்திற்குள்ளானவர்கள் பெரும்பாலும் சமூகத்தின் பிரபுக்கள் நிலையில் மதிக்கப்பட்டவர்களாவர். இதுவரை அரசர்கள், முதன் மந்திரிகள், நீங்கலாக நிலபுலன்கள், பயிர்கள், வேலையாட்கள், பரிவாரங்களுடன் இருந்த பிரதான சமூக வகுப்பினராகக் கருதப்பட்டவர்கள் இந்த உயர் குலத் தலைவர்களாகும். நிஸ்ஸங்கமல்லன் காலத்தில் இருந்து இவர்கள் தொந்தரவுகள் துன்பங்களுக்குட்பட்டு இருந்தார்கள். மாகன் இவர்கள் மீது கொண்ட கடுமையான முரட்டு சுபாவ கொள்கைகள் காரணமாக சமூகக் கட்டமைப்பு முழுமையாக வீழ்ச்சி கண்டது. இடையூறுகள், தொல்லைகள் காரணமாக இவர்கள் தமது பாரம்பரிய நில புலன்களை கைவிட்டு விட்டு தென்மேற்கு, மலைநாடு மற்றும் உருகுணைப் பகுதிகளுக்கு புலம் பெயர்ந்தார்கள். மேற்குறிக்கப்பட்ட நீர்ப்பாசனங்களைப் பரிபாலிக்க தோள்கொடுத்து நின்றவர்கள் இந்த உயர்குலப் பிரபுக்களாகும். இவர்களின் நில புலன்களை பயிர்செய்து கொண்டிருந்த கிராமிய மக்களின் ஒரு பகுதியினர் உடைந்த நீர்ப்பாசனக் கூறுகளை உரிய காலத்தில் புனரமைக்காமையால் தமது விளைச்சல் நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்ள முடியாத நிலையிலும் அடுத்த வகையில் பாரம்பரியமனதாக தமக்குப் பாதுகாப்பு மற்றும் சேவைகள், வசதிகள் செய்து கொடுத்துக் கொண்டிருந்த எசமானர்களை இழந்தமையால் ஆதரவற்றுப்போன இவர்கள் எசமான்கள், பிரபுக்கள் தலைவர்களுடன் தாமும் தமது நில புலன்களை விட்டு விட்டு தென்மேற்கு, மலைநாடு, உருகுணைப் பகுதிக்கு புலம் பெயர்ந்தனர். மாகனுடைய அடாவடித்தனமான நடவடிக்கைகள் காரணமாக சமூகத்தில் உயர் அந்தஸ்த்தில் மதிக்கப்பட்ட மக்கள் தொகுதியினர் அடைந்த உடல், உள ஊறுகளை விடவும் கடுமையான தாக்கத்திற்குட்பட்டது புத்த சாசனமெனலாம். இவர்கள் பௌத்த சிலையகங்களை உடைத்துத் தகர்த்தார்கள். அதிகமான தாதுகோபங்களை சிதைத்தார்கள். பிக்குகளுக்கான விகாரைகளில் தாம் குடியேறினார்கள். பக்தர்களையும், அவர்களது பிள்ளைகளையும் அடித்து தைத்தார்கள். அதிகமான சமய நூல்களில் பக்கங்களைப் பெயர்த்து கண்ட, கண்ட இடங்களில் வீசி எறிந்தனர். முன்னைய அரசர்கள் உயிராகப் போற்றிய ''ரத்னாவலி' போன்ற தாதுகர்ப்பங்களைச் சிதைத்து அதில் இருந்த புத்த பெருமானின் சர்வஞான தாதுக்களை ஒழித்துக்காட்டினார்கள். விகாரைகள், பிரிவெனாக்கள், தேவாலயங்கள் போன்றவற்றை மல்லர்களின் வாசஸ்த் தலங்களாக மாற்றினார்கள். புத்த, தம்மசங்க போன்ற பிக்குமார்களுக்குரிய செல்வங்களைச் சூறையாடினார்கள் என மாகனின் கொடூரச் செயல்களை வம்சக் கதைகள் விவரிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகா பராக்கிரமபாகு மன்னனின் அளவுகடந்த அர்ப்பணிப்புக்கள், அனுசரணைகள் காரணமாக பொலன்னறுவை தலைநகரச் சூழலில் நன்கு வளர்ச்சியடைந்திருந்த சமய தாபனங்கள் மாகனின் அடவாடித்தனங்கள் மாகனின் காரணமாக அழிந்தொழிந்தன. பிக்குமார்கள் தலை நகரத்தில் மாத்திரமன்றித் தூரப் பிரதேசங்களில் நிலைகொண்டிருந்த விகாரைகள் ஸ்த்தூபிகளின் பரிபாலனத்தைத் தொடர்ந்து நடாத்திச் செல்வதற்காக அர்ப்பணிக்கப்பட்டிருந்த சமய சாசனத்திற்குச் சொந்தமான வயல் நிலங்கள் மற்றும் கிராமிய தோட்ட நிலங்களைக் கைவிட்டு உயிரைப் பாதுகாப்பதற்காக தென் மேற்கிற்கும் மலைநாட்டிற்கும் உருகுணைக்கும் குடி பெயர்ந்தனர். புத்த சாசனத்தின் பராமரிப்பிற்கென அர்ப்பணிக்கப்ட்டிருந்த ஊர்கள், வயல்கள், நிலங்கள் போன்றவற்றைக் கைவிட்டுச் சென்ற பிக்குமார்களுடன் அப்போது சேவைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேலையாட்களும் பாரம்பரிய விகாரைகள் ஊர்களைக் கைவிட்டு இடம் பெயர்ந்து சென்றனர்.

மாகனின் தொல்லைகளும் வதைகளும் சிங்கள பௌத்த மக்களுக்கு மாத்திரமன்றி இவர்களுடன் ஒன்றித்து வாழ்ந்த தமிழ், இந்து மக்களுக்கும் இவனது வெறிபிடித்த சமய அழிவு நடவடிக்கைகள் தாக்கத்தினை ஏற்படுத்தி இருக்கலாம். ஏனைய மதங்கள் மீது வெறுப்பு மனப்பான்மையைக் கொண்டிருந்த வீர சைவ என்ற தீவிரவாத சமயப் பிரிவினைச் சார்ந்தவன்தான் மாகன் என்பதற்கு பேராசிரியர் அமரதாச லியன கமகே என்பவர் காரணங்களை முன் வைக்கின்றார். வீர சைவ வாதிகள் வைதீக பக்தர்களான பிரமாணர் உட்பட சாதாரண இந்து பக்தர்களைக் கூட குரூரமாக இம்சைப்படுத்திய விபரங்களை பேராசிரியர் லியன கமகே அவர்கள் தமது மத்திய கால வரலாறு எனும் நூலில் சுட்டிக் காட்டுகின்றார். அப்போது பொலன்னறுவை, கந்தளாய் போன்ற பகுதிகளில் வாழ்ந்த இலங்கைத் தமிழர்களுக்கிடையே வைதீக வாதிகள் இருந்ததாக முன்னர் குறிப்பிட்டோம் அவர்களும் மாகனின் கொடுமையான சித்திரவதைகளுக்குட்பட்டிருப்பர் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. மாகனின் தொல்லைகள் காரணமாக தமது பாரம்பரிய நில புலன்களைக் கைவிட்டுச் சென்ற சிங்கள மக்களுடன் தமிழ், இந்து மக்களும் சேர்ந்து இடம் பெயர்ந்திருக்கலாம்.

வரண்ட வலயத்தில் பரவி வாழ்ந்த அமைச்சர்கள், மந்திரிமார்கள் போன்ற சன சமூகத் தலைவர்களும், ஏனைய மக்களும் ஆயிரக்கணக்கில் தமது சுய கிராமங்கள் நகரங்களைக் கைவிட்டு பாதுகாப்பின் நிமித்தம் பாதுகாப்பரண்களை நாடிச் சென்றதாக வம்சக் கதைகள் இயம்புகின்றன. மேலும் சில மக்கள் அடர்ந்த காடுகளுக்குள் இயற்கையான பாதுகாப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் வசதிகள் அமைந்த இடங்களில் வசித்தார்கள். இவ்வாறு ஆங்காங்கே அமைந்த வன்னி கிராமங்களின் தலைவர்கள் பின்னர் வன்னியர்கள் என அழைக்கப்பட்டனர்.

சில சிங்கள, தமிழ் மக்கள் மன்னார், யாழ்ப்பாணம், திருகோணமலை போன்ற ஆற்றுத் துறைகளை அண்மித்த பகுதிகளில் தங்கி மீன் பிடித் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டு தென் இந்தியத் துறைகளுடாக வர்த்தக ஈடுபாடுகளில் தொடர்பு கொண்டு வாழ்ந்தார்கள். மாகனின் ஆக்கிரமிப்பின் பின் பத்து அல்லது இருபது வருடங்கள் கழியும் போது இடைக்கிடை எஞ்சி நின்ற வன்னிக் கிராமங்கள், நில புலன்கள், கரையோரத் துறை முகங்கள் ஆகியன தவிர்ந்த ஏனைய முழு வரண்ட வலயப் பகுதிகளும் சன சஞ்சாரமற்ற பிரதேசங்களாகி அடர்ந்த காடுகளாகப் பரிமாற்றமடைந்தன.

1215இல் இருந்து 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் வரை 700 வருடங்களாக வரண்ட வலயம் மனித நடவடிக்கைகள் அற்ற அடர்ந்த காடுகளாக இருந்தமை அங்கிருந்த கல்வெட்டுக்கள், அப்பிரதேசம் பற்றிய வம்சக் கதைகள் அடங்கிய விபரங்கள் கிடைக்காமைக்கு காரணம் எனக் கூறலாம். 1215இல் இருந்து முழுமையாக கல்வெட்டுக்கள், வம்சக்கதைகள் அடங்கிய விபரங்கள் என்பன பௌத்த சாசன விபரங்கள் என்பன தென்மேற்கு ஈரவலயம் மற்றும் மலை நாட்டுப்பகுதிகளில் மாத்திரமே கிடைக்கக் கூடியதாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

மாகனுடைய சாசன அழிப்புப் பயங்கரவாதம் காரணமாக பொலன்னறுவையில் ஜேதவன விகாரையில் வசித்த தலைமைத் தேரர் எட்டு மூல நிறுவனத் (அஸ்ட மூல நிறுவனம்) தலைவர்களும் உள்ளிட்ட பிக்குமார்கள் தமது விகாரை மற்றும் கிராமங்களைக் கை விட்டு புத்தபெருமானின் தந்த தாது, பாத்திர தாதுக்களை எடுத்துக் கொண்டு அதனைக் கொத்மலையில் ஒளித்து வைத்து, பாதுகாப்பு நிமித்தம் மலை நாடு, உருகுணை மற்றும் தென்மேற்கு பிரதேசத்திற்கும் எடுத்துச் சென்றனர். சில தேரர்கள், மகா தேரர்கள் 11ஆம் நூற்றாண்டில் சோழ ஆக்கிரமிப்பின்போது செய்தது போன்று பர்மாவில் ராமஞ்ஞ தேசத்திற்கும் இந்தியாவிற்கும் எடுத்துச் சென்றனர்.

வலகம்பா காலத்தில் இருந்து 13 நூற்றாண்டு வரை பிக்குமாணவர் பரம்பரையில் இயங்கி வந்த பிரசித்தமான திம்புலாகல வனவாச பிக்குமார்கள் தமது ஆரணியங்களைக் கைவிட்டு விட்டு தென் மேற்குப் பிரதேசத்திற்குப் புலம் பெயர்ந்தனர். இவர்களுள் திம்புலாகல தீபங்கர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற தேரர் உட்பட முக்கிய பிக்குகள் குழுவொன்று யாப்பகுவையில் சுப என்ற சேனாதிபதியிடம் சென்றனர். இந்த பிக்குகள் குழுவிற்காக சுப சேனாதிபதி யாப்பகுவைக்கு அண்மையில் வலஸ்கல அல்லது அஸ்கிரியாவில் வன அமைதித்தளம் அமைத்துக் கொடுத்தான். தற்கால கண்டி அஸ்கிரி விகாரைப் பிக்கு பரம்பரையின் தோற்றம் இந்த யாப்பகுவ அஸ்கிரிய வன வாசப் பரம்பரையில் இருந்து ஆரம்பித்தது என்பது பின்னர் விளக்கப்படும். திம்புலாகலையை விட்டு வந்த பிக்குகள் இடையே அதிமுக்கிய குழுவான புத்தவங்ச வனரதன மகா தேரர் அதவெசி திம்புலாகல மேதங்கர மகாதேரர் உள்ளிட்ட பிரதான பிக்குமார் தம்பதெனிய வன்னி விஜயபாகுவிடம் வந்தார்கள்.

நீண்டகாலம் மகா வன்னித் தலைவராக இருந்த விஜயபாகு ஏனைய மகா வன்னியர்கள் பலரின் உதவிகளைப் பெற்று கிராமங்களில் இருந்த தென்னிந்திய ஆக்கிரமிப்பாளர்களை விரட்டி மாயாரட்டயை விடுதலையாக்கி ஆங்காங்கே பரந்து வாழ்ந்த பிக்குகளை தம்பதெனியவுக்கு அழைத்துக் கொண்டான்.

1215இல் மாகனின் ஆக்கிரமிப்பினால் 7 வருடங்கள் அளவிலான குறுகிய காலத்தினுள் தம்பதெனியாவை தலைமைப்பீடமாக்கி பிக்குகளை தம்மிடம் வளைத்துக் கொண்டு புத்த சாசனத்தின் பிரதான அனுசரணையாளனாக தம்மை ஆக்கிக் கொள்வதில் விஜயபாகு வெற்றி கண்டான். கி.பி 1222 ஆகும்போது சமகால சாசன ஆலோசனை பிரதம தலைமைப் பதவி வகித்த தேரர் காப்பாள மகா பிக்கு அவர்கள் தம்பதெனியில் விஜயபாகு அரசனிடம் வந்தடைந்திருந்தார். விஜயபாகு தமது பெயரில் தம்பதெனியாவில் கட்டிய விஜய சுந்தராராமைக்கு கி.பி 1222இல் உருகுணை, மாயா, பிகிட்டி என்ற முச்சிங்களப் பிரதேசத்திலும் இருந்த தேர, மஜ்ஜிம, நவக்க, சாமனேரர் என்ற எல்லா பிக்குகளையும் ஒன்று கூட்டி சங்ககாப்பாள மகாதேரரின் தலைமையில் பிக்குகளின் சம்மேளனமொன்று நடாத்தி அப்போது பிக்குகளிடையே நிலவிய பாரிய சிக்கலைத் தீர்த்து பிக்குகளை ஒற்றுமைப்படுத்தினான்.

கி.பி 1222இல் நடந்த இச்சம்மேளனத்திற்கு சங்ககாப்பாள மகாதேரர் தலைமை வகித்ததுடன் திம்புலாகலையில் இருந்து சமூகம் கொடுத்த புத்தவங்ஸ வனரதன மகாதேரர், அதெவெசி திம்புலாகல மேதங்கர மகா தேரர், வனவாச பிக்குகளின் தலைவராகவும் பங்கெடுத்துள்ளனர்.

மகாபராக்கிரமபாகு மன்னனின் அனுசரணையில் கி.பி 1165ல் நடந்த பிக்குமார் சம்மேளனத்தின் பின்னர் பிக்குகளின் நடத்தை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசாரங்கள் பற்றி கலந்துரையாடி ஏற்றுக் கொள்ளப்பட்டு விதந்துரைக்கப்பட்ட சட்டவரைவொன்று ஆக்கப்பட்டதாக 1265இல் தயாரிக்கப்பட்ட தம்பதெனி ஒழுக்க நெறிக் கோவை முன்னுரையொன்றில் குறிப்பிடப்படுகின்றது. ஆனால் இந்தக் கலந்துரையாடல் பத்திரம் தற்போது கிடைக்கப் பெறவில்லை. அதன் முன்னுரையில் குறிப்பிடப்படும் விபரங்களின்படி 1222 ஆகும்போது பிக்குமார் கிராமவாசா, வனவாசா என்ற இரு சமயப் பிரிவுகளாக மீண்டும் பிரிந்து இருந்தமை தெளிவாகின்றது. 1165இல் இடம்பெற்ற பராக்கிரமபாகு ஒழுக்கநெறிக் கோவையில் கிராமவாச, வனவாச பேதம் பிக்குமார்களிடம் காணப்படவில்லை எனக் குறிப்பிடுகின்றது. 1165 பௌத்த சமய முப் பிரிவுகளும் (நிகாய) ஒரே பிரிவாக இயங்கிய போதிலும் கால ஓட்டத்தில் பிக்குகள் மீளவும் கிராமவாசா, வனவாசா என்று தம்மிடையே பிளவுற்று வாழ்ந்தமை புலனாகின்றது.

அராஜகம் தலைவிரித்தாடிய அக்காலத்தில், பிக்குகள் தம்மிச்சைப்படி சுய யாப்புக்களைப் பின்பற்றியதால் அருகியிருந்த இவர்களது ஒழுக்க விழுமியங்கள், ஆசாரப் பணிகள் போன்றவற்றை மீள் நிலைக்குக் கொண்டு வருவதே 1222இல் இடம்பெற்ற தம்பதெனியா பிக்குகள் சம்மேளனத்தின் பிரதான நோக்கமாக அமைந்தது. இக்காலத்தில் நிலவிய கருத்து முரண்பாடுகள், சிக்கல்கள் இச்சம்மேளனத்தின் மூலம் இணக்கப்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டதாகக் கூறப்படுகின்றது. ‘‘கிராம வாசா’’ ‘‘வனவாசா’’, என்று அன்று நிலவிய இரு பிரிவுகளும் உத்தியோக பூர்வமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலையில் இம்முரண்பாடுகள் சிக்கல்கள் இணக்கப்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டிருக்கலாம் எனக் கருத முடியும்.

இக்காலத்தில் பௌத்த கலை ஞான நூல்கள் அழிவுற்று அருகிக் காணப்பட எதிரிகளின் வன்முறைகளே காரணமாகும். இந்த நிலைமை பிக்குகளாகத் துறவு பூணல், சமயக் கலை ஞானங்களைக் கற்றல் போன்றவைகளுக்கு முட்டுக்கட்டைகளாக அமைந்ததில் வியப்பில்லை. இதற்கான உடனடித் தீர்வுகள் அவசியப்பட்டன. இதற்காக விஜயபாகு மன்னன் துரிதமாக பதிவேடு செய்யக்கூடிய விற்பன்னர்களான பல்கலைஞான எழுத்தாளர்களை ஒன்று கூட்டி கிராமங்கள் தோறும் கூலிக்குப் புத்தகங்கள் எழுதுமாறு ஆணை பிறப்பித்து 84000 பொற்காசுகள் அற நோக்குப்பணிப் பணமாக அனுப்பியமையை பூஜாவலிய சிலாகித்துக் கூறுகின்றது. இவ்வாறு அதிக நூல்களை வெளியிட்டு தடையின்றி இயக்கிச் செல்வதற்கு பிக்குகளுக்கு வழங்கப்படும் நான்கு வகைப் பாவனைப் பொருள்கள் கிடைக்க வழியமைக்கப்பட்டன. கல்வி கற்பிக்கும் ஆற்றல் கொண்ட பிக்குமார் அத்தியாவசியத் தேவையாக இருந்தமையால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களை தயக்கமின்றி தமது மாளிகைக்கு விஜயம் செய்யுமாறு அழைப்பு விடுத்தான். அழைப்பினை ஏற்று சமூகம் கொடுத்த ஆயிரக்கணக்கான பிக்குகளுக்கு நாள் தோறும் அரச கொடை வழங்கிக் கௌரவித்தான். பிக்குகளின் சமய உரை (தெரபன) ஒழுக்காற்று உரை (நிசபன) இவைகளை செவிமடுத்த பின் தேரர் மகாதேரர் பதவிகளுக்கு பிக்குமார்களை நியமித்து அவர்களுக்கு எந்நாளும் தொடர்ந்து கிடைக்கக் கூடிய தானங்களுக்கு வழியமைத்தான்.

விஜயபாகு மன்னனின் சமயசாசன அனுசரணை அலுவல்கள் தம்பதெனியாவில் இருந்து தூரப் பிரதேசங்களுக்கும் பரவியது. தென்னிந்தியர் ஆக்கிரமிப்பாளர்களால் உடைத்து சிதைக்கப்பட்ட களனி மகா தாதுகோபுரத்தைக் கட்டி கோபுரக் கலசம் அணிவித்து சிதைந்த விகாரைகளைப் புனரமைத்தான். வத்தளையில் விஜயபாகு என்ற பெயரில் ரஜமகா விகாரையொன்று அமைத்து மாயா இராச்சியத்தில் அத்தனகல்ல விகாரை உள்ளிட்ட சிதைவடைந்த விகாரை தாது கோபங்களை புனர்நிர்மாணம் செய்தான். மாகனின் பயங்கரவாத காலத்தில் கொத்மலையில் ஒளித்து வைக்கப்பட்டிருந்த புனித தந்ததாது மற்றும் பாத்திர தாதுக்கள் என்பவற்றை ஊர்வலமாக (மகா பெரஹர) பெலிகலைக்குக் கொண்டு வந்து அதனை வைத்து விகாரையொன்றும் நிர்மாணித்தான்.

கி.பி 1222 தொட்டு சாசன அனுசரணைகளில் ஈடுபாடு கொண்டிருந்த விஜயபாகு மன்னன் உத்தியோகபூர்வமாக அபிஷேகம் பெற்று தம்பதெனிய மன்னனாக 1232இல் முடிசூட்டப்பட்டான். அப்போது முதுமை அடைந்திருந்த அரசன் தமது இறுதிக் காலத்தில் சங்ககாப்பாள மகாதேரர்கள் உள்ளிட்ட மகா தேரர்களுக்கு தமது மூத்த மகன் பராக்கிரமபாகு இளவரசனை ஒப்படைத்து அவர்கள் முன்னிலையில் வைத்து மகாதேரரையும் தந்த தாது, பாத்திர தாது, அரசு ஆகியவற்றைத் தமது மகனுக்கு ஒப்படைத்தான். கி.பி 1236இல் விஜயபாகு மன்னன் மரணமடைந்தான்.

இவ்வாறு நிஸ்ஸங்கமல்ல மன்னன் கால முடிவு வரை அதிர்ந்து கொண்டிருந்து. கி.பி 1215 மாகனின் ஆக்கிரமிப்பின் பின்னர் தமது சுய பூமியான வரண்ட வலயத்தில் இருந்து முழுமையாக விரட்டியடிக்கப்பட்டு நிர்க்கதியடைந்து தென்மேற்குப் பகுதிக்கு புலப் பெயர்ச்சியடைந்த சிங்கள நாகரீகத்திற்கு தம்பதெனியாவில் வழியமைத்துக் கொடுத்து அரச பரம்பரையொன்றை ஆரம்பித்து புதிய சாசன அமைப்பொன்றிற்கு அடித்தளமிட்டது 3ம் விஜயபாகு மன்னன் எனின் அது மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அடிப்படையில் அடுத்த மூன்று நூற்றாண்டுகளுக்குள் இலங்கையில் தென்மேற்கு ஈரவலயமும் மலை நாடும் அடங்கலான பிரதேசத்திற்குள் சமயஸ்தானங்கள் வளர்ச்சியடைந்து உறுதி பெற்ற பாங்கினை அடுத்து தலைப்பில் ஆராய்வோம்.

## அபிவிருத்திக் காலம் கி.பி. 1236-1415

கி.பி 1236 அரச பதவியேற்ற 2ஆம் பராக்கிரமபாகு மன்னன் தமது தகப்பன், மகாதேரர் முன்னிலையில் புனித தந்த தாது, பிக்குமார் அடங்கிய பௌத்த சாசனம் உள்ளிட்ட முக்கிய பொறுப்பைத் தன்னிடம் ஒப்படைத்ததிலிருந்தே செயற்படத் தொடங்கினான்.

அவனது ஆரம்ப நடவடிக்கையாக அமைந்தது தமது தகப்பனால் பெலிகல என்ற இடத்தில் வைக்கப்பட்டிருந்த புனித தந்ததாதுவையும் பாத்திர தாதுகளையும் தம்பதெனிக்குக் கொண்டு வந்தமையாகும். தம்பதெனியா அரச மாளிகைக்கு அண்மையில் நிர்மாணித்த தலதா மாளிகையில் தந்ததாதுக்களை வைத்து தமக்கு அன்னிய எதிரிகள் மூலம் உலக பௌத்த சாசனத்திற்கு சேவை செய்ய முடியுமாக இருந்தால் புத்தபெருமான் எழுந்தருளி அற்புதங்கள் செய்து காட்டும்படி சத்தியம் செய்ததாகக் கூறப்படுகின்றது. அப்போது புத்தபெருமான் ஆகாயத்தில் உயிரோட்டமான முறையில் எழுந்தருளி பொதுமக்களும் பிக்குகளும் பார்த்துக் கொண்டிருக்கும்போது ஆகாயத்தில் இருந்து இறங்கி மன்னனின் கூப்பிய இரு உள்ளங் கைகளுக்கும் உதயமாகியதாக பூஜாவலிய என்ற கிரந்தத்தில் குறிப்பிடப்படுகின்றது. பின்னர் புனித தந்ததாது பெறுமதிமிக்க பேழையொன்றில் வைக்கப்பட்டு தொடர்ந்து ஏழு நாட்கள் வரை புனித தலதாவிற்கான பூசை வழிபாட்டு விழாவொன்றும் நடைபெற்றது.

பிக்குமாரின் வாழ்க்கையை நன்கு நிலைபெறச் செய்வதற்காக அரசன் தன்னாலியன்ற நடவடிக்கைகள் எடுத்தான். பௌத்த சாசன உடைமைகளாக இருந்த ஊர்கள், நிலங்கள் ஆக்கிரமிப்புக் காலத்தில் தென்னிந்திய படையினால் சூறையாடப்பட்டிருந்தது. அரசன் முன்பு போன்று அரசியல் யாப்புக்கள் மூலம் அந்த ஊர்களையும், நிலங்களையும் தேரர்களுக்கும், பௌத்த சாசனத்திற்கும் சொந்தமாக ஒப்படைத்தான். இவ்வாறு ஒப்படைக்கப்பட்டவைகள் புத்த, தம்ம, சங்க என்ற மும்மணிகளுக்கும் சொந்தமான ஊர்களாகவும் நிலங்களாகவும் அமைந்தன. புத்த பிக்குமாருக்குரிய கிராமங்களுள் ஒன்றான வட்டனாபசக் கிராமம், தனிப்பட்ட முறையில் பிக்குகளுக்கு ஒப்படைக்கப்பட்ட தனியார் இடங்கள், விகாரைகளுக்கு ஒப்படைக்கப்பட்ட சமூகங்களுக்குச் சொந்தமான கிராமங்கள், பிரிவெனாக்களுக்கு ஒப்படைக்கப்பட்ட மூல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட கிராமங்களும் பிக்குகளுக்குச் சொந்தமாக அளிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படுகின்றன.

இங்கு குறிக்கப்படும் கிராமங்கள் பிக்குகள் கைவிட்டுச் செல்ல முன்னர் குறிப்பிட்ட வரண்ட வலயத்தில் அமைந்திருந்த கிராமங்கள் நிலங்கள் அல்ல. அது மாயாரட்டையில் இருந்து பகைவர்கள் வசமாகி இருந்த பௌத்த சாசனத்திற்குச் சொந்தமான கிராமங்கள் மற்றும் நிலங்களாகும். இந்தக் கிராமங்கள் நில புலன்கள் சட்டரீதியாக பிக்குமார்களுக்கு உரித்துடையதாக்கியமை காரணமாக பிக்குகளினதும் புனித தலங்களினதும் நிலவுகை நன்கு ஸ்திரமடைந்தது.

இலங்கையில் சமய அறிவுள்ள பிக்குகள் அரிதாக இருந்தமையாலும் உரிய நூல்களை படித்து முடிக்காதிருந்தமையாலும் தம்பதிவயில் (இந்தியா) இருந்து புத்தகங்களைக் கொண்டு வந்து நூற்றுக் கணக்கான பிக்குகளுக்கு சமய அறிவு வழங்கப்பட்டது. மூன்றாம் விஜயபாகு மன்னன் ஆரம்பித்த நூல்கள் எழுதும் அலுவல்களுக்காக இரண்டாம் பராக்கிரமபாகு மன்னனுடைய அனுசரணையும் கிடைத்தது. சங்க காப்பாள மகாதேரர் மரணமடைய அந்த இடத்திற்கு முன்பு நாம் குறிப்பிட்ட திம்புலாகல மேதங்கர மகாதேரர் பதவி நாமம் பெற்றார்கள். மன்னன் இவரது தலைமையில் ஒரு பிக்குவிற்கு ஒரு புத்தகம் என்ற அடிப்படையில் கணக்கிட்டு நூல்கள் எழுதியதாக குறிப்பிடப்படுகின்றது.

பிக்குகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும் இவர்களது சமயக் கலை ஞானங்களை மேலும் வளர்ச்சியடையச் செய்யவும் முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. 20 000 பிள்ளைகளுக்கு கல்வியூட்டி அவர்களை இளம் பிக்குகளாக்கியமை பற்றிக் குறிப்பிடப்படுகின்றது. சமஸ்கிருதம், பாளி, சிங்களம், பயின்ற பண்டிதர்களுக்கும் சம்பளம் கொடுக்கப்பட்டு இவர்கள் ஒவ்வொருவரிடமும் இளம் பிக்குகள் பத்துப் பேர்கள் வீதம் ஒப்படைக்கப்பட்டு கலை ஞானங்கள் வளர்க்கப்பட்டன.

தகப்பன் ஆற்றிய சேவையை விட தலை சிறந்த முறையில் உபசம்பதா (இளம்பிக்குகளை துறவுநிலைப்படுத்தும் மதச்சடங்கு) விழாக்களை நடாத்தி துறவினைப் பேணிக் கொள்ளும் பிக்குமார் தொகையை அதிகரிக்கச் செய்ய நடவடிக்கைகள் எடுத்தான். தமது மூன்றாம் ஆறாம் பதினோராம் இருபத்தோராம் வருடங்களில் இத்தகைய பன்னிரண்டு உபசம்பதா சடங்குகள் விழாக்கோலமாக நடந்தன.

''உப சம்பதா'' சடங்கு மன்னனதும் சமகால சிரேஷ்ட மகா தேரர் தலைவரினதும் கட்டாய பங்களிப்புடன் நடந்தேறியது. அகில இலங்கையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்ததும் ஆயிரக் கணக்கான பிக்குமார்கள் இவ்விழாவில் ஒன்று கூடுவர். அறுபது தூண்களைக் கொண்ட பிரதான மண்டபமொன்றும், அதனைச் சுற்றிலும் இன்னுமொரு மண்டபமும் அமைத்து அவைகளை பற்பல வஸ்திரங்களால் அலங்காரம் செய்து, பிக்குகளை அங்கு வரிசைப்படுத்தி பாரிய தான பூசை நடாத்தி இளம் பிக்குகளை உபசம்பதா என்ற சீலத்தில் வைத்தார்கள். இச்சந்தர்ப்பங்களில் மகா தேர நிறுவனத்தலைவர் அல்லது மூலகர்த்தா, பிரிவெனா தலைவர் போன்ற பதவி நாமங்கள் வழங்கப்பட்டன. மற்றைய நாள் மங்கல யானையின் உயரத்திற்கு கௌரவப் பொருள்கள் அர்ப்பணிக்கப்பட்டு பிக்குமார்களின் பரிகரணப் பொருள்கள் (பிரிகர) திரட்டப்பட்டு மகாதேரர் நிறுவனத் தலைவர் போன்ற பதவிப் பிரமாணங்களை அடைந்தோருக்கு இவைகள் வழங்கப்பட்டன. ஸ்தவீர நிஸமுக்த (ஆராமைக்கு வெளியே வசிப்பவர்கள்) மஹன மஹலு (முதுமை) பெவிதி (துறவறம் பூண்டவர்கள்) போன்ற நிலைமைகளில் இருந்த பிக்குகளுக்கு அடபிரிகர பிக்குகளுக்குத் தேவையான எட்டு வகைப் பரிகரணப் பொருள்கள் வழங்கி இவ்வாறான முறையில் ஏழு நாட்கள் வரை உபசம்பதா விழா நடைபெற்றது. மன்னன் தமது இளைய சகோதரனனான புவனேகபாகு என்ற இளவரசனை திரிபிடகத்தில் விசேட ஒழுக்க விழுமியங்களை பற்றி நிபுணத்துவமடையச் செய்ததுடன் இவன் மூலம் அதிகமான பிக்குகளுக்கு 'ஸ்தவீர' இணக்கப்பாட்டுச் சான்று வழங்கப்பட்டது.

இந்நாட்டில் சமயக்கல்வி பிக்குகளுக்குக் குறைவாக இருந்தமையால் சோழ நாட்டிற்கு அன்பளிப்புகளை அனுப்பி அங்கிருந்து தேவையான பிக்குகளை மன்னன் இங்கு வரவழைத்துக் கொண்டான். அன்று தாமிரலிங்க தேசம் என்று அழைக்கப்பட்ட தற்காலத் தாய்லாந்தின் தென் பிரதேசத்தில் வாழ்ந்த 1200 பிக்குகளுள் தர்மகீர்த்தி என்ற மகா தேரர் ஒருவர் பாத்திரமேந்தி ஐயமிடச் சென்ற வேளை அற்புதமான முறையில் தாமரை மலர்கள் மலர்ந்ததாக கேள்வியுற்ற மன்னன் தாமிரலிங்க நாட்டுக்கு அரச காணிக்கைகளும் சமய சம்பந்தமான காணிக்கைகளும் அனுப்பி தர்மகீர்த்தி தேரரரை தமது நாட்டிற்கழைத்து புத்தர்கள், சித்தர்களைக் கண்ட பான்மையில் தெளிவடைந்து, தேரர் அவர்களுக்கு உயிர் வாழும் காலம்வரை பணிவிடைகள், ஆசாரங்கள் செய்ததாக பூஜாவலிய கூறுகின்றது.

பலாபத்கல ஆரணியத்தில் ஆசிரமம் அமைத்து கிராமவாச, வனவாச என்ற பிரிவுகளில் இருபது பேர்கள் வீதம் தெரிவு செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமிரலிங்க தேசம் அல்லது தமலிங்கமுவையில் இருந்து இங்கு வந்த தர்மகீர்த்தி மகாதேரருடைய வழிகாட்டலுடன் வனவாசி பிக்குகள் வாழ்க்கை பற்றி விசேட பயிற்சி ஒன்று வழங்கப்பட்டது. இவ்வாறு பயிற்சி பெற்ற பிக்குகளுக்கு மன்னன் இந்நாட்டு பரிநிர்வாணமெய்திய புத்தர் போன்ற அவர்களை விரும்பி பணிக்கொடைகள் செய்தான். பிற்காலத்தில் மிகவும் பிரசித்தமடைந்த பலாபத்கல வனவாசி தேரர் பரம்பரையினர் தோற்றம் இவர்களில் இருந்தே ஆரம்பித்தது.

கட்டின பூசை சம்பிரதாய விதி முறைகள் ஒழுங்குப்படுத்தப்பட்டன. புத்தபெருமான் உயிர் வாழ்ந்த எண்பது வருடங்களும் அவரது எண்பது பெரிய சீடர்களதும் ஞாபகார்த்தமாக என்பது பெரிய கட்டின பூசைகள் நடாத்தப்பட்டதாக வம்சக் கதைகள் கூறுகின்றன. இலங்கையைத் தாயகமாகக் கொண்ட பெருந்தொகையான ஆண், பெண்களை ஒருங்கு கூட்டி பருத்தி நூல் நூற்றல், நெய்தல், சலவை செய்தல், ஆடை நிறமூட்டுதல் போன்ற அனைத்து நடவடிக்கைகளையும் ஒரே நாளில் முடித்து பல அர்ப்பணிப்புப் பொருட்களுடன் மகா தேரர் குழாம்களுக்கு கட்டின வஸ்த்திரங்களை ஒப்படைத்து இங்கு எண்பது பெரிய கட்டின பூசைகள் நடாத்தப்பட்டுள்ளன.

தம்பதெனி தலைநகருக்கு அண்மித்த பிரதேசங்களில் பிக்குமார்களினதும் பொதுவாக சாசனத்தின் சிறந்த உறுதிப்பாட்டிற்குமாக மன்னன் மேலே கூறப்பட்ட பல்வித நடவடிக்கைகள் எடுத்ததுடன் தலைநகரில் இருந்து தூரப் பிரதேசங்களுக்கும் தமது அனுசரணை அலுவல்களைப் பரவச் செய்துள்ளான்.

தம்பதெனியில் இருந்து (12.8 கி.மீற்றர்கள்) தூரத்தே அமைந்திருந்த ஸ்ரீவர்தனபுரம் இதில் ஒரு இடமாகும். இவ்விடம் மன்னனின் பிறந்த இடமாகக் குறிப்பிடப்படுகின்றது. தம்பதெனியாவில் இருந்து இந்த ஸ்ரீ வர்தனபுர வரை 12.8 கி. மீற்றர் தூரம் வரை நன்கு அலங்கரித்து பெரிய பெரஹெர (பவனி) வுடன் புனித தந்ததாது, பாத்திரதாது என்பவற்றைக் கொண்டுவந்து அங்கிருந்த விகாரையில் சிறப்புடன் வைத்து 7 நாட்கள் வரை தொடர்ச்சியாக பூசை உற்சவமொன்று நடாத்தப்பட்டது. அது ஸ்ரீ வர்தன பூசை என்று பிரசித்த மடைந்துள்ளது. அந்த விகாரையில் பராக்கிரமபாகு மன்னனின் பெயரில் பிரிவெனா ஒன்றமைக்கப்பட்டு அதற்கு கிராமங்களும், நில புலன்களும் அர்ப்பணிக்கப்பட்டன.

தனது இளைய சகோதரனான புவனேகபாகு இளவரசனின் மூலம் பெலிகலயில் பிரிவெனா ஒன்றும் விகாரையொன்றும் குருணாகலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகேந்திரபாகு என்ற பெயரில் பிரிவெனா ஒன்றும் விகாரையொன்றும் அமைக்கப்பட்டது. களனி விகாரையின் சிதைவடைந்திருந்த பல பகுதிகள் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு சைத்தியத்திற்கு அண்மித்த பகுதியில் ஆயிரம் தென்னை மரங்களுடனான தென்னந்தோப்பொன்று அமைக்கப்பட்டது. அத்தன கல்லையில் வட்டதாகையை மூன்று மாடிகளாக ஆக்கி தமது தகப்பனை தகனம் செய்த இடத்தில் பெரிய தாதுகோபுரம் ஒன்றினை நிர்மாணித்தான். அதில் எண்கோண சிலையகம் ஒன்றினையும் கட்டினான்.

பெந்தோட்டை கலபாத விகாரையில் தலதா மாளிகையில் மகா காசியப தேரரின் தந்த தாது வைப்பிடப்பட்டிருப்பதைக் கேள்வியுற்று பெரிய ஊர்வலத்துடன் பவனி சென்று அங்குள்ள தந்த தாதுவிற்குப் பூசைகள் வழிபாடுகள் செய்தான். தமக்கு மிகவும் சிநேகமாக இருந்த தேவ பிரதிராஜ என்ற அமைச்சர் மூலம் அந்த விகாரையின் பராமரிப்பிற்காகக் களுத்துறையில் இருந்து பெந்தோட்டை வரையிலான பிரதேசத்தில் பராக்கிரமபாகுவின் பெயரில் தென்னந்தோப்பு ஒன்றை அமைத்தான். தெவுந்தரை தேவாலயத்தை புனரமைப்பு செய்து அங்கு நந்தன என்ற பெயரில் பிரிவெனா ஒன்றமைத்து வருடாந்தம் எசல பெரஹெர நடாத்துமாறு ஆணை பிறப்பித்தான்.

கி.பி 1258 ஆகும் போது அரசனுடைய ஆரோக்கிய நிலை நலிவடைந்து சென்றமையால் தமக்காக தூரப் பிரதேசங்களில் சாசன அலுவல்களை நிறைவேற்றுமாறு தேவபிரதிராஜ அமைச்சரிடம் வேண்டினான். களனி, அத்தனகல்ல, தெவிநுவர போன்ற இடங்களில் மன்னன் தொடங்கி வைத்திருந்த சாசன அலுவல்கள் சாசனபிமானியான இந்த அமைச்சரினால் பூரணப்படுத்தப்பட்டது.

தேவ பிரதிராஜ அமைச்சர் கம்பளை நகருக்குச் சென்று, அங்கிருந்து சிவனொளி பாதமலைக்குச் செல்வதற்கு இருந்த பாதைகளில் பல இடங்களில் மரப் பாலங்கள் அமைத்து யானைகள் கூட செல்லக் கூடியவாறு பாதைகளை விசாலித்து அமைத்தான். பின்னர் சமன்தேவ மன்னனின் சிலையொன்று செய்து அதனை பெரிய பெரஹொர பவனி மூலம் சிவனொளி பாதமலையில் வைத்தான். அங்கு புனித பாதத்திற்கு நிழல் கொடுப்பதற்காக மண்டபமொன்று நிர்மாணித்து அதனை இரும்புச் சங்கிலியால் தாங்கி நிற்கச் செய்து தொடர்ந்து மூன்று நாட்கள் மண்டபத்தில் தங்கி இருந்து பூசைகள் நடாத்தச் செய்தான். 3ம் விஜயபாகு மன்னன் கி.பி. 1222ல் பிக்குமார் சம்மேளனமொன்று நடாத்தி பிக்குகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐக்கியப்படுத்தி கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்தமையை முன்பு குறிப்பிட்டோம் 2ஆம் பராக்கிரமபாகு காலத்திலும் பிக்குகள் ஒற்றுமையிழந்து ஒழுக்க விழுமியங்களில் ஈனமடைந்திருந்தமையையும் குறிப்பிட்டோம். இதன் நிமித்தம் இரண்டாம் பராக்கிரமபாகு மன்னன் கி.பி 1266ல் கிராமவாச, வனவாச என்ற இரண்டிலும், நிருவாக விடயங்களில் ஈடுபாடு கொண்ட பிக்குமார்களை தம்பதெனியவில் அமைந்திருக்கும் விஜய சுந்தராராமையில் ஒன்று கூட்டி அன்று உயர் தலைமைத் தேரராகப் பதவி வகித்த, திம்புலாகல மேதங்கர மகா தேரரின் தலைமையில் பிக்குமார் சம்மேளனத்தை ஒன்று கூட்டினான். இங்கு பிக்குகளுக்கு அவசியமாக இருக்க வேண்டிய தகைமைகளுக்கு தகுதி அற்றவர்களைப் பதவி இறக்கம் செய்து சாசனத்தைத் தூய்மைப்படுத்தி பிக்குமார் சம்மேளனத்தில் புதிய உடன்படிக்கையொன்றும் செய்தான். தம்பதெனிய உடன்படிக்கை என்ற பெயரில் இது பிரசித்தமடைந்துள்ளது.

பிக்குகளாகப் பதவி பெற இருக்க வேண்டிய தகைமைகளும் இளம் பிக்குகள் கட்டாயமாக கற்க வேண்டிய கிரந்தங்களும் ஒழுக வேண்டிய ஆசார தர்மங்களும் ஒழுக்கப் பண்புகளும் உபசம்பதா சமயச் சடங்கில் பாத்திரமாவதற்குத் தேவையான தகைமைகளும், புதிய மஜ்ஜிமதேர என்ற படிமுறை அந்தஸ்திற்கான தகைமைகளும் பிக்குகளின் அன்றாட கிரமமான கடமைகளும் பற்றி விபரமாக இவ்வுடன்படிக்கை யாப்பு அமைப்பில் உள்ளடக்கி கோவைப்படுத்தப்பட்டுள்ளது.

பிரதி உபகாரங்களை எதிர்பார்த்து இல்லற வாழ்வில் ஈடுபடுபாடு கொண்டுள்ள மக்களுடன் நெருங்கிய தொடர்புகள் வைத்து கொள்வதன் காரணமாக அன்றைய பிக்குகளின் ஒழுக்கப் பண்பாடுகள் இழிநிலை அடைந்திருந்தன. இது போன்ற நிலைமை மீள தொற்றிக் கொள்ளாதபடி சமயசார் யாப்புக்கள் சட்ட விதிமுறையாக்கப்பட்டன. உதாரணமாக உபாசக உபாசசைகளுக்கு சேவகம் செய்தல் தவிர்க்கப்பட்டுள்ளது. உபாசக, உபாசசைகளுக்கு குணக் குன்றுக் கொடைவள்ளல் என்ற சொற் பிரயோகங்கள் கையாண்டு கட்டியம் கூறி சிலாகித்துப் பேசி பிரதியாக இலாபங்களை எதிர்பார்த்தல் தவிர்க்கப்பட்டுள்ளது. இல்லற வாழ்க்கையில் இருப்பவர்களுடைய குணத்தைப் பாராட்டும் சுலோகங்கள் எழுதிக் கொடுத்தல், உடற் கூற்று நோய்களுக்கு பேயாட்டங்கள், பலி, பூசை, யாகங்கள் போன்ற மாந்தீரிக வேலைகளில் ஈடுபடல் தவிர்க்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1266 ஆகும் போது இலங்கையின் பிக்குகள் சமூகம் விதித்திருந்த திட்டம் தம்பதெனிய உடன்படிக்கையில் தெளிவாகப் பிரதிபலிக்கின்றது. அது ஒரு பிரமிட்டின் அமைப்பில் கீழே இருந்து மேலே ஏறிச் சென்றும் பிக்குகள் இயக்க வலையமைப்பொன்றையும் கீழே இருந்து மேல் நோக்கி நகரும் கிரமமான அமைப்பில் பதவி உயர்வுகள் பெற்றுச் செல்லும் வலையமைப்பையும் உள்ளடக்கியதாகும். கீழ் மட்டத்தில் பல பிரிவெனாக்கள் அமைந்தன. இந்த பிரிவெனா ஆளுனர்கள் பிரிவெனாபதி என்று அழைக்கப்பட்டார்கள். பிரிவெனா முன்னர் நாம் குறிப்பிடப்பட்ட மூல அல்லது எட்டு நிறுவனங்களின் கட்டுப்பாட்டில் இருந்தது. நிறுவனத் தலைவர் நிறுவன அதிபதி என அழைக்கப்பட்டார்கள். இந்த எட்டு நிறுவனங்களின் பிக்குமார் கிராமவாச வனவாச என்று இரு பிரிவாக செயற்பட்டனர். கிராமவாச தலைவர் கிராமவாச, மகா தேரர் என்றும் வனவாச தலைவர் வன வாச மகாதேரர் என்றும் அழைக்கப்பட்டார்கள். பல் தலைவர்கள் சாசன அமைப்பு களவுகளுக்கு வழிவகுப்பதால் குறிப்பிடப்பட்ட மகாதேரர் இருவர் தவிர வேறு எவரும் மகாதேரர் என்று அழைக்கப்படலாகாது என்பது உடன்படிக்கையின் விசேட சரத்தாக அமைந்தது. அந்த மகாதேரர் இருவருக்கும் மேலாக அதாவது தேரர் அமைப்பாண்மையின் உச்சியில் சமகால சாசன அனுசாசகரான அதி தலைமைப் பிக்குவாக துரன்தர மகா பிக்கு செயற்பட்டார்.

நிறுவன அதிபதிகள் பிரிவெனா அதிபதிகளில் இருந்து தெரிவு செய்யப்பட்டார்கள். இங்கு நிறுவன அதிபதிகளுள் கிராம, வனவாச மகாதேரர் இருவர் நியமனம் பெற்றார்கள். மகாதேரர் பதவி வெற்றிடமாகும் போது அந்த மகா தேரர் இருவருள் ஒருவர் அப்பதவிக்கு நியமனம் பெற்றார். பிரிவொனாதிபதி, நிறுவன அதிபதி, மகாதேரர் மற்றும் பெரிய பிக்குகள் என்ற பதவிகள் அனைத்தும் முதலாவதாக பிக்கு இணக்கப்பாட்டுடன் தெரிவு செய்யப்பட்டு பின்னர் முச் சிங்களாதீஸ்வர மகா மன்னனின் அனுமதியுடன் அமுலாக்கப்பட்டது. உபசம்பதா சமய உற்சவங்களின் போது இந்த பதவிகள் மன்னனால் வழங்கப்பட்டு பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

மகாதேரர்கள் இருவரும் எட்டு மூல நிறுவன அதிபதிகளும் தலை நகரத்தை அண்மித்த விசேடமான உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தில் வசித்து வந்தனர். சாசனமும், தேரர்களும் பற்றிய நடவடிக்கைகளில் மன்னன் மகா தேரர்களின் அறிவுரையை நாடிச் சென்றுள்ளான். ஆகையால் இவர் சாசன அனுசாசகர் என்றும் அழைக்கப்பட்டுள்ளார். தலை நகரை அண்டி பிக்குமார்களின் நன்நிலைப்பாட்டிற்கு அரசன் இவ்வகையில் பல நடவடிக்கைகளை முன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தான். இந்த சாசன அமைப்பும் பதவி வழங்கும் முறைகளும் கோட்டை யுகம் வரை நீடித்து நிலவியதாகப் பின்வரும் பாடத்தில் அறிவிர்கள்.

2ஆம் பராக்கிரமபாகு மன்னன் தமது இறுதிக்காலத்தில் தமது தகப்பன் செய்தது போன்று மகா பிக்குகள் முன்னிலையில் தந்ததாதுவையும், பாத்திர தாதுவையும் மற்றும் பிக்குகளையும், அரசையும் கூட தமது மூத்த மகன் விஜயபாகு இளவரசனுக்கு ஒப்படைத்து தமக்கு செய்ய முடியாது போன சாசன அனுசரணை அனுபவங்களை நிறைவேற்றும்படி அவனிடம் வேண்டினான்.

பொலன்னறுவை இராசதானியில் அபிஷேக விழாவொன்று நடாத்துவதற்கும் மகாவலி கங்கையின் தகஸ்தொட்ட என்ற இடத்தில் உபசம்பதா சமய விழாவொன்று நடாத்தவும் 2ம் பராக்கிரமபாகு அரசனிடம் ஒரு பெருவிருப்பு இருந்தது. இது ஒரு வகையில் புதிய தலை நகரொன்றில் புதிதாக ஆரம்பித்த அரச பரம்பரையை நீண்டகால சிங்கள இராஜாவலி நூலில் இணைப் பதற்காகவும் புதிய தலை நகரமொன்றில் அண்மையில் புனருத்தாரணம் பெற்ற பிக்குமார்களை நீண்ட கால வரலாறு கொண்ட பிக்குகள் பரம்பரைக்கு இணைப்பதற்காகவும், ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்த சட்டபூர்வமான தேவைப்பாடாகவும் இது அமையலாம்.

தகப்பனால் ஒப்படைக்கப்பட்ட பணிகள் அவனது ஆட்சியின் இறுதி வருடமான 1270இல் விஜயபாகு இளவரசனால் ஆரம்பிக்கப்பட்டது. 1215-1270 வரையுள்ள காலகட்டத்தில் பொலன்னறுவை அடர்ந்த கானகங்களாக காட்சியளித்தது. விஜயபாகு இளவரசன் ஆயிரக்கணக்கான சேனைகள் சகிதம் கத்தி, மண்வெட்டி, கோடரி போன்ற கருவிகளையும் உணவு பானங்களையும் எடுத்துக் கொண்டு பொலன்னறுவைக்குச் சென்று காட்டினை அழித்து நகரை வெளிச்சமாக்கினான். அங்கிருந்த இலங்கா திலக போன்ற சிலையகங்களையும், விகாரைகள், ஆராமைகள் போன்றவற்றையும் மறு சீரமைத்தான். பின்னர் தம்பதெனியாவில் இருந்து பெரியதொரு ஊர்வலம் மூலம் புனித தந்த தாதுவை மரியாதையுடன் எடுத்து வந்து பொலன்னறுவையில் சிதைவடைந்திருந்த மாளிகைகளை புனரமைத்து அங்கே வைப்புச் செய்து மூன்று மாதங்களாக அங்கு விழாவெடுத்தான்.

அதன் பின்னர் தஹஸ்தொட உபசம்பதா உற்சவத்திற்காக பிக்குகளுக்கு ஆராமைகளையும் மண்டபங்களையும் நிர்மாணிததான், உபகரணங்கள் வழங்கினான். முழு இலங்கையிலும் இருந்து பிக்குமார்களை தஹஸ்தொட்டைக்கு ஒருங்கு கூட்டினான். இரண்டு போயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினங்கள் வரை மகாதேரர்களுக்கு பெரிய தானங்கள் வழங்கி விழாக்கள் நடாத்தியதுடன் அதிகமான பிக்குமார் அங்கு உபசம்பதாவினை அடைய வழிவகுத்தான். அது போன்றே நிறுவனத் தலைவர், மகா தேரர், மகா சாமி போன்ற பதவிகள் பெறத்தகுதி உள்ளோர்களுக்களித்து இவர்கள் உள்ளிட்ட மகா தேரர்க்கு பாரியளவு பாவனைப் பொருட்களை வழங்கினான். இது 1270ஆம் வருடம் நடந்தேறியதுடன் அது 2ஆம் பராக்கிரமபாகு யுகத்தின் இறுதி சாசனத் தொண்டாக அமைந்தது. இவ்வாறான புனித தந்ததாது விழாக்கள், உபசம்பதா சடங்குகள் நடாத்தி மகாதேரர் மற்றும் பொது மக்கள் ஆகியோர் மீள தம்பதெனியாவிற்கு விஜயம் செய்ய ஆவன செய்தான். இதன் காரணமாகப் பொலன்னறுவை திரும்பவும் காடுகளாக மாற்றம் பெற்றமை புலனாகின்றது. இவ்வாறு 1236 முதல் 1270 வரை 2ஆம் பராக்கிரமகுவின் ஆட்சிக் காலத்தினுள் தம்பதெனியா தலை நகருக்கு வெளியே களனி, அத்தனகல்ல, குருணாகல, பெலிகலை, வாகிரிகலை, கம்பளை, சிவனொளிபாத பிரதேசம், தெற்கில் தெவுந்தரை போன்ற தூர இடங்களிலும் சாசனத் தொண்டுகள் பரவலாயின.

1270இல் ஆட்சிபீடமேறிய போதிசத்துவ விஜயபாகுவின் ஆட்சி 1272 வரை தான் நீடித்தது. அரச கலவரமொன்றில் இவன் மரணமடைந்தான். பின்னர் இவனது தம்பி முதலாம் புவனேகபாகு இளவரசன் 1272இல் ஆட்சிப் பீடமேறினான். சிறிது காலத்தின் பின் 1284இல் யாப்பகுவையை தலைநகராக்கி அங்கு ஆட்சி செய்தான்.

முதலாம் புவனேகபாகு மன்னனும் முன்னைய மன்னர்களை அடியொட்டி திரிபிடக சமய நூலை எழுதி கற்றலுக்கு நூல் வசதிகளை எளிதுபடுத்தினான். வருடாந்தம் உபசம்பதா சடங்குவிழாக்கள் ஏற்பாடு செய்தான். யாப்பகுவையில் அலங்காரமான மாளிகை ஒன்று அமைத்து புனித தந்தாதுவை பிரதிஷ்டை செய்து சம்பிரதாயப்படி வணக்க வழிபாடுகள், பூசைகள் நடாத்தினான். இவனது ஆட்சிக் காலத்தின் இறுதிக் கட்டத்தில் அதாவது 1284ஆம் ஆண்டு இந்தியாவில் பாண்டிய மன்னனினால் அனுப்பப்பட்ட ஆரிய சக்கரவர்த்தி என்ற சேனாதிபதி யாப்பகுவையைச் சுற்றி வைப்புச்செய்யப்பட்ட தந்ததாது மற்றும் தலதா மாளிகைக்கு சொந்தமான பொக்கிஷங்கள் போன்றவற்றை பாண்டிய நாட்டிற்கு எடுத்துச் சென்றான். அதிலிருந்து 1287 வரையும் தொடர்ந்து மூன்று வருடங்களாக தந்ததாது பாண்டிய மன்னனின் பொறுப்பில் இருந்தது.

கி.பி 4ஆம் நூற்றாண்டில் முதன்முதலாக இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட தந்ததாது 1284 வரை தொடர்ந்து 8 நூற்றாண்டுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில்தான் இருந்தது அந்த புனித வஸ்த்து இலங்கைக்கு வெளியே இருந்த ஒரே சந்தர்ப்பம் இதுவாகும். புனித தந்தாது நிரந்தரமாக இலங்கையின் தலைநகரில் இருந்த விசேட தந்ததாது மண்டபத்தில் சமகால இலங்கையின் மன்னனின் வழிபாடுகள், போற்றுதல்கள் பெற்று திகழ்ந்தது.

குறைந்தது பொலன்னறுவை யுகத்தில் இருந்து, புனித தந்த தாது எவர் கைவசம் இருக்கின்றதோ அவர் முழு இலங்கைக்கும் தலைமை அரசனாவான் என்ற மனப்பாங்கு நாட்டு மக்களிடம் இருந்தது. வேறு வகையில் கூறின் புனித தந்த தாது இலங்கையின் அரசியல் அதி உன்னத தன்மையின் அடையாளச் சின்னமாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. இத்தகைய முக்கியத்துவமுடைய புனித தந்ததாதுவை 1284இல் இலங்கை மக்கள் இழந்தமை பற்றி வம்சக் கதைகள் சுருக்கமாகவே குறிப்பிட்டுள்ளன. இதற்கான காரணம் தெளிவாக இல்லை. இது இலங்கையின் சாசன வரலாற்றில் இன்று வரை இருள் சூழ்ந்த அதி விசேட நிகழ்வின் இரகசியமாகக் கருதப்படுகின்றது.

வம்சக் கதைகளில் வரும் ஒரே ஒரு தெளிவான விபரம் என்னவென்றால் மன்னனின் மகன் பராக்கிரமபாகு பாண்டிய நாட்டிற்குச் சென்று சமாதானமாக உரையாடி பாண்டிய மன்னனுக்குத் தெளிவுப்படுத்தி அவனிடமிருந்து புனித தந்த தாதுவை மீள எடுத்துக் கொண்டு வந்து பொலன்னறுவை தலதா மாளிகையில் பிரதிஷ்டை செய்தான். இது 1287 இல் நடந்திருக்கலாம். பொலன்னறுவையை ஐந்து வருட குறுகிய காலமே இவனுக்கு ஆட்சி செய்ய அவகாசம் கிடைத்தது. முதலாம் புவனேகபாகு மன்னனின் மகன் புவனேகபாகு இளவரசன் பொலன்னறுவைக்குச் சென்று மூன்றாம் பராக்கிரமபாகுவைத் தோற்கடித்து புனித தந்ததாதுவை மீண்டும் யாப்பகுவைக்கு கொண்டு வந்து 2ஆம் புவனேகபாகு என்ற பெயரில் 1292இல் யாப்பகுவையில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றான். 1215இன் பின்னர் இராசரட்டையில் பொலன்னறுவையை அண்மித்த பகுதிகளில் மனித நடவடிக்கைகள் பற்றி வம்சக் கதைகளில் குறிப்பிடப்படும் இரண்டாம் சந்தர்ப்பம் இதுவாகும். அதன் பின்னர் பொலன்னறுவை மீண்டும் காடாகத் தொடங்கியது.

9 வருடங்கள் கொண்ட ஆட்சிக் காலத்தினுள் 2ஆம் புவனேகபாகு மன்னன் பிக்குமார்களுக்கு வருடாந்தம் காவியுடையும் எட்டு பரிகரணப் பொருட்களையும் தானம் வழங்கினான். சாசனத்திற் புகுந்த பிக்குகள் மீள இல்லறத்தில் புகாதபடி ஒழுங்குபடுத்தி பல பிக்குகளுக்கு கற்பித்து 900 பேரை உருவாக்கியமை வம்சக்கதைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னைய மன்னர்களைப் போன்று வருடாந்தம் உபசம்பதா சமயச் சடங்கு விழாவினை நடாத்தி உற்சவத்தின் இறுதியில் மாதெர (தலைமை பிக்கு) அயதென (மூலத்தலைவர்) மாஹிமி (பெரிய பிக்கு) போன்ற பட்டங்களை வழங்கினான். 2ஆம் புவனேகபாகு காலத்தில் இவ்வாறு பெரிய தேரர் பதவி அடைந்தவர் பலாத்கல தர்மகீர்த்தி பெரிய தேரராவார் இவர் பிற் காலத்தில் அதிபிரசித்தியடைந்த பலாபத்கல தர்மகீர்த்தி பரம்பரையின் ஆரம்ப கர்த்தாவாகும்.

2ஆம் புவனேகபாகு மன்னன் தனது ஆட்சிக் காலத்தின் இறுதி வருடங்கள் இரண்டிற்குள் குருணாகலையைத் தனது தலைநகராக்கி ஆண்டதுடன் இவன் மரணமான பின் இவரது மகன் பராக்கிரமபாகு இளவரசன் 1302இல் 4ஆம் பராக்கிரமபாகு என்னும் பெயரில் குருணாகலையில் ஆட்சிப்பீடமேறினான். 25 வருடங்கள் கொண்ட இவனது ஆட்சிக்காலம் தென்மேற்கு அபிவிருத்தி யுகத்தின் 2ஆம் கட்டமாகக் கணிக்கப்படுகின்றது. 4ஆம் பராக்கிரமபாகு மன்னனின் ஆட்சிக்காலத்தில் புனித தந்ததாது முக்கியத்துவம் பெறுகின்றது. மன்னன் குருணாகல் தலை நகரை சித்திர வேலைப்பாடுகளில் அலங்கரித்து விசித்திரமான தலதா மாளிகை ஒன்றை அமைத்து புத்த பெருமானின் சிலையை அங்கு வைத்து நாள்தோறும் விசேட பூசைகள் செய்தான். எதிர்காலத்தில் பூசை விழாக்கள் எங்ஙனம் செய்யப்படல் வேண்டும் என்பது பற்றிய சம்பிரதாய விதிமுறைகளை அடக்கி ''தலதாசிறித'' என நூலொன்றை எழுதினான். தந்த தாதுவிற்காகவே பூசை வழிபாடுகள் நடாத்துதல் போன்ற சடங்குகளை நிரந்தரமாக நடாத்துவதற்கு தலதா மாளிகைக்கு கிராமங்கள், நிலபுலன்கள் தோட்ட நிலங்கள், பரிவாரங்களைக் கொண்ட மக்களையும் ஒப்படைத்தான்.

மன்னன் சோழ நாட்டில் இருந்து பன்மொழிப் புலமைவாய்ந்த விற்பன்னரான தர்க்க சமயஞான அறிவுடைய ஒரு தேரரை இந்நாட்டிற்கு கௌரவமாக வரவழைத்து தமது அரச ஆசானாக நியமித்து அவர்கள் மூலமாக அனைத்து ஜாதகக் கதைகளை கேட்டறிந்து கொண்டு 'பன்சிய பனஸ் ஜாதகய' (550 ஜாதகக் கதைகள்) சிங்களத்தில் மொழியாக்கம் செய்து மாணவ, மாணவிகளுக்கு பயில்வதற்கு எளிதுபடுத்தி, வாழையடி வாழையாக அதனை எடுத்துச் செல்வதற்கான ஏற்பாட்டை மேதங்கர என்ற தேரரிடம் ஒப்படைத்தான். அந்த மேதங்கர தேரருக்கு பராக்கிரமபாகு மன்னன் தமது பெயரில் பிரிவெனா ஒன்று நிர்மாணித்து அதன் பராமரிப்பிற்கு பரனகம, தெம்பிலிஹெல, தெல்மட, மொரவக்க போன்ற ஊர்களை அர்ப்பணித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்காம் பராக்கிரமபாகு மன்னனின் சாசன அனுசரணை அலுவல்களை தென் பகுதியிலும் விஸ்த்தரித்தான். முன்னர் விஜயபாகு மன்னனால் நிர்மாணிக்கப்பட்ட தொட்டகமுவ விகாரையில் இருந்த நாற்பது முழ (ஒரு முழம் ஏறத்தாழ 1½ அடி) தீக பாஸாதய (பெரிய கட்டடம்) அப்போது சிதைவடைந்து இருந்தமையால் மன்னன் அதனை முப்பது முழ உயர்த்திற்கு இரண்டு மாடிகளாக்கி சித்திர வேலைப்பாடுகளாலும் விசித்திரப்படுத்தினான். அப்போது பிரிவெனாபீட அதிபதியாக இருந்த காயசத்தி தேரருக்கு இதனை ஒப்படைத்தான். ஜின் கங்கை ஆற்றுக் கரையில் அமைந்திருந்த பல்லே கமவிலும் தொட்டகமுவையிலும் 5000 மரங்களைக் கொண்ட தென்னந் தோப்பொன்றும் அமைத்து தொட்டகமுவ விஜயபா பிரிவெனாவுக்கு ஒப்படைத்தான்.

தெவுந்தர 'தீகசைத்திய' என்ற பெயரில் இரண்டு மாடி சிலையகமொன்றைக் கட்டுவித்து கெட்டமான என்ற ஊரை புத்தபெருமானின் சிலைக்கு உரிமையாக்கி அர்ப்பணித்தான். வெலிகம விகாரையில் பராக்கிரமபாகு என்ற பெயரில் இரண்டு மாடிக் கட்டிடமமைத்து ''தீகபாசாதய'' (நீண்டபெரிய கட்டடம்) ஒன்று அமைத்து அந்த விகாரைக்கு ''எல்கிரிய என்ற '' பெயருடைய பயிர் வளம் கொண்ட கிராமத்தை அர்ப்பணித்தான்.

இன்றுள்ள களுத்துறை மாவட்டத்தில் றைகமவுக்கு அண்மையில் விதாகம ஸ்ரீ கணானந்த பிரிவெனா மற்றும் விகாரைகளை மேற்கூறப்பட்ட சோழ மகா தேரருக்கு ஒப்படைத்தான். மாயாதுனு ரட்டை (இன்றைய 7 கோரளை) அழுத் நுவர தேவாலயத்தை முன்னேற்றி உபுல்வன் தெய்வத்தின் சிலையொன்றை அங்கு நிறுத்தி பெரிய பூசை வழிபாடுகள் நடாத்தினான்.

நான்காம் பராக்கிரமபாகு காலத்தில் முக்கிய நிகழ்வாக கண்டி அஸ்கிரி விகாரையின் தோற்றத்தினைக் குறிப்பிடலாம். அஸ்கிரி ஓலைச் சுவடிகளில் குறிப்பிடப்படுவது போன்று மன்னன் தமது மருமகனான சிரிவர்தன என்ற படைத்தளபதி மூலம் அப்போதிருந்த கட்டுபுளு நகர் என்று வழங்கப்பட்ட செங்கடகல மக நுவரயைக் குறுக்கறுத்து வீதி எல்லை மதில்களைக் கட்டுவித்தான். பின்னர் அவன் செங்கடகல நுவர வனவாசி பிக்குகளுக்கு உகந்தவாறு செங்கடகலையில் விகாரையொன்று நிர்மாணித்தான். இந்த விகாரையில் வசிப்பதற்காக பிக்குகளை பெற்றுத் தரும்படி மன்னன் அப்போது மகா தேரராகப் பதவி வகித்த பலாபத்கல தர்மகீர்த்தி மகா தேரரிடம் வேண்டினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் யாப்பகுவை வலஸ்கல அல்லது அஸ்கிரி விகாரையில் வசித்த பிக்குகளில் தம்பதெனிய வனரதன தேரசாமியின் தலைமையில் நிசமுக்த மீகஸ்வெவ மேதங்கர ஹிரிபிட்டிய காஸியப்ப, கொன்கஸ் வெவ தர்ம கீர்த்தி, வலஸ்வெவ உபதிஸ்ஸ போன்ற ஐந்து தேரர்களுடனும் வேரவெல கோலித்த என்ற இளம் பிக்குகளுடனும் சேர்த்து சங்க இணக்கப்பாட்டுச் சபையினால் தெரிவு செய்யப்பட்டார்கள். மன்னன் இந்த ஆறு பேரையும் பெரிய பெரஹரா ஊர்வலம் மூலம் யாப்பகுவையில் இருந்து குருணாகலைக்கும் அங்கிருந்து செங்கடகலைக்கும் அழைத்து சென்று புதிய 'செனசுன்' விகாரையை அர்ப்பணித்தான். இவ்வாறு யாப்பகுவையின் பிக்கு மார்களில் ஆரம்பித்து. கண்டி விகாரையும் இதன் பின் அஸ்கிரி விகாரையென பிரசித்தமடைந்தது.

அஸ்கிரி விகாரையின் பாரமரிப்பிற்காக சிவனொளிபாத மலையில் இருந்து ஈட்டும் இலாபத்தில் வருடாந்தம் சீவர (காவி உடை) தானமும் மாபனா வதுர என்ற ஊரில் பரிவார மக்களையும் நவகொல கமுவையிலிருந்து அரசுக்குக் கிடைக்கும் காணிக்கைகளையுயும் வழங்குமாறு அரச முத்திரையிடப்பட்ட ஆணைப் பத்திரமொன்று ஒப்படைக்கப்பட்டு, விகாரையின் நிலவுகை உறுதிப்படுத்தப்பட்டது. இது 1312இல் வெசாக் முழுமதி போயா தினத்தன்று இடம்பெற்றது.

நான்காம் பரராக்கிரமபாகு காலத்தின் இறுதி அரைப்பகுதியில் பலாபத்கல தர்மகீர்த்தி தேரரின் மரணத்தின் பின் அந்த உன்னத தேரர் தலைமைப் பதவிக்கு வில்கம்முல மகாதேரர் நியமிக்கப்பட்டார். இதில் இருந்து மகா தேரர் பதவி சங்கராஜா என்று அழைக்கப்பட்டுள்ளது. மகாதேரர் உட்பட எட்டு நிறுவனத் தலைவர்களும் மன்னனின் அனுசரணைகள் பெற்றனர். இத்தேரர்கள் தலை நகரச் சூழலில் வாழும் வாய்ப்பினையும் சமகாலத்தில் பெற்றனர். இச்சம்பிரதாயம் பொலன்னறுவைக் காலத்தினைப் போன்றே தம்பதெனிய, யாப்பகுவ, குருணாகலை யுகங்களில் கூட தொடர்ந்து நிலவி வந்தமை குறிப்பிடத்தக்கது. 1326 அளவில் போதா மாபானன்தே என்பவனது கலகத்தைக் காரணமாக வைத்து குருணாகலை இராசதானியும் நான்காம் பராக்கிரமபாகு ஆட்சியின்போது முடிவுக்கு வந்ததாகவும் முன்னர் குறிப்பிட்டோம். கம்பளை காலத்தில் (கி.பி 1341 - 1412) மலை நாடு, விசேடமான பகுதியை அண்மிய பகுதிகளில் சாசன நிறுவனங்களின் வளர்ச்சி முன்னேற்றம் கண்டது. குருணாகலை இராச்சியத்தின் வீழ்ச்சிக்கு காரணமாக இருந்த போதா மாபானனுடைய கிளர்ச்சியின்போது தலைநகரான குருணாகலையில் இருந்து தப்பிச் சென்றதாக குறிப்பிடப்படுகின்றது. அவ்வமயம் இலங்கையின் சங்கராஜ (தேர தலைவர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவியை வகித்து குருணாகலையில் வாழ்ந்த சாகித்திய வில்கம்முல மகாதேரர் 1344 ஆகும் போது கீர்த்திசிறி மேவன் களனி விகாரைக்கு வந்து இருந்தமை இதனாலாக இருக்க வேண்டுமெனக் குறிப்பிடுகின்றார். இவர் நிஸ்ஸங்க அழகக் கோண போன்ற மந்திரிகளின் உதவியினூடாக அந்த விகாரையைத் திருத்தியமைத்து தம்வசமிருந்த ஊர்கள், நில புலன்கள், பரிவார மக்கள் சகிதம் களனி விகாரையின் போதிக்கு அர்ப்பணித்து, அந்த விகாரையில் வாழ்ந்ததற்கான சான்றுகள் கித்சிறிமேவனின் கல்வெட்டு மூலம் வெளிப்படுகின்றது.

இச்சமயத்தில் சீல வங்ச தம்மகித்தி மகா தேரர் கம்பளைச் சூழலில் சமய புனிதஸ்தலங்களை முன்னேற்றும் பணியில் ஈடுபாடு கொண்டிருந்தார். இவர் சில காலம் தென் இந்தியாவில் ஆந்திர தேச அமராவதியில் (தன்னிய கடக) என்ற விகாரையை முன்னேற்றமடையச் செய்து கொண்டு, அங்கிருந்தபோது தமக்கு அறிமுகமாகிய கட்டடக் கலை நிபுணர்கள், கலைஞர்கள் குழுவொன்றுடன் மீள இலங்கைக்கு விஜயம் செய்து இவர்களைக் கொண்டு கடலாதெனியாவில் நவீன மயமான விகாரையொன்றைக் கட்டுவித்தார். அங்கு சமவெளிப் பாறை மேல் மூன்று மாடிகளைக் கொண்ட கல்லால் செதுக்கப்பட்ட சிலையகம் ஒன்றையும் நாற்திசை முகம் நோக்கி இருக்கும் சிலையகங்கள் நான்கினைக் கொண்ட தாதுகோபுரம் ஒன்றையும் குறுஞ்சுவரைக் கொண்ட விகாரைகள் நான்கினைக் உள்ளடக்கியதாக அமைக்கப்பட்ட இந்த விகாரை 'சத்தம்மாதிலக' என்ற பெயரில் பிரபல்யமாகியது.

தளபதி சேனாலங்காதிகார இந்த இந்தியக் கட்டடக்கலை நிபுணர்களைக் கொண்டு கடலாதெனிய விகாரைக்கு இரண்டு மைல்கள் வரையான தூரத்தில் கற்சமவெளி மீது லங்காதிலக்க விகாரையை அமைத்ததும் இக்காலகட்டத்திலாகும். 1344 ஆகும்போது இந்த இரு விகாரைகளின் நிர்மாண வேலைகள் பூர்த்தியடைந்தன. லங்காதிலக விகாரையை நிர்மாணிக்கும்போது முதலியார்மார்கள் சிங்கள தமிழ் பட்டாளங்கள், மகா தேரர்கள் ஆகியோரைக் கலந்து கொள்ளச் செய்ததாகக் கூறப்படுகின்றது. கல்வெட்டுக்களின் படி இதற்காக செலவிடப்பட்ட மொத்தச் செலவு 1 கோடியே 60 இலட்சம் தங்க நாணயங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. விகாரையின் பராமரிப்பிற்கு சேனாலங்காதிகார செனவிரத் அவர்கள் உள்ளிட்ட பிரபுக்களினால் நில புலன்களும் பரிவார மக்களும் அர்ப்பணிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

சேனாலங்காதிகார செனவிரத் அவர்கள் தலைநகரிற்கு வெளியே விசேடமாக தென் இலங்கையின் புண்ணியஸ்தலங்களை முன்னேற்றினான். அவன் தெவி நுவரையில் மூன்று மாடிச் சிலையகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றையும் வெலிகமயில் அக்போ விகாரை சிலையகம் ஒன்றையும் கட்டுவித்தான். கீர்த்தி சிறி மேவன் களனி விகாரையில் தங்கி இருந்த சாகித்திய வில்கம்முல சங்கர ராஜ மகாதேரர்களின் மறைவின் பின் 1351 ஆகும்போது தெவனகல வனரத்ன மகாதேரர் உயர் சங்கராஜ பதவிக்கு நியமனம் பெற்றிருந்தார். 1326 இன் பின் நீண்ட காலம் செல்லும் வரை உறுதியான தலைநகரம், உறுதியான ஆட்சியாளர் இல்லாதிருந்தமையால் சங்க சாசனத்தில் உரிய நிர்வாகம் ஒழுங்காக நடக்கவில்லை. அதனால் அதிகமான பிக்குகள் ஒழுக்கத்தில் வீழ்ச்சியடைந்து தம் எண்ணப்படி தெரிகின்றது. இதனால் நான்காம் புவனேகபாகு அரச அனுசரணையுடன் சேனாலங்காதிகார செனரத், தெவனகல மகா ரதன தேரர் சங்கராஜ, போன்றோரின் தலைமையில் 1351ஆம் வருடம் சாசன மறுசீராக்கம் ஒன்று செய்தான்.

நான்காம் புவனேகபாகு மன்னன் மரணமடைய அவனது சகோதரன் ஐந்தாம் பராக்கிரமபாகு சிம்மாசனமேறி 1359இல் கம்பளையில் இடம்பெற்ற அரசியல் கிளர்ச்சியின் பின்னர் பதவியிறக்கப்பட்டு மூன்றாம் விக்கிரமபாகு அரச பதவிக்கு நியமனம் பெற்றதாக முன்னர் குறிப்பிட்டோம்.

1351இல் கம்பளையில் இடம்பெற்ற சாசன மறுசீராக்கத்தின்போது தலைமை வகித்த தெவனகல வனரதன மகா தேரர் பற்றிய எந்த விபரங்களும் கிடைக்கவில்லை. இலங்கை வனவாசி பரம்பரையில் மகாசாமி தலைமைத் தேரர் ஒருவர் பர்மாவின் ராமஞ்ஞ தேசத்தில் இருந்து அரசனின் அனுசரணை பெற்று முக்திம என்ற நகரில் ‘உதும்பரா’ மகாசாமி என்ற பெயரில் பிரசித்தமடைந்து இருந்ததாகவும் அவரது புகழ் அண்மை நாடான சீயமில் (தாய்லாந்து) பரவியதாகவும், அங்கு லிதய்ய மன்னனின் அழைப்பின் பேரில் அவர் சுகோத நகருக்கு வந்ததாகவும் சீயம் வம்சக் கதைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. லிதய்ய, மன்னன் உதும்பர மகாசாமியின் கீழ் துறவறம் பூண்டதாகவும் பின்னர் மன்னன் சுகோதய நகருக்கு மேற்குப் பகுதியில் அம்பவனய என்ற வனவாசி ஆரண்யம் அமைத்து அவரை அங்கு வசிக்கச் செய்ததாகவும் அந்த இடத்தில் கிடைக்கப்பெற்ற கல்வெட்டொன்று குறிப்பிடுகின்றது. இந்த சிங்கள இன மகாசாமி சங்கத்தலைவர் ஆக இருந்தமையால் மத்திய சீயமில் சுகோதயத்திலும் வட சீயமில் சியாங்மாய் நகரிலும் சிங்கள பிக்கு சாசனம் பரவியதுடன் சிங்கள சங்க என்ற பெயரில் பிக்குகள் சமயப் பிரிவு (நிகாய) அந்நாட்டில் உதயமாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த சங்க ராஜ மகா பிக்கு 1351 கம்பளை சாசன மறு சீராக்கத்தில் தலைமை வகித்த தெவனகல வனரதன மகா தேரர் ஆக இருக்க இடமிருக்கின்றது. 1359இல் கம்பளையில் நடந்த அரசியல் மாற்றத்தினால் அவர் ராமஞ்ஞ தேசத்திற்கு சென்று அங்கு சிறிது காலம் வசித்து பின்னர் சியம் நாட்டின் சுகோதய மன்னனின் அழைப்பின் பேரில் 1361இல் சுகோதேய நகரிற்கு வந்து இலங்கையின் சாசன சம்பிரதாயங்களை அங்கு நிலை நிறுத்தி இருக்கலாம்.

சீயம் நாட்டின் சுகோதய மன்னன் அரச பரம்பரையில் முதலாவது அரசனின் பேரனான சிரத்தாராஜ சூலமுணி சிரிரதன லங்காதீப மகாசாமி என்ற சீயம் பிக்கு ஒருவர் இக்காலக்கட்டத்தில் கம்பளைக்கு வந்து பத்து வருடங்கள் தங்கி இருந்து திரும்ப சுகோதயாவுக்கு சென்றதாக அவர்கள் தமது வாழ்க்கைச் சரித்திரத்தில் உள்ளடக்கி எழுதியமை பற்றி சுகோதயத்தில் அமைந்துள்ள கல்வெட்டு ஒன்றின் மூலம் தெளிவாகின்றது. இந்நாட்டில் இருக்கும்போது கம்பளை தலைநகரில் தங்கியிருந்து அப்போது உடைந்து விழுந்திருந்த மகியங்கன சைத்தியத்தை புனருத்தாரணம் செய்து அனுராதபுர, பொலன்னறுவை புண்ணியஸ்தலங்களை வழிபாடு செய்ததாக இவர் பற்றித் தெளிவடைந்த இலங்கையர்கள் இவருக்கு போதிசத்துவர் ஒருவரைப் போன்று உபசரணைகள், கவனிப்புக்கள் செய்ததாகவும் புத்தபெருமான் தம்மிரு உள்ளங்கைகளுக்கும் எழுந்தருளிய பாக்கியம் இவர் அடைந்திருந்ததாகவும் இந்தக் கல்வெட்டில் மேலும் குறிப்பிடப்படுகின்றது. தம்மகித்தி என்ற பெயருடைய மற்றுமொர சீயம் நாட்டைச் சேர்ந்த தேரர் ஒருவர் இக் காலத்தில் கம்பளைக்கு வந்து சீலவங்ச தம்மகீர்த்தி மகாசாமி சங்கராஜவின் கீழ் உபசம்பதாவை அடைந்து சமயக் கலைகளையும் இலங்கை சாசன நடைமுறைகள் விழுமியங்களையும் கற்று மீளவும் தமது தாய் நாட்டிற்குச் சென்று அங்கு அயோத்தி என்ற தலைநகரில் லங்காராமய என்ற விகாரையில் வசித்துக் கொண்டு 'சத்தம்மசங்கஹ' என்ற பாளி கிரந்தத்தை எழுதியதாக அந்தக் கிரந்தத்தில் பொதிந்துள்ள செய்யுட்கள் மூலம் வெளிப்படுகின்றன.

இவ்வாறு கம்பளை யுகத்தில் இந்நாட்டிற்கு இடைக்கிடை சமூகம் கொடுத்த சீயம் நாட்டு பிக்குமார் எமது நாட்டில் இருந்து சமயக் கிரந்தங்களையும் சிவனொளிபாதமலை குறிப்புகளையும் அனுராதபுர ஸ்ரீ மகா போதியின் கிளையொன்றையும் சீயம் நாட்டிற்கு எடுத்துச் சென்று அந்நாட்டில் பௌத்த சமயத்தைப் பரப்பியமைக்கான சான்றுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. 1360 அளவில் இருந்து கம்பளை மூன்றாம் விக்கிரமபாகுவின் முதன்மை அமைச்சர் பதவியை வகித்து வந்தவர் பிரபு ராஜ நிஸ்ஸங்க அழகக்கோனாராகும். இந்த அமைச்சர் ரய்கமச் சுற்றாடலில் இரண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசிப்பிடங்களாக தேரர்களுக்குத் தனித்தனி விகாரையமைத்து களனி விகாரையின் சிதைவுகளை சீர் திருத்தி முன்னேற்றமடையச் செய்து அண்மித்த பிரதேசங்களில் சாசன அலுவல்களில் ஈடுபட்டிருந்தான். இதற்கிடையில் இவரது ஆப்த நண்பனான, பாஸ்கர ஜய மஹலேன இளவரசனால் கம்பளை நியம்கம்பாய விகாரையில் தமது பெயரில் ஜய மஹலேன பிரிவெனா ஒன்றமைத்து பூர்வ கௌதம அல்லது சித்தார்த்த என்ற பெயரில் மஹாதேரருக்கு அந்த பிரிவெனாத் தலைவர் பதவியையும், நியகம்பாய விகாரையின் தலைமைப் பதவியையும் வழங்கினான்.

1369இல் மீண்டும் சங்க மறுசீராக்கம் செய்துள்ளமை புலனாகின்றது. தெவன கல வனரதன மகா தேரரின் மரணத்தின் பின்னர் கடலாதெனி விகாரையில் வசித்த சீலவங்ச தம்மகித்தி தேரர் சங்கராஜ பதவிக்கு அமர்த்தப்பட்டிருந்தார். நிஸ்ஸங்க அழகக்கோணார் அங்கு வசிக்கும் சாசன குலப்புத்திரர்களின் அனாச்சார தன்மைகளைக் கேள்வியுற்று சீல வங்ஸ தம்மகித்தி சங்கராஜ தேரர் இரு பகுதிகளிலும் வாசம் செய்யும் மகா தேரர்களை ஒருங்கு கூட்டி அரச அதிகாரங்களை பிரயோகித்து சாசன நடத்தையை அலசி விசாரித்தறிந்து பிரசித்தமான துர்ச் சீலங்கள் உடையவர்களாகக் கருதப்பட்டவர்களை காவியுடை களையச்செய்து இல்லறத்திற்கு மாற்றி 1369 இல் மீண்டும் சங்க மறுசீராக்கம் செய்து தூய்மைப்படுத்தியதாக சமயப்பிரிவு சஞ்சிகையொன்றில் (நிகாய சங்கிரஹய) குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐந்தாம் புவனேகபாகு மன்னன் மரணமடைந்த பின் 1391இல் கம்பளைக்கு வருகை தந்த வீரபாகு மன்னன் பிக்குகளுக்கு ஊர்களையும் நிலபுலன்களையும் காவி உடைகள், பரிகரணப் பொருள்களையும் ஒப்படைத்து தமது புத்திரன் உட்பட உயர்குல பின்னைகளை துறவு பூண வைத்து, உபசம்பதா சீலத்தில் அவர்களை மாற்றி, சாசனப் பாதுகாப்பிற்கு உகந்த இடங்களை பரீட்சித்து அவர்களுக்கு தலைமைப்பிக்கு, மகா தேரர் போன்ற உயர் பதவிகளையளித்தான். இக்காலத்தில் சங்கராஜப் பதவியை வகித்தது கடலாதெனிய நீல வங்ச தம்மகித்தி மகா தேரரின் சீடரான கடலாதெனிய தேவரக்சித ஜயபாகு மகா தேரராகும் இவர் இரண்டாம் தம்மகித்தி என்ற பெயரில் வழங்கப்பட்டார். 1369இல் நடத்தப்பட்ட சங்க புனரமைப்பின் பின்னர் மீண்டும் கிராமப் புறப் பிக்குகளின் அனாசாரத்தின் உச்ச நிலை கண்டு வீரபாகு மன்னன் வீரபாகு தேவரக்சித இரண்டாம் தம்மகித்தி மகா தேரரின் தலைமையில் ஆராமைகளில் வாழ்ந்த மகா தேரர்களை வரவழைத்து 1396இல் மீண்டும் சீர்த்திருத்தம் செய்தான். இந்த சந்தர்ப்பத்தில் ஒழுக்கமற்ற பிக்குகள் அதிகம் பேரை சாசனத்தில் இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்புறப்படுத்தி குலக் குமாரர்கள் நூறுபேரை இரண்டு பிரிவுகளிலிருந்தும் தெரிவு செய்த அவர்களை பிக்குகளாக மாற்றியதாகக் குறிப்பிடப்படுகின்றது.

## ஒளிமயமான காலம் 1415 - 1521

கி.பி 1400 - 1415 இடைப்பட்ட காலத்தில் கம்பளை இராசதானி வீழ்ச்சியடைந்து ஜயவர்தனபுரக் கோட்டை இலங்கையின் இராசதானியாக மாற்றமடைந்து கொண்டு வந்தது. 6ஆம் பராக்கிரமபாகு மன்னனில் தொடங்கிய ஜயவர்தனபுர இராசதானிக் காலம் இலங்கை பௌத்த சாசன வரலாற்றில் சிறப்பான ஒரு காலமாகும்.

பொலன்னறுவை யுகத்தின் பின்னர் முதன் முறையாக முழு இலங்கையையும் ஐக்கியப்படுத்திய 6ஆம் பராக்கிரமபாகு மன்னனின் நீண்ட ஆட்சிக் காலத்தினுள் சட்டமும் ஒழுங்கும் சமாதானமும் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. தம்பதெனிய யுகத்தில் இருந்து பற்பல ஆட்சியாளர்களின் அனுசரணைகள் பெற்று தென்மேற்கு ஈரவலயத்திலும் மலையகப் பிரதேசங்களிலும் முன்னேறி வந்த சமய தலைமையகங்கள் பராக்கிரமபாகு மன்னனின் அனுசரணை பெற்று முன்னேற்றத்தின் உச்ச நிலைக்குட்பட்டிருந்தது. சிவனொளிபாதம், அத்தனகல்லை, களனி, கடலாதெனிய, லங்காதிலக்க, மகியங்கனை என்பன மன்னனின் உதவி ஒத்தாசைகள் பெற்ற பகுதிகளாகும்.

அரசனால் தமது தாயர் சுனேத்ரா மகா தேவி மகாராணியின் நாமத்தில் பெப்பிளியான என்ற இடத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சுனேத்ரா தேவி விகாரையும், பிரிவெனாவும் இவரின் விசேட அனுசரணைக்குட்பட்டது. இந்த பிரிவெனாவின் பராமரிப்பிற்காக 1431,1432,1454,1455,1459 ஆகிய வருடங்களில் வெளியிடப்பட்ட கல்வெட்டுக்கள், மற்றும் முத்திரையிடப்பட்ட அரச பத்திரங்களின்படி பெப்பிலியான சுற்றாடலிலும், தூர பிரதேசங்களில் ஊர்கள் நில புலன்கள், தோட்டங்கள், வேலையாட்கள், பணிப்பெண்கள், மாடு, எருமைகள், பல்வித கௌரவப் பொருள்கள் ஆகியன அர்ப்பணிக்கப்பட்டுள்ளன. அந்த பிரிவெனாவின் இலாபத்தினை எவ்வாறு பரிபாலனம் செய்யலாம். என்று பதிவேடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. பெப்பிலியான பிரிவெனாவின் தலைமை பிக்குவின் பரிசோதனையின் கீழ் திரிபிடக கிரந்தத்தினை எழுதும் அலுவல்களுக்கு எழுத்தாளர்களை ஈடுபடுத்தி அவர்களுக்கு சம்பளம் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஜயவர்தனபுர உள்ளிட்ட கண்டி அரச மாளிகையை அண்டிய பகுதிகளில் அழகிய தலதா மாளிகையொன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்மாணித்து தடிப்பான தங்கப் பேழைகள் நான்கினுள் அவற்றை ஒன்றினுள் ஒன்று புகுத்தக் கூடிய நுட்பமுறையில் வடிவமைத்து புத்த பெருமானின் தந்த தாதுவை அதனுள் பிரதிஷ்டை செய்து பூசை வழிபாடுகள் நடந்தேற வழிவகுக்கப்பட்டது.

இலங்கையின் பல பிரதேசங்களில் கலைத் துறையில் ஈடுபாடு கொண்டிருந்த பிரசித்தி பெற்ற எழுத்தாளர்கள், பண்டிதர்கள் மற்றும் கலைக் கூடங்கள் பெருமளவில் இருந்தமையால் கலைஞானம் பிரகாசித்த வண்ணம் இருந்தது. தொட்டகமுவே ஸ்ரீ ராகுல, விதாகம மைத்திரிய, தம்மதின்ன விமல கீர்த்தி, வில்கம்முல பெப்பிலியானே மங்கல வேத்தேவ ஆகிய மிகப் பிரசித்திபெற்ற பண்டித தேரர்கள் உரை நடை, மற்றும் செய்யுள் வடிவங்களில் நூல்கள் கட்டுரைகள் எழுதி பிரகாசித்தார்கள். வத்தளை வனவாசல, பெப்பிலியானை சுனேத்ரா தேவி, றைகம ஸ்ரீ கணானந்த, கேரகல பத்மாவதி, இருகல் குலதிலக்க போன்ற பிரிவெனாக்கள், பெந்தோட்டை கலபான விகாரை போன்றவை பிரசித்தமான கலைஞானக் கூடங்களாக முன்னேற்றத்தின் உச்சப் படியில் திகழ்ந்தன.

இந்த நிலைமையின் கீழ் நிலவிய தேரவாத உபசம்பதா முறையில் இடைமுறிவுகளற்ற தொடர்ச்சியான நிலவுகை உறுதியானதும், பரிசுத்தத் தன்மை பற்றியதுமான கீர்த்தி தென்கிழக்காசியாவிலும் பரவி இருந்தது. தேரவாத சாசன விதி முறைகள், ஒழுக்காற்று விழுமியங்கள் ஆகியவற்றை முன்னேற்றிக் கொள்ளும் நோக்கில் இந்தக் காலக் கட்டத்தில் அந்த நாடுகளின் பிக்குமார் குழுவினர் பல முறை இந்நாட்டிற்கு வருகை தந்துள்ளார்கள். மேற்குறிப்பிட்ட முறையில் புராதன சீயம் நாட்டில் ஆரம்பமாகி இருந்த சிங்கள சங்க சமயப் பிரிவில் சாசன பணிவிடை செய் முறைகள் தற்போது வீழ்ச்சியுற்று அருகிச் சென்றிருந்தமை புலப்படுகின்றது. ஆகையால் தமது நாட்டில் தூயதான உபசம்பதாவைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் 33 பேர்கள் அடங்கிய அந்நாட்டு பிக்குகள் குழுவினர் 1423இல் ஸ்ரீ ஜயவர்தனபுரவிற்கு வருகை தந்தார்கள். அப்போது இந்நாட்டின் மகாசாமி பதவியை வகித்த ஜயவர்தனபுர வனரதன மகாதேரர் உள்ளிட்ட நிருவாக சபை பிக்குகளின் மூலம் புதிதாக உபசம்பதா பெற்றுக் கொண்டு 1424ல் மீளவும் தமது நாட்டுக்குச் சென்று .இவர்கள் அங்கு புதிய இலங்கை சாசன வம்சமொன்றை ஸ்தாபித்தார்கள்.

1450 அளவில் பர்மாவின் கீழ்ப்பகுதியில் ராமஞ்ஞ தேசத்தில் முத்திம என்ற நகரில் சுவன்ன சோபன என்ற தேரர் ஒருவர் இலங்கை வந்துள்ளமை புலனாகின்றது. அவர்கள் ஜயவர்தனபுர வனரதன மகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேரரை தமது ஆசானாக்கி ஸ்ரீ ராஹுல தேரரை அடியொட்டும் வினையாற்று ஆசானாக்கியும் இந்நாட்டில் உபசம்பதா பெற்று மீள தமது நாட்டிற்குச் சென்றார்கள்.

1474ஆம் வருடம் இந்நாட்டு மகா பிக்குகளிடம் உபசம்பதா பெற்றுக் கொள்வதற்காக வேண்டி பர்மாவில் தம்மவேதிய மன்னனினால் பர்மிய பிக்குகள் குழுவொன்று இலங்கைக்கு அனுப்பப்பட்டது. இந்தத் தூதுவர்கள் குழு வருகை தந்த சமயத்தில் 6ம் புவனேகபாகு என்ற பெயரில் அரசு கட்டிலேறிய சபுமல் குமாரனுக்கு எதிராக உருகுணை சிங்கள சங்கய' என்ற கிளர்ச்சியொன்று உருவாகி இருந்தது. கிளர்ச்சி கலகங்கள் காரணமாக பர்மாவின் தூதுவர் குழு வெலிகமையில் கரையிறங்கி தலைநகருக்கு செல்ல முடியாமல் வெலிகமையில் மூன்று மாதங்கள் தங்கியிருக்க வேண்டிய நிர்ப்பந்தமேற்பட்டதாகக் கூறப்படுகின்றது. ஆறாம் புவனேகபாகு மன்னனுக்கு எதிராக நடந்த இந்தக் கலகத்தின் பின்னனியில் அக்காலத்தில் சங்கராஜ பதவியை வகித்த தொட்டகமுவை ஸ்ரீ ராகுல தேரர் இருந்திருப்பார் என ஊகிக்கப்படுகின்றது.

புவனேகபாகு மன்னனின் அனுசரணையுடன் 1474இல் கல்யாணி எல்லையில் நடாத்தப்பெற்ற பர்மிய பிக்கு உபசம்பதா விழாவிற்கு ராகுல சங்கராஜ தேரரின் வருகை இடம்பெறாமை இந்த அனுமானத்திற்கு ஏதுவாக அமைகின்றது. தம்பதெனிய யுகத்தில் இருந்து நிகழ்ந்த அனைத்து உபசம்பதா விழாக்களில் சமகால மன்னனும், சங்கராஜ மகா தேரரும் கட்டாயமாக சமூகம் கொடுத்துள்ளார்கள். இது தம்பதெனிய உடன்படிக்கையில் சிபாரிசு செய்யப்பட்ட முக்கிய சரத்தாகும். 1477இல் ஸ்ரீ ராகுல சங்கராஜ தேரர் அவர்கள் சமூகம் கொடுக்காமை மேற்குறிப்பிட்ட கலகத்திற்கு இவரும் காரணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தைக் கிளப்புகின்றது.

இச்சந்தர்ப்பத்தில் உபசம்பதா விழாவில் தலைமை தாங்கி செயற்பட்டவர் விதாகம மைத்திரிய மகா தேரர் ஆகும். இந்த விழா முடிவில் புவனேகபாகு மன்னனால் உபசம்பதா பெற்ற பர்மாவைச் சேர்ந்த பிக்குக்குகளுக்கு இலங்கையில் பிரயோகிக்கப்படும் நாமங்கள் சூட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்த நாமங்கள் இந்நாட்டு சாசனத்திற்கும், அதன் வரலாற்றிற்கும் தொடர்பான பிரசித்தி பெற்ற தேரர்களையும் பூசை வஸ்துக்களையும் அடிப்படையாக கொண்டதாகும். பராக்கிரமபாகு, ஸ்ரீ வனரதன, ஸ்ரீ தந்ததாது, ஸ்ரீ மங்கல ஆகியவை இந்தப் பெயர்களிற் சிலவாகும். பர்மா நாட்டைச் சேர்ந்த பிக்குகள் தம் தாய் நாட்டை அடைந்த பின் தம்மவேத்திய மன்னன் அந்த பிக்குகளைக் கொண்டே தம் நாட்டு பிக்குகளை உபசம்பதா அளிப்பதற்கான எல்லைப்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று அமைத்தான். இந்நாட்டு கல்யாணி எல்லையில் உபசம்பதா பெற்ற பிக்குகள் இலங்கை மகா தேரர்களின் அங்கீகாரம் பெற்றமையால் அந்நாட்டு எல்லையும் எமது நாட்டைப் போன்றே கல்யாணி எல்லை என்றே பெயரிடப்பட்டது.

ராகுல மகா தேரர் மரணமடைந்த பின் விதாகம மைத்திரிய தேரரும் அவர் மரணமடைந்த பின் பப்பிலியான சுனேத்திராதேவி பிரிவெனா தலைவரான மங்கல தேரரும், மகாதேரர் பதவி வகித்ததுடன் அவர் மரணமடைந்த பின் கி.பி. 1500ஆம் ஆண்டளவில் காரகல பத்மாவதி பிரிவெனத் தலைவர் ஸ்ரீ ராஜகுருவனரதன மகா தேரரும் சங்கராஜ பதவிக்கு நியமனம் பெற்றுள்ளார்கள். ஹங்ச சந்தேசய (அன்னம் விடு தூது) வனரதன மகா தேரரையும், காரகல பத்மாவதி பிரிவெனாவையும் வர்ணித்துள்ளது.

தம்பதெனிய யுகத்தில் தொடங்கி வளர்ச்சி கண்ட பிக்குகள் நிருவாகத் திட்டம் தற்போது நன்கு உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. பிரிவெனாத் தலைவர்கள், நிறுவனத் தலைவர்கள், ஈர்வாச மகா தேரர் இருவர் பிக்குமாரின் வாக்கெடுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்டதுடன் மன்னனது அனுமதியுடன் அப்பதவி சட்ட ரீதியாக்கப்பட்டது. பல்தலைமையானது சாசன கொள்ளையிடலுக்கு வழிவகுக்கும் என்பதால் கிராமவாச, வனவாச மகா தேரர் இருவர் நீங்கலாக வேறு எவருக்கும் மகா தேரர் ஆக முடியாது என்று தம்பதெனி உடன்படிக்கையில் அமுல் படுத்தப்பட்ட சட்டம் தற்போது அதே வடிவில் செயற்படவில்லை என்பதும் புலனாகின்றது. இந்த யுகத்திற்கு உரிய சமகாலத்தில் பிரகாசித்த மகாதேரர் இருவருக்கு கூடிய எண்ணிக்கையான மகா தேரர்கள் குறிப்பிடப் படுவதினால் இச்சரத்து வலுவற்றுப் போனமை உறுதிப்படுகின்றது. உதாரணமாக 'வுர்த்தமாலா சந்தேஷ சதக' (கவிதை ஓசை அணிகொண்ட நிருபங்கள் ஏழு) என்ற பாளி காவியம் ஒன்றில் தெதிகம சங்கராஜா அவர்களைச் சூழ்ந்திருந்த ஈர்வாச தேரர்கள் இடையில் மகா தேரர்கள் பலர் குறிப்பிடப்படுகின்றனர்.

சம்பிரதாய மூல நிறுவனங்களில் 'மகாநெத்பா' , ''கலதுரு' வில்கம் வட ஆகிய மூலகங்கள் நான்கினைப் பற்றி இந்தக் காலகட்டத்தில் தொடர்ந்து விபரங்கள் கிடைக்கின்றன. மற்ற மூல நிறுவனம் பற்றி போதிய விபரங்கள் கிடைத்ததாகத் தெரியவில்லை. கிராமவாச, வனவாச பேதம் இப்போது போட்டி அடிப்படையில் வெளிக்கிளம்பியுள்ளது. பிரசித்தி பெற்ற தொட்டகமுவ விஜயபாகு பிரிவெனாவும் அதன் தலைவரும் சட்பாஷா பரமேஷ்வரா (ஆறு மொழி தெரிந்த விற்பன்னர்கள்) திரிபிடக வாகீஸ்வர சார்ய ஸ்ரீ ராகுல தேரர் பற்றி கிரா சந்தேஷயாவில் வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்ணிப்புகளில் கிராமவாச சம்பிரதாயமும் கேரகல பத்மாவதி பிரிவெனாக்களில் வனவாச சம்பிரதாயமும் ஒப்பீட்டு ரீதியில் முன் வைக்கப்பட்டுள்ளதென்பது வரலாற்று அறிஞர்களின் அபிப்பிராயமாகும். அப்படி இருந்த போதிலும் 13ஆம் நூற்றாண்டில் இருந்து 16ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலத்தினுள் சிங்கள நாகரீகம் உறுதிப்படுத்தப்பட்டுக் கொண்டிருந்த தென்மேற்கு மற்றும் மலையகப் பிரதேசங்களில் இந்து மதம் ஒழுங்கமைப்புருவில் இருந்ததாக சான்றுகள் இல்லை. கம்பளை யுகத்தில் சில இந்து தெய்வங்கள் பௌத்த சாசன பாதுகாப்பாளர்களாக மாறிக் கொண்டு இருந்தார்கள். பௌத்த விகாரைகளில் விசேடமாக சிலையகங்களில் முன் பகுதியில் புத்த பெருமானுக்கு பாதுகாப்பளித்துக் கொண்டிருக்கும் அமைப்பினைக் காட்டும் இந்து தெய்வங்களின் சிலைகள் காணப்படுகின்றன. உதாரணமாக லங்காதிலக விகாரையில் முதலாவது மாடியில் பிரமன், விஸ்ணு, சிவன், விபீசணன், கணபதி, முருகன் போன்ற தெய்வங்களின் சிலைகள் உயிரோட்டமாக உள்ளன.

ஜயவர்தனபுரக் கோட்டை யுகத்தினுள் மைத்திரிய நாத போதிசத்வ புண்ணிய தல யாத்திரைகள் பிரபலமாக பரவி இருந்தன. விஷ்ணு, சிவன், விபீஷண, ஸ்கந்தகுமார (முருகன்) என்ற நான்கு வகை வரம் கொண்ட தெய்வங்கள் நாட்டையும் சாசனத்தையும் காக்கும் பிரதான தெய்வங்களாக கணிக்கப்பட்டன. ஈஸ்வரன் விநாயகன், முருகன், ஆகிய தெய்வங்களுக்கான கோவில்கள், தலை நகரங்களையும் மற்றும் தூர பிரதேசங்களில் பௌத்த விகாரையையும் மற்றும் அண்மித்த பகுதிகளிலும் இருந்ததுடன் அவைகள் சிங்கள பௌத்தர்களின் பூசை வழிபாடுகளுக்குட்பட்டு இருந்தன. இந்த அடிப்படையில் ஆராயும் போது இந்நாட்டின் பௌத்த நாகரீகத்தினுள் பிரமன், விஷ்ணு, சிவன் போன்ற பிரதான வரிசையில் அடங்கும் இந்து தெய்வங்கள், பௌத்த சாசன பாதுகாவலர்களாக உட்படுத்தப்பட்டுள்ளமை தெளிவாகின்றது.

**உசாத்துணை நூல்கள்**


1. பூஜாவலிய - 34ம் அத்தியாயம்
2. நிகாய சங்கிரகய
3. பொலனறுவை யுகம் - திசர வெளியீட்டாளர்கள்
4. அஸ்கிரிய தல்பத
5. கீர்த்திசிறீ நிஸ்ஸங்க மல்ல - மெண்டிஸ் ரோஹனதீர
6. ஸ்ரீ லங்காவே சங்க சங்விதான (இலங்கையின் பிக்கு ஒழுங்கமைப்பு) மெண்டிஸ் ரோஹனதீர
7. ஜயவர்தன புர சங்கராஜ பரபுர (ஜயவர்தனபுர சங்க ராஜ பரம்பரை) (மெண்டிஸ் ரோஹனதீர)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 8

# இலக்கியங்களும் கலைகளும்

## இலக்கியம்

பொலன்னறுவை இராசதானிக் காலத்தில் சிங்கள கலாசாரமானது பல்வேறு துறைகளிலும் முழுமை பெற்றுத் திகழ்ந்தது. பகைவரின் ஆக்கிரமிப்புக்கள் இடம்பெற்று வந்த போதிலும் சிங்கள கலாச்சாரத்தின் பெருமையைப் பேணிக் காப்பதில் முதலாம் விஜயபாகு, முதலாம் பராக்கிரமபாகு போன்ற மன்னர்கள் இக்காலப் பகுதியில் பாடுபட்டுள்ளனர். பொலன்னறுவைக் காலப் பகுதிக்குரிய தமிழ்க் கல்வெட்டுகள் சில கண்டுப் பிடிக்கப்பட்டுள்ள போதிலும் நிஸ்ஸங்கமல்ல, சாகஸமல்ல முதலிய இந்தியத் தொடர்புடைய மன்னர்களும் கூட தமது கல்வெட்டுக்களை சிங்களத்திலேயே பொறித்துள்ளனர். நிஸ்ஸங்கமல்ல மன்னனால் அமைக்கப்பட்ட கல்வெட்டுக்களின் எண்ணிக்கையைப் பார்க்கின்றபோது அக்காலகட்ட சிங்களவர்களின் எழுத்தறிவு வீதம் உயர் மட்டத்தில் இருந்துள்ளமையை அறிந்து கொள்ள முடிகின்றது. பன்சலை சூழலில் பௌத்த பிக்குகளால் பரவலடைந்த கல்வி முறையும் விஷேசமாக எழுதுவதற்கும் வாசிப்பதற்குமான அறிவும் அக்கால இலங்கை மக்களின் கலாசார வளர்ச்சியை சிறப்பாக வெளிப்படுத்துகின்றன.

பொலன்னறுவையின் முதலாவது சிங்கள மன்னான முதலாம் விஜயபாகு மன்னன் வம்சக் கதைகளில் 'மகாகவி' எனும் புகழ் நாமத்தால் குறிப்பிடப்படுகின்றான். இம்மன்னன் நூல்களை எழுதியதுடன் பண்டிதர்களையும் ஆதரித்து வந்தான். அத்துடன் இக்கால கட்டத்தில் சிங்கள மொழியில் மட்டுமல்லாது பாளி மொழியிலும் பல நூல்கள் எழுதப்பட்டதாக வம்சக் கதைகளில் குறிப்பிடப்பட்ட போதிலும் அவற்றுள் ஒரு நூலையாவது இன்று காண்பதற்கிற்லை. மகா விஜயபாகு மன்னனின் பனாகடுவ செப்புசாசனம் மற்றும் அம்பகமுவ கல்வெட்டு என்பன அக்கால எழுத்து மொழியின் சிறப்பை எடுத்துக் காட்டுகின்றன. அதிலும் பனாகடுவ செப்பு சாசன மொழி நடை மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும்.

பொலன்னறுவை யுகத்தில் எழுதப்பட்ட அதிகளவிலான நூல்களும் கலிங்க மாகனால் அழிக்கப்பட்டன என்று நாம் கருதலாம். அது தவிர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்களை எழுதுவதற்குப் பயன்படுத்தப்பட்ட ஓலைச் சுவடிகளும் நீண்டகாலம் நிலைக்காது அழிவடைந்தமையும் பொலன்னறுவைக் கால நூல்கள் எமக்குக் கிடைக்காமைக்கான காரணங்களாக நாம் கருதலாம்.

கவிதை எழுதுவதன் விதிகள் உள்ளடங்கியதாக தண்டி என்பவரால் எழுதப்பட்ட 'காவிய தர்ஸய' எனும் நூலை அடிப்படையாக வைத்து எழுதப்பட்ட 'சியபஸ்லகர' அநுராதபுர யுகத்துக்குரிய நூலாகக் கருதப்படுகின்றது. ஆயினும் அந்த இலக்கண வரம்புகளையும் காவிய விதிகளையும் அடிப்படையாக வைத்து முதலில் எழுதப்பட்டதாகக் கருதப்படுவது இன்றும் காணக் கிடைக்கின்ற 'சசதாவத' எனும் இலக்கியம் பொலன்னறுவை யுகத்திற்கு உரியதாகும். அது லீலாவதி இராணி முதற்தடவையாக ஆட்சி புரிந்த 1197 - 1200 காலப் பகுதியில் எழுதப்பட்டதாகும். அக்கால கட்டத்தில் கித்தி சேனவியா என்பவரே முதலமைச்சராக இருந்தார். ஆயினும் அக் காவியத்தை இயற்றிய கவிஞரின் பெயர் நூலின் எந்தவொரு இடத்திலுமோ வேறு மூலாதாரங்களிலோ குறிப்பிடப்படாமை பெருங் குறைபாடாகும். இந்நூலானது சமஸ்கிருத காவிய மரபு சிங்கள கவிதை இலக்கியத்தில் செலுத்தியுள்ள செல்வாக்கை சிறந்த முறையில் எடுத்துக் காட்டுகின்றது. 'சச ஜாதகய' எனும் ஜாதகக் கதையை அடிப்படையாகக் கொண்டு சமஸ்கிருத காவிய இலக்கிய மரபுகளைப் பேணி காலை வர்ணணை, மாலை வர்ணணை, நகர வர்ணணை எனும் பகுதிகளை உள்ளடக்கியதாக இக்காவியம் இயற்றப்பட்டுள்ளது 'சசதாவத' காவியத்தைப் போலவே 'முவதெவ்தாவத' காவியமும் பொலன்னறுவை யுகத்துக்குரிய கவிதை நடை இலக்கியமாகும். 'முகாதேவ' ஜாதகக் கதையை அடிப்படையாகக் கொண்டு அதே சமஸ்கிருத காவிய மரபுகளைப் பேணியே இக்காவியமும் இயற்றப்பட்டுள்ளது.

பன்னிரண்டாம் நூற்றாண்டு இலங்கையில் சிங்கள எழுத்து மொழியில் இருவித பாணிகளைக் காணக் கூடியதாயிருந்தது. உதாரணமாக முதலாம் விஜயபாகு மன்னனின் 'பனாகடுவ செப்புசாசனம்" கலப்பில்லாத சிங்கள மொழியில் எழுதப்பட்டுள்ளது. ஆனால் முதலாம் பராக்கிரமபாகுவின் 'கல்விகாரைக் கல்வெட்டு' (பொலன்னறுவ கதிகாவத) சமஸ்கிருதம் கலந்த சிங்கள மொழியிலேயே எழுதப்பட்டுள்ளது அதே போன்று நிஸ்ஸங்கமல்ல மன்னனின் கல்வெட்டுக்கள் அனைத்திலும் சமஸ்கிருதம் கலந்த சிங்கள மொழியையே நாம் காண முடிகின்றது. இவ்வேறுபாட்டினை பொலன்னறுவை யுகத்துக்குரிய உரை நடை இலக்கியங்களிலும் அவதானிக்க முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருளுகோமி எனும் பண்டிதர் பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படுகின்றார். அவரால் எழுதப்பட்ட 'அமாவதுர' எனும் பிரபலமான உரைநடை இலக்கியம் சமஸ்கிருத கலப்பில்லாத சிங்கள மொழியில் எழுதப்பட்டிருந்தது. அதேபோன்று மொழி நடையும் எளிமையான முறையில் அமைக்கப்பட்டிருந்தது. புத்த பெருமானுடைய குணவியல்புகளை வர்ணணை செய்யும் வகையில் எழுதப்பட்டிருந்த இந்நூலை சாதாரண மனிதர்களாலும் வாசித்து விளங்கிக் கொள்ளக் கூடியதாயிருந்தது. குருளுகோமி என்பவரது மற்றொரு படைப்பாகக் கருதப்படும் 'தர்ம பிரதீபிகாவ' எனும் நூல் மொழி நடையிலும் அமைப்பிலும் 'அமாவதுர' நூலுக்கு முற்றிலும் மாறுபட்டதாகும். பாளி மொழியில் எழுதப்பட்ட 'மகா போதி வம்சம்' எனும் நூலில் இடம் பெற்றுள்ள கடினமான பதங்களுக்கு விளக்கவுரையாக எழுதப்பட்ட 'தர்ம பிரதீபிகாவ' புத்த பெருமானின் ஆரம்பப் போதனைகள் பற்றி பெறுமதியான விளக்கந்தரும் நூலாகும். இந்நூலை எழுதுவதற்கு நூலாசிரியர் சமஸ்கிருதம் கலந்த சிங்கள மொழியையே பயன்படுத்தியுள்ளார். ஆயினும் அதில் 'சுலுகலிங்குதாவத' எனும் கலப்பற்ற சிங்கள மொழியில் எழுதப்பட்ட கட்டுரை ஒன்றும் இடம்பெற்றுள்ளது.

வித்யா சக்கரவர்த்தி எனும் பண்டிதரும் பொலன்னறுவை யுகத்தில் வாழ்ந்தவராகக் கருதப்படுகிறார். இவரால் எழுதப்பட்ட 'புத்சரண' எனும் நூலும் 'அமாவதுர' நூலைப் போல புத்த பெருமானின் குணநல வர்ணனைக்காகவே எழுதப்பட்டுள்ளது. இதிலும் சமஸ்கிருதக் கலப்பிலான சிங்கள மொழி நடை கையாளப்பட்ட போதிலும் ஆற்றொழுக்கான வசன நடையில் அர்த்தமுள்ள கருத்துகளை வெளிப்படுத்துவதில் நூலாசிரியர் வெற்றி கண்டுள்ளார். உவமானங்களைக் கையாள்வதில் ஏனைய சிங்கள நூலாசிரியர்களை வித்யா சக்கரவர்த்தி விஞ்சி நிற்கிறார் 'புத்சரண' நூலில் கையாளப்பட்டுள்ள உவமானங்களில் அதிகமானவை இலங்கை மக்களின் பொது வாழ்க்கையிலிருந்து எடுத்தாளப்பட்டவையாகும். இந்நூலின் இறுதியில் இடம்பெறும் 'வெஸ்ஸந்தர ஜாதகக் கதை' பிற்கால சிங்கள எழுத்தாளர்களிடம் பலமான தாக்கத்தை ஏற்படுத்திய ஆக்கமாக அமைந்தது. தம்சரண, சங்கசரண எனுமிரு நூல்களும் இதே நூலாசிரியரின் படைப்புகளாகுமென்பது சிலரது கருத்தாகும்.

சிங்களத்தில் எழுதப்பட்ட 'தூபவம்சம்' எனும் நூலும் பொலன்னறுவை யுகத்துக்குரியதாகக் கருதப்படுகின்றது. இதன் ஆசிரியர் வித்யா சக்கரவர்த்தி பராக்கிரம பண்டிதர் என்பவராவார். ஆயினும் இவர் நாம் முன்னர் குறிப்பிட்ட 'புத்சரண' நூலாசிரியர் அல்ல. கல்யாணவதி இராணியின் ருவன்வெலிசாய கல்வெட்டில் 'தூபவம்சம்' எனும் நூலைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. அது வித்தியாசக்கரவர்த்தி பராக்கிரம பண்டிதர் எழுதிய தூபவம்சமா அல்லது அதற்கு முன்னர் எழுதப்பட்ட தூபவம்சமா என்பது பற்றி தெளிவாகத் தெரியவில்லை.

பொலன்னறுவை யுகத்தில் புகழ்பெற்ற உரைநடை இலக்கியமாக 'சன்ன' எனும் இலக்கிய வடிவம் காணப்பட்டது. பாளி மற்றும் சமஸ்கிருத நூல்களின் வசனங்களுக்கும் சிறப்பாக அவற்றில் இடம் பெற்ற புத்தரின் போதனைகளிலும் சுலோகங்களிலும் காணப்படும் சொற்களுக்குப் பொருள் கூறுவதாக அமைந்த இந்நூல் வகை சுயாதீனமான படைப்புக்களாக அமையாத போதிலும் சிங்கள மொழி வளர்ச்சிப் பற்றிக் கற்பதற்கு மிகவும் முக்கியதுவம் வாய்ந்தனவாகும். 'சன்னய' எனும் வடிவத்தில் அமைந்த நூல்களுள் மிகவும் பிரபல்யமானதாக காணப்பட்டது முதலாம் பராக்கிரமபாகு மன்னனின் காலத்தில் வாழ்ந்த சாரிபுத்த எனும் பௌத்த தேரரின் 'அஹிதம்மத்த சங்கிரஹ சன்னய' எனும் நூலாகும். இதுவொரு விளக்கவுரை நூலான போதிலும் சாரிபுத்த தேரரிடம் காணப்பட்ட ஆழமான பௌத்த தத்துவ அறிவினை வெளிப்படுத்தும் மிக நீண்ட விளக்கங்களும் இந்நூலில் இடம் பெற்றிருந்தன. இவ்வாறான சன்னய அல்லது விளக்கவுரை நூல்கள் பலவும் பொலன்னறுவை யுகத்தில் எழுதப்பட்டுள்ளன. 'வினய சன்னே' அல்லது 'வினயார்த்த சமுச்சிய' எனும் நூல் மேதங்கர எனும் பௌத்த பிக்குவால் எழுதப்பட்டதாகும்.

மேகதூத சன்னய, ஜானகீஹறண சன்னய, பசதா சன்னய, தாதுவம்ச சன்னய, ஜாதக சன்னய, அடதா சன்னய, வெஸதுருதா சன்னய, குதுசிக சன்னய, கங்காவிதாரணி சன்னய என்பன இந்த யுகத்துக்குரிய சன்னய நூல்களாகும். இவை பாளி, சமஸ்கிருதச் சொற்களுக்குப் பொருள் கூறுவதற்காக எழுதப்பட்ட போதிலும் மொழியின் விதி தர்மம் பற்றிய கருத்துக்கள், வரலாற்றுச் சம்பவங்கள் என்பன பற்றிய முக்கியத்துவம் வாய்ந்த தகவல்களையும் இந்நூல்கள் மூலம் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவுள்ளது. சன்னய எனும் இலக்கிய வடிவம் பொலன்னறுவை யுகத்தில் புகழ் பெற்றிருந்தது என்பது மேற்படி நூல்களிலிருந்து தெரிய வருகின்றது.

அநுராதபுர யுகத்தில் ஆரம்பிக்கப்பட்ட இலக்கிய வடிவமான 'கற்ற பதய' எனும் விளக்கவுரை எழுதும் நூல்கள் பொலன்னறுவைக் காலத்திலும் எழுதப்பட்டன. பாளி மொழியில் காணப்பட்ட கடினமான சொற்களுக்கு விளக்கவுரை எழுதுவதே 'கற்றபதய' எனும் வடிவில் இடம்பெற்றுள்ளது. பாளி மொழியில் எழுதப்பட்ட 'மகா போதிவம்சம்' எனும் நூலுக்கு விளக்கவுரையாக எழுதப்பட்ட 'மகா போதிவம்ச கற்றபதய'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் நூலும் சில ஜாதகக் கதைகளுக்கு விளக்கவுரையாக எழுதப்பட்ட 'ஜாதக அட்டுவா கற்றபதய' எனும் நூலும் பொலன்னறுவை யுகத்துக்கு உரியனவாகக் கருதப்படுகின்றன. சிங்கள மொழியில் எழுதப்பட்ட மிகப் பழைய இலக்கண நூலான 'சந்தலகுண' என்பதும் பொலன்னறுவை யுகத்துக்குரியதாகவே கருதப்படுகின்றது. 'சிதத் சங்கராவ' எனும் பெயரில் இப்போது குறிப்பிடப்படுவது இந்த 'சந்தலகுண' எனும் நூலாகும் என்பது சிலரின் கருத்தாகும்.

பொலன்னறுவை யுகம் பாளி இலக்கியத்தின் பொற்காலம் என்று சில அறிஞர்கள் எடுத்துக் காட்டுகின்றனர். மகா விஜயபாகு மற்றும் மகா பராக்கிரமபாகு மன்னர்களின் காலத்தில் புத்த சாசனத்தை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் விளைவுகளுள் ஒன்றாகவே பாளி இலக்கியத்தின் வளர்ச்சியை நாம் காணக் கூடியதாக உள்ளது. இவ்வளர்ச்சியானது சில அம்சங்களில் பாளி இலக்கியத்தைப் போசிப்பதற்கு காரணமாயமைந்துள்ளது. மகா பராக்கிரமபாகு மன்னனால் மேற்கொள்ளப்பட்ட புத்த சாசன மாற்றங்களுக்குத் தலைமை தாங்கிய திம்புலாகல மகா காசியப்ப தேரரும் அவர்களின் சீடரான சாரிபுத்த மகா தேரரும் இந்த யுகத்தில் பாளி கற்ற பண்டிதர்களுள் தலை சிறந்தவர்களாகக் காணப்பட்டனர். சாரிபுத்த மகாதேரர் வசித்து வந்த பொலன்னறுவை ஜேத்தவன விகாரை இக்காலத்தில் தோற்றம் பெற்ற பிரபல்யமான பண்டிதர்கள் பலரினதும் குருகுலமாகத் திகழ்ந்தது. பாளி மொழியிலான 'வினய பீடகம்' 'வினய சங்கிறஹய' மற்றும் புத்தகோச தேரரின் 'சமந்த பாசாதீகா' எனும் ஒழுக்கநெறிக் கோவைக்கு விளக்கவுரையாக எழுதப்பட்ட 'சாரந்த தீபனி' நூலும் சாரிபுத்த தேரரின் இரு படைப்புகளாகும். 'அஹிதர்ம பீடகம்' நூலின் சாராம்சத்தை வைத்து எழுதப்பட்ட 'அஹிதம்மந்த சங்கிறஹய' எனும் நூல் இந்த யுகத்தில் வாழ்ந்த அநுருத்த தேரருடையதாகும்.

இந்த நூலுக்கு சாரிபுத்த எனும் தேரர் சன்னய எனும் விளக்கவுரை எழுதியதாக ஏற்கனவே அறிந்தோம். புத்த சாசன மாற்றத்துக்கு தலைமை தாங்கிய திம்புலாகல மகா காசியப்பதேரர் அவர்கள் 'அஹிதம்மந்த சங்கிறஹ புராணடீகாவ' எனும் நூலை எழுதினார். பிரபலமான பாளி இலக்கண நூலாயமைந்த 'மொக்கல்லான இலக்கணம்' எனும் நூலை எழுதிய மொக்கல்லான தேரர் அவர்களும் இக் காலத்தில் வாழ்ந்த பாளி மொழியில் பாண்டித்தியம் பெற்ற ஒருவராவார். பாளி மொழி அகராதியான 'அஹினாதப்பதீபிகா' எனும் நூலும் மொக்கலான தேரரால் எழுதப்பட்டதாக கருதப்படுகின்றது. அது தவிர வுத்தோதய, புசத்தசித்தி, யோக வினிச்சய, சுபோதாலங்கார, புத்தகைக்காடீகா எனும் நூல்களை எழுதிய சங்கரக்கித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேரர் மற்றும் அஹிதம்மந்த விகாசினி, அஹிதம்மந்த விபாசினி முதலிய நூல்களை எழுதிய சுமங்கள தேரர், 'வினயத்வ மஞ்சுசா' நூலை எழுதிய புத்தநாக தேரர், கெமப்பகரண டீகா, உத்தர வினிச்சய, ரூபாரூப விபாக, சீமாலங்கார எனும் நூல்களை எழுதிய வாசிஸ்ஸர தேரர் என்போர் இக்காலத்தில் வாழ்ந்த பாளி மொழி பண்டிதர்கள் என்பதுடன் இவர்கள் சாரிபுத்த தேரரின் மாணாக்கர் ஆவர். அன்னாரின் மற்றொரு மாணாக்கரான தம்மகித்தி மகாதேரரால் 'தாதுவம்சம்' நூல் எழுதப்பட்டது. கீர்த்தசிறிமெவன் மன்னன் காலந்தொட்டு மகாபராக்கிமபாகு மன்னன் காலம் வரையிலான வரலாற்றைக் கூறும் சூளவம்சத்தின் முதலாம் பாகமாகக் கருதப்படும் மகாவம்சத்தின் இரண்டாம் பாகம் இந்த தம்மகித்தி மகாதேரரால் எழுதப்பட்டதாகவே கருதப்படுகின்றது. எனவே பொலன்னறுவை யுகம் பாளி இலக்கியத்தின் பொற்காலம் எனப் போற்றப்படுவது நியாயமானதே.

இந்த யுகத்தில் பாளி இலக்கியம் பல்வேறு துறைகளிலும் போசிக்கப்படுவதில் செல்வாக்குச் செலுத்திய ஓரம்சமாக சமஸ்கிருத மொழியும் இலக்கியமும் அடைந்திருந்த வளர்ச்சியைக் குறிப்பிடலாம். பராக்கிரமபாகு இளவரசனின் கல்வி பற்றி சூளவம்சம் தரும் விளக்கத்திலிருந்து பொலன்னறுவை யுகத்தில் சமஸ்கிருத மொழியையும் இலக்கியத்தையும் கற்பதிலிருந்த ஆர்வத்தை நாம் காணக் கூடியதாக உள்ளது. இந்திய அரசியல் நூலொன்றான கௌடில்யரின் 'அர்த்த சாஸ்திரம்' மற்றும் சமூக சட்ட திட்டங்கள் உள்ளடங்கிய நூலான 'மானுட தர்ம சாஸ்திரம்' அல்லது 'மனுஸ் மூர்த்திய' எனும் நூல் அக்கால இளவரசர்களின் கல்வியில் கட்டாய நூலாக விளங்கியது. இதனை மகா பராக்கிரமபாகு, இரண்டாம் விஜயபாகு, நிஸ்ஸங்கமல்ல, சாகசமல்ல ஆகிய மன்னர்களுடன் தொடர்பான மூலாதாரங்கள் தெளிவுபடுத்துகின்றன. மேற்படி மன்னர்களின் கல்வெட்டுக்களில் காணப்படும் சமஸ்கிருதம் கலந்த மொழிநடை சிங்கள மொழி வளர்ச்சிக்கு சமஸ்கிருதம் வழங்கிய பங்களிப்பையும் 'தாடவம்சம்' மற்றும் 'அபிதானப்ப தீபிகாவ' எனும் நூல்கள் பாளி மொழியின் வளர்ச்சிக்கு சமஸ்கிருத மொழி வழங்கிய பங்களிப்பையும் சிறப்பாக எடுத்துக் காட்டுகின்றது. 'வுத்தோதய' எனும் பாளி மொழி பற்றிய நூலும் 'சுபோதாலங்காரய' எனும் பாளி மொழியின் அலங்கார விதிகள் பற்றிய நூலும் தோன்றுவதில் சமஸ்கிருத மொழியின் அலங்கார விதிகள் சட்டதிட்டங்கள் அடங்கிய நூலொன்று செல்வாக்குச் செலுத்தியுள்ளது. புத்த பெருமானின் குணநலன்களை வர்ணிக்கும் வகையில் எழுதப்பட்ட 'அனுருத்த சதகம்' எனும் சமஸ்கிருத காவிய நூல் பொலன்னறுவை யுகத்தில் வாழ்ந்த அனுருத்த தேரரால் எழுதப்பட்டதாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இலங்கையின் மரபு வழிக் கல்வியின் பாடநூல்களாகக் கருதப்பட்ட 'நாமாஸ்ட்ட சதகம்' மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘புத்தகத்ய’ என்பன பொலன்னறுவை யுகத்தில் எழுதப்பட்ட சமஸ்கிருத நூல்களில் அடங்குகின்றன.

## தம்பதெனிய யுகத்தின் ஆரம்பம் முதல் பதினைந்தாம் நூற்றாண்டில் இறுதி வரை

மொழி இலக்கியம் என்பவற்றின் வளர்ச்சியை இராசதானிகளுக்கு ஏற்ப யுகங்களாகப் பிரிப்பது அவ்வளவு பொருத்தமானதல்ல. பல்வேறு காரணிகளாலும் இராசதானிகள் இடம்பெயர்ந்துள்ளன. அக்காரணிகள் அனைத்தும் மொழி இலக்கியம் என்பவற்றில் பாதிப்புச் செலுத்தவில்லை. ஆயினும் நாட்டின் அரசியல் உறுதிப்பாடு மொழி மற்றும் இலக்கியம் என்பவற்றின் வளர்ச்சிக்குத் தேவையானதாகும். பொலன்னறுவை இராதானியின் வீழ்ச்சிக்கும் சிங்கள நாகரீகத்தின் அழிவுக்கும் காரணமாய் அமைந்த மாகனின் ஆக்கிரமிப்பு நாட்டு மக்களின் வாழ்க்கைக் கோலத்தின் ஒவ்வொரு துறைகளையும் பாதித்தது. மாகனின் படையினரால் பொலன்னறுவை நூல் நிலையங்களிலிருந்த நூல்கள் எல்லாம் தீயிட்டுக் கொளுத்தப்பட்டதாக வம்சக் கதைகள் தெளிவாகக் கூறுகின்றன. அவ்வாறு அழிக்கப்பட்ட நூல்களின் எண்ணிக்கையை வரையறுத்துக் கூறமுடியாதுள்ளது. அழிவுக்குட்படாத புத்தகங்களும் நாட்டின் அரசியல் உறுதியின்மையால் எவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டது என்பதும் கேள்விக்குரியதே.

தம்பதெனிய இராதானியின் ஆரம்ப கர்த்தாவான மூன்றாம் விஜயபாகு மன்னனும் அவனது மகனான இரண்டாம் பராக்கிரமபாகு மன்னனும் மாகனின் வருகையால் சீரழிந்த சிங்கள நாகரிகத்தை மீளக் கட்டியெழுப்புவதற்காக பல நடவடிக்கைகளையும் மேற்கொண்டதாக வம்சக் கதைகள் மூலம் தெரிய வருகின்றது. மூன்றாம் விஜயபாகு மன்னன் பொலன்னறுவையைக் கைவிட்டு பாதுகாப்புக் கருதி புலம் பெயர்ந்திருந்த பௌத்த பிக்குகளை தனது இராசதானிக்கு அழைத்து வந்து அவர்களது தர்ம சாஸ்திர சேவைகளுக்குப் பல்வேறு வழிகளிலும் உதவி செய்தான். பழம்பெரும் நூல்களை மீள எழுதுவதற்காக மூன்றாம் விஜயபாகு மன்னன் பௌத்த பிக்குகளுக்கும் பண்டிதர்களுக்கும் உதவிகளை வழங்கினான். பொலன்னறுவையின் முதலாம் விஜயபாகு மன்னனைப் போலவே இம் மன்னனும் நூல்களை உருவாக்கும் பிக்குகள், பொது மக்கள் இருசாராருக்கும் உதவி புரிந்துள்ளான். மூன்றாம் விஜயபாகு மன்னனின் இந்த இலக்கிய சமய சேவைக்கான அத்திவாரத்தை அடிப்படையாகக் கொண்டு பாரியதொரு இலக்கிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவன் இரண்டாம் பராக்கிரமபாகு மன்னனாவான். பொலன்னறுவை சாரிபுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகா தேரருக்குப் பின்னர் சங்க ராஜ பதவிக்கு வந்த சங்கரக்கித மகாதேரர் தம்பதெனிய யுகத்தில் வாழ்ந்த தலை சிறந்த பண்டிதராவார். அன்னாரும் திம்புலாகல வனவாசி மேதங்கர தேரரும் இணைந்து தயாரித்த 'ஆரம்ப தம்பதெனி கதிகாவத' எனும் நூல் இந்த யுகத்தின் மொழி வளர்ச்சியையும் புத்த சாசன நிலைமையையும் படம் பிடித்துக் காட்டும் சிறப்பான ஆக்கமாகும். அதன் பின்னர் இரண்டாம் பராக்கிரமபாகு மன்னனின் ஆட்சிக் காலத்தில் வெளியிடப்பட்ட 'தம்பதெனிய கதிகாவத' எனும் நூலுக்கு ஆரம்ப நூலாக மேற்படி நூலே அமைந்திருந்ததாகத் தெரிகின்றது. மூன்றாம் விஜயபாகு (1232 - 1236) மன்னனின் காலத்தில் வாழ்ந்த பண்டிதர்கள் பலரும் இரண்டாம் பராக்கிரமபாகு (1236 - 1270) மன்னனின் ஆட்சிக் காலத்திலும் சமயக் கல்வி இலக்கிய சேவைகளில் ஈடுபட்டு வந்தனர்.

பொலன்னறுவை யுகத்தில் எழுதப்பட்ட 'சன்ன' இலக்கிய வடிவம் இக்காலத்திலும் எழுதப்பட்டு வந்தது. வாசிஸ்ஸர தேரரின் 'சச்சசங்கப சிங்கள சன்னய' மற்றும் 'விசுத்திமக்க சங்கப சிங்கள சன்னய' எனும் நூல்களும் மூன்றாம் விஜயபாகு மன்னனின் காலத்தில் எழுதப்பட்டவையாகக் கருதப்படுகிறது. பல்துறைப் பாண்டித்தியம் பெற்றிருந்த இரண்டாம் பராக்கிரமபாகு மன்னனால் எழுதப்பட்ட 'விசுத்திமார்க்க சன்னய' எனும் நூல் தேரவாத பௌத்த சமயத்துக்குரிய அகராதியாகக் கருதப்படுமளவிற்கு சிறப்பு வாய்ந்ததாகத் திகழ்கின்றது. இவை தவிர பாளி மொழியின் சட்டத்திட்டங்களுக்கு ஏற்ப எழுதப்பட்ட 'வினிச சன்னய' எனும் நூலும் இம்மன்னனின் படைப்பாகும். மேற்படி 'சன்ன' இலக்கியங்கள் தவிர்ந்த தம்பதெனிய காலத்திலும் அதனையடுத்து வந்த நூற்றாண்டுகளிலும் எழுதப்பட்ட சன்ன வடிவிலான நூல்கள் பலவும் கிடைக்கப் பெற்ற போதிலும் அவை எழுதப்பட்ட காலத்தை அறிவது கடினமாகவுள்ளது.

சிங்கள இலக்கியத்தில் இப்போது எஞ்சியுள்ள மிகப் பழைய பெருங் காவியமான 'கவிசிலுமின' இரண்டாம் பராக்கிரமபாகுவின் படைப்பாகக் கருதப்படுகின்றது. 'சசதாவத' மற்றும் 'முவதெவ்தாவத' போன்ற காவிய இலக்கிய நூலான இது சமஸ்கிரத காவிய பிரபந்தங்களுக்குரிய சட்ட திட்டங்களைக் கடைப்பிடித்து காண்டங்களாக வகுக்கப்பட்டிருந்தது. 'குசஜாதகக் கதை'யை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட இப்பெருங்காவியம் அதன் ஆசிரியரின் சிங்கள மொழியாற்றலையும் புராதான சமஸ்கிருத காவியங்களிலிருந்த பரிச்சயத்தையும் நன்கு புலப்படுத்துகின்றது. தம்பதெனிய யுகத்துக்குரியதாகக் கருதப்படும் உரைநடை இலக்கியங்கள் பலவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகின்றன. அவற்றுள் தர்மசேன எனும் தேரரால் எழுதப்பட்டதாக ஏற்றுக் கொள்ளப்பட்ட 'சத்தர்ம ரத்னாவலிய' எனும் நூல் மிகவும் பிரபலமானதாகும். அது பாளி மொழியிலான 'தம்மபதக் கதை' யை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டதாகும். ஆயினும் நூலாசிரியர் அக்கால இலங்கை மக்களின் அன்றாட வாழ்க்கையின் தனது அனுபவங்கள் பற்றிய அறிவை நன்கு பயன்படுத்தி சுதந்திரமாகவும் மனதைக் கவரும் மொழி நடையிலும் தம்மபத்தில் இடம் பெறும் கதையை சிங்கள வாசகர்களுக்கு வழங்கியுள்ளார். மயூரபாத பிரிவனா அதிபரான புத்த புத்திர தேரர் எழுதிய 'பூஜாவலிய' எனும் இலகு சிங்கள உரைநடை இலக்கிய நூல் இந்த யுகத்தின் மொழி, இலக்கியம், சமூக நிலை என்பவற்றையும் அறிய உதவும் பெறுமதி வாய்ந்த நூலாகும்.

தம்பதெனிய யுகத்தில் பாளி இலக்கியமும் வளர்ச்சி கண்டிருந்தது இரண்டாம் பராக்கிரமபாகு மன்னன் சோழ நாட்டிலிருந்து திரிபிடகவாதிகளான சோழ பௌத்த பிக்குகளை இங்கு வரவழைத்து பாளி இலக்கிய வளர்ச்சியை ஊக்கப்படுத்தினான் என்பதிலிருந்து தெரியவருவது யாதெனில் பதின்மூன்றாம் நூற்றாண்டிலும் பிரபலமான தேரவாத பௌத்த மத்திய நிலையங்கள் தமிழ் நாட்டில் இருந்துள்ளதுடன் இலங்கை தேரவாத பௌத்த பிக்குகள் அவற்றுடன் சிறப்பான தொடர்புகளைப் பேணி வந்துள்ளனர் என்பதாகும். இந்த சோழ பௌத்த பிக்குகளாலும் அவர்களிடம் பாளி மொழியைக் கற்ற சிங்கள பௌத்த பிக்குகளாலும் எழுதப்பட்ட பாளி நூல்கள் பலவும் இந்த யுகத்துக்குரிய சாசன நூல்களுள் அடங்குகின்றன.

இரண்டாம் பராக்கிரமபாகு மன்னனின் காலத்தில் பஞ்சமூல (பஸ்முல) பிரிவெனா அதிபரால் 'ஹெசஜ்ஜ மஞ்சுசா' எனும் பாளி மொழியிலான வைத்திய நூல் எழுதப்பட்டது. இலங்கையின் புராதன நாட்டார் கதைகள் தொகுதியாக அமைந்த 'சஹஸ்ஸவத்துப்பகரண' எனும் பாளி மொழியிலான நூலைத் தழுவி எழுதப்பட்ட 'ரசவாஹினி' எனும் நூலும் சிவனொளிபாத தலம் பற்றிய கதைகளை மையமாக வைத்து எழுதப்பட்ட 'சமந்தகூட வர்ணணை' எனும் நூலும் இந்த யுகத்தில் வாழ்ந்த வேதேஹ எனும் தேரரால் எழுதப்பட்ட தலைசிறந்த பாளி நூல்களாகும்.

இந்த யுகத்தில் வாழ்ந்த அனோமதஸ்ஸி மகாதேரரின் மாணவர் ஒருவரால் 'ஹத்தவனகல்ல விஹாரவம்சம்' எனும் பாளி மொழியிலான கவிதையும் உரைநடையும் கலந்ததான காவியம் எழுதப்பட்டது. வானிடவியல் விஞ்ஞானம் மற்றும் நட்சத்திர சாஸ்திரம் பற்றிய 'தைவஞ்ஞ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமதேனு' எனும் சமஸ்கிருத நூலும் மேற்குறிப்பிட்ட அனோம தஸ்ஸி மகாதேரரால் எழுதப்பட்டதாகும். 'பூஜாவலிய' வை எழுதிய வாக்கிரிகல மயூரபாத பிரிவெனா அதிபரான புத்தபுத்திர தேரரால் எழுதப்பட்ட 'யோகார்ணவ' எனும் சமஸ்கிருத நூல் வைத்தியக் கலை பற்றி எழுதப்பட்ட பெறுமதி வாய்ந்த நூலாகும். இரண்டாம் பராக்கிரபாகு மன்னனின் காலத்தில் ஏற்பட்ட கல்வி மறுமலர்ச்சியைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கு அதனையடுத்து ஆட்சி பீடமேறிய நாலாம் விஜயபாகு மற்றும் முதலாம் புவனேகபாகு எனும் மன்னர்களும் நடவடிக்கைகளை மேற்கொண்டதாகத் தெரிகிறது. வனரதன மேதங்கர எனும் தேரரால் பாளி மொக்கல்லான இலக்கண முறையைத் தழுவி எழுதப்பட்ட 'பயோகசித்தி' எனும் பாளி இலக்கண நூலும் மேதங்கர எனும் தேரரால் எழுதப்பட்ட 'ஜினசரித' எனும் பாளி மொழியிலான காவிய நூலும் எழுதப்பட்டது இந்த யுகத்திலாகும்.

முதலாம் புவனேகபாகு மன்னனின் ஆட்சிக் காலத்தின் (1272 - 1284) பின்னர் நாட்டில் உறுதியற்றதொரு அரசியல் நிலைமை காணப்பட்டது. சிங்கள இராசதானியானது தம்பதெனியாவிலிருந்து யாப்பகுவ, குருணாகலை, கம்பளை முதலிய பல்வேறு இடங்களுக்கும் மாறியது. ஆறாம் பராக்கிரபாகு மன்னன் 1415 ஆம் ஆண்டு கோட்டை மன்னனாக முடிசூடும் வரையிலான காலப் பகுதி சிங்கள நாகரிகம் கடுமையான சிரமங்களுக்கு முகங்கொடுத்த காலப்பகுதியாகும். இவ்வுறுதியற்ற அரசியல் நிலைமையிலும் கூட கல்வியும் இலக்கியமும் தொடர் வளர்ச்சியைக் கண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

'பிரிவெனா' என்றழைக்கப்பட்ட கல்வி நிலையங்கள் பலவற்றினதும் வளர்ச்சி நிலையற்ற இராசதானிகளைக் கொண்ட இக்கால கட்டத்தில் நிகழ்ந்துள்ளமையை சமகால மூலாதாரங்களின் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. அவற்றுள் சில கல்வி நிலையங்கள் அநுராதபுர, பொலன்னறுவை காலம் முதல் பழமை வாய்ந்தவையாகக் காணப்பட்ட போதிலும் அவற்றின் கல்வி நடவடிக்கைகள் விஷேடமாக பிக்குமாருக்கான கல்விச் செயற்பாடுகள் மேன்மை பெற்று விளங்கியது இக்காலப் பகுதியிலாகும். இக்கல்வி நிலையங்கள் நிறுவனம் மற்றும் 'முல' எனும் பெயர்களாலும் அழைக்கப்பட்டுள்ளன. அத்துடன் சமகால மூலாதாரங்களின்படி இவ்வாறான எட்டு கல்வி நிலையங்கள் அல்லது குருகுலங்கள் இயங்கி வந்துள்ளமை தெரிகின்றது உண்மையில் இவற்றைக் கல்வி நிலையம் என்று குறிப்பிடுவதிலும் பார்க்க குருகுலம் என்று குறிப்பிடுவதே உசிதமானது. உதுறுமுல, கலதுருமுல, கபுறு முல, செனவிரத்முல, பஸ்பிரிவென் முல, வில்கம்முல, மஹாது முல,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஹநெத் பாமுல எனும் எட்டுமே அவையாகும். இக்கல்வி நிலையங்கள் அமைந்திருந்த இடங்களை அடையாளங் காண முடியாத போதிலும் அவற்றுடன் சம்பந்தப்பட்ட பல்வேறு அறிஞர்கள் பற்றி நூல்களிலும் சில கல்வெட்டுக்களிலும் விபரங்கள் காணப்படுகின்றன. அரசியலில் உறுதியற்ற நிலை காணப்பட்டபோதிலும் பொலன்னறுவை தம்பதெனிய யுகங்களில் ஏற்பட்ட கல்வி வளர்ச்சியைத் தொடந்தும் முன்னெடுத்துச் செல்வதில் இக்காலப் பகுதியில் வாழ்ந்த பொதுமக்கள், புத்த பிக்குகள் எனும் இரு பிரிவிலுமிருந்த அறிஞர்கள் பெரும் பங்காற்றியுள்ளனர் என்பதை இக்காலத்திற்குரிய கல்வி நிலையங்கள், அறிஞர்கள் பற்றிய தரவுகளிலிருந்து ஊகிக்க முடிகின்றது.

குருணாகலை இராசதானியின் நான்காம் பராக்கிரமபாகு மன்னனின் ஆட்சிக் காலம் கல்வி வளர்ச்சியில் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். கல்விமானான பௌத்த பிக்கு ஒருவரை சோழ நாட்டிலிருந்து வரவழைத்த இம்மன்னன் அத்தேரரின் மூலம் ஜாதக நூலொன்றை எழுதுவித்து பிற்காலத்தில் கல்விமான்களின் மத்திய நிலையமாக விளங்கிய விதாகம ஸ்ரீ கணானந்தா பிரிவெனாவை உருவாக்கி பௌத்த பிக்குகளுக்கு அர்ப்பணித்துள்ளான். ஜாதகக் கதைகளை சிங்களத்துக்கு மொழிபெயர்த்ததன் மூலம் உருவான 'சிங்கள ஜாதகப் புத்தகம்' எனும் நூலை வெளியிடுவதற்கு அந்நூலாசிரியருக்கு மன்னன் அனுசரணை வழங்கியுள்ளான். பாளி மொழியிலான ஜாதகக் கதைப் புத்தகம் பெரும்பாலும் இந்திய சமூகவமைப்பையும் சமூக சிந்தனைகளையும் அடிப்படையாகக் கொண்ட நூலாக அமைந்த போதிலும் 'சிங்கள ஜாதகப் புத்தகம்' அல்லது 'பன்சீய பனஸ் (550) ஜாதகக் கதைகள்' எனும் நூல் இலங்கை மக்களின் வாழ்க்கையையும் சமூகவமைப்பையும் பிரதிபலிக்கும் நூலாக அமைந்திருந்தது என்பது கல்விமான்களின் கணிப்பாகும். நான்காம் பராக்கிரமபாகு மன்னனின் வேண்டுகோளின் பேரில் தம் ரூ தம் பசங்கினா என்பவரால் எழுதப்பட்ட 'தளதா சிறித' எனும் நூல் புனித தந்ததாதுவின் வரலாற்றையும் அதற்கான வணக்க வழிபாட்டு முறைகளையும் விளக்கும் நூலாகும். குருணாகலை யுகத்தில் வாழ்ந்த பிரபல்யமான பண்டிதரும் களனி விகாரையின் தலைமைப் பிக்குவுமான வில்கம்முல ஸ்ரீ பராக்கிரம மகா தேரரால் 'எலு போதி வம்சம்' மற்றும் 'அநாகதவம்சம்' எனும் இரு நூல்கள் இயற்றப்பட்டன. முதலாம் பராக்கிரமபாகு மன்னனின் இறுதிக் காலப் பகுதியிலிருந்து நான்காம் பராக்கிரமபாகு மன்னனின் காலம் வரையிலான வரலாற்றுத் தகவல்களுடன் கூடிய மகாவம்சத்தின் மூன்றாம் பாகம் (சூளவம்சத்தின் இரண்டாம் பாகம்) எழுதப்பட்டதும் இக்காலப் பகுதியிலாகும். இவை தவிர சீலவங்ச எனும் பிக்குவால் எழுதப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தாது மஞ்சுசா' எனும் பாளி இலக்கண நூலும் குருணாகல் இராசதானிக் காலத்துக்குரியதாகும்.

கம்பளை இராசதானிக் காலமும் இலக்கியத் துறையில் சிறப்புற்றுத் திகழ்ந்தது. கம்பளையிலிருந்து ஆட்சி செய்த நான்காம் புவனேகபாகு பௌத்த சங்க சம்மேளனத்தை நடாத்தி பௌத்த சாசனத்தை மேம்படுத்தியமையும் இலக்கியத் துறை வளர்ச்சிக்கு ஏதுவாயமைந்தது. 'சந்தேச' எனப்படும் தூது இலக்கியங்களின் தோற்றம் இந்த யுகத்திலே ஆரம்பமானது. சிங்கள இலக்கியத்தில் இன்று காணப்படும் மிகப் பழைய தூது காவியங்களான 'மயூர சந்தேசய' மற்றும் 'திசர சந்தேசய' எனும் நூல்கள் கம்பளைக் காலத்தில் எழுதப்பட்ட சிறப்பான இலக்கியப் படைப்புகளாகும். சிறிது காலம் தலைநகராகத் திகழ்ந்த தெடிகமவிலிருந்து ஆட்சி செய்த ஐந்தாம் பராக்கிரமபாகு மன்னனுக்கு தெவிநுவர உபுல்வன் தெய்வத்தின் பாதுகாப்பை வேண்டி எழுதப்பட்ட 'திசர சந்தேசய' தெவிநுவரையில் வாழ்ந்த பௌத்த பிக்கு ஒருவரின் படைப்பாகும். கவீஸ்வர எனும் பண்டிதரால் எழுதப்பட்ட 'மயுரசந்தேசய' எனும் நூல் கம்பளை மன்னனான ஐந்தாம் புவனேகபாகு மற்றும் அரச குடும்பத்தினருக்கும் அமைச்சர்களுக்கும் நன்மை வேண்டும். வகையில் அமைந்திருந்தது. இதுவும் உபுல்வன் தெய்வத்திடமே இறைஞ்சப்பட்டிருந்தது. அக்கால சமய நம்பிக்கையில் உபுல்வன் தெய்வத்திற்கிருந்த புகழும் நம்பிக்கையும் பற்றி அறிந்து கொள்வதற்கும் நாடு மற்றும் சமூகம் பற்றி அறிந்து கொள்வதற்கும் இவ்விரு நூல்களும் முக்கியமனவையாகும்.

அமரகிரி வாசயே வனரதன அல்லது தெவனகல வனரதன எனும் பெயரில் பிரபலமான பௌத்த தேரர் ஒருவர் கம்பளையின் ஆரம்ப காலத்தில் சங்கராஜ பதவியை வகித்ததாகத் தெரிகின்றது. அவரையடுத்து அப்பதவிக்கு வந்த தம்மகித்தி மகா தேரர் புகழ் பூத்ததொரு கல்விமானாவார். அன்னாரால் 'பாரமீ மகாசதக' மற்றும் 'ஜனானுராக சரித' எனும் பாளி மொழியிலான இரு காவியங்கள் எழுதப்பட்டன. வில்கம்முல மகாதேரரின் மருமகன் உறவு முறையான கதாரா உபதபஸ்ஸி தேரரால் எழுதப்பட்ட 'வுத்தமாலா சந்தேச சதக' எனும் பாளி நூல் வரலாற்றுத் தகவல்களைத் தரும் சிறப்பான நூலாகும் இக்காவியம் கூறுவதன்படி அக்காலத்தில் வாழ்ந்த கல்விமான்களான பௌத்த தேரர்கள் அனைவரும் ஜாதிகாம அல்லது தெடிகம எனப்படும் மகா விகாரையிலே வசித்து வந்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாம் பராக்கிரமபாகு மன்னனின் காலத்தில் கலதுருமுல, செனவிரத்முல, மஹநெத் பாமுல, வில்கம்முல ஆகிய கிராமவாசி பிரிவு பௌத்த பிக்குகளும் வனரதன, தம்மகித்தி, புவனேகபாகு எனும் ஆரணிய வாசிப் பிரிவைச் சேர்ந்த தேரர்களும் தெதிகம மகா விகாரையிலே வசித்து வந்துள்ளனர். 'விமுக்தி சங்கஹ' எனும் உரை நடையிலான தர்ம நூல் லங்கா செனவிரத் பிரிவெனாவைச் சேர்ந்த வில்கம்முல மகாதேரர் ஒருவரால் எழுதப்பட்டதாகும்.

கடலாதெனிய விகாரையைச் சேர்ந்த தேவரக்கித ஜயபாகு தம்மகித்தி மகாதேரர் கம்பளை யுகத்தில் வாழ்ந்த பிரபலமான அறிஞராவார். இலங்கை புத்தசாசன வரலாற்றை முறைப்படி கூறும் நூலான 'நிகாய சங்கிரஹ' வும் 'ரசவாஹினி' எனும் பாளி நூலின் கதையை அடிப்படையாக வைத்து எழுதப்பட்ட பெரிய உரைநடை நூலான 'சத்தர்மாலங்காரய'வும் மேற்படி மகாதேரரின் படைப்புகளாகும் நூலாசிரியர் பெயரை அறியமுடியாத 'பாலாவதாரய' எனும் பாளி மொழி இலக்கண நூலுக்கான சிங்கள விளக்கவுரை நூலும் இத் தேரராலேயே எழுதப்பட்டது. அது 'பாலாவதார சன்னய' எனும் பெயரில் பிரபலமானதொரு நூலாக அமைந்தது.

கோட்டை இராச்சியத்தில் ஆறாம் பராக்கிரமபாகு மன்னனின் ஆட்சிக் காலம் (1412 - 1464) கல்வித்துறையில் சிறப்பு வாய்ந்த காலமாகும். இதற்கு முன்னைய காலத்தில் பல்வேறு பெயர்களாலும் அழைக்கப்பட்ட பிக்குமார் கல்வி நிலையங்கள் 'பிரிவெனா' எனும் பெயரில் பிரபலமடைந்து வளர்ச்சி கண்டது இம்மன்னனின் காலத்திலேயாகும். இக் காலத்தில் இயங்கி வந்த பல பிரிவெனாக்களின் பெயர்கள் அக்காலப் பகுதிக்குரிய இலக்கியங்களிலும் கல்வெட்டுக்களிலும் காணப்படுகின்றன. காரகல பத்மாவதி, தொட்டகமுவே விஜயபாகு, விதாகம ஸ்ரீ கணானந்த, தெவிநுவர இருகல்குலதிலக, லங்கா செனவிரத், எரபத்தொட்ட தர்மராஜ, உஸ்ஸா பிட்டியே மஹாபாய, பப்பிலியானே சுனேத்ரா தேவி என்பன கோட்டை காலத்தில் இயங்கி வந்த பிரிவெனாக்களாகும். இவற்றுள் காரகல பத்மாவதி பிரிவெனா பற்றி 'ஹங்ச சந்தேசய' விலும் தொட்டகமுவ விஜயபாகு பிரிவெனா பற்றி 'கிரா சந்தேசய' விலும் விபரிக்கப்பட்டுள்ளது.

இந்த யுகத்தைச் சேர்ந்த கல்விமான்களுள் தொட்டகமுவே ஸ்ரீ ராஹுல மகாதேரர், விதாகம மைத்திரிய மகா தேரர், காரகல வனரதன மகாதேரர் என்போர் முன்னணியில் இருந்தனர் ஆறாம் பராக்கிரமபாகு மன்னனும் அவரது மருமகன் முறையான நன்னெருந்துணையார் எனும் அமைச்சரும் இக் காலத்தில் வாழ்ந்த நூலாசிரியர்களாவர். தொட்டகமுவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ ராஹுல தேரரின் இந்திய மாணவனான ஸ்ரீ ராமசந்திர பாரதி என்பவர் இந்த யுகத்தில் வாழ்ந்த பிரபலமான சமஸ்கிருத பண்டிதராவார்.

கோட்டை யுகத்தில் இயங்கிய பிரிவெனாக்களில் முறை சார்ந்த கல்வியை பௌத்த துறவிகள், பொது மக்கள் என்ற இரு பகுதியினரும் பெற்றுக் கொண்டனர். அங்கு சிங்களம், பாளி, சமஸ்கிருதம், தமிழ், பிராகிருதம் ஆகிய மொழிகளும் காவியம், நாடகம், சோதிடம் ஆகிய உலகாயுதக் கலைகளும் கற்பிக்கப்பட்டதுடன் பிரதான பாடமாகத் திகழ்ந்தது திரிபிடக புத்த தர்மமாகும். சமஸ்கிருத நூல்களின் உதவியுடன் மகாயான புத்த தர்மமும் போதிக்கப்பட்டதுடன் புத்த சமயப் படிப்பினையின்படி துறவு நிலை, துறவு நிலை அல்லாத இரு பிரிவு மாணவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்பட்டமை இக்கல்வி நிலையங்களின் அடிப்படை நோக்கங்களுள் ஒன்றாகும்.

சிங்கள உரைநடையிலமைந்த கட்டுரைகள் கோட்டை யுகத்தில் மிகவும் பிரபலமான இலக்கிய வடிவமாகத் திகழ்ந்தது. சத்துஹத்த ஜாதகக் கதையை அடிப்படையாகக் கொண்டு ஸ்ரீ ராஹுல மகா தேரர் எழுதிய ‘காவிய சேகர’ சிங்களத்தில் தோன்றிய இரண்டாவது பெருங் காவியமாகும். குத்தில ஜாதகக் கதையை அடிப்படையாகக் கொண்டு வாத்தாவ எனும் தேரரால் எழுதப்பட்ட ‘குத்திலகாவியம்’ இலகுவான மொழி நடையில் எழுதப்பட்ட பெறுமதியான நூலாகும். விதாகம தேரரரின் ‘புதுகுணாலங்காரய’ மற்றும் ‘லோவட சங்கராவ’ எனும் நூல்கள் புத்த பெருமானின் குண நலன்களையும் பௌத்த சமயத்தையும் இலகுவான சிங்கள கவிதை வடிவில் பொது மக்களிடம் கொண்டு செல்வதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சியின் விளைவாகும்.

சிங்கள கவிதை இலக்கியத்தைப் போசிப்பதில் கோட்டை யுகத்தில் எழுதப்பட்ட தூது இலக்கியங்கள் மிகவும் துணை புரிந்தன. ஸ்ரீ ராகுல மகா தேரரின் ‘பரவி சந்தேசய’ (புறா விடு தூது) மற்றும் ‘சலலிஹினி சந்தேசய’ (பூவை விடு தூது) நூலாசிரியர் யாரென்று தெரியாத ‘கிரா சந்தேசய’ (கிளி விடு தூது) மற்றும் ‘ஹங்ச சந்தேசய’ (அன்னம் விடு தூது) என்பன இக்காலத்துக்குரிய தூது காவியங்களாகும். ‘பெரகும்பா சிறித’ இக்காலத்தில் எழுதப்பட்ட புகழ்பாடும் காவியமாகும். இதன் பிரதான நோக்கம் ஆறாம் பராக்கிரமபாகு மன்னனின் மேன்மையை எடுத்தியம்புவதாகும். விதாகம மைத்திரிய தேரர் எழுதிய ‘கவி லகுணு மினிமல’ எனும் நூல் கவிதை இலக்கியத்தை விபரிக்கும் காவியமாகும். அத்துடன் கவிதை வடிவில் எழுதப்பட்ட நிகண்டு (அகராதி) நூலான ‘ருவன்மல’ ஆறாம் பராக்கிரமபாகு மன்னனால் எழுதப்பட்ட நூலாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதப்படுகின்றது. மேலும் இதே போன்றதொரு நூலான 'புராண நாமாவலிய' எனும் நூல் அரசனின் மருமகனான நன்னருந்துணையார் எனும் அமைச்சரால் எழுதப்பட்டதாகும்.

சிங்கள உரைநடை இலக்கியம் கோட்டை யுகத்தில் ஒரு விதத்தில் அழிவுக்குட்பட்டதாகத் தெரிகிறது. ஆறாம் பராக்கிரமபாகுவின் ஆரம்ப காலத்தில் தம்மதித்த விமலகீர்த்தி மகா தேரரால் எழுதப்பட்ட 'சத்தர்ம ரத்னாகரய' எனும் உரைநடை நூல் சமஸ்கிருதக் கலப்பு மிகுந்த மொழி நடையில் எழுதப்பட்டதாகும். தம்பதெனிய யுகத்தில் பாளி மொழியில் எழுதப்பட்ட 'ஹத்தவனகல்ல விகாரை வம்சம்' எனும் நூலின் மற்றொரு சிங்கள மொழிபெயர்ப்பு நூலும் உள்ளது. இந்நூல் விதாகம மகா தேரர் சொல்ல அவரது சீடர் ஒருவரால் எழுதப்பட்டுள்ளது. 'மொக்கல்லான வியாக்கரண' எனும் நூலுக்கு விளக்கவுரையாக ஸ்ரீ ராஹுல மகா தேரரால் எழுதப்பட்ட 'பஞ்சிகா பிரதீபய' எனும் நூலும் இக்காலத்துக்குரிய உரைநடை நூலாகக் கருதப்படுகிறது.

பாளி இலக்கியம் தொடர்பாக குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் கோட்டை யுகத்தில் காண முடியவில்லை. ஏனெனில் இக் காலத்தில் எழுதப்பட்ட பாளி மொழியிலான ஒரே நூலாகக் காணப்படுவது ஸ்ரீ ராஹுல மகா தேரரால் 'மொக்கல்லான வியாகரண' எனும் நூலை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட 'பத சாதன டீகாவ' எனும் நூலாகும்.

கோட்டை யுகத்தில் எழுதப்பட்ட சமஸ்கிருத நூல்கள் சிலவும் காணப்படுகின்றன. பௌத்த பக்திப் பாடல்கள் நூறு அடங்கிய 'பக்தி சதகம்' ரம்முங்கொட தீபங்கர தேரரின் வாழ்க்கை வரலாறான 'வூர்த்த மாலாக்யாவ' சமஸ்கிருத காவியம் இயற்றுவதற்கான ஆலோசனை நூலான 'வூர்த்த ரத்னாகரய' வுக்கு எழுதப்பட்ட வியாக்கியான நூலான 'வூர்த்த ரத்னாகர பஞ்சிகா' எனும் சமஸ்கிருத மொழியிலான மூன்று நூல்களும் நாம் ஏற்கனவே குறிப்பிட்ட ராம சந்திரபாரதி எனும் பிராமணப் பண்டிதரால் எழுதப்பட்டவையாகும். இவை தவிர சமஸ்கிருத மொழிக் கலப்பில் உருவான சிங்கள வைத்திய நூல்களான வைத்திய சிந்தாமணி, பைசஜ்ய சங்கிறஹய, யோக ரத்னாகரய எனும் மூன்று நூல்களும் கோட்டை யுகத்துக்குரியனவாகவே கருதப்படுகின்றன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைகளின் வளர்ச்சி

## சோழர் ஆட்சிக் காலம்

சோழப் பேரரசின் ஆட்சி நிலவிய அரை நூற்றாண்டளவிலான காலப் பகுதி இலங்கையில் கலைகளின் வளர்ச்சி தொடர்பாக இருண்ட காலப் பகுதியாகும். அநுராதபுரத்திலும் அதற்கு வடக்கிலும் அமைந்திருந்த சமய தலங்கள் சோழரால் பாதுகாக்கப்படாமையாலும் புனரமைக்காமையாலும் அழிவடையும் நிலைக்குத் தள்ளப்பட்டன. அநுராதபுரத்தில் அமைந்திருந்த அரச மாளிகைகளும் ஏனைய உலகாயுத தேவைக்கான கட்டடங்களும் சோழரால் அழிக்கப்பட்டிருக்கலாம். ஆகவே அநுராதபுரத்தைத் தொடர்ந்தும் தமது தலைநகராக வைத்திருக்க முடியாத அளவிற்கு அந்நகரம் அவர்களால் அழிக்கப்பட்டிருக்கலாம் என்று கருத இடமுண்டு.

பொலன்னறுவையைத் தமது தலைநகராகத் தெரிவு செய்த சோழர்கள் தமது ஆட்சி நடவடிக்கைகளின்போது எவ்வாறான கட்டடத் தொகுதிகளை பயன்படுத்தியுள்ளனர் என்பதை சரியாகக் கூற முடியாதுள்ளது. ஏனெனில் சோழர் கால கட்டடக் கலையம்சங்களில் இப்போது எஞ்சியிருப்பது இரண்டாம் இலக்க சிவன் கோயில் எனப்படும் ஒரு சிறிய மாதிரி உருவம் மாத்திரமேயாகும். அக்கோயில் சுவரில் பொறிக்கப்பட்டிருக்கும் இராஜேந்திர சோழனின் கல்வெட்டுக்கள் மூலம் அவர்கள் ஆட்சி பீடமேறி சிறிது காலத்தில் அக்கோயில் அமைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.


உரு 8.1 பொலன்னறுவை இரண்டாம் இலக்க சிவன் கோவில்

மேலும் இந்தக் கோயிலின் பெயர் வானவன் மாதேவி ஈஸ்வரம் என்றும் கல்வெட்டு மூலம் அறிய முடிகிறது. இது இராஜராஜ சோழனின் பட்டத்து இராணியின் பெயராகும். இது தவிர பொலன்னறுவையிலும் அதனைச் சூழவும் அமைந்துள்ள இந்துக் கோயில்கள் சோழராட்சிக் காலத்தில் அமைக்கப்பட்டமைக்கான உறுதியான சான்றுகள் இல்லை.

மேற்படி சிவன் கோயில் சோழரின் கட்டடக் கலைப் பண்புகளின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டதாகும். ஒரு இந்துக் கோயிலுக்குரிய கட்டடக் கலைப் பண்புகளை இங்கு நாம் காண முடிகிறது. சற்சதுர வடிவிலான




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரப்பக்கிரகம், செவ்வக வடிவிலான மண்டபம் என்பன இக் கோயிலின் இரு பகுதிகளாகும். முழுக் கோயிலும் அலங்கரிக்கப்பட்ட ஓர் அத்தி வாரத்தின் மேல் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. கர்ப்பக் கிரகம் இருண்டதொரு கூரையைக் கொண்டுள்ளது. கோயில் முற்றுமுழுதாகக் கருங்கல்லினாலே அமைக்கப்பட்டுள்ளது. வெளித் தள்ளப்பட்ட தூண்கள் மூலம் சுவர் அலங்காரம் பெற்றுள்ளது. சுவர்களுக்கு மேலாக பிரமிட் வடிவிலான மூன்று மாடிகளைக் கொண்ட எண்கோண சிகரங்களைக் கொண்ட கோள வடிவிலான கூரை அமைந்தள்ளது. இவ்வடிவம் சமகால தமிழர் கட்டடக் கலைப் பாரம்பரியத்தை வெளிப்படுத்துகின்றது.

திருகோணமலைக்கு அண்மையில் நாதனார் கோயில் வளவில் காணப்படும் சிலைமனை ஒன்றின் இடிபாடுகள் பழைய வெல்கம் விகாரை என்றறியப்பட்டுள்ளது. இவ்விகாரை சோழரால் புனரமைக்கப்பட்டு ''இராஜராஜப் பெரும் பள்ளி'' எனும் பெயரில் அழைக்கப்பட்டது. ஆயினும் இன்று அக்கட்டடம் சோழர் கட்டடக் கலையம்சங்களைக் கொண்டுள்ளதா, என்பது சந்தேகத்துக்கிடமானது.

## முதலாம் விஜயபாகு மன்னன் காலம் முதல் 1215 வரை

பொலன்னறுவையைத் தனது தலைநகராக்கிக் கொண்ட விஜயபாகு மன்னன் புராதன விகாரை மற்றும் சமய தலங்களைப் புனரமைப்பதிலேயே தனது முழுக் கவனத்தையும் செலுத்தினான். அனுராதபுரத்தை மீண்டும் ஒரு நகராகக் கட்டியெழுப்புவதில் அவன் கவனம் செலுத்தியதாகத் தெரியவில்லை. ஆயினும் அநுராதபுரத்தில் இன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ள ஒரே யொரு உலகாயுதக் கட்டடமான சிதைந்து போயுள்ள அரச மாளிகை இம்மன்னனால் கட்டப்பட்டதாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. வம்சக் கதைகளின்படி முதலாம் விஜயபாகு மன்னன் இந்த மாளிகையிலிருந்தே தனது முடிசூட்டு விழாவை நிகழ்த்தியுள்ளான்.



உரு 8.2 பொலன்னறுவை அரச மாளிகை

பதினோராம் பன்னிரண்டாம் நூற்றாண்டுகளுக்குரிய ஆறு மாளிகைகளின் தடயங்கள் கண்டறியப்பட்டுள்ளன. விஜயபாகுவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரண்மனை அவற்றுள் ஒன்றாகும். அநுராதபுரம் உள் நகரில் உள்ள இடிந்து போன கட்டடம் பழைய கட்டடங்களின் பாகங்களைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளமை தெரிய வருகின்றது. இப்போதுள்ள நிலையில் இக்கட்டடத்தில் விசேட கட்டடக் கலையம்சங்களை இனங்காண்பது கடினமாகும். வம்சக் கதைகளில் பராக்கிரம புரம் என்று குறிப்பிடப்படும் பண்டுவஸ்நுவரவில் உள்ள அரச மாளிகையின் தடயங்கள் முதலாம் பராக்கிரமாகு மன்னனின் காலத்திற்குரியதாகும். இம்மன்னன் தக்கிண தேச ஆட்சியாளனாக இருந்த காலத்தில் வாழ்ந்த இம் மாளிகை மிகச் சிறப்பான முறையில் திட்டமிட்டு அமைக்கப்பட்டுள்ளதாக பேராசிரியர் பரணவிதான கூறுகின்றார். இலங்கையின் புராதன அரச மாளிகைகளுள் கண்கவரும் மாளிகையாக இருந்ததென்று கருதக்கூடியதான அரச மாளிகையின் தடயமொன்று பொலன்னறுவை உள்நகரில் அமைந்துள்ளது. இது மகா பராக்கிரமபாகு மன்னனின் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டதாக மகாவம்வம் குறிப்பிடும் 'வைஜயந்த பிரசாதய' எனும் மாளிகைக்குக்குரியதென அறியப்பட்டுள்ளது. பராக்கிரம சமுத்திரத்தின் மத்தியிலிருந்த தீவில் அமைந்திருந்த சிறிய மாளிகை ஒன்றின் தடயமானது இம் மன்னன் கட்டிய 'வசந்த மாளிகை' என அறியப்பட்டுள்ளது. நிஸ்ஸங்கமல்ல மன்னனின் அரச மாளிகையின் தடயம் பராக்கிரம சமுத்திரத்தின் கிழக்குக் கரையிலே காணப்படுகின்றது. உருகுணை இராச்சியத்துக்கு சொந்தமான அரச மாளிகையொன்றின் தடயங்கள் உதுன்தொர அல்லது இன்றைய ஊவா மாகாணத்தின் கலபெத்த எனுமிடத்தில் கண்டறியப்பட்டுள்ளது.


இம்மாளிகையை அமைப்பதற்கு செங்கல்லே பிரதானமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. அநுராதபுரக் காலக் கட்டடங்கள் அதிகமாக கருங்கல்லினாலும் சுண்ணக் கல்லினாலுமே கட்டப்பட்டன. ஆனால் பொலன்னறுவைக் காலக் கட்டடங்கள் பெருமளவில் செங்கலினாலே கட்டப்பட்டது. இது பொலன்னறுவை யுகக் கட்டடக் கலையின் சிறப்பம்சமாகும். இக்கட்டடங்களின் உதிரிப் பாகங்களும் கூரையும் கம்பினாலும் பலகையினாலும் அமைக்கப்பட்டிருந்தன என்று கருத இடமுண்டு. அதனால் தான் மரத்திலான அப்பாகங்கள் அழிந்திருக்கக் கூடும் கூரைகள் ஓட்டினால் வேயப்பட்டிருந்தன என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

'சத்புமு 'அல்லது 'சத்மஹல் பிரசாதய' என்று வம்சக் கதைகளில் கூறப்படும் பொலன்னறுவை பராக்கிரமபாகுவின் மாளிகை இந்த யுகத்தின் உலகாயுத கட்டடக் கலைக்கு சிறந்த உதாரணமாகும். இம்மாளிகையின் பிரதான மண்டபம் தவிர ஏனைய அறைகளைச் சுற்றி இரண்டு அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று வரிசைகளில் அமைக்கப்பட்ட சிறிய அறைகள் ஐம்பதுக்கும் அதிகமாகக் காணப்பட்டன. மத்தியில் அமைந்த சுவரின் அகலம் பத்து அடியளவில் அமைந்ததிலிருந்து இக்கட்டடம் பல மாடிகளைக் கொண்டிருந்ததாக ஊகிக்க முடிகிறது. இம் மாளிகை சித்திர மண்டபம், ராஜவேஸ்ய பூங்கா மண்டபம், நடனசாலை எனும் துணைக் கட்டடங்கள் சிலவற்றையும் கொண்டிருந்தது. பிரதான மாளிகைக்கு கிழக்கில் அமைந்திருந்த ராஜவேஸ்ய பூங்கா மண்டபம் என்பது நாட்டு மக்கள் மன்னனை சந்திப்பதற்காக அமைக்கப்பட்டதாகும். ஆயினும் இப்போது அங்கு காணப்படும் மண்டபம் பிற்காலத்தில் புனரமைக்கப்பட்ட மண்டபம் என்று பேராசிரியர் பரணவிதான குறிப்பிடுகின்றார். இது கட்டடக் கலை அம்சங்களைப் பொறுத்த வரை பராக்கிரம சமுத்திரத்திற்குக் கிழக்காக அமைந்துள்ள நிஸ்ஸங்கமல்ல மன்னனின் ராஜசபா மண்டபத்தை ஒத்ததாகவே காணப்படுகிறது. இந்த யுகத்தின் அரச சபையின் இலட்சணங்களை அறிந்து கொள்வதற்கான சிறந்த உதாரணம் நிஸ்ஸங்க மல்ல மன்னனின் ராஜசபா மண்டபமாகும்.



உரு 8.3 நிஸ்ஸங்கமல்ல ராஜசபா மண்டபம்


நிஸ்ஸங்கமல்ல மன்னனின் ராஜசபா மண்டபத்தின் தென் எல்லையின் மத்தியில் அரசனின் சிம்மாசனம் இருந்ததுடன் அதற்கு எதிராக சமாந்தரமான முறையில் அமைக்கப்பட்ட தூண்களின் வரிசை இரண்டு காணப்பட்டது. மன்னன் சிம்மாசனத்தில் அமர்ந்த பின்னர் ஒவ்வொரு தராதரத்திலும் உள்ள அதிகாரிகளின் இருக்கைகள் ஒவ்வொரு தூண்களுக்கும் அருகிலே அமைக்கப்பட்டிருந்ததுடன் அத்தூண்களில் அதிகாரிகளின் பதவிப் பெயர்கள் கல்வெட்டுகளாகப் பொறிக்கப்பட்டுள்ளன. நிஸ்ஸங்கமல்ல மன்னனின் கல்வெட்டொன்றுடன் கூடிய இச் சிம்மாசனமானது சிங்க உருவத்துடன் கருங்கல்லில் செதுக்கப்பட்டுள்ளது.

அநுராதபுர யுகத்தைப் போன்று இந்த யுகத்தின் கட்டடக் கலையினதும் சிறப்பம்சம் யாதெனில் குளியலுக்கான தடாகங்கள் நிர்மாணிக்கப்பட்டமையாகும். பராக்கிரமபாகு மன்னனின் மங்குல் பூங்காவில் காணப்பட்ட கருங்கல் தடாகமான 'சீலா பொக்கரணீய' பற்றிய விபரங்கள் வம்சக் கதைகளில் காணப்படுகின்றன. இப்பொய்கையானது மேற்படி கட்டடங்கள் அமையப் பெற்ற பொலன்னறுவை உள் நகரின் கிழக்கு மதில் சுவருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியே அமைந்துள்ள 'குமார தடாகம்' என்று அறியப்பட்டுள்ளது. உள் நகரிலிருந்து தடாகத்திற்கு இறங்கிச் செல்வதற்கான படிவரிசை அமைக்கப் பட்டிருந்தது. கருங்கல்லிலான இப்படி வரிசையில் மான், உருவங்கள் செதுக்கப்பட்டிருந்தன. சதுர வடிவிலான இக்கருங்கல் தடாகம் மேலிருந்து கீழாக படிப்படியாக சிறிதாகும் வடிவில் அமைக்கப்பட்டிருந்தது. கருங்கல்லில் செதுக்கப்பட்ட சிங்க உருவமும், மகர உருவிலான கற்பீலிகளும் சாய்ந்திருக்கக்கூடிய இருக்கைகளும் இங்கு அமைக்கப்பட்டிருந்தன. தடாகத்தின் அருகே மண்டபம் ஒன்று இருந்தமைக்கான தடயங்கள் காணப்படுவதிலிருந்து அது அரச குடும்பத்தினர் நீராட வரும்போது ஆடை மாற்றிக் கொள்வதற்காக அமைக்கப்பட்டிருந்ததாக நாம் கருதலாம். நிஸ்ஸங்கமல்ல மன்னன் அமைத்த நீராடும் பொய்கை ஒன்று புதிய வாடிவீட்டின் அருகே காணப்படுகின்றது. அது குமார தடாகம் அளவுக்குப் பெறுமதியான கலைப்படைப்பாக அமையவில்லை.



உரு 8.4 குமார தடாகம்

## சமயம் சார்ந்த கட்டடங்கள்

பொலன்னறுவைக் கால சமய சார்பான கட்டடக் கலை பல்வகைமையைக் காட்டி நிற்கின்றது. முதலாம் விஜயபாகு மன்னன் சோழராட்சியில் சிதைவடைந்த தலங்களைப் புனரமைப்பதிலே தன் முழுக் கவனத்தையும் செலுத்தியதால் புதிய நிர்மாணங்களை மேற்கொள்ள முடியவில்லை என்றாலும் அவனால் அமைக்கப்பட்ட பிரதான சமய சார்பான கட்டடமாக பொலன்னறுவை தலதா மாளிகை வம்சக்கதைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. அது இன்று பொலன்னறுவை தலதா மெதுர என்றழைக்கப்படும் சதுர வடிவான நிலத்தில் அமைந்திருக்கும் அட்டதாகெய எனும் கட்டடம் என்று அறியப்பட்டுள்ளது. இது சற்சதுர வடிவிலான கர்ப்பக் கிரகத்தையும், செவ்வக வடிவிலான மண்டபத்தையும் கொண்டதொரு கட்டடமாகும். அநுராதபுர யுகத்தின் பிரபலமான கட்டடக் கலை மாதிரி இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.


மகா பராக்கிரமபாகு மன்னனின் ஆட்சிக் காலத்தில் லௌகீகக் கட்டடங்களைப் போலவே ஆன்மீகக் கட்டடங்கள் அமைக்கப்படுவதிலும் வளர்ச்சியைக் காண முடிந்தது. சோழர் ஆக்கிரமிப்பினால் ஏற்பட்ட அழிவினாலும் மகா விஜயபாகு மன்னனின் பின்னர் நாடு பல பிரிவுகளான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரை நூற்றாண்டளவிலான காலப் பகுதியில் புதிய கட்டடங்கள் அமைக்கப்படாமையாலும் சிங்களக் கட்டடக்கலை இருளடைந்த நிலையில் காணப்பட்டது. பிரபலமான கட்டடக் கலைஞர்களின் பற்றாக்குறை காரணமாக பயிற்சி பெறும் கலைஞர்களும் தென்னிந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட கலைஞர்களும் பராக்கிரமபாகு மன்னனின் காலத்தில் கட்டடங்களை அமைப்பதில் ஈடுபடுத்தப்பட்டனர் என்பதை வம்சக் கதைகள் கூறும் விபரங்களிலிருந்து அறிந்து கொள்ள முடிகின்றது. பொலன்னறுவை தாமரைத் தடாகம் முதலிய நிர்மாணங்களின்போது சில கற்பலகைகளை அடையாளமிடுவதற்கு தமிழ் எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது. எனவே இது மேற்படி கருத்தை மேலும் உறுதி செய்கின்றது. ஆயினும் பொலன்னறுவைக் காலக்கட்டக் கலையானது, அநுராதபுர கட்டடக் கலை அம்சங்களின் மற்றுமொரு வெளிப்பாடாக வளர்ச்சியடைந்ததே தவிர அது ஒரு போதும் வெளிநாட்டு கட்டடக் கலையம்சங்களைத் தழுவியதாக அமையவில்லை என்பதை நினைவில் வைத்துக் கொள்வது சிறந்தது.

பொலன்னறுவைக் கால கட்டடக் கலைஞர்களின் சிறந்த கட்டடக்கலை வடிவமாக செங்கல்லினால் அமைக்கப்பட்ட குவிவு வடிவிலான கூரையை உடைய சிலை மனைகளைக் குறிப்பிடலாம் என்பது பேராசிரியர் பரணவிதானவின் கருத்தாகும். குவிவு வடிவிலான கூரைகளையுடைய இத்தகைய மூன்று கட்டடங்களை பொலன்னறுவையில் காணக்கூடியதாயுள்ளது. அவற்றுள் பாதுகாக்கப்பட்ட கட்டடமாக தூபராம விளங்குகின்றது. அதனை மகா பராக்கிரமபாகு மன்னனின் அமைச்சரான மகிந்த என்பவர் நிர்மாணித்ததாக ஒரு கருத்து நிலவுகின்றது. இவ்வாறான கட்டடங்களுள் உன்னதமான படைப்பாகக் கருதப்படும் லங்காதிலக விகாரை முதலாம் பராக்கிரமபாகு மன்னனால் அமைக்கப்பட்டதாகும். ஜேதவன கட்டடத் தொகுதியின் பிரதான விகாரையான திவங்க சிலை மனை மூன்றாவது கட்டடமாகும். இக்கட்டடங்களுள் தூபாராமாவில் சமாதி புத்தர் சிலையும் மற்றைய இரண்டிலும் நிற்கும் சிலைகளும் அமைக்கப்பட்டுள்ளன.



உரு 8.5 பொலன்னறுவை தூபாராம கட்டடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்படி மூன்று சிலை மனைகளினதும் கட்டட வடிவமைப்பில் மூன்று பிரதான அம்சங்களை அவதானிக்க முடிகின்றது. அதாவது கட்டடத்துள் பிரவேசிக்கும் இடத்தில் அமைந்த துவார மண்டபம் அதனையடுத்து அமைந்துள்ள அந்தராலய எனும் பிரதான மண்டபம் உள்ளே அமைக்கப்பட்டுள்ள கர்ப்பக்கிரகம் என்பனவே அவையாகும். இது அநுராதபுரக் காலத்தில் அமைக்கப்பட்ட சிலை மனைகளில் கட்டட வடிவமைப்புத் திட்டமிடலை ஒத்ததாகவே காணப்படுகின்றது. இச்சிலை மனைகளின் சுவர்கள் மிகவும் உறுதியானவையாகும். எனவே சிலை மனையின் உள்ளே இடவசதி மிகவும் குறுகியதாகவே காணப்படுகின்றது. இந்த விகாரைகளில் புத்தர் சிலைகள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள கர்ப்பக்கிரகம் ஒடுக்கமான ஒரு ஜன்னலூடாகவே வெளிச்சம் பெற்றது. பிரதான மண்டபத்தின் இரு பக்கச் சுவர்களிலும் வெளிப்பக்கமாக ஜன்னல்கள் வைக்கப்பட்டிருந்தாதகவும் தெரிய வருகின்றது.

பொலன்னறுவையில் அமைந்துள்ள மிகச்சிறப்பான இலட்சணங்களை உடைய கட்டடமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள ஹட்டதாகெய என்பது புனித தந்ததாதுவை பிரதிஷ்டை செய்வதற்காக நிஸ்ஸங்கமல்ல மன்னனால் கட்டப்பட்டதாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. சற்சதுர வடிவிலான கல்வேலி அடைப்புக்குள் அமைக்கப்பட்டுள்ள 'ஹட்டதாகெய' ஒரு கர்ப்பக் கிரகத்தையும் ஒடுங்கிய துவார மண்டபத்தையும் கொண்டதாகும். அத்திவாரத்திலிருந்து (9) ஒன்பது அடி உயரமானதாக அமைக்கப்பட்ட எளிய முறையிலமைந்த சதுர வடிவிலான கருங்கல் சுவரில் குறுக்காகவும், நெடுக்காகவும் சோடியமைப்பிலான செதுக்கல் கலையம்சங்கள் காணப்பட்டன. கர்ப்பக்கிரகத்தில் புத்தரின் சிலைகள் பிரதிஸ்டை செய்யப்பட்டிருந்தன. பிரதான மண்டபத்தின் இடது பக்க மூலையில் ஒன்பது படிகளைக் கொண்ட மேல் மாடியொன்று காணப்பட்டது. அதற்கும் மேலாக மரத்திலான மான் உருவங்களைக் கொண்ட மண்டபமொன்று காணப்பட்டது. அங்குதான் புனித தந்ததாது வைக்கப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

நிஸ்ஸங்கமல்ல மன்னனால் அமைக்கப்பட்ட மற்றுமொரு மனங்கவர் மண்டபம் 'நிஸ்ஸங்க லதா' மண்டபமாகும். பிரித் பாராயணத்தை செவிமடுக்கவும் புனித தந்த தாதுவுக்குப் பூஜை புனஸ்காரங்கள் செய்வதற்கும் மன்னனால் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் இம்மண்டபத்தைச் சுற்றி கல்லினால் அமைக்கப்பட்ட அலங்கார வேலியின் தூண்களும் குறுக்குத் தடைகளும் எளிமையாக அமைக்கப்பட்டிருந்தன. அம்மண்டபத்தில் பூங்கொடி அமைப்பில் செதுக்கப்பட்ட தூண்களின் உச்சி தாமரை மொட்டுகளைப் போன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைக்கப்பட்டுள்ளன. இம்மண்டபத்தில் காணப்படும் எட்டுத் தூண்களின் மேல் மிகவும் அலங்காரமான மரத்தினாலான கூரை அமைக்கப்பட்டு அது ஓட்டினால் வேயப்பட்டிருந்திருக்கலாம் என்று தொல்பொருள் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

ஜேதவன என்றழைக்கப்படும் விகாரை வளவினுள் அமைந்திருந்த ஆலாஹண பிரிவெனா கட்டடத் தொகுதியின் மேல் மட்டத்தில் பத்த சீமாபாசாதய எனும் கட்டடம் அமைக்கப்பட்டிருந்தது. இது பன்னிரண்டு மாடிகளைக் கொண்டிருந்ததாக வம்சக் கதைகளில் குறிப்பிடப்பட்ட போதிலும் அவை பிரதான மண்டபத்தைச் சுற்றி அமைக்கப்பட்டிருந்த 12 தனித்தனி மண்டபங்களாக இருந்திருக்கலாம் என்பது பேராசிரியர் பரண விதானவின் கருத்தாகும். ஆயினும் இம்மண்டபத்தினுள் எஞ்சியுள்ள கற்றூண்களை அவதானிக்கின்றபோது அவற்றின் மேல் 12 மாடிகள் அமைக்கப்பட்டிருக்கலாம் என்று நம்புவது சிரமமில்லை. பராக்கிரம சமுத்திரக் குளக்கட்டு முடியுமிடத்தில் அமைந்துள்ள பொத்குல் விகாரை என்று அழைக்கப்படும் கட்டடமும் இந்த யுகத்தின் சிறப்பான நிர்மாணமாகும். 157 அடி சுற்றளவைக் கொண்ட உறுதியான அத்திவாரத்தின் மேல் சமமான உயரத்தில் கட்டியெழுப்பப்பட்ட சுவர்களின் மேல் மரத்தினாலான கூரை அமைக்கப்பட்டிருந்ததாகக் கருதப்படும் இக்கட்டடம் பராக்கிரமபாகுவின் இரண்டாவது மனைவியான சந்திராவதி இராணியால் நிர்மாணிக்கப்பட்டதாக அங்கிருந்து கிடைக்கப்பெற்ற கல்வெட்டொன்றின் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது.


பொலன்னறுவை ஆராமைகளில் நீராடும் தடாகங்கள் அமைக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றை அநுராதபுரக் கால ஆராமைகளின் பொய்கைகளுடன் எவ்விதத்திலும் ஒப்பிட முடியாதுள்ளது. திவங்க சிலை மனைக்கு இடது பக்கத்தில் அமைக்கப்பட்டுள்ள நீராடும் தடாகம் மரபு ரீதியான எட்டுத் தாமரை இதழ்களின் வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. இக்கால ஆராமை கட்டடத் தொகுதிகளுக்கான இன்னும் பல நீராடும் தடாகங்கள் கண்டு பிடிக்கப்பட்ட போதிலும் அவை முறையாகப் பாதுகாக்கப்படவில்லை என்று தெரிகிறது.

தூபிகளை நிர்மாணிக்கும்போது பொலன்னறுவைக் கால கட்டடக் கலைஞர்களும் அநுராதபுரக் கால கலைஞர்கள் பின்பற்றிய திட்டங்களையும் தொழில் நுட்பத்தையும் பயன்படுத்தியுள்ளனர் என்பது தொல் பொருளியலாளர்களின் கருத்தாகும். அநுராதபுர யுகத்தின் பின்னரைப் பகுதியில் தூபிகளை அமைப்பதில் புகழ்பெற்ற மாதிரியாகப் பின்பற்றப்படுவது மிகிந்தல கண்டக சைத்திய வடிவிலான நீண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்ப்பக்கிரகத்தைக் கொண்ட தூபிகளாகும் என்பது எட்டாம் நூற்றாண்டு முதல் பத்தாம் நூற்றாண்டு வரையிலான காலத்தில் அமைக்கப்பட்ட தூபிகளைப் பார்க்கும்போது தெரியவருகிறது. 'பேசா வலலு' எனும் வட்ட வடிவிலான முத்தட்டு வளையங்களுக்குப் பதிலாக நாற் சதுர மேடைக்கு மேலாக ஒடுங்கிச் செல்லும் வகையில் அக்கால தூபிகள் அமைக்கப்பட்டுள்ளன. ஆயினும் அநுராதபுர யுகத்தின் ஆரம்ப காலத்தைப் போன்று பொலன்னறுவைக் கால கட்டடக் கலைஞர்கள் பேசாவலலு எனும் முத்தட்டு வளையங்களை கொண்ட மேடையின் மேல் மிகப் பெரும் கர்ப்பக்கிரகத்தைக் கொண்ட தூபிகளை அமைத்தனர்.


உரு 8.6 பொலன்னறுவை கிரி விகாரை

ஆலாஹன பிரிவெனா வளவில் அமைந்துள்ளதும் இன்று வரை பாதுகாக்கப்பட்டுள்ளதுமான கிரி விகாரை பொலன்னறுவை யுகத்தில் அமைக்கப்பட்ட பாரிய தூபிகளுக்கு சிறந்த உதாரணமாகும். அது மகா பராக்கிரமபாகு மன்னனால் அமைக்கப் பட்ட சுஹத்த விகாரையாக அல்லது ரூபாவதி சைத்தியமாக இருக்கலாம் என்பது பேராசிரியர் பரணவிதான அவர்களின் கருத்தாகும். இவ்விகாரை யின் நீர்க் குமிழ் வடிவிலான கோளாகார கர்ப்பத்தின் மேல் சற்சதுர மேடையும் அதன் மேலமைந்த தேவர் மேடையும் அதன் மேலாக படிப்படியாக உச்சி நோக்கி சிறுத்துச் செல்லும் வகையில் அமைக்கப்பட்ட கோபுரத்தையும் காண முடிகின்றது.

தற்போது ரன்கொத் விகாரை என்றழைக்கப்படும் தூபி நிஸ்ஸங்க மல்ல மன்னனால் அமைக்கப்பட்ட 'ருவன்வலி தாகபை' என்று கல்வெட்டுக்கள் மூலம் அறிய முடிகின்றது. 'ஆலாஹனா பிரிவெனா'வுக்குத் தெற்காக அமைந்துள்ள இது அமைப்பில் 'கிரி விகாரை'யை ஒத்ததாக இருப்பினும் அளவில் அதனை விடப் பெரியதாகும். பழைய தூபிகளின் சற்சதுர மேடையின் மேல் மத்தியில் அமைக்கப்படும் சூரிய விம்பத்துக்குப் பதிலாக எட்டு இதழ்களைக் கொண்ட தாமரைப் பூ அமைக்கப்பட்டுள்ளமை இவ் விகாரையின் விசேட அம்சமாகும்.


மிகப் பாரியதொரு விகாரையைக் கட்டுவதற்கு திட்டமிட்டு முழுமைப்படுத்த முடியாமல் போனதாக சிலரால் கருதப்படும் 'தெமள மகாசாய' பராக்கிரமபாகு மன்னனால் கட்டப்பட்டதாகும். தென் இந்தியாவிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு வரப்பட்டபட்ட யுத்தக் கைதிகளால் கட்டப்பட்டமையால் இவ்விகாரை அப்பெயரைப் பெற்றதாக கருதப்படுகிறது. இவ்விகாரையின் கோளாகார கர்ப்பமானது இப்போது நிலத்திலிருந்து ஐம்பது அடி உயரமான வட்ட வடிவிலான மேடையாகக் காட்சியளிக்கின்றது. அதன் மேலமைந்த நாற்சதுர மேடையின் மேலமைக்கப்பட்ட சிறிய தூபி ஒன்றே இப்போது காட்சியளிக்கின்றது. பொலன்னறுவைக் காலத்துக்குரிய இதே வடிவிலமைந்த இன்னும் சில தூபிகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பாதி வரை கட்டப்பட்ட தூபியின் கர்ப்பக்கிரகத்தின் உச்சியின் மத்தியில் மிகச்சிறியதாக அமைக்கப்பட்ட தூபிகளையே இந் நிர்மாணங்களில் காணமுடிகிறது. மகா பராக்கிரமபாகு மன்னனின் பிறப்பிடமான தெடிகமவில் அமைந்தள்ள 'சூதிகர சைத்திய'மும் புத்தலவுக்கு அண்மையில் யுதகணாவையில் அமைந்துள்ள சைத்தியமும் இதே வகைகளைச் சேர்ந்ததும் இதே காலத்துக்குரியதுமான விகாரைகளாகும். 'யுதகனா விகாரை'யானது மகா பராக்கிரமபாகு மன்னனின் தாயாரை அடக்கம் செய்த இடத்தில் அமைக்கப்பட்ட நினைவுத் தூபியாகவும் இருக்கலாம். இம்மூன்று தூபிகளையும் பார்க்கும்போது அவை கட்டி முடிக்கப்படாத தன்மையையே வெளிக்காட்டுகின்றன. ஆயினும் அவை அக்காலத்துக்குரிய விகாரை, அமைப்பின் ஒரு வகையாக இருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. அதன்படி அவை மேலிதழ், கீழிதழ் என்றமைந்த சம்பிரதாய பூர்வமான தாமரை மலர் வடிவிலான அண்டத்தைக் கொண்ட விசேடமான தூபி வகையாகும் என்பது பேராசிரியர் பரணவிதானவின் கருத்தாகும். இவ்விகாரைகளின் உச்சியில் அமைக்கப் பட்டுள்ள சிறிய தூபிகள் தாமரைப் பூவின் தன்மையை வெளிக் காட்டும் வகையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாக பேராசிரியர் மேலும் குறிப்பிடுகின்றார்.


சத்மஹல் பிரசாதய' எனும் கட்டடம் பொலன்னறுவை யுகத்தில் அமைக்கப்பட்ட மற்றுமொரு தூபியாகும். இது படிப்படியாக மேல்நோக்கி சிறுத்துச் செல்லும் ஆறு மாடிகளைக் கொண்ட பிரமிட் அமைப்பிலான கட்டடமாகும். ஆரம்பத்தில் எண்கோண வடிவிலமைந்த இக்கட்டடம் பின்னர் சதுர வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாடிச் சுவரிலும் உட்குழிவான இடங்கள் அமைக்கப்பட்டு அவற்றில் தேவதை உருவங்கள் வைக்கப்பட்டிருந்தன. இவ்வாறான விகாரை அமைப்பு முறையை


உரு 8.7 சத்மஹல் பிரசாதய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்லாந்து உள்ளிட்ட தென்கிழக்கு ஆசிய நாடுகளிலே காணக் கூடியதாக வுள்ளது. பொலன்னறுவை யுகத்தில் மேற்படி வலய நாடுகளுடன் இலங்கைக்குத் தொடர்புகள் இருந்தமைக்கான சான்றுகள் உள்ளன. அதற்காக இவ்விகாரையை அமைப்பதற்கு தென் கிழக்காசிய நாடுகளிலிருந்து தொழினுட்ப உதவி பெறப்பட்டதாகக் கருதமுடியாது. இக்கட்டட நிர்மாணம் நிஸ்ஸங்கமல்ல மன்னனுடையதாகக் கருதப்படுகின்றது.


உரு 8.8 பொலன்னறுவை வட்டதாகய

நிஸ்ஸங்கமல்ல மன்னனால் புனருத்தாரனம் செய்து அலங்கரிக்கப்பட்ட பொலன்னறுவை 'வட்டதாகெய' என்ப்படும் வட்டதாது மனை புராதன யுகத்துக் குரியதாகக் கருதப்படுகின்றது. அநுராதபுர யுகத்தில் சிறிய தூபிகளைப் பாதுகாப்பதற்காக சைத்தியகர அல்லது வட்டதாது மனைகள் அமைப்பது மரபாகும். பொலன்னறுவை வட்டதாது மனையின் அமைப்பு மெதிரிகிரிய வட்டதாது மனையை ஒத்ததாகவே இருந்தது. இங்கு கூரையைத் தாங்குவசதற்காக உள்ளே அமைக்கப்பட்ட தூண் வரிசை இரண்டும் அழிந்து போயுள்ளன. வெளியே அமைந்துள்ள தூண் வரிசையானது ஒன்றையொன்று தொடர்புபடுத்தும் உயரமற்ற சுவராகக் காட்சியளிக்கின்றது. இக்கட்டையான சுவர் நான்கிதழ் பூ வடிவிலான செதுக்கல் கலையுடன் கூடிய ஜன்னல்களைக் கொண்டுள்ளது. வட்டதாது மனைக்குள் பிரவேசிப்பதற்கு கருங்கல்லில் செதுக்கப்பட்ட மானுருவங்களுடன் கூடிய படிவரிசையானது இன்னும் பல செதுக்கல் கலையம்சங்களினால் அலங்கரிக்கப்பட்டிருந்தது இந்த வட்டதாது மனையானது இலங்கையில் அமைக்கப்பட்ட மிகவும் அலங்காரமான வட்டதாது மனைகளுள் ஒன்றாகும் என்பது தொல்பொருளியலாளர்களின் அபிப்பிராயமாகும்.

அநுராதபுர யுகத்தைப் போன்றே பொலன்னறுவை யுகத்திலும் பாரிய தூபிகளின் நாலு திசைகளிலும் ‘‘வாஹல்கட’’ எனும் அமைப்பை நிர்மாணிப்பது மரபாகக் காணப்பட்டது. இந்த யுகத்தின் சிறப்பான வாஹல்கட வடிவமைப்பை கிரி விகாரையிலும் ரன்கொத் விகாரையிலும் காண முடியும். மாதிரி வடிவமைப்பில் அநுராதபுர வாஹல்கடவுக்கு முற்றிலும் மாறுபட்ட பொலன்னறுவை வாஹல்கட முற்றிலும் செங்கல்லினாலே கட்டப்பட்டுள்ளது. சிறப்பான முறையில் பாதுகாக்கப்பட்டுள்ள ரன்கொத் விகாரையின் வாஹல் கட சிறப்பான நிர்மாணமாகும். அதன்கீழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதி வெளியே நீட்டப்பட்ட தும்பிக்கையுடன் கூடிய யானையின் தலையும் வாமன உருவங்களும் தாமரைப்பூ அலங்காரங்களும் கொண்ட மூன்று தட்டுக்களை உடையது. சுவரிலிருந்து வெளித் தள்ளிய தூண்களுடன் கூடிய கோணங்கள் பேணப்பட்ட சுவராக உயர்ந்துள்ள மேல் பகுதி மாடிகளுடன் கூடிய வகையில் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

மேற்படி விபரங்களிலிருந்து தெரியவருவது யாதெனில் பொலன்னறுவை யுகத்தில் ஆன்மீக, லௌகீக கட்டடக்கலை இலங்கையில் உரிய முறையில் வளர்ச்சியடைந்துள்ளதுடன் சிற்சில இடங்களில் வெளிநாட்டு செல்வாக்குகளையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது என்பதாகும். பொலன்னறுவைக் கால மன்னர்கள் முகங்கொடுக்க நேரிட்ட பாரிய பிரச்சினை தேசிய கட்டடக் கலையில் அனுபவமும் தேர்ச்சியும் உள்ள கலைஞர்களின் தட்டுப்பாடாகும். பராக்கிரமபாகு மன்னன் தக்கிண தேச ஆட்சியாளராக இருந்த போது கருங்கல் செதுக்கல் கலைஞர்கள் பற்றாக்குறையாக இருந்தனர். பொலன்னறுவைக் கால மன்னர்கள் கட்டட நிர்மாணத்துக்காக தென்னிந்தியாவிலிருந்து சிற்பக் கலைஞர்களைத் தருவித்துள்ளனர் என்று கருத இடமுண்டு. பொலன்னறுவை யுகத்துக்குரியதாக அறிந்து கொள்ளப்பட்டுள்ள கட்டடங்கள் அதிகமாக முதலாம் பராக்கிரமபாகு மற்றும் நிஸ்ஸங்கமல்ல மன்னர்களின் ஆட்சிக்காலத்துக்குரியதாகும் என்பதிலிருந்து இக்காலத்துக்குரிய அரசியல் இழுபறி நிலையானது கட்டடக்கலையிலும் செல்வாக்குச் செலுத்தியுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

## சிற்பக்கலை

அநுராதபுரக் காலத்தைப் போலவே பொலன்னறுவை யுகத்திலும், சிற்பக் கலைஞர்களின் கவனம் முழுவதும் சமயம் சார்பான கட்டடங் களுக்கான நிர்மாணங் களாகவே காணப்பட்டன. அதாவது புத்தர் சிலைகள், போதிசத்துவர் சிலைகள், தேவர்களின் உருவங்கள் என்பவற்றுடன் பூ அலங்காரம் பூங்கொடி அலங்காரம் செதுக்கப்படுவதும் இக்காலத்தில் அதிகளவில் இடம்பெற்றுள்ளதை அவதானிக்க முடிகின்றது.


பொலன்னறுவை யுகத்துக்குரிய கட்டடங்களில் காணப்படும் எல்லா புத்தர் சிலைகளும் அக்காலத்துக்குரியனவா என்பது சந்தேகத்துக் கிடமானதே. ஏனெனில் இங்கு காணப்படும் சில புத்தர் சிலைகள் அநுராதபுக் கால சிலைகளைப் போலவே காணப்படுகின்றன. அதாவது ஆக்கிரமிப்பாளர் களால் உடைத்தொழிக்கப்பட்ட பழைய விகாரைகளினுள் நல்ல நிலையில் காணப்பட்ட புத்தர் சிலைகளைக் கொண்டு வந்து பொலன்னறுவையில்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைக்கப்பட்ட புதிய கட்டடங்களுள் பிரதிஷ்டை செய்திருக்கலாம் என்று தொல்பொருளியலாளர்கள் கருதுகின்றனர்.

முதலாம் விஜயபாகு மன்னனால் உருவாக்கப்பட்ட பொலன்னறுவை தலதா மாளிகையின் கர்ப்பக் கிரகத்தில் காணப்படும் புத்தர் சிலையின் காவியுடையின் அமைப்பு முற்று முழுதாக அநுராதபுரத்துக்குரிய முறையில் காணப்படுகின்றது. பொலன்னறுவை யுகத்திற்குரிய சிலைகளை நாம் கல் விகாரையிலே காணமுடிகின்றது. இங்குள்ள புத்தர் சிலைகளின் முகத்திலிருந்து பின்புறம் சார்பான நெற்றியும் காவியுடையின் மடிப்பு தனி மடிப்பாக அல்லாமல் சமாந்தரமான இடைவெளி இரண்டைக் கொண்ட மடிப்பாகவும் அமைந்திருப்பதும் விஷேட இலட்சணங்களாகும்.


உரு 8.9 கல் விகாரை

கல் விகாரையில் காணப்பட்ட மூன்று புத்தர் சிலைகள் பற்றி வம்சக் கதைகளில் கூறப்பட்டுள்ளன. கிழக்குத் திசை நோக்கி அமைக்கப்பட்டுள்ள சயனச் சிலையும் அலங்கார ஆசனத்துடன் கூடிய சமாதி சிலையும் உள்ளே இருக்கும் சாமரம் வீசுவோரும் தேவர்களும் புடைசூழ அலங்கார ஆசனத்தில் அமர்ந்திருக்கும் சிலையும் அம்மூன்று சிலைகளெனக் கருத இடமுண்டு. ஆயினும் கல் விகாரையில் காணப்படும் நிற்கும் சிலை மேற்படி மூன்று சிலைகளை விட மனங் கவரத்தக்க வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்தச் சிலையானது புத்த பெருமான் இவ்வுலக வாழ்வை நீத்த போது கண்ணீர் மல்க நின்றிருந்த ஆனந்த தேரரின் சிலை என்பது பொது மக்களின் கருத்தாகும். ஆயினும் அது புத்த பெருமான் அடுத்தவரின் துன்பத்தைக் கண்டு தான் துன்புற்றிருக்கும் 'பரதுக்க துக்கித' முத்திரையை வெளிப்படுத்தி நிற்கும் புத்தர் சிலையாகும் என்பது பேராசிரியர் பரணவிதானவின் கருத்தாகும். ஆயினும் துன்பத்திலும் கவலை கொள்ளாத புத்தபெருமான் அடுத்தவரின் துயர் நிலை கண்டு துன்பப்படும் நிலையைக் காட்டும் வகையில் சிலை


உரு 8.10 வித்யாதர குகை
புத்தர் சிலை கல் விகாரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வடிப்பது பௌத்த கலைஞர்களின் நோக்கமாக இருந்ததா என்பதும் சந்தேகத்துக்கிடமானது.


வட்டதாகெயவில் அமைந்துள்ள நாலு புத்தர் சிலைகளும் பொலன்னறுவை யுகத்துக்குரியனவாகும். இச்சிலைகளின் கேசமானது மரபுரீதியான சுருள் சுருளான அமைப்புக்குப் பதிலாக தலையுடன் ஒட்டிய வகையில் அமைக்கப்பட்டிருப்பதும் மடிப்புக்களில்லாத காவியுடை உடலை ஒட்டியதாக அமைக்கப்பட்டிருப்பதும் விசேட அம்சங்களாகும்.

விகாரைகளின் பிரவேச வாயில்களின் படி வரிசைகளின் அலங்கார செதுக்கல் வேலைப்பாடுகளில் தமது கைவரிசையைக் காட்டுவது இக்கால செதுக்கல் கலைஞர்களுக்கு விருப்பமான செயற்பாடாக அமைந்தது. கொறவக்கல், காவற்கல், மனித உருவம் கொண்ட நாக உருவங்கள், சந்திரவட்டக்கல் என்பன படி வரிசையை அலங்கரித்தன. பொலன்னறுவை வட்டதாது மனையின் மேல் பகுதிக்குச் செல்வதற்காக அமைக்கப்பட்ட படிவரிசை கண்ணைக் கவரும் வண்ணம் அலங்கரிக்கப்பட்டுள்ளது. ஆயினும் பொலன்னறுவையில் அமைக்கப்பட்டுள்ள செதுக்கல் கலையம்சங்கள் அனைத்தும் அக்காலத்தக்குரியவை அல்ல. அநுராதபுரத்தில் அழிவடைந்த கட்டடங்களுக்கு முன்னாலிருந்த செதுக்கல் கலைப் படைப்புக்கள் பொலன்னறுவை யுகத்தக்குரிய கட்டடங்களை அலங்கரிப்பதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளதாக தெரிகிறது. லங்கா திலக விகாரையின் படிக்கட்டின் இரு பக்கங்களிலுமுள்ள கொரவக்கல் சோடியும் ராஜவேஸ்யா பூஜாங்க மண்டப கொரவக்கல் சோடியும் திவங்க சிலை மனையில் கொரவக்கல் சோடியும் இவ்வாறு அநுராதபுரத்திலிருந்து கொண்டு வரப்பட்டதாகக் கருதப்படுகின்றது. கல் விகாரையின் கற் பாறையில் அமைக்கப்பட்ட புத்தர் சிலைக்கு இரு பக்கங்களிலும் இருந்து சாமரம் வீசுவதாக கற்பாறையில் செதுக்கப்பட்டுள்ள உருவங்கள் பொலன்னறுவை யுகத்துக்குரிய சிறந்த செதுக்கல் கலை வடிவங்களாகும். இவ்வுருவங்கள் மனோகரமான உணர்ச்சி வெளிப்பாட்டையும் மிகவும் அழகான அவயவங்களையும் கலையம்சம் பொருந்திய ஆடையணிகளையும் கொண்டு சிறப்பான சிற்பக் கலையாக மிளிர்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உரு 8.11 பொலன்னறுவை
வட்டதாகய சந்திரவட்டக்கல்


உரு 8.12 பொலன்னறுவை
ஹட்டதாகே சந்திரவட்டக் கல்

பொலன்னறுவை யுக சந்திர வட்டக்கல்லானது செதுக்கல் கலையின் வீழ்ச்சியையே காட்டுகின்றது. இக்காலத்தக்குரிய சந்திர வட்டக்கற்களுள் கலைப் பெறுமதி வாய்ந்ததாகக் காணப்படுவது பொலன்னறுவை வட்டதா கயவின் வடக்கு வாசலில் அமைக்கப்பட்டுள்ள சந்திர வட்டக்கல்லாகும். அநுராதபுர யுகத்துக்குரிய சந்திர வட்டக்கல்லில் செதுக்கப்பட்டுள்ள யானை, சிங்கம், குதிரை, மாடு என்பன ஒன்றின் பின் ஒன்று ஓடுவதாக ஒரே வரிசையில் காட்டப்பட்டுள்ளது. ஆனால் பொலன்னறுவைக் கால சந்திர வட்டக்கல்லில் எருதின் உருவம் நீக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய ஒவ்வொரு மிருகங்களும் ஒவ்வொரு வரிசையில் ஓடுவதாக சித்தரிக்கப்பட்டுள்ளது. எருதின் உருவம் நீக்கப்பட்டமைக்கான காரணம் பொலன்னறுவைக் காலத்தில் காணப்பட்ட சைவ சமய செல்வாக்காகும். அல்லது இக்கால செதுக்கல் கலைஞர்கள் பெரும்பாலும் தென்னிந்தியாவைச் சேர்ந்தவர்களாக இருந்ததும் அதற்கு காரணமாய் அமைந்திருக்கலாம். பூ மற்றும் பூங்கொடி செதுக்கல், மிருக உருவங்களின் செதுக்கல் முதலிய அம்சங்களில் மேற்படி சந்திர வட்டக்கல் உயர் நிர்மாணமாக அமைந்த போதிலும் அநுராதபுரக் காலத்தைப் போன்று சுய நிர்மாணத் தன்மை இதில் காணப்படவில்லை. 'பத்தசீமா பாசாதய' மற்றும் ராஜவேஸ்யா பூஜாங்க மண்டபம் என்பவற்றி லமைக்கப்பட்டுள்ள சந்திர வட்டக் கற்களில் அதிகளவிலான செதுக்கல் அம்சங்கள் இடம்பெற்ற காரணத்தால் அவையிரண்டும் காலப்பெறுமதி குறைந்தனவாகக் காட்சியளிக்கின்றன. அநுராதபுர யுக சந்திர வட்டக் கல்லில் காணப்பட்ட பரிநிர்வாணக் கொள்கையானது பொலன்னறுவை யுக சந்திர வட்டக்கல்லில் எப்படியும் பிரதிபலிக்கவில்லை. அது படிக்கல்லின் ஆரம்பக் கால் துடைப்பமாகவே அமைந்தது.

பொலன்னறுவை யுகத்தின் கட்டடங்களின் அத்திவாரம், தூண், சுவர் என்பவற்றுக்கிடையிலான இடைவெளி மற்றும் சுவர்களினதும் தூண்களினதும் உச்சி இடைவெளிகள் என்பவற்றை அலங்கரிப்பதற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்பக்கலை பெரிதும் பயன்படுத்தப்பட்டுள்ளது. அடியும் நுனியும் அலங்கரிக்கப்பட்ட தூண்களை முதலாம் விஜயபாகு மன்னனால் அமைக்கப்பட்ட தலதா மாளிகையின் துவாரக மண்டபத்தில் காண முடிகின்றது. ராஜ்யவேஸ்யா பூஜாங்க மண்டபத்திலும் லங்காதிலக சிலை மனையினதும் முன்னால் அமைக்கப்பட்டுள்ள தூண்களின் முகப்பகுதி செதுக்கல்கள் மூலம் அலங்கரிக்கப் பட்டிருந்தது. வட்ட தாது மனையில் வட்ட வடிவிலான சுவர் நாலு இதழ்களைக் கொண்ட மலர்ச் செதுக்கல்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அம் மலர்கள் ஒவ்வொன்றும் மிகவும் அழகானவை. கல் விகாரையின் நிற்கும் சிலையின் பின்னால் அமைந்துள்ள கற்சுவரின் மீதிப் பகுதியும் அதன் தோரணமும் அலங்கார செதுக்கல் கலையம்சங்கள் பொருந்தியதாகும்.

பொலன்னறுவை யுகத்துக்குரிய சிறந்த வெண்கல உருவங்கள் சிலவும் கிடைக்கப்பெற்றுள்ளன. சிவ தேவாலய வளவில் கிடைக்கப் பெற்றுள்ள சிறப்பான சிவ உருவங்கள் இலங்கைக்குரியனவா என்பது கேள்விக்குரியதே. அவைகள் தென்னிந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டு பொலன்னறுவை சிவன் கோயிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கலாம். அதே போன்று பொலன்னறுவை சிவ தேவாலய வளவில் கண்டெடுக்கப்பட்டு இன்று கொழும்பு நூதன சாலையில் வைக்கப்பட்டுள்ள நடராஜர் சிலையும் அவ்வாறு தென்னிந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட வெண்கல நிர்மாணமாகும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தாகும்.


உரு 8.13 பொலனறுவை வெண்கல சிலை நடராஜர் உருவம்

## பொலன்னறுவை யுகத்தின் பின்னர் கட்டடக்கலை

பொலன்னறுவை இராசதானி வீழ்ச்சியடைந்தது முதல் 15ஆம் நூற்றாண்டு முடியும் வரையிலான காலப்பகுதியில் தம்பதெனிய, யாப்பகுவ, குருணாகல், கம்பளை, கோட்டை ஆகிய இராசதானிகள் நிலவியதாக ஏற்கனவே அறிந்தோம். இவை தவிர தெடிகமவும் ஆட்சி மையமாக சிறிது காலம் திகழ்ந்ததுடன் கோட்டை இராசதானி உருவாகுவதற்கு முன்னர் றைகமவும் சிறிது காலம் பிராந்திய ஆட்சித் தலைநகராகத் திகழ்ந்துள்ளது. வரலாற்று ரீதியாகப் பார்க்கும் போது தம்பதெனிய,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


யாப்பகுவ, குருணாகல் இராசதானிகள் சிறிது காலமே தலைநகராகத் திகழ்ந்துள்ளன. கம்பளை ஒரு போதும் முழு இலங்கைக்குமான தலைநகராகத் திகழவில்லை. ஆனால் அந்நகரை மையமாக வைத்து உருவான அரச வம்சம் நீண்ட காலம் மலையகத்தில் கோலோச்சியது. இத் தலை நகரங்கள் ஒவ்வொன்றும் உருவாவதற்கு அடிப்படைக் காரணம் பாதுகாப்பாகும். அதன்படி இயற்கையான பாதுகாப்புத் தவிர அகழிகள், சதுப்பு நிலங்கள், மதில்கள், கோபுரங்கள், அட்டாளைகள் முதலிய செயற்கைப் பாதுகாப்பு அம்சங்களும் தலை நகரங்களில் உருவாக்கப்பட்டதாக இலக்கிய மூலாதாரங்களின் மூலமும் தொல்பொருள் சான்றுகள் மூலமும் உறுதிப்படுத்தப்படுகின்றன.

மத்திய கால இலங்கையில் பாதுகாப்பு ஒழுங்கு விதிகளுடன் கூடிய தலைநகரங்களுக்கான உதாரணங்களாக தம்பதெனிய, யாப்பகுவ, குருணாகல் ஆகிய மூன்று தலைநகரங்களும் காணப்படுகின்றன. இம்மூன்று நகரங்களும் சீகிரியைப் போன்று குன்றுகளை அடிப்படையாகக் வைத்து உருவாக்கப்பட்டவையாகும். தம்பதெனிய நகரத்தின் பாதுகாப்புத் தடயங்களை மலைக் குன்றின் அடிவாரத்தில் காண முடியாத போதிலும் கட்டடங்கள் சிலவற்றின் அத்திவாரங்கள் மாத்திரம் அச்சூழலில் காணப்படுகின்றன. மத்திய கால இலங்கையின் பாதுகாக்கப்பட்ட நகரங்களுள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த நிர்மாணங்களை யாப்பகுவயிலே காண முடிகின்றது. சீகிரியாவைப் போலவே வெளியே அமைக்கப்பட்ட நீரகழிகளையும் அதற்கு சமாந்தரமாக உள் பகுதியில் அமைக்கப்பட்ட வெளி மதிலையும் அதற்கு சமாந்தரமாக சீகிரி கோட்டைக்கு மிக நிகரான கோட்டையொன்றின் தடயங்களையும் காணமுடிகின்றது. யாப்பகுவ குன்றின் தெற்கு மற்றும் தென் கிழக்குப் பகுதிகள் தவிர ஏனைய பகுதிகள் பெரும் பள்ளத்தாக்குகளால் அமைந்து இயற்கையான பாதுகாப்பை பெற்றுள்ளது. எனவே யாப்பஹுவவை தெற்கு, தென்கிழக்குத் திசைகளில் மாத்திரமே பாதுகாக்க வேண்டியிருந்தது. இவ்விரு பகுதிகளிலும் மண்ணரிப்பைத் தடுக்கும் வகையில் கல்லணைகள் அமைக்கப்பட்டு உருவாக்கப்பட்ட அத்திவாரங்களின் மேல் பலம் வாய்ந்த கோட்டை அமைக்கப்பட்டுள்ளது. இக்கோட்டையானது இரு மதில்களினாலும் இரு நீரகழிகளாலும் பாதுகாக்கப்பட்டுள்ளது. இவ்விரு மதில்களுக்கும் இடையிலான தூரம் 120 யார்களாகும். குன்றுக்கும் உள் மதிலுக்கும் இடைப்பட்ட பிரதேசம் உள் நகரம் எனப்பட்டது. அங்கே அரச மாளிகையும் இன்னும் சில கட்டடங்களும் இருந்தமைக்கான தடயங்கள் காணப்படுகின்றன. உள் மதில், வெளிமதில் இரண்டுக்குமிடைப்பட்ட பிரதேசத்தில் வெளி மாளிகையும் இன்னும் சில கட்டடங்களும் இருந்தமைக்கான சான்றுகள் கிடைத்துள்ளன. நகருக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரவேசிப்பதற்காக மதில் சுவரில் மூன்று வாயில்கள் காணப்பட்டதுடன் பிரதான வாயில் தென் திசையில் வைக்கப்பட்டிருந்ததாகத் தெரிகிறது. அவ்வாயில் மூலம் உள் மாளிகைக்குள் மாத்திரமே பிரவேசிக்கக்கூடியதாக இருந்தது. மேற்காகவும், கிழக்காகவும் காணப்பட்ட வாயில்கள் மூலமும் வெளி நகருக்குள் பிரவேசிக்கக் கூடியதாக இருந்தது.



உரு 8.14 யாப்பஹுவ கோட்டையின் வாயில் படிவரிசை

யாப்பகுவ இராசதானியின் எஞ்சியுள்ள தடயங்களுள் இன்றும் கண்ணைக் கவரும் நிர்மாணமாக நாம் காண்பது குன்று அடிவாரத்தின் கிழக்குத் திசையில் அமைந்துள்ள அரச மாளிகை என்று நம்பப்படும் கட்டடத்துள் பிரவேசிக்கும் இடத்தில் அமைந்துள்ள துவார மண்டபமும் அதனை அடைவதற்காக அமைக்கப்பட்ட செதுக்கல் கலையம்சங்களுடன் கூடிய படி வரிசையும் ஆகும். மேலும் இங்கு அமைந்திருந்த அரச மாளிகையும் மிக விசாலமானதாக இருந்திருப்பதாக தடயங்கள் மூலம் தெரிகின்றது. துவார மண்டபத்துடன் இணைக்கப்பட்டிருந்த படி வரிசையின் ஒரு பகுதி இப்போது அழிவடைந்துள்ளது. துவார மண்டபத்தைப் போலவே பிரதான மாளிகையும் இரு மாடிகளைக் கொண்டதாக இருந்திருக்கலாம் என்பதை அங்குள்ள தூண்களின் மூலம் அறியக் கூடியதாக உள்ளது. படி வரிசையின் உச்சியில் அமைந்துள்ள மண்டப சுவர்களின் மூலம் சுற்றியமைக்கப்பட்ட பகுதிகளைத் தாண்டி திறந்த வெளி மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டிருந்ததாகத் தெரிகின்றது. யாப்பகுவ அரச மாளிகையின் அமைப்பில் சமகால தமிழர் கட்டடக் கலை செல்வாக்குச் செலுத்தியுள்ளதாக நம்பப்படுகின்றது.

யாப்பகுவையில் உள்ள இன்று தலதா மாளிகை என்றழைக்கப்படும் கட்டடம் யாப்பகுவக்கால கட்டடக் கலையைப் பிரதிபலிக்கவில்லை. இக்கட்டடம் அதற்கு முன்னைய காலத்தைச் சேர்ந்ததாகும். சாதாரணமாக தலதா மாளிகை அரண்மனைக்கு அருகிலே அமைக்கப்படுவது வழக்கமாகும். அத்துடன் இக்கட்டடம் நகரின் பாதுகாப்பு மதிலுக்கு வெளியே அமைக்கப்பட்டுள்ளது என்பதாலும் அது யாப்பகுவ காலத்துக்குரிய தலதா மாளிகை அல்ல. அதற்கு முன்னைய புராதன காலத்தக்குரிய ஒரு சிலை மனைக் கட்டமாகக் கருதப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கட்டடமானது கர்ப்பக்கிரகம், வெளிமண்டபம், துவார மண்டபம் எனும் மூன்று பகுதிகளைச் கொண்டதாகும். கர்ப்பக்கிரகமானது கூரை வரையிலும் முற்றாகக் கருங் கல்லினால் கட்டப்பட்டுள்ளது. வெளிமண்டபத்தின் அத்திவாரமும் தூண்களும் கருங்கல்லினாலும் சுவர் செங்கல்லினாலும் அமைக்கப்பட்டுள்ளது. வெளி மண்டபத்தினதும், துவார மண்டபத்தினதும் கதவுகளிலும் நிலைகளிலும் செதுக்கல் அம்சங்களைக் காண முடிகின்றது. கர்ப்பக்கிரகத்தின் வாயிலுக்கு முன்னால் மகர தோரணம் அமைக்கப்பட்டிருந்தது அது இப்போது உடைந்து வீழ்ந்துள்ளதுடன் அம்மகர தோரணத்தின் அரைவட்ட ஜன்னலினுள் தியான நிலை முத்திரையுடன் கூடிய புத்தர் சிலை ஒன்று காணப்படுகின்றது. யாப்பகுவ யுகத்திற்குரிய கட்டடங்களுள் தமிழர் கட்டடக்கலை பண்பாடுகள் காணப்பட்ட போதிலும் இக்கட்டடமானது முழுமையான சிங்கள கட்டடக் கலை அம்சங்களையும் அலங்கார வடிவங்களையும் கொண்டுள்ளதென்பது அறிஞர்களின் கருத்தாகும்.


குருணாகல் இராசதானியானது இன்று 'அத்துகல' என்றழைக்கப்படும் மலைக் குன்றை கிழக்குக் காவலரணாகக் கொண்டே கட்டியெழுப்பப்பட்டிருந்தது. சமகால இலக்கிய நூலான 'தலதா சிறித' எனும் நூலில் விமரிசையாக வர்ணிக்கப்பட்டிருக்கும் அரண்மனையினதும் விகாரைகளினதும் தடயங்கள் இன்றைய மாவட்ட செயலாளரின் உத்தியோகபூர்வ வாசஸ்தல வளவினுள் காணப்படுகின்றன. நாலாம் பராக்கிரமபாகு மன்னன் கட்டிய தலதா மாளிகையின் தடயங்களும் அதே வளவில் இருக்கலாம் என்று நம்பப்பபடுகின்றது. தம்பதெனிய மற்றும் குருணாகல் யுகங்களில் கண்கவரும் கட்டடங்கள் காணப்பட்ட அலுத்நுவர, தெவிநுவர, தொட்டகமுவ, வெலிகம ஆகிய இடங்களில் கிடைக்கப்பெற்ற தடயங்கள் அங்கு அமைந்திருந்த கட்டடங்கள் பற்றி விபரிப்பதற்குப் போதுமானதல்ல. இங்கு இறுதியாகக் கூறப்பட்ட மூன்றிடங்களிலும் காணப்பட்ட கட்டடங்கள் போர்த்துக்கேயரின் தாக்குதல்களுக்குட்பட்டு அழிந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. தெவிநுவர சிலை மனையிலிருந்து எடுக்கப்பட்ட கருங்கல் நிலை மற்றும் கல் தூண்களைக் கொண்டு உருவாக்கப்பட்டதாகக் கூறப்படும் போர்த்துக்கேய தேவாலயம் ஒல்லாந்தரின் தாக்குதலால் அழிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

கம்பளை இராசதானிக் காலம் சிங்கள கட்டடக் கலையில் புதிய எழுச்சி ஏற்பட்ட காலப் பகுதியாகும். அரசியல் உறுதியற்ற நிலை, எதிரிகளின் தொல்லை, பொருளாதார வீழ்ச்சி என்பன காரணமாக பழைய சிங்கள கட்டடக் கலையை அவ்வாறே முன்னெடுத்துச் செல்வது முடியாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரியமாக இருந்தது. தமிழர் பண்பாட்டின் பாரிய செல்வாக்கு காரணமாகக் கலை அம்சங்களில் வேறுபாடுகள் ஏற்பட்டன. கம்பளை யுகத்திற்குரியதாகக் கருதப்படும் கடலாதெனிய விகாரை இலங்கையின் பௌத்த சமய கட்டடக் கலையில் இந்து சமய செல்வாக்கை வெளிப் படுத்தும் ஓரிடமாகும். கம்பளைக்கு அண்மையில் அமைந்துள்ள கடலாதெனிய அரசியல் ரீதியாகவோ சமய ரீதியாகவோ முக்கியத்துவம் பெற்றதல்ல. முற்று முழுதும் கருங்கல்லினால் நிர்மாணிக்கப்பட்ட கடலாதெனிய விகாரையை அமைத்த கணேஸ்வர ஆசாரி அவர்கள் கம்பளை சிந்துறுவான விகாரையின் தர்மகீர்த்தி மகா தேரரால் தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு வருவிக்கப்பட்டவராவார். இத்தேரர் தென்னிந்தியாவில் ஆந்திரா பிரதேசத்தின் அமராவதி பகுதியில் தனது சொந்த செலவிலேயே அலங்காரனமானதொரு விகாரையை அமைத்து பூஜோத்சவம் செய்ததாகவும் கூறப்படுகிறது. கடலாதெனிய விகாரையை நிர்மாணித்த கணேஸ்வர ஆசாரியும் ஏனைய கலைஞர்களும் தேரர் இந்தியாவிலிருந்து நாடு திரும்பிய போது அவரோடு வந்தவர்களாவார். தர்ம கீர்த்தி தேரர் தென்னிந்திய தொடர்பு கொண்டிருந்தார். கம்பளை நாலாம் புவனேகபாகு மன்னனின் கடலாதெனிய கல்வெட்டில் இவ்விகாரை பற்றிய தகவல்கள் விபரமாக அடங்கியுள்ளன. இவ்விகாரையானது கருங்கல் பாறை ஒன்றை அத்திவாரமாகக் கொண்டு கட்டியெழுப்பப் பட்டுள்ளது. அத்திவாரமாயமைந்த கற்பாறையின் மேல் அமைக்கப்பட்ட கருங்கல் சுவரின் மேல் குறுக்காக இடப்பட்ட கருங்கல்லினால் ஒரு தட்டு அமைக்கப்பட்டுள்ளது. அதன் மேல் செங்கல்லினால் கூரை அமைக்கப்பட்டுள்ளது. கடலாதெனிய விகாரையானது தென்னிந்திய ஆந்திராவின் கட்டடக் கலையை சிங்கள கட்டடக்கலைக்குப் பொருந்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ளதை நன்கு வெளிப்படுத்தி நிற்கிறது.




உரு 8.15 கடலாதெனி விகாரை

கடலாதெனியவுக்கு அண்மையில் கிழக்குத் திசையில் சிதுறுவான எனுமிடத்தில் கற்பாறையின் மேல் கட்டப்பட்டுள்ள லங்காதிலக விகாரையும் இக்காலத்துக்குரியதாகும். இக்கட்டட நிர்மாணப் பணிகளும் கடலாதெனிய கட்டடக் கலைஞர்களான ஆந்திர பிரதேசத்தவர் களாலேயே மேற்கொள்ளப்பட்டதாக லங்காதிலக விகாரை வளவினுள் அமைந்துள்ள குன்றுக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உரு 8.16 லங்கா திலக

இவ்விகாரையானது சற்சதுர கர்ப்பக்கிரகத்தையும் அதன் முன்னால் அமைந்த ஒடுங்கிய வெளி மண்டபத்தையும் கொண்டுள்ளது. இக்கட்டடம் அமைக்கப்படுவதற்கு முன்னர் உத்தேச விகாரைக்கு சுற்று வட்டமாகத் திண்ணையுடன் கூடியதொரு தடிப்பான சுவர் அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. அத்திண்ணையானது சுமார் ஏழு அடி அகலமானது இத்திண்ணை அமைந்ததை அடிப்படையாகக் கொண்டு அக்காலப் பகுதியில் பிரபலமடைந் திருந்த தெய்வச் சிலைகளை வெளிச் சுவரில் அமைக்க இலகுவாக இருந் துள்ளது. இவ்வாறு ஒரே கட்டடத்துள் விகாரையும் தேவாலயமும் அமைக்கப்பட்டது லங்கா திலக விகாரை யிலே என்பது குறிப்பிடத்தக்கதாகும். அதன் பின்னர் பௌத்த விகாரை அமைப்பில் அது சாதாரண விடயமாக மாறியது. இவ்விகாரைக்கண்மையில் காணப்படும் தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் வெவ்வேறாகப் பொறிக்கப்பட்டிருக்கும் குன்றுக் கல்வெட்டுக்களில் விகாரையினுள் அமைந்த பல்வேறு கலைப் படைப்புகள், சித்திரங்கள் மற்றும் அவற்றை அமைப்பதற்கு அனுசரணை வழங்கியவர்களின் பெயர் விபரங்களும் புத்தருக்கும் தெய்வங்களுக்கும் பூஜை புனஸ்காரங்கள் செய்வதற்கென ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய விபரங்களும் அடங்கியுள்ளன.

கடலாதெனியாவில் அமைந்துள்ள கம்பளை யுகத்திற்குரிய மற்றுமொரு விகாரை விஜயொத்பாய எனும் பெயரில் அழைக்கப்படுகின்றது. இது முற்று முழுதும் கருங்கல்லினால் நிர்மாணிக்கப்பட்ட சதுர வடிவிலான கட்டடமாகும். அதன் நான்கு பக்கச் சுவர் உட்குழிவுகளிலும் புத்தர் சிலைகள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. சற்சதுர அமைப்பில் நான்கு பக்கமும் கட்டியெழுப்பப்பட்ட சுவரும் அதன் மேலமைந்த கூரையுடனும் கூடிய சதுர வடிவிலான நான்கு கர்ப்பக்கிரகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவை மேற்கூறப்பட்ட புத்தர் சிலைகள் வைக்கப்பட்ட சுவர்களின் வெளி மண்டபமாக அமைக்கப் பட்டதாகத் தெரிகிறது. முழுமையாகப் பார்க்கும் போது திட்டமிடல் கட்டட வடிவமைப்பு என்பவற்றில் சிறப்பியல்புகளைக் கொண்ட இக்கட்டடமானது இலங்கை மற்றும் தென்னிந்திய கட்டடக்கலை அம்சங்களின் கலப்பாகக் காட்சியளிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உரு 8.17 நியம்கம்பாய விகாரையின் கற் செதுக்கல்

நியகம்பாய விகாரையானது கம்பளைக் காலத்திற்குரியதாயினும் அநுராதபுர யுகத்திற்குரிய கட்டடக்கலை அம்சங்களுடன் கூடிய அமைப்பில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டடமாகத் திகழ்கின்றது. அத்திவாரம், தூண்கள், கதவு நிலைகள் என்பன கருங்கல்லினாலும் ஏனைய பகுதிகள் செங்கல்லினாலும் மரத்தினாலும் ஆக்கப்பட்டுள்ளன. சற்சதுர வடிவிலான கர்ப்பக்கிரகமும் சற்சதுர வடிவிலான துவார மண்டபமும் அமைந்துள்ள இக் கட்டடத்தின் அத்திவாரக் கற்களில் புராதன சிங்கள கட்டடக் கரையில் காணக்கூடிய செதுக்கலைக் காண முடிகின்றது. துவார மண்டபத்தின் முன்னால் நடன உருவங்களுடன் காந்தர்வ உருவங்களும் அமைக்கப்பட்டுள்ளதுடன் கதவு நிலைகளில் அழகான செதுக்கல் அலங்காரங்களைக் காண முடிகின்றது.

கண்டி தலதா மாளிகையின் முன்னால் உள்ள 'ஆதாஹண மலுவ' எனும் மேடையில் அமைந்துள்ள சிலை மனையும் நாத தேவாலயமும் கம்பளை யுகத்தக்குரிய கட்டடங்களாகக் கருதப்படுகின்றன. கர்ப்பக்கிரகமும் துவார மண்டபமும் கொண்டதாயமைந்த இவ்விரு கட்டடங்களும் தென்னிந்திய மரபுப்படியே நிர்மாணிக்கப்பட்டுள்ளன. ஆயினும் தென்னிந்திய கட்டடக்கலைக்குரிய கோபுரத்துக்குப் பதிலாக தூபி அமைக்கப்பட்டு பௌத்த சமய வடிவமைப்பு வழங்கப்பட்டுள்ளது.

கோட்டை இராசதானியில் அமைந்திருந்த மாளிகை, பிரபு மனைகள், விகாரைகள், தேவாலயங்கள் என்பன பற்றி சமகால தூது இலக்கியங்களில் பல்வேறு விபரங்கள் காணப்படுகின்றன. போர்த்துக்கேய எழுத்தாளர்களின் குறிப்புகளின்படி கோட்டை நகரினுள் அமைந்திருந்த மாளிகைகள், விகாரைகள் என்பவற்றின் எண்ணிக்கை போலவே அவற்றின் அழகும் அவர்களை வியப்பிலாழ்த்தியுள்ளது. ஆயினும் போர்த்துக்கேயரின் மிலேச்சத்தனமான நடவடிக்கைகளின் பிரதிபலனாக அவ்வனைத்துக் கட்டடங்களும் அழிந்துள்ளதுடன் கோட்டை மகா ராஜ விகாரை முதலிய பாரிய பௌத்த கட்டடங்கள் இருந்த இடங்களில் கிறிஸ்தவ தேவாலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. நவீன கட்டடங்கள் கட்டப்படுவதன் காரணமாக பழைய கட்டடங்களின் தடயங்களைக் கூட தேடிக் கொள்ள முடியாத அளவிற்கு பழைய கோட்டை நகரம் காணாமல் போயுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் பிரபலமடைந்த கல்வி நிலையமான காரகல பத்மாவதி பிரிவெனா, தொட்டகமுவே விஜயபாகு பிரிவெனா, ஆறாம் பராக்கிரமபாகு மன்னனால் அமைக்கப்பட்ட பப்பிலியானே சுனேத்ரா தேவி பிரிவெனா முதலிய நிறுவனங்கள் இருந்த இடங்களில் இன்னும் முறைப்படியான தொல்பொருள் ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை. களுத்துறை மாவட்டத்தில் வறகாபொல கணேஉட எனுமிடத்தில் காணப்படும் கற்றூண்கள் கோட்டை யுகத்தில் தென்னிந்திய மரபின்படி அமைக்கப்பட்ட விகாரை ஒன்றின் எச்சங்களாகக் கருதப்படுகின்றன. இந்தக் கல் தூண்களின் அடியிலும் முடியிலும் காணப்படும் செதுக்கல் அலங்காரம் அநுராதபுர மரபை நினைவூட்டுகின்றன. அம்புலுகலவில் காணப்படும் செதுக்கல் அலங்காரம் கொண்ட கதவு நிலை மற்றும் தூண்கள் கோட்டை யுகத்தின் கட்டடக் கலைச் சிறப்புக்கு சிறந்த உதாரணமாகும். பெந்தோட்ட கல்பாத விகாரையில் செதுக்கல் அலங்காரம் கொண்ட கதவு நிலை மற்றும் கேகாலை மாவட்ட மெதகொட தேவாலயத்தின் செதுக்கல் அலங்காரம் கொண்ட தூண் என்பன கம்பளை யுகத்தக்குரியதாக கருதப்படுகிறது.

தம்பதெனிய விகாரையில் காணப்படும் கற்செதுக்கல் இரண்டும் அந்த யுகத்தில் தென்னிந்திய சிற்பக்கலைகள் தருவிக்கப்பட்டு பௌத்த விகாரைகளிலும் பிரதிஷ்டை செய்யப்பட்டமைக்கு உதாரணமாகத் திகழ்கின்றது. வீரக்கல் வகையைச் சேர்ந்த இக்கற்செதுக்கல்கள் ஒன்றில் தர்ம சக்கர முத்திரையுடன் கூடிய கைகளைக் கொண்ட புத்தர் உருவமும் போர் வீரர்களின் உருவமும் லிங்க வழிபாட்டில் ஈடுபட்டிருக்கும் பக்தர்கள் இருவரின் உருவங்களும் செதுக்கப்பட்டுள்ளன. இந்து சமய நம்பிக்கையும் பௌத்த சமய நம்பிக்கையும் ஒன்று கலந்தமைக்கு உதாரணமாகத் திகழும் இக்கற் செதுக்கல் தென் இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டதாக இருக்கலாம். இரண்டாவது கற்செதுக்கலில் புத்தரின் உருவமின்றி சிவலிங்கத்துக்குப் பூஜை புனஸ்காரம் செய்யும் பக்தர் ஒருவரின் உருவம் செதுக்கப்பட்டுள்ளது. இதுவும் தென்னிந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டதாக இருக்கலாம். அல்லது இலங்கையில் வாழ்ந்த தமிழ் சிற்பக் கலைஞர் ஒருவரால் வடிவமைக்கப்பட்டிருக்கலாம்.


## சிற்பக்கலையும் செதுக்கல் கலையும்

பொலன்னறுவை யுகத்திலும் அதன் பின்னரும் சிற்பக்கலையில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றிய முறையான ஆய்வொன்று இதுவரை மேற்கொள்ளப் படவில்லை. உதாரணமாக நிஸ்ஸங் கமல்ல மன்னனின் தம்புளை கல்வெட்டின்படி இம்மன்னனின் ஆட்சிக் காலத்தில் தம்புளை விகாரையில் 73 புத்தர் சிலைகள் காணப்பட்டனவாம். ஆயினும் அச்சிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் எவையென இதுவரை கண்டறியப்படவில்லை என்பதை நாம் இங்கு குறிப்பிடலாம். இங்குள்ள புத்தர் சிலைகள் பொலன்னறுவை யுகத்திற்கும் அதற்கு முன்னைய யுகத்திற்கும் உரியவை என நாம் கருதினால் இவ்விகாரையில் காணப்படும் 80 புத்தர் சிலைகளுக்கும் மேற்பட்டவை கம்பளை யுகத்திற்குரியதென கருதவேண்டி நேரிடும். இவ்விகாரையின் வரலாற்றைக் கூறும் பழைய எழுத்தாவணங்களின்படி கம்பளைக் கால மன்னர்களும் இவ்விகாரையின் சிற்பக் கலைக்குப் பங்களிப்புச் செய்துள்ளனர். ஆயினும் அச்சிலைகள் எவையென இதுவரை கண்டறியப்படவில்லை.


உரு 8.18 யாப்பஹுவ தலதா மாளிகைக்கு அண்மையில் மகர தோரண அரை வட்டச் சுவரினுள் அமைந்துள்ள புத்தர் சிலை

பொலன்னறுவையின் பின்னரான காலத்துக்குரிய மிகப் பழைய சிலையென இப்போது கண்டறியப் பட்டுள்ளது யாப்பகுவ தலதா மாளிகைக்கு அண்மையில் உள்ள மகர தோரணத்தின் அரைவட்ட உட்குழிவான சுவரில் அமைக்கப்பட்டுள்ள சமாதி நிலையில் உள்ள சிறிய புத்தர் சிலையாகும். இக்காலப் பகுதியில் புத்தர் சிலையின் சிரசின் பின் புறமாக ஒளிவட்டம் அமைக்கும் வழக்கம் கடைப்பிடிக்கப்பட்டதாக இச் சிலையின் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. இதே வடிவிலான மற்றுமொரு புத்தர் சிலை கடலாதெனி விஜயொத்பாய விகாரையில் காணப்படுகின்றது. லங்காதிலக, கடலாதெனிய, தம்புளை விகாரைகளில் காணப்படும் புத்தர் சிலைகள் இக்காலத்தைச் சேர்ந்தவையாயினும் அவற்றின் மேல் இடைக்கிடை வர்ணப் பூச்சுக்கள் பூசப்பட்டமையால் அச்சிலைகள் அமைக்கப்பட்ட காலத்தை நிர்ணயிப்பது கடினமாகவுள்ளது. இச் சிலைகள் பெரும்பாலும் செங்கல்லினால் கட்டப்பட்டு சாந்து பூசப்பட்டவையாகும். புத்தர் சிலையின் காவியுடையின் கோடுகளை சித்தரிப்பதில் இந்த யுகத்தில் மாற்று முறையொன்று பின்பற்றப்பட்டுள்ளமை தெரிகிறது. அதாவது உடலுடன் ஒட்டிய நேர்கோடான காவியுடையின் மடிப்புகளுக்குப் பதிலாக முக்கோண அலை வடிவிலான கோடுகள் மூலம் காவியுடை உடலுடன் ஒட்டாமல் முன் தள்ளியதாக அமைக்கப்படுவது இக்காலப் பகுதியில் பிரபலமான முறையாகக் காணப்பட்டது. செங்கல்லால் அமைக்கப்பட்ட சிலைகளின் மேல் ஈரச் சுதை பூசப்பட்டமையால் கலைஞர்கள் அவ்வாறான முறையைப் பின்பற்றியிருக்கலாம். லங்காதிலக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புசுல்பிட்டிய, பேராதனைக்கண்ணமையில் உள்ள கடாரங்கல ஆகிய இடங்களிலுள்ள உலோக புத்தர் சிலைகளில் கூட மேற்படி வடிவமைப்பை நாம் காணக்கூடியதாக உள்ளது. கடலாதெனிய விகாரையில் காணப்படும் இரண்டரை (2 ½) அடி உயரமான உலோகத்திலான புத்தர் சிலை தென் கிழக்காசிய நாடுகளின் சிற்பக்கலை வடிவத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. இக்காலப் பகுதியில் இலங்கைக்கும் தாய்லாந்துக்கும் இடையில் சமய கலாசார உறவுகள் நிலவியதாக ஏற்கனவே அறிந்தோம். எனவே இச் சிலையானது தாய்லாந்திலிருந்து தருவிக்கப்பட்டதாக இருக்கலாம்.

கம்பளை காலத்தில் வெண்கலத்திலான புத்தர் சிலைகளை வடிப்பது பிரபலமானதாகக் காணப்பட்டது. தம்புளை விகாரையில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள சில வெண்கல புத்தர் சிலைகள் கம்பளைக் காலத்துக்குரியவை என்பதில் சந்தேகமில்லை. இந்த யுகத்தின் உலோக புத்தர் சிலை வார்ப்பிற்கு சிறந்த உதாரணமாக இப்போது லங்காதிலக விகாரையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள ஓரடி உயரமான வெண்கலச் சிலையைக் குறிப்பிடலாம். பக்தி நிலையை வெளிப்படுத்தும் இந்தச் சிலை நாலாம் புவனேகபாகு மன்னனுக்குரியதாக கருதப்படுகிறது. தம்புளை விகாரையில் மகாராஜ குகையினுள் காணப்படும் வலகம்பா மற்றும் நிஸ்ஸங்கமல்ல மன்னர்களினதாகக் கருதப்படும் சிலைகள் இரண்டும் நாத, உபுல்வண், மைத்திரி, விஷ்ணு ஆகிய தெய்வங்களின் சிலைகளும் கம்பளை யுகத்துக்குரியனவாகவே கருதப்படுகின்றன.

அநுராதபுர, பொலன்னறுவை யுகங்களின்போது சமய சார்பான கட்டங்களுக்குப் பிரவேசிப்பதற்கான படி வரிசையின் ஆரம்பக் கல்லாக அமைந்த உயர்ந்த கலையம்சம் கொண்ட இலங்கைக்கே உரிய சிறந்த சிற்பக் கலைப் படைப்பாகக் கருதப்பட்ட சந்திரவட்டக் கல்லானது பிற்காலத்தில் சிற்சில மாற்றங்களுக்குள்ளானது. அவற்றுள் பழைய சந்திர வட்டக் கல்லின் வடிவமைப்புக்கு மிகவும் நெருங்கியதாக அமைக்கப்பட்ட ஒரேயொரு சந்திர வட்டக்கல்லாகக் காணப்படுவது பெலிகல சந்திர வட்டக்கல்லாகும். அரை வட்ட வடிவிலான இச் சந்திரவட்டக் கல்லுக்கு மகர உருவம் வழங்கப்பட்டமையால் இரு புறமும் சற்று நீண்டதாகக் காட்சியளிக்கின்றது. அதன் மத்தியில் யானைகளின் உருவமும் உள்ளே குதிரை உருவ வரிசையொன்றும் செதுக்கப்பட்டுள்ளது. நடுவே தாமரை மலர் ஒன்று முழுமையாக மலர்ந்துள்ளவாறு நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன் எருதின் உருவம் இல்லாத இச் சந்திர வட்டக்கல்லில் தீ நாக்குகள் சிறப்பாக செதுக்கப்பட்டுள்ளன. ஹொரணையிலிருந்து கிடைக்கப் பெற்ற சந்திரவட்டக் கற்கள் சற்று நீளமான அமைப்பைக் கொண்டவையாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமரைப்பூ அன்னப்பறவை, மலர்க்கொடி, பூவிதழ் எனும் மரபு ரீதியான வடிவங்கள் அலங்காரத்துக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

பொலன்னறுவை யுகத்துக்குப் பின்னரான காலப் பகுதியில் செதுக்கல் கலையம்சங்களில் வித்தியாசங்களைக் காணமுடிவது விகாரைகளின் கதவு நிலைகளில் காணப்படும் கருங்கல் செதுக்கல்களிலாகும். இக்கதவு நிலைகள் பல பாகங்களாகப் பிரிக்கப்பட்டு அவற்றுள் நாகம், சிங்கம், பூவிதழ், அரும்பு, தீச்சுடர், பூங்கொடி முதலிய அலங்கார வடிவங்களும் கஜலக்சுமி உருவம், காந்தர்வ உருவம், நடன உருவம் என்பனவும் செதுக்கப்பட்டு அலங்கரிக்கப்பட்டிருந்தன. முழுமையாகப் பார்க்கும்போது இந்த யுகத்தில் வாழ்ந்த செதுக்கல் கலைஞர்கள் எளிமையான அலங்காரங்களை விடவும் பல்வேறு மோஸ்தர்களிலுமான செதுக்கல் அலங்காரங்களை அமைப்பதில் ஆர்வம் காட்டியுள்ளமை தெளிவாகிறது. இந்த யுகத்தின் மரச் செதுக்கல்களிலும் இவ்வம்சம் பிரதிபலிக்கின்றது. கம்பளைக்கண்மையில் உள்ள அலுதெனிய விகாரையின் கதவு நிலைகளை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.



உரு 8.19 அலுதெனி விகாரை தேவாலயக் கதவு நிலை



உரு 8.20 அலுதெனி விகாரை கதவு நிலையின் செதுக்கல்

**ஓவியக் கலை :**


பொலன்னறுவை யுகத்தில் வளர்ச்சியடைந்த ஓவியக் கலை காணப்பட்டதாக இலக்கிய மூலாதாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அதனை உறுதிப்படுத்தக் கூடிய வகையில் தொல்பொருள் மூலாதாரங்களை இன்று காண்பதற்கில்லை. உதாரணமாக முதலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பராக்கிமபாகு மன்னனின் வசந்த மாளிகையின் பல்வேறு மண்டபங்களும் சித்திரங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்ததாக வம்சக் கதைகள் விபரித்த போதிலும் அதனை நிரூபிக்கக் கூடிய வகையில் ஓர் ஓவியத்தையாவது தடயங்களாகவோ புதைபொருளாகவோ காண்பதற்கில்லை. வம்சக் கதைகள் கூறுவதன்படி மாளிகை வளவினுள் அமைந்திருந்த சரஸ்வதி மண்டபத்தின் சுவர்கள் அரசனின் வரலாற்றை விபரிக்கும் ஓவியங்களால் அலங்கரிக்கபட்டிருந்ததுடன் மற்றுமொரு மண்டபமான சிங்கார மண்டபத்தின் சுவர்களும் ஓவியங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. 'அனந்த பொக்கரனி' எனும் நீராடும் பொய்கையும் ஓவியங்களால் அலங்கரிக்கப்பட்டடிருந்ததாக வம்சக் கதைகள் வர்ணித்த போதிலும் அப்பொய்கை இருந்தமைக்கான சான்றுகளையாவது இன்று காண்பதற்கில்லை.

மகியங்கண விகாரையின் கர்ப்பக் கிரகத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட ஓவியத்தின் சிதைவுகள் பொலன்னறுவை யுகத்துக்குரியதென்ற கருத்து இது வரை ஏற்றுக் கொள்ளப்படவில்லை. முதலாம் விஜயபாகுவின் புனரமைப்புப் பணிகளின்போது இவ் ஓவியம் வரையப்பட்டதாகக் கருதப்பட்டாலும் அது அதற்கும் முன்னைய காலத்தில் வரையப்பட்டதாக சிலர் கூறுகின்றனர். புத்த பெருமான் மாறனின் படையை வென்றமையைச் சித்தரிக்கும் இவ்வோவியத்தில் புத்த பெருமான் தேவர்களும் தெய்வங்களும் புடை சூழ அரச மரத்தடியில் அமர்ந்திருக்கும் காட்சி புலப்படுத்தப்படுகிறது. தெய்வங்களுள் சிவனையும் விஷ்ணுவையுமே தெளிவாக இனம் காண முடிகின்றது.



உரு 8.21 திவங்க சிலை மனை ஓவியம்

பொலன்னறுவை யுகத்துக்கு உரியதென சந்தேகமின்றி அறிந்து கொள்ளப்பட்டிருந்த திம்புலாகல ஓவியங்களை இன்று காண்பதற்கில்லை. சச ஜாதகக் கதை, தேவதத்தன் மற்றும் நாளகிரி எனப்படும் யானை என்பன பற்றி சித்திரித்த அவ்வோவியம் அண்மைக் காலத்தில் யாரோ ஒருவரால் சிதைக்கப்பட்டுள்ளது. திம்புலாகலவுக்கு அண்மையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புள்ளிகொட எனும் குன்றில் அமைந்துள்ள குகையொன்றினுள் காணப்படும் ஓவியத்தில் ஒளி வட்டத்துடன் கூடிய ஐந்து கடவுளர்கள் இரு கைகளிலும் மலர்களை ஏந்திய வண்ணம் கம்பளமொன்றில் வீற்றிருப்பதாக சித்தரிக்கப்பட்டுள்ளது. தெய்வங்களும் தேவர்களும் புத்த பெருமானை வணங்கிக் கொண்டிருப்பதான சித்திரத்தின் ஒரு பகுதியாக இது காணப்படுகிறது. முக பாவங்களை வெளிப்படுத்துவதிலும் வர்ணக் கலைவைகளிலும் இவ்வோவியம் சிறப்பிடம் பெறுகிறது. பொலன்னறுவை கற்குகையினுள்ளும் சில ஓவியச் சிதைவுகள் காணப்படுகின்றன. அங்கு குன்றுச் சுவரின் மத்தியில் வரையப்பட்டுள்ள புத்தபெருமானைப் புடை சூழ்ந்துள்ள தெய்வங்களிடையே நீண்ட தாடியும் கையில் மலரும் கொண்ட இடுப்புக்கு மேற்பட்ட உருவம் பிரம்மனுடையதாக இருக்கலாம் என்பது பேராசிரியர் பரண விதானவின் கருத்தாகும். பொலன்னறுவை லங்காதிலக விகாரையின் சுவர்கள் முற்று முழுதாக சித்திரங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது. ஆயினும் இன்று அவற்றுள் எஞ்சியிருப்பது ஒரு கதவின் மேல் வளைவில் காணப்படும் கண்ணைக் கவரும் மலர் அலங்காரம் மட்டுமாகும்.

பொலன்னறுவை யுகத்துக்குரிய ஓவியங்களுள் அதிகளவில் எஞ்சியிருப்பது திவங்க சிலை மனையிலாகும். முதலாம் பராக்கிரமபாகுவால் அமைக்கப்பட்ட இவ்விகாரையின் சுவரும் கூரையும் ஆரம்ப காலத்திலேயே சித்திரங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஆயினும் அங்கு இப்போது நாம் காண்பதற்கு எஞ்சியிருப்பது பிற்காலத்தில் சுன்னச்சாந்து பூசப்பட்ட சுவரின் மேல் வரையப்பட்ட ஓவியமாகும். அதே போன்று சுவர்களின் மேல் வரையப்பட்ட சித்திரங்களின் மேல் மீணடும் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது. எனவே இப்போது காணக்கிடைக்கும் ஓவியங்கள் முதலாம் பராக்கிரமபாகுவின் ஆட்சிக் காலத்தின் பின்னர் பொலன்னறுவையின் இறுதிக் காலப் பகுதியில் அல்லது பதிமூன்றாம் நூற்றாண்டில் வரையப்பட்டிருக்கலாம் என்று தொல்பொருளியலாளர்கள் கருதுகின்றனர். திவங்க சிலை மனையின் வெளிமண்டபச் சுவர் ஜாதகக் கதைகளை சித்தரிக்கும் ஓவியங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்ததுடன் கர்ப்பக் கிரகத்தின் உட்பிரகாரத்தில் புத்த நிலை பற்றிய கதைகள் சித்தரிக்கப்பட்டிருந்தன. வெளிமண்டப சுவர் ஓவியங்களில் 'சச' ஜாதகக் கதையும் கர்ப்பக்கிரக உட்பிரகார சுவர் ஓவியங்களில் புத்த பிரான் 'துஸித' எனும் தேவருலகுக்கு எழுந்தருளுவதும் ஆபத்துக்குள்ளான விசால நகரைப் பாதுகாக்கும் பொருட்டு கங்கை நதியில் கப்பலொன்றில் பயணஞ் செய்வதும் தெளிவாக சித்தரிக்கப்பட்டுள்ளது. வெளிமண்டபச் சுவரில் வரையப்பட்ட ஓவியங்களுள் 'முகபக்க' ஜாதகக் கதையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘மைத்திரிபல’ ஜாதகக் கதையும் இலகுவாக இனங்காணக் தக்கதாக உள்ளன. ரேகைச் சித்திரங்களாக வரையப்பட்டுள்ள இவ் ஓவியங்களுக்கு சிவப்பு, மஞ்சள், பச்சை ஆகிய நிறங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும் ஓவியங்களில் இடம் பெறும் அரசர், அமைச்சர், இளவரசர், ரிஷி முதலிய பல்வேறு தராதரங்களைச் சேர்ந்த நபர்களை சித்தரிப்பதற்கு மரபு ரீதியான வழிகளைக் கையாண்டு உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதில் ஓவியன் தன் திறமையைக் காட்டியுள்ளான். கதாநாயகனைப் பல தடவைகள் வரைவதிலும் ஓவியன் அக்கறை காட்டியிருப்பதாகத் தெரிகிறது. திவங்க சிலை மனையின் சித்திரங்கள் சிங்கள ஓவியங்களின் திறமையை வெளிகாட்டும் சான்றுகளாக அமைந்துள்ளன.

பொலன்னறுவை யுகத்தில் தம்புளை விகாரையும் ஓவியங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தமைகான இலக்கிய சான்றுகள் உள்ளன. ஆயினும் அப்பழைய ஓவியங்கள் மீது கம்பளை யுகத்திலும் கண்டிக் காலத்திலும் சித்திரங்கள் வரையப்பட்டமையால் பொலன்னறுவை யுகத்துக்குரிய ஓவியங்களை இனங்காண முடியாதுள்ளது.

இக்காலத்துக்குரிய இலக்கிய மூலாதாரங்களில் விகாரை, தேவாலயம், அரச மாளிகை ஆகியவற்றின் சுவர்களிலும் கூரைகளிலும் வரையப்பட்ட ஓவியங்கள் பற்றிய விபரங்கள் காணப்படுகின்றன. பொலன்னறுவை திவங்க சிலை மனை ஓவியங்கள் தம்பதெனியாவின் இரண்டாம் பராக்கிரமபாகு மன்னனுக்கும் பின்னரான காலத்தில் வரையப்பட்டதாகும் என்ற கருத்தும் நிலவுகின்றது. நாலாம் பராக்கிரமபாகு மன்னன் குருணாகலையில் அமைத்த தலதாமாளிகையின் சுவர்கள் வண்ண ஓவியங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்ததாக வம்சக்கதைகள் கூறுகின்றன. தம்புளை விகாரையின் சுவர்கள் மட்டுமல்ல கூரைகளும் சித்திரங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தமைக்கான சான்றுகள் உள்ளன. இவ்விகாரையின் நான்காவது குகைக்கு மேலே உள்ள ஓவியம் எந்த யுகத்துக்குரியதென இது வரை கண்டுபிடிக்கப்படவில்லை. மூன்று பிரதான குகைகளிலும் உள்ள ஓவியங்கள் கண்டிக் காலத்துக்குரியனவாகும். அவை கண்டியரசர்களான கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் மற்றும் ராஜாதி ராஜசிங்கன் ஆகியோரின் ஆட்சிக் காலத்தில் வரையப்பட்டவையாகும். ஆயினும் அதற்கு முன்னைய காலத்தில் வரையப்பட்ட ஓவியங்கள் தம்புளை விகாரையின் சுவர்களிலும் கூரைகளிலும் இருந்தமைக்கான சான்றுகள் காணப்படுகின்றன. கம்பளை யுகத்தின்போது விகாரை பல தடவைகள் புனரமைப்புச் செய்யப்பட்டமையால் அதன் சித்திரங்களும் திருப்பி வரையப்பட்டதாக நாம் கருதலாம். ஆயினும் இப்போது இங்கு வெளித் தெரியும் ஓவியங்கள் எல்லாம் கண்டிக் காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரையப்பட்டவையாகும். கடலாதெனிய மற்றும் லங்கதிலக விகாரைகளில் வரையப்பட்ட ஓவியங்கள் பற்றி அங்குள்ள கல்வெட்டுக்களில் கூறப்பட்டுள்ளன. பிற்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட புனரமைப்பு நடவடிக்கைகள் காரணமாக அவ்வோவியங்களை தற்போது காண முடியாதுள்ளது. கோட்டை தலைநகரில் காணப்பட்ட அரச மாளிகை மற்றும் பிரதானிகளின் மாளிகைகளில் வரையப்பட்டிருந்த ஓவியங்கள் பற்றி தூது இலங்கியங்களில் விபரிக்கப்பட்டுள்ளன. அவை தவிர பலகைகளிலும் துணிகளிலும் வரையப்பட்ட ஓவியங்கள் பற்றி பொலன்னறுவைக்குப் பிற்பட்ட கால பல்வேறுபட்ட மூலாதாரங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளன. ஏட்டுச் சுவடிகளில் சித்திரம் வரைவதும் இக்கால ஓவியக் கலையின் ஓரம்சமாகக் காணப்பட்டது. இரண்டாம் பராக்கிரமபாகு மன்னனின் காலத்துக்குரியதாகக் கருதப்படும் அவ்வாறானதொரு ஓவியச் சுவடி கொழும்பு நூதன சாலையில் வைக்கப்பட்டுள்ளது.


## உசாத்துணை நூல்கள் :-


1. இலங்கைப் பல்கலைக்கழகத்தின் இலங்கை வரலாறு தொகுதி I, பகுதி II, அத்தியாயம் IX
2. மத்திய கால சிங்களக் கலைகள் - கலாயோகி ஆனந்த குமாரசுவாமி - 1962 கொழும்பு
3. இலங்கையின் மரபுகள்
   நந்ததேவ விஜேசேகர - 1962 கொழும்பு
4. சாஸ்திரிய லிபி சங்கிறஹய -
   இலங்கையில் மஹாயான சிலைகள் - 1971 கொழும்பு
5. கம்பளை யுகம் - கஹட்டபிட்டியே ஸ்ரீ தீரானந்த தேரர் 1965 - கொழும்பு
6. பொலன்னறுவை எச்சங்கள் - கும்புறுபிட்டியேவனரதன தேரர் - 1962 - கொழும்பு
7. சிங்களக் கதவு நிலைகள் - சாள்ஸ் கொடகும்புற
8. தம்புளை விகாரை - மங்கள இலங்கசிங்க - 1994 தெஹிவளை
9. மத்திய கால இலங்கை - இந்திரகீர்த்தி சிறிவீர - 1971 பேராதனை
10. கல்வெட்டு சஞ்சிகை - மெத உயன்கொட - விமல கீர்த்தி தேரர் - 1959 கொழும்பு
11. புரதான காலம் - செனரத் பரணவிதான 1962 தெஹிவளை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொலன்னறுவை அரச பரம்பரை**




## நிஸ்ஸங்கமல்ல அரச பரம்பரை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தம்பதெனி அரச பரம்பரை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கம்பளை அரச பரம்பரை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டை அரச பரம்பரை

லமணி ஜயமஹலெண + சுணேத்ரா மகாதேவி

6ஆம் பராக்கிரமபாகு + கீரிவல்ல இராணி
கி.பி 1410
1412
1415 - 1467
வளர்ப்பு மக்கள்

தனமெனிகா + 6ஆம் புவனேகபாகு
(சப்புமல்குமாரன்) (1469 - 1480)

7ஆம் வீரபராக்கிரமபாகு
(அம்புலுகலகுமாரன்) (5)
(1490 - 1509)

உலகுடையதேவி + நன்னறுந் துணைவன

2ஆம் ஜயபாகு(2) (1467 - 1469)

7ஆம் பண்டித பராக்கிரமபாகு (1480 - 1490)(4)

6ஆம் விஜயபாகு (1510 -1521)

9ஆம் தர்ம பராக்கிரமபாகு

தனியவல்லபன்

சகலகலா வல்லபன்

ராஜசிங்கன்

7ஆம் புவனேகபாகு (1521 - 1551)

றைகம் பண்டாரன்

மாயாதுன்னே


வீதிய பண்டார + சமுத்ராதேவி (1410 - 1415) (8)

1ஆம் இராஜசிங்கன்

தொன்யு தர்மபாலன் (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மானவம்ம அரச பரம்பரை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

E.P.D. (SALES DIVISION)

P01

3020013

LANKAN HISTORY (T)

Rs. 355.00

ලංකා ඉතිහාසය 2 වන කොටස (දෙ)

2015/T/அதி/5/2000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org